பண்பாட்டுக் கோலங்கள்

(PATTERNS OF CULTURE)

([illegible])

ஆசிரியர்

ரூத் பெனிடிக்ட்

தமிழாக்கம்

வி. பூ. சுப்பிரமணியன், எம்.எஸ்ஸி.,

Dip. in Anthropology, F.Z.S. (London),

விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடு—47

பண்பாட்டுக் கோலங்கள்

(PATTERNS OF CULTURE)

(மார்கரட் மீடின் புதிய முகவுரையுடன்)

ஆசிரியர்

ரூத் பெனிடிக்ட்

தமிழாக்கம்

கி. பூ. சுப்பிரமணியன், பி.எஸ்ஸி.,

Dip. in Anthropology, F.Z.S. (London),

விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition : March, 1964.

B. T. P. No. 47

PATTERNS OF CULTURE

RUTH BENEDICT

Translation

K. B. SUBRAMANIYAN

© *BUREAU OF TAMIL PUBLICATION*

Price: Rs. 5-50

Original English language edition
(1961, Sentry Edition)
Published by Houghton Mifflin Co. Boston.
Copyright 1934 by Ruth Benedict.
Preface (C) 1959 by Margaret Mead.

This translation is published
by arrangement with
HOUGHTON MIFFLIN CO., BOSTON

Shivaji News Printers,
12-2, Nallathambi Mudali Street,
MADRAS-5.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரியமுறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான பண்பாட்டுக் கோலங்கள் என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 47ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 82 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்.

மார்கரட் மீட் அவர்களின் புதிய முன்னுரை

மானிடவியலைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு, ரூத் பெனிடிக்ட் அவர்களின் 'பண்பாட்டுக் கோலங்கள்' என்னும் நூல் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, பாராட்டத்தக்க நல்லதொரு முன்னுரையாக இருந்துவந்திருக்கிறது. இந் நூல் மென்டார் வெளியீடாகமட்டும் சுமார் எட்டு லட்சம் பிரதிகளுக்குமேல் அச்சிடப்பட்டுப் பதினான்கு மொழிகளில் இதுகாறும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வெவ்வேறு மாறுபட்ட துறைகளாகக் கலையியலும் விஞ்ஞானவியலும் இயங்கிய காலத்தில் அவைகளைப் பிணைக்கும் ஓர் அரிய தொண்டை இந்நூல் மேற்கொண்டது.

ரூத் பெனிடிக்ட் அம்மையார் 1921ஆம் ஆண்டில் மானிடவியல் துறையில் பணிபுரிய ஆரம்பித்த சமயம் 'பண்பாடு' என்ற சொல், நாம் இப்பொழுது புரிந்துகொள்ளும் பொருளுடையதாக இருக்கவில்லை. மானிடவியல் துறையிலே பணிபுரியும் சிலருக்கே விளங்கக்கூடியதாக அச் சொல் திகழ்ந்தது. ஆனால், இன்று 'பரம்பரையாக ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு மரபுவழியே வரும் நடத்தைகளின் கோவை'யென அச் சொல் பொருள் தருகின்றது. சர்வசாதாரணமாக 'நம்முடைய பண்பாட்டிலே' என்ற சொற்றொடர் தற்காலத்திய கற்றோரின் உரையாடல்களிலே, வரலாற்றுக் காலங்களையும் இடங்களையும் குறிப்பிடுவதுபோன்று எளிதாகப் பயன்படுத்தப்பெறுவதைக் காண்கிறோம். இந்த நிலைக்கு இந் நூலே பெரிதும் காரணமாக இருந்திருக்கிறது.

இந் நூல், அன்றும் பல துறைகளிலே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது; இன்றும் இருக்கிறது. பல பண்பாடு

களைப்பற்றி நமக்கு இருக்கும் அறிவின் எல்லையை விரிவாக்கு வதற்கு இந் நூல் சிறந்ததொரு வழிகாட்டியாக இருக்கிறது. வெவ்வேறு வகையான மக்களினங்களின் பரம்பரையாக வரும் விசித்திரமான பண்பாட்டுவகைகளோடு நம்முடைய பண்பாட்டை ஒப்பிட்டுப் பார்க்க இந் நூல் துணைபுரிகிறது. ரூத் பெனிடிக்ட் அம்மையார் தம் நூலில் காட்டிய ஒப்பிட்டுப் பார்க்கும் முறையால், ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, ஃப்ரான்ஸ் ஆகிய நாடுகளில் வளர்ந்துவரும் மானிடவியல் கலைக்காகப் பணிபுரிந்திருக்கிருர். அவர் தம் நூலில் கையாண்ட தெளிவும் நடைநயமும் அன்ருரின் தனிச்சிறப்பு எனலாம்.

இந்த அடிப்படையில், மனிதப் பண்பாடுகளை 'ஆளுமை யின் வெளித் தோற்ற'மாகக் கண்டு அந்த அம்மையார் தன் னுடைய சிறந்த படைப்புகளை வழங்கினர். சில பண்பாடுகள் மிகச்சிறியனவாகவும் பழமைவாய்ந்தனவாகவும் இருக்கலாம். வேறுசில பெரியனவாகவும் சிக்கலுற்றும் திகழலாம். எப்படி யிருப்பினும், ஒவ்வொரு பண்பாடும் மனித இயல்புகளில் சில வற்றைமட்டும் தேர்ந்தெடுத்து அவற்றை விரிவாக்கிப் பன் மடங்கு திண்மையும் வலிமையும்பெற வளர்த்திருக்கிறது என்றும், தனி ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் முயன்ருலும் சாதிக்கமுடியாத ஒரு நிலையைப் பண்பாடு அடைந்திருக் கிறது என்றும் அன்னர் கருதினர். அவர் வர்ணித்த பண் பாடுகளின் தன்மையை விளக்க 'அப்போலோனியன், டையோனீஷியன், பாரனுய்ட்' என்ற பெயர்களைச் சூட்டினர். தனிமனிதர்களின் ஆளுமையின் வர்ணனைகளிலிருந்து தன் வாதத்திற்கு வலிமை தேடிக்கொண்டார். ஆனல், அவர் பண்பாட்டுவகைகளைத் திட்டவட்டமாக வரையறுக்கும் பணியில் ஈடுபடவில்லை. எல்லா சமூகங்களுக்கும் நியட்ஷி (Nietzschian) முறைப்படியோ அல்லது உளமருத்துவ முறைப் படியோ தலைப்புகள் பொருந்துமென அவர் எண்ணவில்லை. மேலும், ஒரு வரையறுக்கப்பட்ட முறையை உருவாக்கி, அத னுள்ளே கடந்தகால, நிகழ்கால, எதிர்கால மனித சமூகங் கள் எல்லாமே பொருந்தக்கூடும் என்றும் அவர் நம்பவில்லை. அவர், வளர்கின்ற மனிதசமுதாயப் பண்பாடுகள் வரை யறுக்கப்பட இயலாதன என்று நன்கு புரிந்துகொண்டிருந் தார். ஏனென்ருல், அவைகளின் சாத்தியமாக இணைப்புகள் ஏராளமாகவும் வெவ்வேறு வகைகளாகவும் இருந்தன. தனி மனிதன் பண்பாட்டினுல் உருவாக்கப்படுகிருன் என்றும், பண்பாட்டிற்கொவ்வாத இயல்பினனுக அவன் பிறந்துவிட்

டாலும் வளர்ந்துவிட்டாலும் அவன் அடைகின்ற துன்பங்களுக்கு அவன் எவ்விதத்திலும் பொறுப்பாளியல்ல என்றும் அந்த அம்மையார் முதலில் எண்ணியிருந்தார். பல பண்பாடுகளைப்பற்றிய அறிவு வளர ஆரம்பித்தவுடன் அவரது எண்ணமும் மாறியது. தங்களுடைய கற்பனைக்குத் தக்கவாறு பண்பாட்டை மனிதர்கள் எங்கே, எப்படி உருவாக்கிக் கொள்ளமுடியும் என்று அவர் ஆராய்ந்தார். இது சாத்தியமானதுதான் என்ற நம்பிக்கை வளரத் தொடங்கியது.

அவர், முதலில் இலக்கிய மாணவியாக இருந்தமையால் 'ஒருவரும் கண்டறியாத ஒரு முக்கியமான நாட்டைக் கண்டுபிடிக்க' விரும்பினர். ரஷிய அல்லது ஃபிரஞ்சு மொழியின் இலக்கியங்களைப்பற்றி நன்கு அறிய அவைகளைப் பயிலுவது போன்றே இந்த சாதனையையும் அவர் எளிதென்று முதலில் கருதினர். பின்னர், ஒவ்வொரு பழங்குடிப் பண்பாடும் ஒரு மாபெரும் கலைப்படைப்பு அல்லது இலக்கியப் படைப்புக்குச் சமமாக விளங்கியது எனக் கண்டார். ஆகவே, இம் முறையில்தான் தற்கால தனிமனிதனின் கலைப்படைப்புகளைப் பழங்குடிப் பண்பாட்டோடு ஒப்பிடவேண்டும் என்பதை உணர்ந்தார். ஸிஸ்டின் மதக் கோயிலின் மேல்தளத்தின் சிறப்பை, ஒரு மண்பாண்டத்தின் விளிம்பில் உள்ள கிறுக்கப்பட்ட சித்திரத்தோடு ஒப்பிடுதல், அல்லது ஷேக்ஸ்பியரின் கவிதைகளை, பழம் பொறுக்குகையில் பாடும் பாடல்களோடு ஒப்பிடுதல்போன்று அல்ல என்றும் அறிந்தார். தனிப்பட்ட சில கலைகளைக் கவனிக்கும்போது பழங்குடிப் பண்பாடுகளிலே அதிக விவரங்கள் இல்லை. அவைகளின் சிறப்பைக் காண விரும்புவோர் மதம், புராணம், மற்றும் ஆண் பெண்களுடைய தினசரி வாழ்க்கை ஆகியவை ஒன்றுசேர்ந்த பண்பாட்டை முழுமையாகக் கவனிக்கும்போது, அது நுட்பமும் ஒழுங்கு முறையும் ஒருங்கே அமைந்து, ஒரு தனிக் கலையைப்போலப் புலன்களுக்குக் கிளர்ச்சியூட்டும் வகையில் திருப்தியளிக்கிறது.

வேறொரு கண்ணோட்டத்தில் காணும்போது 'பண்பாட்டுக் கோலங்கள்' என்ற நூல் ரூத் பெனிடிக்ட் அம்மையாரின் சொந்த வாழ்க்கையில் அமைந்த ஒரு பிரச்சினையைப் பற்றியிருந்தது. அதாவது, பரம்பரையாகவந்த குறிப்பிட்ட இயல்புகளையும் வாழ்க்கைச் சரித்திரத்தையும்கொண்ட மனிதர்களுக்கும் அவர்கள் வாழ்கின்ற பண்பாட்டுக்கும் இடையே உள்ள தொடர்பை அது பற்றியிருந்தது. அவர் தம் காலத்திய அமெரிக்காவில் பொருந்தியிருந்ததுபோல் அவர்

வேறொரு காலத்திலோ அல்லது வேறொரு பண்பாட்டிலோ பொருந்தி வசித்திருக்க முடியுமா என்று ஆராய்ந்தார். ஒரு பண்பாடு வெறுத்து ஒதுக்கிய அருட்கவி — தெய்வப் புலவன்—கலைஞன்போன்ற, நடத்தையின் இயற்கை கடந்த மாறுபாடுகளுக்கு வேறொரு பண்பாடு எவ்வளவுதூரம் மதித்து இடமளிக்கிறது என்பதையும் ஆராய்ந்தார். இதிலும் அவர், உளமருத்துவ மாணவர்கள்போன்று இயற்கையான நடத்தை, இயற்கை கடந்த நடத்தை என்ற பாகுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை. பண்பாடுகளுக்கும் இயற்கைகடந்த நடத்தைகளுக்கும் உள்ள தொடர்பைக்குறித்து வினு எழுப்பிய காரணத்தால், ஓர் உளநோய் வெவ்வேறு பண்பாடுகளிலே எப்படி மாறுபட்டு இயங்கியது என்று மாணவர்கள் ஆராய வழிகாட்டியாக அமைந்தது. குறுகிய மனப்பாங்கோடு இயற்கையான நடத்தைக்குத் தரப்படும் விளக்கங்கள் எவ்விதம் சில உடன்பிறந்த உள்ளத்து ஆற்றல்களுக்கு மதிப்புக் கொடுத்தோ அல்லது மதிப்புத் தராமல் துன்புறுத்தியோ வந்திருக்கின்றன என்றும் கவனித்தார். விரிந்த மனப்பாங்குடன் பண்பாட்டு விளக்கங்கள் அமைந்தால் அவை நமது பண்பாட்டை வளம்பெறச் செய்யும். மேலும், பண்பாட்டுக் கொவ்வாதவற்றை ஒதுக்கித் தள்ளவேண்டிய சுமையும் குறையும். உடன் பணிபுரிவோரிடமும் மாணவரிடமும் அவர்கொண்ட தொடர்பின்போது அவரது தனிப் பெருமைகள் வெளியாயின. அவர் மற்றவர்களிடத்துக் கண்ட திறமை, ஆற்றல் அல்லது தனிச்சிறப்பு ஆகியவை அவரது உள்ளத்தில் பரிவையும் கருணையையும் ஏற்படுத்தின.

இறுதியாகப் 'பண்பாட்டுக் கோலங்கள்' என்னும் நூல் இன்றும் வாழ்வதற்குக் காரணம் அந்த அம்மையாரின் தீவிர நம்பிக்கையால்தான் என்று கருதுகிறேன். அன்னுரின் கருத்துப்படி, பண்பாடுகள் எப்படி இயங்குகின்றன என்ற அறிவு, மனிதர்கள் தங்கள் எதிர்காலத்தை நன்கு வகுத்துக்கொள்ள உதவும். இம் மாதிரிப் பயன்பெறும் என்று யாரும் எண்ணிப் பார்த்திருக்க முடியாது. முதலிலே பண்பாட்டு வலையின் வலிமையை அறிந்துகொள்ளும் வாசகர்களுக்கு, பின்பு வியப்பூட்டும் முடிவு காத்திருக்கிறது. எந்தப் பண்பாட்டு வலையில் சிக்கித் தவித்தானே அதே பண்பாட்டைப்பற்றிய அறிவினல் தெளிந்துஅதனுடைய வலிமையைச்சரியானபடிபுரிந்துகொள்கிருன். இனம், கல்வி, போரில் வெற்றி, சமாதானம் ஆகியவை பற்றி ரூத் பெனிடிக்ட் அம்மையார் மேன்மேலும் பொறுப்புகள் ஏற்ற ஆண்டுகளில் இந்த நம்பிக்கை வலிமைபெற்றது.

1939ஆம் ஆண்டில் உலகெங்கும் நாஸிகளின் இன வெறிப் போர் அச்சுறுத்திக்கொண்டிருந்தபொழுது அந்த அம்மையார் 'Race : Science and Politics' என்ற நூலை எழுதினார். போர்க்காலத்தில் ருமேனியா, ஜெர்மனி, நெதர்லாந்து, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் செல்லமுடியாமல் தடையிருந்தது. ஆதலால், அந்தப் பண்பாடுகளை ஆராய்ந்து பார்க்க, அவைகளை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெளிந்து பண்பாடுகளைத் திறனுடன் ஆராய்ந்தார். போர் முடிந்ததும் 'The Chrysanthemum and the Sword' என்ற நூலை இயற்றினார். இது, ஜப்பானியர்கள் புதுமுறைகளைக் கையாளும் திறன்படைத்தவர்கள் என்று புரிந்துகொண்டால் போருக்குப்பின் ஜப்பானுடன் தொடர்புகொள்ளும் அமெரிக்கர்கள் நல்ல முறையிலே பழகுவர் என்ற நம்பிக்கையின்பால் எழுந்த நூலாகும். பல்லாண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியின் பயனைக் கொள்கை முடிவுகளோடு கலந்து பேணி வளர்த்த ஒரு நிலையான நம்பிக்கையை இங்கே நாம் காண்கின்றோம். மனிதர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த முடிவுகளை நாட, மானிடவியல் எப்படிப் பயன்பெறுகிறது என்ற புதிய நம்பிக்கை இந்தப் 'பண்பாட்டுக் கோலங்கள்' என்ற நூலில் காணப்பெறுகிறது. பனித்துளிபோல, இந்த நம்பிக்கையானது அந்த அம்மையாரின் சொற்களிலே தெளிந்து விளங்குகிறது. முதன் முதலில் இந்தக் கண்ணோட்டத்தில் உலகைக் காணும் வாசகர்களுக்கு வியப்பூட்டுகிறது.

நியூயார்க், அக்டோபர், 1958.

நன்றி

இந்தப் புத்தகத்தில் மூன்று பழங்குடிகளைத் தேர்ந்தெடுத்த தற்குக் காரணம், அவர்களைப்பற்றிய விவரங்கள் நிறைவு உள்ள வையாகவும் திருப்தி அளிக்கக்கூடியவையாகவும் இருப்ப தாலேயே ஆகும். மேலும், அம் மக்களுடன் நெருங்கி வாழ்ந்து, அவர்களைப்பற்றி விரிவாக எழுதியுள்ள பல இன ஆராய்ச்சியாளர் களுடன் நான் விவாதித்து அறிந்துகொண்ட பல விவரங்களையும் சேர்த்திருக்கிறேன். நானே பல கோடைக்காலங்களில் ஸுனி மக்களிடையேயும் அவர்களுக்கு அருகிலுள்ள பல மக்களி டையேயும் வசித்திருக்கிறேன். ஆகவே, ஸுனி மக்களை மற்றைய மக்களுடன் அடிக்கடி ஒப்பிட முடிந்தது. ஸுனி மொழியைக் கற்றுக்கொண்டிருந்த டாக்டர் ரூத். எல். புன்ஸெல் (Dr. Ruth L. Bunzel) அவர்களுக்கு நான் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். ப்யூப்லோ மக்களைப்பற்றி உள்ள புத்தகங்களில் அவருடைய புத்தகங்களே சிறந்தவை. டாக்டர் ரியோ F. ஃபார்ச்சூன் (Dr. Reo F. Fortune) அவர்களின் மதிப்புயர்ந்த தனிக்கட்டுரை யான 'தோபு சூன்யக்காரர்கள்' (The Sorcerers of Dobu) என்ற புத்தகத்திற்கும் அவரோடு நான் நடத்திய மகிழ்ச்சி தரக்கூடிய உரையாடல்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அமெரிக்காவின் வடமேற்குக் கடற்கரையைப்பற்றி அறிந்து கொள்ள, பேராசிரியர் ஃப்ரான்ஸ் போவாஸ் (Franz Boas) அவர்களின் புத்தகங்களைமட்டும் நான் பயன்படுத்தவில்லை; வடமேற்குக் கடற்கரையில் அவரது நாற்பது ஆண்டு அனுபவத்தால் ஏற்பட்ட குறிப்புகளிலிருந்தும், க்வாக்யூட்ல் மக்கள் வாழ்வைப்பற்றி அவர் தொகுத்தவைகளிலிருந்தும், இன்னும் அவரால் வெளியிடப்பெருத சில விவரங்களிலிருந்தும் நான் சில அமிசங்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறேன்.

இப் புத்தகத்தில் எடுத்துச்சொல்லுகின்ற முறைகளுக்கு நானே பொறுப்பாளியாவேன். இத் துறையில் உள்ள வல்லுநர் களைவிட சில விளக்கங்களை நான் மிகைபடுத்தியிருக்கலாம். ஆனல், எல்லா அதிகாரங்களையும் பழங்குடி ஆய்வாளர்கள் படித்து விவரங்களைச் சரிபார்த்திருக்கிருர்கள். முழுவிவரங்களை யும் அறிந்துகொள்ள விரும்புவோர்க்கு, அவர்களின் ஆராய்ச்சிப் புத்தகங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'The Century Magazine'-ல் உள்ள 'The Science of Custom', 'The AmericanAnthropologist'-ல் உள்ள 'Configurations of Culture in North America', 'The Journal of General Psychology'யில் உள்ள 'Anthropology and the Abnormal' ஆகிய கட்டுரைகளின் சில பகுதிகளை மீண்டும் அச்சடிக்க அனுமதியளித்த மூலப் பதிப்பாளர்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்

'தோபு சூன்யக்காரர்கள்' (The Sorcerers of Dobu) என்ற புத் தகத்தின் பதிப்பாளர்களாகிய இ. பி. டட்டன் அண்டு கம்பெனிக்கும் (E. P. Dutton & Company) என் நன்றி உரித்தாகும்.

கொலம்பியா பல்கலைக்கழகம்,
நியூயார்க் நகரம்.

ரூத் பெனிடிக்ட்.

முன்னுரை

சமூக மானிடவியல் பிரச்சினைகளை அறிய இந் நூற்றாண்டில் பல புதிய வழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதப் பண்பாட்டின் சரித்திரத்தை உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல காலங்களிலிருந்தும் சேகரித்த, தன் இயற்கைத் தொடர்பினின்றும் பிய்த்து எடுக்கப்பட்ட சான்றுகளைக்கொண்டு உருவகப்படுத்திப் பார்க்கும் பழைய முறை மறைந்துவருகிறது. சில குறிப்பிட்ட விவரங்களின் பரவலைப்பற்றிய அறிவைக் கொண்டு, புதைபொருளியல் சான்றுகளின் உதவியுடன் சரித்திரத் தொடர்பைத் திருப்பி அமைத்துக் காணும் காலம் பிறகு வந்தது. இந்தக் கண்ணோக்கில் மேலும்மேலும் விரிவான பல இடங்கள் கவனிக்கப்பெற்றன. பல பண்பாடுகளின் விவரங்களுக்கிடையே நிலையான தொடர்பை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பெற்றன. இவைகளைக்கொண்டே சரித்திரத் தொடர்புகளை அமைக்கவும் முயன்றனர். பொதுவான பண்பாட்டுச் சரித்திரத்தில் உள்ளதுபோல், பல புறத்தோற்ற ஒற்றுமையுடைய பண்பாட்டு விவரங்கள் தனித்தனியே ஆங்காங்கு ஏற்பட்டிருக்கலாம் என்பது மறுக்கப்பட்டது. முழுமையும் மறுக்கப்பெறாவிட்டாலும் அது முக்கியமானதாகக் கருதப்பெறவில்லை. பரிணாம முறையும் ஆங்காங்கே உள்ள தனித்தனிப் பண்பாடுகளின் ஆய்வுமுறையும் பண்பாட்டு உருவகங்களை விளக்கப் பயன்பட்டன. முன் சொன்ன முறையில் பண்பாடு, நாகரிகம் ஆகியவைகளின் சரித்திரத்தை ஒன்றுபட்ட ஒரு காட்சியாக அமைக்க முயற்சி செய்யப்பெற்றது. பின் சொன்ன முறையைச் சார்ந்தவர்கள், ஒவ்வொரு பண்பாட்டையும் ஒரு தனித் தொகுதியாகவும் தனிப்பட்ட ஒரு சரித்திரப் பிரச்சினையாகவும் கண்டனர்.

பண்பாடுகளை ஆழ்ந்து ஆராய முற்படும்போது அதற்கு இன்றியமையாத விவரங்களைச் சேகரித்தல் ஊக்கமுடன் நடைபெறத் துவங்கியது. இப்படிச் சேகரிக்கப்பட்ட விவரங்கள் பொருளாதார வாழ்க்கை, செய்முறைகள், கலை, சமூக அமைப்பு, மதம் ஆகியவை தனித் தனியாகப் பிரிந்தமைந்தது போன்ற ஒரு சமூக வாழ்க்கையைப்பற்றித் தெரிவித்தன. இவைகளிடையே ஒருமைப்படுத்தும் ஓர் உட்கூறை நாம் காணமுடியவில்லை. கத்தே (Goethe) சொல்லியதுபோலவே மானிடவியலாரின் நிலை இருந்தது.

> 'Wer will was Lebendig's erkennen und beschreiben,
> Sucht erst den Geist heraus zu treiben,
> Dann hat er die Teile in seiner Hand,
> Fehlt leider nur das geistige Band.'

வாழ்கின்ற பண்பாட்டோடு இயங்குவது பண்பாட்டின் முழுமையிலே கவனங்கொள்ளச்செய்தது. எந்த குணப்பாங்கும் அதன் பொது அமைப்பில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டால் புரிந்துகொள்ள முடியாத நிலையை அடைந்துவிடுகின்றது என்பது மேன்மேலும் தெளிவாகிறது. ஒருசில குறிப்பிட்ட விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டதாகப் பண்பாட்டின் முழுமையைக் காண முயல்வது பிரச்சினையைத் தீர்க்கவில்லை. கலப்பில்லாத மானிடப் புவியியல் (Anthropo-geographical), பொருளாதாரம், மற்றும் சில சாதாரண வழிகள் தவருன உருவத்தையே காட்ட முடிந்தது.

ஒரு பண்பாட்டு முழுமையின் பொருளைக் காண வேண்டும் என்ற விருப்பம், தகுதி நிலைபெற்ற நடத்தைகளின் வர்ணனையை வேறுபல பிரச்சினைகளுக்கு வழிகாட்டும்படியாகவே கருதச்செய்தது. நாம் தனி மனிதனை, அவனது பண்பாட்டிலே வாழ்கின்றவனுகவும், பண்பாட்டை, தனி மனிதர்களால் வாழப்பெறுவதாகவும் கருதவேண்டும். சமூக-உளவியல் பிரச்சினைகளின்மேல் உள்ள அக்கறை சரித்திரவாயிலாகக் கவனிப்பதற்கு எதிரிடையானதல்ல. அதற்கு மாருகப் பண்பாட்டு மாறுபாடுகளுக்குக் காரணமான சக்திவாய்ந்த முறைகளைத் தெளிவாக்குகின்றது. தொடர்புள்ள பல பண்

பாடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் கிடைக்கின்ற சான்றுகளை மதிப்பீடு செய்வதற்கு உதவுகின்றது.

பண்பாட்டு வாழ்க்கையானது விவரங்களின் குணாதிசயங்களால் பண்பாட்டின் பல அம்சங்களுக்கிடையே உள்ள தொடர்பாகத் தெரிகிறது. சில இடங்களில் இப்படிக் கவனிப்பது, பண்பாடு அடர்ந்து நெருங்கியிருப்பதையோ அல்லது இணைப்புகளின்றி இருப்பதையோ நன்ருகப் புரிந்துகொள்ள உதவுகிறது. பலவித பண்பாடுகளில் இணைப்புகளின் பலவிதங்களை நன்ருக எடுத்துக் காட்டுகிறது. இதிலிருந்து ஒரு பண்பாட்டின் பல அம்சங்களுக்கிடையே உள்ள தொடர்புகள் வெவ்வேறு முறைகளைப் பெற்றிருக்கிறது என்றும் பொதுப்படை. யாகச் சொல்வதற்கு அவைகள் இடந்தரவில்லை என்றும் நிரூபிக்கப்படுகிறது. எப்படியாயினும், தனி மனிதர்களுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பைப் புரிந்துகொள்ள மறைமுகமாக வழிசெய்கிறது.

ஒரு தனி மனிதனின் நடத்தையையும் கூட்டத்தின் நடத்தையையும் கட்டுப்படுத்துகிற ஈடுபாடுகளைப்பற்றித் தெரிந்துகொள்ள, பண்பாட்டை ஆழ்ந்து அறியவேண்டியிருக்கிறது. டாக்டர் பெனிடிக்ட் (Benedict) அவர்கள் பண்பாட்டின் உட்கூறை அதன் உருவகம் என்று சொல்கின்ருர். இந்தப் புத்தகத்தில் இந்தப் பிரச்சினையை ஆசிரியர் நம் முன்னே வைக்கிருர். ஆதிக்கம்பெற்ற ஓர் எண்ணத்தைக்கொண்டுள்ள மூன்று பண்பாடுகளைக் கொண்டு இதை விளக்குகிருர். சமூகக் காரியங்களைச் செயல்முறைவழியிலே காண்பது என்பதைவிட, வேறு தனிப்பட்டவழியிலே இஃது அமைந்துள்ளது. ஏனென்ருல், இஃது அடிப்படையான ஈடுபாடுகளைக் கண்டுபிடிப்பதிலே ஆர்வம் காட்டுகிறது. பண்பாட்டின் ஒவ்வோர் அமிசத்திற்கும் உள்ள செயல்முறைத் தொடர்புகளை அறிய முற்படவில்லை. பொதுவான உருவகத்தால் பாதிக்கப்படுகிற சில மாற்றங்களைமட்டும் சொல்வதால் இது சரித்திரமாகவும் இல்லை. பண்பாட்டிற்குள்ளே நடக்கும் மாறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உருவகம், அநேகமாக ஒரு நிரந்தர அமைப்புள்ளதாகவே தெரிகிறது.

ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறபடி, ஒவ்வொரு பண்பாடும் ஒரு குணப்பாங்கால் ஆதிக்கம் பெற்றிருக்க

வில்லை. ஆனால், ஒரு தனி மனிதனின் நடத்தையை ஊக்குவிக்கின்ற பண்பாட்டு நோக்கங்களைப்பற்றி நாம் மேலும் தெரிந்துகொள்ளும்போது, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் விதம், ஒழுங்கு நடத்தைக்கான சிறப்புப்பண்புகள் போன்ற சில, நமக்கு—நமது நாகரிகத்தின் கண்ணோக்கில்—அசாதாரணமானவையாகத் தோன்றுவதன் பொருள் விளங்கும். சமூகத்திற்கு ஒத்தது, ஒவ்வாதது, சாதாரணமானது, அசாதாரணமானது போன்ற நடத்தைகளின் தராதரம் ஒரு புதிய முறையிலே தெளிவாகிறது.

ஆசிரியர் தேர்ந்தெடுத்துள்ள இந்தத் தீவிரமான பண்பாடுகள், இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை நன்றாகத் தெளிவாக்குகின்றன.

ஃப்ரான்ஸ் போவாஸ்
(Franz Boas)

'கடவுள் முதலில் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திற்கும் களிமண்ணால் ஆன ஒரு கோப்பையை அளித்தார். அவர்கள் அதனின்று தங்கள் வாழ்வைப் பருகினர்.'

'டிக்கர் இந்தியர்களுடைய பழமொழி'

பொருளடக்கம்

அதிகாரம் பக்கம்

1. வழக்கங்களின் இயல் 1

வழக்கமும் நடத்தையும்—குழந்தையின் பரம்பரை—நமது தவருன எண்ணம்— ஆங்காங்கே உள்ள வழக்கங்களை 'மனித இயல்பு' என்னும் குழப்பம்—மற்ற பண்பாடுகளைப்பற்றியுள்ள நமது அறியாமை—இனவெறுப்பு—மனிதன் உருவாக்கப்படுவது வழக்கங்களால், தன்னியல்பால் அல்ல—'கலப்பில்லாத இனம்' என்னும் தவருன கொள்கை— பழங்குடி மக்களைப்பற்றி அறியவேண்டிய அவசியம்.

2. பல்வேறு பண்பாடுகள் 20

வாழ்வுக் கோப்பை— தேர்ந்தெடுப்பதற்கான அவசியம்— பலவித சமூகங்களிலே குமரப்பருவமும் பூப்படைதலும்— போர் என்பதையே கேட்டிராத மக்கள்— திருமண வழக்கங்கள்— பண்பாட்டுக் குணப்பாங்குகளின் பின்னல்— ஆதரவுதரும் ஆவிகளும் தோற்றங்களும்— திருமணமும் கிறிஸ்துவமும்— இந்த இணைப்புகள் சமூகத்தாலன்றி உயிரியல் முறையில் அல்ல.

3. பண்பாடுகளின் இணைப்பு 45

நடத்தையின் எல்லாத் தகுதிநிலைகளும் ஒன்றுக்கொன்று இணைசெய்யக்கூடியவை— பண்பாடு வகைப்படுத்தப்படல்— மானிடவியல் துறையில் உள்ள குறை— முழுமையைக் காணவேண்டிய அவசியம்— ஸ்பெங்ளரின் 'Decline of the West'—ஃபாஸ்டியன், அப்போலோனியன் மனிதர்கள்—படிப்பதற்குச் சிக்கலான மேற்கத்திய நாகரிகம்—பழங்குடி மக்கள் வழியாகச் சுற்றிவருதல்.

4. நியூ மெக்ஸிகோவிலுள்ள ப்யூப்லோ மக்கள் 56

கலப்பு ஏற்படாத ஒரு சமுதாயம்— ஸுனி மக்களின் சடங்குகள்— பூசாரிகளும் முகமூடிக் கடவுள்களும்— மருத்துவக் கூட்டங்கள்— வலுவான சமூக அமைப்புக்கொண்ட பண்பாடு— 'நடுப்பாதை'— கிரேக்க சிறப்புத்தன்மையைத் தீவிர

மாகக் கொள்வது— சமவெளி இந்தியர்களின் எதிரிடையான வழக்கங்கள்— டையோனீஷியன் முறையில் வலிப்புகளும் தோற்றங்களும்— மருந்துகளும் சாராயமும்— அளவு மீறுவதில் ஸுனி மக்களுக்குள்ள அவநம்பிக்கை— அதிகாரத்தையும் பலாத்காரத்தையும் வெறுப்பது— திருமணம், சாவு, துக்கம் கொண்டாடுதல்— செழுமைச் சடங்குகள் — இனக் குறியீடுகள் — 'பிரபஞ்சத்தோடு ஒன்றி விட்ட மனிதன்'— அப்போலோனியன் முறைக்கு எடுத்துக்காட்டான நாகரிகம்.

5. தோபு 131

கெட்ட எண்ணமும் நம்பிக்கைத் துரோகமும் நற்குணங்களாக எண்ணப்பெறும் இடங்கள்— மரபுவழியே உள்ள விரோதம்—மணமகளைப் பிடித்தல் —கணவனின் மானக்கேடான நிலை— உடைமை கொள்வதில் உள்ள தனித் தீவிரம்— மாயாஜாலங்களை நம்பியிருப்பது—தோட்டத்திற்கான சடங்கு —நோய் வசியங்களும் சூன்யக்காரர்களும்— வாணிபத்திற்கு உள்ள ஆவேசம்— வாபு-வாபு என்ற ஒரு புத்தி கூர்மையான வியாபாரப் பழக்கம்—சாவு—எஞ்சியிருப்பவரிடையே ஒருவர்க்கொருவர் குறைகூறிக்கொள்வது— சிரிப்பு விலக்கப்படுவது—சாமர்த்தியம்—ஓர் ஈவிரக்கமற்ற போராட்டம்.

6. அமெரிக்காவின் வடமேற்குக் கடற்கரைப் பகுதி 161

ஒரு கடற்கரை நாகரிகம்—வான்கூவர் தீவிலுள்ள க்வாக்யூட்ல் மக்கள்— டையோனீஷியன் முறைக்கு எடுத்துக்காட்டான மக்கள்— தன்னின உண்ணிக் குழு— ப்யூப்லோ மக்களுக்கு நேர் எதிரிடை— பொருளாதாரப் போட்டி— நமது சமூகத்தைக் கேலிசெய்வதுபோன்ற நிலை— தற்புகழ்ச்சி— ஒருவனுடைய விருந்தாளிகளை அவமானப்படுத்துவது— பாட்லேட்ச் பண்டமாற்றுகள்— துணிவுச் செயல்களின் உச்சநிலை— மணப்பெண்ணிடம் கொடுத்துவைப்பது— திருமணம், கொலை, மதம் ஆகியவைமூலம் உரிமைகள்—

தெய்வத்தன்மை பெற்றிருத்தல்— கேலி செய்வார்கள் என்ற அச்சம்— சாவு மிகப்பெரிய சவால்— உணர்ச்சி நிலைகளின் வரிசை.

7. சமூகங்களின் இயல்பு 228

இணைதலும் ஒன்றிவிடுதலும்— இணைசேர முடியாத விவரங்களின் முரண்பாடு— நமது சொந்தச் சிக்கலான சமூகம்— உயிரியும் தனி மனிதரும் எதிர்ப்பட்டிருத்தல்— உயிரியல் விளக்கமும் பண்பாட்டு விளக்கமும் எதிர்ப்பட்டிருத்தல்— பழங்குடி மக்களின் வாழ்வைக்கொண்டு பார்த்தல்—'குறிப்பிட்ட எடுத்துக்காட்டான' தகுதிகளில்லாமை— பரவலுக்கும் பண்பாட்டு உருவகத்திற்கும் உள்ள முக்கியத்துவம்—சமூக மதிப்புகள்—தன்னைத் தானே அறிந்துகொள்ளவேண்டிய அவசியம்.

8. தனி மனிதனும் பண்பாட்டுக் கோலமும் 255

சமூகமும் தனி மனிதர்களும் எதிரிடையானவர் அல்லர். பரஸ்பரம் தழுவியுள்ளவர்களே.— ஒரு தோரணிக்காக அமைந்துவிடுதல்— நம்பிக்கை யிழந்த நிலையில் ஏற்படும் நடத்தைகள்— தவறான முறையில் அமைந்த சில உதாரணங்கள்— தற்பாலுணர்ச்சி கொண்டவர்களை ஒப்புக்கொள்ளுதல்— அதிகாரம் பெற சமாதி நிலையையும் வலிப்பையும் வழியாகக் கொள்ளுதல்— சமூகத்திலே 'தகுதியற்ற'வனின் நிலை—பொறுத்துக்கொள்ள சாத்தியமான ஈடுபாடுகள்— ஒரு பண்பாட்டுத் தன்மையிலே தீவிரமான சிலர்— நெறிமுறைகொண்டவர்களும் தற்கால வெற்றியுள்ள தன்முனைப்பு உள்ளவர்களும்— சமூகத்திலுள்ள தொடர்புகள் நம்பிக்கையையே ஊட்டுகின்றன; நம்பிக்கை யிழந்துவிடக்கூடிய நிலையை ஏற்படுத்தவில்லை.

கலைச்சொற்கள் (ஆங்கிலம்—தமிழ்) 283

கலைச்சொற்கள் (தமிழ்—ஆங்கிலம்) 287

மூதற் குறிப்பு (அகர வரிசை) 292

குறிப்புப் புத்தகங்கள் 298

1. வழக்கங்களின் இயல்

மானிடவியல் மனிதர்களைச் சமூக இயல்புகொண்ட பிராணிகளாக அறிய முற்படுகிறது. உடலியல் குணாதிசயங்கள், தொழில் செய்முறைகள், வழக்கமான நம்பிக்கைகள், மதிப்புகள் ஆகியவைகளால் வேருெரு மரபைச்சார்ந்த சமுதாயங்களைவிட, தனித்து நிற்கின்ற சமுதாயத்தை ஊன்றிக் கவனிக்கிறது.

சமூக இயல்களில் மானிடவியல் தனித்து நிற்பதற்குக் காரணம் அது நமது சமூகத்தைமட்டுமன்றி வேறு பல சமூகங்களையும் அறிய முற்படுவதுதான். புணர்ச்சி, இனப் பெருக்கம் ஆகியவற்றிற்கான சமூகக் கட்டுப்பாடுகள், நமது நாகரீகத்திற்குத் தொடர்பில்லா ஸீ ட்யாக்ஸ் (Sea Dyakes) மக்களுடையதாயினும் சரி அவைகள் முக்கியமானவை என்றே அது கொள்ளுகிறது. ஒரு பொதுவான பிரச்சினையைத் தீர்க்க நமது வழக்கங்களும், நியூ கினியா மக்களின் வழக்கங்களும் சாத்தியமான இரண்டுவித அமைப்புகளே என்று மானிடவியல் ஆராய்ச்சியாளர் கொண்டுள்ளார். அவன் மானிடவியல் ஆய்வாளனுகை இருக்கும்வரை, ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்தது எனக் கொள்ளமாட்டான். மனித நடத்தை நமது மரபினுல் உருவாக்கப்படுவதைமட்டுமன்றி எந்தவித மரபும் எப்படி உருவாக்குகிறது என்றும் கவனிக்கிருன். அவன் பல பண்பாடுகளில் உள்ள வழக்கங்களின் விதங்களைக் கவனிக்கிருன். பண்பாடுகள் எப்படி மாறுபட்டு, தனித்து நின்று பல உருவகங்களை வெளிப்படுத்துகிறது என்றும், ஒரு பண்பாட்டை உருவாக்குகிற தனி மனிதர்களின் வாழ்க்கையில் எப்படி வழக்கங்கள் செயல்படுகின்றன என்றும் கவனிக்கிருன்.

சாதாரணமாக, வழக்கங்களை மிகவும் முக்கியமானவைகளாக எண்ணுவதில்லை. நமது மூளைகளின் உள்ளே நடக்கின்றவற்றை

அவசியம் அறியவேண்டும் என்று விரும்புகிற நாம், வழக்கங்களை நடத்தையின் சர்வ சாதாரண இயல்பென்று விட்டுவிடுகிறோம். உண்மையிலே இது நேர் எதிரிடையானது. உலக முழுவதும், எவ்வளவு திரிபு பெற்ற தனி மனிதர்களின் செய்கைகளாலும் ஏற்படுத்த முடியாத பல ஆச்சரியமான நடத்தையின் விவரங்கள் தாம் மரபுவழி வழக்கங்களாகும். ஆயினும், இது மிகவும் சாதாரண விஷயமே. அனுபவங்களிலும் நம்பிக்கைகளிலும் ஆதிக்கம் பெற்ற வழக்கங்களும், அவை வெளிப்படுகிற பலவிதங்களும் மிகவும் முக்கியமானவை.

மாசற்ற கண்களுடன் எவரும் உலகை நோக்குவதில்லை. குறிப்பிட்ட வழக்கங்களாலும், நிறுவனங்களாலும், சிந்தனை முறைகளாலும், திருத்தப்பட்டதாகவே அதைக் காண்கின்றனர். தத்துவ நோக்கத்தோடு காணும்பொழுதும் இதுபோன்ற மாறு நிலைகளைத் தாண்டிச் செல்ல இயலுவதில்லை. பொய்யையும், மெய்யையும்பற்றி அவன் கொண்டுள்ள கருத்துகள் அவனது மரபுவழி பழக்கங்களின் தொடர்பு பெற்றே விளங்குகின்றன. ஜான் ட்யூவி (John Dewey) அவர்கள், வழக்கங்கள் ஒரு தனி மனிதனின் நடத்தையை உருவாக்குவது அவன் மரபு வழக்கங்களில் ஏற்படுத்தக்கூடிய மாறுதல்களைவிட மிகக் குறைவானது என்று சொல்லியிருக்கிறார். அதாவது, ஒரு குழந்தையின் தாய்மொழியால் குழந்தைக்குக் கிடைக்கும் வார்த்தைகளின் எண்ணிக்கை அக் குழந்தையின் மழலையிலிருந்து தாய்மொழிக்குக் கிடைக்கும் வார்த்தைகளைவிட மிகமிக அதிகமாக இருப்பதைப் போல எனக் கூறினர். தனியாக இயங்கி வளர்ந்த சில சமூகங்களைப் பற்றி அறியும்போது இது தெளிவாகத் தெரிகிறது. ஒருவனது சமுதாயம் மரபுவழியே பரம்பரையாக அளிக்கின்ற கோலங்களுக்கும், தகுதி நிலைகளுக்கும் ஏற்ப ஒருவனது வாழ்க்கை அமைந்துவிடுகிறது. அவன் பிறந்ததிலிருந்து அவன் பிறந்த இடத்தில் இருக்கும் வழக்கங்கள் அவனது அனுபவங்களையும் நடத்தையையும் உருவாக்குகின்றன. அவன் பேச ஆரம்பிக்கும் போதே அவனுடைய பண்பாட்டின் ஓர் உயிரியாக இருக்கிறன். அவன் வளர்ந்து அப் பண்பாட்டுச் செயல்களிலே பங்கு கொள்ளும்போது, அதன் பழக்கங்களே அவன் பழக்கங்களாகிவிடுகின்றன. அதன் நம்பிக்கைகளே அவன் நம்பிக்கையாகவும், அது இயலாது என்று கருதுகிற செயல்கள் அவனுக்கு இயலாதன ஆகவும் இருக்கின்றன. அவனுடைய குழுவில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் அவைகளை அவனோடு பகிர்ந்துகொள்கின்றன. உலகத்தின் மற்றொரு கோடியில் பிறந்த வேறொரு குழந்தை அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட பெற முடியாது.

வழக்கங்களைவிட முக்கியமாக வேறொரு சமூகப் பிரச்சினையை நாம் ஆராயவேண்டிய தேவையில்லை. வழக்கங்களின் விதிகளை யும், விதங்களையும் நாம் தெரிந்துகொள்ளும்வரை மனித வாழ்வின் முக்கிய, சிக்கலான அம்சங்கள் நமக்குப் புரியாது.

சில ஆரம்பக் கருத்துகளை ஒப்புக்கொண்டால்தான் வழக் கங்களைப்பற்றிய அறிவு பயன் தரும். சில கருத்துகள் பலமாக எதிர்க்கப்படுகின்றன. விஞ்ஞான முறை ஆராய்ச்சியில், ஒன்று மற்றொன்றைவிடச் சிறந்தது என்று, தான் ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்ட விவரங்களைச் சீர்தூக்கி எண்ணக்கூடாது. சப்பாத்திகள், கரையான் அல்லது நெபுலாக்களின் இயல்புகள் ஆகியவைகளைப்பற்றி அறிவது போன்ற முரண்பாடில்லாத ஆராய்ச்சிகளில் அவைகளை ஒன்று சேர்த்து, அவைகளிடையே இருக்கும் மாறுபாடுகளையும் தகுதிகளையும் அறியவேண்டும். இந்த முறையிலேயே வானியல் விதிகள், சமூகப் பூச்சிகளின் பழக்கங்கள் ஆகியவற்றைப் படித்தோம் என வைத்துக் கொள்வோம். மனிதனைப்பற்றி படிக்கும்போதுமட்டும் மேற் கத்திய நாகரீகமான ஒரே ஒரு மாறுபாட்டைத்தான் எல்லா அறிவுத் துறைகளும் எடுத்துக்கொண்டன.

நமக்கும் பழங்குடி மக்களுக்கும், நமக்கும் காண்டுமிராண்டி களுக்கும், நமக்கும் நம் மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக் கும் உள்ள வேறுபாடுகள் மக்களின் எண்ணத்தை ஆட்கொண் டிருக்கும்வரை மானிடவியல் என்பது விளக்க முடியாத ஒன்று கும். அண்டையிலுள்ளவனுடைய மூட நம்பிக்கையை நமது சொந்த நம்பிக்கையைக்காட்டிலும் இழிவுபடுத்தாத மன நிலையை முதலில் நாம் அடையவேண்டும். ஒரே அடிப்படையின் மீது எழுப்பப்பெற்ற பல நிறுவனங்களை மற்றவையோடு நம்முடை யதையும் சேர்த்தே கவனிக்கவேண்டும். உதாரணமாக இயற் கைக்கப்பாற்பட்டவைகளைச் சொல்லலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில், மேற்கத்திய நாகரீகத்தின் சிறந்த அறிவாளிக்குக்கூட இந்த மானிடவியலின் எளிதான முறை எட்டவில்லை. சரித்திரம் முழுவதும், மனிதன் தன்னை ஒரு மேம்பட்டவனுகவே எண்ணி வந்திருக்கிறுன். கோப்பர்னிகஸ் (Copernicus) காலத்திலே இப்படி மேம்பட்டிருக்கும் உரிமையானது நாம் வாழ்கின்ற இந்த பூமியைப்பற்றியும் இருந்தது. அதனுல் பதினுன்காம் நூற்றுண்டில் பூமியை ஞாயிற்றுக் குடும்பத்திற்கு (solar system) உட்பட்டதாகக் கொள்ள தீவிர எதிர்ப்பு இருந்தது. டார்வின் (Darwin) காலத்தில்

பூமியை ஞாயிற்றுக் குடும்பத்திற்கு அளித்துவிட்டு, மனிதன் கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் ஆன்மாவைப் பெற்றிருக்கிருன் என்றும், அவன் விலங்கினங்களிலிருந்து தோன்றியிருக்க முடியாது என்றும், மனிதன் தன்னிடம் உள்ள எல்லாச் சக்தி களாலும் எதிர்த்தான். விவாதத்தின் தொடர்பில்லாமை, 'ஆன்மா'வின் இயல்பைப்பற்றிய சந்தேகங்கள், மாற்ருனிட மிருந்து வேண்டியவர்களைக் காக்க மறுத்த பத்தொன்பதாம் நூற்ருண்டின் கவனிப்பற்ற நிலை ஆகிய எவையும், பரிணுமம் (Evolution) மனிதனின் தனித்தன்மைக் கெதிராக எழுந்த பொழுது ஏற்படுத்திய உணர்ச்சி வேகத்திற்கு ஈடாக இல்லை.

இந்த இரண்டு சண்டைகளிலும் வெற்றி கொண்டதாகவே எண்ணலாம். ஏற்கெனவே வெற்றி ஏற்படாவிட்டாலும் சீக்கிரம் ஏற்பட்டுவிடும். ஆனுல், சண்டையானது வேறுபக்கம் திரும்பி யுள்ளது. நாம் இப்பொழுது பூமி ஞாயிற்றைச் சுற்றுகிறது என்றும், மனிதன் விலங்குகளிலிருந்து தோன்றினுன் என்றும் ஒப்புக்கொள்ளுகிறேம். ஆயினும், இவை மனிதனின் ஆற்றலால் அடைந்த சாதனைகளின் தனித்தன்மையோடு எந்தத் தொடர் பும் கொண்டிருக்கவில்லை. பல கோடி ஞாயிற்றுக் குடும்பங்களில் ஒன்ருன ஒரு கோளத்தில் நாம் வசித்தால் அதுவும் பெருமைக் குரியதாகும். பலவகைப்பட்ட மனித இனங்கள் பரிணுமத்தின் வழியே விலங்குகளோடு தொடர்புகொண்டிருந்தாலும் நமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் மிக அதிகம். நமது நிறு வனங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. ஆனுல், நமது சாதனை களும் நமது நிறுவனங்களும் மிகவும் சிறந்தவை. தாழ்ந்த இனத் தவருடையதைவிட இவை வேறுபட்டவை. எப்படியாயினும் காப்பாற்றப்பட வேண்டியவை. ஆகையால், இன்று, நாம் முடியாட்சி, இன வெறுப்பு, கிறிஸ்தவ மதத்திற்கும் மத நம் பிக்கையற்றவருக்கும் இடையே ஒப்பிடுதல் ஆகிய எல்லாப் பிரச் சினைகளிலும் நமது தனித்தன்மையையே மனதில் கொண்டுள் ளோம். மற்றவர்கள் கவனிக்காத, உலகமக்கள் நிறுவனங்களை நாமும் கவனிப்பதில்லை. நமது நிறுவனங்கள், நமது சாதனைகள் நமது சொந்த நாகரிகம் ஆகியவற்றையே நாம் கவனிக்கிறேம்.

மேற்கத்திய நாகரீகம், நாமறிந்த மற்றக் குடிகளைவிட, சாதக மான சரித்திரச் சூழ்நிலைகளால் மிகவும் விரிந்து பரவியிருக்கிறது. உலகத்தின் பெரும்பகுதிகளிலேயும் அது நிலைபெற்றுவிட்ட படியால், மனித நடத்தை எங்கும் ஒரே மாதிரியானது என்ற எண்ணம் நமக்கு எழுகிறது. வேறு சூழ்நிலைகளில் இப்படி ஏற்படாது. மிகவும் எளிய பழங்குடிகள்கூட தங்கள் பண்

பாட்டுக் குணப்பாங்குகளைப்பற்றி ஒரு நல்ல காரணத்தினாலேயே தெரிந்து வைத்திருக்கின்றனர். அவர்கள் பல பண்பாடுகளோடு நெருங்கிய அனுபவங்களைப் பெற்றிருந்தனர். வெள்ளையனுக்கு முன்னால் தங்கள் மதம், தங்கள் பொருளாதார முறை, தங்கள் திருமணத் தடைகள் ஆகியவை வீழ்வதைக் கண்டிருக்கின்றனர். அவர்கள் ஒன்றைத் தள்ளிவிட்டு வேறொன்றை எடுத்துக்கொண்டனர். மனித வாழ்வில் மாறுபட்ட ஓர் ஏற்பாடாகவே அவை இருந்ததாக அவர்கள் தெளிவாக அறிந்தனர். வெள்ளையனின் ஆதிக்கம்பெற்ற குணப்பாங்குகளை அவர்கள் அவனது வியாபாரப் போட்டியினாலோ அல்லது அவனது போர் முறை நிறுவனத்தாலோ ஏற்பட்டவை என்று மானிடவியலார் கருதுவதுபோன்றே சொல்லுகின்றனர்.

வெள்ளையன் வேறுவிதமான அனுபவத்தைப் பெற்றிருந்தான். ஐரோப்பியரோடு ஒன்றிவிட்டவரைத் தவிர, வேறு அயலானை அவன் கண்டதில்லை. அவன் உலகெங்கும் பிரயாணம் செய்திருந்தாலும் ஆங்காங்கே தான் தங்கும் விடுதிகளுக்கு வெளியே சென்று தங்கியிருக்கமாட்டான். தனது வாழ்க்கை முறையைத் தவிர, வேறு வாழ்க்கைமுறைகளை அவன் அறியமாட்டான். தன்னைச் சுற்றியுள்ள வழக்கங்களும் நோக்கங்களும் ஒரே மாதிரியாக இருப்பது, அவனுக்குச் சரித்திர வாயிலாக ஏற்பட்ட ஒரு வாய்ப்பு என்பது தெரிவதில்லை. அவனது பண்பாட்டுத் தகுதிநிலைகளும் மனித இயல்பும் சரிசமமானதே என அவன் சந்தடியின்றி ஒப்புக்கொள்கிறான்.

வெள்ளையனது நாகரீகம் விரிவாகப் பரவியிருப்பது ஒரு தனிப்பட்ட சரித்திரச் சம்பவம் அல்ல. பாலினீஷியன் கூட்டமானது, சமீப காலத்தில் ஒன்டாங் (Ontong), ஜாவா (Java) தீவுகளிலிருந்து ஈஸ்டர் (Easter) தீவுவரை பரவியிருக்கிறது. அதுபோன்றே ஹவாயிலிருந்து (Hawaii) நியூஸிலாந்து (Newzealand) வரையிலும் பரவியுள்ளது. பன்டு (Bantu) மொழி பேசும் மக்கள் ஸஹாரா (Sahara) முதல் தென் ஆப்பிரிக்காவரை பரவியுள்ளனர். ஆனால், இரண்டு இடங்களிலும் அதிகமாக வளர்ந்த ஒரு மனித இனந்தான் என்று நாம் கொள்வதில்லை. மேற்கத்திய நாகரிகம் இடம் விட்டு இடம் செல்லப் பல நூதன கண்டுபிடிப்புகளையும், பரவியுள்ள வியாபார ஏற்பாடுகளையும் தான் விரிந்து பரவுவதற்குச் சாதகமாகப் பெற்றிருந்தது என்பதைச் சரித்திர வாயிலாக எளிதில் அறிய முடியும்.

வெள்ளையனின் பண்பாடு பரவியிருத்தலின் பொருளியல் விளைவுகளைவிட உளவியல் விளைவுகள் மிக அதிகம். உலகமுழுதும்

பண்பாடு பரவியிருப்பது, மனிதன் மற்ற மக்களின் நாகரீகங்களை அறியவேண்டிய அவசியத்திலின்றும் காப்பாற்றுகிறது. அவசியமானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் நாம் கொண்டிருக்கிற பண்பாட்டுக்குச் சரித்திரவாயிலாக ஆதாரங்கள் காட்ட முடியாத எங்கும் நிறைந்திருக்கிற தன்மையை அளித்துவிடுகிறது. நமது நாகரீகத்தில் பொருளாதாரப் போட்டியை நம்பி வாழ்வது, மனித இனமே நம்பிவாழவேண்டிய இயல்பென்று சொல்லிவிடுகிறோம். நமது நாகரீகத்திலே, குழந்தைகளின் நடத்தை, குழந்தைகளின் உளவியல் என குழந்தைகளுக்கான ஆஸ்பத்திரிகளில் பதிவு செய்யப்படுவன என்பதைக்கொண்டே மனிதனின் குழந்தை எப்படி நடக்கவேண்டும் என்று எண்ணிப் பார்க்கிறோம். நீதி நூல்களையும், குடும்ப அமைப்பையுங்கூட இவ்வாறே நாம் கவனிக்கிறோம். நாம் கொண்டுள்ள பழக்கமான நோக்கங்களின் விளைவுதான் இப்படி ஏற்படுவதற்குக் காரணமாகும். நமது நடத்தைகளைப் பொது நடத்தைகளென்றும் நமது சமூகப் பழக்கங்களை மனித இயல்பு என்றும் நாம் எண்ணிவிடுகிறோம்.

தற்கால மனிதன் தனது எண்ணங்களிலே வாழ்கின்ற ஒரு பிரச்சினையாக இதைக் கொண்டு விட்டான். ஆனாலும், பழங்குடி மக்களிடமிருந்தே இப்படிக் காணும் வழக்கம் இருந்துவந்திருக்கிறது. பழங்குடி மக்கள் மனித இனத்தை 'எனது சொந்த' உள்ளடங்கிய குழு என்றும் அயலார் என்றும் இரு பாங்குகளாகவே கண்டனர். எல்லாப் பழங்குடி மக்களும் இதில் ஒத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் நெறிமுறைகளுக்கு வெளியே உள்ளவர்களை மனிதர்களென்றே மதிப்பதில்லை. ஸுனி (Swni), தீனி (Dene), கியோவா (Kiowa) போன்ற மற்றும் பல பழங்குடிப் பெயர்கள் 'மனித இனத்தை'க் குறிக்கும் பெயர்களே. அதாவது, அவர்கள் தங்களைமட்டும் மனிதர்கள் எனக் குறிப்பிட்டுக் கொண்டனர். இக் கூட்டங்களுக்கு வெளியே மனித இனமே கிடையாது எனக் கருதினர். ஒவ்வொரு கூட்டத்தைச் சுற்றிலும் வேறு பல குடிகள் வாழ்ந்து, ஒருவர்க்கொருவர் பண்பாட்டு விவரங்களைப் பரிமாறிக்கொண்டபோதிலும் இந்த எண்ணம் நிலைபெற்றிருந்தது.

பழங்குடி மனிதன் வெளி உலகைக் காணுததுடன் 'மனித இனத்தை' ஒரு கூட்டமாகக்கொண்டு தன் இனத்தாரோடு தான் கொண்டிருந்த பொது ஈடுபாடுகளின் பொதுவான தன்மைகளையும் காணவில்லை. ஆதிமுதல் அவன் தனித்திருந்து ஒரு நாட்டுப்புறத்தானுகவே தன்னைச் சுற்றி உயரமான வேலிகளை எழுப்பியிருந்தான். மனைவியைத் தேர்ந்தெடுப்பதோ அல்லது

ஒரு தலையைக் கொணர்வதோ எதுவாயினும் முதலில் கவனிக்க வேண்டியது தன் சொந்த மனித இனமா அல்லது அப்பாற்பட்ட ஒன்ரு என்பதுதான். அவனது சொந்தக் கூட்டமும் அதன் நடைமுறைகளும் ஒரு தனி மேம்பாடுடையவையாகும்.

ஆகவே, தற்கால மனிதன், இனவழியிலும் பண்பாட்டு முறையிலும் தொடர்புகொண்ட தனது நாகரிகத்திற்குள்ளேயே, தேர்ந்தெடுத்த மக்கள் என்றும் அபாயகரமான வேற்ருர் என்றும் பிரித்துப் பார்ப்பதுபோல், ஆஸ்ட்ரேலியப் புதர்வாழ் மனிதர் அவர்களுக்குள்ளேயே காண்பது, சரித்திர வாயிலாகத் தொடர்ந்து வந்துள்ள மனப்பாங்கினுல்தான் என்பது தெரிகிறது. பிக்மீ (Pygmies) மக்களும் இதேபோன்ற உரிமைகளைக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட அடிப்படையான ஒரு மனித குணப்பாங்கை நாம் அகற்றுவது எளிதல்ல. ஆயினும், அதன் சரித்திரத்தையும் அதன் பல்வேறு மாறுபாடுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட ஒரு மாறுபாடானது, மத உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, மதமானது வாழ்கின்ற பிரச்சினையாய் இருந்தவரை மேற்கத்திய நாகரீகத்திலே கொண்டிருந்த ஈடுபாடாகும். ஓர் உள்ளடங்கிய கூட்டத்திற்கும் அயலாருக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் மதத்திலே நம்பிக்கை உள்ளவர்களா நம்பிக்கையற்றவர்களா என்பதைப்பொறுத்தே இருந்தது. பல ஆயிரம் ஆண்டுகளாக இரு தரத்தாரும் சந்திக்கக்கூடிய பொதுநிலை ஒன்றும் ஏற்படவில்லை. ஒரு தரத்தாரின் எண்ணங்களும் நிறுவனங்களும் மற்றவரிடையே மதிப்புப் பெறவில்லை. சிறிய வேறுபாடுகள் கொண்ட மதங்களின் எல்லா நிறுவனங்களும் ஒன்றுக்கொன்று எதிரிடையாகவே இருந்தன. ஒரு சாராரிடையே அவை தெய்விக உண்மை, நம்புகிறவன், உண்மை வெளிப்படல், கடவுள் என்பவைபற்றியும், மற்ருெரு சாராரிடையே பெரிய தவருகவும், கட்டுக் கதையாகவும், பேய்களுடையதாகவும், சபிக்கப்பட்டவர்களுடையதாகவும் திரிந்திருந்தது. இப்படி எதிர்ப்பட்ட கூட்டங்களின் ஈடுபாடுகளைச் சரிசமமாகக்கொள்ளும் பிரச்சினைக்கே இடமில்லை. மனித இனத்தின் ஒரு முக்கியமான குணப்பாங்கான மதத்தைப்பற்றி நாம் கண்ட விவரங்களினின்று புரிந்துகொள்வது இயலாததாகும்.

தகுதி நிலைபெற்ற மத சம்பந்தமான ஈடுபாட்டைப்பற்றியது போன்று ஒரு வர்ணனையை நாம் படிக்கும்போது ஒரு மேம்பட்ட உணர்ச்சியை அடைகிருேம். நாம் அந்தத் தவருன எண்ணத்தைவிட்டுப் பல மதங்களை ஒப்பிட்டுப் பார்க்க ஒப்புக்

கொண்டுவிட்டோம். ஆனால், இதைப் போன்ற நமது நாகரீகத்திலே உள்ள இன வெறுப்பு (Race Prejudice) என்ற குணப்பாங்கை கவனிக்கும்போது, நமது இயற்கையான குழந்தைத்தனத்தினின்றும் மத சம்பந்தமான அம்சங்களிலே தேர்வு பெற்றுவிட்டோமா அல்லது மதத்தை அடிப்படையாகக்கொண்ட மனித வாழ்வில் தற்கால முக்கியமான சண்டைகள் ஏற்படவில்லையா என்ற சந்தேகம் எழுகிறது. நமது நாகரீகத்தில் மிக முக்கியமான காரியங்களில், மதத்தினின்று தனித்திருந்து நோக்கும் தன்மையைப் பெற்றுவிட்ட நாம், மற்ற விஷயங்களிலே பெறவில்லை எனத் தெரிகிறது.

வழக்கங்களைப்பற்றி ஊன்றிப் படிக்காமல், தாமதமாக, அரை மனதோடு படிப்பதற்குக் காரணம் வேறொரு சூழ்நிலையாகும். சமூகவியலார் வழக்கங்களைப்பற்றி கவனிக்காததற்குக் காரணம் அவர்களது எண்ணங்களே; வழக்கங்களால் ஆனவையே. அவைகள் அவர்களது கண்களாக இருந்தமையால் அவைகளன்றி எதையுமே அவர்கள் காண முடியாது. மேலும், வழக்கங்கள் எப்படி அடிப்படையாக இருந்தனவோ, அப்படியே கவனிக்கக்கூடிய துறைக்கு அப்பாற்பட்டிருந்தன. இப்படி அவர்கள் குருடாக இருந்தது ஆச்சரியப்படக்கூடியதல்ல. பண்டமாற்றுச் செலாவணி, கற்றறியும் முறை, உள நோயின் காரணிகள் ஆகியவற்றிற்கான விவரங்களை மிகையாகச் சேர்த்து அவைகளுக்குள்ளேயே பொருளாதாரத் துறையினரும், உளவியலாரும், உளமருத்துவரும் இயங்கினர். இக் காரணிகள் வேறு விதமாய் அமைந்திருக்கக்கூடிய வேறு சமூக அமைப்புகளை இருப்பதாகவே நினைப்பதில்லை. அதாவது பண்பாடுகளில் வேறுவித அமைப்புக்கொண்டு இயங்கலாம் என்பதைக் கவனிப்பதில்லை. அவன் தெரிந்த உருமாற்றத்தைக்கொண்ட குணப்பாங்கை மட்டுமே கவனிக்கிறான். இதையே முடிவுபெற்ற இயல்பு கொண்டதாக அவன் கொள்ளுகிறான். இதற்குக் காரணம் அவன் தனக்குக் கிடைத்த விவரங்களைமட்டுமே எடுத்துக் கொண்டு செயல்படுகிறான். 1930-ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட பத்து ஆண்டுகளில் ஆங்காங்கே இருந்த ஈடுபாடுகளையே மனித இயல்பாகவும், அவைகளின் வர்ணனைகளையே பொருளாதாரமாகவும் அல்லது உளவியலாகவும் கொண்டான்.

பெரும்பாலும் அதில் தவறில்லை. குழந்தைகளின் ஆசிரியர்களுடைய மரபுவழியிலேயேதான் நமது குழந்தைகளும் கற்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களிலே கற்றுத்தரும் முறை மிகவும் முக்கியமானதாகும். வேறுவிதமான பொருளாதார

முறையைப்பற்றிப் பேசும்போது நாம் சலித்துக்கொள்வதற்கும் இதுவே காரணமாகும். நமது பண்பாடு நிறுவனப்படுத்தியுள்ள உன்னுடையதும், என்னுடையதுமான வரையறைகளுக்குள்ளே யேதான் நாம் வாழவேண்டியிருக்கிறது.

இது ஓரளவுக்கு உண்மைதான். பல இடங்களிலே சிதறிக் கிடக்கிற பல பண்பாடுகளைப்பற்றி அறியவேண்டிய அவசியத்தை நாம் கவனிக்காமல் இருக்கலாம். ஆனால், சரித்திரத்திலே பல வேறு காலங்களில் உள்ள பண்பாடுகளின் உதாரணங்களைச் சேகரிப்பது சற்றுக் கடினமே. இப்படிப் பண்பாடு தொடர்ந்து மாறி வருவதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. ஒரு தலைமுறையையாவது நாம் பின்னோக்கிக் கவனித்தால், எந்த அளவுக்கு நமது அந்தரங்கமான நடத்தைகள்கூட மாறியிருக் கின்றன என்பது தெரியவரும். இந்த மாற்றங்கள் ஒரு குறிக் கோளைக் கொள்ளாது குருட்டுத்தனமாகவே ஏற்பட்டிருக் கின்றன. இதற்குக் காரணமான சூழ்நிலைகளை நாம் பின்னோக்கிப் பார்த்துத்தான் அறியமுடியும். கட்டாயப்படுத்தினாலன்றி, அந்த ரங்க விஷயங்களில் பண்பாட்டு மாறுபாடுகளை ஒப்புக்கொள்ள நாம் விரும்புவதில்லை. இது அறிவுள்ள ஈடுபாட்டை எடுத்துக் கொள்ள உதவும். இப்படி மறுப்பதற்குக் காரணம் பண்பாட்டு வழக்கங்களை நாம் தவறாகப் புரிந்துகொள்வதேயாகும். மேலும், நமது நாடு, நமது காலம் ஆகியவற்றை உயர்த்திப் பேசும் குணப் பாங்கை நாம் கொண்டுள்ளதும் காரணம் ஆகும். பல வழக்கங் களையும், அவைகள் எந்தெந்தவித மாற்றங்களையுடையவை என் பதையும் சிறிதளவாவது அறிந்துகொண்டால், ஒரு பகுத்தறி வுள்ள சமூகமுறையை வளர்ப்பதற்கு நாம் உதவிசெய்தவர் களாக ஆவோம்.

பல வேறுபட்ட பண்பாடுகளை அறிந்துகொள்வது தற்கால எண்ணங்களிலும், நடத்தையிலும் மிகவும் முக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. தற்கால வாழ்வு பல நாகரிகங்களை நெருங்கிய தொடர்புள்ளவைகளாக இணைத்திருக்கிறது. இதன் விளைவாக நாட்டுப் பற்றும், இனச் செருக்கும் அதிகமாகிவிட்டன. நாகரீ கத்திலே, பல பண்பாடுகளைத் தனித்திருந்து நோக்கி, மற்ற மக் களின் நடத்தையையும், அச்சமின்றி, வெறுப்பின்றிக் கவனித்து இயங்கவல்ல தனி மனிதர்கள், இன்றுபோல், என்றும் தேவைப் பட்டதில்லை.

பல இனங்களும், நாடுகளும் இன்று தொடர்புகொள்ளும் போது, மாற்றானிடத்து வெறுப்புக்காட்டுவது ஒன்றுதான் ஏற்படும் விளைவென்று கூறமுடியாது. அது அறிவு முறையிலே

ஏற்பட்டதன்று. மரபுவழியே உள்ள ஆங்கிலேயர்—ஸாக்ஸன் மக்களுக்கிடையே உள்ள வேற்றுமையுணர்ச்சி அங்கங்கே உள்ள பண்பாட்டுக் குணப்பாங்காகும். ஒரே இரத்தத் தொடர்பும், பண்பாடுங்கொண்ட ஸ்பானிய மக்களிடையே இவை காணப்பட வில்லை. இன வெறுப்பு ஸ்பானியர் ஆதிக்கம் செலுத்திய நாடு களில் ஒருவிதமாகவும் இங்கிலாந்து, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகியவை ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் வேறுவிதமாகவும் இருந்தது. இந் நாட்டில் உயிரியல் முறையிலே மிகவும் வேறுபட் டிருந்தவர்கள் இரத்தக்கலப்பு ஏற்படுத்திக்கொள்வதைச் சகிப்புத் தன்மையுடன் ஏற்ருர்கள். ஏனென்ருல், போஸ்டனில் (Boston) ஐரிஷ் நாட்டுக் கத்தோலிகன்மீதும், நியூ இங்கிலாந்திலுள்ள (New England) தொழிற்சாலை நகரங்களில் இத்தாலியன்மீதும், ஏற்படுகிற இனவெறுப்பு கலிஃபோர்னியாவில் (California) உள்ள கீழ்நாட்டான்மேல் இருப்பதுபோன்றே உள்ளது. இது உட் குழுவுக்கும் வெளிக் குழுவுக்கும் உள்ள பழைய வேறுபாடுதான். நாமும் இப்படிப் பழங்குடி மக்களின் மரபை நீடித்துக்கொண் டிருந்தால் காட்டுமிராண்டிகளைக்காட்டிலும் பெரிய தவறு செய்த வராவோம். நாம் அதிகமாகப் பிரயாணம்செய்து தேர்ச்சி பெற்றுவிட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிரேம். ஆனல், பண்பாட்டுப் பழக்கங்களின் தொடர்பை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். அதனல் பல்வேறு தகுதிநிலைகளைக் கொண்ட மக்களோடு நாம் மனிதத்தொடர்பு கொள்ளும்போது லாபமும், மகிழ்ச்சியும் பெறுவதினின்றும் தடை செய்யப்பட்டுள் ளோம். அவர்களுடன் ஏற்படும் விவகாரங்களில் நாம் நம்பிக்கை யில்லாதவர்களாகவே மதிக்கப்பெறுகிரேம்.

தற்கால மேற்கத்திய நாகரிகத்தில் இன வெறுப்பின் பண் பாட்டு அடிப்படையைத் தெரிந்துகொள்வது மிக அவசியமானது. நமது இரத்தத்தொடர்புள்ள ஐரிஷ் மக்களையே இன வெறுப் புடன் நோக்கும் அளவுக்கு நாம் இப்போது வந்துவிட்டோம். நார்வேயும், ஸ்வீடனும் வெவ்வேறு இரத்தத்தைச் சார்ந்தவர்கள் போலப் பகைமை பாராட்டுகின்றனர். உடலமைப்பிலே ஒரே ஆல்பைன் (Alpine) இனத்தைச் சேர்ந்த ஃப்ரான்ஸும், ஜெர்மனி யும் சண்டையிடும்போது பேடனில் (Baden) உள்ள மக்களும், அல்ஸேஸில் (Alsace) உள்ள மக்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்போன்று இனப்பிரிவு கொண்டாடினர். மக்கள் தாராளமாக இடம்விட்டு இடம் பெயரும் நாளில், ஒரு சமுதாயத் தில் விரும்பத்தக்க அம்சங்களுடைய கலப்பு மணங்கள் மூதா தையர் காலங்களில் ஏற்பட்டிருந்தபோதிலும், நாம் வெட்க மின்றிக் ‘கலப்பில்லாத இனம்’ என்று பேசுகிரேம்.

மானிடவியல் இதற்கு இரண்டு காரணங்களைக் காட்டுகிறது. முதலாவது பண்பாட்டின் இயல்பாகவும், இரண்டாவதாக பரம்பரை வாரிசாகவும் அவை இருக்கின்றன. பண்பாட்டின் இயல்பை கவனிக்கும்போது அது நம்மை மனிதனுக்கு முன்னுல் உள்ள சமூகங்களுக்கு இழுத்துச் செல்கிறது. இயற்கையானது சில சமூகங்களிலே ஒரு சிறு நடத்தையைக்கூட உயிரியல் முறையிலே நிலையாக்குகிறது. இது மனிதசமுதாயத்தில் இல்லை. சமூக இயல்புபடைத்த பூச்சிகளிடையே காணப்படுகிறது. ஓர் அரசி எறும்பு, வேருெரு தனிக் கூட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டாலும் தன்னுடைய பால்வழி நடத்தை, கூட்டின் அமைப்பு ஆகிய எல்லா விவரங்களையும் மறுபடி உண்டாக்கிவிடும். தவறுகள் ஏற்பட வழியில்லாமலே இயற்கை அன்னை படைத்ததை இந்த சமூக இயல்புபடைத்த பூச்சிகள் காண்பிக்கின்றன. முழு சமூக அமைப்புத் தோறணியையும் இயற்கை அன்னை அந்த எறும்பின் இயல்பான நடத்தையிலேயே அமைத்துவிட்டாள். அந்த எறும்பு தன் கூட்டத்தினின்றும் பிரிக்கப்பட்டால்கூட, அது அமைக்கும் சமூகப் பிரிவுகளும், விவசாயத் தோறணியும், அதன் உடற்கூறு எவ்வாறு இனப் பெருக்கத்தின்போது மாறுபடாதோ அவ்வாறே மாறுபடாமல் இருக்கின்றன,

மனிதனின் வழி இதற்கு நேர் எதிரிடையாக இருந்தது. அவனது பழங்குடி, சமூக அமைப்பு, மொழி, மதம் ஆகிய எந்த விவரமும் அவனது இனப் பெருக்கத்திற்கான அணுவிலே இல்லை. மற்ற நூற்றுண்டுகளில், ஐரோப்பாவில் அனுதைகளாக விடப்பட்ட குழந்தைகள் சிலர் காடுகளில், மனிதத்தொடர்பின்றி வளர்ந்து இருந்தனர். அவர்கள் ஒரே மாதிரி இருந்தமை கண்டு லின்னேயஸ் (Linnaeus) என்பார் அவர்களை ஒரு தனி இனம் என்றே கருதி அதற்கான Home Ferus என்ற பெயரும் இட்டார். அவர்களை மனிதர்கள் கண்டறியாத குள்ளர்கள் என்றே எண்ணி விட்டார். தங்களைச் சுற்றிலும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று அறியாதவர்களும், ஒரு மிருகக்காட்சிசாலையில் காட்டு விலங்குகள் முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருப்பதைப் போன்று ஆடிக்கொண்டிருப்பவர்களும், பயனற்றிருந்த நாக்கையும் செவியையும் கொண்டிருந்தவர்களும், கந்தைகளை யுடுத்து, உறைபனிக் காலத்தைக் கடத்துபவர்களும், கொதிக்கின்ற நீரில் உள்ள உருளைக் கிழங்குகளை அவதியின்றி எடுப்பவர்களுமான இக் குழந்தைகளை மனிதப் பிறவிகள் என்றே அவர் எண்ணவில்லை. பிள்ளைப் பிராயத்திலே அநாதைகளாக விடப்பட்ட குழந்தைகள்தாம் அவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் தங்கள் இனத்தாரோடு சேர்ந்து வாழவில்லை என்ற குறை

தான் இருந்தது. தன் இனத்தோடு சேர்ந்து வாழ்வதாலேயே மனிதனின் சக்திகள் கூர்மையாக்கப்பட்டு உருவகப்படுகின்றன.

மிகவும்பண்பட்ட நமது நாகரிகத்தில் இப்படிப்பட்ட காட்டுக் குழந்தைகளை நாம் காண்பதில்லை. ஆனாலும், வேறு ஓர் இனமோ அல்லது பண்பாடோ குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ளும் போது இந்த விவரம் நன்கு புலனாகிறது. மேற்கத்திய குடும்பத் தால் தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்நாட்டுக் குழந்தை ஆங்கிலம் கற்றுக்கொள்கிறது. தன்னுடன் விளையாடும் குழந் தைகள்போன்றே தன் வளர்ப்புப்பெற்றோரிடம் ஈடுபாடு கொள் கிறது. அவர்கள் தேர்ந்தெடுக்கும் தொழில்களுக்காகவே வளர் கிறது. அது தான் புகுந்திருக்கும் சமூகத்தின் பண்பாட்டுக் குணப்பாங்குகளை முழுவதும் பின்பிற்றுகிறது. அவனது உண் மையான பெற்றோரின் குணப்பாங்குகளால் பாதிக்கப்படுவதில்லை. ஒரு முழு மக்கள்கூட்டமே இரண்டு தலைமுறைகளில் தங்கள் பரம்பரைப் பண்பாட்டை உதறித் தள்ளிவிட்டு வேற்றூர் கூட் டத்து வழக்கங்களை மேற்கொள்ளும்போதும் இதே முறைதான் ஏற்படுகிறது. வடக்கத்திய நகரங்களில் உள்ள அமெரிக்க நீக்ரோக்களின் பண்பாடு, அந் நகரங்களில் உள்ள வெள்ளையர் களுடையதைப்போன்றே எல்லா விவரங்களையும் பெற்றிருக் கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னே ஹேர்லெம் (Harlem) நகரில் பண்பாட்டு அளவை (Survey) நடத்தியபோது, நீக்ரோ மக்கள் மறுநாள் பங்குமார்க்கெட்டின் கடைசி எண்ணிக்கைகளின் பேரில் சூதாடுவது ஒரு குணப்பாங்காகக் கொண்டிருந்தது தெரிய வந்தது. வெள்ளையர்களின் பங்குமார்க்கெட்டில் சூதாடுவதைப் போன்றேதான் இவர்களது செய்கையும் இருந்தது. அது வெள் ளையர்களுடைய முறையில் சிறிதுதான் மாறுபட்டிருந்தது. முழு வதும் வேறுபட்ட ஒன்றாக இல்லை. ஹேர்லெம் (Harlem) நகரில் உள்ள பல குணப்பாங்குகள் வெள்ளையர்களுடையதைப் போன்றே இருந்தன.

உலகம் முழுவதிலும், மனித சரித்திர ஆரம்ப முதலே ஒரு மக்கள்கூட்டம் இரத்தத்தொடர்பில்லாத மற்றொரு மக்கள்கூட் டத்தின் பண்பாட்டை எடுத்துக்கொள்ளமுடியும் என்று காட்டி யிருக்கின்றனர். மனிதனின் உயிரியல் அமைப்புடன் இதைக் கடினமாக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட நடத்தையைத்தான் கொள்ளவேண்டும் என்று மனிதனின் உயிரியல் அமைப்பு கட்டா யப்படுத்தவில்லை. புணர்ச்சி அல்லது வியாபாரம் ஆகியவற்றிற் காக மனிதன் பலவேறு பண்பாடுகளில் அமைத்துக்கொண்டுள்ள வெவ்வேறுவிதமான சமூகவழிகள் அவனது உடலியல் அடிப்

படையிலே சாத்தியமானவைகள்தான். உயிரியல்முறையிலே பண்பாடு பரம்பரையாக வருவதன்று.

இயற்கை, பாதுகாப்பு அளிக்கத் தவறியபோது, வளைந்து கொடுக்கும் தன்மை அதை ஈடுசெய்தது. ஒரு கரடி தன்னை வட துருவத்திலே வாழத் தகுதிபெற்றதாகச் செய்துகொள்ளப் பல தலைமுறைகளில் ஒரு கம்பளிபோன்ற மயிரின் வளர்ச்சியைப் பெற்றதுபோல் மனிதனால் செய்யமுடியாது. அதற்குப் பதிலாக அவன் கம்பளிச் சட்டையைத் தயார்செய்துகொண்டு பனி வீட்டையும் கட்டிக்கொள்கிருன். மனித சமூகம், அதற்கும் முன்னமே இருந்த சமூகங்கள் ஆகியவற்றின் அறிவுத்திறனின் சரித்திரத்தை நோக்குங்கால் இப்படி வளைந்துகொடுக்கும் தன்மையினுலேயே மனித முன்னேற்றம் ஏற்பட்டதையும், அதுவே மனிதன் நிலைத்திருப்பதற்கு உதவியிருப்பதையும் காணலாம். மாமதங்களின் (Mammoths) காலத்திலே, பல இனங்கள் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பெருது அதிகமாக வளர்ந்து இறந்து பட்டன. அவைகள் சூழ்நிலைகளைச் சமாளிக்க ஏற்படுத்திக் கொண்ட உயிரியல் சிறப்புகளாலேயே மாண்டன. இரைதேடும் விலங்குகளும், வாலில்லாக் குரங்குகளும், சிறிது சிறிதாக உயிரியல் தகுதிகளை விட்டு, வளைந்துகொடுக்கும் தன்மையான இயல்பைக் கொண்டு அறிவு வளர்ச்சிக்கான அடிப்படையை ஏற்படுத்தின. அடிக்கடி சொல்லப்பெறுவதுபோல், ஒருகால் தன் அறிவு வளர்ச்சியாலேயே மனிதனும் அழிந்துபடுவானே என்னவோ ! ஒரு சமூக இயல்புகொண்ட பூச்சியைப்போன்று மறுபடியும் உயிரியல் முறைகளை நாம் அடையும் வழியை யாரும் சொல்லவில்லை. ஆதலால், நமக்கு வேறுவழி கிடையாது. மனிதனின் பண்பாட்டுப் பரம்பரை நல்லதுக்கோ கெடுதலுக்கோ, உயிரியல்முறையிலே வரவில்லை.

தற்கால அரசியலில் ஒரு குறிப்பிட்ட பரம்பரையாக வரக்கூடிய இனப் பெருக்கத்திற்கான உடற்கூறினுல் மத சம்பந்தமானதும், பண்பாட்டுச் சாதனைகளும் அடையமுடியாது என்ற விவாதம் இருக்கிறது. மேற்கத்திய நாகரிகத்திலே தலைமையானது வரிசையாகப் பல காலங்களில் 'ஸெமிடிக்' (Semitic) மொழிபேசும் மக்களுக்கே வந்திருக்கிறது. வெள்ளை இனத்தைச் சேர்ந்த மெடிட்டரேனியன் (Mediterranean) பிரிவான ஹெமிடிக் (Hamitic) மக்களுக்கும் பிறகு சமீப காலத்தில் நார்டிக் (Nordic) மக்களுக்கும் வந்திருக்கிறது. தற்சமயம் யார் அதைப் பெற்றிருக்கின்றனர் என்பது அவசியமில்லை. ஆனுல், அது நாகரிகத்தின் பண்பாட்டுத்தொடர்பு கொண்டிருந்தது என்பதில் சந்தேக

யில்லை. உயிரியல்முறையில் நடத்தை பரம்பரையாக வருதல் என்ற சிறிய அம்சமும், மரபு பரம்பரையாக வருவதற்காகப் பண்பாட்டின் அதிகமான ஈடுபாடும்போன்ற மனிதப் பரம்பரையிலே உள்ள விவரங்களை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

'கலப்பில்லாத இனம்' என்று விவாதிப்போருக்கு மானிடவியல் பரம்பரையின் இயல்பைக்கொண்டு இரண்டாவது காரணத்தை விளக்குகிறது. கலப்பில்லாத இனம் என்பவன் புராணங்களின் அடிமையாகிவிடுகிருன். ஏனென்ருல், 'இனப் பரம்பரை' என்பது என்ன? தகப்பனிடமிருந்து மகனுக்கு வருவது பரம்பரை என்று நமக்குச் சுமாராகத் தெரியும். ஒரு குடும்பத்திற்குள்ளே பரம்பரையின் முக்கியத்துவம் அதிகமானது. ஆனுல், பரம்பரை என்பது பல குடும்பவழிகளைப் பொறுத்ததாகும். அதற்கப்பால் அது புராணமாகிவிடுகிறது. ஒரு தனிப்பட்ட சிறிய நிலையான 'எஸ்கிமோ' மனிதனுடையதுபோன்ற கிராமத்தில் 'இனப் பரம்பரை' என்பதும், பெற்ருேர்-மக்களிடையே உள்ள பரம்பரையும் சமமானவைகளே. ஆதலால், 'இனப் பரம்பரை' என்ற சொல்லுக்குப் பொருள் இருக்கிறது. நார்டிக் (Nordic) மக்களைப் போன்று விரிந்து பரவியிருக்கும் மக்கள்கூட்டத்திற்கு இச்சொல்லைப் பயன்படுத்தும்போது அது உண்மைக்குப் புறம்பாகிறது. முதலாவதாக எல்லா நார்டிக் நாடுகளிலும், குடும்பவழிகள், ஆல்ப்பைன் (Alpine) அல்லது மெடிட்டரேனியன் (Mediterranean) கூட்டங்களிலும் உள்ளதுபோன்றே இருக்கின்றன. ஐரோப்பிய ஜனத்தொகையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது உடற்கூறு விவரங்கள் ஒன்றை ஒன்று மீதூர்ந்து இருப்பதைக் காணலாம். கறுத்த கண்களும், கறுத்த மயிருங்கொண்ட ஸ்வீடன் நாட்டு மனிதன் மிகவும் தெற்கே அடர்ந்திருக்கிற குடும்பவழிகளைக் கொண்டிருக்கிருன். பின்னுல் சொல்லப்பட்டவர்களைப்பற்றி நாம் அறிந்தவற்றைக்கொண்டு அவனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவனது பரம்பரை, ஸ்வீடன் நாட்டில்மட்டும் அடங்கியிராத அவனது குடும்பவழியைப் பொறுத்ததாகும். உடற்கூறு விவரங்கள் ஒன்றுக்கொன்று கலவாமல் எவ்வளவு வேறுபட்டிருக்க முடியும் என்று நமக்குத் தெரியாது. உட்குழு மண முறையானது ஒரு நிலையான மாதிரியை உண்டாக்கும் என நமக்குத் தெரியும். ஆனுல், எங்கும் பரவியிருக்கிற நமது வெள்ளையர் நாகரீகத்தில் இது எங்கும் காணப்படவில்லை. ஆகவே, ஒரே அளவில் பொருளாதாரத்தகுதி பெற்றவர்களையும், ஒரே பள்ளியிலிருந்து பட்டம்பெற்றவர்களையும், ஒரே மாதிரி வாரப் பத்திரிகைகளைப் படிப்பவர்களையும் ஒன்றுகூட்டுவதற்காகவே இந்த 'இனப் பரம்பரை' என்ற கோஷம் எழுப்பப்படுகிறது.

இப்படி இருப்பது உட்குழு, வெளிக்குழு என்ற முறையின் மற்ெருரு விதமாகத்தான் இருந்தது. உயிரியல்முறையில் ஒன்றுபட்ட ஒரு கூட்டத்தை அது குறிக்கவில்லை.

உண்மையில் மனிதர்களை ஒன்ருக இணைப்பது அவர்களது பண்பாடும், அவர்கள் பொதுவாகக்கொண்ட எண்ணங்களும், தகுதிநிலைகளும்தான். பொதுவான இரத்தபரம்பரை போன்ற அடையாளத்தைத் தேர்ந்தெடுத்து, அதைக் கோஷமாகச் செய்வதைக்காட்டிலும், ஒரு நாடு, அதன் மக்களை இணைக்கிற பண்பாட்டை அறிந்து, அதன் நற்பண்புகளை வலியுறுத்தி, வேறு பண்பாடுகளில் ஏற்படுகின்ற வெவ்வேறு மதிப்புகளையும் அறிந்தால், தவருன வழியில் செல்லும் அபாயகரமான அடையாளக் குறிகளை விட்டு உண்மையான பகுத்தறிவைப் பெறும்.

பல பண்பாடுகளைத் தெரிந்துகொள்ளவேண்டியது சமூகச் சிந்தனையாளருக்கு மிகவும் அவசியம். பண்பாடுகளின் பிரச்சினையைத்தான் இப் புத்தகத்தில் எடுத்துக்கொண்டிருக்கிருேம். நாம் சற்று முன்னே கண்டபடி, உடற்கூறும், இனமும், பண்பாட்டிலிருந்து பிரிக்கப்படக்கூடியவையே ஆகும். சில குறிப்பிட்ட காரணங்களுக்காக எங்கெங்கு அவசியமோ அந்த இடங்களைத் தவிர, வேறு இடங்களில் அவை ஒதுக்கிவைக்கப்படலாம். பண்பாட்டைப்பற்றிப் படிக்கும்போது, சாத்தியமான பல பண்பாட்டு முறைகளைப்பற்றி அறிவது மிக அவசியம். இப்படிப்பட்ட விவரங்களைக் கொண்டுதான், பண்பாடுகளால் வகுக்கப்படுகிற மனித சமுதாய அமைப்புகளையும் மனித இனத்தால் தவிர்க்க முடியாத சில சாதாரண, பொதுவான அமைப்புகளையும், வேறுபடுத்திப் பார்க்கமுடியும். ஏதாவது ஒரு சமூகத்தை ஊன்றிக் கவனிப்பதாலும், ஆழ்ந்து நோக்குவதாலும், உயிரியல்முறையில் 'தன்னியல்பாக' ஏற்படும் நடத்தை எது என்று கண்டுபிடிக்க முடியாது. 'தன்னியல்பால்' ஏற்பட்ட நடத்தை என்று எதையும் சொல்வதற்கு அதிகமான விவரங்கள் தேவை. உயிரியல்முறையில் தன்னியல்பாக ஏற்படும் செய்கையும் ஆக்கத் துலங்கலும் (Conditioned response) ஒரே மாதிரி தானே இயங்குபவைதான். நமது தானேஇயங்கும் தன்மைபடைத்த (Automatic) நடத்தைகளின் பெரும்பகுதி பண்பாட்டினுல் ஏற்பட்ட ஆக்கத் துலங்கல்களாகவே இருக்கின்றன.

ஆகையினுல், பண்பாட்டு முறைகளைப்பற்றி விவாதிக்க மிகச் சிறந்த விவரங்கள், சரித்திரவாயிலாக நமக்கும் அவைகளுக்குள்ளேயும் தொடர்பற்ற சமூகங்களிலிருந்துதான் கிடைக்கும்.

சரித்திரப் பிணைப்புகளால் பெரிய நாகரிகங்கள் உலகின் பெரும் பகுதிகளில் விரிவடைந்துவிட்டதால், பழங்குடிமக்களின் பண் பாடுமட்டுமே நமக்கு ஏற்ற சாதனமாகும். மனித நிறுவனங் களின் பல வகைகளை ஆராய்வதற்குப் பழங்குடிகளின் சமூகங்கள் ஆய்வுக்கூடங்களாக அமைகின்றன. அவர்கள் தனித்திருந்த மையால், பல நூற்றுண்டுகளாக அவர்கள் தேர்ந்தெடுத்த பண் பாட்டு முறைகளை விரிவாக்கத்தக்க வாய்ப்புகளைச் சில பழங்குடி கள் பெற்றிருந்தனர். மனிதனின் சாத்தியமான பல வேறு ஈடு பாடுகளைப்பற்றிய விவரங்களை நமக்காக அவர்கள் தயாராக வைத்திருக்கின்றனர். பண்பாட்டுமுறைகளைப்பற்றி தெரிந்து கொள்வதற்கு அவைகளை நாம் ஊன்றிக் கவனித்தல் மிகவும் அவசியம். நாம் கொண்டிருக்கிற அல்லது கொள்ளக்கூடிய ஒரே ஒரு ஆய்வுக்கூடமாக அது அமைந்திருக்கிறது.

இந்த ஆய்வுக்கூடத்தில் வேருெரு வசதியும் உள்ளது. மேற்கத்திய நாகரிகங்களைவிட இங்குப் பிரச்சினைகள் எளிதான முறையிலே அமைந்திருக்கின்றன. தற்கால நாகரிகத்தில் இடம் விட்டு இடம் செல்ல எளிதான வசதிகளும், பன்னுட்டுத் தொடர் புக்குச் சாதகமான தந்தி, தொலைபேசி, வானெலி ஆகியவைகளும் ஏற்பட்டுள்ளன. மேலும், அச்சடித்த பக்கங்கள் அதிகமாகப் பரவவும், நிலைபெறவும், பல தொழிற்கூடங்கள், பிரிவுகள், பகுதிகள் ஆகியவை போட்டியிட்டு வளரவும், உலகம் முழுவதி லும் சில தகுதிநிலைகளை அடையவும் வசதிகள் பெருகியுள்ளன. இவை தற்கால நாகரிகத்தை மிகவும் சிக்கலுள்ளதாகச் செய்து விட்டன. ஆராய்வதற்காகச் சில செயற்கைப் பிரிவுகளாகச் செய்யலாமே யன்றி, தேவைப்படும் அளவுக்கு ஆராய்ந்து பார்க்க முடியவில்லை. வெளியிலுள்ள பல காரணிகளைக் கட்டுப்படுத்த முடியாமையினுல், இப்படிச் செய்யப்படும் பிரிவுகளின் ஆராய்ச்சி தேவைப்படும் அளவுக்குத் திருப்திகரமாக இருப்பதில்லை. எந்த ஒரு கூட்டத்தைப்பற்றியும் செய்யப்படுகிற அளவையானது, வெவ்வேறு தகுதிநிலைகள், சமூக நோக்கங்கள், வீட்டு உறவு கள், நெறிமுறைகள் ஆகிய பல இணைந்திராத எதிர்ப்பட்ட குணப்பாங்குகளைக்கொண்ட தனிமனிதர்களையும் சேர்த்தே செய்யப்பெறுகிறது. இக் கூட்டங்கள் ஒன்றுக்கொன்று கொண் டுள்ள தொடர்பானது அவசியமான விவரங்களைச் சரியாக மதிப்பிடமுடியாதவாறு சிக்கலானதாகும். பழங்குடிமக்களின் பண்பாட்டு மரபு அங்குள்ள ஒவ்வொரு முதிர்ந்த தனிமனிதனின் அறிவிலும் அடங்கியுள்ளது. அக் கூட்டத்தின் நடத்தைகளும், நெறிமுறைகளும் ஒரு நன்கமைந்த பொதுத்தோறணியிலே உரு வாக்கப்பட்டுள்ளன. இந்த எளிதான சூழ்நிலையில் குணப்பாங்கு

களின் தொடர்பை வகையாக மதிப்பிடமுடியும். ஆனால், நமது சிக்கலான நாகரிகத்திலே இது முடியாத ஒரு சாதனையாகும்.

பழங்குடி மக்களின் விவரங்களை அறியவேண்டுவதை வலியுறுத்திச் சொல்கிற எந்தக் காரணமும், அவைகளை வழக்கமாகப் பயன்படுத்தும் முறைக்குச் சம்பந்தப்பட்டதல்ல. பல குணப்பாங்குகள் தோன்றியதைத் திருப்பி எடுத்துக்காட்ட இவை பயன்பட்டன. முதலிலே மானிடவியலார், பல பண்பாடுகளில் உள்ள குணப்பாங்குகளை வரிசையாக அடுக்கி ஆதிகாலம்முதல் மேற்கத்திய நாகரிகத்தின் வளர்ச்சிவரை எழுந்த பரிணாமமாகக் காட்டுவதற்குப் பயன்படுத்தினர். ஆனால், நமது மதத்தை விட்டு, ஆஸ்ட்ரேலியாவின் மதத்தைப்பற்றிப் பேசினால் அது முதல் மதம் தோன்றியதை எடுத்துக்காட்டுவதாக ஆகாது. அதுபோன்றே இரோகோயன் (Iroquoian) சமூக அமைப்பைக் கவனிக்கும்போது மனிதனின் ஆதி மூதாதையர்களின் புணர்ச்சிக்கான பழக்கங்களுக்கு நாம் திரும்புவதாக எண்ணிவிடக் கூடாது.

மனிதர்கள் யாவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாம் கட்டாயமாக நம்பவேண்டியபொழுது, மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஒரு நீண்ட சரித்திரப் பின்னணி உண்டென்று விளங்கும். சில பழங்குடி மக்கள், தற்கால மனிதனைப்போல இல்லாமல், அவர்களுடைய, ஆதியில் ஏற்பட்ட நடத்தைமுறைகளையே பற்றியிருக்கக்கூடும். ஆனால், இப்படிக் கொள்வது சரியாகவும் இருக்கலாம் அல்லது தவறாகவும் இருக்கலாம். தற்போது உள்ள ஒரு பழங்குடிப் பழக்கம் மனிதனின் ஆதிகால வழக்கமான நடத்தையெனக் கொள்வது தவறாகும். ஆரம்பகால முறைகளைப்பற்றி நாம் சுமாராக அறிந்துகொள்ள ஒருவழிதான் உண்டு. அதாவது மனித சமூகத்திலே எங்கும் பரவியிருக்கிற ஒருசில குணப்பாங்குகளை அறிவதன்மூலமே இது சாத்தியமாகும். இப்படிப்பட்ட தெரிந்த குணப்பாங்குகள் அநேகம் இருக்கின்றன. இவைகளில் அனிமிஸம் (Animism—ஆவியுலகக் கோட்பாடு) என்பதைப்பற்றியும், திருமணத்திற்கான வெளிக்குழுத் தடைகளைப்பற்றியும் எல்லாரும் ஒத்திருக்கின்றனர். மனித ஆன்மா, சாவிற்குப்பின் உள்ள வாழ்வு ஆகியவைகளில் பல்வேறு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. எங்கும் பரவியிருக்கிற இப்படிப்பட்ட நம்பிக்கைகளை நாம் ஆதிமனிதனின் கற்பனைகளாகவே கொள்ளலாம். உயிரியல்முறையிலே தீர்மானிக்கப்பட்டவைகளுக்கு ஈடாக நாம் இவைகளைக் கொள்ளக்கூடாது. ஏனென்றால், மனித சிந்தனையின் அடிப்படையாகிவிட்ட

'தொட்டில்' பழக்கங்களாகவும், மனித இனம் ஆதியில் கண்டு பிடித்த குணப்பாங்குகளாகவும் அவை இருக்கலாம். ஆராய்ந்து பார்தால் அவைகள் ஆங்காங்கு உள்ள வழக்கங்களைப்போல, சமூகத்தினுல் வரையறுக்கப்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஆனுல், அவைகள் மனித நடத்தையிலே வெகுகாலமாகத் தானே இயங்கும் தன்மையைப்பெற்றுவிட்டன. அவைகள் பழமையானவை. எங்கும் பரவியிருந்தன. இன்று பார்க்கக்கூடிய எல்லா முறைகளும் ஆதிகாலத்தில் தோன்றிய முதல் முறைகளல்ல. முறைகளின் பலவிதங்களைப்பற்றித் தெரிந்துகொள்வதால் அவைகளின் மூலங்களைத் தெரிந்துகொள்ள இயலாது. எங்கும் பரவியிருக்கிற ஒரு நம்பிக்கையின் உட்கூறைப் பிரித்தெடுத்து ஆங்காங்கு எவ்விதம் அது மாறுபட்டிருக்கிறது எனக் காணலாம். ஆயினும் எல்லாக் குணப்பாங்குகளிலும் ஊடுருவியிருக்கும் ஒரு தன்மையாக அது இல்லாமல், ஒரு குறிப்பிட்ட இடத்திலே ஏற்பட்ட ஒன்ருகவும் இருக்கமுடியும்.

வழக்கங்களின் மூலங்களைக் காண்பதற்குப் பழங்குடிமக்களின் வழக்கங்களைப் பயன்படுத்துதல் உறுதியாகப் பயனளிக்கக்கூடியதன்று. ஒன்றுக்கொன்று தனித்திருக்கிற மூலங்களையும் இணைந்திருக்கிற மூலங்களையும், நாம் விரும்புகிறபடி ஏற்பட்டதாக வாதங்கள் கொண்டுவரலாம். மானிடவியல் விவரங்களிலே இது ஒன்றுதான் இவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கிறது. சான்றுகளைக்கொண்டு நிரூபிக்கமுடியாத இயல்பை அது பெற்றிருக்கிறது.

சமூகமுறைகளை விவாதிப்பதற்குப் பழங்குடி மக்களின் சமூகங்களைத் தேர்ந்தெடுப்பது பழைமையின் விரும்பத்தக்க ஒரு நிலைமையை நாம் நாடுவதைக் காரணமாகச் சொல்லமுடியாது. எளிய வாழ்க்கையையுடைய மக்களைப்பற்றி நாம் கவிபாடும் ஆர்வத்தினுல் இப்படிச் செய்வதில்லை. பல்வேறு தகுதிநிலைகளும் குழப்பமான இயந்திர வாழ்க்கையும் உள்ள இந் நாளில், ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாடு நமக்குப் பல வழிகளில் மிகவும் பிடித்தமானதாக இருக்கலாம். ஆனுல், நமது சமூகத்திலே உள்ள கோளாறுகளை, பழங்குடி மக்கள் கொண்டிருக்கும் பண்புகளை நாம் எடுத்துக்கொள்வதால் தீர்ந்துவிடாது. ஒரு புத்துணர்ச்சி தரக்கூடிய கற்பனை உலகம், எளிமையான பழங்குடி மக்கள் உலகைப்போலத் தோன்றினுலும், நமக்கு எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக இருந்தாலும், இன ஆராய்ச்சித்துறைக்கு உதவியாக இல்லாமல் பெரும்பாலும் இடையூருகவே இருக்கிறது.

நாம் சொன்னதுபோலவே, பழங்குடி மக்களின் சமூகங்களை ஆழ்ந்து கவனிப்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால், பண்பாட்டு உருவகங்களையும், முறைகளையும்பற்றித் தெரிந்து கொள்ளத் தேவையான விவரங்கள் அவர்களிடையே இருக்கின்றன. மனித இனத்தின் பொதுவான துலங்கல்களையும், அங்கங்கே உள்ள பண்பாடுகளுக்குரித்தான துலங்கல்களையும், வேறுபடுத்திக் காட்ட அவை உதவுகின்றன. மேலும், அவை பண்பாட்டினால் கட்டுப்படுத்தப்பட்ட நடத்தையின் முக்கியத்துவத்தை மதிப்பிட்டுப் புரிந்துகொள்ள உதவுகின்றன. பண்பாடு—அதன் முறைகளும் செயல்களும்—நாம் உணர்ந்து விளக்கம் பெறவேண்டிய ஒன்றாகும். அதற்கான விவரங்களை எழுத்தறிவு ஏற்படாத சமூகங்களிலே தேடுவதைத் தவிர வேறு வழி இல்லை. அங்குத் தேடினால் நமக்கு வேண்டிய விவரங்கள் கிடைக்கும்.

2. பல்வேறு பண்பாடுகள்

கலிபோர்னியாவிலுள்ளவர்களால் டிக்கர் இந்தியர்கள் (Digger Indians) என்று அழைக்கப்படுகிற மக்களின் தலைவனொருவன், தன் மக்கள் பழைய நாட்களில் வாழ்ந்துவந்த விதத்தைப்பற்றி என்னிடம் பேசிக்கொண்டிருந்தான். அவன் ஒரு கிறிஸ்துவன். பீச், ஆப்ரிகாட் முதலிய பழவகைகளைப் பயிரிடுவதில் தன் மக்களுக்கு வழிகாட்டியாக அவன் விளங்கினான். ஆனால், கரடி நடனத்தின்போது, தெய்வத் தன்மை பெற்றவர்கள் கரடிகளாகவே தன் கண்ணெதிரே மாறியதை அவன் சொல்லும்போது அவன் கைகள் நடுங்கின. அவனது குரலும் உணர்ச்சியால் தடுமாறியது. ஆதிகாலத்தில் அவனுடைய மக்கள் கொண்டிருந்த சக்தி ஒப்பிடமுடியாத ஒன்றாகும். அவர்கள் சாப்பிட்ட பாலைவன உணவுகளைப்பற்றிப் பேச அவன் மிகவும் விரும்பினான். பிடுங்கப்பட்ட ஒவ்வொரு செடியையும் அவன் அவைகளின் முக்கியத்துவம் குறைந்துவிடாமல், மிகுந்த கனிவோடு கொண்டுவந்தான். அந்தக் காலத்தில் அவனுடைய மக்கள் 'பாலைவனத்தின் உடல்நலம் தருகின்ற' உணவையே உட்கொண்டனர். அவர்களுக்குக் கசாப்புக்கடைகளில் விற்கப்படுவனபற்றியோ தகரப் பெட்டிகளில் வரும் உணவுகளைப்பற்றியோ தெரியாது. இப்படிப்பட்ட புதிய பொருள்களே அவர்களை இக் காலத்தில் மிகவும் தாழ்வுறச் செய்துவிட்டன.

ஒருநாள் ரமோன் (Ramon), மெஸ்கட் (ஒருவகைக் காய்கள்) காய்களை அரைப்பதுபற்றியும் ஒருவகைக் கொட்டையிலிருந்து ரசம் எடுப்பதுபற்றியும் பேச ஆரம்பித்துவிட்டான். அவன் 'ஆதியில் கடவுள் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திற்கும் களிமண்ணாலான ஒரு கோப்பையைக் கொடுத்தார்' என்றும் 'அவைகளினின்று அவர்கள் தங்கள் வாழ்வைக் குடித்தனர்' என்றும் சொன்னான். அவன் தானே கற்பனை செய்து அம்மாதிரிச் சொன்னானா அல்லது அவ

னுடைய மக்களின் மரபுவழிச் சடங்குகளில் இந்தச் சொற்றொடர் இருந்ததா என்று என்னால் அறியமுடியவில்லை. பானிங் (Banning) நகரில் அவனுக்குத் தெரிந்த வெள்ளையரிடமிருந்து அவன் அதைக் கேட்டிருப்பான் என்பது எண்ண இயலாத ஒன்றாகும். ஏனென்றால், அந்த வெள்ளையர்கள் வெவ்வேறு மக்களின் குணாதிசயங்களை விவாதிப்பது வழக்கமில்லை. எப்படியிருப்பினும் இந்த இந்தியனின் சொற்றொடர், தெளிவாகவும் கருத்துச்செறிவு உள்ளதாகவும் இருந்தது. 'அவர்கள் எல்லோரும் நீரிலே தோய்த்துக்கொண்டார்கள். ஆனால், அவர்களுடைய கோப்பைகள் வெவ்வேறாக இருந்தன. எங்கள் கோப்பை இப்பொழுது உடைந்துவிட்டது. அது மறைந்துவிட்டது' என்றும் அவன் சொன்னான்.

'எங்கள் கோப்பை உடைந்துவிட்டது'-அதாவது அவனது மக்களின் வாழ்க்கையைக் குறிப்பாகக் காட்டுகிற வீட்டினுள் சாப்பிடுவதற்கான சடங்குகள், பொருளாதார முறையிலே உள்ள கடமைகள், கிராமத்திலே வரிசையாக உள்ள விழாக்கள், கரடி ஆட்டத்திலே ஏற்படும் ஆவேசம், சரி அல்லது தவறு என்று அவர்கள் நினைத்திருந்த நிலைகள்—ஆகிய எல்லாமே மறைந்துவிட்டன. அவைகளுடனே அவர்களுடைய வாழ்வின் உருவமும் நோக்கமும் மறைந்துவிட்டன. அந்தக் கிழவன் இன்றும் உடல் வலிமை பெற்றவனாகவும், வெள்ளையரிடம் கொள்ளும் தொடர்புகளிலே தலைவனாகவும் விளங்கினான். அவன் தன்னுடைய மக்கள் முற்றிலும் அழிந்துவிட்டார்கள் என்ற கருத்தில் பேசவில்லை. ஆனால், அவனுடைய மக்களின் தகுதிநிலைகளும் நம்பிக்கைகளும்போன்ற, வாழ்வுக்கு நிகரான, மதிப்புக்குரிய சிலவற்றை இழந்துவிட்டதையே குறிப்பிட்டான். அதே நீருள்ள வேறு பல கோப்பைகள் மிஞ்சியிருக்கலாம். ஆனால், அவர்கள் இழந்தது ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். சில இடங்களில் அதிக விவரங்களைச் சேர்ப்பதோ அல்லது வேறு சில இடங்களில் சில விவரங்களை வெட்டிவிடுவதோபோன்ற விஷயமல்ல. அது அடிப்படையான ஒரு தன்மைபெற்றது. அது அவர்களுடையதாகவே இருந்தது.

ரமோனுக்கு அவன் பேசியவற்றைப்பற்றிச் சொந்த அனுபவம் இருந்தது. ஒன்றாக இணைசெய்யமுடியாத வழிகளும் மதிப்புகளும்கொண்ட இரண்டு பண்பாடுகளிடையே அவன் வாழ்ந்தான். இது மிகவும் கடினமான நிலைதான். மேற்கத்திய நாகரிகத்திலே நமது அனுபவங்கள் வேறுவிதமாக இருந்தன.

ஒரு சமபாவமுள்ள பண்பாட்டில் நாம் வளர்க்கப்பெற்றிருக் கிறோம். நமது சமூக நூல்கள், மத நூல்கள், உளவியல் ஆகியவை ஏமோனது தோற்றத்திலே உள்ள உண்மைகளை விடாது புறக் கணித்து வருகின்றன.

வாழ்வு முறையும், சூழ்நிலைகளின் வலியும், மனிதனின் கற்பனை வளமும், ஒரு சமூகம் வாழ்வதற்கான பல வழிகளை வகுத் துக் கொடுக்கலாம். உடமைகளுக்குத் தக்கவாறு, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என வரிசைப்படுத்தும் சொந்தங்கள், சடப்பொருள் கள், அவைகளுக்கான விரிவான செய்முறைகள் ஆகியவை இருக்கலாம். ஆண் பெண் உறவுகளில் உள்ள பல திருப்பங்கள், பெற்றோர்களின் நிலைகள், அவற்றிற்குப்பின் உள்ள நிலைகள், சமூகத்திற்கு உருவகமளிக்கும் பல பிரிவுகள், பொருளாதாரப் பண்டமாற்றுகள், கடவுள்கள், இயற்கைக்கப்பாற்பட்ட அனுமதி கள் ஆகிய பல சமூகத்திலே இடம்பெறுகின்றன. இவை ஒவ் வொன்றையுமோ அல்லது பலவற்றையோ பண்பாடும் விரிவான விழாக்களும் பற்றி நிற்கலாம். இவைகளுக்காகப் பண்பாட்டுச் சக்தி மிகுதியாகச் செலவழிக்கப்பட்டு, மற்ற குணப்பாங்குகளை வளரச்செய்வதற்கு இயலாமல் போய்விடலாம். நமக்கு மிகவும் முக்கியமாகத் தெரிகிற வாழ்க்கையின் சில அமிசங்களை வேறு திசையில் செல்லுகிற வளமான பிற பண்பாடுகள் கவனிக்கா மலே விட்டுவிடக்கூடும். அல்லது அதே குணப்பாங்கை நமக்கே விநோதமாகப்படும்படி, மிதமிஞ்சி விரிவாக்கம் செய்யலாம்.

பேச்சில் உள்ளதுபோலவே பண்பாட்டிலும் தேர்ந்தெடுப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. நமது குரல் நாண்களாலும், வாய், மூக்கு ஆகியவைகளாலும் ஏற்படுத்தக்கூடிய ஒலிகள் ஏராளம். ஆங்கில மொழியிலே உள்ள மூன்று அல்லது நான்கு டஜன் ஒலிகள், அதனுடன் தொடர்புகொண்ட ஜெர்மன், ஃபிரெஞ்சு மொழிகளின் ஒலிகளோடு ஒவ்வாத ஒரு தேர்வு ஆகும். உலகத்தின் பல மொழிகளிலே பயன்படுத்தப்பெறும் ஒலிகளைக் கணக்கிட யாரும் துணிந்ததில்லை. ஆனால், ஒவ்வொரு மொழியும் சில ஒலிகளைமட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகின்றன. இல்லா விட்டால் அது விளங்காத மொழியாகிவிடும். சாத்தியமான, பதிவு செய்யப்பட்ட, பலநூறு ஒலிகளை ஒரு மொழி பயன்படுத்து மாயின் அது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உபயோகப்படுவ தில்லை. நமக்குத் தொடர்பில்லாத பல மொழிகளை நாம் தவறுகப் புரிந்துகொள்வதன் காரணம், நாம் வேறுன பல ஒலி விவரங்களை

நமது மொழிக்கு ஒப்பிட்டுப்பார்ப்பதுதான். நாம் ஒரு 'k' [1]ஐத் தான் அறிவோம். மற்ற மக்கள் ஐந்து விதமான 'k' ஒலிகளை வாயிலும் தொண்டையிலும் பல இடங்களிலிருந்து உண்டாக்கி, அவர்களது அகராதியிலும் சொற்புணர்ச்சியிலும் பலவித வேறு பாடுகளைக்கொண்டால், நாம் அந்த மொழியில் தேர்ச்சிபெறுகிற வரையில், நமக்கு அந்த வேறுபாடுகள் விளங்கா. நமது மொழி யில் ஒரு 'd' யும் ஒரு 'n' மே உள்ளன. அவர்களிடையே இவை இரண்டிற்கும் இடையே ஒரு ஒலி இருக்கலாம். நமக்கு அதைப் புரிந்துகொள்ள முடியாவிட்டால் சில சமயம் 'd' யையும் சில சமயம் 'n' யையும், இல்லாத வேறுபாடுகளைக் கற்பித்து எழுது கிறோம். மொழி ஆராய்ச்சிக்கான முதல் தேவை இப்படி எண் ணிலடங்கா ஒலிநிலைகள் இருப்பதைப்பற்றிய உணர்வும் அவை களினின்று ஒவ்வொரு மொழியும் தனக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன என்று அறிவதும் ஆகும்.

பண்பாட்டில்கூட, மனிதனின் வாழ்க்கைச் சூழ்நிலையாலும், மனிதனது பல செய்கைகளாலும் ஏற்படுகின்ற பல சாத்தியமான வழிகளும் ஈடுபாடுகளும் உள்ளன. எல்லாவிதமான ஒலிகளையும் பயன்படுத்தும் மொழி எப்படி விளங்காத ஒன்ருகிவிடுகிறதோ அதேபோல் ஒரு பண்பாடானது அதிக அளவிலே இந்த வழிகளை யும் ஈடுபாடுகளையும் சார்ந்திருந்தால் புரியாத ஒன்ருகிவிடும். ஒரு பண்பாட்டின் தனித்தகுதி அஃது இவ் வழிகளினின்று சில வற்றைமட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்வதன்மூலமே அடையப் பெறுகிறது. எங்கும், ஒவ்வொரு சமூகமும் தனது பண்பாட்டு நிறுவனங்களிலே இப்படிப்பட்ட ஒரு தேர்ந்தெடுப்பைக் கொண் டிருக்கிறது. ஒவ்வொரு பண்பாடும் பிற பண்பாட்டுக் கண் ணோட்டத்தில் அடிப்படை அமிசங்களைப் புறக்கணிப்பதாகவும், தொடர்பில்லாதவற்றை விரிவாக்குவதாகவும் தோன்றும். ஒரு பண்பாடு நாணயத்தின் மதிப்பைப் பொருட்படுத்தாமலிருக்க லாம். மற்ருெரு பண்பாடு நடத்தையின் ஒவ்வொரு துறையிலே யும் அதை அடிப்படையாகவே கொண்டிருக்கலாம். ஒரு சமூகத் திலே உயிரோடிருப்பதற்கு மிக அவசியமான அமிசங்களில்கூட செய்முறைகள் நம்பமுடியாத அளவுக்கு முக்கியத்துவம் பெரும லிருக்கலாம். மற்ருெரு சமூகத்திலே அதே எளிய முறைகள் மிகவும் சிக்கலாகவும் அந்தச் சந்தர்ப்பங்களுக்கேற்ப அருமையாக அமைந்தனவாகவும் இருக்கலாம். ஒரு சமூகம், குமரப்பருவத்தை யொட்டி மிகப் பெரிய பண்பாட்டு நிறுவனத்தை ஏற்படுத்தி

[1] ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலாதலால், அதே ஒலியை வைத்து எழுதப்பட்டுள்ளது.

யிருக்கலாம். ஒரு சமூகம் சாவையொட்டியோ, மற்றொரு சமூகம், சாவிற்கு அப்பால் உள்ள வாழ்வையொட்டியோ தங்கள் பண்பாட்டு நிறுவனங்களை வளப்படுத்தி வைத்திருக்கலாம்.

குமரப்பருவம் மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகும். ஏனென்றால், நமது நாகரிகத்திலே அது முன்னணியில் உள்ளது. மற்ற பண்பாடுகளினின்றும் அதைப்பற்றி நிறைய விவரங்கள் கிடைக்கின்றன. நமது நாகரிகத்தில், உளவியலைப்பற்றிய பல நூல்கள், பூப்படையும் காலத்தில் ஏற்படுகிற ஒரு நிலையற்ற மனப்பாங்கை வலியுறுத்தியுள்ளன. நமது மரபிலே, டைபாய்ட் எப்படி சுரத்தினால் குறிப்பிடப்படுகிறதோ அவ்வாறே குமரப்பருவமும் குடும்பத்திற்குள்ளே ஒரு புரட்சியும் திடீர் மாற்றமும் ஏற்படுகிற ஓர் உடற்செயலியல் கூறாக இருக்கிறது. உண்மைகளைப்பற்றிச் சந்தேகமில்லை. அமெரிக்காவிலே அது சர்வசாதாரணம். அவை தவிர்க்கமுடியாதவைகளா என்பதே பிரச்சினை.

பல சமூகங்களில் குமரப்பருவத்தைக் கையாளுவதை மேலெழுந்தவாரியாக நோக்கும்பொழுதே ஓர் அமிசம் நமது கவனத்திற்குத் தப்பாது. இக் குணப்பாங்கை மிகையாகக்கொண்டிருக்கிற பண்பாட்டிலேகூட வாழ்வின் பல வருடங்களில் கவனம் செலுத்தப்பெறுகிறது. எடுத்த எடுப்பிலேயே, உயிரியல்முறையில் பூப்படைவதை நாம் எண்ணுகின்றபோது, பூப்படைவதற்கான நிறுவனங்கள் என சொல்லப்பெறுவதெல்லாம் தவறான பெயர்கள் எனத் தெரிகிறது. அவர்கள் எண்ணுகிற பூப்படைதல் சமூக இயல்பைப்பற்றியதாகும். அதற்கான சடங்குகள் ஒரு குழந்தை வயதடைந்து அதற்குத் தக்க நிலையை ஏற்பதை ஒப்புக்கொள்ளுதல் போன்றதாகும். அவைகளின் விளைவு, புதிய தொழில்களையும் கடமைகளையும் அவன் எடுத்துக்கொள்வதுதான். அத் தொழில்களும், கடமைகளும் பண்பாட்டினாலே உருவகப்படுத்தப்பட்ட பல்வேறு வகைகளாக இருக்கலாம். வயதடைந்த மனிதனுடைய ஒரே கண்ணியமான கடமை,போர்ச் செயல்கள்தான் என எண்ணப்பெற்றால், இதற்காக அவன் பொறுப்புகள் ஏற்பது சிறிது காலம்கடந்து நடத்தப்பெறுகிறது. ஒரு சமூகத்திலே வயதடைந்தவன் முகமூடிக் கடவுள்கள்போல் நடனமாடுவதுதான் உரிமை என்றுகொண்டால், அச் சமூகத்தில் நடக்கும் குமரப்பருவத்திற்கான சடங்கு வேறுவிதமானது. முன் சொன்னதைவிட சிறிது சீக்கிரமே நடத்தப்பெறுகிறது. பூப்புச் சடங்குக்கான நிறுவனங்களை அறிந்துகொள்ள 'கடந்துசெல்வதற்கான சடங்குகளின்' (Rites de passage) அவசியத் தன்மையை ஆராயவேண்டியதில்லை. பல்வேறு பண்பாடுகளில், முதிர்ந்தோர்

(adult) பருவத்தின் துவக்கத்தையும் இப் புதுத்தகுதிக்கு அனும திக்கும் முறைகளையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். அப் பண்பாட்டில் முதிர்ந்தோர் தன்மை எதைக் குறிக்கிறது என்பதே பூப்புச் சடங்குகளை நிர்ணயிக்கிறதேயன்றி உயிரியல்முறை பூப் படைதல் அன்று.

மத்திய வட அமெரிக்காவில் முதிர்ந்தோர்தன்மை போர் முறையைக் குறிக்கிறது. அதிலே மதிப்புப்பெறுவதுதான் எல்லா ஆண்களுக்கும் குறிக்கோளாக இருக்கிறது. போரிலே வெற்றி பெற நடக்கும் மாயாஜாலச் சடங்காகவே அடிக்கடி நடத்தப் பெறும் சிறுவர்கள் வயதடையும் சடங்குகளும், எந்த வயதிலும் போர்வழிக்கானத் தயாரிப்புகளும் உள்ளன. அவர்கள் பிறரைத் துன்புறுத்துவதில்லை; தங்களைத் தாங்களே துன்புறுத்திக்கொள் கின்றனர்; தங்கள் கைகளிலிருந்தும் கால்களிலிருந்தும் தோலைக் கிழித்துக்கொள்கின்றனர்; விரல்களை வெட்டிக்கொள்கின்றனர்; பெரிய கனமான எடைகளைத் தங்கள் மார்பு அல்லது கால் தசை யில் கட்டி இழுத்துச்செல்கின்றனர். போர்முனைச் செயல்களில் அதிகமான சக்தியைப்பெற்றிருப்பதுதான் இதற்கான வெகுமதி யாக அவர்கள் எண்ணுகின்றனர்.

ஆஸ்ட்ரேலியாவில், முதிர்ந்தோர்தன்மை அடைதல் என்பது முற்றிலும் ஆண்களுக்காகவே ஏற்பட்டமுறைகளில் பங்குகொள் வதுதான். பெண்களை அறவே புறக்கணிப்பதுதான் இதனுடைய அடிப்படையான இயல்பு. இச் சடங்குகளின்போது பயன்படுகிற புல்-ரோரர் என்ற ஒரு கருவியின் (bull-roarer) சத்தத்தை ஒரு பெண் கேட்டுவிட்டால் அவளை உடனே கொன்றுவிடுகின்றனர். இச் சடங்குகளைப்பற்றி அவள் அறியவேகூடாது. பூப்படைவ தற்கான சடங்குகள் மிகவும் விரிவாக இருக்கின்றன. இவை பெண்பாலரோடு உள்ள தொடர்புகளைக் குறிப்புகள்மூலம் மறுப்ப தாகவே இருக்கின்றன. ஆண்களைத் தன்னிறைவுகொண்டவர் களாகவும் சமுதாயத்தின் முழுப் பொறுப்புடையவர்களாகவும் குறிப்புகள்மூலம் அறிவுறுத்துகின்றனர். இந்த முடிவுக்காக அவர்கள் கடுமையான இனச் சடங்குகளையும் இயற்கைக்கப்பாற் பட்ட உறுதிமொழிகளையும் கொண்டுள்ளார்கள்.

குமரப்பருவத்திற்கான உடலியல் விவரங்கள் வலியுறுத்தப் பெறும் இடங்களில்கூட முதலில் சமூகத் தன்மையதாகவே அவை கொள்ளப்பெறுகின்றன. ஆனால், பூப்புச்சடங்குகளுக் கான நிறுவனங்களை ஆராயும்போது ஓர் உண்மை புலனாகிறது. உடலியல் வழியே பூப்படைதல் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்

வேருனது. உடலியல்போலவே பண்பாடும் இவைகளைப்பற்றியிருந்தால் இயற்கையாக பெண்களுக்குரிய சடங்குகள் ஆண்களுக்குரியவைகளைவிட மிகவும் குறிப்பிடும் தன்மை வாய்ந்தவைகளாக இருக்கவேண்டும். ஆனல், உண்மையில் அப்படியில்லை. இச் சடங்குகள் ஒரு சமூக அமிசத்தையே வலியுறுத்துகின்றன. ஒவ்வொரு பண்பாட்டிலும் பெண்களைவிட ஆண்களின் முதிர்ந்தோர் பருவத்தின் தனி உரிமைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, சமூகங்கள் பெண்களின் குமரப்பருவத்தைவிட ஆண்களின் குமரப்பருவத்தையே அதிகமாகக் கவனிக்கின்றன.

ஒரே குடிமக்களில் ஒரேவிதமாகவே ஆணுக்கும், பெண்ணுக்கும் பூப்புச்சடங்குகள் சமூக முறையிலே கொண்டாடப் பெறலாம். பிரிட்டிஷ் கொலம்பியாவினுள்ளே உள்ள சில பகுதிகளில், குமரப்பருவத்திற்கான சடங்குகள், பல தொழில்களுக்கு மாயாஜாலப் பயிற்சி அளிப்பவையாக இருக்கின்றன. இங்குப் பெண்களும் ஆண்களைப்போலவே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். சிறுவர்கள் ஒரு மலைச்சரிவில் கற்களை உருட்டி, அவை கீழே வரும்வரையில் எத்துகிருர்கள். இது அவர்கள் வேகமுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகச் செய்யப் பெறுகிறது அல்லது சூதாட்டத்திலே அதிர்ஷ்டம் உடையவராக இருக்கவேண்டும் என்பதற்காகச் சூதாட்டக் குச்சிகளை விட்டெறிகின்றனர். சிறுமிகள் வெகு தொலைவிலுள்ள ஊற்றுக்களிலிருந்து நீர் எடுத்துவருகின்றனர் அல்லது சிறு கற்களைத் தங்கள் ஆடைகளுக்குள்ளே போடுகின்றனர். அக் கற்கள் எப்படித் தரையில் வந்து விழுகின்றனவோ அவ்விதமே எளிதாகக் குழந்தைகள் பிறக்கவேண்டும் என்பதை இச் செயல் குறிக்கிறது.

கிழக்கு ஆப்பிரிக்காவில் ஏரிகள் நிறைந்த பகுதிகளில் வாழும் நந்தி (Nandi) என்ற மக்களிடையே பெண்களும் ஆண்களும் ஒரேமாதிரியான பூப்புச்சடங்குகளில் பங்குகொள்கின்றனர். அப் பண்பாட்டில் ஆண்கள் ஆதிக்கம்பெற்று விளங்குவதால் அவர்களுக்கான பயிற்சிக்காலம், பெண்களுடையதைவிட அதிகமாக வலியுறுத்தப்பெறுகிறது. இங்கு ஏற்கெனவே முதிர்ந்தோர் தன்மை அடைந்தவர்கள் புதிதாகச் சேர்க்கவேண்டியவர்களை மிகவும் துன்புறுத்தும்முறையில் பூப்புச்சடங்குகள் அமைந்திருக்கின்றன. ஆண் குறியின் நுனித்தோல் செதுக்குதல் (circumcision) பற்றிய பல கொடுமைகளை அவர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இருபாலாருக்கும் உள்ள சடங்குகள் தனித்தனியாக இருந்தாலும் அவை ஒரே முறையில்

அமைந்துள்ளன. இரண்டிலும், புதிதாகச் சேருகிறவர்கள் விழாவுக்காகத் தங்கள் காதலர்களின் ஆடைகளை அணிந்துகொள்கின்றனர். அந்தச் சடங்கு நடைபெறும்போது ஏற்படுகிற வலியால் அவர்களின் முகங்களில் மாறுபாடு தென்படுகிறதா என்று கவனிக்கின்றனர். வீரத்திற்கு வெகுமதியாகக் காதலிப்பவன் ஓடிச்சென்று மகிழ்ச்சி பொங்கத் தன் ஆடையணிகளைத் திரும்பப் பெறுகிருன். பெண், ஆண் இருபாலருக்கும் இச் சடங்குகள் அவர்கள் புதிய இனத் தகுதிபெற்றதைக் குறிப்பிடுகின்றன. இவைமூலம், ஆண் ஒரு வீரனுகத் தனக்கென்று ஒரு காதலியைக் கொள்ளலாம்; பெண் திருமணத்திற்குரியவளாகிருள். இருவருக்கும் குமரப்பருவத்தின் சடங்குகள் திருமணத்திற்கு முன்னே உள்ள சோதனைகளாக இருக்கின்றன. இச் சமயம் காதலர்கள் கைப்பிடிக்க ஏதுவாகிறது.

பெண்கள் பூப்படைவதையொட்டியே பூப்புச்சடங்குகள் உருவாக்கப்பட்டு அதில் ஆண்கள் அனுமதிக்கப்படாமல் இருக்கலாம். மத்திய ஆப்பிரிக்காவிலே பெண்களை உடல் பெருக்கச் செய்யும் நிறுவனங்கள் உள்ளன. உடல் பெருத்திருப்பதையே பெண்மையின் அழகாகக்கொண்டிருக்கும் இப் பகுதிகளில் பெண்கள் பூப்படையும்போது தனித்து வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இனிப்பும் கொழுப்பும் உள்ள உணவுகளைக் கொடுத்து, எண்ணெய்களைக்கொண்டு உடலில் நன்ருகத் தேய்க்கிருர்கள். அவர்களை ஒரு வேலையும் செய்ய விடுவது இல்லை. அவளுடைய எதிர்காலக் கடமைகள் அவளுக்குக் கற்றுத்தரப்படுகின்றன. அவள் கொழுத்திருப்பதைப் பகட்டாக வெளிக்காட்டுவதுடன் அவள் தனித்திருக்கும் காலம் முடிகிறது. இதைத் தொடர்ந்து அவளுடைய திருமணமும் நடைபெறுகிறது. இது போன்று திருமணத்திற்கு முன்பு அழகுபெறவேண்டும் என்ற அவசியம் ஆண்களுக்கு இல்லை.

ஆண்களுக்கு இல்லாது, பெண்களுக்குமட்டுமே உள்ள பூப்புச்சடங்குகள் மாதவிடாய் என்பதையொட்டி ஏற்பட்டவையாகும். மாதவிடாய் உள்ள பெண் அசுத்தமானவள் என்ற கருத்து உலகெங்கும் காணப்பெறுகிறது. சில இடங்களில் இந்த எண்ணத்தால் ஏற்பட்ட ஈடுபாடுகள் ஒரு பெண்ணின் முதல் மாதவிடாய் காலத்தில் வலியுறுத்தப்பெறுகின்றன. இப்படிப்பட்ட இடங்களில், பூப்புக்கான சடங்குகள் நாம் கண்டதைவிட மாறுபட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள காரியர் இந்தியர்களிடையே (Carrier Indian) ஒரு பெண் பூப்படைதல் மிகவும் அச்சமும் பயமும் உள்ள ஒரு சந்தர்ப்பமாகும். அவள்

தனித்திருக்கவேண்டிய மூன்று அல்லது நான்கு வருடகாலம் அவளை 'உயிரோடு புதைத்தல்' எனக் கூறப்பட்டது. அவள் இக் காலத்தில் மனித சஞ்சாரமற்ற காட்டில் கிளைகளால் ஆன ஒரு குடிசையில் வாழவேண்டும். அவளைப் பார்ப்பதற்கே யாவரும் பயப்படுவர். அவள் கால் பட்டுவிட்டால் ஒரு பாதையோ ஆறோ அசுத்தமாகிவிடும். பதனிடப்பட்ட தோலி னுல் செய்யப்பட்ட அவளது தலையணி அவள் முகத்தையும் கொங்கைகளையும் மறைத்துக் கீழே தரையிலும் புரண்டது. அவளது கைகளிலும் கால்களிலும், தசைநார்களால் ஆன பட்டைகளை அணிவித்து அவளைப் பிடித்திருக்கும் ஆவியினின்று அவளைக் காப்பாற்றுகிறார்கள். அவளும் அபாயத்திலிருக்கிறாள். பிறருக்கும் அவள் அபாயம் விளைவிக்கக்கூடும்.

மாதவிடாயையொட்டிய எண்ணங்களால் ஏற்படும் பெண் ணின் பூப்புச்சடங்குகள், தனியொருவர் கண்ணோட்டத்தில் இதற்கு எதிரிடையான நடத்தையாகவும் மாற்றப்படலாம். அது அபாயத்தைக் குறிப்பதாக அல்லது ஆசிபெறுவதாக இரண்டு விதமாகக் கொள்ளப்படலாம். சில பழங்குடிகளில் பெண்ணின் முதல் மாதவிடாய் சக்திவாய்ந்த இயற்கைக்கப்பாற் பட்ட நல்வாழ்த்தாகக் கொள்ளப்பெறுகிறது. அப்பாச்சி (Apache) மக்களிடையே பூசாரிகள்கூட ஆசி பெறுவதற்காக வரிசையாக நிற்கும் சிறுமியர் முன்பு மண்டியிட்டுச் செல்வதை நான் கவனித்திருக்கிறேன். எல்லாக் குழந்தைகளும், வயதான வர்களும், தங்கள் நோயை அகற்றிக்கொள்வதற்காகக் கட்டா யம் வருகின்றனர். குமரப்பருவமடைந்த பெண்களை அபாயத்திற் கிடமானவர்கள் என்று ஒதுக்கிவிடாமல், இயற்கைக்கப்பாற்பட்ட வாழ்த்துக்கள் செய்ய வல்லமைபெற்றவரென்று உபசரிக்கப் படுகின்றனர். காரியர் இந்தியர், அப்பாச்சி ஆகிய இரண்டு மக்களிடையேயும், மாதவிடாய் என்பதையொட்டி பெண்களின் பூப்புச்சடங்குகள் ஏற்பட்டிருப்பதால் ஆண்களுக்கு அது குறிப்பிடத்தக்கதாக இல்லை. ஆண்மைக்கான சில தெளிவுகளும் சாதாரண சில சோதனைகளையுங்கொண்ட சடங்காகவே அவை இருக்கின்றன.

பெண்களின் குமரப் பருவ நடத்தைகள்கூட, அக் காலத்தில் அவர்களின் உடற்செயலியல் கூறினுல் உருவாக்கப்படாமல், அவர்கள் சமூக முறையிலே, திருமணத்திற்காகவும் மாயாஜால தேவைகளுக்காகவும் ஏற்படும் அவசியங்களால் உருவாக்கப் பட்டன. இந்த நம்பிக்கைகள், சில மக்களிடையே குமரப் பருவத்தை மதச்சம்பந்தமுள்ள நன்மை பயக்கும் சந்தர்ப்பமாக

வும் மற்றும் சில குடிமக்களிடையே மிகவும் அபாயகரமானதாக வும் அசுத்தமானதாகவும் உருவகப்படுத்தின. உதாரணமாக ஒரு சிறுமி காட்டிலே வேறு எவரும் தன்னைக் காணக்கூடாது என்பதற்காக உரக்கக் கூவி எச்சரிக்கை செய்யவேண்டியிருந் தது. சில இடங்களிலே பெண்களின் குமரப்பருவம் பண் பாட்டினால் நிறுவனப்படுத்தப்பெருமலே இருப்பதும் உண்டு. ஆஸ்ட்ரேலியாவில் உள்ளதுபோல் ஆண்களுக்கான குமரப் பருவம் விரிவானமுறையிலே கவனிக்கப்படலாம். அச் சடங்கு கள்மூலம் அவர்கள் தங்கள் மக்களின் வாழ்விலே பங்குகொண்டு ஆண்மையோடு விளங்க துவக்கிவைக்கப்படுகின்றனர். பெண் களின் குமரப்பருவம் கவனிக்கப்படாமல் இருக்கலாம்.

இந்த விவரங்கள் எல்லாம் அடிப்படையான பிரச்சினைக்கு விடையளிக்கவில்லை. நிறுவனங்கள்மூலமாக வெளிப்படுத்தா விட்டாலும் எல்லாப் பண்பாடுகளும் இக் காலத்தில் ஏற்படுகின்ற கொந்தளிப்புகளைச் சமாளிக்கவேண்டாமா? டாக்டர் மீட் (Dr. Mead) என்பவர் ஸமோவாவில் (Samoa) இப் பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறார். அங்கே ஒரு பெண்ணின் வாழ்க்கையானது சில குறிப்பிட்ட பருவங்களைக் கடந்துசெல்கிறது. அவள் குழந்தைப் பருவத்தைத் தன் வயது குழந்தைகளோடு கழிக் கிறாள். அதில் ஆண்களுக்கு இடம் அளிக்கப்படுவதில்லை. அவள் வாழும் கிராமத்தின் பகுதியே அவளுக்கு மிகவும் முக்கிய மானது. ஆண்கள் விரோதிகளாக எண்ணப்பெறுகின்றனர். கைக்குழந்தையைக் கவனிப்பது ஒன்றே அவள் வேலையாகும். ஆனால், அவள் வீட்டில் தங்காமல் குழந்தையையும் எடுத்துக் கொண்டு விளையாடச் செல்கிறாள். இதனால் அவள் விளையாட்டு கள் பாதிக்கப்படுவதில்லை. பூப்படைவதற்குச் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவள் விளையாட்டுக் குழுவை மறந்து விடுகிறாள். அவள் அறிந்துகொள்ளவேண்டிய நுட்பமான செய்முறைகளையும், அவள் செய்யவேண்டிய கடினமான வேலை களையும் செய்ய முற்படுகிறாள். ஒரு வயதுவந்த பெண்ணின் ஆடைகளை அணிந்து வீட்டு வேலைகளைச் செய்கிறாள். கொந்த ளிப்பு ஏதும் ஏற்படாமல், ஒரு சுவாரஸ்யமற்ற பருவமாகவே அவளுக்குக் குமரப்பருவம் கழிகிறது. பூப்படைதல் ஒருவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

பூப்படைந்தபிறகு சில ஆண்டுகளுக்கு அவள், பொறுப்பற்ற மகிழ்வூட்டும் காதல் விளையாட்டுகளில் ஈடுபடுகிறாள். திரு மணத்திற்கு அவள் தயாராகிய பின்னரும் சில காலத்திற்கு இவ் விளையாட்டுகள் நீடிக்கலாம். சமூகம் பூப்படைவதைப் பொருட்

படுத்துவதில்லை. அவளுடைய ஈடுபாடுகளும் இச் சமயத்தில் மாறுவதில்லை. குமரப்பருவத்திற்கு முன்னே அவளுக்கிருந்த வெட்கம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கிறது. உடற்செயலியலில் இன முதிர்ச்சியால் ஏற்படுகிறவைகளைத் தவிர மற்றைய ஈடுபாடுகளால் ஸமோவாவில் ஒரு பெண்ணின் வாழ்க்கை நிறைந்திருக்கிறது. குமரப்பருவத்துக் கொந்தளிப்பு கள் ஏதும் ஏற்படாமல், பூப்படைதல் ஓர் அமைதியான சந்தர்ப்ப மாக அதிகம் கவனிக்கப்பெருமலேயே இருந்துவிடுகிறது. சடங்குகள் ஏதும் இல்லாமலேயே ஒரு பண்பாடு குமரப்பருவத் தைக் கடத்திவிடலாம். ஒருத்தியின் உணர்ச்சிமயமான வாழ்வில் முக்கியத்துவம் பெருமலும், கிராமத்தார் அவளிடத்தே கொண்டுள்ள ஈடுபாடுகளில் முக்கியத்துவம் பெருமலும் அப் பருவம் இருக்கலாம்,

மற்ருெரு சமூக ஈடுபாடு போர்முறையாகும். சில பண்பாடு களில் போர் முறை இருக்கலாம். சிலவற்றில் இல்லாமலும் இருக்க லாம். போரைப்பற்றி அதிகமாக வலியுறுத்திச் சொல்லும் பொழுது, அது எதிரிடையான நோக்கங்களாலும், நாட்டைப் பொறுத்தவரையில் எதிரிடையான அமைப்புக்களாலும், எதி ரிடையான அனுமதிகளாலும் எற்படலாம். அஸ்டெக்ஸ் (Aztecs) மக்களிடையே இருந்தமாதிரி, போர், மதச் சம்பந்தமான பலி களுக்கு அடிமைகளைப் பிடிக்க ஏற்பட்டிருக்கலாம். ஸ்பானியர் கள் கொல்வதற்காகவே சண்டையிட்டபடியால் அஸ்டெக்ஸ் தகுதிநிலைகளின்படி அவர்கள் விதிகளை மீறியதாகக் கொள்ளப் பட்டது. ஆகவே, அஸ்டெக்ஸ் மக்கள் பின்வாங்கினர். கார்டெஸ் (Cortez) வெற்றியடைந்தவன்போல் தலைநகருக்குள் நுழைந்தான்.

நமது கண்ணேக்குப்படி, உலகத்தின் பல பாகங்களில் காணப்படுகிற போர்முறைகளுக்கான நோக்கங்கள் விநோதமாக இருக்கலாம். நாம் இங்கு, சமூகக் கூட்டங்களிடையே ஒருவர்க் கொருவர் கொன்றுகொள்ள, முறையாக அமைந்த வழிகளற்றப் பகுதிகளைக் கவனித்தால்போதும். நாம் போரைப்பற்றி நன்கு அறிந்திருப்பதால் ஒரு குடிமக்கள் மற்றைய மக்களுடன் கொண்டுள்ள தொடர்பில், ஒரு போர்க்காலமும் அமைதிக் காலமும் மாறிமாறி இருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள் கிருேம். உலக முழுவதும் இந்த எண்ணம் சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஆனுல், அமைதியான நிலைமை இருக்கக்கூடும் என்றே சில மக்களால் எண்ணமுடிவதில்லை. அப்படி இருந் தால் அந்த மக்களின் கண்ணேட்டத்தில், விரோதியை மனித

இனத்திலே சமமாகச் சேர்த்துக்கொள்வதுபோலக் கொள்ளப் பெறுகிறது. ஏனென்ருல், விரோதிகள் அவர்களது இனத்தையும் பண்பாட்டையும் சேர்ந்திருந்தபோதிலும், அவர்களை மனித இனமாக மதிப்பதில்லை.

இதற்கு எதிரிடையாக, சில மக்களுக்குப் போர் என்பதையே நினைத்துப்பார்க்கமுடிவதில்லை. ராஸ்முஸென் (Rasmussen) என்பவர் எஸ்கிமோ ஒருவனிடம் நமது வழக்கத்தை விவரித்தபொழுது அவன் விழித்தான். எஸ்கிமோக்கள் ஒருவனைக் கொல்வதை நன்கு புரிந்துகொள்கிருர்கள். எதிரி ஒருவன் வழியில் குறுக் கிட்டால், தன் வலிமை சரியாக அறிந்துகொள்ளப்பட்டால், பொறுப்பேற்க அவன் தயாராக இருந்தால் எதிரியைக் கொன்று விடலாம். கொலை செய்தவன் வலிமை பெற்றவனுக இருந்தால் சமூகம் இதற்கு ஈடுகேட்பதில்லை. ஆனுல், ஓர் எஸ்கிமோ கிராமம் மற்ருேர் கிராமத்தின்மேல் படையெடுத்துச் செல்வதோ, ஒரு பழங்குடியினர் மற்ருெருகுடியினர்மேல் போர் தொடுப்பதோ அவர்களுக்குப் புறம்பான ஒன்று. எல்லாவகைக் கொலைகளும் ஒரு தலைப்பிலேயே அடங்கிவிடுகின்றன. நம்மிடையே அவை பிரிக்கப்பட்டு, ஒன்று மிகவும் பெருமை தருவதாகவும், மற்ருென்று பெருங் குற்றமாகவும் கருதப்படுவதுபோன்று அவர்களிடையே இல்லை.

நானே கலிபோர்னியாவில் உள்ள மிஷன் இந்தியர்களிடம் (Mission Indian) போர்முறையைப்பற்றிப் பேச முயன்றேன். ஆனுல், அது முடியவில்லை. அவர்கள் போரைப்பற்றி மிகவும் தவருன கருத்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய பண்பாட் டிலே இதற்கான அடிப்படை ஏதும் இல்லை. நாம் முழுமனதோடு ஈடுபடுகின்ற பெரும் போர்களை அவர்கள் சாதாரண தெருச் சண்டைகளைப்போன்றே எண்ணினர். இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ளும் பண்பாட்டை அவர் கள் பெற்றிருக்கவில்லை.

நமது நாகரிகத்திலே, பெரிதாக வளர்ந்துவிட்டபோதிலும், போர் ஒரு பண்பில்லாத குணப்பாங்கு என்று ஒப்புக்கொள்ளத் தான்வேண்டும். முதல் உலக மகாயுத்தத்தின்போது பயன் படுத்தப்பெற்ற போர்க்குரல்களான துணிவை வளர்த்தல், பொது நலப்பண்பு, இவைகளைப்பற்றிய விவாதங்கள், போருக்குப்பின் அர்த்தமற்றவைகளாகவும் வெறுக்கத்தக்கவைகளாகவும் ஒலிக் கின்றன. நமது நாகரிகத்தில் போர், ஒரு பண்பாடு எவ்விதம் தேர்ந்தெடுத்த குணப்பாங்கை அழிக்கும் சக்தியைத் தீவிரமாகப் படைக்குமளவுக்கு வளர்த்துவிடுகிறது என்பதற்குச் சிறந்த சான்

ருகும். எல்லா மக்களும் எவ்விதம் அவரவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் குணப்பாங்குகளைச் சரியென்று கொள்கிருர்களோ அவ்விதமே நாமும் போரை ஒப்புக்கொள்ளுகிருேம். போரின் குணத்தை ஆராய்ந்து பார்த்து அதைச் சரியென ஒப்புக்கொள்ள வில்லை.

போர்முறைமட்டும் இப்படி இருக்கும் ஒரு குணப்பாங்காக இல்லை. உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும், பலவகைப் பண்பாடுகளிலிருந்தும் இப்படிப்பட்ட ஒரு குணப்பாங்கு அதீத மாக, பண்பில்லாத குணப்பாங்காக வளர்ந்துவிட்டதை நாம் காணலாம். உணவு சம்பந்தமான அல்லது புணர்ச்சி சம்பந்த மான கட்டுப்பாடுகள், உயிரியல் நோக்கங்களுக்கு நேர்மாருக, மரபுவழியில் பயன்படுத்தப்பெறும் இடங்களில் இது மிகத் தெளி வாக இருக்கிறது. மானிடவியலில் சமூக அமைப்பானது ஒரு தனிப்பொருள் பெற்றிருக்கிறது. ஏனென்ருல், எல்லா மனித சமுதாயங்களும் திருமணம் செய்துகொள்ளக்கூடாத உறவு முறைகளை வலியுறுத்துவதில் ஒன்றியிருக்கின்றன. நாம் அறிந்த வர்களில் ஒரு மக்களும், எல்லாப் பெண்களையும் புணர்ச்சிக்குரிய வர்களாகக் கருதுவதில்லை. இது உட்குழு மணமுறையைத் (In-breeding) தடுப்பதற்காக ஏற்பட்டதன்று. ஏனென்ருல், உலகத்தின் பெரும்பகுதிகளில் தாயின் உடன்பிறந்தானின் மகளே முறைப் பெண்ணுக இருக்கிருள். இம்மாதிரி உறவுத்தடைகள் பல மக்க ளிடையே பலவேறுபட்ட உறவினர்களுக்கு விதிக்கப்படுகின்றன. ஆனல், எல்லா மக்களும் ஒரு தடையைக்கொண்டிருக்கின்றனர். இந்தத் 'தகாப்புணர்ச்சி' (incest) என்பது எல்லா மக்களிடையே யும் பண்பாடுகளில் விரிவாகக் கவனிக்கப்படுகிறது. தகாப் புணர்ச்சிக் குழுக்கள் ஒரு மக்களிடையே முக்கியமான செயலாற் றும் தொகுதிகளாக இருக்கின்றன. ஒவ்வொரு தனி மனிதனின் கடமையும் அவன் இக் குழுவிலே பெற்றிருக்கிற இடத்தையும் மற்றவர்களிடம் உள்ள தொடர்பையும்பொறுத்தே இருக்கிறது. இக் குழுக்கள் மதச்சடங்குகளிலும், பொருளாதாரப் பண்ட மாற்றுக்களிலும் தனித் தொகுதிகளாகச் செயலாற்றுகின்றன. சமூகச் சரித்திரத்திரத்திலே அவர்கள்கொண்ட பங்கை மிகைப் படுத்திச் சொல்லமுடியாது.

சில இடங்களில் தகாப்புணர்ச்சித் தடையை மிதமாகவே கொண்டிருக்கின்றனர். தடைகள் இருந்தபோதிலும் ஒருவனுக்கு மணம் செய்துகொள்ளப் பல பெண்கள் கிடைக்கலாம். வேறு சில இடங்களில் பொதுவான மூதாதையர்கள் இல்லாத பல தனி மனிதர்களையும் இத் தடைசெய்யப்பட்டக் கூட்டத்திலே ஒரு

சமூகக் கட்டுக்கதையின்படி சேர்த்துவிடுகின்றனர். ஆகையால், திருமணத்திற்குத் தேர்ந்தெடுக்கக் குறைந்த அளவிலேயே பெண்கள் இருந்தனர். உறவுமுறைகளை அழைப்பதற்குப் பயன்படும் சொற்களிலிருந்தே இது வெளிப்படுகிறது. நாம் உடன் பிறந்தானையும், ஒன்றுவிட்ட சகோதரனையும், தகப்பனையும், மாமனையும் பிரித்துச்சொல்ல வழியுறவும் இடையுறவும் கொண்டுள்ளதைப்போலல்லாமல் அவர்களிடையே ஒரே சொல் 'அவனது தலைமுறையில் எனது தகப்பன்வழி மனிதன்' (உறவு, இடம் முதலியவைகளைக்கொண்டு) என்று வழியுறவையும் இடையுறவையும் வேறுபடுத்தாமல் விளக்கும், நமக்குப் புரியாத பல புது உறவுகளையும் அவர்கள் கொண்டுள்ளனர். கிழக்கு ஆஸ்ட்ரேலியாவில் உள்ள சில மக்கள் இப்படிப்பட்ட பாகுபடுத்தும் உறவுமுறையில் ஒரு தீவிரமான முறையைக் கையாளுகின்றனர். அவர்கள் தொடர்புகொண்டுள்ள அவர்கள் தலைமுறையைச் சார்ந்த அனைவரையும் உடன்பிறந்தான் என்றோ, உடன் பிறந்தாள் என்றோ அழைக்கின்றனர். ஒன்றுவிட்ட உறவுமுறை என்பதே அங்கு இல்லை. ஒருவனது தலைமுறையைச் சேர்ந்த எல்லா உறவினரும் சகோதர சகோதரிகளேயாவர்.

உலகத்திலே இப்படி உறவுமுறைகளைக் குறிப்பிடுவது சகஜம்தான். ஆனால், ஆஸ்ட்ரேலியாவில் சகோதரி மணம் என்பது இணையில்லா அருவருப்புள்ளாதகக் கருதப்பெறுகிறது. பிற இனத்தில் மணம் செய்துகொள்வது (Exogamy) பற்றியும் எண்ணில்லாக் கட்டுப்பாடுகள் உள்ளன. உறவுமுறைகளைத் தீவிரமாகக்கொண்ட குருநாய் (Kurnai) என்ற மக்கள் சகோதரித் திருமணம்பற்றி அருவருப்புக்கொள்கிறார்கள். அதாவது, எந்த உறவுமுறையில் அவர்கள் தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் இருந்தாலும் அவர்களைச் 'சகோதரி' என்றே அவர்கள் நினைக்கின்றனர். திருமணத்திற்கான மணமகளைப் பொறுக்குவதில் குருநாய் மக்கள் அந்தந்த இடங்களுக்குரிய விசேஷ விதிகளைக் கொண்டிருக்கின்றனர். அம் மக்கள் வாழ்கின்ற சுமார் பதினைந்து அல்லது பதினாறு இடங்களுக்குள்ளே குறிப்பிட்ட ஒன்றிரண்டு இடங்களுக்கிடையே பெண்களை மாற்றிக்கொள்ளலாம். மற்றக் கூட்டங்களிடையே திருமணஉறவு கூடாது. சில சமயங்களில் இரண்டு மூன்று கூட்டங்கள் மற்றைய இரண்டு மூன்று கூட்டங்களோடும் பெண்களை மாற்றிக்கொள்ளலாம். ஆஸ்ட்ரேலியாவில் எல்லா இடங்களிலும் உள்ளதுபோல இன்னும் சில இடங்களில் வயதேறிய கிழவர்கள் தனி உரிமைபெற்று அழகுள்ள சிறு பெண்களை மணந்துகொள்ளலாம். இந்த விதிகளின் விளைவு, ஒவ்வொரு கூட்டத்திலேயும் ஒவ்வொரு இளைஞனுக்கும் மனைவி கிடைக்க

வேண்டும் என்று பார்க்கும்பொழுது, இம்மாதிரித் தடைசெய்யப் படாத பெண்கள் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. அவனுடைய தாயின் உறவுபெற்றதால் அவள் அவனது 'சகோதரி' ஆகிவிடு கிருள். அல்லது ஒரு கிழவனுல் அவள் ஏற்கெனவே வரிக்கப்பட்டு விடலாம். அல்லது வேறு ஏதாவது சிறிய காரணத்திஞல் அவள் அவனுக்கு மறுக்கப்பட்டுவிடலாம்.

இப்படியிருந்தும் குருநாய் மக்கள் பிற இனத்தில் மணம் புரிந்துகொள்வதற்கான தங்களுடைய விதிகளை மாற்றி அமைத் துக்கொள்ள முயலவில்லை. அவைகளை மிகவும் பலாத்காரமுறை யில் வலியுறுத்துகின்றனர். ஆகையால், மணம் செய்துகொள்ள ஒரேவழி கட்டுப்பாட்டை எதிர்த்து ஓடிவிடுவதுதான். அவர்கள் காதலருடன் ஓடிவிடுகின்றனர். இப்படி உடன்போக்கு (elopement) ஏற்பட்டதைக் கிராமத்தார் அறிந்த உடனே காதலர் களைத் துரத்திச்செல்கின்றனர். அவர்கள் பிடிபட்டால் கொல்லப் படுகின்றனர். இப்படித் துரத்திச்செல்பவர் எல்லோருமே உடன் போக்குத் திருமணம் செய்துகொண்டவர்களாய் இருக்கலாம். நெறிமுறைக்கான சீற்றம் அதிகமாகவே இருக்கிறது. ஆயினும், ஒரு தீவானது மரபுவழியே அபாயமற்றதாக எண்ணப்பெறு கிறது. காதலர்கள் அத் தீவை அடைந்து, ஒரு குழந்தை பிறக்கு மட்டும் அங்கேயே தங்கித் திரும்பிவந்தால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனர்; இப்போதும் அவர்கள் அடிபடுகின்றனர். ஆனல், அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளலாம். இப்படி அவர்கள் துன்பப்பட்ட பிறகு குடிமக்களிடையே மணமான மக்களின் அந்தஸ்தைப் பெறுகின்றனர்.

இப்படிப்பட்ட ஒரு பண்பாட்டிலுள்ள முரண்பாட்டைக் குருநாய் மக்கள் மிகவும் சாதரணமாகவே சமாளிக்கின்றனர். அவர்கள் ஒரு நடத்தையின் அம்சத்தை அதிகமாக வளர்த்துச் சிக்கலாக்கி அதை சமூகத்தின் ஒரு பொறுப்பாக மாற்றிவிட்டனர். அதிலிருந்து தப்புவதற்கு ஒன்று, அவர்கள் அந்த நடத்தையை மாற்றிக்கொள்ளவேண்டும்; அல்லது ஒரு தந்திரத்தைக் கையாள வேண்டும். அவர்கள் பின்சொன்ன முறையையே கையாளு கின்றனர். அவர்கள் அழிந்துபோவதைத் தவிர்த்து, நீதிநூல்களை யும் மாற்ருது நிலைநிறுத்திக்கொள்கின்றனர். நெறிகளை இவ்வாறு கையாளுவது நாகரிகத்தின் வளர்ச்சியிலே எதையும் இழந்துவிடவில்லை. நமது நாகரிகத்திலே சென்ற தலைமுறையில் ஒருசமயம் ஒருவரையே மணந்திருத்தல் (Monogamy) முறையை ஆதரித்த அதேசமயம் விபசாரத்தையும் ஆதரித்தனர். விபசாரம் வளமுற்றிருந்த காலத்தில்தான் ஒரு தார மணம்பற்றியும் புகழ்ந்

துரைத்தனர். எல்லாச் சமூகங்களும் அவை விரும்பிய மரபுவழி களைச் சரியென்றேகொண்டன. இப்படிப்பட்ட குணப்பாங்குகள் அத்துமீறி, வேறுவிதமான நடத்தைகள் தேவைப்படும்போது, வேறுவித நடத்தைகள் இல்லாமைபோன்று, மரபுவழிமுறை களுக்கு உதட்டளவிலே அவர்கள் ஆதரவளிக்கின்றனர்.

மனிதப் பண்பாட்டுமுறைகளைச் சேர்த்துப்பார்க்கும்போது, பல தவருன அபிப்பிராயங்கள் மறைந்து தெளிவு பிறக்கிறது. முதலாவதாக, மனிதனின் சூழ்நிலையோ, அல்லது உடலியல் அவசியங்களோ கொடுக்கிற குறிப்புகளை ஆதாரமாகக்கொண்டு ஏற்படும் பண்பாட்டு நிறுவனங்கள், நாம் எளிதில் கற்பனை செய் கிறமாதிரி, அக் குறிப்புக்களைமட்டும் பற்றிநிற்பதில்லை. உண்மையில் அக் குறிப்புக்கள் சில விவரங்கள்கொண்ட வெறும் பட்டியலாகவே இருக்கின்றன. அவை குறிப்பிட்ட சில ஈடுபாடு களையேகொண்டன. அவைகளைச்சுற்றி விரிவாக்கப்படும் பண்பாட்டு நடத்தைகள் பல்வேறு காரணங்களால் ஏற்படுகின் றன. சண்டையிடும் மனப்பாங்கை வெளிப்படுத்துவதற்காகப் போர்முறை ஏற்படவில்லை. குடிமக்களிடையே வெளிக்காட்ட வேண்டிய அவசியமில்லாத சிறு குறிப்பாகத்தான் மனிதனின் சண்டையிடும் மனப்பாங்கு அமைந்துளது. அது நிறுவனப் படுத்தப்பெறும்பொழுது, முதலில் ஏற்பட்ட அடிப்படை உணர்ச்சி சம்பந்தமில்லாத வேறுபல வழிகளில் திருப்பப்பட்டு உருவகப் படுத்தப்பெறுகிறது. சண்டையிடும் மனப்பாங்கு, வழக்கம் என்ற பந்தைத் தொடுவதுபோன்ற உணர்ச்சியே ஆகும். அதைத் தொடாமலும் நிறுத்திக்கொள்ளலாம்.

பண்பாட்டுமுறைகளை அப்படி நாம் பார்க்கும்போது நாம் இப்பொழுது நமது மரபுவழி நிறுவனங்களை உயர்த்திப்பேசும் பல வாதங்கள் மாற்றியமைக்கப்படவேண்டியவை எனப் புலப் படும். இந்த மரபுவழி நிறுவனங்களில்லாமல் மனிதன் செயல்பட முடியாது என்பதை அடிப்படையாகக்கொண்டே இந்த வாதங் கள் எழுகின்றன. உடைமைகளைச் சொந்தங்கொள்ளுகிற வகையில் நம்மிடையே எழுகின்ற பொருளாதார ஊக்கங்கள் போலத் தனிப்பட்ட குணப்பாங்குகள்கூட இதேபோன்று மதிப் பிடப்பெறுகின்றன. இது மிகவும் குறிப்பிடத்தக்க தனிப்பட்ட நோக்கமாகும். நமது தலைமுறையிலேயே இவை மிகவும் மாற்றப்படுகின்றன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எதுவாயிருப்பினும் உயிரியல்முறையில் வாழ்வதற்கான மதிப்புகள் போன்று எடுத்துக்கொண்டு நாம் மேலும் இதைக் குழப்பவேண்டாம். தன்னைத்தானே காத்துக்கொள்ளல் என்பது

நமது நாகரிகம் குறிக்கோளாகக்கொண்ட'ஒன்ருகும். வளர்கின்ற தொழில்முறைகளில் இருந்ததுபோன்ற இந்த நோக்கம் இனி இல்லாமல் நமது பொருளாதாரத்துறையின் அமைப்பு மாறுபட்டால், மாறுபட்ட பொருளாதார அமைப்புகளுக்கேற்றவாறு வேறுபல நோக்கங்கள் ஒத்திருக்கும். ஒவ்வொரு பண்பாடும், ஒவ்வொரு காலமும் சாத்தியமான பல நோக்கங்களிலிருந்து சில வற்றைமட்டும் எடுத்துக் கையாளுகின்றன. இப்படி ஏற்படும் மாறுபாடுகள் அமைதியின்மையையும் பல இழப்புக்களேயும் ஏற்படுத்தலாம். ஆனல், இக் கஷ்டங்கள் மாறுபாட்டினுலே ஏற்படுகின்றனவேயன்றி, நமது தலைமுறை மனித வாழ்வுக்குத் தகுந்த ஒரே நோக்கத்தைக் கண்டுபிடித்துவிட்டது என்பதால் அல்ல. எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மாறுபாடு என்பது தவிர்க்கமுடியாதது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வழக்கங்களில் சிறு மாறுபாடுகளைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை. மனிதன் விரும்பாத, கற்பனைகூடச் செய்யாத அளவில் நாகரிகம் மாறுபட்டு நன்ருகவும் இயங்கலாம். விவாகரத்துக்கள் அதிகமாவது, நகரங்களிலே மதச் சார்பற்ற தன்மை வளர்ந்து வருவது, ஆண் பெண் நெருங்கிப் பழகும் விருந்துகள் அதிகமாக நடப்பது, இன்னும் இதுமாதிரி எத்தனையோ சிறு மாற்றங்கள் இன்று இழித்துப் பேசும் சந்தர்ப்பங்களாக இருப்பினும், சிறிதே மாறுபட்ட ஒரு பண்பாட்டுமுறையில் உடனே ஏற்றுக்கொள்ளப் படலாம். மற்றத் தலைமுறைகளில் பழைய முறைகளுக்கிருந்த மதிப்பும் முக்கியத்துவமும் இவைகளுக்கும் மரபுவழியே ஏற்படலாம்.

உண்மை யாதெனில், சாத்தியமான மனித நிறுவனங்களும் நோக்கங்களும் பண்பாடு எளிதாயிருப்பினும், சிக்கலானதாக இருப்பினும் மிகவும் அதிகமானவை. அவைகளின் மிகவும் மாறுபட்ட தன்மையைப் பொறுத்துக்கொள்வதுதான் அறிவுடைமையாகும். ஒரு பண்பாட்டினுல் வளர்க்கப்பட்டு அதன் முறைகளின்படி வாழ்ந்தால்தான் ஒரு மனிதனுல் அவன் பண்பாட்டிலே முழுமையாகப் பங்குகொள்ளமுடியும். ஆனல், தன் பண்பாட்டில் அவன் காணுகின்ற முக்கியத்துவத்தைப்போலவே மற்றவரும் அவரவர்கள் பண்பாட்டிலே காணுகின்றனர் என்று அறிய வேண்டும்.

II

வாழ்வின் பல அமிசங்களைச் சமூகங்கள் விரிவாக்கிவிடுவதோ அல்லது ஒதுக்கிவிடுவதோ காரணமாகமட்டும் பண்பாடுகள் பல்

வகைப்பட்டிருக்கவில்லை. பண்பாட்டுக் குணப்பாங்குகள் ஒன்றுக்கொன்று சிக்கலாகப் பிணைந்துவிடுவதாலும் அப்படி ஏற்பட்டுவிடுகின்றன. மரபு நிறுவனங்கள் இறுதியில் அடையும்நிலை, முதலில் அதற்கான மனித உணர்ச்சியைவிட்டு வெகுதூரம் மாறுபட்டுவிடுவதைக் கவனித்தோம். நிறுவனம் இறுதியில் அடைகின்றநிலை, அந்தக் குணப்பாங்கானது, பல துறைகளிலேற்பட்ட அனுபவங்களின் குணப்பாங்குகளோடு ஒன்றிவிடும் தன்மையைப் பொறுத்திருக்கிறது.

ஒரு மக்கள்கூட்டத்திடையே மதசம்பந்தமான நம்பிக்கைகளால் நிறைந்த, விரிவாகப் பரவியிருக்கும் ஒரு குணப்பாங்கு அவர்களுடைய மதத்தின் முக்கிய அமிசமாக இயங்கலாம். அதே குணப்பாங்கு வேறோர் இடத்தில் முற்றிலும் பொருளாதார மாற்றுகளாக இருந்து அவர்களுடைய நாணய சம்பந்தமான ஏற்பாடுகளின் அமிசமாக இருக்கலாம். இப்படி இருப்பதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று சரிசெய்துகொள்ளும் பண்புகளும் அடிக்கடி இயல்புக்கு மாறுக உள்ளன. குணப்பாங்கின் இயல்பானது, அது இணைந்திருக்கும் பல விவரங்களுக்கொப்பப் பல இடங்களில் வெவ்வேருக இருக்கும்.

இம் முறையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டியது மிக அவசியம். இல்லாவிட்டால் குணப்பாங்குகள் ஆங்காங்கே இணைவதால் எற்படும் முடிவுகளைக்கொண்டு பொதுவான சில சமூகவியல் விதிகளை உண்டாக்கிவிடுவோம். அன்றியும் இப்படி இணைவது எங்கும் நடக்கும் என்று தவருகக்கொண்டுவிடலாம். ஐரோப்பாவில் உருவாக்கத்தக்க நளினக் கலைகள் (Plastic art) இடைக்காலத்தில் மதசம்பந்தமான ஈடுபாடுகளையே நோக்கங்களாகக்கொண்டிருந்தன. அந்தக் காலத்து அடிப்படை நோக்கங்களாகிய மதசம்பந்தமான காட்சிகளையும், கொள்கைகளையுமே அக் கலை வளர்த்தது. மதசம்பந்தமான ஈடுபாடு இல்லாமல் இடைக்காலக் கலையானது வெறும் அழகு செய்யும்வகையில் இருந்திருந்தால் தற்கால ஐரோப்பியக் கலைச் சுவை முற்றிலும் வேறுபட்டிருக்கும்.

சரித்திரவாயிலாகக் காணும்பொழுது கலைவளர்ச்சி பெரும்பாலும் மதசம்பந்தமான நோக்கங்களிலிருந்தும் பயன்களிலிருந்தும் தனித்தே இருந்திருக்கிறது. மதம், கலை இரண்டும் அதிக வளர்ச்சியுற்றிருந்தாலும் அவைகள் ஒன்றுக்கொன்று புறம்பாக இருந்திருக்கலாம். எந்தப் பண்பாட்டிலுள்ள கலைஞனும் மதிக்கத்தக்கவாறு, யுனைடெட் ஸ்டேட்ஸின் தென்மேற்குப் பகுதியிலுள்ள ப்யூப்லோ மக்களின் மண்பாண்டத் தொழிலும் நெசவுத்

தொழிலும் இருந்தன. ஆனால், அவர்களது பூசாரிகள் எடுத்துச் செல்கிற அல்லது தொழுகைபீடத்தின்மேல் வைக்கிற தூய மண்பாண்டங்கள் மிகவும் செப்பமற்றவைகளாகவே இருக்கின்றன. தென்மேற்குப் பகுதியின் மதசம்பந்தமான பொருள்களைக் காட்சிசாலைகள் மரபுக்குத்தக்க வேலைப்பாடுகள் இல்லாதவை என்று வெளியே எறிந்துவிடுவது உண்டு. ஸுனி இந்தியர்கள் 'நாம் அங்கே ஒரு தவளையைப் போடவேண்டும்' என்று, மத சம்பந்தமான அவசரங்களுக்குக் கலை தேவையில்லை என்பதைக் குறிக்கும்வகையில் சொல்லுகின்றனர். ப்யூப்லோ மக்கள் இப்படி மதத்தையும், கலையையும் பிரித்திருப்பது தனிப்பட்ட ஒரு குணப்பாங்கல்ல. வேறுவழியில் நோக்கங்களைக்கொண்டிருந்தாலும் தென் அமெரிக்கப் பழங்குடிகளும், ஸைபீரியாவின் பழங்குடிகளும் இதேபோன்று பிரித்துவைத்திருந்தனர். மதசம்பந்தமான விஷயங்களுக்கு அவர்கள் தங்கள் கலைத்திறனைப் பயன்படுத்துவதில்லை. ஆகையால், நாம் ஓர் இடத்திலே முக்கிய அமிசமான மதத்தில் கலைக்கான மூலங்களைத் தேடுவதைவிட்டு, கலையும் மதமும் எவ்வளவு ஒன்றுக்கொன்று ஊடுருவி யிருக்கின்றன என்பதையும், அப்படி ஒன்றி இணைவதால் மதத்திற்கும் கலைக்கும் ஏற்படும் விளைவுகளையும்பற்றி ஆராயவேண்டும்.

பொருளாதாரம், இன உறவு, நாடோடிக் கதைகள், உடைமைகளால் உருவாகும் பண்பாடு, மதம் ஆகிய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் இப்படி வேறுபட்ட அனுபவத்துறைகளின் குணப்பாங்குகள் இணைந்து அதனால் இணைகின்ற இரண்டு குணப்பாங்குகளும் மாறுதலடைவதைக்காணலாம். வட அமெரிக்க இந்தியரின் விரிவாகப் பரவியிருக்கும் மதசம்பந்தமான பல குணப்பாங்குகளில் ஒன்றைக்கொண்டு இதை விரிவாக விளக்கலாம். தென்மேற்கு ப்யூப்லோ மக்களைத்தவிர, மற்ற எல்லாப் பண்பாடுகளிலும் ஒரு கனவின்மூலமோ அல்லது தோற்றத்தின்மூலமோ இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியானது அடையப்பெற்றது. இயற்கைக்கப்பாற்பட்டவைகளுடன் நேரடித் தொடர்புகொள்வதன் மூலம் வாழ்வின் வெற்றிகள் கிட்டுகின்றன என்று அவர்கள் நம்பினர். ஒவ்வொரு மனிதனின் தோற்றமும், அவனுக்கு ஆயுள் முழுவதும் சக்தியை அளித்தது. சில மக்களிடையே ஒருவன் மேன்மேலும் தோற்றங்களை நாடிச்சென்று தனக்கும் ஆவிகளுக்கும் உள்ள தொடர்பைப் புதுப்பித்துக்கொண்டேயிருந்தான். ஒரு விலங்கோ, விண்மீனோ, செடியோ, இயற்கைக்கப்பாற்பட்ட ஒன்றோ அவனால் காணப்பட்டுவிட்டால் அவைகள் அவனைத் தங்கள் பாதுகாப்பிலிருப்பவனாகக்கொண்டுவிடுகின்றன. தேவைப்படும்போது அவன் அவைகளை அழைக்கலாம். தோற்றத்தில்

வந்த ஆதரவாளனுக்காக அவன் பரிசுகள் கொடுப்பதுபோன்று கடமைகளைச் செய்யவேண்டும். இதற்குப் பதிலாக ஆவி, தோற்றத்தின்போது அளித்த உறுதிமொழியின்படி சில குறிப்பிட்ட சக்திகளை அவனுக்கு அளிக்கவேண்டும்.

வட அமெரிக்காவின் ஒவ்வொரு பெரிய பகுதியிலும் இந்த ஆவி ஆதரவாளரைப்பற்றிய இயல்பு, பண்பாட்டின் மற்றக் குணப்பாங்குகளோடு இணைவதையொட்டி ஆங்காங்கே மாறுபட்டிருந்தது. பிரிட்டிஷ் கொலம்பியாவின் பீடபூமிகளிலே அது குமரப்பருவத்திற்கான சடங்குகளோடு இணைந்திருந்ததை நாம் கண்டோம். இம் மக்களில் ஆண்களும் பெண்களும் குமரப் பருவத்தின்போது மாயாஜாலப் பயிற்சிபெறுவதற்காக மலைகளுக்குச் சென்றனர். பஸிபிக் கடற்கரையோரமாகப் பூப்புச்சடங்கு முறைகள் மிகவும் பரவியிருந்தன. இங்குப் பெரும்பாலும் ஆவி ஆதரவாளர்போன்ற பழக்கங்களோடு அவை இணைந்திருக்கவில்லை. ஆனால், பிரிட்டிஷ் கொலம்பியாவில் அவை இணைந்திருந்தன. ஆண்களுக்கான குமரப்பருவ மாயாஜாலப் பயிற்சியின் உச்சநிலையில் ஆதரவாளனை ஆவி அந்த யுவர்களுக்கு வாழ்வின் தொழிலைப் பரிசுகள்மூலம் அறிவுறுத்தியது. இயற்கைக்கப்பாற்பட்ட தோற்றமளிப்பவர்களைப் பொறுத்தே ஒருவன் போர்வீரனாகவோ, தெய்வத்தன்மைபெற்றவனாகவோ, வேட்டைக்காரனாகவோ, அல்லது சூதாடுபவனாகவோ ஆகிறான். பெண்களும், தங்கள் வீட்டுவேலை சம்பந்தமான ஆதரவாளரான ஆவிகளைக் கண்டனர். இந்தப் பகுதியை நன்றாய் அறிந்த மானிடவியல் ஆராய்ச்சியாளர்கள், பூப்புச்சடங்குகள்மூலமே அமெரிக்க இந்தியர்களின் இத் தோற்றத்தைப்பற்றிய அமிசம் உருவாயிற்று என்று சொல்லுமளவுக்கு இம் மக்களிடத்தில் குமரப் பருவத்திற்கான சடங்குகளில் ஆதரவுதரும் ஆவிகளை நாடிச் செல்லும் அனுபவம் மாறுபட்டிருக்கிறது. ஆனால், அந்த இரண்டும் முறைவழியே சம்பந்தப்பட்டவைகளல்ல. அவைகள் ஆங்காங்கு இணைந்தன. இப்படி இணையும்பொழுது இரண்டு குணப்பாங்குகளும் தனிப்பட்ட இயல்புகளைப் பெறுகின்றன.

கண்டத்தின் மற்றப் பகுதிகளில் பூப்படையும்போது இப்படிப்பட்ட ஆதரவுதரும் ஆவிகளை நாடுவதில்லை. மேலும், மக்களின் எல்லா யுவர்களும் இவைகளை நாடுவதில்லை. ஆகையினால், எங்கேயாவது இவ் வழக்கம் இருந்தாலும் அது பூப்புச்சடங்குகளோடு எவ்விதத் தொடர்புங்கொண்டதாக இல்லை. தெற்கத்திய சமவெளிகளில் முதிர்ந்த ஆண்கள்மட்டுமே இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறவேண்டும். பூப்புச்சடங்கிற்கு வேறுபட்ட

ஒரு குணப்பாங்கோடு இந்தத் தோற்றஅமிசம் இணைந்திருக்கிறது. ஓஸேஜ் (Osage) என்ற மக்கள் தாய்வழியைப் புறக்கணித்துத் தகப்பன்வழிப் பரம்பரையையே அனுசரிக்கும் உறவு முறைக் கூட்டங்களாக அமைந்துள்ளனர். இப் பிரிவுக்கூட்டங்கள், இயற்கைக்கப்பாற்பட்ட வாழ்த்துக்களை ஒரு பொதுப் பரம்பரையாகக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு பிரிவின் கதையிலும், எப்படி அதன் மூதாதை, தோற்றத்தை நாடி, அவர்கள் எடுத்துக்கொண்ட பெயருக்கான விலங்கினுல் ஆசிகூறப்பட்டான் என்பது தெளிவாக்கப்படுகிறது. மஸ்ஸல் (Mussel) பிரிவின் மூதாதை, இயற்கைக்கப்பாற்பட்ட ஆசிகளைப்பெற, கண்களில் நீர்மல்க ஏழு முறைகள் தோற்றத்தை நாடிச்சென்ருன். இறுதியாக அவன் மட்டியைச் சந்தித்து அதனிடம்,

'ஓ மூதாதையே,

சிறுவர்கள் தங்கள் உடம்பை வளர்க்க ஒன்றுமில்லாமல் இருக்கிருர்கள்'

என்று சொன்னுன். அதற்கு அந்த மட்டி அவனைப் பார்த்து,

'சிறுவர்கள் அவர்கள் உடம்பை வளர்க்க ஒன்றுமில்லை என்று நீ உரைக்கிருய்.

அவர்கள் என்னைக்கொண்டு உடம்பை வளர்க்கட்டும்.
அவர்கள் என்னைக்கொண்டு உடம்பை வளர்த்தால்,
அவர்கள் கிழ வயதுவரை வாழ்வார்கள்.
என்மேல் (ஓட்டின்மேல்) உள்ள சுருக்கங்களைப் பார்.
கிழ வயதுவரை வாழ நான் அவைகளைப் பெற்றிருக்கிறேன்.
சிறுவர்கள் என்னைக்கொண்டு உடம்பை வளர்த்தால்,
அவர்கள் எப்பொழுதும் கிழ வயதுக்குரிய அறிகுறிகளைத்
தங்கள் தோலில் காண்பார்கள்.
ஆற்றின் (வாழ்வின்) ஏழு திருப்பங்களை
நான் வெற்றியோடு கடந்துசெல்கிறேன்.
என்னுடைய யாத்திரையில் நான் கொண்டுள்ள பாதையைக்
கடவுள்களாலும் அறியமுடியாது.
சிறுவர்கள் என்னைக்கொண்டு உடம்பை வளர்த்தால்,
கடவுள்கள் உட்பட எவராலும் அவர்களின் பாதையைக்
காணமுடியாது' என்று பதில் சொல்லிற்று.

இம் மக்களிடையே தோற்றத்தை நாடிச்செல்வதின் அமிசங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனுல், பிரிவின் முதல்-மூதாதை

தான் அதைப்பெற்றுன். அதன் ஆசிகள் இரத்தத் தொடர்புள்ள பரம்பரைவழியே வாரிசாக வந்தன.

ஒஸேஜ் மக்களின் இந்தநிலை உலகத்தின் குலக்குறி (Totem) வழக்கத்தை நன்கு காட்டுகிறது. இங்கு மூதாதையை மதமுறையில் வழிபடுதலும், சமூக அமைப்பும் ஒருங்கே இணைந்திருக்கின்றன. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இக் குலக்குறி வழக்கம் வர்ணிக்கப்பட்டுள்ளது. மானிடவியல் ஆராய்ச்சியாளர்கள் 'தனிப்பட்டவனின் குலக்குறி' அல்லது ஆதரவுதரும் ஆவியினின்றே ஒரு பிரிவின் குலக்குறி உண்டாயிற்று என விவாதிக்கின்றனர். ஆனால், இது பிரிட்டிஷ் கொலம்பியா பீடபூமிகளில் குமரப்பருவத்திற்கான சடங்குகளும் தோற்றத்தை நாடிச்செல்வதும் எப்படி இணைந்திருந்தனவோ, அவ்விதமே ஒரு பிரிவின் பரம்பரை உரிமைகளுக்கான குணப்பாங்கோடு இணைந்துவிட்ட ஒன்றாகும். இந்த இணைப்பு மிகவும் வலுவடைந்து, தோற்றங்கள், தாமே ஒருவனுக்குச் சக்திகளை வழங்க முடியாது எனக் கருதுமளவுக்கு வந்துவிட்டது. ஒரு தோற்றத்தின் ஆசிகளைப் பரம்பரை வழியாகவேதான் பெறல்வேண்டும். ஒரு மூதாதையின் அனுபவங்களையும், அவன் குலவழியினர் உரிமைகொண்டாடும் ஆசிகளையும் விவரிக்கும் நீண்ட மந்திரங்கள் ஒஸேஜ் மக்களிடம் இருந்தன.

இந்த இரண்டு இடங்களிலும் தோற்ற அமிசம்மட்டும் பூப்புச் சடங்கையோ, அல்லது பிரிவுமுறை அமைப்பையோ ஒன்றிவிட்டதால் மாறுபட்டுவிடவில்லை. குமரப்பருவச் சடங்குகளும் சமூக அமைப்பும் தோற்றத்தை நாடிச்செல்லும் குணப்பாங்கின் ஊடுருவலால் மாறிவிடுகின்றன. அவை ஒன்றுக்கொன்று சரிசமமாகக் கலந்து மாறுபடுகின்றன. தோற்றத்தினால் ஏற்படுகின்ற அமிசம், பூப்புச்சடங்குகள், பிரிவு அமைப்புமுறை, இன்னும் மற்றைய சில தோற்றமுறையோடு இணைகின்ற குணப்பாங்குகள் யாவும் பல வகையிலே கலந்து இணையப்பெறுகின்றன. இப்படிப் பல குணப்பாங்குகள் ஒன்றிக்கலந்து வெவ்வேறுவிதமாக இணைவதால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி நாம் மிகையாகச் சொல்லமுடியாது. மத சம்பந்தமான அனுபவங்கள் பூப்புச்சடங்குகளோடு இணைவதும், அல்லது அவை பிரிவுமுறை சமூக அமைப்புடன் இணைவதும் ஆகிய நாம் கண்ட இரண்டு விதத்திலும், தனிமனிதன் தோற்றங்களின்மூலம், தான் எடுத்துக்கொண்ட எக் காரியத்திலும் வெற்றி காணலாம். எக்காரியத்திலும் வெற்றியடைதல் ஒரு தனிமனிதன் தோற்ற அனுபவத்தின்மேல்கொண்ட உரிமையைப் பொறுத்ததாகும். ஒரு வெற்றியுள்ள தெய்வத்தன்மை பெற்றவனைப்

போலவே, வெற்றியுடன் சூதாடுகிறவனும், வெற்றியுடன் வேட்டையாடுபவனும் தங்கள் சக்திகளைத் தோற்றத்திலிருந்தே பெற்றனர். இயற்கைக்கப்பாற்பட்ட ஒரு ஆதரவாளரை அடைய முடியாத ஒருவனுக்கு முன்னேற்றத்திற்கான பாதைகள் எல்லாமே அடைபட்டுவிட்டதாக அவர்கள் கொள்கைகளில் கொண்டிருந்தனர்.

கலிபோர்னியாவில் தெய்வத்தன்மைபெற்றவர் தொழில்செய்வதற்கான அனுமதியாகத் தோற்றங்கள் கருதப்பெற்றன, அவை ஒருவனைத் தனிப்பட்ட இயல்பு படைத்தவனுகக் குறித்தன. ஆகையால், இந்த அனுபவத்தின் தாறுமாருன சில ஈடுபாடுகள் இங்கே வளர்ந்தன. பட்டினிகிடத்தல், தன்னைத் துன்புறுத்திக் கொள்ளல், அல்லது தனித்திருத்தல்மூலம் இங்குத் தோற்றங்களை நாடுவதில்லை. சமுதாயத்திலே உறுதியற்றவர், குறிப்பாகப் பெண்கள், அடைகின்ற ஒரு சமாதிநிலையை அது குறிக்கிறது. ஷாஸ்தா (Shasta) மக்களிடையே பெண்கள்மட்டுமே இப்படிப் பட்ட அனுபவத்தை அடைவது வழக்கமாக இருந்தது. இதற்குத் தேவைப்படும் அனுபவம் ஒரு வலிப்புபோல இருக்கும். முதலில் ஒரு கனவின்மூலம் தயார்செய்யப்பட்டுப் பிறகு வலிப்புகளால் தெய்வத்தன்மை அடைவார்கள். அவள் செயலற்று ஒரு கட்டை போலத் தரையில் விழுந்துவிடுவாள். அவள் நினைவுபெற்று எழும்போது அவள் வாயினின்றும் இரத்தம் கசியும். தெய்வத்தன்மை பெற்றபிறகு பல ஆண்டுகளுக்கு அவள் செய்யும் சடங்குகள், அவள் வலிப்புகளை அடையக்கூடியவள் என்று வெளிக்காட்டிக்கொள்வதற்காகவே செய்யப்பெறுகின்றன; அவள் உயிர் காப்பாற்றப்படுவதற்காகச் செய்யப்பெறும் சிகிச்சையாகக் கருதப்பெறுகிறது. ஷாஸ்தாமக்களைப்போன்ற பழங்குடிகளில் தோற்றங்கள் மட்டும் இப்படி வலிப்புகள்போல் மாற்றமடையவில்லை; தெய்வத்தன்மைபெறுகின்றவர் குணுதிசயங்கள்கூட சமாதிநிலையின் இயல்பால் மாறுபட்டுவிட்டன. சமுதாயத்திலே அவர்கள் உறுதியற்ற நபர்களாகவே இருந்தனர். இம் மக்களில் தெய்வத்தன்மைபெற்றவர்களிடையே நடக்கும் போட்டிகளில் நடனம் முக்கியமானதாகக் கருதப்பெற்றது. மற்றவர்கள் தோற்று விழும்வரை இந் நடனத்தால் ஏற்படும் வலிப்புகளைத் தாங்கிக்கொண்டிருப்பவரே வெற்றிபெற்றவராகக் கருதப்பெற்றனர். தோற்ற அனுபவமும்தெய்வத்தன்மையுற்றிருப்பதுவும் நெருங்கியதொடர்பு கொண்டதாலே இரண்டும் மாறுபட்டுவிட்டன. தோற்ற அனுபவம் பூப்புச்சடங்குடனே அல்லது பிரிவுமுறை அமைப்புடனே ஒன்றிவிடுவதுபோன்று, இரு குணப்பாங்குகள் இணைவதால் நடத்தையின் இரு துறைகளுமே பாதிக்கப்படுகின்றன.

இதைப்போன்றே நம் நாகரிகத்திலே மதம்வேறு, மணம் வேறு என்பது சரித்திரவாயிலாகத் தெரிகிறது. ஆயினும், பல நூற்றுண்டுகளாகத் திருமணத்தின் மதசம்பந்தமான தூய்மை யானது இன உறவையும் மதத்தையும் பாதித்திருக்கிறது. திரு மணத்தின் தனித்தன்மை அந்த நூற்றுண்டுகளில் தொடர்பில்லாத இரண்டு குணப்பாங்குகள் இணைந்ததாலேயே ஏற்பட்டது. மரபு வழியே செல்வம் கைமாறுவதற்கு ஒரு வழியாகவே திருமணம் இருந்துவந்தது. திருமணம் பொருளாதார மாற்றுக்களோடு இணைந்திருக்கும் சில பண்பாடுகளில், மணம்செய்துகொள்வது இன உறவுக்காகவும் இனப்பெருக்கத்திற்காகவும் ஏற்பட்ட ஒன்று என்பதே மறைந்துவிடுகிறது. திருமணமானது அது இணைந்துள்ள மற்றக் குணப்பாங்குகளின் தொடர்பைக்கொண்டு அறிந்துகொள்ளப்படவேண்டும். அதல்லாமல், ஒரேவித எண் ணங்களைக்கொண்டு இரண்டு இடங்களிலும் திருமணங்கள் ஒரே மாதிரியானவை எனக்கொள்வது தவருகும். ஒரு முடிவான குணப்பாங்கை ஏற்படுத்துவதற்குப் பயன்பட்ட மற்ற விவரங்களை யெல்லாம் நாம் கவனிக்கவேண்டும்.

நமது பண்பாட்டு மரபுரிமைக் குணப்பாங்குகளை அதன் பல பகுதிகளாகப் பிரித்து ஆராயும் திறன் நமக்குத் தேவை. இவ்வாறு நாம் பிரித்து ஆராயும் திறன்பெற்றிருந்தால், நமது சாதாரண நடத்தையின் சிக்கலான விவரம்கூட, நாம் சமூக அமைப்பைப் பற்றி விவாதிக்கும்போது தெளிவாகிவிடும். நமது சமூகத்தினுல் ஏற்படுகிற தப்பெண்ணங்களால் உயிரியல்முறையில் உள்ள இனவேறுபாடுகளை ஆங்கிலோ—ஸாக்ஸன் (Anglo-Saxon) மக்க ளிடையே காணமுடியாவண்ணம் அவர்களுடைய இனவேறு பாடுகளும் கௌரவ உரிமைகளும் ஒன்றியிருக்கின்றன. ஆங் கிலோ—ஸாக்ஸன், லாட்டின் (Latin) மக்கள் ஆகியவர்போன்ற மிக நெருங்கிய தொடர்புகொண்டவர்களிடையேகூட இந்தத் தப்பெண்ணங்கள் வெவ்வேறு முறையாக இருக்கின்றன. இத ஞல் ஸ்பானியர் ஆதிக்கத்தில் இருக்கும் நாடுகளிலும் இனவேறு பாடுகள் ஒரேமாதிரியான சமூக முக்கியத்துவத்தைப் பெற்றிருக்க வில்லை. சரித்திரவாயிலாகக் கிறிஸ்தவ மதமும் பெண்களின் நிலையும் தொடர்புகொண்ட குணப்பாங்குகளாகும். வெவ்வேறு காலங்களில் அவையிரண்டும் வெவ்வேறுவிதமாக இணைந்திருந் தன. கிறிஸ்தவ நாடுகளில் இன்றையப் பெண்களின் உயர்ந்த நிலை கிறிஸ்தவ மதத்தின் விளைவேயாகும். அதுபோன்றே பெண்களை மிகவும் அபாயகரமான அவாவூட்டுகிறவர்களாக ஓரிஜன் (Origen's) மதத்திலே காண்கிருேம். குணப் பாங்கு களுக்கு இவ்விதம் விளக்கம் தருவதும், அவ் விளக்கங்கள் மறை

வதும் சர்வசகஜமாக இருக்கலாம். குணப்பாங்குகளின் இயல்பையும் அவை இணைவதையும், அவைகளின் இறுதிநிலையையும் பற்றியே பெரும்பாலும் பண்பாட்டுச் சரித்திரம் சொல்லுகிறது. ஒரு சிக்கலான குணப்பாங்கில் நாம் எளிதாகக்காணும் இன வழித்தொடர்பும், அது இணைந்து கலந்திருக்கிற அமைப்பைக் கலைத்துவிடுதல்பற்றி நாம்கொண்டுள்ள அச்சமும் தேவையற்றது. சாத்தியமான பண்பாட்டு இணைப்புகள் பல்வகைப்பட்டிருப்பது ஏராளம். இவ் வேறுபாட்டால் அடிப்படைகளிலிருந்து சிறந்த சமூக அமைப்புகளைக் கண்டபடி ஏற்படுத்தலாம்.

3. பண்பாடுகளின் இணைப்பு

பண்பாடுகள் பலவகைப்பட்டிருப்பதை முடிவற்று எழுதிக் கொண்டிருக்கலாம். சில சமூகங்களில் மனித நடத்தையின் ஒரு துறை, அது அழிந்துபோகும்வரை கவனிக்கப்படாமலே இருக் கலாம். இன்னும் சில இடங்களில் அதைப்போன்ற கற்பனையே இல்லாமல் இருக்கலாம். சில சமூகங்களிலே இதற்கு நேர்மாருக அது மனிதனின் ஒழுங்குமுறையான நடத்தையை முழுதும் ஆக்ர மித்துக்கொண்டும் இருக்கலாம். அதன் வழியிலேயே மற்ற, வேருன சந்தர்ப்பங்களும் கையாளப்படவேண்டியிருக்கலாம். சரித்திரவழியாகத் தனித்தனியாக இருந்து, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத குணப்பாங்குகள் இணைந்து ஒன்றி மறுபடி பிரிக்கமுடியாத நிலைமையையும் அடையலாம். குணப்பாங்கு களைத் தனியே அறியாத பல இடங்களில், இல்லாத முறையில் இணைந்துவிட்ட குணப்பாங்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தலாம். பல பண்பாடுகளில், நடத்தையின் எத்துறையிலேயும் உள்ள தகுதிநிலைகள் நேர்நிலையிலிருந்து (Positive) எதிர்மறைக் (Nega-tive) கோடிவரை பரவியிருக்கலாம். உயிரை வாங்குவது எல்லா மக்களும் வெறுக்கும் ஒரு செய்கை என நாம் எண்ணலாம். இதற்கு எதிரிடையாக அயல்நாட்டுத் தொடர்புகள் துண்டிக்கப் பட்ட இரு நாடுகளுக்கிடையே ஒருவன் மற்ருெருவனைக் கொன்றுவிட்டால் அவன் செய்தது குற்றமாகாது. அதுபோன்றே சில இடங்களில் ஒருவன் தன் முதல் இரண்டு குழந்தைகளைக் கொன்றுவிடுவது வழக்கமாக இருக்கிறது. வேறு சில இடங் களில் கணவன் மனைவியின் உயிரின்மீது அதிகாரம் செலுத்த லாம்; அல்லது கிழ வயது அடைவதற்குமுன் தன் பெற்ருேரைக் கொல்லவேண்டியது குழந்தையின் கடமையாகும். கோழியைத் திருடிவிட்டதற்காக ஒருவன் கொல்லப்படலாம்; அல்லது மேற் பற்கள் முதலில் தோன்றியுள்ள குழந்தை கொல்லப்படலாம். அல்லது புதன்கிழமையன்று பிறந்துவிட்டதற்காகவும் கொல்லப்

படலாம். சில மக்களிடையே எதிர்பாராத சாவை விளைவித்து விட்ட ஒருவன் துன்புறுத்தப்படலாம். வேறுசில மக்கள் அதைப் பொருட்படுத்தவேமாட்டார்கள். குடிகளிடையே சாதாரண மாக ஏற்படக்கூடிய சிறு கஷ்டங்களுக்குத் தற்கொலைமட்டுமே வழியெனக்கொண்டு சில மக்கள் அதை எளிதாகப் பாவிக் கின்றனர். அதையே ஒரு அறிவாளி செய்யத்தக்க, உயர்ந்த, கண்ணியமான காரியமாகவும் வேறுசிலர் நினைக்கலாம். அதைப் பற்றிச் சொன்னாலே நகைக்கின்ற, அதை மனிதன் செய்யக் கூடிய ஒன்று என்று எண்ணிப்பார்க்கமுடியாத மக்களும் இருக் கின்றனர். அதையே சட்டத்தின்மூலம் தண்டனை விதிக்கக் கூடியதாகவும், கடவுளுக்கு எதிராகச்செய்யப்படும் பாவமாகவும் சிலர் எண்ணுகின்றனர்.

உலகத்திலே உள்ள பல்வேறு வழக்கங்களை, நாம் வேறு வழியின்றிக் குறித்துக்கொள்ளவேண்டியதில்லை. தன்னைத் துன் புறுத்திக்கொள்ளல், தலைவேட்டை, திருமணத்திற்கு முன்னால் இருக்கவேண்டிய கன்னித்தன்மை, குமரப்பருவத்திலே இருக்கிற சுதந்திரம் ஆகியவை வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் அவை முற்றிலும்தொடர்பற்ற அமிசங்களாக இல்லை. அவைகள் சில இடங்களில் இருப்பதும், சில இடங்களில் இல்லாதிருப்பதும் பற்றி நாம் வியக்கத்தேவையில்லை. தற்கொலையைப்பற்றியோ அல்லது பிறரைக் கொல்வதுபற்றியோ உள்ள தடைகள், ஒரு தனித் தகுதிநிலையைப்பற்றி இல்லாவிட்டாலும், தற்செயலாக ஏற் பட்டவை அல்ல. ஒரு பண்பாட்டு நடத்தையின் முக்கியத்துவ மானது அதை நாம் ஆங்காங்கே உள்ளதாகவும், மனிதனால் ஏற் படுத்தப்பட்டு மிகவும் மாறக்கூடிய தன்மையுடையதாகவும், புரிந்துகொண்டுவிட்டால் அதோடு முடிந்துவிடாது. அது இணைந்திருக்க முற்படுகிறது. எண்ணத்திலும் செயலிலும் கிட் டத்தட்ட ஒரேமாதிரியான முறையைத்தான் பண்பாடும் ஒரு தனி மனிதன்போல் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் மற் றையச் சமூகங்களிலில்லாத பல நோக்கங்கள் தோன்றக்கூடும். இவற்றிற்காக ஒவ்வொரு மக்களும் தங்கள் அனுபவங்களை மேலும்மேலும் உறுதிப்படுத்திக்கொள்கின்றனர். நடத்தையின் தொடர்பில்லா பலவிவரங்கள் இந்தநோக்கங்களையொட்டியே ஒரு உருவகத்தை அடைகின்றன. நன்றாய் இணைந்த ஒரு பண் பாட்டால் எடுத்துக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தப்படாத விவ ரங்கள் அதன் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கேற்றவாறு மாற்றங் களை அடைகின்றன. அந்தச் சமூகத்தின் உணர்ச்சி, அறிவு ஆகிய மூல ஊற்றுக்களைப் புரிந்துகொண்டால் இந்தமாதிரி விவ ரங்கள் அடைகின்ற மாறுபாட்டை நாம் அறிந்துகொள்ளலாம்.

பண்பாடு ஒரு அமைப்புப்பெறுவதை முக்கியமற்றதாகக் கருதிக் கவனிக்காமலிருக்கமுடியாது. பல துறைகளிலே தற்கால விஞ்ஞானம் வலியுறுத்துகிறமாதிரி, அதன் பல விவரங்களின் கூட்டுத்தொகையாக மட்டுமன்றி, அதுவே தனித்த ஒரு முழுமை பெற்றதாக இயங்குகிறது. ஒரு புது அமிசத்தை ஏற்படுத்துகிற பல விவரங்களின் அமைப்பும் தொடர்புகளும் உருவாக்கியதாக அது இயங்குகிறது. வெடியுப்பு, கந்தகம், கரி ஆகிய மூன்றின் கூட்டுத்தொகை வெடிமருந்தாக ஆகிவிடாது. இயற்கையில் இவைகளின் தனித்தனித் தன்மையைப்பற்றி எவ்வளவு அறிந்திருந்தாலும் அந்த அறிவு வெடிமருந்தின் இயல்பை வெளிப்படுத்தாது. அதன் மூலப்பொருளுக்கு இல்லாத ஒரு சக்தியைக் கூட்டுப்பொருள் பெற்றிருக்கிறது. மற்றச் சேர்க்கைகளில் அந்த மூலப்பொருளுக்கு ஏற்படுகிற நடத்தையைக்காட்டிலும் முற்றிலும் மாறுபட்ட ஒரு நடத்தையைக் கூட்டுப்பொருள் பெற்றிருக்கிறது.

பண்பாடுகளும், அவைகளின் குணப்பாங்குகளின் கூட்டுத் தொகையைக்காட்டிலும் சிறந்தவை. மலைஜாதி மக்களின் திருமணம், சடங்கு நடனங்கள், பூப்பு நிறுவனங்கள் ஆகியவைகளைப் பற்றி நாம் அறிந்திருக்கலாம். ஆயினும், இந்த விவரங்களைத் தன் நோக்கத்திற்குப் பயன்படுத்தும் பண்பாட்டின் முழுமையை நாம் புரிந்துகொள்ளமுடியாது. இந்த நோக்கமானது சுற்றியுள்ள பகுதிகளில் தான் எடுத்துக்கொள்ளக்கூடிய குணப்பாங்குகளைத் தேர்ந்தெடுத்து, தான் பயன்படுத்தமுடியாத சில குணப்பாங்குகளை வெறுத்து ஒதுக்கிவிடுகிறது. இன்னும் சில குணப்பாங்குகளைத் தன் தேவைக்கேற்றவாறு மாற்றியமைத்துவிடுகிறது. இந்த முறை தன் நினைவோடு செய்யப்பெறுவதில்லை. ஆயினும், மனிதநடத்தையின் வகைகளைப்பற்றிப் படிக்கும் போது இதைக் கவனிக்கத் தவறினால், ஒரு அறிவுத்திறனோடு கிடைக்கின்ற விளக்கம் இல்லாமற்போய்விடும்.

பண்பாடுகளின் இணைப்பு பொய்யான ஒன்றல்ல. கலையில் எப்படி ஒரு போக்கு பிறந்து நிலைக்கின்றதோ அதே முறையில் தான் இதுவும் நடக்கிறது. கோதிக் (Gothic) கட்டிடமுறை முதலில் வெளிச்சத்தையும் உயரத்தையும்பற்றி அமைந்திருந்தாலும் அதன் செய்முறைகளின்வழியே மேன்மேலும் வளர்ந்து பதின்மூன்றும் நூற்றுண்டின் தனிப்பட்ட, இணைந்த, ஒரு கலையாக விளங்கியது. அது ஒத்துவராத சில விவரங்களை ஒதுக்கித் தன் நோக்கங்களுக்காகச் சிலவற்றை மாற்றி அமைத்துப் பல புதிய விவரங்களையும் தன் போக்குப்படி கண்டுபிடித்தது. சரித்திர வாயிலாக நாம் இந்த முறையை வர்ணிக்கும்போது, அதற்கு

உயிருள்ளதுபோலவும், அதற்கு பொறுக்கி எடுக்கவும் ஒதுக்கித் தள்ளவும் வாய்ப்புகள் இருந்ததுபோலவும் பேசுகிறோம். ஆனால், இது நமது மொழியிலுள்ள கோளாறே ஆகும். அதற்குத் தனக்கென்று நோக்கங்களும், தேர்ந்தெடுக்க வாய்ப்புகளும் பெற்றிருக்கவில்லை. அது முதலில் ஆங்காங்கே உள்ள சில உருவங்களையும் செய்முறைகளையும் பெற்றிருந்து, வரவர மேன்மேலும் வெளிப்பட்டு, வலுவடைந்து, இன்னும் பல குறிப்பான தகுதிநிலைகளுடன் இணைந்து கோதிக் கட்டிடக் கலையாக வளர்ந்துநின்றது.

பெரிய கலைமுறைகளில் ஏற்பட்டதுபோன்றே பண்பாடுகளிலும் ஏற்பட்டது. உணவு, புணர்ச்சி, சண்டையிடுதல், கடவுள்களைத் தொழுதல் முதலியவற்றிற்கான பல நடத்தைகள் பண்பாடுகளில் தோன்றுகின்றவழியே தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு இணைந்த மாதிரியாக அமைகின்றன. சில பண்பாடுகள் கலையின் சில காலங்கள்போல் இணைப்புப் பெருமலே தோற்றுவிடுகின்றன. பண்பாடுகளில் பெரும்பாலானவற்றைப்பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. ஆகையால், அவைகளின் நோக்கங்களும் நமக்குப் புரிவதில்லை. ஆனால், எளிதான ஒன்றோ, சிக்கலான ஒன்றோ, எல்லாப் பண்பாடுகளுமே இதை அடைகின்றன. அப்படிப்பட்ட பண்பாடுகள் இணைந்த நடத்தையைப் பெறுவதில் வெற்றி பெற்றவையாகும். அதிசயம் என்னவென்றால் இப்படிச் சாத்தியமான உருவகங்கள் அநேகம் இருக்கலாம்.

மானிடவியல், பண்பாட்டை இணைந்த முழுமையானதாக அறிவதற்குப்பதில், பண்பாட்டின் குணப்பாங்குகளை ஆராய்வதிலேயே அதிகக் கவனம்செலுத்திவந்திருக்கிறது. முதலில் ஏற்பட்ட இன வர்ணனைகளின் இயல்புதான் இதற்குக் காரணம். பழங்குடிமக்களை நேரில்கண்ட விவரங்களை மானிடவியலார் எழுதவில்லை. பிரயாணிகளும், சமயத் தொண்டர்களும், முதலில் வந்த இன ஆராய்ச்சியாளர்களும் அளித்த கதைகளிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் விவரங்களைப் பெற்றவர்களாகவே இருந்தனர். இதன்மூலம் பற்களைத் தட்டுவதுபோன்ற பல வழக்கங்கள் எங்கெங்கே பரவியிருந்தன என்று அறியலாம். ஆனால், பல மக்களிடையே இந்தமுறைகள் பண்பாடுகளிலே பதிந்து, கருத்துச் செறிவோடு குறித்த உருவகங்களைப்பெற்ற விவரங்களை அறிய முடியாது.

தி கோல்டன் போ (The Golden Bough), மற்றும் பல மனிதஇன ஆராய்ச்சி நூல்களும் குணப்பாங்குகளை விவரமாக ஆராய்கின்றனவே தவிரப் பண்பாட்டு இணைப்பு என்ற அம்சத்தைக் கவனியாமலே இருக்கின்றன. ஆங்காங்கே பல பண்பாடுகளில் உள்ள

புணர்ச்சி அல்லது சாவுக்கான வழக்கங்களைக் கண்டபடி தேர்ந் தெடுத்துவிவரிக்கின்றன. இப்படி விவரிப்பது ஃபிஜித்தீவிலிருந்து (Fiji) வலக் கண்ணும், ஐரோப்பாவிலிருந்து இடக் கண்ணும், டையரா டெல் ஃப்யூகோவிலிருந்து (Tierra del Fuego) ஒரு காலும், டாகிதியிலிருந்து (Tahiti) மற்ருெரு காலும், பல இடங்களிலிருந்து விரல்களுங்கொண்ட ஃப்ராங்கென்ஸ்டீன் (Frankenstein) ஏற் படுத்திய பூதத்தைப் போன்றதாகும். கடந்தகாலத்திலும் நிகழ் காலத்திலும் அதுபோன்ற ஓர் உருவம் கிடையாது. இது உள மருத்துவர்கள் (Psychopathists) உளநோய்களின் குறிப்பான நடத் தையைக் கவனிக்காமல், பயன்படுத்தும் அடையாளங்களின் பட்டியல் தயார்செய்வதுபோன்று முடியும். ஓர் உளநோயாளி யின் நடத்தைக்கான குணப்பாங்கும், அவன் முழு ஆளுமையில் அது எவ்வளவுதூரம் ஈடுபட்டிருக்கிறது என்பதும், அவனது அனுபவங்களுக்கும் அதற்கும் உள்ள தொடர்பும், மிகவும் வேறு பட்டவை. உளமுறையில் நாம் அக்கறைகொண்டிருந்தால் அவ னுடைய முழு உருவத்தன்மைக்கு அந்தக் குறிப்பான அடை யாளங்கொண்டுள்ள தொடர்பை அறிந்துகொள்ளவேண்டும்.

பண்பாடுகளைப்பற்றி அறிந்துகொள்வதிலேயும் இதுபோன்ற ஒரு பொய்மை இருக்கிறது. பண்பாடுகளில் நாம் அக்கறைகொண் டிருந்தால், ஒரு குறிப்பிட்ட நடத்தையின் விவரம் அந்தப் பண் பாட்டிலே நிறுவனப்படுத்தப்பெற்ற நோக்கங்கள், உணர்ச்சிகள், மதிப்புகள் ஆகியவற்றுடன்கொண்டுள்ள தொடர்பை அறிந்து கொள்ளவேண்டும். வாழ்கின்ற ஒரு பண்பாட்டைப்பற்றி அறிந்து கொள்ள, முதல் தேவை அப் பண்பாட்டின் எண்ணங்களையும் நிறுவனங்களின் செயல்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். பண்பாடு அழிந்தபிறகு செய்யப்படும் ஆராய்ச்சிகளைக்கொண்டு அறிந்துகொள்ளமுடியாது.

பண்பாடு இயங்கும்போது அதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை மலினேவ்ஸ்கி (Malinowski) அடிக்கடி வலியுறுத்தியிருக்கிருர். உயிரோடு வாழ்கின்ற, திடமான செய லுடைய ஓர் உயிரியை (organism) அறிவதை விட்டுவிட்டு அது இறந்தபிறகு அதன் உட்கூறை அறிவதுபோன்று வழக்கமான பண்பாட்டுப்பரவலைப் படிப்பதை அவர் கண்டிக்கிருர். மெலனீஷி யாவில் (Melanesia) உள்ள ட்ரோபிரியாண்ட் (Trobriand) தீவு களிலுள்ளவர்களைப்பற்றிய முழுவிவரமும் அடங்கிய மலினேவ்ஸ்கி யின் (Melinowski) புத்தகம்தான் நன்கமைந்து முதலில் வந்த தாகும். மலினேவ்ஸ்கி (Malinowski) அவருடைய இன ஆராய்ச்சி யில் பொதுப்படையாகச் சொல்லும்போதெல்லாம், பண்பாட்டில்

குணப்பாங்குகள் வாழ்கின்ற ஒரு தன்மையைப்பெற்றுள்ளன என்றே குறிப்பிடுகிருர். பிறகு, ட்ரோபிரியாண்ட் தீவின் மக்களுடைய குணப்பாங்குகளைப் பொதுவாகச் சொல்லுகிருர். ஒருவருக்கொருவர் கொண்டுள்ள கடமைகள், மாயாஜாலத்திற்கு அங்கங்கே ஏற்பட்டிருக்கும் முக்கியத்துவம், ட்ரோபிரியாண்ட் குடும்பம் ஆகியவை பழங்குடி உலகத்திற்குத் தக்கன என்று தெரிவிக்கிருர். அவர், ஒவ்வொன்றும் அவற்றிற்கேற்ற பொருளாதார, மத, வீட்டு சம்பந்தமான செயல்களைக்கொண்டிருக்கும் பல பண்பாடுகளில் ஒன்ருக ட்ரோபிரியாண்ட் பண்பாட்டுத் தோற்றத்தை விவரிக்கவில்லை.

பண்பாட்டு நடத்தையானது, ஆங்காங்கு உள்ள பொது ஈடுபாடுகளின் அமைப்புக்கீடாகக் கொள்ளக்கூடியதன்று. மானிடவியலார், பழங்குடிப் பண்பாடு என்பதிலிருந்து பழங்குடிப் பண்பாடுகள் என்று மாற்றிக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர். இப்படி ஒருமையிலிருந்து பன்மையாகும் முக்கியத்துவம் இப்போது தோன்றத் துவங்கியிருக்கிறது.

தற்கால விஞ்ஞானத்தில் ஒவ்வொரு துறையிலேயும் முழுமையான ஒன்றினை அறிவது, அதன் தனிப்பாகங்களைத் தொடர்ந்து ஆராய்வதைவிட மிக முக்கியத்துவம்வாய்ந்தது என்பது வலியுறுத்தப்பெறுகிறது. வில்ஹெல்ம் ஸ்டெர்ன் (Wilhelm Stern) தன்னுடைய தத்துவ நூலிலும், உளவியல் நூலிலும் இதையே அடிப்படையாகக்கொண்டுள்ளார். அவர் ஒருவருடைய பிரிக்கப்படாத முழுமையை வலியுறுத்துகிருர். தன்னேக்கு உளவியல், சோதனைமுறை உளவியல் ஆகியவைகளில் உள்ள பிரிவுப் படிப்பை அவர் கண்டிக்கிருர். ஆளுமையின் முழுமையின் உருவத்தை அறிதல் அவசியம் என வற்புறுத்துகிருர். பல துறைகளில் ஸ்ட்ருக்துர் (Struktur) முறை இதையே கையாளுகிறது. கலைச்சுவைத் (aesthetics) துறையிலே இம்முறை எவ்வளவு அடிப்படை வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று வொர்ரிங்கர் (Worringer) காட்டியிருக்கிருர். கிரேக்க காலத்திலும், பைஸான்டைன் (Byzantine) காலத்திலும் நன்கு வளர்ந்த கலையின் இரு பொற்காலங்களை அவர் ஒப்பிட்டுள்ளார். அவர், கிரேக்க காலத்துக் கருத்துரை, கலையை ஒரு தனிமுறையில் விவரித்து, தரமான தகுதிநிலைகளுக்கு இணையாக வைத்திருந்தது என்றும், பைஸான்டைன் காலத்திய கலைகளை அது புரிந்துகொள்ளமுடியாது என்றும் தெரிவித்தார். ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலைகளை நோக்கி வளர்ந்துள்ளதால், ஒன்றின் தகுதிநிலைகளைக்கொண்டு மற்ருென்றை அறியமுடியாது. கிரேக்கர்கள், தங்கள் கலைகளில்,

செயல்படுவதில் தங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியை வெளிக்காட்டினுர்கள். பார்க்கின்ற உலகத்திலே தங்களுக்கிருந்த உடல் வலிமையைக் கண்டனர். பைஸான்டைன் கலையோ, புலன்களுக்கப்பாற்பட்ட ஒன்றை உருவகப்படுத்தியது. இயற்கையினின்று வேறுபட்ட நிலையைக் கருத்தாகக்கொண்டது. கலைத்திறனை மட்டுமன்றி, கலைநோக்கையும் கவனித்துத்தான் இரண்டையும் புரிந்துகொள்ளமுடியும். இரண்டுமுறைகளும் எதிரிடையானவை. இவை இரண்டும் இணைந்த கோலங்களுடையவை. ஒன்றில் இல்லாத தகுதிநிலைகளையும் உருவங்களையும் மற்ருென்று கொண்டிருந்தது.

கெஸ்டால்ட் (Gestalt) முறை உளவியல் இப்படி ஒரு முழுமையை அதனுடைய தனிப்பகுதிகளுக்கு வேருகக்கொள்வதன் அவசியத்தை எடுத்துக்கொண்டு இயங்கியது. கெஸ்டால்ட் முறை உளவியல் ஆராய்ச்சியாளர்கள், ஒரு சாதாரண புலன் உணர்ச்சியானது ஏற்படுத்துகின்ற ஒரு முழுத்தன்மை தனித்தனி புலனுறுப்புக்களின் அனுபவங்களின் கூட்டுத்தொகையைக் காட்டிலும் வேருன ஒன்று எனக் கண்டார்கள். உணருபவனின் பழைய அனுபவங்களும் ஈடுபடுவதால் அவை ஒதுக்கப்படக் கூடாது. லாக் (Locke) காலத்திலிருந்து உளவியல் சில சாதாரண சோதனைகளோடு திருப்தி அடைந்ததுபோன்று இல்லாமல் 'முழுமையின் குணங்களும்', 'முழுமையின் ஈடுபாடுகளும்' அறிந்துகொள்ளப்படவேண்டியவைகளாகும். முழுமைதான் அதன் பாகங்களின் இயல்பையும் தொடர்புகளையும் நிர்ணயிக்கிறது. இரண்டு தனி முழுமைகளுக்கிடையே வேறுபாடு இருக்கலாம். அவைகளைப் புரிந்துகொள்ள அவற்றின் வெவ்வேருன இயல்புகளைமட்டும் அறிவதன்றி, அவைகள் இரண்டிலும் ஈடுபட்டுள்ள ஒரேமாதிரியான விவரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆய்வுக்கூடங்களிலே, சோதனைகள்மூலம்பெறும் சான்றுகளையே கெஸ்டால்ட் உளவியல் பற்றியிருந்தது. ஆனல், அஃது இவைகளையும் தாண்டி முக்கியத்துவம்பெற்றது.

சென்ற தலைமுறையிலே, வில்ஹெல்ம் டில்தே (Wilhelm Dilthey) சமூக இயல்களில் இணைதல், உருவங்கொடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினுர். அவர், பெரிய தத்துவ நூல்களிலும் வாழ்வின் விளக்கங்களிலும் அக்கறைகொண்டிருந்தார். குறிப்பாக 'Die Typen der Weltanschauung' என்ற புத்தகத்தில் எண்ணங்களின் சரித்திரத்தின் ஒரு பகுதியைத் தத்துவமுறைகளிடையே உள்ள தொடர்புகளை விளக்க ஆராய்ந்தார். அவர் அவை ஒவ்வொன்றையும், வாழ்வுகளின் பல நிலைகள், மனப்

போக்குகள் ஆகியவற்றின் இணைந்த ஒரு வெளிக்காட்டாக அமைந்தன என விளக்கினர். எதுவுமே ஒரு முடிவுநிலை அல்லது இறுதிநிலையை அடைந்தது இல்லையென்று வன்மையாக எதிர்த்தார். அவர் எடுத்துக்கொண்ட வெவ்வேறு ஈடுபாடுகளைப் பண்பாடு என்று அவர் கொள்ளவில்லை. அவர், ஃப்ரடரிக் தி கிரேட் (Frederick the Great) கால சரித்திரத்தைப்போன்ற பெரிய சரித்திரக் காலங்களையும், பெரிய தத்துவ உருவகங்களையும் எடுத்துக் கொண்டிருப்பதால் அவரது செயல், பண்பாட்டின் வேலையை அறிவுறுத்துகிறது.

ஆஸ்வால்ட் ஸ்பெங்ளர் (Oswald Spengler) இப்படிப்பட்ட பண்பாட்டின் முக்கியத்துவத்தை விரிவாகச் சொல்லியிருக்கிறார். ஒரு நாகரிகத்தில் ஆதிக்கம்பெற்ற பண்பாட்டுவகைகள் ஊழ்வினைப்பயன் என்ற முறையில் அவரது புத்தகமான 'Decline of the West'-க்குத் தலைப்பாக அமையவில்லை. நமக்குத் தற்சமயம் தொடர்பில்லாத ஓர் எண்ணத்தினலேயே அஃது அமைந்தது. அஃதாவது ஒவ்வொரு பண்பாட்டு உருவகமும், ஓர் உயிரியைப் போன்று ஒரு குறிப்பிட்ட நாள்வரைதான் வாழக்கூடும் என்பது தான். மேற்கத்திய நாகரிகத்திலே பண்பாட்டு வளர்ச்சிகள் மாறிமாறி ஏற்படுவதையும், பண்பாட்டின் உச்சநிலை இருக்குமிடங்கள் அடிக்கடி மாறுவதையுங்கொண்டு இந்த எண்ணம் விவாதிக்கப்பட்டது. உயிரிகளின் பிறப்பு, இறப்புபோன்ற சுழல்களைப்போலவே பண்பாடுகளுக்கும் உண்டு என்று அவர் விவாதித்தார். ஒவ்வொரு நாகரிகமும் வளமான இளமை, வலிவுள்ள ஆண்மை, அழிகின்ற முதுமை ஆகிய பருவங்களைக்கொண்டிருந்ததாக அவர் நம்புகிறார்.

ஸ்பெங்ளர் எழுதிய 'The Decline of the West' என்ற புத்தகத்தில் பின்னர் சொல்லிய விளக்கம்தான் இடம்பெறுகிறது. ஆனல், ஸ்பெங்ளரின் மதிப்புவாய்ந்த ஆய்வு, மேற்கத்திய நாகரிகத்தின் பல முரண்பட்ட உருவகங்களைப்பற்றியதுதான். அவர் இரண்டு விதமான ஊழ்வினை எண்ணங்களைக் காண்கிறார். அதாவது பண்டைய உலகத்து அப்போலோனியன் (Apollonian) ஈடுபாடுகளையும் தற்கால ஃபாஸ்டியன் (Faustian) ஈடுபாடுகளையும் கண்டார். அப்போலோனியன் மனிதன் தன் ஆன்மாவைச் 'சிறந்த பகுதிகளைக்கொண்ட பிரபஞ்சமாக' எண்ணினன். அவனது உலகத்திலே தன் துணிவு என்பது இல்லை. அவனது தத்துவம் ஒத்துக்கொள்ளாத முரண்பாடு ஒரு தீவினையாகும். உள்ளே வளர்கின்ற ஆளுமை என்ற எண்ணம் அவனுக்குப் புறம்பானது. அவன் வாழ்வை, வெளியிலிருந்து ஒரு பெருங்கேடு அச்சுறுத்துவ

தாகவே கருதினான். அவன் தன் சாதாரண வாழ்வென்னும் மகிழ்ச்சிதரும் காட்சியை வேண்டுமென்றே உடைத்தெரியும் துக்ககரமான உச்சநிலைகளைக் கண்டான். இதேமாதிரி ஒரு சந்தர்ப்பம், வேறொருவனுடைய வாழ்விலும் குறுக்கிட்டு இதே முடிவை ஏற்படுத்தியிருக்கலாம்.

இதற்கு எதிரிடையாக ஃபாஸ்டியன் மனிதன் தன்னை எப்பொழுதும் தடைகளுடன் எதிர்த்துப் போராடும் ஒரு சக்தியாகவே நினைக்கிறான். அவன் வாழ்வை உள்ளிருந்து வளருகின்ற ஆளுமையாகக் கருதுகிறான். வாழ்விலே ஏற்படும் பெருங்கேடுகளைத் தன் முற்கால அனுபவங்களின் தவிர்க்கமுடியாத விளைவுகளாக அவன் எண்ணுகிறான். முரண்பாடுதான் வாழ்வின் உயிர்நாடியாகும். அஃது இல்லாவிட்டால் வாழ்வுக்குப் பொருளே இல்லை. அப்படியிருந்தால் வாழ்வின் மேலெழுந்தவாரியாக உள்ள மதிப்புகளைத்தான் அடையமுடியும். ஃபாஸ்டியன் மனிதன் முடிவற்ற ஒருநிலையை விரும்புகிறான். அவனது கலையும் அதை நோக்கியே செயல்படுகிறது. ஃபாஸ்டியன், அப்போலோனியன் விளக்கங்கள் வாழ்வுக்குத் தரப்படும் எதிரிடையான விளக்கங்களாகும். ஒன்றில் இருக்கும் மதிப்புகள், மற்றொன்றில் கவனிக்கப்படாமலும் புறம்பானதாகவும் இருக்கின்றன.

பண்டைக்கால நாகரிகம், வாழ்வின் அப்போலோனியன் கண்ணோக்குப்படி அமைந்திருந்தது. தற்கால நாகரிகமோ, தனது எல்லா நிறுவனங்களிலும் ஃபாஸ்டியன் முறையைக்கொண்டிருக்கிறது. ஸ்பெங்ளர் (Spengler) எகிப்து நாட்டவன் (Egyptian) 'ஒரு குறுகலான, முன்னமேயே தீர்மானிக்கப்பட்ட, வாழ்வுப் பாதை வழியே கீழிறங்கி, இறந்தவர்களின் நீதிபதிகளுக்கு முன்னால் வந்து நிற்பதை'யும், மாஜியன் (Magian) 'உடல், ஆன்மா இவைகளைத் தனித்தனியே' கண்டதையும் புறக்கணித்துவிட்டார். அவர் அப்போலோனியன், ஃபாஸ்டியன் ஆகிய இரண்டு ஈடுபாடுகளைப்பற்றியே எழுதினார். கணிதம், கட்டடக்கலை, சங்கீதம், ஓவியம் ஆகியவைகளை மேற்கத்திய நாகரிகத்தில், வெவ்வேறு காலங்களில், இரண்டு எதிர்ப்பட்ட தத்துவங்களை வெளிக்காட்டுவதாகவே எடுத்துக்கொண்டார்.

ஸ்பெங்ளர் (Spengler) புத்தகங்களில் காணப்படும் குழப்பத்திற்கு ஒரு காரணம், அவை எடுத்துச்சொல்லப்படுகிறமுறைதான். அவர் எடுத்துக்கொண்ட நாகரிகங்களின் சிக்கலான பிரச்சினைகளை ஆய்ந்து பாராதது மற்றொரு காரணமாகும். சரித்திரவாயிலாக உள்ள வேறுபாடுகள், தொழில்கள், வகுப்புகள்வாரியாக நாகரிகங்கள் படிப்படியாக அமைந்தது. எண்ணிலடங்கா

விவரங்களைக்கொண்டவையாக அவை இருப்பது ஆகிய பல காரணங்களால் மேற்கத்திய நாகரிகங்கள் இரண்டே இரண்டுவித மாகப் பிரித்துச் சுருக்கிச் சொல்ல உட்படுவதில்லை. சில குறிப் பிட்ட அறிவு அல்லது கலைக் குழுக்களுக்கு வெளியே நமது நாக ரிகத்தில் ஃபாஸ்டியன் மனிதன் இருந்தால் அவன் தன்னிச்சைப் படி இயங்கமுடியாது. இன ஆராய்ச்சியில் தற்கால நாகரிகத் தின் எந்த அறிவும் இப்படி அடிக்கடி தோன்றுகிறமாதிரிகளைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. ஃபாஸ்டியன் முடிவற்ற ஒரு நிலைக்கு ஏங்குவதைப்போன்றே, நமது பண்பாட்டை, புறமுகங் கொண்டதாகப் பாவித்து, பொருள் தேடுவதற்கும், புதியன கண்டுபிடிப்பதற்கும், ஆட்சிபுரிவதற்கும், அலைகிற ஒன்ருகச் சொல்லலாம்.

மானிடவியல் முறையிலே சொல்லவேண்டுமானுல் ஒரு நாடோடிப் பண்பாட்டினைப்போன்று ஒன்றியிருக்கிற சமூகம் எனத் தற்காலப் படிப்படியாக அமைந்த சமூகத்தை எண்ணுவத ஞல், ஸ்பெங்ளர் காட்டிய உலக நாகரிகங்கள் பாதிக்கப்படுகின் றன. நமது தற்போதைய அறிவிலே, மேற்கத்திய ஐரோப்பியப் பண்பாட்டின் சரித்திர விவரங்களும், சமூக வேறுபாடுகளும் மிக வும் அதிகமாயிருப்பதால் அதைச் சரியாக ஆராயமுடிவதில்லை. ஐரோப்பிய இலக்கியம், தத்துவம் ஆகியவைகளைப் படிப்பதற்கு ஸ்பெங்ளர் (Spengler) விவரித்த ஃபாஸ்டியன் மனிதன் ஒரு கோடி காட்டுவதாக அமைந்தாலும், மதிப்புகளின் தொடர்புகளை அவர் எவ்வளவுதான் அழுத்திச்சொன்னுலும் அவருடைய ஆய்வு முடிவுபெற்ற ஒன்ருக ஆகாது. ஏனென்ருல், வேறு பலவிதமாக வும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறைகளைக் காணலாம். திரும்பிப் பார்க்கும்போது மேற்கத்திய நாகரிகம்போன்ற பெரிய முழுமை பெற்ற ஒன்றைச் சரியாகக் கண்டறியமுடியும். இணைக்கமுடியாத ஊழ்வினை எண்ணங்களைக்கொண்ட ஸ்பெங்ளர் நியதி உண்மை யாகவும், முக்கியமானதாகவும் இருந்துங்கூட, தற்காலத்தில் மேற்கத்திய உலகத்தை, ஒரு குறிப்பிட்ட குணப்பாங்கின் தகுதி யைக்கொண்டு ஆராய்வது, குழப்பத்தில் கொண்டுவிடக் கூடியது.

வெளியில் தெரியாத சில சிக்கலான சமூக விவரங்கள் எளி தான பண்பாடுகளின் விவரங்களை அறிந்துகொள்வதன்மூலம் தெளிவாக்கப்படுகின்றன என்பது பழங்குடி மக்களைப்பற்றி அறிந்துகொள்வதற்குத் தத்துவரீதியாக விளக்கங்கொடுப்பதாகும். ஒரு பண்பாட்டிலே பங்குகொள்ளும் தனி மனிதனின் உணர்ச்சி களையும் எண்ணங்களையும், வகைப்படுத்துகிற வாழ்க்கைமுறை

களிலும் பண்பாட்டுக் கோலங்களிலும், இது உண்மையெனத் தெரிகிறது. எளிதான மக்களைப்பற்றி அறிந்துகொள்வதன்மூலம், தற்காலத்தில், மரபுப் பழக்கங்களினால் தனி மனிதனின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பழக்கங்களின் வகைகளை அறிந்துகொள்ளலாம். இப்படி நாம் அறிகின்ற விவரங்களும் முறைகளும், பழங்குடி மக்களைமட்டும் சார்ந்ததென்றுகொள்வது தவருகும். நாமறிந்த உயர்ந்த, மிகவும் சிக்கலான, சமூகங்களில்கூட பண்பாட்டுக் கோலங்கள் மிகவும் வலிமையுள்ளனவாகவும் முக்கியத்துவம் பெற்றவைகளாகவும் இருக்கின்றன. ஆனால், அதன் விவரங்கள் மிகவும் சிக்கலாய், நம் கண்களுக்கு வெகு அருகில் இருப்பதால் கவனிக்கப்படுவதில்லை.

நமது பண்பாட்டுமுறைகளைப்பற்றிச் சிக்கனமாக ஒரு சுற்று வழியின்மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். உயிரியல் பரிணாமத்தை (evolution) நிலைநாட்டுவதற்குச் சரித்திரவாயிலாக மனிதனுக்கும் அவனுக்குமுன் தோன்றிய விலங்குகளுக்கும் உள்ள தொடர்பை விளக்குவது சற்றுக் கடினமாக இருக்கவே டார்வின் (Darwin) வண்டுகளின் உறுப்பு அமைப்புகளை எடுத்துக்கொண்டார். மனித உடலமைப்பில் சிக்கலாகத்தோன்றும் பல விவரங்கள், எளிதான உயிரியில் தெளிவாகக் காணப்பெற்றன. இதே போன்றுதான் பண்பாட்டு மாறுபாடுகளிலும் உள்ளது. அதிக சிக்கலில்லாத மக்களின் எண்ணங்களையும் நடத்தைகளையும் பற்றி நாம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

நான் மூன்று நாகரிகங்களை விரிவாக வர்ணிக்க எடுத்துக் கொண்டுள்ளேன். பல பண்பாடுகளின் சில உச்சநிலைகளைக் கவனிப்பதைவிட சில பண்பாடுகளை, நடத்தைகள் கோவையாக அமைந்தவைகளாகக் காண்பது பயனளிக்கக்கூடியது. பிறப்பு, இறப்பு, பூப்பு, மற்றும் திருமணம்போன்ற பண்பாட்டு நடத்தைகளின் தனி விவரங்களின் நோக்கங்கள், செய்கைகள் ஆகியவை உலகமுழுதும் உள்ள விவரங்களைச் சேர்த்துப் படிப்பதால் தெளிவாகாது. சில பண்பாடுகளை, பல கோணங்களிலிருந்து அறியும் முயற்சிக்கே நம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

4. நியூ மெக்ஸிகோவிலுள்ள ப்யூப்லோ மக்கள்

மேற்கத்திய நாகரிகத்திற்குத் தெரிந்த பழங்குடி மக்களுள் தென்மேற்குப் பகுதியிலுள்ள ப்யூப்லோ (Pueblo) இந்தியர்களும் ஒருவகையினர். பல கண்டங்களிடையே பிரயாணம் செய்பவர்கள் எளிதில் அடையக்கூடிய அமெரிக்காவின் மத்தியப் பிரதேசத்தில் அவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பழைய நாட்டுப்பாணியிலேயே வாழ்கின்றனர். அரிஸோனு (Arizona), நியூ மெக்ஸிகோ (New Mexico) இவைகளுக்கு வெளியே உள்ள சில இந்தியக் குடிகளுடையவைபோன்று இவர்களுடைய பண்பாடு சீர்குலைந்துவிடவில்லை. அவர்களுடைய கற்களாலான கிராமங்களில் ஆண்டுதோறும், மாதந்தோறும் கடவுளுக்கான நடனங்கள் ஆடப்பெறுகின்றன. வாழ்க்கை பழைய பாதையிலேயே சென்றுகொண்டிருக்கிறது. நம்முடைய நாகரிகத்தினின்றும் அவர்கள் எடுத்துக்கொண்டவைகளைக்கூட தங்களுடைய வாழ்க்கை இயல்புகளுக்கு உட்பட்டதாகச் செய்துகொண்டனர்.

அவர்களுடைய சரித்திரம் மிகவும் விநோதமானது. அமெரிக்காவில் அவர்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிற பகுதிகளில் ப்யூப்லோ பொற்காலத்திலேற்பட்ட அவர்கள் மூதாதையரின் திட்டமிட்டு எழுப்பப்பெற்றச் சமவெளி நகரங்களும், மலையுச்சி வீடுகளும் காணப்படுகின்றன. நம்பமுடியாத அளவு எண்ணிக்கை அதிகமாக உள்ள அவர்களுடைய நகரங்கள் பன்னிரெண்டாம் நூற்றாண்டிலும் பதிமூன்றாம் நூற்றாண்டிலும் கட்டப்பெற்றவை. தரைக்குக்கீழே அமைக்கப்பட்ட சடங்கு அறையைக் கொண்ட கல்லாலான ஓரறை வீடுகள் காலந்தொட்டு, அவர்கள் சரித்திரத்தை நாம் அறியலாம். இந்த ப்யூப்லோ மக்கள் தென்மேற்குப் பாலைவனத்தை முதலில் தங்கள் இருப்பிடமாகக்

கொள்ளவில்லை. இதற்கும் முன்னமே கூடை முடைபவர்கள் (Basket maker) இங்கு வாழ்ந்துவந்தனர். அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தை நாம் கணக்கிட்டுச் சொல்ல இயலாது. அதற்குப் பிறகு தான் ஆதி ப்யூப்லோ மக்கள் அவர்களை அநேகமாகக் கொன்று அப்புறப்படுத்திவிட்டு இந்த இடத்தைக்கொண்டனர்.

இந்த வறண்ட பீடபூமியில் தங்கியபிறகுதான் ப்யூப்லோ மக்களின் பண்பாடு விரிவடைந்தது. அவர்கள் பண்பாட்டுடன் வில், அம்புகள், கல்வேலைத்திறன், பலவகைப்பட்ட விவசாயம் ஆகியவை தோன்றின. வடக்கிலிருந்து கொலராடோ (Colorado) நதியில் பாயும் ஸான் ஜுவான் (San Juan) நதியின், மனிதர் வாழத் தகாத நீரற்ற ஒரு பள்ளத்தாக்கை, ஏன் அவர்கள் தேர்ந்தெடுத் தார்கள் என்று யாரும் கூறமுடியாது. அஃது இன்று யுனைடெட் ஸ்டேட்ஸ் என்று வழங்குகிற நாட்டிலேயே மிகவும் வெறுக்கத் தகுந்த ஓர் இடமாகத் தோன்றுகிறது. ஆயினும், இங்கேதான் மெக்ஸிகோவுக்கு வடக்கிலுள்ள பெரிய இந்திய நகரங்கள் வளர்ந் தன. ஒரே காலத்தில் ஒரே நாகரிகத்தவரால் கட்டப்பெற்ற அவை மலையுச்சி வீடுகளாகவும், பள்ளத்தாக்கில் அரைவட்ட வடிவில் அமைந்த நகரங்களாகவும் இரண்டுவிதமாக இருந்தன. மலைகளின் செங்குத்தான சரிவுகளிலே தோண்டப்பட்டும், பள்ளத் தாக்கின் அடிமட்டத்திலிருந்து பலநூறு அடிகள் உயரத்திலே யும் அமைக்கப்பட்ட இவ் வீடுகள் மனித வாழ்க்கையில் மிகவும் விசித்திரமானவை. இவ் வீடுகள் பயிர்நிலங்களினின்றும், நீர் வசதிகளினின்றும் வெகு தொலைவில் ஏன் கட்டப்பெற்றன என்று நம்மால் யூகிக்கமுடியாது. ஒரு கால் பாதுகாப்புக்காக இம்மாதிரி கட்டப்பெற்றிருந்தால் அவர்கள் ஏதோ ஒரு பெரிய ஆபத்தைக் கண்டு அஞ்சியே இவ்வாறு செய்திருக்கவேண்டும். சிதைந்து போன சில வீடுகள் அவைகளின் அழகாலும், அமைப்புமுறை களாலும் நம்முடைய கவனத்தைக் கவருகின்றன. எப்படிப்பட்ட கடினமான பாறையின் விளிம்பிலே இவ் வீடுகள் அமைக்கப்பட் டாலும் ஒன்றுமாத்திரம் விடப்படுவதில்லை. கிவா (kiva) என்று சொல்லக்கூடிய ஒரு மனிதன் நன்றாக நிற்கும்வண்ணம் பாறையில் குடைந்து செய்யப்பட்ட சடங்குகளுக்கான கீழறையொன்று எல்லா வீடுகளுக்கும் உண்டு. சில சமயங்களில் இது மனிதர் ஒன்றுகூடும் அறையாகவும் பயன்பட்டது. இதற்குள்ளே செல்ல ஒரு சிறு கதவும் ஏணியும் உபயோகப்படுத்தப்பட்டன.

மற்ற வீடுகளின் அமைப்பு, திட்டமிடப்பட்டு நிறுவப்படும் நவீன நகரங்களின் முன்னோடியாக இருந்தது. வெளியே பாது காக்கப்பட்ட ஒரு சுவர் மூன்று மாடியளவு உயர்ந்து அரைவட்ட

வடிவிலே அமைக்கப்பட்டது. உட்புறத்தே படிப்படியாகக் குறைந்து கீழேயுள்ள கிவா அறைகளோடு கற்களால் கட்டப் பட்ட சுவர்களால் அணைக்கப்பெற்று விளங்கின. இதைப்போன்ற சில பள்ளத்தாக்கு நகரங்களில் கிவா என்ற அறைகள் மட்டுமன்றி ஒரு பெரிய கோயிலும் இருந்தது. இது மிகவும் சிறந்த கல்வேலைப் பாடமைந்து பூமியின் கீழே அமைக்கப்பட்டது.

ஸ்பானியர்கள், தங்கம் கிடைக்கும் நகரங்களைத் தேடி வருமுன்பே ப்யூப்லோ மக்களின் நாகரிகம் உச்சநிலையடைந்து மறையத் தொடங்கிவிட்டது. வடக்கேயுள்ள நவாஜோ-அப்பாச்சிக் குடிகள் (Navajo Apache) இவர்களது நகரங்களுக்கான தண்ணீர் வசதியை வெட்டிவிட்டு, இந்தப் பழங்குடிகளை வென்றி ருக்கலாம். ஸ்பானியர் வருமுன்பே இவர்கள் தங்களுடைய மலை யுச்சி வீடுகளையும், அரைவட்டமான நகரங்களையும்விட்டு, ரியோ க்ராண்ட் (Rio Grande) நதியோரத்தில், இப்பொழுது அவர்கள் வாழ்ந்துவரும் கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர். மேற்கே ஆகோமா (Acoma), ஸுனி (Zuni), ஹோபி (Hopi) ஆகிய ப்யூப்லோக்கள் இருந்தனர்.

ஒரு சீரான சரித்திரத்தைப் பின்னணியாகக்கொண்ட ப்யூப்லோ பண்பாடு நாம் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய ஒன்றாகும். ஏனெனில், வட அமெரிக்காவிலுள்ள மற்றையோரை விட ஒரு மாறுபட்ட பண்பாட்டை அவர்கள் பெற்றிருந்தனர். துரதிருஷ்டவசமாகப் புதைபொருளியலால் (archaeology) அமெரிக் காவின் சிறுபகுதியான இந்த இடத்தில், சுற்றிலுமுள்ள பண்பாடு களினின்றும் சிறிதுசிறிதாக மாறுபட்டும், ஆனால் எப்பொழுதும் வாழ்க்கை இயல்பை எடுத்துக்காட்டும் ஒரே சீரான அமைப்பைக் கொண்டதுமான இவர்கள் பண்பாடு உருவாயிற்று என்று திட்ட வட்டமாகக் கணக்கிடமுடியவில்லை.

ப்யூப்லோ மக்களின் வாழ்க்கை முறைகளோடும் வழக்கங் களோடும் பழக்கமின்றி நாம் அவர்களுடைய பண்பாட்டை அறிந்துகொள்ளமுடியாது. அவர்களுடைய சமூக அடிப்படை களைக்கொண்டுதான் நாம் அவர்களது பண்பாட்டுக் குறிக்கோள் களை ஆராயமுடியும்.

ஸுனி (Zuni) மக்கள், குணங்களில் விசேஷமாகக் கருதப் படுகிற சாந்தத் தன்மையும், வெறியற்றதன்மையுமுள்ள சடங் குகள் நிறைந்த வாழ்க்கைகொண்டவர்கள். அவர்களுடைய வாழ்க்கை அதிகமான சிக்கல்கள் நிறைந்த சடங்குகளைப்பற்றி யமைந்த ஒன்றாகும். அவர்கள் முகமூடியிட்ட கடவுள்களுக்காக

வும், நோயைக் குணமாக்குவதற்காகவும், சூரியனுக்காகவும், மத சம்பந்தமான குறியீடுகளுக்காகவும், போருக்காகவும், இறந்தவர் களுக்காகவும் செய்யும் சடங்குகளைப் பூசாரிகள் அட்டவணைப்படி நடத்துவதை முறையாகக்கொண்டார்கள். அவர்களுக்கு இச் சடங்குகளைத்தவிர வேறெதிலும் கவனம் செல்லுவதில்லை. மேற் கத்திய ப்யூப்லோ மக்களில் வயதடைந்த ஆண் மக்கள் தங்கள் வாழ்நாட்களின் பெரும்பகுதியை இவைகளுக்காகவே செலவிடு கின்றனர். இதற்காக அவர்கள் சொற்கள் சுத்தமாக உள்ள சடங்குகளை நினைவில்கொள்ளவேண்டும். இது நமக்கு மிகவும் இயலாத ஒன்ருகத் தோன்றுகிறது. பஞ்சாங்கத்திலே குறித் திருக்கிற ஒன்றுக்கொன்று தொடர்புள்ள விளக்கப்பட்ட சடங்கு களை நடத்துவதையும் அவர்கள் பெரிதாகக் கருதுகிருர்கள். இச் சடங்குகள் முடிவற்ற பல செய்முறைகளைக்கொண்டு அவர் களுடைய பல மதசம்பந்தமான இயல்புகளைப் பிணைக்கின்றன.

சடங்குகளால் நிறைந்த அவர்கள் வாழ்க்கை அவர்களது நேரத்தையும் கவனத்தையும் கவர்கின்றது. சடங்குக்குப் பொறுப் பானவர்கள், சடங்கிலே பங்குகொள்பவர்கள் ஆகியவர்கள்மட்டு மன்றி, தங்களிடம் சடங்கு சம்பந்தமாக 'ஒன்றுமே இல்லாத' குடும்பங்களும், பெண்களும் எல்லா ப்யூப்லோ மக்களுமே, தங்கள் தினசரி உரையாடல்களில் சடங்கைப்பற்றியே பேசுகின்றனர். சடங்குகள் நடந்துகொண்டிருக்கும்போது நாள் முழுவதும் அவைகளையே நின்று கவனிக்கின்றனர். பூசாரி நோய்வாய்ப் பட்டாலும் அல்லது அவன் தவம்செய்யும்போது மழை வராவிட் டாலும், அவனது தோல்விக்குக்காரணத்தையும், அவன் அடிகள் தவறியதையும்பற்றி ஊர்வம்பு அளக்கப்படுகிறது. முகமூடிக் கடவுள்களுக்கான பூசாரி இயற்கைக்கப்பாற்பட்ட எதற்காவது குற்றமிழைத்தாளு? அவன் தவத்தை இடையிலேவிட்டு, நாட் கள் முடிவதற்குமுன்பே மனைவியிடம் சென்றுவிட்டானு? இரண்டு வாரங்களுக்குக் கிராமத்திலே இதைப்பற்றித்தான் பேசுகிருர்கள். ஒரு வேடம்போடுபவன் தனது முகமூடியிலே ஒரு புது இறகை வைத்துக்கொண்டுவிட்டால் அதைப்பற்றிய பேச்சு ஆடுகள், தோட்டங்கள், திருமணங்கள், விவாக ரத்து இவைகளைப்பற்றிய பேச்சை அடக்கிவிடுகிறது.

சடங்குகளுக்கான நுண்ணிய விவரங்களைப்பற்றி இவர்கள் எடுத்துக்கொள்ளும் கவனம் நியாயமானதுதான். ஸுனி மக்க ளின் மதசம்பந்தமான பழக்கங்கள் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி பெற்றவை எனக் கருதப்பெறுகின்றன. செய்முறைகளிலே ஒவ் வோர் அடியும் சரியாக இருந்தால், முகமூடிக் கடவுளின் ஆடை

அணிகள் மரபுமுறைப்படி எல்லா விவரங்களிலேயும் சரியாக அமைந்திருந்தால், கொடுக்கப்படும் பலிகள் குற்றமில்லாமலிருந் தால், மணிக்கணக்காகச்செய்யும் தொழுகை சொற்சுத்தமாக அமைந்துவிட்டால், மனிதனின் விருப்பப்படியெல்லாம் உடனே நடந்துவிடும். அவர்கள் அடிக்கடி சொல்வதுபோல் ஒருவனுக்கு 'எப்படிச் செய்வது என்பது' தெரிந்திருந்தால்போதும். அவர் களின் மதக்கோட்பாடுகளின்படி, முகமூடிக்கான பருந்து இறகு களில் ஒன்று அப் பறவையின் மார்பிலிருந்து எடுக்கப்படுவதற்குப் பதிலாக, தோளிலிருந்து எடுக்கப்பட்டிருந்தால், அது மிகப் பெரிய விஷயம். ஒவ்வொரு நுண்ணிய விவரமும் மாயாஜாலப் பலனைப்பெற்றுள்ளன.

ஸூனி மக்கள், ஒன்றைப்போல் நடித்துக்காட்டுகிற மாயா ஜாலத்தில் அதிக நம்பிக்கைகொண்டிருந்தனர். அவர்களுடைய பூசாரிகள் மழைக்காகத் தவம் இருக்கும்பொழுது சிறிய கற்களைத் தரையிலே உருட்டி இடிமுழக்கத்தையும், நீரைத் தெளித்து மழையையும் செய்துகாட்டுகிறார்கள். ஒரு பீடத்தின்மீது ஒரு பாத்திரத்தில் நிறைய நீர் ஊற்றித் தங்கள் நீர் ஊற்றுக்கள் நிரம்பி யிருக்கவேண்டுமென்றும், அந் நாட்டுச் செடி ஒன்றின் காய்களை அடித்து அதுபோல் விண்ணிலே கருமேகங்கள் சூழவேண்டும் என்றும், கடவுள்கள் 'தங்கள் நீராவிகலந்த மூச்சை நிறுத்திவிடா வண்ணம்' புகையிலையின் புகையை ஊதியும் வழிபட்டனர். முகமூடிக் கடவுள் நடனத்தின்போது மக்கள், இயற்கைக்கப்பாற் பட்டவைகளுக்கான உடைகளைக்கொண்டு தங்களை அணிசெய்து கொள்ளுகிறார்கள். அஃதாவது அவைகளுக்கான வர்ணங் களையும் முகமூடிகளையும் அணிகிறார்கள். இதனால், கடவுள்கள் தங்களது ஆசியை அளிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மாயாஜாலமுறையிலே அவ்வளவு சம்பந்தப்படாத மற்றும் சில சடங்குகளிலும், ஸூனி மக்கள், நுண்ணிய விவரங்களினால் ஏற்படுகிற பலன்களை நம்புகிறார்கள். ஒரு பூசாரியோ அல்லது அதற்காக ஏற்பட்ட ஒருவனோ மதசம்பந்தமான சடங்குகளில் ஈடுபடும்பொழுது கோபமே கொள்ளக்கூடாது. ஆனால், சுத்தமான இருதயத்துடன்மட்டுமே நெருங்கமுடிந்த ஒரு கடவுளோடு தொடர்புகொள்வதற்குக் கோபம் ஒரு தடையல்ல. கோபம் இல்லாவிட்டால் அஃது அவன் இயற்கைக்கப்பாற் பட்டவைகளின்மேல் தியானமாக இருக்கிறான் என்பதைக் குறிக்கும். அப்படி மனதைக் கட்டுப்படுத்தினால் அந்தச் சக்திகளும் தாங்கள் கொடுக்கவேண்டியவைகளை நிறுத்திக் கொள்ளமுடியாது. அதுமாதிரி செய்வது மாயாஜாலப் பலனுள்ளதாகக் கருதப்பெறுகிறது.

அவர்களது பிரார்த்தனைகளும் குறிப்பிட்ட சொற்களமைந்த சூத்திரங்களாகவே உள்ளன. இவைகளை முறையே ஒப்புவித்தால் தான் அவை பயனளிக்கும். ஸூனி மக்களிடையே இப்படிப் பட்ட மரபுவழிவந்த பிரார்த்தனைச் சூத்திரங்கள் மிக அதிகமாக இருந்தன. அந்தச் சடங்குகளுக்காகச் செய்யவேண்டிய முறைகளை வகுத்துச் சொல்லும் சூத்திரங்களாக அவர்களுடைய பிரார்த்தனைகள் வழங்கின. சடங்குகளுக்காக வேஷம் போடுபவனின் கடமைகளை வரிசைக் கிரமமாக எடுத்துச் சொல்கின்றன. அவை தொழுகைக் குச்சிகளுக்காக நாணல் குருத்தைச் சேகரிப்பதையும், பருத்தி நூலால் அவைகளுக்குப் பறவைகளின் இறகுகளைச் சேர்த்துக் கட்டுவதையும், அக் குச்சிகளுக்கு வண்ணம் தீட்டுவதையும், அப்படிச் செய்து முடிக்கப்பட்ட தொழுகைக் குச்சிகளைக் கடவுளுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதையும், தூய, புனிதமான நீர் ஊற்றுக்களுக்குச் சென்றுவருவதையும், தவத்தின் காலங்களையும் குறிக்கின்றன. சடங்குகளுக்கான மதசம்பந்தமான செய்கைகளைப்போலவே, இந்தச் சூத்திரங்களைச் சொல்வதிலும் மிகவும் கவனமாகவும் சரியாகவும் சொல்லவேண்டும்.

'ஆற்றின் வழியே அப்பால் தேடி
நம் தந்தையராம், ஆண் நாணல், பெண் நாணல்,
நேர்க்குருத்தை நான்காய் வெட்டி
பாதைவழியே சேர்த்தேன் வீடு.
இந் நாள்,
விருப்புடன் அவற்றை வாரிச்சேர்த்து
தொழுகைக் குச்சிகட்குத் தந்தேன் வடிவம்—
மனித வடிவம்.
என்றன் பாட்டன், வரிச்சேவல்,
வான்கோழிக்
கழுகு மென்தோகை
வரிச்சேவலிற்குக்
கோடைப்பறவைத் தோகைக்கூட்டம்,
யாவும் கொண்டு
நான்முறை தந்தேன், மனித வடிவம்
என்றன் தொழுகைக் குச்சிகட்கே.
பருத்திப் பெண்ணும், என்றன் தாயின்
சதைகொண்டு
நன்கே அமையா நூலே ஆயினும்
நான்முறை சுற்றி ஆகம் பிணைத்து
தொழுகைக் குச்சிகட்குத் தந்தேன் வடிவம்—

மனித வடிவம்.
கருவண்ணப் பெண் எங்கள் தாய்
சதைகொண்டு
நான்முறை மூடி நன்கே அமைந்த
தொழுகைக் குச்சிகட்குத் தந்தேன் வடிவம்—
மனித வடிவம்.'

ஸுனி மக்களிடையே தொழுகை இருதயத்திலிருந்து உணர்ச்சிகளைக் கொட்டுவதாக இல்லை. சிறிது கூட்டவோ குறைக்கவோ முடிகின்ற சில சாதாரண பிரார்த்தனைகள்கூட இருக்கின்றன. அவை ஆர்வமிகுந்தவைகளாக இல்லாமல் சாதாரணமாக, ஒழுங்கான வாழ்க்கையையும், மகிழ்வான நாட்களையும், பலாத்காரச்செயல்களிலிருந்து காப்பாற்றப் படுதலையும், வேண்டி அமைந்திருந்தன. போர்ப் பூசாரிகள்கூட அவர்களது பிரார்த்தனையைக் கீழ்க்கண்டவாறுதான் முடித்தனர்:

'வனாந்தரத்தில் வீடு கட்டியிருக்கும் எங்கள்
குழந்தைகளுடைய பாதை பாதுகாப்புள்ளதாக இருக்கட்டும்
அதற்காகவே நான் தொழுகின்றேன்.
காடுகளும் புதர்களும் நீர்நிறைந்த கரங்களால்
அவர்களை ஆதரிக்கட்டும்.
அவர்களுடைய வாழ்க்கைப்பாதை வளமுள்ளதாகவும்
பாதுகாப்புள்ளதாகவும் அமையட்டும்.
சிறிதுதூரம் மட்டுமே சென்றிருக்கிற
அவர்கள் பாதை கடினமற்றதாக இருக்கட்டும்.
எல்லாச் சிறுவரும், சிறுமியரும் திடமுள்ள
இருதயம் கொண்டு, மனஉறுதியுடன் வைகறை ஏரியை (Dawn Lake)
அடைகின்ற பாதைகள் வழியே செல்லட்டும்.
உனக்கு ஆயுள் நிறைந்து பல்லாண்டு வாழ்வு
கிடைக்கட்டும். உயிர்கொடுக்கும் தந்தையாம்
ஆதவன் வழியே உங்கள் பாதை இருக்கட்டும்:
உங்கள் பாதை வளமுள்ளதாக அமையட்டும்.'

மதச்சடங்குகளுக்கான காரணத்தை யாராவது கேட்டால் அவர்கள் உடனே அவை மழைக்காக என்று பதில் உரைக்கின்றனர். இதுதான் அவர்கள் வழக்கமான பதிலாக உள்ளது. ஆனால், அது ஸுனி மக்களின் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு மனப்பாங்கைக் காட்டுகிறது. எல்லாவற்றிற்கும்மேலாகக் கடவுள்களின் ஆசியால்தான் செழுமை ஏற்படுகிறது. ஸுனி மக்களின் பாலைவனமான பீடபூமியில், பயிர்களின் வளர்ச்சிக்கு

மழை மிக அவசியம். மழை ஏற்படுகிறதா இல்லையா என்பதைப் பொறுத்து பூசாரிகளின் தவம், முகமூடிக் கடவுள்களின் நடனங்கள், மேலும் மருத்துவக் குழுக்களின் செய்கைகள் ஆகியவைகளைப் பயனுள்ளவையா இல்லையா என்று தீர்மானிக்கிருர்கள். 'நீரைக்கொண்டு ஆசி' அளிப்பதுதான் எல்லா விதமான ஆசிகளுக்கும் பொதுவாக இருந்தது. இவ்விதமாக ஆசியளிக்கும் கடவுள்கள் ஸுனி மக்கள் அறைகளுக்கு வரும் பொழுது அவர்களுடைய அறைகளை 'நீர்நிறைந்தவை' என்றும், ஏணிகளை 'நீரேணிகள்' என்றும், அவர்கள் போரிலே எடுத்து வரும் தலைத்தோல்களை 'நீர்நிறைந்த போர்வை' என்றும் சொல்கிருர்கள். இறந்தவர்கள்கூட மழை மேகங்களில் திரும்பி வந்து ஆசி அளிக்கின்றனர். கோடைக்காலத்தின் பிற்பகல்களிலே கருமேகங்கள் விண்ணிலே தோன்றியதும் மக்கள், குழந்தைகளிடத்தில், 'உங்கள் மூதாதையர் வருகின்றனர்' என்று கூறுகின்றனர். இறந்துபட்ட உறவினர்களைத் தனியாகக் குறிப்பிடாமல் மூதாதையர்களைப் பொதுவாகக் குறிப்பிடுவதையே இது எடுத்துக்காட்டுகிறது. முகமூடிக் கடவுள்களும் மழையே ஆவர். அவர்கள் நடனமிடும்பொழுது தங்களை மழையாகக் கருதி, மக்கள்மேல் அம்மழை பொழியவேண்டுமென்ற கருத்துக்கேற்ப ஆடுவார்கள். மழையைக் கூப்பிடுவதற்காகப் பூசாரிகள் தவம்செய்யும்போது தங்கள் பீடங்களின்முன் அசையாமல் அமர்ந்து எட்டு நாட்களுக்கு ஒதுங்கியிருக்கிருர்கள்.

'எங்கே நீ நிரந்தரமாகத் தங்கியிருந்தாலும்
உன் பாதையை எங்கள் பக்கம் திருப்புவாயாக.
நீர்நிறைந்த கருமேகங்களுடனும்,
கொண்டல்களின் திரிபுகளுடனும் எங்களிடம்
தங்க அனுப்பிவிடுவாயாக.
முதலிலே தோன்றிய எங்கள் தந்தைகளும்
தாய்களும் வசிக்கும் இந்த 'இதிவாளு'[1]
என்ற இடத்திற்கு உன்னுடைய நீரை,
நிலத்தை நனைக்கும்படி அனுப்புவாயாக.
நீர்நிறைந்த நீ சேர்ந்து வருவாயாக'

ஸுனி மக்களின் பிரார்த்தனைகளில் செழுமைக்காக வேண்டப்படுபவைகளில் மழை ஓர் அமிசமாகும். அவர்கள் தோட்டங்களும் மக்களின் எண்ணிக்கையும் அதிகமாக ஏற்படவும் பிரார்த்திக்கின்றனர்.

[1] 'நடுவு' உலகத்தின் மையமாக இருக்கிற ஸுனி மக்களின் சடங்குப் பெயர்.

'முன்னால் ஒரு குழந்தை நடந்துசெல்ல
கையால் ஒரு குழந்தையை நடத்திச்செல்ல
ஏணையில் ஒரு குழந்தையோடும்
முதுகில் ஒருமகவைச் சுமந்துகொண்டு
வயிற்றில் ஒரு கருவோடும்'

உள்ள மகிழ்ச்சியான பெண்களை விரும்பி அவர்களைப்பெற ஆசி கூற வேண்டுகின்றனர்.

மனிதர்கள் மலடாக இல்லாமல் இருக்க அவர்கள் செய்யும் காரியங்கள் தனித்தன்மைபெற்றனவாக உள்ளன. மதச்சடங்குகளில் செழுமையோ அல்லது இனவிருத்தியோ கோருவது முக்கியமான அமிசமாகும்.

ஸுனி மக்களின் கவனத்தைக் கவர்கின்ற சடங்குகள் நிறைந்த வாழ்க்கை பல சக்கரங்கள் இணைந்ததைப்போன்ற ஒன்று. பூசாரிகள் தங்களுக்கென தெய்வத்துக்குரிய பொருள்கள், தவங்கள், நடனங்கள், பிரார்த்தனைகள் ஆகியவை பெற்றிருக்கின்றனர். ஆண்டுமுடிய நடக்கும் அவர்களது சடங்குகள் ஒவ்வோர் ஆண்டும் பனிக்காலத்தில் சங்கராந்தியன்று (Solstice) துவக்கப்பெற்று அவர்களது விழாக்களையெல்லாம் ஒன்றுசேர்த்து அவர்கள் கூட்டங்களை இணைக்கிறது. இதைப்போலவே பொருள்களும் பஞ்சாங்கமுறைப்படி அனுசரிக்கும் முறைகளும்கொண்ட பழங்குடிகளின் முகமூடிக் கடவுள் கூட்டமும், பனிக்காலத்திலே ஷலாகோ (Shalako) என்ற முகமூடிக் கடவுள்களின் சடங்கிலே போய் முடிவுறுகிறது. நோயைக் குணப்படுத்தவேண்டிய மருத்துவக் கூட்டமும் இதேபோன்று ஆண்டுமுடிவில் குடிமக்களின் நலத்திற்காகச் செய்யப்படும் சடங்கில் முடிவடைகிறது. ஸுனி மக்களிடையே உள்ள இந்த மூன்று முறைகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றதன்று. ஒரே மனிதன், தன் வாழ்க்கையின் பெரும் பகுதியில் மூன்றிலும் சேர்ந்திருக்கிறான். ஒவ்வொருவரும் அவனுக்குத் 'தெய்வத்துக்குரிய பொருள்களை வாழ்வதற்காக' வழங்கி அவனிடமிருந்து மிகக்கடினமான சடங்குகளுக்கான அறிவை எதிர்பார்க்கின்றனர்.

திருநிலைத்தன்மையின் உச்சியிலே பூசாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குள் நால்வர் பெரியவர்களாகவும் எண்மர் இளையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் 'தங்களுடைய குழந்தைகளை[1] கவனமாகக் கண்காணிக்கின்றனர்'. அவர்கள் மிகவும்

[1] அதாவது ஸுனி மக்களை

தூய்மையானவர்கள். டாக்டர் புன்ஸெல் (Dr. Bunzel) சொற்படி, அவர்களுடைய சக்தி அடங்கியுள்ள, அவர்களது மருந்துக் கட்டுகள் 'வர்ணிக்கமுடியாத அளவு தூய்மைபெற்றவை'யாக இருக்கின்றன. பூசாரிகளின் வீட்டில் உள்ள தனியறைகளில் அவைகள் மூடிவைக்கப்பட்ட பெரிய ஜாடிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை குழலுள்ள நாணல்களின் ஜோடிகளாக மூடியிடப்பெற்று விளங்கின. ஒன்றிலுள்ள சிறிய தவளைகளோடு கூடிய நீரும், மற்றொன்றினுள்ளே தானியமும் வைக்கப்பெற்றிருந்தன. இரண்டையும் அந் நாட்டுப் பருத்தியின் முறுக்கேருத நீண்ட நூலினுல் சுற்றியிருந்தார்கள். சடங்குகளுக்காக உள்ளே செல்லும் பூசாரிகளைத் தவிர வேறுயாரும் பூசாரிகளின் மருந்துக் கட்டு இருக்கிற அறையில் நுழைவதில்லை. அவ் வீட்டின் வயதான ஒரு பெண்மணியோ சிறிய பெண்ணோ, உணவு நேரத்திற்கு முன்னுல் தினமும் அந்தக் கட்டுக்கு உணவளிக்க உள்ளே செல்கிருள். யார் எதற்காக உள்ளே நுழைந்தாலும் தங்கள் காலணிகளை அகற்றிவிடுகின்றனர்.

பல சடங்குகளிலே பூசாரிகள் இருக்கவேண்டிய அவசியம் இருந்தாலும், அல்லது அவர்களே துவக்க காரியங்களைச் செய்ய வேண்டியிருந்தாலும் பூசாரிகள் பொதுச்சடங்குகளை நடத்துவதில்லை. தங்களது தூய்மையான கட்டுகளுக்கு முன்னுல் அவர்கள் செய்யும் தவம் ரகசியமாகவும் மிகத் திருவுடையதாகவும் கருதப் பெறுகிறது. ஜூன் மாதத்தில் பயிர்கள் சுமார் ஓரடி உயரம் வளர்ந்திருக்கும்போது மழை தேவைப்படுவதால் அப்பொழுது இம்மாதிரித் தவங்கள் வரிசையாக ஆரம்பிக்கப்பெறுகின்றன. முறையே ஒரு பூசாரி 'உள்ளே' செல்ல மற்றொருவன் வெளியேவர அதற்கான 'நாட்களை அவர்கள் முடிக்கின்றனர்'. பரிதிமுறை (Sun cult) போர்முறை (War cult) ஆகியவற்றின் தலைவர்கள்கூட இப் பூசாரிகளுடைய தவங்களின் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் சடங்குகளுக்கானவற்றைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு அசையாமல் உட்கார்ந்திருக்கவேண்டும். பெரிய பூசாரிகள் எட்டு நாட்களும், மற்றவர்கள் நான்கு நாட்களும் இப்படித் தவம் இருக்கவேண்டும். இந்த நாட்களிலே மழைவரும் என்று ஸூனி மக்கள் எதிர்பார்க்கிருர்கள். அப்படி மழைவந்துவிட்டால் எந்தப் பூசாரிசெய்யும் தவத்தின்போது மழை வந்ததோ அவன் தவம் முடிந்தவுடன் அவனைப் போற்றிப் புகழ்கிருர்கள். மழையைக் கொண்டுவருவதைக்காட்டிலும் அதிகமாக அவர்கள் மக்களை ஆசிசெய்கிருர்கள். அவர்களுடைய வாழ்க்கைமுறைகளில் அவர்களை விடாமல் பிடித்துக்கொள்கிருர்கள். மக்களின் காப்பாளர் என்ற தகுதியைக் காத்துக்கொள்கின்றனர். தங்கள்

தவத்தின்போது வேண்டுகிற ஒன்றை அடைந்துவிடுகின் றனர்.

‘ஏணி இறங்கும் என் எல்லாக் குழந்தைகளையும்
நான் கைகளிலே பிடித்துக்கொண்டிருக்கிறேன்;
சிறிது தூரம் சென்றுவிட்டு என் கைகளில் இருந்து
யாரும் நழுவிவிடாமல் இருக்கவேண்டும்.
ஒவ்வொரு சிறிய வண்டும், மாசுபடிந்த வண்டும்
என் கைகளில் பிடித்துக்கொள்ளப்படட்டும்;
அவைகளில் எதுவும் என் கைகளினின்று நழுவாமல்
இருக்கட்டும்.
என்னுடைய குழந்தைகளின் பாதைகள் வளம்
பெற்றிருக்கட்டும்,
அவர்கள் அதிக வயதுவரை வாழட்டும்,
அவர்களுடைய பாதைகள் வைகறை ஏரியை அடையட்டும்,
அவர்களுடைய பாதைகள் வளம்பெற்றிருக்கட்டும்.
உன்னுடைய எண்ணங்களும் இம்மாதிரியே ஆக
உனக்கான நாட்களை (தவத்தின்) நான் கழிக்கிறேன்.’

பெரிய பூசாரிகளின் தலைவர்களும், பரிதிமுறைப் பூசாரிகளின் தலைவனும், போர்முறைப் பூசாரிகளின் இரு தலைவர்களும் சேர்ந்து ஸுனி மக்களின் மன்ற உறுப்பினர்களாகவும், ஆட்சியாளர் களாகவும் அமைந்துள்ளனர். ஸுனி மக்களிடையே ஆட்சி தெய்வ ஆட்சியாக (Theocracy) விளங்குகிறது. பூசாரிகள் தூய்மைபெற்றவர்களாகவும் அவர்கள் கடமையைச் செய்யும் போது கோபப்படக்கூடாதவர்களாகவும் இருப்பதால், ஒன்று பட்ட முடிவு காணமுடியாத பிரச்சினைகள் அவர்கள் சமூகத் திற்குக் கொண்டுவரப்படுவதில்லை. ஸுனி பஞ்சாங்கப்படி அவர்கள் பெரிய விழாக்களைத் துவக்கிவைக்கின்றனர். சடங்கு களை நிர்ணயிக்கின்றனர். வினைவைப்பு, சூன்யம் ஆகியவை பற்றித் தீர்ப்பளிக்கின்றனர். நாம் எண்ணுகிறபடி காப்பாளர் களுக்கு இருக்கவேண்டிய அதிகாரமும் சட்ட வரையறையும் இவர்களுக்கு இல்லை.

பூசாரிகள் மிக உயர்ந்த தூய்மையுடையவர்களாகக் கருதப் பெற்றாலும், முகமூடிக் கடவுள்களின்முறை (Cult) மிகவும் விரும் பப்படுகிறது. ஸுனி மக்களின் தொகுதியால் அது விரும்பப் பெற்று பச்சைப் புன்னைமரம்போலச் செழித்து நிற்கிறது.

முகமூடிக் கடவுள்கள் இரண்டு வகைப்பட்டிருந்தனர். ஒன்று கச்சினர்கள் (Kachinas) என்று சொல்லப்பட்ட முகமூடிக் கடவுள்

களே உள்ள வகை, மற்ருென்று கச்சினுப் பூசாரிகளால் ஆனது. இந்தக் கச்சினுப் பூசாரிகள் இயற்கைக்கப்பாற்பட்ட உலகத்திலுள்ள தலைவர்கள். இவர்களைப்போலவும் ஸுனி நடனக்காரர்கள் முகமூடிகள்கொண்டு நடித்துக்காட்டுகின்றனர். ஸுனி மக்களின் கண்ணோட்டத்தில் இவர்களது தூய்மை, இவர்களை நடனமாடும் கடவுள்களினின்றும் பிரித்துத் தனித்த ஒருமுறையில் அமைக்கவேண்டிய அவசியத்தைக் காட்டுகிறது. ஸுனி நாட்டுக்குத் தெற்கே உள்ள வறண்ட பாலைவனத்தில் உள்ள ஓர் ஏரியின் அடியில் வசிக்கின்ற இந்த நடனமாடும் கடவுள்கள் மிகவும் தோழமையோடும் மகிழ்வோடும் உள்ளவர்கள். அவர்கள் எப்பொழுதும் நடனமாடிக்கொண்டேயிருக்கின்றனர்.. ஆனாலும், நடனமாடுவதற்கு ஸுனிக்கு வருவதையே அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் விரும்பும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது அவர்களைப்போல் வேஷம்போட்டு நடிப்பதுதான். ஒருவன் கடவுளின் முகமூடியை அணிந்துகொண்டவுடன், அந்தக் கடவுளாகவே ஆகிவிடுகிருன். அவன் மனிதனைப்போல் பேசாமல், அந்தக் கடவுளுக்குரிய ஒரு ஒலியை எழுப்புகிருன். அவன் விலக்கப்பட்ட ஒருவகையைச் சேர்ந்தவன். மிகத் தூய்மையுடையவர்கள் அனுசரிக்கவேண்டிய கடமைகளை அவன் எடுத்துக்கொள்ள வேண்டும். அவன் நடனத்திற்கு முன்னுல் தனித்திருந்துவிட்டு, தொழுகைக் குச்சிகளை நட்டுவிட்டுப் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்துப் பிறகு நடனமாடுகிருன்.

ஸுனி தெய்வங்களில் நூற்றுக்கும்மேலாக முகமூடிக் கடவுள்கள் இருக்கின்றன. அவைகளில் சில ஒரேமாதிரியான முப்பதோ அல்லது நாற்பதோ ஒன்ருகச்சேர்ந்த நடனக் குழுக்கள்; மற்றவை ஆறு திசைகளுக்காக ஆறுவித வண்ணங்கள் தீட்டப்பட்ட அறுவர் குழுக்கள் (ஸுனி விண்ணையும், மண்ணையுங்கூடத் திசைகளாகக் கொள்கிருன்). இக் கடவுள்களில் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட ஆடையணிகள், முகமூடிகள், கடவுள்களின் வரிசையிலே இடம், அதன் செய்கைகளைப்பற்றிய புராணங்கள், அது தோன்றவேண்டிய சடங்குகள் என வகுக்கப்பட்டிருக்கின்றன. குடிகளிலே வயதுவந்த ஆண்பாலரால் இந்த முகமூடிக் கடவுள்களின் நடனங்கள் நடத்தப்பெறுகின்றன. 'தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பெண்களும் இவைகளில் சேர்த்துக்கொள்ளப்படலாம். ஆனுல், அது வழக்கத்தில் இல்லை. ஏதேனும் ஒரு தடையினுல், அவர்கள் விலக்கப்படாவிட்டாலும், அவர்கள் உறுப்பினர்களாக இருப்பது வழக்கமில்லை. இன்று மூன்று பெண்கள்மட்டுமே இருக்கின்றனர். எப்பொழுதுமே இதற்கு அதிகமாக இருந்ததாக அவர்கள் மரபு சொல்லவில்லை. ஒவ்வொன்றுக்கும்

தனியாக உள்ள கிவா (Kiva) என்று சொல்லப்பெறும் சடங்கு அறைகளோடு, ஆண்கள் சமூகம், ஆறு கூட்டங்களாக அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிவாவிற்கும், அதற்குரிய அதிகாரிகளும், நடனங்களும், உறுப்பினர்களும் உண்டு.

இந்தக் கூட்டங்களில் எதில் சேருவது என்பது அக்குழந்தை பிறக்கும்பொழுது அவனது தகப்பனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. ஆனாலும், குழந்தையின் ஐந்தாம் வயதிற்குப் பிறகு ஒன்பது வயதிற்குள்ளாகத் துவக்கவிழா நடைபெறுகிறது. சடங்குகளுக்கான தகுதியை அவன் முதன்முதலாக அடைவதை அது குறிக்கிறது. டாக்டர் புன்ஸெல் (Bunzel) சுட்டிக்காட்டுகிறபடி, இத் துவக்கவிழா அவனுக்குச் சிலருக்குமட்டுமே கற்றுத்தரக்கூடிய தெய்வீக உண்மைகளை உணர்த்துவதில்லை. இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளோடு அவனுக்கு ஒரு தொடர்பை உண்டாக்குகிறது. அவனைப் பலமுள்ளவனாகவும், மதிப்புள்ளவனாகவும் அது மாற்றுகிறது. தண்டிக்கிற 'அச்சுறுத்தும் கச்சினர்கள்' துவக்கவிழாவுக்கு வந்து, தங்கள் 'யுக்கா' (Yucca) சாட்டைகளால் குழந்தைகளை அடிக்கிறார்கள். 'கெடுதியானவைகளை அப்புறப்படுத்த'வும் பிறகு விளையக்கூடியவைகளை நற்பயனுள்ளதாகச் செய்யவும் கைக்கொள்ளப்படுகிற இச் சடங்கு பேயோட்டுதல்போன்றதாகும். ஸூனி மக்களிடையே குழந்தைகளைத் திருத்துவதற்குச் சாட்டையடி கொடுக்கப்படுவதில்லை. வெள்ளையன் குழந்தையைத் தண்டிப்பதற்கு அதைக் கையாளுவதை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். துவக்கவிழாவிலே குழந்தைகள் மிகவும் பயப்படுவதாக எண்ணுகிறார்கள். அவர்கள் உரக்க அழுதால்கூட வெட்கப்படுவதில்லை. அப்படி அழுதால் அச்சடங்கு இன்னும் அதிகமாக மதிக்கப்பெறுகிறது.

பிறகு, சிறுவன் சுமார் பதினான்கு வயதடைந்து பொறுப்புகளை ஏற்கத்தக்க பருவமடைந்தவுடன் இன்னும் பலமான முகமூடிக் கடவுள்கள் சாட்டையால் அடிக்கிறார்கள். இந்த விழாவின் போதுதான் அவனுக்குக் கச்சின முகமூடி அணிவிக்கப்படுகிறது. இப்பொழுதுதான் அவனுக்கு ஆட்டக்காரர்கள் உண்மையாகவே தூய்மையான ஏரியிலிருந்துவந்த கடவுள்கள் அல்லவென்றும், அவனது உறவினரும், அண்டையிலுள்ளவர்களுமே என்றும் தெரிவிக்கப்படுகிறது. இறுதியாகச் சாட்டையடி முடிந்தவுடன் அதிலே உயரமான நான்கு சிறுவர்களை, அவர்களை அடித்த 'அச்சுறுத்தும் கச்சினர்'களுக்கெதிரில் நிறுத்துகிறார்கள். பூசாரிகள் அவர்களுடைய முகமூடிகளைக் கழற்றி சிறுவர்களுடைய தலையில் மாட்டுகிறார்கள். இப்பொழுதுதான் சிறுவர்களுக்குப் புரிகிறது.

அவர்கள் நடுங்குகிருர்கள். 'அச்சுறுத்தும் கச்சினர்'களின் கைகளிலிருந்த சாட்டைகள் இப்பொழுது முகமூடி அணிந்து கொண்டிருக்கும் சிறுவர்களிடம் கொடுக்கப்பெறுகின்றன. 'கச்சி னர்களை' அடிக்கும்படி அவர்கள் ஆணையிடப்பெறுகின்றனர். இயற்கைக்கப்பாற்பட்டவர்களுக்கு என்று, உண்மை அறியாதவர் களால் எண்ணப்படுகிற கடமைகளைத் தாங்களே ஏற்று நடத்த வேண்டுமென்ற உண்மையின் முதற்பாடமாக இது அமைகிறது. சிறுவர்கள், சாட்டையால் அவர்களை வலக்கையில் நான்குமுறை யும், இடக்கையில் நான்குமுறையும், வலக் காலில் நான்குமுறை யும், இடக் காலில் நான்குமுறையுமாக அடிக்கிருர்கள். பிறகு, எல்லாச் சிறுவர்களும் கச்சினர்களை இதேமுறையில் அடிக்கின் றனர். இதன் பிறகு, கச்சினர்கள் வெறும் போலி வேஷதாரிகள், என்ற ரகசியத்தை வெளியே அறிவித்த ஒரு சிறுவனை முகமூடிக் கடவுள்கள் கொன்றதாக ஒரு பெரும் கதையைப் பூசாரிகள் சிறு வர்களுக்குச் சொல்கின்றனர். அச் சிறுவனது தலையை வெட்டி அதைத் தூய்மையான ஏரிக்குக் காலால் உதைத்து உதைத்துத் தள்ளிச்சென்றனர். அவனுடைய உடலை மேடையின்மீது விட்டு விட்டனர். ஆகையால் சிறுவர்கள் ஒருபோதும் உண்மையைச் சொல்லக்கூடாது. அவர்கள் இந்தமுறையில் சேர்ந்துவிட்ட படியால் இனி அவர்கள் முகமூடிக் கடவுள்கள்போல நடிக்கலாம்.

அவர்களுக்கு உடனே முகமூடிகள் சொந்தமாகக் கொடுக்கப் படுவதில்லை. அவர்கள் திருமணம் செய்துகொண்டு ஓரளவு பொருள் சேர்த்தபிறகே முகமூடிகள் அவர்களுக்காகச் செய்யப் படுகின்றன. பிறகு, அவன் அந்த ஆண்டுக்காக நிறையப் பயிர் செய்துவிட்டுத் தனக்கு முகமூடியின் துவக்கவிழா தேவையென்று அவனுடைய கிவாவின் தலைவனுக்கு அறிவிப்பான். அவன் சிறுவனுக இருக்கும்போது யாரிடம் சாட்டையடி பெற்ருனே அதே கச்சினர்களால் மறுபடியும் அடிக்கப்பெறுகிருன். உடனே தன்னுடைய கிவாவைச் சேர்ந்தவர்களுக்கும், ஆட்டக்காரர் களுக்கும் விருந்தளிக்கிருன். அவனுடைய முகமூடி அவனுக்கே சொந்தமாகிறது. அதை அவன் வீட்டிலே வைத்துக்கொள் கிருன். அதனுல் அவனது வீடே உயர்மதிப்பைப்பெறுகிறது. அவன் இறந்த உடனே அதுவும் அவனேடு புதைக்கப்படுகிறது. இது அவனைத் தூய்மையான ஏரியிலுள்ள கச்சினு ஆட்டக்காரர் களோடு சேர்த்துவிடுவதாக எண்ணப்பெறுகிறது. தனக்குச் சொந்தமாக ஒரு முகமூடி இல்லாதவன், அதன் சொந்தக்கார னிடமிருந்து எப்பொழுது வேண்டுமானுலும் கடனுக அதைப் பெறலாம். அதற்குப் பதிலாக எதுவும் கொடுக்கத் தேவை யில்லை. அதை அவன் வண்ணமூட்டி தான் தேர்ந்தெடுக்கிற

எந்தக் கச்சினுவைப்போலவும் வேஷமிடலாம். அது வண்ணமூட்டப்பெற்றிருக்கும் விதத்தையும், அதற்குள்ள துணைப்பொருள்களையும் ஒட்டி பலவேறு கச்சினர்களை அது குறிக்கிறது.

கச்சினு பூசாரிகளின்முறை வேறுவிதமானது. கச்சினு பூசாரிகளின் முகமூடிகள் தேவைக்குத் தக்கவாறு தயார்செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் வெவ்வேறு வேஷங்களுக்காக அணிகள் செய்யப்படுவதில்லை. முறைச்சடங்குகளால் சூழப்பட்ட நிரந்தரமான முகமூடிகளாக அவை இருக்கின்றன. பெரிய பூசாரிகளுடைய மருத்துவக் கட்டுகளுக்கு அடுத்தபடியாக இவை, தூய்மையுடையனவாகக் கருதப்பெறுகின்றன. உலக ஆரம்பமுதல் எவ்விதம் அவைகள் சொந்தம் கொண்டாடப்பெற்றுப் பாதுகாக்கப்பெற்று வந்தனவோ, அவ்விதமே பரம்பரையாக அதே வீடுகளில் பாதுகாக்கப்பெற்றன என்று அவர்கள் சொல்லிக்கொள்கிருர்கள். ஒவ்வொன்றுக்காகவும் தனி முறைக்கூட்டங்கள் உள்ளன. ஸுனி சடங்குத் தொடர்களில் தேவைப்படுகிறபொழுது இக் கூட்டங்கள் அந்தந்த முகமூடிகளின் வேஷங்களுக்கான பொறுப்பை எடுத்துக்கொள்கின்றன. கச்சினு பூசாரிகளின் இந்த நிரந்தர முகமூடிகள் அவர்கள் தோன்றும்பொழுது, நினைவில் வைத்திருந்து வெளியிடுகின்ற நீண்ட மந்திரத்தொடர்களைப் பொறுத்திருக்கிறது. பஞ்சாங்க முறைப்படி சில சடங்குகளைச் செய்வதற்காகத்தான் இவர்கள் இருக்கிருர்கள். கச்சினர்களைப்போன்று ஆட்டமாடுவதற்கு இவர்கள் வருவதில்லை. இவர்கள்தான் வருடாந்திரச் சடங்கான ஷலாகோ (Shalako) சடங்கிலே குழந்தைகளைச் சாட்டையாலடிப்பதற்காக வருகின்றனர். இவர்கள்தான் 'புது வருடத்தைச் செய்கிருர்கள். இயற்கைக்கப்பாற்பட்ட நிலையில் 'பகல்-குழந்தைகள்' என்ற ஸுனிப் பூசாரிகளின் பிரதிநிதிகளாக இவர்கள் விளங்குகிருர்கள். இவர்கள்தாம் கச்சினர்களுடைய முக்கிய பூசாரிகள் ஆவர்.

மருத்துவக்கூட்டங்கள்தான், ஸுனி மக்களின் சடங்குமயமான அமைப்பிலே உள்ள மூன்ருவது பெரிய பிரிவு ஆகும். இம் மருத்துவக்கூட்டங்களுக்குப் பேராதரவு அளிக்கவல்லவர்கள் இயற்கைக்கப்பாற்பட்ட விலங்கு தேவதைகளாகும். அதிலே முக்கியமான தேவதை கரடியாகும். ஆட்டக்காரர்கள் கச்சினர்கள் வேடமிடுவதுபோன்று மருத்துவக்கூட்டங்கள் கரடியைப் போல வேடமிடுகின்றன. மூகமூடிக்குப் பதிலாகக் கரடியின் நகங்களோடுகூடிய முன் கால்களின் தோல்களைத் தங்கள் கைகளில் அணிந்துகொள்கின்றனர். ஆட்டக்காரர்கள் கச்சி

னர்கள் கூச்சலிடுவதைப்போன்று, விலங்கு தேவதைகள்போல் வேடமிடுபவர்கள் கரடியைப்போல் உறுமுகிறார்கள். கரடிதான் நோயைக் குணப்படுத்தவல்ல அபாரசக்தி வாய்ந்தது. அதற்கான சக்தியைப் பயன்படுத்துதல் மிகவும் வலியுறுத்தப்பெறுகிறது.

சிலருக்குமட்டுமே கற்றுத்தரக்கூடிய அறிவை மருத்துவக் கூட்டங்கள் அதிகமாகப் பெற்றிருக்கின்றன. அவைகளின் உறுப்பினன் தன் வாழ்நாள் முழுவதும் சிறிது சிறிதாகக் கற்றுக் கொள்கிறான். இந்தக் கூட்டங்களிலே சிறந்த சிலவற்றிற்கான துவக்க விழாக்களின்போது, கத்தி விழுங்குவது, எரிதணல்மீது நடப்பதுபோன்ற செய்முறைகளைக் கற்றுக்கொள்கின்றனர். தங்களுடைய 'பாதைகளை முடித்த' மருத்துவர்கள்தான் மிக உயர்ந்தவர்கள் எனக் கருதப்பெறுகின்றனர். இந்தப் பட்டத்திற்கு ஆசைப்படுபவர்கள் இதை அறிந்த ஆசான்கள் காலடியில் பல ஆண்டுகள் அமர்ந்து பயிலவேண்டும்.

நோய் கண்டவுடன் இந்த மருத்துவர்களை அழைக்கிறார்கள். மருத்துவக்கூட்டத்தின் சக்தியால் நோய் குணமாவதால் நோய் வாய்ப்பட்டவன் அவைகளிலே பங்குகொள்ளவேண்டும். தன்னைக் குணப்படுத்திய மருத்துவனின் கூட்டத்தில் அவன் பிறகு உறுப்பினனாகச் சேரவேண்டும். ஒரு பெரும் நோயிலிருந்து குணப்படுவது மூலமாக மருத்துவக்கூட்டத்திலே சேர்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் இவைகளில் அங்கத்தினராக இருக்கின்றனர். இவைகளில் சேரவிரும்புகின்ற, நோய்வாய்ப்படாதவர்களுக்கு வேறு சடங்குமுறைகளும் உண்டு. ஆயினும், அநேகம்பேர் நோயின் மூலமாகவே சேர்கின்றனர். துவக்கச் சடங்கு மிகவும் செலவுள்ள ஒன்றாகும். ஆகையால் ஒருவன் உறுப்பினனாக உறுதி செய்யப்படுமுன் பல ஆண்டுகள் கழிந்துவிடலாம். பிறகுதான், சேர்ந்தவனுக்கு ஒரு புதிய இருதயம் நாடக பாணியில் கொடுக்கப்பெறுகிறது.

ஸூனி மக்களிடையே மிகவும் மதிப்புப்பெறுகிற தொழுகைப் பீடங்களையும், தூய்மையான பொருள்களையும் இம் மருத்துவக் கூட்டத்தினர் பெற்றிருக்கின்றனர். மதிப்புயர்ந்த அழகான இறகுகளால் மூடப்பட்ட ஒரு முழு தானியக்கதிரை மருத்துவர்கள் தங்களுக்கென ஒரு போலி வணக்கப் பொருளாகப் (Fetish) பெற்றுள்ளனர். இதன் அடிப்பாகம் முடைந்த கூடையினால் மூடப்பட்டுள்ளது. அவனுடைய வாழ்நாளில் அவன் கூட்டத்தாரின் தொழுகைப் பீடங்களில் இது வைக்கப்படுகிறது. அவன் இறந்தவுடன் இதுவும் இறகுகள் பிரிக்கப்பட்டு அவனுடன் புதைக்கப்படுகிறது.

மருத்துவக்கூட்டங்களின் பெரிய பொதுவிழா அவர்கள் பனிக்கால இறுதியில் நடத்துகின்ற குடிகளின் பொதுநலனுக்காகச் செய்யப்பெறுகிறது. அந்த இரவிலே எல்லாக் கூட்டங்களும் அவர்களுக்கான அறைகளில் நடக்கின்றன. தொழுகைப் பீடங்கள் அமைக்கப்படுகின்றன. அங்கத்தினர்கள் கரடி, மற்றும் பல விலங்கு தேவதைகளைப்போல வேடமிடுகின்றனர். இதற்கு யாவரும் செல்கின்றனர். உடல்நலம்பெற்று நோயற்று வாழ்வதற்காக இது கொண்டாடப்பெறுகிறது.

ஸுனி மக்களின் எண்ணத்திலே போர், வேட்டை, வேடிக்கை செய்பவர் ஆகிய அணிகளும் மருத்துவக்கூட்டத்தோடு சேர்க்கப்படுகின்றன. ஆயினும், இவைகளுக்குள்ளே சில வேற்றுமைகளும் இருக்கின்றன. யாரேனும் ஒருவரைக் கொன்றவன்தான் போர் அணியிலே சேரமுடியும். எந்தச் சந்தர்ப்பத்தில் அவன் கொலைசெய்தான் என்பதைப்பற்றிக் கவலையில்லை. இரத்தம் சிந்தச்செய்த எவனும் 'தன் உயிரைக் காத்துக்கொள்ள' அதாவது, உயிரை வாங்கியதால் உண்டாகக்கூடிய அபாயத்தினின்றும் தப்பிக்கச் சேர்ந்தே ஆகவேண்டும். இந்தமுறையின் அங்கத்தினர்கள் தலைத்தோல் வீட்டின் (Scalp house) பொறுப்பேற்று மக்களைக் காக்கின்றனர். கிராமத்தைக் காவல்செய்யும் பொறுப்பும் இவர்கள்மீது விழுகிறது. வேட்டையாடுபவர் அணியைப்போல் இவர்கள் மருத்துவம் செய்வதில்லை. ஆடவர்மட்டுமே அங்கத்தினராக இருக்கின்றனர். வேடிக்கை செய்பவர் அணிக்கும் அவற்றிற்குரிய சில வேறுபாடுகள் உள்ளன. ஆயினும், அவைகள் மருத்துவக்கூட்டத்தைச் சார்ந்தவை என்றே கருதப்படுகிறது.

ஸுனி மக்களிடையே, சடங்குகளைப்போலவும் ஆட்டங்களைப்போலவும், வேறு எதுவும் முக்கியத்துவம் பெறவில்லை. திருமணம், விவாகரத்துபோன்ற சமூக அமைப்புகளை மிகச் சாதாரணமாக, ஒவ்வொருவரும் தனித்தனியாக ஏற்பாடு செய்துகொள்கின்றனர். ஸுனி மக்களின் பண்பாடு தனியொருவனைச் சார்ந்த காரியங்களில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. காதலின்றியே திருமணம் ஏற்பாடு செய்யப்பெறுகிறது. மரபுவழியே ஆண்களிடம் பேசுவதற்குப் பெண்களுக்குச் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. மாலையில் எல்லாப் பெண்களும் தலைமேல் நீர்க்குடங்களைத் தாங்கி ஊற்றுக்கு நீர் கொண்டுவரச் செல்லும்போது யுவன் ஒருவன் ஒரு பெண்ணை வழிமறித்துக் குடிப்பதற்கு நீர் கேட்கலாம். அவனைப் பிடித்திருந்தால் அவளும் அவனுக்கு நீர் கொடுப்பாள். முயல் வேட்டையாட எறிகழி

(throwing stick) ஒன்றைச் செய்து தரும்படி அவன் அவளைக் கேட்டுக்கொள்ளலாம். பிறகு அவன் கொன்ற முயல்களை அவளுக்குக் கொடுப்பான். இதைத் தவிர வேறுவிதமான சந்திப்புகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படுவதில்லை. பல ஸுனிப் பெண்கள் இதைத் தவிர வேறு எந்தவித அனுபவமுமின்றித் திருமணம் செய்துகொண்டிருக்கின்றனர்.

அந்த யுவன் பெண்ணைக்கேட்க அவளுடைய தகப்பனை அணுக எண்ணி அவள் வீட்டிற்குச் செல்கிறான். ஸுனி மக்கள் வீட்டிற்கு வருபவர்களுக்கு அளிக்கும் உணவை உண்டபின், தந்தை, 'நீ எதையோ நாடிவந்திருக்கிறாய்' என்று கூறுவான். அதற்கு அவ்விளைஞன் 'ஆம், நான் உன் மகளை நினைந்துதான் வந்தேன்' என்று பதிலுரைப்பான். தகப்பன் தன் மகளைக் கூப்பிட்டு 'அவளுக்காக நான் பேசமுடியாது அவளே சொல்லட்டும்' என்றுரைப்பான். அவள் இணங்கினால், தாய் பக்கத்து அறையிலே ஒரு படுக்கை தயார்செய்கிறாள். யுவனும் பெண்ணும் அங்கே படுக்கின்றனர். மறுநாள் அவள் அவனுடைய தலைமயிரைக் கழுவுகிறாள். நான்கு நாட்களுக்குப்பின் அவள் சிறந்த ஆடைகளை அணிந்து, அவனுடைய தாயார் வீட்டிற்கு ஒரு பெரிய கூடை நிறைய மாவைப் பரிசாக எடுத்துச்செல்கிறாள். வேறு எந்தவிதச் சடங்கும் இதற்காகச் செய்யப்படுவதில்லை. அவர்களுக்குள்ளே யாரும் இதன்மேல் கவனம் செலுத்துவதில்லை.

அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாவிட்டாலும், அவர்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும் பிரிய நினைக்கின்றனர். அதற்காக மனைவி சடங்கு விருந்துகளில் பணிசெய்யப் போவாள். அங்கே தனக்குத் தகுந்த ஓர் ஆடவனுடன் பேச்சுக் கொடுத்து சந்திக்க ஏற்பாடு செய்துகொள்வாள். ஸுனி மக்களிடையே ஒரு பெண்ணுக்கு, புதிய கணவனை அடைவது கடினமல்ல. ஆண்மக்களைவிட பெண்கள் குறைவாகவே இருக்கின்றனர். தன் தாயின் வீட்டில் வாழ்வதைவிட மனைவியோடு வாழ்வதை ஆடவன் பெருமையாகக்கொள்கிறான். ஆகையால் ஆடவர் என்றும் தயாராக இருக்கின்றனர். தனக்கு வேறொரு கணவன் கிடைப்பான் என்ற நிச்சயம் ஏற்பட்டவுடன், மனைவி, தன் கணவனது பொருள்களை ஒன்றுசேர்த்து வாயிற்படியில் வைத்துவிடுவாள். இவை அதிகமல்ல; அவனுடைய மற்றொரு சோடி காலணிகள், ஆட்டத்திற்கான உடை, இடுப்பிலே அணியும் கட்டு, தொழுகைக் குச்சிகளுக்கான மதிப்புயர்ந்த இறகுகள் வைக்கும் பெட்டி, தொழுகைக் குச்சிகளுக்கான வண்ணச்சட்டிகள், மூகமூடியைத் திருத்தத் தேவைப்பட்டவை ஆகியவை

களாகும். இவைகளைவிட இன்னும் அதிக முக்கியமான சடங்குப் பொருள்களை அவன் தன் தாயின் வீட்டிலிருந்து கொண்டுவருவதில்லை. மாலையில் அவன் வீடுதிரும்பும்பொழுது இவைகளை வாயிற்படியில் பார்த்ததும், அழுதுவிட்டு இவைகளோடு தன் தாயின் வீட்டிற்குச் சென்றுவிடுகிறான். அவனும் அவனது குடும்பத்தாரும் அழுகின்றனர். இதை ஒரு துரதிருஷ்டமாகக் கருதுகின்றனர். குடியிருப்பை இப்படி மாற்றிக்கொள்வதைப்பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. அவர்கள் இதற்காக அதிக உணர்ச்சி வசப்படுவதில்லை. கணவனும் மனைவியும் சில குறிப்பிட்ட சட்டங்களையொட்டியே நடக்கின்றனர். இச் சட்டங்களில் அதிகமான உணர்ச்சிக்கோ, பொருமைக்கோ, பழிவாங்குதலுக்கோ இடமில்லை. மறுக்கப்படுதலை ஒப்புக்கொள்ளமுடியாத அளவு பாசமும் ஏற்படுவதில்லை.

திருமணத்தைப்பற்றியும் விவாகரத்தைப்பற்றியும் ஸுனி மக்கள் அதிகக் கவனம் செலுத்தாவிட்டாலும், பெரும்பாலான ஸுனித் திருமணங்கள் ஆயுளின் பெரும்பகுதிக்கு நீண்டு நிலைத்திருக்கின்றன. சச்சரவை விரும்பாமல் திருமணங்கள் மிக அமைதியாகவே நடக்கின்றன. நம்முடைய நாகரிகத்தில், மரபுவழியே உள்ள சக்திகளெல்லாம் திருமணத்தைப்பற்றி நிற்பதைப்போல, ஸுனி மக்களிடையே இல்லாததனால் இத் திருமணங்கள் குறிப்பிடத்தக்கவை.

தூய்மையான போலி வழிபாட்டுக்குரிய பொருள்களை (fetish) சொந்தம் கொண்டாடவும், பாதுகாத்துக்கொள்ளவும் சடங்குமுறைகளால் ஒன்று கூடுகின்ற தாய்வழிக் குடும்பங்களாக ஸுனி மக்கள் வாழ்கின்றனர். வீடும், அதில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தானியமும், பாட்டி, அவளுடைய சகோதரிகள், அவளுடைய பெண்கள், பெண்களின் பெண்கள் ஆகிய பெண்மக்களுக்கே சொந்தமாகும். திருமணங்கள் என்ன ஆனாலும் அவ்வீட்டுப் பெண்கள் தங்கள் வீட்டுடனே தங்கியிருக்கின்றனர். அவர்கள் ஒருமுகமாக இருக்கின்றனர். அவர்களுக்குச் சொந்தமான, தூய்மையான பொருள்களுக்கு உணவளித்துக் காத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய ரகசியங்களை அவர்களே வைத்துக்கொள்கின்றனர். அவர்களுடைய கணவர்கள் வெளியாராகக் கருதப்பெறுகின்றனர். வேறு பிரிவுகளைச்சேர்ந்த வீடுகளில் மணம்செய்துகொண்ட அவர்களுடைய சகோதரர்கள் முக்கியமான காரியங்களுக்குத் தங்கள் வீட்டோடு வந்துசேருகின்றனர். தொழுகைப் பீடத்தின் முன்னால் தூய்மையான பொருள்களை எடுத்துவைக்கும் காலங்களில் அவர்கள் திரும்பிவருகின்

றனர். அவர்கள்தாம் தூய்மையான கட்டுகளைப்பற்றிய மந்திரங்களைச் சொற்சுத்தமாக அறிந்துகொண்டு அவைகளை என்றும் நிலைத்திருக்கச் செய்கின்றனர். பெண்கள் இதைச் செய்வதில்லை. ஓர் ஆடவன் எல்லா முக்கியமான சந்தர்ப்பங்களுக்கும் தன் தாயின் வீட்டை அடைகிறான். தாய்க்குப் பிறகு அது தன் சகோதரியின் வீடாக இருக்கிறது. திருமணம் ரத்துசெய்யப்பட்டாலும் அவன் அந்த வீட்டுக்குப் போகிறான்.

ஸுனி மக்களிடையே, வீட்டைச் சொந்தம் கொண்டாடுவதிலும், தூய்மையான பொருள்களைப் பாதுகாத்துக்கொள்வதிலும் ஒன்றுபடுகிற இந்த இரத்த சம்பந்தமான கூட்டந்தான் மிக முக்கியமானது. அது நிரந்தரமானதாயும், பொதுக்கவலைகளையுடையதாயும் உள்ளது. ஆனால், பொருளாதாரமுறையிலே இயங்குகிற கூட்டமாக அது இல்லை. மணமான ஒவ்வொரு மகனும், சகோதரனும் தங்கள் தங்கள் மனைவியின் களஞ்சியத்தைத் தானியத்தினால் நிரப்பவே பாடுபடுகிறான். தன்னுடைய தாயின் அல்லது சகோதரியின் வீட்டில் வேலைசெய்வதற்கு ஆண்கள் இல்லாவிட்டால் அவன் தனது இரத்த சம்பந்தமான கூட்டத்திற்காகத் தானியக் கழனிகளைக் கவனிக்கிறான். பாட்டி, அவளுடைய கணவன், அவளுடைய பெண்கள், அவர்களுடைய கணவன்மார்கள் ஆகியவர்கள் சேர்ந்து வசிக்கின்ற வீடு பொருளாதாரமுறையிலே ஒன்றுபட்டதாகும். பொருளாதார முறையிலே இந்தக் கணவன்மார்கள் சேர்ந்திருந்தாலும் சடங்குகளுக்கான கூட்டத்திலே இவர்கள் வெளியார்களாகவே கருதப் பெறுகின்றனர்.

பெண்மக்களிடையே முரண்பாடுகளுக்கு இடமில்லை. தங்கள் கணவன்மாருடைய கூட்டத்தோடு அவர்கள் எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. ஆனால், எல்லா ஆண்களுக்கும் இரண்டுவிதத் தொடர்புகள் இருக்கின்றன. ஒரு கூட்டத்திலே அவர்கள் கணவர்களாகவும் மற்றொன்றில் சகோதரர்களாகவும் இருக்கின்றனர். போலி வணக்கத்திற்குரிய பொருள்களை மதிக்கின்ற சில முக்கியமான குடும்பங்களில் சகோதரனாக ஒருவன் கொண்டுள்ள தொடர்பே, கணவனாகக்கொண்டுள்ள தொடர்பைக்காட்டிலும் மேலானதெனக் கருதப்பெறுகிறது. நம்மிடையே குடும்பத்திற்கான உணவைத் தேடுபவன் என்ற உரிமையை ஓர் ஆடவன் அடைவதுபோலல்லாமல், வீட்டின் தூய்மையான பொருள்களிடம் அவன் கொண்டுள்ள தொடர்பையொட்டி உரிமைகொள்கிறான். தன் மனைவியின் வீட்டிலுள்ள சடங்கு முறைகளுக்கானப் பொருள்களின்மீது உரிமையில்லாத கணவன், தன் குழந்தைகள் வயதடையும்போது சிறிது சிறிதாக ஒரு தகுதி

யைப் பெறுகிருன். சுமார் இருபது ஆண்டுகள் ஒரு வீட்டில் வாழ்ந்தபிறகு, குழந்தைகளின் தகப்பன் என்ற உறவினுல் சிறிது அதிகாரத்தை அடைகிருன். அக் குழந்தைகளின் தாயின் கணவன் என்ருே, குடும்பத்திற்காக உணவு கொடுப்பவன் என்ருே அவன் அந்த அதிகாரத்தைப் பெறுவதில்லை.

குடும்பத் தொடர்புகளை நிர்ணயிப்பதுபோன்றே பொருளாதாரக் காரியங்களுக்கும் ஸுனி மக்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை. மற்ற ப்யூப்லோ மக்களைக்காட்டிலும், ஸுனி மக்கள் செல்வந்தர்களாக இருந்தனர். அவர்களுக்குத் தோட்டங்களும், பேரிக்காய்த் தோட்டங்களும், ஆடுகளும், வெள்ளியும், நீலக்கற்களும் இருந்தன. தனக்காக ஒரு முகமூடி தயார்செய்துகொள்ள ஒருவன் தகுதிபெறும்போதும், சடங்குக்கான மந்திரத்தைக் கற்றுக்கொள்வதற்குக் கட்டணம் செலுத்தும்போதும், ஷலாகோவின்போது குடிகளின் முகமூடிக் கடவுள்களை வரவேற்கும் போதும், இவை அவனுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஷலாகோ நடனத்திற்காக அவன் புதுவீடு ஒன்று கட்ட வேண்டும். அதைத் தேவதைகள் ஆசிகூறுவார்கள். வீடு கட்டுகிறவர்களுக்கு அவன் அந்த ஆண்டு முழுவதும் உணவளிக்கவேண்டும். வீட்டு உத்தரங்களுக்காகப் பெரிய மரங்களை அவன் தயார்செய்யவேண்டும். இறுதிச் சடங்கின்போது எல்லாக் குடிகளையும் விருந்திட்டு உபசரிக்கவேண்டும். அவன் எடுத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புகள் எண்ணிலடங்கா. முதல் ஆண்டிலேயே அவன் இதற்காக அதிகமாகப் பயிர்செய்ய வேண்டும். தன்னுடைய ஆடுகளை அதிகமாகப் பெருக்க வேண்டும். அவனுக்கு அவனுடைய பிரிவைச்சேர்ந்த கூட்டத்தார் உதவலாம். ஆனுல், அவன் அவைகளைத் திருப்பித் தந்து விடவேண்டும். ஒரு கௌரவமுள்ள மனிதனுக்கு, இப்படிச் செலவாகும் செல்வம் இன்றியமையாததாகும். அவன் எடுத்துக்கொண்ட சடங்குக்கான ஒரு தகுதியை மட்டுமே அவன் கவனிக்கிருன். அதற்காகச் செலவாகும் எதையும் அவனே அல்லது மற்றவர்களோ கவனிப்பதில்லை. போலி வணக்கத்திற்குரிய பொருள்களைப் பெற்றிருக்கும் குடும்பம்தான், அந் நாட்டு வழக்கிலே, 'மதிப்புள்ள' குடும்பமாகும். பல சடங்குகளுக்கான தகுதியைப் பெற்றிருப்பவன்தான் முக்கியமானவன்.

செல்வம் மிகக்குறைவான அளவிலேதான், அவர்களுடைய உரிமைச் சடங்குகளின் பரிவர்த்தனையிலே பயன்படுகிறது. தனி ஒருவனுக்குச் சொந்தமான சடங்குக்கான பொருள்கள், அதிகச் செலவினுலும், முயற்சியாலும் அடையப்பெற்ருலுங்கூட அவை

களை உபயோகிக்கத் தெரிந்த எவனும் இனமாக அவைகளை உபயோகிக்கலாம். தகுதிபெருதவர்களால் உபயோகிக்கக் கூடாத அளவு அபாயமுள்ள சில தூய்மைப் பொருள்களும் உள்ளன. ஆனல், இம்மாதிரித் தடைகள் சொத்துகளினல் ஏற்பட்டவை அல்ல. வேட்டைக்கான போலிவணக்கத்திற்குரிய பொருள்கள் வேட்டையணிக்குச் சொந்தமானவையாளுலுங்கூட வேட்டைக்குச் செல்லும் எவனும் அவைகளை எடுத்துச் செல்லலாம். அந்தத் தூய்மையான பொருள்களை உபயோகிக்கத் தகுந்த பொறுப்புகளை அவன் ஏற்கவேண்டும். அவன் தொழுகைக் குச்சிகளை நடவேண்டும். நான்கு நாட்களுக்குப் பிரம்மசரியம் கடைப்பிடித்து நலம் செய்பவனுக இருக்கவேண்டும். ஆனல், அவன் கட்டணம் ஏதும் செலுத்தவேண்டியதில்லை. போலிவணக் கத்திற்கான பொருள்களைத் தனிச்சொத்தாகக் கொண்டிருப்பவர் கள் அவைகளின் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளின்மேல் தனி உரிமை கொண்டாடுவதில்லை. அதேபோல் தனக்கென்று ஒரு முகமூடி இல்லாதவன் தாராளமாக ஒன்றைக் கடனுகப்பெறலாம். அதனல் அவன் பிச்சைக்காரனுகவோ அல்லது கெஞ்சிக்கேட்பவ னுகவோ கருதப்பெறுவதில்லை.

ஸுனி மக்களில், இதுபோன்று சடங்குப் பொருள்களைச் சொந்தமாகக் கொண்டவர்களுக்கும், அவைகளைப் பயன்படுத்து வோருக்குமிடையே உள்ள வேறுபாடுகளைப்போலவே மற்ற எல்லாப் பொது ஏற்பாடுகளும் செல்வத்தை மதியாது இருக் கின்றன. பல சடங்கு உரிமைகள்கொண்ட பிரிவிலே உறுப்பி னனுக இருப்பது செல்வத்தைக்காட்டிலும் மதிக்கப்பெறுகிறது. ஒரு குறிப்பிட்ட பரம்பரையைச் சேர்ந்தவன் என்பதற்காக ஒரு ஏழைகூட பலசடங்குகளிலே பங்குகொள்ள அழைக்கப்படுகிருன். சடங்குகளிலே பங்குகொள்வது ஒருமக்கள்குழுவின் பொதுப் பொறுப்பாகும். வாழ்க்கையின் மற்ற அமிசங்களைப்போலவே, சடங்குகளில் தகுதியேற்கும் ஒருவன் அவனுடைய குழுவின் சார் பாகவே அதை ஏற்கிருன். அவன் ஏழையாக இருந்தால்கூட அவனது கிவாவைச் சேர்ந்தவர்களோ அவனது குடும்பத்தாரோ சடங்குக்குத் தேவையான பொருள்களை அளிக்கிருர்கள். இம்மாதிரி பங்குகொள்வதால் அந்தக் குழுச்சடங்குகளின் ஆசி யைப்பெறுவதால் அது லாபமாகக் கருதப்பெறுகிறது. சடங்கு களில் சேர்த்துக்கொள்வதோ அல்லது அவைகளினின்று விலக்கப் படுவதோ ஒருவனுடைய சொத்துகளைப் பொறுத்ததன்று.

ப்யூப்லோ மக்கள் சடங்குகள் நிறைந்த வாழ்க்கையையுடை யவர்கள். வட அமெரிக்கா, மெக்ஸிகோ இவைகளின் பக்க

ளோடு அவர்கள் மாறுபட்டு இருப்பது இப்படிப்பட்ட வாழ்க்கை யினுல் மட்டுமல்ல. அவர்களிடையே மிக அதிகமாகக் காணப் படும் சடங்குகளைவிட இந்த வேறுபாடு இன்னும் ஆழமாகப் பதிந் துள்ளது. மெக்ஸிகோவிலுள்ள அஸ்டெக் (Aztec) நாகரிகமும் ப்யூப்லோ மக்களுடையதைப்போன்று சடங்குமயமாக இருந்தது. பரிதி நடனம் (Sun Dance), ஆண்களின் குழுக்கள் புகையிலை முறைகள், போர்ச்சடங்குகள் ஆகியவைகொண்ட சமவெளி இந்தியர்களின் (Plain Indians) நாகரிகம்கூட சடங்குகள் நிறைந்த தாக இருந்தது.

கிரேக்க, சோக (tragedy) நாடகங்களை வர்ணிக்கும் நியட்ஷி (Nietzsche) கூறுகிறபடி ப்யூப்லோ மக்களுடைய பண்பாடும் மற்ற வட அமெரிக்கப் பண்பாடுகளும் அடிப்படையான வேறுபாடு களைக்கொண்டுள்ளன. வாழ்க்கையில் நேர் எதிரிடையான இரு இயல்புகளை அவர் வர்ணித்திருக்கிறார். டையோனீஷியன் (Dionysian) முறையிலே ஒருவன் 'வாழ்க்கையின் சாதாரண வரை யறைகளை ஒழித்துவிட்டுத்' தன் ஐம்புலன்களால் ஏற்படுகிற சட்ட திட்டங்களை மீறி வேறொரு உணர்ச்சிநிலையை அடைய விரும்பு கிறான். தன் அனுபவத்திலும், சடங்குகள் மூலமும் எல்லைகளைக் கடந்து நிற்கின்ற ஒரு மனோநிலையை, ஒரு தீவிர நிலையை அடை வதற்கே டையோனீஷியன் விரும்புகிறான். போதையேறும் போது இப்படிப்பட்ட ஒரு மனநிலை கிடைப்பதாக எண்ணுகிறான். ஓர் ஆவேசத்தில் உண்டாகிற வெளிச்சங்களை அவன் மதிக் கிறான். ப்ளேக் (Blake) சொல்லுகின்ற 'அறிவென்ற அரண் மனைக்கு அளவுக்குமீறிய செயல்களே பாதை' என்பதை நம்பு கிறான். அப்போலோனியன் (Apollonian) என்ற முறையில் ஒருவன் இதை நம்பாமல் இப்படிப்பட்ட அனுபவங்கள் எப்படியிருக்கும் என்றுகூட அறிவதில்லை. தன்னுடைய உணர்வுள்ள வாழ்க்கை யில் இவைகளைச் சட்டத்திற்குப் புறம்பாக எண்ணுகிறான். 'ஹெல்லனிக் உணர்விலே அளவாக உள்ள ஒரு சட்டத்தையே' அவன் 'அறிவான்'. அவன் பாதையின் நடுவே சென்று, குறிப் பிட்ட எல்லைகளுக்குள்ளேயே நின்று, பிரிக்கின்ற மனோநிலை களோடு விளையாடுவதில்லை. நியட்ஷி அருமையாகச் சொல் கிறார்: 'அவன் ஆட்டத்தின் உணர்ச்சிநிலைகளில்கூட அவன் அவனாகவே தன்னுடைய சாதாரணப் பெயருடன் இருக்கிறான்.'

தென்மேற்கு ப்யூப்லோ மக்கள் அப்போலோனியன் முறை யைச் சேர்ந்தவர்கள். ப்யூப்லோ மக்களுக்கும், அவர்களைச் சுற்றி யிருக்கும் மற்றக் குடிகளுக்கும் உள்ள வேறுபாடு, நியட்ஷி சொன்னபடி, அப்போலோனியனுக்கும் டையோனீஷியனுக்கும்

உள்ள வேறுபாடுகளை முற்றிலும் ஒத்திருக்கவில்லை. நான் எடுத்துக்காட்டியிருக்கும் சில பகுதிகள் உண்மையான வர்ணனை என்றாலும், கிரேக்க மக்களிடையே உள்ள சில முன்னேற்றங்கள் தென்மேற்கு இந்தியர்களிடையே காணப்படவில்லை. அது போலவே இவர்களிடையே உள்ள சில முன்னேற்றங்கள் கிரேக்கரிடத்திலே இல்லை. கிரேக்க மக்கள் பண்பாட்டிலிருந்து சில வார்த்தைகளை நான், கிரேக்க மக்கள் நாகரிகத்தை அமெரிக்கப் பழங்குடிகளின் நாகரிகத்தோடு ஒப்பிடுவதற்காகப் பயன்படுத்தவில்லை. ப்யூப்லோ மக்கள் பண்பாட்டிற்கும் மற்ற அமெரிக்க இந்தியர்களுடைய பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை நன்றாக எடுத்துக்காட்டவேண்டி, நான் அச் சொற்களைப் பயன்படுத்துகிறேன்; கிரேக்க நாட்டில் உள்ள எல்லா வாழ்க்கை ஈடுபாடுகளும் அமெரிக்கப் பழங்குடிகளிடம் இருக்கின்றன என்பதற்காக அல்ல.

கிரேக்கரைக்காட்டிலும் ப்யூப்லோ மக்களிடையே இந்த அப்போலோனியன்முறை தீவிரமாக இருக்கிறது. கிரேக்கரிடத்தில் ஒரேவித மனப்பான்மை இருக்கவில்லை. அப்போலோனியன் வாழ்க்கைமுறையில் இருக்கவேண்டிய தனிமனிதன்மீதுள்ள அவநம்பிக்கை, குறிப்பாகக் கிரேக்கரிடத்திலே ப்யூப்லோ மக்களைப்போன்று அமையவில்லை. கிரேக்கருக்கு எதிர்ப்பட்ட சக்திகளினால் பாதிக்கப்பட்டு இம்முறை அரிதாகிவிட்டது. ஆனால், ஸுனி மக்களின் நிறுவனங்களும் வாழ்க்கைக் குறிக்கோள்களும் இவ் விஷயத்தில் கடுமையாக இருந்தன. அப்போலோனியனுக்குத் தெரிந்த எல்லைகள், பாதையின் மத்தி என்பதெல்லாம் அவன் மக்களுடைய மரபைக் குறிக்கிறது. அவைகளின் நடுவில் அவன் இருக்கவேண்டும் என்பது அவன் மரபுவழியே நடக்கவேண்டும் என்று குறிப்பிடுவதாகும். ஆகையால் மரபுக்கு எதிராக உள்ள எவையும் மிகக் குறைவாகவே அவர்களது நிறுவனங்களில் வைக்கப்பெறுகின்றன. தனிமனிதனைச் சார்ந்துநிற்கும் பண்பு இப்படிப்பட்ட ஒன்றாகும். மரபைச் சீர்படுத்திப் பெரிதாக்குவதாக அமைந்தாலும், தென்மேற்கிலுள்ள அப்போலோனியன் சித்தாந்தப்படி, இம் முறை பிரித்துவிடும் தன்மைபெற்றதாகும். ப்யூப்லோ மக்கள் இம் முறையை முற்றிலும் தடுத்துவிடவில்லை. எந்த ஒரு பண்பாடும் கூடுதலும் மாறுபாடுமின்றி இருக்கமுடியாது. ஆனால், எம் முறையில் இந்த மாறுபாடுகள் வருகின்றன என்பதை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். தனியொரு மனிதனுக்குச் சுதந்திரம் அளிக்கும் எந்த நிறுவனமும் புறக்கணிக்கப்படுகிறது.

ப்யூப்லோ மக்களின் வாழ்க்கை ஈடுபாடுகளை அறிய, அவர்கள் எந்தப் பண்பாடுகளிலிருந்து தனித்து வாழ்கிறார்களோ,

அந்தப் பண்பாடுகளை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது வட அமெரிக்காவின் மற்றையப் பண்பாடுகளைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும். ஒப்பிட்டுப்பார்ப்பதன்மூலமாக, எந்த ஒரு சக்தியைக்கொண்டு ப்யூப்லோ மக்கள் அவர்களைச் சுற்றியுள்ள அமெரிக்கப் பழங்குடிகளின் குணாதிசயங்களை அணுகவொட்டாமல் தடுத்துவருகிறார்கள் எனத் தெரியும். மெக்ஸிகோ மக்கள் உட்பட எல்லா அமெரிக்க இந்தியர்களும் தீவிர டையோனீஷியன் முறையைக் கொண்டவர்கள். அவர்கள் தங்கள் ஐம்புலன்களின் அறிவைத் தாண்டிச்செல்ல ஒரு பலாத்காரமுறையை மதிப்பவர்கள். அம் முறைகளால் ஏற்படும் அனுபவத்தைச் சிறப்பாகக் கருதினர்.

ப்யூப்லோவுக்கு வெளியே உள்ள வட அமெரிக்க இந்தியர்கள் ஒரேவிதமான பண்பாட்டைப் பெற்றிருக்கவில்லை. அவைகள் முரண்பாடுகளோடு, முக்கியமாக எட்டுவகைத் தனித்தனிப் பண்பாட்டைக்கொண்ட பகுதிகளாகப் பிரிந்திருந்தன. அவைகளினூடே அடிப்படையான டையோனீஷியன் பழக்கங்கள் சிறிது மாறுபட்டோ அல்லது வேறு சாயலிலோ இருக்கின்றன. நாம் ஏற்கெனவே சொல்லியபடி ஒரு கனவின்மூலமோ அல்லது தோற்றத்தின் (vision) மூலமோ இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப்பெறுதல் அவைகளில் முக்கியமான ஒரு முறையாகும். மேற்கத்திய சமவெளிகளில், தன்னை மிகவும் துன்புறுத்திக்கொள்வதன்மூலம் ஆண்கள் இம்மாதிரித் தோற்றங்களை அடைய எண்ணினர். தங்கள் கைகளில் உள்ள தோலைக் கிழித்தெடுத்தார்கள். விரல்களை வெட்டி எறிந்தார்கள். தோள்களின் அடிப்பக்கத்தில் உள்ள தசைகளில் பட்டைகளைக் கட்டிக்கொண்டு மிக உயரமான கம்பங்களிலிருந்து தொங்கினார்கள். அதிக நாட்களுக்கு உணவும் நீருமின்றி இருந்தார்கள். தினசரி வாழ்க்கையில் இல்லாத ஓர் அனுபவத்தை அடைய அவர்கள் எல்லாவிதமான வழிகளையும் கையாண்டனர். சமவெளிகளில், வயதேறிய ஆண்களே இப்படிப்பட்ட தோற்றங்களை நாடிச்சென்றனர். சில சமயம் கைகள் பின்னால் கட்டப்பட்டு அசையாமல் நின்றனர். அவர்களுக்கு ஆசி கிடைக்கும்வரை நகராமல் ஓரிடத்திலேயே நின்றனர். மற்றக் குடிகளில், சில சமயம் ஆபத்தான இடங்களுக்கு வெகுதூரம் அலைந்து திரிந்தனர். சில குடிகள் ஆபத்து நிறைந்த இடங்களையும் செங்குத்தான மலைச் சரிவுகளையும் தேர்ந்தெடுத்தனர். எப்பொழுதும் ஒருவன் இதற்காகத் தனித்தே சென்றான். இயற்கைக்கப்பாற்பட்ட அனுபவம்வேண்டி ஒருவன் கம்பத்திலே கட்டப்பட்டுத் தொங்க

வேண்டியிருந்தால் அவனுக்கு ஓர் உதவியாளனும் கூடவே சென்று தன் வேலையை முடித்துவிட்டுத் திரும்பிவிடுவான்.

எந்தத் தோற்றத்தை ஒருவன் விரும்புகிருனே அதன்மேல், நிலையாக மனதைச் செலுத்தவேண்டும். மனதை ஒரே நிலையில் இருத்துவதுதான் அவர்கள் நம்பியிருந்த செய்முறையாகும். வயதான மருத்துவர்கள் 'எப்பொழுதும் அதையே நினைத்துக் கொண்டிரு' என்று சொல்வார்கள். கஷ்டப்படுகிறவன்மீது அனுதாபங்கொண்டு அவன் விரும்பியதை ஆவிகள் கொடுத்து விட, சில சமயம் முகத்தைக் கண்ணீரால் நனைத்து வைத்திருக்க வேண்டும். அடிக்கடிப் பிரார்த்தனைகளில் 'நான் ஓர் ஏழை. என்மீது இரக்கங்காட்டு' என்று சொல்கிருர்கள். மருத்துவர்கள் 'உன்னிடம் ஒன்றும் வைத்துக்கொள்ளாதே, ஆவிகள் உன்னைத் தேடிவரும்' என்று கற்றுக்கொடுத்தார்கள்.

மேற்கத்திய சமவெளிகளிலே, தோற்றம் ஏற்படும்பொழுது அவை அவர்கள் எதிர்பார்க்கின்ற வெற்றியையும் ஆயுளையும் நிர்ணயிக்கின்றன என்று நம்பப்படுகிறது. தோற்றம் உண்டாகா விட்டால் தோல்வி நிச்சயம் ஏற்படும். 'நான் ஏழையாகப் போகிறேன். அதனுல்தான் எனக்குத் தோற்றம் ஏற்படவில்லை' என்று சொல்லப்பெறுகிறது. தோற்றம் நோயைக் குணப் படுத்துவதுபோல ஏற்பட்டால் அவன் குணப்படுத்தும் சக்திகளைப் பெறுகிருன். போர் தோற்றமாக அமைந்தால், அவன் வீரனுக்குரிய சக்திகளைப் பெறுகிருன். ஒருவன் 'இரட்டைப் பெண்களை'க் கண்டுவிட்டால், உடனே பெண்களுக்குரிய பழக்கங்களையும், வேலைகளையும் செய்ய ஆரம்பித்துவிடுகிருன். புராணத்திலுள்ள 'நீர்ப்பாம்பி'னுல் ஆசிகூறப்பட்டால், அவன் தீங்கு செய்வதற்குரிய இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப் பெறுகிருன். இப்படி ஒரு சூன்யக்காரனுவதற்குக் கட்டணமாகத் தனது மனைவி, குழந்தைகள் ஆகியோருடைய உயிர்களைக் காவு கொடுக்கிருன். ஒரு குறிப்பிட்ட தொழிலில் பலத்தையோ, வெற்றியையோ கோருபவன் இம்மாதிரித் தோற்றங்களை நாடினுன். போருக்கும், நோயைக் குணப்படுத்துவதற்கும், இன்னும் எருமைகளைக் கூப்பிட, குழந்தைகளுக்குப் பெயரிட, துக்கம்கொண்டாட, பழிவாங்க, இழந்த பொருள்களைக் கண்டு பிடிக்க ஆகிய பல காரியங்களுக்கும் அவை அவசியமாக இருந்தன.

தோற்றமானது கண்களினுலோ காதுகளினுலோ ஏற்படுகிற பிரமையாக இருக்கலாம்; அப்படி இல்லாமலும் இருக்கலாம். பல சமயங்களில் விலங்குகள் தோன்றுவதாகச் சொல்லப்

பெறுகின்றன. முதலில் தோன்றும்பொழுது அது ஒரு மானிட உருவிலே இருந்து, பிறகு இறைஞ்சுபவனுக்கு இயற்கைக் கப்பாற்பட்ட பழக்கங்களுக்காக அவனோடு பேசி, ஒரு பாட்டையோ சூத்திரத்தையோ கொடுத்தது. அது திரும்பிச் செல்லும்போது விலங்காக மாறிவிட்டது. அப்பொழுது, தன் ஆயுள்பூராவும் வைத்துக் காக்கவேண்டிய மருத்துவக்கட்டுக்கு, எந்தவகையான தோல், எலும்பு அல்லது இறகுகள் தான் தன் அனுபவத்தின் ஞாபகச்சின்னமாகச் சேகரிக்கவேண்டும் என்று அவனுக்குப் புலப்படுகிறது. சில அனுபவங்கள் மிகச் சாதாரண மானவை. இயற்கையோடு ஒன்றிவிடுகிற சில மன எழுச்சிகளைப் பெரிதாக மதிக்கும் குடிகளும் இருந்தனர். ஆற்றங்கரையிலே ஒருவன் தனித்திருக்கும்போதோ அல்லது ஒரு பாதையைப் பற்றிச் சென்றுகொண்டிருக்கும்போதோ ஏற்படுகிற சில மன நெகிழ்ச்சிகளைப்போன்ற சாதாரண நிலைகளும் தோற்றங்களாக மதிக்கப்பெற்றன.

இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகள் கனவு மூலமாக அவர்களுக்கு வந்திருக்கலாம். சில தோற்றங்களைப்பற்றிய விவரங்கள், கண்டிப்பாகத் தூக்கத்தின்போதோ அல்லது வேறு சமயத்திலோ ஏற்பட்ட கனவு அனுபவங்களாகவே காண்கின்றன. சில குடிகள் தூக்கத்தின்போது ஏற்படுகிற கனவுகளை மற்றெந்த அனுபவத்தைக்காட்டிலும் சிறந்ததாக மதித்தனர். ஆதியில் சமவெளியைக் கடந்துசென்றுகொண்டிருந்த லூயிஸ் (Lewis), க்ளார்க் (Clark) என்ற இருவரும் ஓர் இரவிலும் தூங்க முடியவில்லை என்று குறைபட்டனர். ஏனென்றால் யாராவது ஒரு கிழவன் எழுந்திருந்து தான் சற்றுமுன்னே கண்ட கனவைச் சடங்கு முறையிலே ஒத்திகை செய்ய தன்னுடைய டமாரத்தின் மீது அடிக்க ஆரம்பித்துவிட்டான். சக்தியைப்பெற அஃது ஒரு மதிப்புயர்ந்த சாதனம்.

எப்படி இருந்தாலும் இப்படிப்பட்ட அனுபவங்கள் சக்தியுடையனவா இல்லையா என்பது தனிமனிதன் தீர்மானிக்க வேண்டியவை. பின்பு பழக்கத்திலே வரும்போது இவைகளின் மீது சமூகம் என்ன தடைகள் விதித்தாலும் இவை பொருளுள்ளவையாகவே கருதப்பெற்றன. சில அனுபவங்கள் சக்திவாய்ந்தன என்றும் சில சக்தியற்றவை என்றும் ஏதோ ஓர் உணர்ச்சிக் குறியீட்டின்படி அவர்கள் புரிந்துகொண்டார்கள். அவர்கள் தங்களைத் துன்புறுத்திக்கொள்வதன்மூலம் சிரமப்பட்டு அடைந்த அனுபவம் இப்படிப்பட்ட ஓர் உணர்ச்சிநிலையை ஏற்படுத்தாவிட்டால், அது வீணாகக் கருதப்பெற்றது. அப்படிப்

பட்ட சக்தியின் ஆவி அவமானத்தையும் சாவையும் தந்துவிடும் என அஞ்சி, அதற்கான சக்திகளை அடைந்ததாக அவர்கள் சொல்லிக்கொள்வதில்லை.

மேற்கத்திய சமவெளிகளில் தோற்றத்தினுல் கிடைக்கக் கூடிய சக்திகளின்மீதுள்ள நம்பிக்கை, தனி ஒருவனுக்கு அளவிலா சுதந்திரத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு பண்பாட்டு முறையாகும். எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவனுனுலும் அவன் வெளியேசென்று மிகவும் விரும்பத்தக்க சக்திகளைப்பெறலாம். பிறரால் அனுமானிக்கப்படாதவண்ணம் தனிமையிலே கிட்டு கின்ற இந்த அனுபவத்தை ஆதாரமாகக்காட்டி, அவன் தான் விரும்புகிற ஒரு மாற்றத்தைத் தனக்கனுகூலமாகக் கொள்ளலாம். அவனுக்குக் கிடைக்கக்கூடிய நிலைபெரு அனுபவமாகவும் அது இருக்கலாம். அது தனி ஒருவன் முயற்சிகளுக்கு அதிக வாய்ப்புகளை அளித்தது. ஆனுல், நடைமுறையிலே வழக்கங் களின் அதிகாரம் குறைந்துவிடவில்லை. அவர்களுடைய நிறுவனங்களால் அதிகமான சுதந்திரம் வழங்கப்பட்டும் அவர்கள் சில சிறு மாற்றங்களைத்தவிர வேறென்றும் செய்ய முயல வில்லை. வெளியார் கண்ணேட்டத்தில், எந்தப் பண்பாட்டிலும் அடிப்படையான சில புதிய திருப்பங்கள் சாதாரணமான சிறு மாற்றங்களாகத்தான் இருக்கின்றன. மிகச்சிறிய மாறுபாடுகள் கொண்ட சமயவாதிகள் இதற்காகக் கொல்லப்பட்டது சாதாரணமாக நாம் அறிந்ததே. அதேபோன்று, தோற்றங்கள் அளித்த பண்பாட்டுச் சுதந்திரம், அத் தோற்றங்களின் ஆணைப்படி பயன்படுத்தப்பெற்றன. ஏற்கெனவே 'பனிப் பறவை குலம்' என்ற ஒரு புகையிலைக் கூட்டத்தின் பகுதியை ஸ்ட்ரா பெர்ரி (Strawberry) குலம் என்று மாற்றவோ, அல்லது போர்முறை யில் அரணைக்கிருந்ததாக நம்பப்படுகிற சக்தி எருமைக்கிருப்ப தாக நம்பிக்கையை மாற்றுவதோபோன்ற செயல்களே இச் சக்தியினுல் மாற்றப்படுகின்றன. வேறுசில தவிர்க்கமுடியாத கட்டுப்பாடுகளும் இருந்தன. தோற்றத்தின் சக்தியைச் சோதனை செய்து பார்க்கவேண்டிய கட்டாயமும் ஏற்படலாம். தங்கள் தோற்றத்தின் சக்தியைச் சோதிக்கவேண்டி ஒரு போரணியை வெற்றிகரமாக நடத்தியவர்கள் மட்டுமே தங்களுக்குப் போருக்காக ஓர் இயற்கைக்கப்பாற்பட்ட சக்தி இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள முடியும். சில குடிகளில், தோற்றங் களைச் சோதனை செய்து பார்க்கவேண்டும் என்ற பிரச்சினை அவர்களுடைய பெரியவர்களிடம் அனுமதிபெறவேண்டும். அப் பெரியவர்கள், மாயாஜாலத் தொடர்புகள் இல்லாதவர்களாக இருந்தார்கள்.

மேற்கத்திய சமவெளியைத் தவிர மற்றப் பண்பாடுகளில் இந்த டையோனீஷியன் முறைகளின் வரையறைகள் அதிகமாக இருந்தன. உரிமைகளை மிக முக்கியமாகக் கருதுகிற ஒரு சமுதாயத்திலே இத் தோற்றங்களால் உண்டாகும் முரண்பாடுகள் சாதாரணமாக இருந்தன. அது பண்பாட்டை உடைத்தெறியும் வன்மை படைத்தது. சில குடிகளில் இந்த முரண்பாடு மிகுதியினால் என்னவெல்லாமோ நிகழ்ந்துவிடும். வெறும் வாயளவிலே பேசப்படுகிற இயற்கைக்கப்பாற்பட்ட அனுபவங்கள் பயனற்றவையாகிவிடலாம். சில குடும்பங்களுக்கோ அல்லது பிரிவுக் குழுக்களுக்கோ பொதுவில் உரிமைகள் இருக்குமானால், தனி ஒருவனுக்கு இயற்கைக்கப்பாற்பட்டவைகளோடு தொடர்பு கொள்ளவோ, அல்லது அப்படிப்பட்ட தொடர்பிலிருந்து சக்திகள் கிடைத்தன என்று கற்றுத்தரவோ அனுமதி தரப் படுவதில்லை. ஆனால், அதேசமயம் தனிப்பட்ட, திறந்த தோற்றங்களைப்பற்றிக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால், அது வெறும் வெளிவேஷம். தான் அங்கத்தினனாக இருக்கின்ற குழுவிலே, தன் தகப்பனுடைய இடத்திற்கு வாரிசாக வந்தால் ஒழிய வேறு எந்த அதிகாரத்தைக்கொண்டும் ஒருவன் பயன்பெற இயலாது. ஓமாஹா (Omaha) மக்கள் சூன்யமாக மதிக்கின்ற சக்திகள் கண்டிப்பாகக் குடும்பப் பரம்பரையிலே வருவன வாயினும், தனிப்பட்ட ஒரு தோற்றத்தினால் கிடைக்கிற சக்தியின் மீதுள்ள நம்பிக்கைபற்றிய கொள்கைகளை மாற்றிக்கொள்வதில்லை. கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதை உரிமையாகக்கொள்ள வடமேற்குக் கடற்கரையிலும், மெக்ஸிகோவிலுள்ள அஸ்டெக் (Aztec) மக்களிடையேயும், பல காரியங்கள் விட்டுக்கொடுக்கப் பெற்றன. ஆயினும் டையோனீஷியன் முறையை அடியோடு புறக்கணிக்கவில்லை.

வட அமெரிக்காவில் தோற்றங்களை நாடிச்செல்லும் டையோனீஷியன் முறை கௌரவமுள்ள உரிமை கொண்டாடும் குழுக்களோடு இணைந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. மருந்துகள் மூலமாகவும் சாராயம் மூலமாகவும் இந்த அனுபவங்களை வெளிப்படையாகவே நாடினார்கள். மெக்ஸிகோவிலுள்ள இந்தியக் குடிகள், சப்பாத்திப் பழத்தைப் புளிக்கவைத்த திரவத்தை அருந்தி, மதசம்பந்தமான அனுபவமாகக் கருதப் பெறுகிற ஒரு விருப்புநிலையை எய்த முயன்றனர். இவர்களோடு ஒட்டிய பிமா (Pima) என்ற குடிகளுக்கு இந்தச் சப்பாத்தி மது தயாரிப்பதுதான் ஆண்டிலே பெரிய விழாவாகும். முதலில் பூசாரிகள் இந்த மதுவைக் குடிப்பார்கள். பிறகு 'சமயச்சார்பு ஏற் பட்ட' மக்கள் இதைப் பருகுவர், அவர்களுடைய பழக்கத்திலேயும்

பாக்களிலேயும் போதையுற்றிருப்பது மத அனுபவம்போன்ற ஒன்ருகும். கலங்கிய பார்வையோடு அது உள்நோக்கையும் ஏற்படுத்துகிறது. மதத்திஞல் ஏற்படக்கூடிய ஓர் உணர்ச்சி நிலையை அது அக் குடிகளுக்கு அளிக்கிறது.

இந்த அனுபவத்தைப்பெற மருந்துகள் அதிகமாகப் பயன் பட்டன. மெக்ஸிகோவின் உயர்நிலங்களில் உள்ள ஒரு சப்பாத்தியின் விதை பீயோட் (peyote) அல்லது மெஸ்கல் பீன் (mescal bean) என்று சொல்லப்படுகிறது. யாத்திரை செய்யக் கூடிய தொலைவிலே இருக்கும் இந்தியர்களால் இச் செடி பச்சையாக உண்ணப்படுகிறது. ஆஞல், விதைகள் கானடா (Canada) எல்லைவரை வியாபாரம் செய்யப்படுகின்றன. சடங்கிலே பயன்படுத்தப்பெறும் இவ் விதைகளின் பின் விளைவுகள் நாம் அறிந்ததே. விதைகள், பல வண்ணக் காட்சிகளைத் தந்து அவனையே உயர எடுத்துச்செல்வதுபோன்ற ஓர் உணர்ச்சியைத் தருகின்றன. பாதுகாப்பில்லாத, பற்ருக்குறையோடுகூடிய ஒரு நிலையிலிருந்து விடுதலையையோ அல்லது பித்துப்பிடித்தது போன்று ஒரு தீவிர நம்பிக்கையிழந்த தன்மையையோ அவை அளிக்கின்றன. காம உணர்ச்சிகளோ அல்லது நரம்புகளின் அயர்ச்சியோ ஏற்படுவதில்லை.

அமெரிக்க இந்தியரிடையே இந்த பீயோட்முறை இன்றும் பரவிக்கொண்டிருக்கிறது. ஓக்லஹாமாவிலே (Oklahoma) அதுவே இந்திய கிறிஸ்துவ மதமாக இருக்கிறது. இம்முறையிஞல் சில குடிகளிடையே பழைய மரபுவழிவந்த சடங்குகள் மங்கிப்போய் விட்டன. எங்கும் வெள்ளையர்களோடுகொண்ட ஓர் ஈடுபாட்டுடன் அது இணைந்திருக்கிறது. வெள்ளையரின் செல்வாக்குக்கு எதிராக அவர்கள் எடுத்துக்கொண்ட ஒரு மதசம்பந்தமான எதிர்ப்பையோ வெள்ளையரது வாழ்க்கை முறையை வேகமாக எடுத்துக்கொள்கின்ற கொள்கையையோ அது காட்டுகிறது. அதனுடைய அமைப்பிலே பல கிறிஸ்துவ ஆசாரங்களையும் கொண்டுள்ளது. ஒரு தூய்மையான பொருளைப் போல பீயோட் மாறிமாறி உட்கொள்ளப்படுகிறது. பாட்டுக ளோடும் பிரார்த்தனைகளோடும், பீயோட்டும் தண்ணீரும் மாறிமாறி உட்கொள்ளப்பெறுகின்றன. அஃது இரவு முழுதும் நடக்கின்ற ஒரு கண்ணியமான சடங்காகும். அதனுடைய பின்விளைவு மறுநாள் பகல் பூராவும் இருக்கும். சில இடங்களில் அது நான்கு இரவுகளுக்கு உண்ணப்பட்டு, நான்கு பகல்களுக்கு இந்த உணர்ச்சிநிலை அடையப்பெறுகிறது. அதைக் கொண்டிருக்கிற முறைகளிலே பீயோட் கடவுளாக எண்ணப்

பெறுகிறது. ஒரு பெரிய விதையைப் பீடத்தில் வைத்து வணங்குகிறார்கள். எல்லா நன்மைகளும் அதிலிருந்தே உண்டாகின்றன. 'என் வாழ்க்கையில் அறிந்த மிகத் தூய்மையான பொருள் அது ஒன்றுதான்', 'இந்த மருந்து ஒன்றுதான் மிகத் தூய்மையானது. என் கஷ்டங்களையெல்லாம் அகற்றிவிட்டது' என்று சொல்கிறார்கள். பீயோட் சாப்பிடுவதால் ஏற்படுகிற சமாதிநிலையான டையோனீஷியன் அனுபவம் அதற்கு ஒரு விருவிருப்பையும், மதசம்பந்தமான அதிகாரத்தையும் அளிக்கிறது.

ஊமத்தைச் செடி மிகவும் நஞ்சுள்ளது. மெக்ஸிகோவிலும் கலிபோர்னியாவின் (California) தென்பகுதிகளிலேயும் உள்ள குடிகள் உபயோகிக்கும் இந்தச் செடி அங்கேயே கிடைக்கிறது. தென் கலிபோர்னியாவில் சிறுவர்களுக்கு அவர்களின் துவக்கச் சடங்கின்போது இது கொடுக்கப்பெறுகிறது. அதனுடைய சக்தியால் அவர்கள் தோற்றங்களை அடைகிறார்கள். இதைக் குடித்துவிட்டு இறந்துபோன சிறுவர்களைப்பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். சிறுவர்கள் தம்வசமிழந்து ஒரு நாளோ அல்லது நான்கு நாட்களோ இருப்பார்கள் என்று அக் குடிகள் சொல்கின்றனர். இக் குடிகளுக்குக் கிழக்கே உள்ள மொஜாவே (Mojave) மக்கள் சூதாட்டத்திலே வெற்றிபெற இந்தச் செடியை உபயோகித்து நான்கு நாட்கள் மயக்கமுற்று இருப்பர். அப்படி இருக்கும்பொழுது கனவு ஏற்பட்டு அதனால் அவர்கள் விரும்பும் அதிர்ஷ்டத்தைப் பெறுகின்றனர்.

தென்மேற்கு ப்யூப்லோக்களைத்தவிர மற்ற எல்லா வட அமெரிக்க இந்தியர்களும் டையோனீஷியன் கொள்கை யுடையவர்களாகவும், தோற்றக் கனவுகள்மூலம் இயற்கைக் கப்பாற்பட்ட சக்திகளைப்பெறும் வழக்கத்தை உடையவர்கள். தென்மேற்குப் பகுதியானது, பட்டினி கிடத்தல், தன்னைத் துன்புறுத்திக்கொள்ளல், மருந்துகள், சாராயம் ஆகிய இவை களால் தோற்றங்களை நாடிச்செல்லும் மக்களால் சூழப் பட்டிருக்கிறது. ஆனால், ப்யூப்லோ மக்கள் பண்பாட்டமைப்பை உடைத்தெறியக்கூடிய இந்த அனுபவங்களை ஒப்புக்கொள்வ தில்லை. அவைகளினின்று இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப் பெறுவதுமில்லை. ஸுனி இந்தியன் ஒருவனுக்குக் கண்மூலம் அல்லது காதுகள்மூலம் ஒரு பிரமை ஏற்பட்டால் அது சாவைக் குறிக்கிற ஒன்றாக எண்ணப்பெறுகிறது. அது தவிர்க்கப்பட வேண்டிய ஓர் அனுபவமேயன்றி பட்டினிகிடந்தாவது நாட வேண்டிய அனுபவமன்று. ப்யூப்லோ மக்களிடையே இயற்கைக்

கப்பாற்பட்ட சக்தியென்பது ஒரு பிரிவின் அங்கத்தினனுக இருப்பதன்மூலமாகக் கிட்டுகிறது. அங்கத்தினனுக இருக்கும் தகுதி விலைகொடுத்து வாங்கப்படுகிறது. இதற்காகச் சொற் சுத்தமான சடங்குமுறைகளைக் கற்கவேண்டும். அங்கத்தினனுக இருப்பதற்குத் தன்னைத் தயார்செய்துகொள்ளும்போதோ, துவக்கச் சடங்கின்போதோ, பிறகு கட்டணங்கள் கொடுத்துத் தன் நிலையை உயர்த்திக்கொள்ளவோ, மதசம்பந்தமான உரிமைகளைக் கையாளும்போதோ, அவர்கள் தங்கள் வசமிழந்த நிலையை அடைந்து நிதானந் தவறவேண்டிய அவசியமில்லை. அவர்கள் கடந்தநிலையை நாடுவதுமில்லை; மதிப்பதுமில்லை. ஆனாலும், பயங்கரமான இடங்களுக்குச் செல்லுதல், ஒரு பறவையுடனே அல்லது விலங்குடனே நட்புக்கொள்ளல், பட்டினி கிடத்தல், இயற்கைக்கப்பாற்பட்டவைகளின் தொடர்பால் சிறந்த ஆசிகளைப்பெறுதல் ஆகியவைபோன்ற தோற்றம் நாடுகின்ற மக்களின் அடிப்படையான சில அமிசங்கள் இருக் கின்றன. ஆனால், அவை டையோனீஷியன் முறையைப்போன்று இணைந்திருக்கவில்லை. அவைகளுக்குப் புதுமாதிரியான விளக்கம் ஏற்பட்டுள்ளது. ப்யூப்லோ மக்களில் ஆண்கள் இரவிலே பயம் விளைவிக்கக்கூடிய இடங்களுக்கோ, தூய்மையான இடங் களுக்கோ சென்று ஏதாவது ஒரு குரலைக் கேட்கின்றனர். இஃது அவர்களுடைய நல்ல அதிர்ஷ்டத்தையோ துரதிஷ்டத்தையோ குறிக்கிற சில சகுனங்களை அறிந்துகொள்வதற்காகச் செய்யப் படுகிறது. இயற்கைக்கப்பாற்பட்டவைகளுடன் தொடர்பு கொள்வதற்காகச் செய்யப்பெறவில்லை. அவர்கள் மிகவும் பயந்து விடக்கூடிய ஒரு சிறிய கடின காரியமாகக்கொள்ளப்படுகிறது. அவர்கள் திரும்பிவரும்பொழுது, எது அவர்களைப் பின்தொடர்ந்து வருவதாகத் தோன்றினாலும் அவர்கள் திரும்பிப்பார்க்கக்கூடாது என்று ஒரு தடையும் விதிக்கப்படுகிறது. தோற்றங்களை நாடிச் செல்வதுபோலவே இதுவும் நடக்கிறது. தென்மேற்குப் பகுதியில் அநேகமாக அவர்கள் வேகநடைப் போட்டியிலே ஈடுபடு கிறார்கள். இருட்டையும், தனிமையையும், விலங்குகள் தோன்று வதையும் பெரிதாக மதித்து இம்மாதிரி ஒரு காரியத்தில் ஈடுபடு கிறார்கள். மற்ற இடங்களிலே டையோனீஷியன்முறை என்று கருதப்பெறுகிற அனுபவம் ப்யூப்லோ மக்களால் சகுனங்களை அறிந்துகொள்ள எடுக்கப்படும் சாதாரண முயற்சியாக எண்ணப் பெறுகிறது.

தோற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்க இந்தியர் கைப்பற்றும் பட்டினிகிடக்கும் முறைகூட இவர்களிடத்தில் புதிய பொருள்பெற்று விளங்குகிறது. மறந்துபோன சில அனுபவங்

களைத் திருப்பி நினைவிற்குக் கொண்டுவருவதற்காக அது பயன் படுத்தப்பெறவில்லை. ப்யூப்லோ மக்களிடையே சடங்குக்கான தூய்மைபெறவே அது தேவைப்படுகிறது. பட்டினிகிடத்தலுக்கும் தன்வசமிழந்து ஓர் உணர்ச்சிநிலை அடைவதற்கும் உள்ள எந்தத் தொடர்பையும் ப்யூப்லோ மக்கள் புரிந்துகொள்வதில்லை. பூசாரிகள் செய்கின்ற தவங்களின்போதும், ஆட்டம், ஓட்டப் பந்தயம் இவைகளுக்கு முன்பும், முடிவில்லாச் சடங்குகளின் போதும், பட்டினிகிடத்தல் தேவைப்படுகிறது. ஆனால், சக்தி களைக் கொடுக்கிற எந்த அனுபவமும் பின்தொடர்வதில்லை. அது ஒருபோதும் டையோனிஷியன் முறையாகாது.

பட்டினிகிடத்தல் செய்முறையைப் போன்றே ஊமத்தையின் நஞ்சுகொள்வதிலும் தென்மேற்கு ப்யூப்லோக்களிடையே தங்க ளுக்கெனத் தனிவழி கண்டனர். அப் பழக்கம் இருந்தால் அதன் கொடுமை இல்லை. தென் கலிஃபோர்னியா இந்தியர்களைப்போல் ஒன்றுமுதல் நான்கு நாட்களுக்குச் சமாதிநிலை அடைகின்ற வழக் கம் இவர்களிடத்தில் இல்லை. ஆதிகால மெக்ஸிகோவில் உள்ளது போல் ஒரு திருடனைக் கண்டுபிடிக்க அந்த மருந்து பயன்பட்டது. ஒரு பூசாரி அப் பச்சிலையை ஒருவன் வாயில் சிறிது போட்டுவிட்டு பக்கத்து அறைக்குச்சென்று திருடனின் பெயரை அவன் சொல் கிருனு என்று ஒட்டுக்கேட்பான். அப் பச்சிலையை வாயில் போட்டுக்கொள்பவன் ஒருபோதும் தன்வசம் இழப்பதில்லை. அவன் மாறிமாறி தூங்கியும் அறைக்குள்ளே நடந்துகொண்டும் இருக்கிருன். மறுநாட் காலையில் அவன் பெற்ற இந்த உள்ளு ணர்வைப்பற்றி அவன் அறிவதில்லை. அவன் உடலில் இருந்து அப் பச்சிலையின் சாற்றைத் துளிக்கூட இல்லாமல் செய்துவிட அவர்கள் இருவித செய்முறைகளைக் கொண்டிருக்கிருர்கள். முதலில் அவனுக்கு நான்குமுறை வாந்தி மருந்து கொடுக்கப்படு கிறது. பிறகு அவனுடைய தலைமயிர் யுக்கா விதைகளைக் கொண்டு கழுவப்பெறுகிறது. இப்படிச் செய்வதால் அத் தூய்மை யான செடியின் சாறு அவன் உடலிலிருந்து அறவே அகற்றப் படுகிறது. ஸுனி மக்கள் வேருெரு முறையிலும் இந்த ஊமத் தைச் செடியை உபயோகிக்கின்றனர். இரவிலே பூசாரிக் குழுவைச் சேர்ந்தவர்கள் 'மழைக்காகப் பறவைகளைப் பாடச் செய்ய' தொழுகைக் குச்சிகளை நடுவதற்குச் செல்லும்பொழுது இச் செடியின் வேரைப் பொடிசெய்து சிறிதளவு காதுகளிலும், கண்களிலும், வாயிலும் போட்டுக்கொள்கின்றனர். இப்படிச் செய்வதில் அச் செடியின் குணங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளப்படவில்லை,

பியோட் முறையும் மிகவும் மாறுபட்டுவிட்டது. பியோட் விதைகள் கிடைக்கக்கூடிய மெக்ஸிகோ பீடபூமிக்கருகேதான் ப்யூப்லோ மக்கள் வசிக்கிருர்கள். இவர்கள் நெருங்கிப் பழகுகிற அப்பாச்சிக் (Apache) குடிகளும் மற்றும் சமவெளிக் குடிகளும் பியோட் உண்பவர்கள். ப்யூப்லோ மக்களிடம் இப் பழக்கம் ஊன்றிவிடவில்லை. டாவோஸில் (Taos) உள்ள சில அரசாங்கத் திற்கெதிரான சமவெளி மக்கள்போன்று ப்யூப்லோக்கள் இம் முறையைச் சமீபகாலத்தில் கொண்டுள்ளனர். வேறு எங்கேயும் இம்முறை ஒப்புக்கொள்ளப்படவில்லை. தனி ஒருவனை வசமிழக்கச் செய்து நிதானம் தவறச்செய்யும் எந்த அனுபவத்தையும் ப்யூப் லோக்கள் அவர்களுடைய அப்போலோனியன் முறையின் பிரகாரம் வெறுத்து ஒதுக்குகின்றனர்.

அமெரிக்காவின் சாராயம் ஓர் அரசாங்கப் பிரச்சினையாக மாருமல் இருக்க இவர்கள் இம்மாதிரி வெறுப்புடையவர்களா யிருப்பதே காரணமாகும். யுனைடெட் ஸ்டேட்ஸ் (United States) நாட்டில் இந்தியர் வாழும் பகுதிகளிலெல்லாம் இது ஒரு தவிர்க்க முடியாத பிரச்சினையாக இருந்தது. விஸ்கியின் (whisky) மேல் இந்தியர் கொண்டுள்ள அளவுக்குமீறிய ஆசையைத் தடுக்க அரசாங்கம் ஏதும் செய்ய இயலவில்லை. ப்யூப்லோ மக்களிடம் இந்தப் பிரச்சினை முக்கியமானதாக இருக்கவில்லை. ஆதிகாலத் திலும் அவர்கள் நாட்டுச் சாராயம் காய்ச்சவில்லை. இப்பொழு தும் காய்ச்சுவதில்லை. பக்கத்திலே உள்ள அப்பாச்சிக் குடிகளில் வயதுவந்தவர்களும், இளைஞர்களும் நகரங்களுக்குச் செல்லும் போதெல்லாம் அளவுக்குமீறிக் குடித்தனர். ஆனல், இவர்கள் அப்படிச் செய்வதில்லை. குடிப்பதற்கு ப்யூப்லோ மக்களிடையே மதசம்பந்தமான தடை ஒன்றும் இருக்கவில்லை. போதையுற்றி ருப்பதையே அவர்கள் வெறுத்தார்கள். ஸுனி மக்களிடையே சாராயம் புகுத்தப்பட்டபோது வயதுவந்தவர்கள் அதைச் சட்ட விரோதமாக்கினர். ஆகையால், சட்டமானது பிறகு மதிக்கப்படு வதற்குச் சாதகமாகவே அமைந்தது.

தன்னைத் துன்புறுத்திக்கொள்வதுகூட இன்னும் தீவிரமாக வெறுத்து ஒதுக்கப்பட்டது. தன்னைத் துன்புறுத்திக்கொள்ளும் வழக்கமுடைய பண்பாடுகொண்ட, சமவெளி இந்தியர்கள், மெக்ஸிகோவிலுள்ள பெனிடென்ட்ஸ் ஆகியவரோடு ப்யூப்லோ மக்கள் அதிலும் முக்கியமாகக் கிழக்கே உள்ள ப்யூப்லோ மக்கள் தொடர்புகொண்டிருந்தனர். ஆதிகால மெக்ஸிகோவில் வாழ்ந்து மறைந்துவிட்ட தன்னையே துன்புறுத்திக்கொள்ளும் பண்பாட் டோடு ப்யூப்லோ மக்களின் பண்பாடு அநேக குறுதிசயங்களில்

ஒத்திருந்தது. ஆதிகால மெக்ஸிகோவில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒருவன் தன்னுடைய உடம்பின் பகுதிகளிலிருந்து இரத்தம் எடுத்தான். முக்கியமாகக் கடவுளுக்குப் பலியாக நாக்கிலிருந்து இரத்தம் எடுப்பது வழக்கமாக இருந்தது. சமவெளிகளில் தன்னைத் துன்புறுத்திக்கொள்ளும் செய்முறைகள் தன்னிலை மறந்து ஒரு தோற்றத்தை அடைவதற்குப் பயன்படுத்தப்பெற்றன. இடைக்கால ஸ்பானிய நாட்டின் ஃப்ளெஜெல்லன்ட்ஸ் (Flagellants) என்பவர்களின் வாரிசாக உலகத்தின் ஒரு மூலையில் வசித்து வருகிற இந்த நியூமெக்ஸிகோ பெனிடென்ட்ஸ் மக்கள் இன்றும் சிலுவையிலறைந்த காப்போனேடுத் தங்களை ஒன்றுபடுத்தி எண்ணிக்கொள்ளும் குட்-ஃப்ரைடே (Good Friday) சடங்கைச் செய்து வருகின்றனர். தங்கள் குழுவிலே கிறிஸ்து வேடந்தாங்கிய ஒருவனைச் சிலுவையிலறைவதுதான் இச் சடங்கின் உச்சநிலையாகும். 'குட்-ஃப்ரைடே அன்று விடியற்காலை ஊர்வலம் பெனிடென்ட்ஸ் வீடுகளினின்று புறப்படுகிறது. கிறிஸ்து வேடம் புனைபவன் ஒரு பெரிய சிலுவையைத் தாங்கிச் சுமக்கமுடியாமல் சுமந்து செல்கிறன். 'சொள்ளா' (Cholla) முட்களால் முடியப்பெற்ற சப்பாத்திச் சாட்டைகளினுல் தங்கள் திறந்த முதுகுகளை அடித்துக்கொண்டே அவனுடைய கூட்டத்தார் அவன் பின்னுல் அடிமேலடிவைத்துச் செல்கின்றனர். சிறிது தூரநின்று பார்த்தால் அவர்களது முதுகுகள் ஒரு சிவப்புத் துணியால் மூடப்பட்டதுபோன்று தெரியும். அந்தப் 'பாதை' சுமார் ஒன்றரை மைல் நீளமுள்ளது. இறுதியில் கிறிஸ்துவைச் சிலுவையில் கட்டித் தூக்கி நிறுத்துகின்றனர். அவனே அல்லது சாட்டையடிப் பெறுபவர்களோ இறந்து விட்டால் அவனுடைய காலணிகள் அவன் வீட்டு வாயிற்படியில் வைக்கப்படுகின்றன. அவனுக்காகத் துக்கம்கொண்டாடுவது கிடையாது.

தன்னைத் துன்புறுத்திக்கொள்வது என்ன என்றே ப்யூப்லோ மக்களுக்குத் தெரியாது. ஒவ்வொருவனுக்கும் ஐந்து கைவிரல்களும் அப்படியே இருக்கின்றன. சூன்யத்தை ஒப்புக்கொள்வதற்காக ஒருவன் துன்புறுத்தப்பட்டாலன்றி, அவைகள் தழும்புகள் இல்லாமல் இருக்கின்றன. அவர்களின் முதுகில் தழும்புகளோ, தோல் பிய்த்தெடுக்கப்பட்ட அடையாளங்களோ இல்லை. அவர்கள் தங்கள் இரத்தத்தைச் செழுமைக்காகவோ, அல்லது வேறு சடங்குகளுக்கோ சிந்துவதில்லை. சில துவக்கச் சடங்குகளின்போது உணர்ச்சிமிகுதியால் தங்களை அவர்கள் துன்புறுத்திக்கொண்டாலும் அது சாதாரணமாகக் கல்லூரி மாணவர்களின் உற்சாகச் செயல் மாதிரியான ஒன்ருகும். போர்முறைப் பிரிவான, சப்பாத்திக் குழுவிலே அவர்கள் சப்பாத்தி நாரினுல் ஒருவரை

யொருவர் அடித்துக்கொண்டு இங்குமங்கும் ஓடினர். நெருப்புக் குழுவைச் சார்ந்தவர் நெருப்புப் பந்தங்களைத் தூக்கியெறிந்து விளையாடினர். எந்த முறையிலும் ஓர் ஆபத்தை எதிர்நோக்கும் மனப்பாங்கோ அல்லது அசாதாரண அனுபவமோ எதிர்பார்க்கப் பெறவில்லை. ப்யூப்லோ மற்றும் சமவெளி இந்தியரிடம் நாம் காணும் நெருப்பு விளையாட்டுகள் தங்களைத் துன்புறுத்திக்கொள்ளும் இயல்பைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் என்ன உபாயங்களைக் கடைப்பிடித்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால், நெருப்பின்மேல் நடக்கும்போது கால்கள் சுடுவதோ, நெருப்பை விழுங்கும்போது நாக்குக் கொப்பளிப்பதோ ஏற்படவில்லை.

ப்யூப்லோ மக்கள் வரிநார்களால் அடிப்பது துன்புறுத்தும் நோக்கத்தோடு செய்யப்பெறுவதில்லை. அடிக்கும்போது இரத்தம் சிந்தப்படுவதில்லை. சமவெளி இந்தியர்கள் இம்மாதிரி அதீதச் செயல்களைப்பற்றிப் பெருமைப்படுவதுபோல இவர்கள் பெருமைப் படுவதில்லை. ஸுனிக் குழந்தை துவக்கச் சடங்கின்போது, துவக்கம் செய்யும் முகமூடிக் கடவுள்களால் சாட்டையடி பட்டதும் அழத்தொடங்கலாம். இல்லாவிட்டால் தன் தாயாரைக் கூவி அழைக்கலாம். சாட்டையடியால் தழும்புகள் ஏற்படலாம் என்பதையே அவர்களிலே வயதுவந்தவர்கள் மறுக்கிறார்கள். சாட்டையால் அடிப்பது 'கெடுதிகளை அகற்ற'ச் செய்யப்படுகிறது. அது ஒரு நம்பத்தகுந்த பேயோட்டும் முறையாகும். வேறு எங்கேயும் தன்னைத் துன்புறுத்திக்கொள்வதற்காக ஏற்படுகிற அதே செய்கை இவர்களுடைய பண்பாட்டிலே அப்படிக்கொள்ளப் படவில்லை.

பட்டினிகிடத்தல், தன்னைத் துன்புறுத்திக்கொள்ளல், மருந்துகள், சாராயம் ஆகியவைகளாலோ அல்லது தோற்றங்கள் வாயிலாகவோ ஓர் உணர்ச்சிவசப்பட்டநிலை அடையப்பெறுவது போன்று ஆட்டங்களின்மூலமும் அஃது அடையப்பெறவில்லை. வட அமெரிக்காவில் தென்மேற்கு ப்யூப்லோ மக்களைப்போன்று வேறு எவரும் ஆட்டங்களுக்கு அவ்வளவு காலம் செலவழிப்பதில்லை. ஆனால், அவர்களுடைய நோக்கம் தன்னிலை மறந்து நிற்கும் நிலையை அடைவதல்ல. டையோனீஷியன் முறையென்ற கிரேக்கப் பண்பாடு ஆட்டங்களின் வெறியைப்பற்றியதென்று நாம் அறிவோம். அதை வட அமெரிக்காவிலே திரும்பத் திரும்ப நாம் காண்கிறோம். 1870 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலே பரவியிருந்த இந்தியர்களின் பிசாசு நடனம் (Ghost Dance) குறிப்பிடத்தக்கது. இதில் கடைசி ஆள்வரை எல்லோரும் கீழே மயங்கி விழும்வரையில் வட்டவடிவமாக ஆடிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் மயங்கி இருக்கும்பொழுது வெள்ளையனிட

மிருந்து விடுதலை பெறுவதுபோன்ற தோற்றத்தை அடைவார்கள். ஆனால், நடனம் நடந்துகொண்டேயிருக்கும்-மற்றவர்களும் கீழே விழுவார்கள். இந்த நடனம் ஊடுருவியிருந்த அநேக குடிகளில் பிரதி ஞாயிறுதோறும் இந்த நடனத்தை ஆடுவார்கள். இன்னும் டையோனீஷியன் முறையிலே உள்ள பல பழைய நடனங்களும் இருந்தன. வட மெக்ஸிகோவிலுள்ள குடிகள் வாயில் நுரை தள்ளிக்கொண்டே தொழுகைப்பீடத்தின்மீது ஆடினர். கலிபோர்னியாவிலுள்ள தெய்வத்தன்மை பெற்றவர்களின் நடனங்கள், வலிப்பு வந்ததைப்போன்ற செயல்களால் விளங்கின. மாய்டு (Maidu) மக்கள் நடத்திய தெய்வத்தன்மை பெற்றவர்களுக்கான போட்டியில் ஆட்டத்தின் மயக்கத்திலே மற்றவர் விழும்வரை தொடர்ந்து ஆடுபவன் வெற்றி கண்டவனாக எண்ணப்பெற்றான். வடமேற்குக் கடற்கரையிலே ஆவிகளால் பீடிக்கப்பெற்றுத் திரும்பிப் பித்துப் பிடித்து வருபவனை சமாதானமாக்கப் பனிக் கால விழாக்கள் ஏற்பாடு செய்யப்பெற்றன. அவர்களிடம் எதிர் பார்க்கிற அளவு வெறியோடு புது ஆட்டக்காரர்கள் தங்கள் பங்கைச் செய்துகாட்டினர். ஸைபீரியாவிலுள்ள தெய்வத்தன்மை பெற்றவர்கள்போல அவர்கள், தங்களுக்கோ பிறருக்கோ தீங்கு ஏற்படாவண்ணம் நான்கு திசைகளிலும் நான்கு கயிறுகளால் இழுத்துக்கட்டப்பெற்று ஆடினர்.

ஸுனி மக்களின் நடனங்களில் இதுபோன்ற அமைப்பு இல்லை. அவர்களுடைய சடங்குக்கான பாக்களைப்போன்று அவர்களது நடனமும் இயற்கையின் சக்திகளைத்திருப்பித் திருப்பி வற்புறுத்துவதாகவே அமைந்திருந்தது. சோர்வின்றிக் கால்களைப் பூமியில் இடித்து விண்ணிலுள்ள பனியைக் கார்மேகங்களாக மாற்றி அமைக்கிறார்கள். அந்த ஆட்டம் நிலத்தின்மீது மழை பொழிய வற்புறுத்துகிறது. அவர்கள் தன்வசமிழந்த நிலைக்காக எதுவும் செய்யாமல், இயற்கையின் சக்திகளோடு இணைந்து அவைகளைத் தங்கள்பால் பயன்தருபவைகளாக மாற்றுகின்றனர். இந்த எண்ணம்தான் ப்யூப்லோ நடனங்களின் வகையை நிர்ண யிக்கிறது. அந்த நடனங்களிலே வெறியாட்டங்கள் இல்லை. நாற்பது ஆண்கள் ஒன்றாக இணைந்து ஒரேமாதிரி சீர்ப்பண்களோடு ஆடும் ஆட்டம், அவைகளைப் பயனுள்ளதாகச் செய்கிறது.

ப்யூப்லோ மக்களின் நடனத்தைப்பற்றி டி. எச். லாரென்ஸைப் போல் (D. H. Lawrence) வேறு யாரும் தெளிவாகச் சொல்லவில்லை.

'அவர்கள் பறவைகளின் நடையைப்போன்று மெதுவாகவும், ஆனால், அழுத்தமாகவும் கால்களை ஊன்றி ஆடிக்கொண்டே

ஒன்ருக இணைந்து பாடுகிருர்கள். அவர்கள் தலைகளையும் தோள் களையும் தொங்கவிட்டு, முன்னல் சற்றுக் குனிந்து நிலத்தின்மீது கால்களால் மெதுவாக அழுத்தமாக மிதித்துக்கொண்டே ஆடு கின்றனர். இருதயத் துடிப்பை ஒத்த டமாரங்களின் ஓசையோடு மணிக்கணக்கில் இந்த நடனம் நடந்துகொண்டேயிருக்கிறது.

சில சமயங்களில் முளைவிடும் பயிரை நிலத்தினின்று வெளிக் கொணர்வதற்கும், சில சமயங்களில் தங்கள் கால்களின் மிதித் தலால் வேட்டை விலங்குகளை அழைக்கவும், மற்றும் சில நேரங் களில் அப் பாலைவனத்தில் மாலை வேளைகளில் மழைக்கான மேகங்களை விண்ணிலே ஒன்று சேர்ப்பதற்கும் இந்த நடனங்கள் நடத்தப்பெறுகின்றன. மழைபொழிகின்றதோ இல்லையோ இப்படி மேகங்களின் கூட்டம் விண்ணிலே காணப்பட்டால், அது அவர் களுடைய சடங்கை ஏற்றுக்கொண்ட இயற்கைக்கப்பாற்பட்டவை களின் ஆசியாகக் கொள்ளப்பெறுகிறது. மழையே வந்துவிட்டால் அது அவர்களின் நடனத்தின் சக்தியால்தான் என முத்திரை யிடப்பெற்று ஒரு குறியீடாக அமைகிறது. மழைதான் அவர்கள் தேடுகின்ற விடை. வேகமாகப் பெய்கின்ற தென்மேற்கு மழை யிலுங்கூட அவர்கள் தங்கள் நடனத்தைத் தொடர்ந்து ஆடுகின் றனர். நனைந்த இறகுகள் கனமாகிவிட்டபோதிலும் நூல்வேலை செய்யப்பட்ட ஆடை அணிகள் நனைந்தபோதிலும் ஆட்டம் தொடர்ந்து நடக்கிறது. அவர்களுடைய தேவையைக் கடவுள் கள் பூர்த்திசெய்துவிட்டனர் எனக் கருதப்பெறுகிறது. வேடிக்கை செய்பவர்கள் சேற்றிலே சறுக்கிவிழுந்து விளையாடுகின்றனர். ஆட்டத்திலே அவர்களுடைய கால்களின் சக்தியால் இயற்கைச் சக்திகள் வலியுறுத்தப்பெற்று மழையைக் கொடுக்கின்றன என்று அவர்கள் நினைக்கின்றனர்.

டையோனீஷியாவின் முறையைச் சேர்ந்த நடனங்களை ப்யூப்லோ மக்கள் தங்களைச் சுற்றிலுமுள்ளவர்களைப்போல் ஆடி ஞலும் நிதானத்துடனே அவைகளைப் பயன்படுத்துகிருர்கள். அப் பகுதியிலுள்ள மற்றக் குடிகளைப்போலவே வட மெக்ஸிகோ விலுள்ள கோரா (Cora) மக்கள் சுற்றிச்சுற்றி வரும் ஒரு நடனத் தைக்கொண்டிருந்தனர். அந்த நடனத்தின் உச்சக்கட்டத்திலே ஆடுகிறவன் தன்னலியன்ற அளவு வேகமாக வெறிகொண்டு ஆடி இறுதியில் தொழுகைப்பீடத்தின்மீதே சுற்றிச்சுற்றி ஆடி விழுந்துவிடுகிருன். மற்றச் சந்தர்ப்பங்களிலே இப்படிச் செய்வது மாபெரும் குற்றமாகும். இப்படிப்பட்ட செய்கைகளில்தான் டையோனீஷியன்முறை தெளிவாக மதிப்பு வைக்கிறது. அவ னுடைய வெறியிலே தொழுகைப்பீடம் அழிக்கப்பட்டு மண்ணேடு

மண்ணுகக் கால்லால் மிதிக்கப்படுகிறது. இறுதியில் அழிக்கப்பட்ட அந்தத் தொழுகைப்பீடத்தின்மீதே ஆடுபவனும் விழுந்து விடுகிருன்.

ஹோபி (Hopi) மக்களின் கிவா அறையிலே ஆடப்பெறும் பாம்பு நடனம்போன்ற நடனங்களில்கூட அவர்கள் தொழுகைப் பீடத்தின்மீதே ஆடுகின்றனர். ஆனுல், அவைகளிலே வெறித் தோன்றுவதில்லை. வர்ஜீனியா ரீல் (Virginia Reel) அசைவுகளைப் போன்று அது ஒரு வரையறுக்கப்பட்ட நடனமாகும். ப்யூப்லோ மக்களிடையே சாதாரணமாக ஆடும் ஒரு நடனம், அவர்கள் நடனக்களரியின் இருபுறமும் இரு ஆட்டத் தொகுதிகளாகப் பிரிந்துநின்று ஒரே பொருளைப்பற்றிச் சிறிது மாறுபட்ட நடனங்களை மாறிமாறி ஆடுவதாகும். இறுதியாக இருதரத்தாரும் இரு திசை களிலிருந்தும் சேர்ந்துவந்து ஒன்ருக ஆடுவார்கள். இப்படிப்பட்ட கிவாவில் நடக்கும் பாம்பு நடனத்தில் 'மான்கூட்ட' ஆட்டக் காரர்கள் பாம்பு ஆட்டக்காரர்களுக்கு எதிராக அமைந்தனர். முதலாவதாக, மான் கூட்டத்துப் பூசாரி ஒருவன் தொழுகைப் பீடத்தைச்சுற்றி வட்டமாக உட்கார்ந்தபடியே ஆடி ஓய்வுபெறு வான். இதே ஆட்டத்தை உடனே பாம்புக் கூட்டத்துப் பூசாரி திருப்பி ஆடுவான். இரண்டாவது முறையில் 'மான்' தன் வாயில் ஒரு கொடியைப்பற்றிக்கொண்டு அதைக் கூட்டத்திலே சேருகின் றவர்கள் முழங்கால்களிலே படும்வண்ணம் ஆடுவான். 'பாம்பு' தன்வாயில் ஒரு உயிரோடு இருக்கிற சலங்கைப் பாம்பைப் (rattle-snake) பற்றிக்கொண்டு அதைக் கூட்டத்தில் சேர்கின்றவர்கள் முழங்கால்களில் படும்வண்ணம் ஆடுவான். கடைசி ஆட்டத்தில் 'மானு'ம் 'பாம்பு'ம் சேர்ந்தேவந்து, தொழுகைப்பீடத்தைச் சுற்றி வராமல் அதன் மேலேயே உட்கார்ந்தவாறு ஆடுகின்றனர். அதோடு நடனம் முடிவடைகிறது. மாரிஸ் (Morris) நடனத்தைப் போன்று இது ஒரு சாதாரணமான நடனமாகும். முழு நிதானத் துடனேயேதான் இந்த ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

ஹோபி (Hopi) மக்களிடையே பாம்புகளோடு ஆடும் இந்த நடனம் அபாயத்தை நாடுவதற்காக ஆடப்பெறுவதில்லை. நாம் நமது நாகரிகத்தில் பாம்புகள்மீதுகொண்ட அச்சத்திஞல் இந்தப் பாம்பு நடனத்தைத் தவருகப் புரிந்துகொள்கிருேம். நமக்கு எழக் கூடிய எண்ணங்களை ஆட்டக்காரர்களும் கொண்டிருப்பார்கள் என எண்ணுகிருேம். ஆனுல், அமெரிக்க இந்தியர்கள் பாம்புகளை அச்சக் கண்களோடு பார்ப்பதில்லை. அவர்கள் அவைகளுக்கு மரியாதை காட்டுகிருர்கள். மரியாதை மிகுதியினுல் சில சமயம் தூய்மைக்குரிய பொருள்கள்போல அவைகள் அபாயகரமாகத்

தோன்றலாம். நாம் காரணமில்லாமல் அவைகள்மேல் கொண்ட வெறுப்பை அவர்கள் கொள்வதில்லை. பாம்புகள் கடித்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுவதில்லை. பல இந்தியக் கட்டுக்கதைகள் 'ஆதலால்தான் சலங்கைப் பாம்பு (rattle-snake) அபாயகரமானது அன்று' என்று முடிகின்றன. சலங்கைப் பாம்பின் வாழ்க்கைமுறைகள் அவைகளை எளிதிலே வசப்படுத்த முடிகின்றவகையில் அமைந்திருப்பதால் இந்தியர்கள் அவைகளைப் பயன்படுத்துகின்றனர். பாம்பு நடனத்திலே ஆட்டக்காரர்கள் பாம்பின்மேல் கொண்டுள்ள உணர்ச்சி பயத்தாலோ வெறுப்பாலோ உண்டாகாமல் ஒரு பிரிவின் அங்கத்தினன் அப் பிரிவின் விலங்கு தேவதையின்மேல் கொண்ட அபிமானமாக இருக்கிறது. மேலும் நடனத்திற்காக அப் பாம்புகளின் விஷப்பற்கள் பிடுங்கப்படுவதை அடிக்கடி பார்க்கிறோம். அவைகளைக் காயப்படுத்தி விஷத்தைப் பிழிந்து எடுத்துவிடுகிறார்கள். நடனத்திற்குப் பிறகு அவைகள் விடப்பட்டுப் பிறகு விஷப் பைகளில் விஷம் முன்போலவே ஊறிவிடுகிறது. ஆனால், நடனத்தின்போது அப் பாம்புகள் விஷமற்று இருக்கின்றன. ஆகையால், இந்தநிலை ஹோபி ஆட்டக்காரனின் எண்ணத்தில் டையோனீஷியன் முறையை எவ்விதத்திலும் சார்ந்ததாக இல்லை. ஒரேமாதிரியான நடத்தை டையோனீஷியன் முறைப்படி அபாயத்தை நாடுவதாகவும் இல்லாவிட்டால் சாதாரண ஒரு சடங்காகவும் கொள்ளப்படுவதற்கு இது ஒரு சான்றாகும்.

மருந்துகளைக்கொண்டோ, சாராயத்தைக்கொண்டோ, பட்டினிகிடத்தல், தன்னைத் துன்புறுத்திக்கொள்ளல், ஆட்டங்கள் இவைகளைக்கொண்டோ அடையப்பெறுகிற தங்களுடைய ஐம்புலன்களுக்கப்பாற்பட்ட அனுபவம் எதையும் ப்யூப்லோ மக்கள் நாடுவதுமில்லை, பொறுத்துக்கொள்வதுமில்லை. இப்படிப்பட்ட பண்பாட்டை உடைத்தெறிகிற தனி ஒருவனுடைய அனுபவம் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதையும் மிதமாகக் கொள்ளும் அவர்கள் நாகரிகத்திலே இவைகளுக்கு இடமேயில்லை. ஆகையினால், அவர்களிடத்துத் தெய்வத்தன்மை பெற்றவர்கள் கிடையாது.

மனித நிறுவனங்களிலே மிகச் சாதாரணமாக நாம் இந்தத் தெய்வத்தன்மை பெற்றிருத்தலைக் காண்கிறோம். தெய்வத்தன்மை பெற்றவன், மதசம்பந்தமான ஒரு தொழிலைச் செய்பவன், குடிகளாலே இயற்கைக்கப்பாற்பட்ட அனுபவம் என்று கருதப்படுகிற சக்திகளைக் கடவுள்களிடமிருந்து நேராகப் பெற்றவனாக அவன் கருதப்பெறுகிறான். தன்னுடைய நிலைபெறுத் தன்மை

யினாலே இத் தொழிலுக்காகவே அவன் பிறந்தவனாக எண்ணப் பெறுகிறான். வட அமெரிக்காவிலே, தோற்றங்களின் அனுபவம் பெற்றவர்களே தெய்வத்தன்மை பெற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால், பூசாரி ஒரு பிரிவின் செய்கைகளை நடத்துபவனாகவும், சடங்குமுறைகளை அறிந்தவனாகவும் இருக்கிறான். ப்யூப்லோ மக்களிடையே பூசாரிகள் இருக்கின்றனரே தவிர, தெய்வத் தன்மை பெற்றவர்கள் கிடையாது.

ஸுனிப் பூசாரிகள் தங்கள் தகுதியைப் பல வழிகளில் பெறுகின்றனர். சொந்தமாக இருப்பதனால் உரிமை கொண்டாடலாம். சமூகத்தின் பல பிரிவுகளிலே தகுதிகளை விலைக்கு வாங்கி உயர்ந்திருக்கலாம். அந்த ஆண்டுக்கு மட்டும் கச்சினா பூசாரிகளைப்போல் வேடமிட, தலைமைப் பூசாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும் செயல்களிலும், சொற்களிலும், அதிகமான சடங்குகளை அறிந்திருப்பதால் அவன் அத் தகுதியை அடைகிறான். அவனுடைய அதிகாரம், அவன் நடத்துகிற சடங்கினாலும், அவன் வகிக்கிற பதவியாலும் கிடைக்கிறது. அவன் நடத்தும் சடங்கு சொற்சுத்தமாக இருக்க வேண்டும். அவன் நடத்துகிற சிக்கலான சடங்கு மரபுமுறைப்படி சரியாக அமையவேண்டுவது அவன் பொறுப்பாகும். சக்தியுள்ள ஒருவனை ஸுனி மக்கள் 'எப்படிச் செய்வது எனத் தெரிந்தவன்' எனக் குறிப்பிடுகிறார்கள். ஓட்டப்பந்தயம், சூதாட்டம், நோயைக் குணப்படுத்துதல் ஆகிய பல தூய்மையான முறைகளிலும் இப்படிப்பட்ட 'செய்யத்தெரிந்த'வர்கள் உள்ளனர். மரபுமுறையிலே இப்படிப்பட்ட சக்திகளை அவர்கள் பெற்றிருந்தனர். தங்களுடைய சொந்த விருப்பப்படி நடக்க மதத்தின் சக்தியைப் பெற்றவர்களாக அவர்கள் எண்ணப்பெறவில்லை. அவர்கள் தங்களுடைய கூட்டத்தினரின் அனுமதியின்றி இயற்கைக்கப்பாற்பட்டவைகளை அணுகவே முடியாது. மரபு வழக்கப்படியேதான், சில குறிப்பிட்ட அனைவரும் அறிந்த காலங்களில், தொழுகையோ, சடங்கோ செய்யப்பெறுகின்றன. ஸுனி மக்களிடையே தனிமனிதன் செய்யும் ஒரு தூய்மையான மதசம்பந்தமான காரியம் தொழுகைக் குச்சிகளை நடுவதேயாம். இவைகள் கடவுளுக்காக, மிக நுண்ணிய வேலைப்பாடுகளமைந்தவைகளாக இருக்கின்றன. இவை பாதிவரை பூமியில் புதைக்கப்பட்டுக் கடவுளுக்குப் பிரார்த்தனைகளை எடுத்துச்சொல்வனவாகும். ஆனாலும், உயர்ந்தநிலையிலுள்ள பூசாரிகள்கூட இத் தொழுகைக் குச்சிகளை அவன் அபிப்பிராயத்தின்படி அளிக்கக் கூடாது. அவர்களிடையே வழங்குகிற கட்டுக்கதைகளிலே ஒன்று கீழ்க்கண்டவாறு இருக்கிறது. ஸுனி மக்களின் தலைமைப்

பூசாரி தொழுகைக் குச்சிகளைத் தயார்செய்து அவைகளை நடச் சென்றான். ஆனால், அப்பொழுது மருத்துவக்கூட்டங்கள் வழக்கமாகத் தொழுகைக் குச்சிகளை நடும் காலம் இல்லை. 'ஏன் தலைமைப் பூசாரி தொழுகைக் குச்சிகளை நடுகிறான். அவன் சூன்யம் வைக்கிறான்போலும்' என்று நினைத்தனர். உண்மையிலேயே அவன் தனிப்பட்ட ஒரு பழிவாங்குதலுக்காகத் தன் சக்தியைப் பயன்படுத்தினான். தனிப்பட்டமுறையில் செய்யக் கூடிய ஒரு மதசம்பந்தமான செய்கை, தலைமைப் பூசாரியே தன் சொந்த அபிப்பிராயத்தின்படி செய்யக்கூடாதென்றால், மற்றச் சாதாரணச் செய்கைகளுக்குப் பொதுமக்கள் அதிகமான தடைகளை விதித்தனர். ஏன் ஒருவன் பிரார்த்தனை செய்யச் செல்கிறான் என்று எவரும் ஆச்சரியப்படக்கூடாது.

ப்யூப்லோ மக்கள் பூசாரியெனப் போற்றுகின்றவனும் மற்ற அமெரிக்கப் பழங்குடிகள் தெய்வத்தன்மை பெற்றவன் எனப் போற்றுகின்றவனும் இரண்டு எதிரிடையான பண்புகளைக் கொண்டவர்கள். தன்னம்பிக்கையோடு அதிகாரங்களை அடைகின்றவனுக்குச் சமவெளி இந்தியர்களிடையே அதிக வாய்ப்புகள் இருந்தன. மற்றவர் எவரையும்விட மிக அதிகமாக அவன் வெகுமதியளிக்கப்பெற்றான். தோற்றம் பெற்றுத் திரும்பிவந்த 'சாக்கை இந்தியன்' புகுத்துகிற புதுமைகள் மிகக் குறைவே. ஆனால், நாம் இங்கே அதைக் குறிப்பிடவில்லை. ஒவ்வொரு புத்த பிக்ஷுவும், இடைக்காலக் கிறிஸ்துவ மதாசாரியனும் தங்கள் கூட்டத்தினர் கண்ட தோற்றங்களையேதான் கண்டனர். அவர்களும் சாக்கை இந்தியனும் அவர்கள் தனிமையில் பெற்ற அனுபவத்தையே ஆதாரமாகக்கொண்டு ஒரு சக்தியையோ, தூய்மைத்தன்மையையோ, உரிமைகொண்டனர். இந்தியன் தன் குடிகளிடையே, தன் தோற்றத்தின் சக்தியோடு திரும்பிச் சென்றான். அவனுடைய உத்தரவுகளைக் குடிகள் பெருமையோடு நிறைவேற்றினர். நோயைக் குணப்படுத்துதலில்கூட அவன் தன்னுடைய சொந்த சக்தியையே நம்பியிருந்தான். பிறருடைய சக்திகளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இந்தக் கொள்கை பழக்கத்திலே சிறிதளவே மாறுபட்டிருந்தது. மரபு வழிப் பழக்கங்களை அவர்களது நிறுவனங்கள் மாற்றமுயன்றாலும், அப் பழக்கங்களை நிரந்தரமாகவே வைத்துக்கொள்கின்றனர். ஆனால், அவர்கள் மதசம்பந்தமான கொள்கைகள், அவர்களது தன்னம்பிக்கை, தனியொருவனின் அதிகாரம் ஆகியவைகளுக்கு அனுமதியும் அளித்தது.

இந்தத் தன்னம்பிக்கை, சமவெளி இந்தியர்களின் தெய்வத் தன்மைபெறும் நிறுவனங்களில்மட்டும் வெளிப்படையாகவில்லை,

அவர்கள் அடிக்கடி ஈடுபடும் 'கொரில்லா யுத்தம்' (Guerrilla warfare—மறைந்திருந்து சண்டைசெய்தல்) என்ற போர்முறையில் அவர்கள்கொண்ட ஊக்கத்திலும் அது வெளிப்படுகிறது. அவர்களது போர் அணிகளில் பன்னிரண்டுக்கும் குறைவான நபர்களே இருந்தனர். நவீன போர்முறையில் உள்ள கட்டுப் பாடு அடங்கியிருக்கும் தன்மை இவைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டு தனியொருவன் மட்டுமே அடிக்கடி ஈடுபடும் முறையை அவர்கள் கொண்டிருந்தனர். தனி ஒருவன் வெற்றிகளைக் கணக்கிடுவதாக அவர்களது போர்முறை அமைந் திருந்தது. கட்டியிருக்கும் ஒரு குதிரையை அவிழ்த்துவிடுதல், எதிரியைத் தொட்டுவிடுதல்,தலைத்தோல் சேகரித்தல் போன்றவை கள் கணக்கிடப்பெற்றன. தனியொருவன் துணிச்சலால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வெற்றிகளை அடைவான். இவைகளை விருந்து கொடுக்கவோ, அல்லது கூட்டங்களில் சேர்வதற்கோ, தன்னைத் தலைமைப் பதவிக்குத் தகுதிபடைத்தவனாகச் செய்து கொள்ளவோ பயன்படுத்திக்கொண்டான். தன் அபிப்பிராயப்படி, தனியாகச் செயல்படச் சக்தியற்ற சமவெளி இந்தியனை அவனது சமூகத்தில் மதிப்பது கிடையாது. தனியொருவனுக்கு அவர்கள் அளித்த பெருமை, அவர்களுக்கும் ப்யூப்லோ மக்களுக்கும் உள்ள வேறுபாடுகளிலிருந்தும், வெள்ளையரோடு கைகலந்தபோது அவர் களிடையே எழுந்த தலைவர்களாலும், ஆதிகாலத்தில் அங்கு சென்றிருந்தவர்களின் சாட்சியங்களாலும் நமக்குத் தெரிகிறது. தனியொருவன் வெற்றிகளாலும், விருந்துகளாலும், இயற்கைக் கப்பாற்பட்ட சக்திகளாலும், அவனுடைய கூட்டத்தில் மேன் மேலும் உயர்வதையே, வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டான். அவனுடைய சொந்த முயற்சிக்கு வெகுமதி கிடைத்தது. அவனது தீரச்செயல்களைக் கணக்கிட்டனர். சடங்குகளிலேயும், அவன் தன் சொந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் இப் பெருமைகளை அவன் சொல்லிக்கொள்வான்.

ப்யூப்லோ மக்களிலே சிறப்புப்பெற்ற மனிதன் வேறுவிதமாக இருந்தான். ஸுனி மக்கள் தனியொருவன் அதிகாரத்தை வெறுத்தனர். 'ஒருவன் அதிகாரத்தையோ அறிவையோ நாடுவதும், அவர்கள் வெறுப்புடன் குறிப்பிடுகிற 'மக்களின் தலைவனாக' வருவதற்கு ஆசைப்படுவதும், கண்டனத்தை எழுப்பு கிறது. அவன் சூன்யக்காரனென அவனைத் துன்புறுத்து கின்றனர்.' ஸுனி மக்களில் அதிகாரத்தைப் பெற்றிருந்த ஒருவனைச் சூன்யக்காரன் எனக் குற்றம் சாட்டி அவனை அவன் 'ஒப்புக்கொள்ளும்வரை' கட்டைவிரலில் கட்டித் தொங்கவிடுகின் றனர். அப்படிப்பட்ட ஆளுமை உடைய ஒருவனுக்கு ஸுனி

மக்கள் அளிக்கும் தண்டனை அவ்வளவே. ஸுனி மக்களிடையே, தலைமைதாங்க எண்ணுமலும் பக்கத்திலுள்ளவர்களால் ஒன்றும் பேசப்படாமலும் இருக்கும் ஒருவன்தான் கண்ணியமானவனாக, விரும்பத்தக்கவனாகப் போற்றப்படுகிறான். எல்லா உரிமைகளும் அவன் பங்கில் இருந்தால் அவன் எந்த முரண்பாடுகளிலும் ஈடுபடக்கூடாது. நடைப் பந்தயம்போன்ற தகுதிப் போட்டிகளில் கூட ஒருவன் அடிக்கடி வெற்றிபெற்றால் அவனை விலக்கிவிடுகின்றனர். எல்லோரும் வெற்றிபெற வாய்ப்பு இருக்கிற விளையாட்டைத்தான் விரும்புகின்றனர். சிறப்பாக ஓடக்கூடியவன் விளையாட்டைக் கெடுத்துவிடுகிறான். அவன் கூடாவேகூடாது.

டாக்டர் புன்ஸெல் (Dr. Bunzel) சொற்படி 'ஒரு நல்ல மனிதன் இன்முகம் காட்டித் தாராள இருதயத்துடன், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடையவனாக' இருக்கிறான். மிகவும் புகழப்படுகிற ஒரு நகரத்தானைப்பற்றி 'அவன் மரியாதையுள்ள மனிதன். அவனைப் பற்றி எதுவும் யாரும் கேட்டதில்லை. அவன் தொந்தரவுகளில் மாட்டிக்கொள்வதில்லை. அவன் பாட்ஜர் (Badger) பிரிவைச் சார்ந்தவன்; முஹேக்வே (Muhekwe) கிவாவைச் சார்ந்தவன். கோடைக்கால நடனங்களை அவன் ஆடுகிறான்' என்று சொல்கிறார்கள். அவன் 'அதிகமாகப் பேச'வேண்டும். மக்கள் அவனைக் கண்டு ஒதுங்கக்கூடாது. பயிர்நிலங்களிலும், சடங்குகளிலும் அவன் மற்றவரோடு ஒத்துழைக்கவேண்டும். அதிகமான உணர்ச்சி, அல்லது ஆணவம்போன்ற எண்ணங்களின் சாயலைக் கூட வெளியே காட்டிக்கொள்ளக்கூடாது.

அவன் எந்தவித அதிகாரத்தையும் வெறுக்கவேண்டும். அவனாக நாடக்கூடாதேயொழிய எந்த அதிகாரமும் அவன்மேல் சுமத்தப்படலாம். கிவாவிலுள்ளத் தகுதி இடங்கள் (offices) நிரப்பப்படவேண்டியபொழுது கதவை அடைத்துவிடுகிறார்கள். ஒருவனுடைய மறுப்புகளை ஒதுக்கித்தள்ளும்வரை (அதாவது ஒருவன் ஒப்புக்கொள்ளும்வரை) அவர்கள் எல்லோரும் சிறை வைக்கப்பட்டதுபோல் இருக்கின்றனர். அவர்களிடையே நல்ல மனிதர்கள், இறுதியில் இத் தகுதி இடங்களை எடுத்துக்கொண்டாலும் அவைகளை எடுத்துக்கொள்ள இஷ்டப்படவில்லை என்பதை அவர்களுடைய கட்டுக்கதைகள் அடிக்கடி தெரிவிக்கின்றன. ஒருவன் தலைவனாக இருப்பதுபோன்ற தோற்றத்தைத் தவிர்க்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனை வற்புறுத்தி அதிகாரம் வழங்கப்பட்டவுடனே, நாம் எண்ணுவதுபோல் அவனுக்கு உரிமைகள் கொடுக்கப்படுவதில்லை. எந்த ஒரு

முக்கியமான செயலுக்கும் அவனுக்கு அனுமதிகிடையாது. ஸுனி மக்கள் மன்றம் தலைமைப் பூசாரிகள் அடங்கிய ஒரு குழு. அவர்களுக்கு பலாத்காரம், முரண்பாடு ஆகியவைகளில் எந்த வித அதிகாரமும் கிடையாது. அவர்கள் தூய்மை படைத்தவர்களாதலால் எந்தவித சண்டையும் அவர்கள்முன் (பிரேரேபிக்கக் கூடாது) கொண்டுசெல்லக்கூடியதன்று. சில போர்த் தலைவர்களுக்குத்தான், செய்முறை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சமாதான காலங்களில் காவல் வேலை அதிகமே தவிர போரிலே இவ்வளவு அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. இத் தலைவர்கள் வரப்போகின்ற முயல் வேட்டையையோ, நடனங்களையோ அறிவிக்கிறார்கள். பூசாரிகளை அழைக்கிறார்கள். மருத்துவக் கூட்டங்களோடு ஒத்துழைக்கின்றனர். சூனியம் ஒன்றுதான் அவர்கள் சமாளிக்கவேண்டிய குற்றமாக இருக்கிறது. கச்சினு இரகசியத்தை துவக்கம் செய்யப்பெறாத சிறுவர்களுக்கு வெளிப்படுத்துதல் என்ற குற்றத்தை, கச்சினுமுறைத் தலைவர்கள் வரவழைக்கும் கச்சினு பூசாரிகளே தண்டித்துவிடுகின்றனர். வேறுவிதமான குற்றங்கள் இங்கே கிடையாது. எப்போதோ நடக்கும் மிகச்சில திருட்டுகள் தனிப்பட்டவரைச் சார்ந்தவை. பிறன்மனை நயத்தல் ஒரு குற்றமாக எண்ணப்படவில்லை. அதனால் ஏற்படுகிற பின் விளைவுகளை திருமண ஏற்பாடுகளே கவனித்துக் கொள்கின்றன. அவர்களுக்குத் தெரிந்து நடந்த ஒரே ஒரு கொலை, சம்பந்தப்பட்ட இரு குடும்பத்தாரிடையே சில கட்டணங்களால் சரிசெய்யப்பட்டுவிட்டது.

உயர் மன்றத்தைச் சேர்ந்த பூசாரிகள் தொந்தரவு செய்யப்படுவதில்லை. அவர்கள் பஞ்சாங்கத்தின்படி முறையே சடங்குகளை நடத்துகிறார்கள். அவர்கள் வெற்றிகரமாகத் திட்டங்களை நடத்த சாதாரணப் பூசாரி ஒருவன் தடையாக இருக்கலாம். அவன் தன்னுடைய தொழுகைப்பீடத்தை அமைக்காமல், தன்னுடைய கச்சனு பூசாரி முகமூடியைத் தராமல் பதுங்கியிருந்தால்போதும். மன்றத்தைச் சேர்ந்த பூசாரிகள் சடங்கை ஒத்திப்போட்டுவிட்டுக் காத்திருக்கவேண்டியதுதான். ஆனால், எல்லோரும் ஒத்துழைக்கின்றனர். அதிகாரத்தைக்காட்ட வேண்டிய அவசியமே இல்லை.

மதசம்பந்தமான விஷயங்களைப்போலவே வீட்டு விவகாரங்களிலேயும் தனியொருவன் அதிகாரத்தைச் செலுத்துவதில்லை. நமக்குத் தெரிந்த முறையிலே அதிகாரங்கள் பங்கிடப்படாமல் தனி ஒரு வழியில் தாய்வழிக் குடும்பத்திலேயும், தாயிடந் தங்கியிருக்கும் குடும்பங்களிலேயும் மாறுபட்டு இருக்கின்றன. ஆனால்,

தாய்வழிக் குடும்பங்களிலே தகப்பனுக்கு அதிகாரம் இல்லாமற் போனாலும், அதிகாரம்பெற்ற ஓர் ஆண்மகன் விதிவிலக்கல்ல. இந்த அதிகாரம் தாயின் உடன்பிறந்தானின் பொறுப்பிலே இருக்கிறது. இருந்தாலும் அவனது அதிகாரத்தைக்கூட ஸுனி மக்கள் மதிப்பது இல்லை. கண்டிப்பாகத் தகப்பனுக்கு அதிகாரமே கிடையாது. வீட்டிலுள்ள குழந்தைகளை இவர்கள் யாரும் கட்டுப்படுத்துவதில்லை. ஆண்கள் குழந்தைகளை மிகவும் கொஞ்சுகிறார்கள். அக் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அவர்களை எடுத்துச்செல்கிறார்கள். மாலை வேளைகளில் மடியில் வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களைக் கட்டுப் படுத்துவதேயில்லை. தீவிரமான முறையிலே சமாளிக்கவேண்டிய எந்த நிலையும் ஏற்படுவதில்லை. மதசம்பந்தமான வாழ்க்கையில் உள்ளதுபோலவே வீடுகளிலும் கூட்டுறவுமுறை நடக்கிறது. மற்றப் பண்பாடுகளிலே திருமணம் ஒன்றின்போதுதான் அதிகார உரிமைகள் பயன்படுத்தப்பெற்றன. ஆனால், ப்யூப்லோ மக்கள் திருமண ஏற்பாடுகளைச் சாதாரணமாகவே எண்ணினர். உலகத் தில் மற்றெல்லாப் பகுதிகளிலும் திருமணம் சொத்துரிமைகளையும், பொருளாதாரப் பண்டமாற்றுகளையும் கொண்டதாக உள்ளது. அப்படிப்பட்ட சமயங்களில் வயதடைந்த மூத்தவர்கள் உரிமை களைப் பெற்றிருந்தனர். ஆனால், ஸுனி மக்களிடையே மூத்தவர் கள் அக்கறைகாட்டும்படி, திருமண ஏற்பாடுகளில் எதுவும் கிடையாது. திருமணம், மற்றும் இளைஞனுக்குச் சொத்துக்கள் வழங்கப்படும் எந்த ஒரு பண்பாட்டுச் செய்கையும் ஏற்படுத்துகிற முக்கியத்துவம் ப்யூப்லோ மக்களிடையே காணப்பெறவில்லை. அவர்கள் சொத்துக்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இதற்கான எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் ஸுனி மக்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். தந்தைமீது குழந்தை வெறுப்படையச்செய்யும் (Oedipus complex) எந்த ஓர் ஏற்பாடும் தவிர்க்கப்படுகிறது. நம்முடைய நாகரிகத் தில் தகப்பனுக்கு அளிக்கப்படும் ஒருவித அதிகாரம், ட்ரோபிரி யாண்ட் மக்கள் சமூகத்தில் மாமனுக்கு அளிக்கப்பெறுகிறது என்று மலினோவ்ஸ்கி (Malinowski) குறித்திருக்கிறார். ஸுனி மக்க ளிடையே மாமனுக்குக்கூட அதிகாரம் இல்லை. இவ்வித அதி காரம் செலுத்தப்படவேண்டிய எந்தச் சந்தர்ப்பமும் பொறுக்கப் படுவதில்லை. குழந்தை பகற்கனவுகளும், ஆசைகளும் ஏற்படா மலே வளர்கிறான். அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டிய எவ்விதச் சந்தர்ப்பங்களையும் எதிர்நோக்காமலேயே சிறுவன் பருவம் அடைகிறான்.

உலகத்தின் பல பாகங்களிலே காணப்பெறும் பழக்கங்களைக் காட்டிலும், ஸுனி மக்களிடையே காணப்பெறும் சிறுவர்களின்

துவக்கச் சடங்கு விநோதமாக உள்ளது. அநேகமாக அதிகாரம் பெற்ற மூத்தவர்கள் தங்கள் உரிமைகளைத் தங்குதடையின்றிப் பயன்படுத்தும் செய்கையாகத்தான் துவக்கச் சடங்கு எங்கும் நடைபெறுகிறது. குடிமகனின் தகுதிக்குச் சேர்த்துக்கொள்ளப் படவேண்டியவர்களை அதிகாரம் பெற்றவர்கள் தகுதிபெறச் செய்கிறார்கள். ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா ஆகிய இடங்களில் இச் சடங்குகள் அநேகமாக ஒரேமுறையில் தான் நடைபெறுகின்றன. தென் ஆப்பிரிக்காவில் வயதுவந்தவர் கள் சிறுவர்கள்மேல் தாராளமாக நீண்ட கம்புகளால் அடிக்கின் றனர். அவர்கள் அடிகளைப் பெற்றுக்கொண்டே ஓடவேண்டும். பின்னாலிருந்து கேலிச்சொற்களைக் கூறிக்கொண்டே அடிப்பார் கள். ஆண்டின் குளிரான மாதங்களில், நெருப்புப்பக்கம் கால்களை வைத்துக்கொள்ளாமல், தலை வைத்து, கம்பளங்களும், ஆடை களுமின்றி நிர்வாணமாகத் தூங்கவேண்டும். இரவிலே தங்களைக் கடிக்கிற வெள்ளைப் புழுக்களைத் தவிர்க்கத் தரையை மெழுகக் கூடாது. அதிகாலையில் எழுந்திருந்து குளத்தில் உள்ள குளிர்ந்த தண்ணீரில் ஞாயிறு எழுகின்றவரையிலே அமிழ்ந்து இருத்தல் வேண்டும். துவக்கச் சடங்கிற்கான பாசறையில் மூன்று மாதங் களுக்கு நீரே அருந்தக்கூடாது. வெறுக்கத்தகுந்த உணவுதான் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இவற்றுக்குப் பதிலாக அவர் களில் சிலருக்குமட்டும் சொல்லிக்கொடுக்கப்படும் சொற்களும் விளங்காத பல சூத்திரங்களும் மிக முக்கியமானவை என்ற பெயரிலே கற்றுத்தரப்படுகின்றன.

அமெரிக்க இந்தியக் குடிகளிடையே சிறுவர்களின் துவக்கச் சடங்கிற்காக இவ்வளவு காலம் செலவழிக்கப்படவில்லை. ஆனால், அதேமாதிரியான எண்ணங்களோடுதான் நடைபெறுகின்றன. ஸூனி மக்கள் அதிகத் தொடர்புகொண்டுள்ள அப்பாச்சி (Apache) மக்கள் ஒரு குதிரைக் குட்டியைப் பழக்குவதுபோல் சிறுவர்களைப் பழக்கவேண்டும் என்று சொல்கின்றனர். அச் சிறுவனைப் பனிக் கட்டியில் துளைசெய்து அதிலே குளிக்கவேண்டும் என்றும், வாயிலே நீரைக்கொண்டு ஓடவேண்டுமென்றும் பணிக்கின்றனர். மாதிரிப் போர்க்கூட்டங்களில் அவனை அவமானப்படுத்திப் பொது வாக அவனை விரட்டுகின்றனர். தென் கலிஃபோர்னியா இந்தியர் கள் அவனைக் கொட்டுகின்ற எறும்புப் புற்றுக்களில் புதைக் கிறார்கள்.

ஆனால், ஸூனி மக்களில் சிறுவர்களுடைய துவக்கச்சடங்கு கடினமான ஒன்றல்ல. அவர்கள் பெறுகின்ற மெதுவான அடிகளால் குழந்தைகள் அழுதால், அச் சடங்கு மிகவும் மதிக்கப்பெறுகிறது. ஒவ்வொரு சடங்குப் பிரிவிலும் தன் சடங்குத் தகப்பனோடுகூடவே

சிறுவன் காணப்படுகிறான். தகப்பனுடைய முதுகின்மீது பற்றிக்கொண்டோ அல்லது அவனது கால்களுக்கிடையே முழந்தாளிட்டுக்கொண்டு அச் சிறுவன் அடிகளைப்பெறுகிறான். தென் ஆப்பிரிக்கச் சிறுவனைப்போல் கூட்டிலிருந்து வெளியே தள்ளப்படாமல், அவனுடன் வரும் காப்பாளனால் ஆதரிக்கப்படுகிறான். தன்னை அடித்த கச்சினரை அவன் திருப்பி யுக்கா சாட்டையினால் அடித்ததும் சடங்கு முடிகிறது. மூத்தவர்களைப் போல் அதிகாரத்திற்கான ஆசை குழந்தைகளுக்கும் ஏற்படுவதில்லை. இச் சடங்கு ஒரு தூய்மையாக்குகிற பேயோட்டும் சடங்காகத்தான் கருதப்பெறுகிறது. கூட்டத்திற்கான தகுதிகளை அளிப்பதால் அச் சிறுவர்களை மதிப்புப் பெற்றவர்களாக ஆக்குகிறது. தங்களுடைய மூத்தவர்கள் ஆயுள் முழுவதும் அளிக்கும் ஓர் ஆசியாகவோ பிணி நீக்க மருந்தாகவோ இச் சாட்டையடிகளை அவர்கள் மதிக்கிறார்கள். இயற்கைக்கப்பாற்பட்ட உலகிற்கு இது ஓர் அனுமதிச் சின்னமாக இருக்கிறது.

மதசம்பந்தமான, அல்லது வீட்டினுள்ளே ஏற்படுகிற சந்தர்ப்பங்களில் அதிகாரத்தைக்காட்ட வாய்ப்புக்கள் இல்லாமல் இருப்பது மற்றொரு அடிப்படை இயல்போடு இணைந்துள்ளது. அதாவது, ஒரு கூட்டத்திலே தனியொருவன் அமிழ்ந்துவிடுதல் என்பதாகும். ஸூனி மக்களிடையே அதிகாரமும் பொறுப்பும் பகிர்ந்தளிக்கப்பெற்ற ஒரு கூட்டம்தான் செயல்படக்கூடிய ஒரு தொகுதியாகும். கூட்டமாகச் சேர்ந்து செய்யும் சடங்கின்மூலமே இயற்கைக்கப்பாற்பட்டவைகளை அணுகமுடியும். வீட்டிலே உள்ளவர்களோடு கூட்டாளியாகச் சேர்ந்துதான் வீட்டிற்குத் தேவையானவற்றைச் சேகரிக்கவேண்டும். மதசம்பந்தமான அல்லது பொருளாதார சம்பந்தமான எதிலும் தனித்திருத்தல் இயலாது. மதசம்பந்தமான விஷயத்திலே, ஒருவனுடைய அறுவடை மழையில்லாமல் நாசமாகுமே என்பதற்காக அவன் தனியாகப் பிரார்த்தனை செய்வதில்லை. அதற்காக உள்ள கோடை நடனத்திலே அவனும் பங்குகொள்கிறான். நோய்வாய்ப்பட்டிருக்கிற, தன் மகன் குணமடைய அவன் தொழுவதில்லை. அவனைக் குணப்படுத்த மருத்துவக்கூட்டமான பெரும் தீக் கூட்டத்தை அழைத்து வருகிறான். தனிப்பட்டு தொழுகைக் குச்சிகளை நடுவது, சடங்குத் தூய்மைபெற முடியைக் கழுவுவது, மருத்துவக்கூட்டங்களை அழைப்பது, சடங்குத் தகப்பனைக் கூப்பிடுவதுபோன்ற தனிப்பட்ட பிரார்த்தனைகள், அவர்களுடைய கூட்டமாகச் சேர்ந்து செய்யும் சடங்குகளின் ஒரு பகுதியானவை என்ற காரணத்திற்காகவே அனுமதிக்கப்படுகின்றன. ஒரு முழுப் பிரார்த்தனைக்கான சொற்றொடரிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு சொல் எப்படி அந்தப் பிரார்த்

தனைக்கான பயன்பெற்றதாக ஆகாதோ அதேபோன்று இச் சடங்குகள் சடங்குத் தொடர்களின்றும் பிரிக்கப்பட்டால் பயனற்றவைகளாகும்.

எந்தச் செய்கைக்கும் தனிப்பட்ட ஒருவனிடமிருந்து வராமல், பொதுக்கூட்டத்திலிருந்தே அனுமதிபெறவேண்டும். நாம் முன்னே பார்த்தபடி ஒரு தலைமைப் பூசாரிகூட, அவனுக்கு அதிகாரபூர்வமான உரிய காலங்களில்தான் தொழுகைக் குச்சிகளை நடவேண்டும். மருத்துவக்கூட்டத்தைச்சேர்ந்த அங்கத்தினன் என்பதாலேயே ஒருவன் வைத்தியம் செய்யவேண்டும். சமவெளியிலே, ஒருவனுக்கு அந்தப் பிரிவிலே அங்கத்தினனாக இருப்பதால் அவனுடைய சக்திகள் பலமடைகின்றன என்று நம்பப்படுகிறது. ஆனால், இங்கு அங்கத்தினனாக இருப்பது ஒன்றுதான் அவன் சக்திக்கு மூலகாரணமாகும். நாவாஜோ (Navajos) தம்பதிகளைக் கொலைசெய்ததுகூட இம் முறையிலேயேதான் தீர்ப்பளிக்கப்பட்டது. ஒரு கட்டுக்கதை இத் துரோகச் செயலை விளக்குகிறது. செல்வந்தனான ஒரு நவாஜோ குடிமகனும் அவன் மனைவியும் ஸூனி வீடு ஒன்றுக்கு வியாபார நிமித்தம் வந்தனர். அப்பொழுது நீலக் கற்களுக்காக அவனைக் கொன்றுவிட்டனர். 'ஆனால், அவர்களுக்குத் தலைத்தோலின் சக்தி கிட்டவில்லை' என்று சொன்னார்கள். அதாவது, அவர்கள் இந்தச் செய்கையைச் சரியானது என்று மாற்றக்கூடிய போர்ப்பிரிவில் சேரவில்லை. இப்படிப்பட்ட செயலைக்கூட நிறுவனங்கள்மூலம் சரியானதாகச் செய்துகொள்ள முடியுமென ஸூனி மக்கள் எண்ணினர். அப்படிச் செய்துகொள்ளவில்லை என்பதற்காக இச் செய்கையை அவர்கள் கண்டித்தனர்.

ஸூனி மக்கள் அவர்களுடைய சமூக அமைப்புக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய தனித்தன்மை அழித்துக்கொள்ளப்படுகிறது. அதிகாரத்தையோ அல்லது மருத்துவக் கட்டுகள் பெற்றிருத்தலையோ அவர்கள் வாழ்க்கையில் மேன்மேலும் முன்னேறும் படிகளாக எண்ணவில்லை. தன் வீட்டிலே 'வாழ்வதற்காகவும்' தன்னுடைய கிவாவின் முகமூடிகளை அதிகப்படுத்துவதற்காகவும் ஒருவன் தன்னால் இயலும்போது முகமூடிகளைத் தயார்செய்துகொள்கிறான். பஞ்சாங்கமுறைப்படி நடக்கும் சடங்குகளில் அவன் தனக்குரிய பாகத்தை எடுத்துக்கொள்கிறான். ஷலாகோ என்ற விழாவில் கச்சினா பூசாரி வேடமிடுபவர்களை வரவேற்க பெரும் செலவில் புது வீடு ஒன்றைக் கட்டுகிறான். இவைகளையெல்லாம், நாம் மற்றப் பண்பாடுகளில் காணாத அளவு, 'நான்,' 'என்னுடையது' என்ற எண்ணங்களில்லாமலே செய்கிறான். தான் செய்கின்ற காரியங்களை இப்படி எண்ணுவது நமக்குப் புதுமையேயாகும்.

ஒருவனுடைய நோக்கங்களும் செயல்களும் எப்படி, 'தான்' என்ற உணர்ச்சியில்லாமல் மதசம்பந்தமான விஷயங்களில் ஏற்படுகிறதோ அவ்விதமே பொருளாதார ஈடுபாடுகளிலும் உள்ளது. நாம் முன்னமேயே கண்டபடி பொருளாதாரத் தொகுதியானது நிலையற்ற ஓர் ஆண்கள் கூட்டமாக இருக்கிறது. வீட்டின் நடு நாயகமாக, நிரந்தரமான ஒரு கூட்டம், அவ் வீட்டின் பெண்களும் அவர்களது கூட்டமும் ஆகும். விவசாயம், மந்தைகள் வைத்திருத்தல், கல்வேலை செய்தல் போன்ற பொருளாதார வேலைகளில் பெண்கள் முக்கியமான பங்குகொள்வதில்லை. இப்படிப் பட்ட அடிப்படை வேலைகளைச்செய்ய அவசியமான ஆண்கள் அடிக்கடி மாறுகின்ற ஒரு நிலையற்றக் கூட்டமாக இருக்கின்றனர். அவ் வீட்டுப் பெண்களின் கணவன்மார்கள், சண்டை சச்சரவு ஏற்பட்டால் உடனே தங்கள் தாய்வீட்டுக்குப் போய்விடுகின்றனர். அதற்குப் பிறகு அவர்கள் விட்டுச் செல்லும் குழந்தைகளுக்கு உண்ண உணவோ, இருக்க இடமோ கொடுக்க அவர்கள் பொறுப்பாளிகளல்லர். பெண்கள் வழியிலே இரத்த சம்பந்தமான உறவுகொண்ட ஆண்கள் அக் குடும்பத்தில் இருந்தனர். அவர்கள் திருமணமாகாதவர்களாகவோ, மனைவி இறந்து தனித்திருப்பவர்களாகவோ, அல்லது விவாகரத்து செய்துவிட்டவர்களாகவோ இருக்கலாம். மேலும் தங்கள் மனைவியின் குடும்பத்துடன் சச்சரவின் காரணமாக சிறிது காலம் தங்கிச்செல்ல வந்தவர்களாகவும் இருக்கலாம். இப்படித் தாற்காலிகமாக ஒன்றுசேர்ந்த கூட்டமாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் அவ் வீட்டின் தானியக் களஞ்சியத்தை நிரப்பவே பாடுபடுகின்றனர். அத் தானியம் அவ் வீட்டுப் பெண்களின் பொதுச்சொத்தாக இருக்கிறது. இந்த ஆண்களிலே எவருக்காகவாவது புதிதாகப் பயிரிடப்பெறும் நிலம் தனிச்சொத்தாக இருந்தாலும், அதை எல்லா ஆண்களும் பொதுவாகப் பயிர்செய்து பரம்பரை நிலங்களைப் போலவே பயன்படுத்தி வீட்டின் களஞ்சியத்தை நிரப்புகின்றனர்.

வீடுகளைப் பொறுத்தவரை இதே பழக்கம்தான் காணப்படுகிறது. ஆண்கள் சேர்ந்து வீடு கட்டுகிறார்கள். ஆனால், வீடு பெண்களுக்குச் சொந்தமாகிறது. இலையுதிர் காலத்தில் தன் மனைவியை விட்டுச்செல்லும் ஒருவன் தான் அந்த ஆண்டு முழுவதும் வேலைசெய்து கட்டிமுடித்த வீட்டையும், அந்தப் பருவத்தில் தான் விளைத்த பயிரால் நிரப்பப்பெற்ற தானியக் களஞ்சியத்தையும் விட்டுச் செல்கிறான். அவைகளில் எதன்பேரிலும் தனக்கு உரிமை இருப்பதாக அவன் எண்ணுவதில்லை. அவன் வஞ்சிக்கப்பட்டதாகவும் எண்ணுவதில்லை. அவன் வீட்டின் பொதுநலனுக்காகவே பாடுபடுகிறான். அவனது உழைப்பின்பயன்

எல்லோருக்கும் சேர்ந்தே உதவுகிறது. அவன் அக் கூட்டத்தை விட்டுச் சென்றுவிட்டால் அஃது அவன் சொந்தப் பொறுப்பாகும். தற்காலத்தில் ஆடுகள்மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. ஆண்கள் ஆடுகளைத் தங்கள் சொத்துக்களாகவே பாவிக்கின்றனர். ஆனால், அவர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டாக அவைகளை மேய்க்கிறார்கள். புதுமையான பொருளாதார நோக்கங்கள் மிகத் தாமதமாகவே எழுகின்றன.

எப்படி ஸூனி மக்கள் பொதுச்செய்கைகளில் தனிப்பட்ட ஒருவனது செயல் பரிமளிக்கவில்லையோ அவ்விதமே அவர்கள் பலாத்காரத்தைக் கையாளுவதே இல்லை. அவர்கள் பண்பாட்டிலே உணர்ச்சிநிலைகளைக் கையாளுகின்ற முறையிலே, கிரேக்கரது அப்போலோனியன் ஈடுபாடு தெள்ளெனத் தெரிகிறது. கோபம், காதல், பொறாமை, துக்கம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் மிதமாகவே இருக்கின்றன. தூய்மையானவர்கள் அவர்களுடைய பதவிக் காலங்களில் துளிக்கூடக் கோபம் கொள்ளக் கூடாது. வீட்டிற்குள்ளோ, சடங்குகளிலோ, பொருளாதாரத் துறையிலோ சச்சரவுகள் ஏற்பட்டால் அவைகள் சமாதான முறையிலேயே தீர்க்கப்படுகின்றன.

அவர்களுடைய சாதுவான தன்மைக்கு ஒவ்வொரு நாளும் புதிய சான்றுகள் கிடைக்கின்றன. எனக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று நான் கோடைக்காலத்தில் தங்குவதற்கென ஒரு தனி வீடு கொடுத்திருந்தது. அந்த வீட்டை விற்றுவிட மற்றொரு குடும்பம் சில சிக்கலான சூழ்நிலைகளால், உரிமைகொண்டாடியது. இந்த உணர்ச்சிகள் உச்சநிலையில் இருக்கும் சமயம் ஒரு நாள் க்வாட்ஸியா என்ற அந்த வீட்டின் சொந்தக்காரியும் அவள் கணவனும் என்னுடன் என் அறையிலேயே இருந்தனர். அச் சமயம் எனக்குத் தெரியாத ஒருவன் அவ் வீட்டு முற்றத்திலுள்ள பூச்செடிகளை வெட்ட ஆரம்பித்தான். வீட்டு முற்றத்தில் செடிகள் வளராமல் வைத்துக்கொள்வது வீட்டுச் சொந்தக்காரனின் முக்கிய உரிமையாகும். அவ் வீட்டுக்குச் சொந்தம் கொண்டாடியவன், தன் உரிமையை வெளிப்படையாக உறுதிசெய்துகொள்ள இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டான். அவன் வீட்டிற்குள் நுழையவுமில்லை, உள்ளே இருந்த க்வாட்ஸியாவிடமும் அவளது கணவன் யியோவிடமும் சவால் விடவுமில்லை. அவன் மெதுவாகச் செடிகளை வெட்டிக்கொண்டே இருந்தான். உள்ளே யியோ ஓர் இலையை மென்றுகொண்டே சுவர்ப்புறமாகத் தன் குதில்கால்களின்மேல் அமர்ந்திருந்தான். க்வாட்ஸியாவின் முகம்மட்டும் சிவந்தது. 'இது ஒரு பழியாகும்.' 'இவ்வாண்டு

லியோ பூசாரியாகப் பணிசெய்கிருனென்றும், அதனுல் அவன் கோபம் கொள்ளக்கூடாது என்றும், வெளியிலுள்ள அந்த மனிதனுக்குத் தெரியும். ஆகையால், கிராமத்தார் முன்னிலையில் எங்கள் வீட்டு முற்றத்தைக் கண்காணித்து எங்களை அவமானப்படுத்துகிருன்' என்று என்னிடம் அவள் சொன்ஞள். இப்படி இடையூறு செய்தவன் இறுதியாக செடிகளை எடுத்துக்கொண்டு, பெருமையுடன் சுத்தப்படுத்தப்பட்ட முற்றத்தை நோக்கிவிட்டுச் சென்று விட்டான். அவர்களுக்கிடையே எந்தவித பேச்சும் நிகழவில்லை. இப்படிச் செய்வது ஸுனி மக்களிடையே ஒரு பழித்தல்போன்று கருதப்படுகிறது. இப்படி அன்று காலை, அவன் முற்றத்தில் செய்த வேலையால், போட்டி உரிமைக்காரன் தன் கண்டனத்தைப் போதுமான அளவுக்குத் தெரிவித்துவிட்டான். அதற்குமேல் அவன் ஒன்றும் செய்யவில்லை.

மண உறவிலேயும் பொருமையுணர்ச்சி மிக மிதமாகவே இருக்கிறது. கற்புநெறி தவறுவதைக்கூட பலாத்கார முறையிலே கண்டிப்பதில்லை. சமவெளிகளிலே மனைவி கற்புநெறி தவறிஞல் அவளது மூக்கின் முனையை வெட்டுவது சாதாரணப் பழக்கமாக இருந்தது. ப்யூப்லோ அல்லாத அப்பாச்சிபோன்ற தென்மேற்கு மக்களிடையேகூட இப் பழக்கம் இருந்தது. ஆனுல், ஸுனி மக்களிடையே மனைவி நெறிதவறுவது பலாத்காரத்திற்கு இடமளிக்கவில்லை. கணவன் தன் உரிமை பறிபோய்விட்டதாக எண்ணுவதில்லை. மனைவி நெறிதவறிஞல் அது கணவனை மாற்றிக்கொள்ளச் செய்யும் முதல்செயலாகும். அவர்களுடைய நிறுவனங்களிலே இது மிக எளிதாகவும், பொறுத்துக்கொள்ளக்கூடிய ஒரு செயலாகவும் கருதப்பெறுகிறது. பலாத்காரத்தைப்பற்றி அவர்கள் எண்ணுவதேயில்லை.

கணவன்மார்கள் நெறிதவறும்போதும் மனைவிமார்கள் நிதானமாகவே இருக்கின்றனர். உறவு ரத்துசெய்யப்படவேண்டிய அளவு நிலைமை முற்றிவிட்டால் அது கவனிக்கப்படுவதே இல்லை. டாக்டர் புன்ஸெல் ஸுனி மக்களிடையே வாழ்ந்தபொழுது அவ் வீட்டுப் பெண்ணெருத்தியின் கணவன் வேறு பெண்ணேடு சகவாசம் கொண்டிருந்தான். இதைப்பற்றி எல்லா ப்யூப்லோ மக்களும் பேசிக்கொண்டனர். ஆனுல், அவளுடைய குடும்பம் இதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. கடைசியில் வெள்ளையனை வியாபாரி தன்னை நன்னெறிகளின் காப்பாளனுக எண்ணிக் கொண்டு அந்த மனைவியிடம் எடுத்துச் சொன்னர். அத் தம்பதிகள் திருமணம் நடந்து பன்னிரெண்டாண்டுகள் கழிந்துவிட்டன. அவர்களுக்கு மூன்று குழந்தைகளுமிருந்தனர். மனைவியும் ஒரு

முக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவள். வியாபாரி, அதிகாரத்தைக் காட்டவேண்டிய அவசியத்தையும், கணவனது தகாத செய்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய அவசியத்தையும் மிக அக்கறையுடன் எடுத்துரைத்தார். அதற்கு அந்த மனைவி 'ஆகையினால்தான் அவனுடைய ஆடைகளை நான் சுத்தம் செய்யவில்லை. எல்லோருக்கும் தெரிந்தது எனக்கும் தெரிந்துவிட்டது என்று அவன் அறிந்துகொண்டான். பிறகு அவன் அப்பெண்ணுடன் செல்வதை நிறுத்திவிட்டான்' என்று சொன்னாள். ஒரு வார்த்தையும் பேசப்பெறாவிட்டாலும் அந்தச் செய்கை மிகப் பயனுள்ளதாக இருந்தது. ஒருவிதமான உணர்ச்சிவசப்பட்ட சொற்களோ, வருந்துகின்ற செயல்களோ எதுவுமின்றி அந்த விவகாரம் தீர்க்கப்பட்டது.

தனியே விடப்படும் கணவன்மார்களுக்கு இல்லாத ஒரு சலுகை மனைவிகளுக்கு இருக்கிறது. மனைவி தன்னுடைய போட்டிக்காரி அல்லது எதிராளியின்மீது சினந்து அவளை எல்லோர் முன்னிலையிலும் அடித்துவிடலாம். ஒவ்வொருவரும் திட்டிக்கொண்டு கைகலந்துவிடுகின்றனர். இது எதையும் தீர்மானிக்காவிட்டாலும் எழுந்த வேகத்துடனேயே அடங்கியும்விடுகிறது. ஸூனி மக்கள் போரிடுகின்ற ஒரே ஒரு சந்தர்ப்பமும் இதுவேயாகும். ஒரு பெண், பல காதல்களைச் செய்துகொண்டிருக்கிற கணவனோடு பிரியாது வாழ்ந்தால் அவளது குடும்பத்தார் கோபம்கொண்டு அவனைவிட்டுப் பிரியும்படி அவளை வற்புறுத்துகிறார்கள். 'அவள் அவன்மீது அன்பு செலுத்தவேண்டும்' என்று அவர்கள் சொல்வதால் அவளது சுற்றத்தார் அவமானமடைகின்றனர். அவளுக்காக இடப்பட்ட சட்டங்களை அவள் மீறுகிறாள்.

இப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க மரபுவழியே ஏற்பட்டுள்ள முறை திருமண விலக்கு ஒன்றுதான். ஒருவனுக்கு அவன் மனைவியின் பெண் உறவினர்கள் சாதகமாக இல்லாவிட்டால் அவன் தன் தாய் வீட்டிற்குத் திரும்பிவிடலாம். இதன்மூலமாகத் தனக்குப் பிடிக்காதவர்களிடம் வீட்டினுள் பழகவேண்டிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்துவிடுகிறான். இதன்மூலம் சுலபமாகக் கையாளமுடியாத உறவுகளை அழித்துவிடுகிறான்.

ப்யூப்லோ மக்கள் பொறாமைபோன்ற ஒரு வலுவான உணர்ச்சியை மிதமாக்குவதற்கு ஏற்படுத்தியுள்ள நிறுவனங்களைப் போலவே சாவின்போதும் அப்போலோனியன் முறையிலே செய்முறைகளைக்கொண்டிருக்கின்றனர். ஆனாலும், ஒரு வேறுபாடு இருக்கிறது. பல பண்பாடுகளிலே நாம் காணுகின்ற பழக்கங்கள் பொறாமையை வளர்க்கவோ அல்லது அதைச் சட்டவிரோதமாக்

கவோ செய்கின்றன. ஆனால், சாவினால் பிரிக்கப்படுபவர்களைச் சுலபமாகத் தவிர்க்கமுடியாது. வாழ்க்கையிலே நெருங்கிய ஓர் உறவினர் இறந்துவிடுதல் பெரிய சோதனையாகும். இறந்தவன் வயதுவந்த ஒருவனாக இருந்துவிட்டால், அஃது கூட்டத்தின் ஒற்றுமையை அச்சுறுத்தி, பல அமைப்புக்களை மாற்றியமைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது. மேலும், எஞ்சியிருப்பவர்களின் துக்கத்திற்கும் தனிமைக்கும் காரணமாகிறது.

ப்யூப்லோ மக்கள் போலிவாழ்க்கை நடத்தாததனால் சாவினால் ஏற்படுகிற துக்கத்தை மறுப்பதில்லை. நாம் காணப்போகும் பல பண்பாடுகளில் உள்ளபடி, துக்கம் கொண்டாடுவதை ஒரு பயங்கர நிலைக்கோ, அல்லது பகட்டான காட்சிகளுக்கோ காரணமாக அவர்கள் கொள்வதில்லை. அவர்கள் அதை ஒரு பெருநஷ்டமாகக் கருதுகின்றனர். பலாத்காரமுறை இல்லாமலேயே அந்த நிலையைத் தாண்டிச்செல்ல விளக்கமான செய்முறைகளை அவர்கள் கொண்டிருந்தனர். துக்கப்படுபவனை, அதை மறக்கச் செய்வது ஒன்றையே முக்கியமாக எண்ணுகின்றனர். அதிகமாகத் துக்கப்படுபவனைத் தூய்மையாக்க இறந்தவன் தலையிலிருந்து சில மயிர்களை வெட்டி எடுத்து களங்கப்படுத்துகிறார்கள். 'அவர்களது பாதையைக் கறுப்பாக்க' சாவோடு இணைந்த கறுப்பு தானியச் சோற்றை இடக்கையினால் இறைக்கிறார்கள். அதாவது அவர்களுக்கும் துக்கத்திற்குமிடையே கறுப்பு படரச்செய்ய (துக்கம் விலக) இவ்வாறு செய்கிறார்கள். ஐலெடட்ா (Isleta) என்ற இடத்தில், சாவிற்குப் பிறகு உறவினர்கள் பிரிந்துபோகுமுன் நான்காம் நாள் மாலையில், சடங்கு செய்யும் பூசாரி தரையிலே ஒரு பீடத்தை ஏற்படுத்துகிறான். அதில் இறந்தவனுக்காகத் தொழுகைக் குச்சிகளையும், அவனது வில், அம்பு இவைகளையும், அவனது ஆடைகளையும், அவனது சடலத்தைப் புதைப்பதற்குச் சுத்தம்செய்யப் பயன்படும் மயிர்த் தூரிகையையும் வைக்கிறார்கள். மேலும், மருத்துவ நீர்கொண்ட ஒரு கலயமும், எல்லோரும் சிறிதுசிறிது கொடுக்கும் உணவைக்கொண்ட ஒரு கூடையும் வைக்கப்படுகின்றன. இறந்தவன் வருவதற்காக அவன் வீட்டிலிருந்து பீடம்வரை, சோற்றினால் ஒரு பாதையைப் பூசாரி அமைக்கிறான். கடைசிமுறையாக இறந்தவனுக்கு உணவளித்து வழியனுப்ப எல்லோரும் ஒன்றுகூடுகின்றனர். ஒரு பூசாரி மருத்துவக் கலயத்திலுள்ள நீரை எல்லோர்மீதும் தெளிக்கிறான். பிறகு வீட்டுக்கதவைத் திறந்துவிடுகிறான். தலைவன் இறந்தவனோடு பேசி, அவனை வந்து உண்ண அழைக்கிறான். வெளியே அவன் காலடிகளையும் கதவைத் திறக்க அவன் முயல்வதையும் அவர்கள் கேட்கின்றனர். அவன் உள்ளேவந்து உண்கிறான். பிறகு

தலைவன் அவன் வெளியே போவதற்காகப் பாதைமீது நீர் தெளிக்கிறான். எல்லாப் பூசாரிகளும் சேர்ந்து அவனைக் 'கிராமத்தை விட்டு வெளியே விரட்டுகிறார்கள்.' அவர்கள் தங்களுடன்கூட, இறந்தவனுக்கான தொழுகைக் குச்சிகளையும், அவனது ஆடை யணிகளையும், மயிர்த் தூரிகையையும், உணவுக் கலயத்தையும் எடுத்துச்செல்கின்றனர். அவர்கள் இவைகளைக் கிராமத்திற்கு வெளியே எடுத்துச்சென்று மயிர்த் தூரிகையையும், கலயத்தையும் உடைத்து எல்லாவற்றையும் கண்ணுக்குத் தெரியாமல் புதைத்து விடுகின்றனர். அவர்கள் திரும்பி ஒரே ஓட்டமாகப் பின்புறம் திரும்பிப்பார்க்காமல் ஓடிவந்து வீட்டினுள் புகுந்து 'கதவைத் தாளிடுகின்றனர். இறந்தவன் மறுபடி நுழையாமலிருக்கக் கதவின்மீது கல்லாலான ஒரு கத்தியினால் ஒரு குறியிடுகின்றனர். அதுதான் இறந்தவனை விட்டுவிட்டு முறையாகப் பிரிவது எனப் பெறுகிறது. தலைவன் மக்களைப் பார்த்து இனியும் அவர்கள் நினைவில் வைத்திருக்கக்கூடாது என்று உரைக்கிறான். அவன் இறந்துபோய் நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன என்று சொல்கிறான். கட்டுக் கதைகளிலும், சடங்குகளிலும் அவர்கள் அடிக்கடி நாட்களை வருடங்களாகவும், வருடங்களை நாட்களாகவும் எண்ணுகிறார்கள். துக்கத்திலிருந்து விடுபட காலம் கடந்துவிட்டது. மக்கள் துக்கம் முடிந்து பிரிகின்றனர்.

எப்படிப்பட்ட மனோதத்துவத்தை உடைய மக்களாயினும் சாவு தவிர்க்கப்படமுடியாத ஒன்றாகும். நெருங்கிய உறவினர் இறந்துவிட்டால் அதற்கு அப்போலோனியன் முறையிலே வழிகாணமுடியாமல் தவிக்கும் ஸுனி மக்களின் இடர்ப்பாடு அவர்கள் நிறுவனங்களிலே தெரிகிறது. சாவை எவ்வளவு சாதாரணமாகக் கொள்ளமுடியுமோ அவ்வளவு சாதாரணமாகக் கொள்கின்றனர். அவர்களிடமுள்ள எல்லாச் சடங்குகளையும் விட இறுதிச் சடங்குகள் மிக எளிதானவை. அவர்களின் பஞ்சாங்க முறைப்படி நடத்தும் சடங்குகளின் விரிவான செயல்கள் யாவும் இந்தச் சமயத்திலே காணப்படவில்லை' பூசாரிகள் யாரும் இல்லாமலேயே சடலம் உடனே அடக்கம் செய்யப்படுகிறது.

ஸுனி மக்களிடையேகூட, ஒருவனை மிகவும் வருத்துகிற சாவு எளிதாகத் தள்ளப்படுவதில்லை. எஞ்சியிருக்கும் கணவனோ மனைவியோ மிகுந்த ஆபத்தில் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் இந்தத் துக்கத்தையும் அசௌகரியத்தையும் உருவகப்படுத்துகின்றனர். ஒருவனுடைய இறந்துபோன மனைவி 'அவனைத் திருப்பி இழுத்துக்'கொள்ளலாம். அல்லாவது, அவளுடைய

தனிமையிலே அவள் அவனைக் கூடவே அழைத்துச் செல்லக் கூடும். கணவன் இறந்துபோய் எஞ்சியிருக்கும் மனைவிக்கும் இதேபோன்று ஏற்படலாம். எஞ்சியிருப்பவர் துக்கப்பட்டால் அவர் அபாயத்திற்கு ஆளாகிறார். ஆகையால், அவர்கள் கொலை செய்தவர்களைப்போன்று முன்னெச்சரிக்கையாகக் கவனிக்கப் படுகின்றனர். அவன் நான்கு நாட்களுக்குச் சாதாரண வாழ்க்கையில் பங்குகொள்ளாமல் தனித்திருக்கவேண்டும். அவனுடன் யாரும் பேசக்கூடாது. அவனும் யாருடனும் பேசக் கூடாது. ஒவ்வொருநாளும் அவன் தூய்மை பெறுவதற்காக வாந்தி மருந்து அருந்தவேண்டும். கிராமத்திற்கு வெளியே சென்று இடக்கையினால் கறுப்புத்தானியச் சோற்றைப் பலியாகக் கொடுக்கவேண்டும். 'அவன் அதைத் தலையை நான்குமுறை சுற்றிக்' கெடுதிகள் ஏற்படாமலிருக்கத் 'தூரத்தில் எறிந்துவிட வேண்டும்' என்று அவர்கள் சொல்கிறார்கள். நான்காவது நாள் அவளுக்காகத் தொழுகைக் குச்சிகளை நட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இஃது ஒன்றுதான் ஸுனி மக்களில் ஒரு தனிநபருக் காகச் செய்யப்படுகிற பிரார்த்தனை. தன்னை அமைதியாக விட்டு விடும்படியும், தன்னை அவளுடன் சேர்த்து அழைத்துச்செல்ல வேண்டாமென்றும்,

> 'பாதுகாப்பான பாதை வழியே எங்களைக் காப்பாற்றி
> உன்னுடைய நல்ல அதிருஷ்டங்களையெல்லாம்'

தனக்கு அளிக்கவேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறான். ஓர் ஆண்டுக்கு அவன்மீதுள்ள அபாயம் நீங்கிவிட்டதாகக் கருதப்பெறுவதில்லை. அந்த ஆண்டில் அவன் வேறொரு பெண்ணை நெருங்கினால் இறந்துபட்ட அவன் மனைவி பொறாமை கொள்வாள். ஆண்டு முடிந்தவுடன் வேறொரு பெண்ணைப் புணர்ந்துவிட்டு, அவளுக்கு ஒரு பரிசை அளிக்கிறான். அவனைச் சூழ்ந்துள்ள அபாயம் அப்பரிசோடு விலகிவிடுகிறது. அவன் விடுதலையடைந்து வேறொரு பெண்ணை மணம்செய்து கொள்கிறான். கணவன் இறந்தால் மனைவியும் இதே முறையைக் கையாளுகிறாள்.

மேற்கத்திய சமவெளிகளில் துக்கம் கொண்டாடுதல் இது போன்று ஒரு பயத்தை வெளிப்படுத்தவில்லை. அடக்கமுடியாத துக்கத்திலே ஈடுபடுகின்ற ஒரு டையோனீஷியன் முறையாக அஃது இருந்தது. அவர்களது நடத்தை சாவினால் ஏற்படுகிற மன எழுச்சியையும், நம்பிக்கையற்றுப்போகின்ற மனநிலையையும் தவிர்க்காமல் வலியுறச்செய்தது. பெண்கள் தலைகளையும்,

கால்களையும் புண்ணாக்கிக்கொண்டு விரல்களையும் வெட்டிக் கொண்டனர். பெண்கள் நீண்ட வரிசைகளாக இறந்தவன் இருக்குமிடம் வழியாக திறந்த கால்களில் இரத்தம் சொட்டச் சொட்ட செல்கின்றனர். அவர்களது தலைகளிலும், கெண்டைக் கால்களிலும் இரத்தத்தை உறையவிடுகிறார்கள். அதைத் துடைப்பதில்லை. சடலம் புதைப்பதற்காக எடுத்துச்செல்லப் பட்ட பிறகு வீட்டிலுள்ள எல்லாவற்றையும் யாரேனும் எடுத்துக் கொள்ளும்படி கீழே எறிந்துவிடுகின்றனர். இறந்துபட்டவருடைய பொருள்கள் தீட்டுப்பட்டவைகளாகக் கருதப்பெறவில்லை. அப் பொருள்களின்மீது யாருக்கும் அக்கறை இல்லாமலிருத்தலாலும் அவைகளுக்குப் பயனின்றிப் போவதாலும் அவைகள் இம்மாதிரி எறியப்படுகின்றன. வீட்டையே இடித்து மற்றொருவனுக்குத் தந்துவிடுகின்றனர். இறந்தவனுடைய மனைவிக்கு அவள் போர்த்தியிருக்கும் கம்பளத்தைத்தவிர வேறொன்றும் வைப்ப தில்லை. இறந்தவனுக்குப் பிரியமான குதிரைகளை அவனைப் புதைக்குமிடத்திற்குக் கொண்டுசென்று, மக்கள் அழுது கொண்டிருக்கும்போதே கொன்றுவிடுகின்றனர்.

தனியொருவன் அதிகமாகத் துக்கம் கொண்டாடுவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். சமாதியில் வைக்கப்பட்டபிறகு அவன் மனைவியோ, மகளோ, உணவு கொள்ளாமல், குடியிருப் புக்குத் திருப்பி அழைப்பவர்களை மதியாமல், அழுதுகொண்டே கல்லறைக்கு அருகில் இருக்கவும் விரும்பலாம். ஒரு பெண்ணோ, ஆணோ அழுதுகொண்டே பல அபாயகரமான இடங்களுக்குச் சென்று இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைத் தரக்கூடிய தோற் றங்களைப்பெறலாம். சில குடிகளில் பெண்கள் பல ஆண்டுகள் வரை அந்தச் சமாதியிடம் சென்று அழுவார்கள். இன்னும் சில காலம் சென்றபிறகு சில மனோகரமான மாலைவேளைகளில் அழாமல் அச் சமாதிகளுக்கருகே போய் அமர்ந்திருக்கலாம்.

குழந்தைகள் இறந்துவிட்டால் ஏற்படுகிற துக்கம் குறிப்பிடத் தக்கது. டகோடா (Dakota) என்ற மக்களிடையே பெற்றோர் அழுதுகொண்டே வீடு திரும்பும்பொழுது ஆடையின்றி வருவது அவர்களது துக்கத்தின் தீவிர நிலையைக் குறிக்கிறது. இது போன்ற ஒரு சமயத்தில்தான் இப்படி நடக்கக்கூடும். வேறொரு சமவெளி மக்களிடையே தனக்கேற்பட்ட அனுபவத்தைக்கூறும் ஒரு பழைய எழுத்தாளன் 'யாரேனும் ஒருவன் இச் சமயத்தில் (துக்கம் கொண்டாடும் சமயம்) பெற்றோரைப் பழித்துவிட்டால், அவனது சாவு உடனே ஏற்பட்டுவிடும். ஏனென்றால், அதிக மான துக்கத்திலே தன்மீது பழிவாங்கலாம் என்ற நோக்குடனே

பெற்றவன் இருக்கிறன். அதற்குப் பிறகு அவன் போருக்குச் சென்றுவிடுகிறன். அதில் அவன் உயிர்வாங்குகிருஞ, உயிர் விடுகிருஞ என்பதைப்பற்றி அவனுக்குக் கவலேயில்லே' என்று கூறுகிறன். ப்யூப்லோ மக்கள் சாவிலிருந்து தப்பித்துக்கொள் ளத் தொழுவதுபோலன்றி அவர்கள் சாவை நாடிச்சென்றனர்.

சாவைப்பற்றி இவ்வித இருவித இயல்புகள் மாறுபட்ட நடத்தைகளின் உதாரணங்களாக இருக்கின்றன. தனிப்பட்ட நபர்கள் தங்களுக்குச் சாதகமான ஒன்றை எடுத்துக்கொள் கின்றனர். ப்யூப்லோ மக்கள் ஒன்றையும், சமவெளி இந்தியர்கள் மற்ருென்றையும் தங்கள் நிறுவனங்களாகக் கொண்டுள்ளனர். இதனுல், சமவெளி இந்தியர்களிடையே, துக்கத்தால் பீடிக்கப் பட்ட குடும்பத்து நபர்கள் ஒவ்வொருவரும் அடக்கமுடியாத பலாத்காரமான துக்கத்தை அனுபவிக்கவேண்டுமென்ருே, ப்யூப்லோ மக்களிடையே மயிர்தூரிகையை உடைப்பதுபோன்ற சிறு நஷ்டங்களால் பாதிக்கப்பட்டு மறக்கவேண்டும் என்று சொல்லப்பட்டவுடன் இறந்தவனே மறந்துவிடுவதையோ குறிக்க வில்லே. உண்மை என்னவென்ருல், ஒரு பண்பாட்டிலே ஓர் உணர்ச்சி நிலேக்கான வழிகள் ஏற்கெனவே உண்டாகியிருப் பதைப் பின்பற்றுகிறன். மற்றப் பண்பாட்டிலே அங்குள்ள வழி களே அங்கிருப்பவன் பின்பற்றுகிறன். தங்களுடைய பண்பாட் டிலே ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் வழிகளேத்தான் மக்கள் பொது வாகப் பின்பற்றுகின்றனர். இந்த வழியை எடுத்துக்கொண்டால் உணர்ச்சிகளே வெளிப்படுத்தத்தக்க வழிகளே அவர்கள் காண் கிறர்கள். அவர்கள் அவ்வழிகளே எடுத்துக்கொள்ள முடிய வில்லே என்ருல் பல சங்கடங்கள் நேருகின்றன.

ஒருவன் மற்ருெருவனேக் கொலேசெய்துவிட்டால் அதற்காகத் தனிச்சடங்குகள் ஏற்படுத்தி இந்தப்பண்பாடுகள் சாவின் மற்ருெரு விதத்தைக் கையாளுகின்றன. ஸூனி மக்களிடையே, எஞ்சி நிற்கின்ற கணவனேயோ, மனேவியையோ கவனிப்பதுபோன்று கொலே செய்தவனேக் கவனிக்கிறர்கள். பூசாரிகளின் மேற் பார்வையில் அவன் சடங்குக்கான கிவாவில் தவமிருக்கிறன். அவன்மேல் ஏற்பட்டிருக்கும் பழியை விரிவான சடங்குகளால் அகற்றுகின்றனர். அது அவன் போர் அணியில் சேரவேண்டிய துவக்கச் சடங்காகும். அவனது தவத்தின்போது அவன் அசையாமல் உட்கார்ந்திருக்கவேண்டும். யாருடனும் பேசக் கூடாது. யாரும் அவனிடமும் பேசக்கூடாது. அவன் வாந்திக் கான மருந்துகள் சாப்பிட்டு உணவருந்தாமல் இருக்கவேண்டும். இதுதான் அவன் துவக்கச் சடங்காகச் செய்யும் தவம். இஃது

கணவனையிழந்த மனைவியோ, அல்லது மனைவியையிழந்த கணவனோ செய்யும் தவத்திற்கு ஒப்பாக உள்ளது. இதேபோன்ற கட்டுப்பாடுகளை எவன் எந்தக் கூட்டத்தில் சேரவேண்டுமென்றாலும் அனுபவிக்கவேண்டும். ஸுனி மக்களிடையே கொலை செய்தவனுக்கு அளிக்கப்படும் இந்தக் கட்டுப்பாடுகள் அவன் போர் அணியில் சேர்வதற்கான துவக்கச் சடங்காக இருக்கின்றன. இவைகளிலிருந்து அவன் விடுபடும்பொழுது போரணியில் சேர்ந்து புதிய சமூகப் பொறுப்புகளை ஏற்கிறான். போர்த் தலைவர்கள் ஆயுள் முழுதும், போர் செய்வதுமட்டுமன்றி, சடங்குகளின்போதும் பொது விழாக்களின்போதும், காவல் புரிபவர்களாகவும் தூது செல்பவர்களாகவும் இருக்கின்றனர். வேண்டும்பொழுது சட்டங்களை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்கின்றனர். தலைத் தோல்கள் வைக்கப்பட்டிருக்கும் வீட்டின் பொறுப்பு இவர்களுடையதாகும். மழையை வரவழைக்க இவர்கள் சக்திவாய்ந்தவர்களாக எண்ணப்பெறுகின்றனர்.

விரிவான சடங்குகள்கொண்ட போர் நடனத்திலே கொல்லப்பட்டவனின் சின்னமாகத் தலைத்தோல் இருக்கிறது. போர் அணியிலே புதிதாகச் சேர்கின்றவனுடைய துவக்கச் சடங்காகவும், ஸுனி மக்களின் மழை தருவிக்கக்கூடிய இயற்கைக் கப்பாற்பட்டதாக அந்தத் தலைத்தோலை மாற்றும் சடங்காகவும் இந்த நடனம் விளங்குகிறது. நடனத்தின்மூலம் பெருமை கொடுக்கப்பட்டு, தத்தெடுத்துக்கொள்கின்ற முறையிலே அது ஸுனி மக்களால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். திருமணத்தின் போதோ, தத்தெடுத்துக்கொள்ளும்போதோ ஏற்படுகிற இச் சடங்கு, புதிதாகச் சேர்பவனுடைய தலையை அவனுடைய தகப்பன் குடும்பத்தைச் சேர்ந்த வயதான பெண்கள் கழுவி விடுதலைக் கொண்ட ஒரு செயலாகும். அதுபோன்று தலைத் தோலை, கொலை செய்தவனுடைய தந்தையின் உடன்பிறந்த சகோதரிகள் சுத்தமான நீரில் கழுவிவிடுகிறார்கள். பிறகு திருமணத்தின்போது தன் மனைவியின் குடும்பத்திலே சேர்வதற்கான துவக்கச் சடங்குகளைப்போன்ற சடங்குகளால் அந்தத் தலைத் தோல் குடிகளிடையே ஒப்புக்கொள்ளப்படுகிறது. தலைத்தோல் நடனப் பிரார்த்தனைகள் தெளிவாக உள்ளன. அவை உபயோகமற்ற ஓர் எதிரியின் தலைத்தோல் மக்கள் தூய்மையாகக் கருதுகிற ஒரு சின்னமாக மாறுவதையும், இந்தப் புதிய ஆசியை மக்கள் உற்சாகமாக வரவேற்பதையும் வர்ணிக்கின்றன.

'குப்பையிலே வளர்ந்து வயதடைந்தாலும்
எதிரி
தானியப் பூசாரிகளின் மழைக்கான பிரார்த்தனைகளால்
மதிப்புயர்ந்துவிட்டான்.'

வாழ்க்கையில் பொய்யே சொல்லிக்கொண்டிருந்த
எதிரி
'உலகம் எப்படியாகும், நாட்கள் எப்படி இருக்கும்
என முன்கூட்டியே அறிவிக்கும் சக்திபடைத்தவனாக
ஆகிவிட்டான்'
'மதிப்பற்றவனாக அவன் இருந்தபோதிலும்
நீர்ப்பிராணி, விதைப்பிராணி
எதிரியின் நீரையும், விதையையும்,
செல்வத்தையும் எதிர்பார்த்து
அவனது நாட்களுக்காக[1] காத்திருப்பாய்.'
உன்னுடைய தெளிந்த நீரால்
எதிரி நீராட்டப் பெற்றபிறகு[2]
தானியப் பூசாரிகளின் நீர்நிறைந்த முற்றங்களில்
அவனை ஏற்றிவைத்தபிறகு[3]
தானியப் பூசாரிகளின் குழந்தைகள்
தங்கள் தந்தையரின் பாட்டுகளைக்கொண்டு
அவனுக்காக நடனமாடுவார்கள்.
'அவனுக்கான நாட்கள் சென்றவுடனே
பிறகு ஒரு நல்ல நாள்
அழகான நாள்
கூச்சலும், சிரிப்பும் கொண்டநாள்
ஒரு நல்லநாள்
நீ உன் குழந்தைகளான எங்களுடன்
கழிப்பாயாக'

ஆகவே, தலைத்தோல், பிரார்த்தனை செய்யப்படவேண்டிய இயற்கைக்கப்பாற்பட்ட ஒன்றாக மாறுகின்றது. கொலைசெய்தவன் போர் அணியில் முக்கிய ஆயுள் நபராக மாறுகிறான்.

'டையோனீஷியன் பண்பாட்டிலே இது வேறுவிதமாகக் கையாளப்படுகிறது. இதை ஒரு பெருத்த அபாயமாகக் கொள்கின்றனர். கொலை செய்தவன் இயற்கைக்கப்பாற்பட்ட ஓர் அபாயத்திற்குள்ளானான். பிமா (Pima) மக்கள் இப்படிக் கொலை செய்த ஒருவனைத் தரையில் தோண்டப்பட்ட ஒரு வட்டமான குழியில் உட்காரவைத்து இருபது நாட்களுக்குத் தூய்மைப் படுத்துகின்றனர். ஒரு சடங்குத் தகப்பனால் ஆறடி நீளமுள்ள

1 தலைத்தோல்நடனம். 2 தலைத்தோல் கழுவப்பெறும் சடங்கு. 3 முற்றத்திலுள்ள தலைத்தோல் தாங்கும் கம்பம்.

கம்பின் நுனியால் ஆகாரம் அளிக்கப்படுகிறது. அவனது கைகளை யும் கால்களையும் கட்டி ஆற்றில் எறிந்தபிறகுதான் அவனது அபாயம் நீங்குகிறது.

மேற்கத்திய சமவெளிகளில் இத்தகைய இயற்கைக்கப்பாற் பட்ட தொடர்புகளை அவர்களுடைய பலாத்காரமுறையில் பயன் படுத்தவில்லை. கொன்றவனுக்கு விடுதலை தேவையில்லை. அவன் எல்லோரும் பொருமைப்படும்படியான ஒரு வெற்றியைக்கொண்ட தாகக் கருதப்பெறுகிறன். தோற்றுப்போன எதிரியைப் பார்த்து எக்காளமிட்டு தங்குதடையில்லாது வெற்றிப் பெருமிதம் கொள் ளும் வாய்ப்பாக அவர்களுடைய டையோனிஷியன் உணர்ச்சிப் பெருக்கு இருந்தது. வெற்றியோடு திரும்புகிற போர் அணி, அதிகாலையில் தங்கள் முகங்களைக் கரியாக்கிக்கொண்டு, தங்கள் குடியிருப்புகளின்மீதே கேலிப் போர் ஒன்றைத் துவங்கும்.

'......துப்பாக்கிகளைச் சுட்டுக்கொண்டு, வென்றுவந்த தலைத் தோல்கள் உடைய கம்பங்களை ஆட்டிக்கொண்டு...... மக்கள் உணர்ச்சி வெள்ளத்திலே மூழ்கி, மகிழ்ச்சி ஆரவாரத்துடன், அவர்களைக் கூச்சல்களால் வரவேற்றனர். எங்கும் மகிழ்ச்சி பொங்கியது. பெண்கள் வெற்றிக்கான பாடல்களைப் பாடினர். முதல் அணியிலே புரட்சிகளை... எண்ணியவர்கள் இருந்தார்கள். சிலர் வெற்றிபெற்ற வீரர்களைக் கைகளால் தழுவிக்கொண்டனர். அவர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்ட பாடல்களை வயதான ஆண்களும் பெண்களும் பாடினர். ஏழைகளுக்கும், நண்பர் களுக்கும் பரிசுகளை வாரி வழங்குதல்மூலம் தங்கள் மகிழ்ச்சியை முதலணியில் உள்ளவர்களின் உறவினர்கள் தெரிவித்துக் கொண்டனர். தனது தந்தையோ அல்லது வேறு துணிகரமான மனிதனோ வாழ்ந்த இடத்திற்குக் கும்பலாகச் சென்று அவனது பெருமைக்காக நடனம் ஆடினர். அவர்கள் இரவு முழுவதும் நடனம் ஆடத் தயாராக இருந்தனர். சில சமயம் இரண்டு பகல்களும் இரவுகளும் தொடர்ந்து ஆடவும் செய்தனர்.'

எல்லாரும் தலைத்தோல் நடனத்தில் பங்குகொண்டபோதிலும் அஃது ஒரு மதசம்பந்தமான விழா அல்ல. மருத்துவர்கள் அதில் பங்கு கொள்ளவில்லை. சமூக ஏற்பாட்டின்படியே இதற்கான பொறுப்புகளை ஆண்-பெண்கள் அதாவது, பெண்களின் வாழ்க் கையை ஏற்றுக்கொண்ட ஆண்கள் எடுத்துக்கொண்டனர். அவர்களைத் திருமணத் தரகர்கள் என்றும் 'நல்ல கூட்டாளிகள்' என்றும் அழைத்தனர். அவர்கள் நடனங்கள் அமைத்துத் தலைத்தோல்களை எடுத்துச்செல்வர். வயதான ஆண்களும் பெண்

களும் விகடங்கள் செய்தனர். அதில் சிலர் எந்த வீரர்களின் தலைத்தோல்கள் சடங்கின் நடுநாயகமாக இருக்கின்றனவோ அந்த வீரர்களைப்போல உடையணிந்திருந்தனர்.

இந்த இரண்டுவித நடனங்களைப் பார்த்தவருக்கு அவை களிடையே உள்ள வேறுபாடு நன்ருக விளங்கும். போருக்கான மருத்துவக்கட்டுகள் வைக்கப்பெற்ற மேடையின் முன்னுல் மாறி மாறி ஆடுகிற ப்யூப்லோ தலைத்தோல் நடனம், செய்யின் (Cheyenne) தலைத்தோல் நடனத்தைக்காட்டிலும் வேறுபட்டிருந்தது. செய்யின் நடனத்திலே வெற்றியின் பெருமை கொண்டாடப்பட்டது. கைகளினுல் செய்கின்ற சண்டையைப் போல நடித்து, சிறந்த ஒரு மனிதனைக் கண்டுவிட்ட ஆர்வம் தொனிக்க அமைந்திருந்தது. ப்யூப்லோ நடனத்திலே எதுவும் அமைதியாகவும் கூட்டமாகச் சேர்ந்தும் செய்யப்பெற்றது. அச் சமயம் கொலை செய்தவன்மேல் உள்ள களங்கம் அவனை ஒரு மதிப்புள்ள கூட்டத்திலே சேர்ப்பதனுல் அகற்றப்பட்டது. சிறப்பில்லாத ஓர் எதிரியின் தலைத்தோல் மழை தருவிக்கும் இயற்கைக் கப்பாற்பட்ட ஒன்ருக மாற்றப்பட்டது. சமவெளி நடனங்களில் ஆட்டக்காரர்கள் கூட்டமாக வந்தாலும் ஒவ்வொருவரும் ஒரு தனி ஆட்டக்காரனுகவே இருந்தான். அவர்களது நடனத்திலே அவர்களுடைய நன்ருகப் பழக்கப்பட்ட உடல் அசைவுகளால் உடல் வலியின் பெருமையை எடுத்துக்காட்டினர். தனிப்பட்டவர்களின் பெருமையையும் எக்காளத்தையும் அவை கொண்டிருந்தன.

உறவினர்கள் இறந்துவிடுவதையும், எதிரிகள் கொலை செய்யப்படுவதையும் ப்யூப்லோ மக்களின் அப்போலோனியன் ஈடுபாடு அறவே சட்டப் புறம்பானவைகளாக மாற்றவில்லை. குறைந்த அளவு பலாத்காரத்தோடு அவைகளைக் கடந்துசெல்ல அவைகளை ஆசிபெறக்கூடிய சம்பவங்களாக மாற்றிவிடுகின்றனர். அக் கூட்டத்திற்குள்ளே உள்ளவர்களைக் கொலைசெய்தல் மிக அரிது. அப்படி ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட உறவினர் கூட்டங்களிடையே கட்டணங்கள் செலுத்தப்பட்டு அடக்கப்படுகிறது. தன் உயிரைத் தானே மாய்த்துக்கொள்ளல் விலக்கப்பட்ட ஒரு செய்கையாகும். ப்யூப்லோ மக்கள் சாதாரணத் தற்கொலையைக்கூட மிகவும் பலாத்காரமான செயலென எண்ணுகின்றனர். அஃது எப்படி இருக்கும் என்பதே அவர்களுக்குப் புரிவதில்லை. அதையொட்டியே கதைகள் சொல்லிச்சொல்லி வற்புறுத்தியதில் அவர்கள் சொன்னது கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கிறது. ஒருவன் ஓர் அழகான பெண்ணேடுகூடவே மடிய

வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தானும். ஒரு நாள் நோய்வாய்ப்பட்ட ஒரு பெண்ணைக் குணப்படுத்த அவன் அழைக்கப்பட்டான். அவன் அதற்காக ஒரு காரமான பச்சிலையை மென்று சாறு எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மறுநாள் காலை அவன் இறந்துவிட்டான். அவனே வேண்டுமென்று உயிரை மாய்த்துக்கொண்டதாக அவர்கள் நம்பவில்லை என்றாலும் தற்கொலைக்கு நிகராக அவர்கள் அறிந்த ஒரு செயல் அதுதான். தான் விரும்பியபடியே தன் மரணத்தை அடைந்த ஒருவனது கதையாகத்தான் இது இருக்கிறது.

கட்டுக்கதைகளில் மட்டும்தான், நமக்குத் தெரிந்த தற்கொலை களுக்கு நிகரான சம்பவங்கள் இருந்தன. தனியாக விடப்பட்ட ஒரு மனைவி, தன் கணவனையும், அவனது காமக்கிழத்தியையும் கிராமத்தோடு ஒருங்கே அழித்துவிட அப்பாச்சிக் (Apache) குடிகளை நான்கு நாட்களுக்குள் வரும்படி அழைத்ததாகக் கதை களில் சொல்லப்பெறுகிறது. அவள் தன்னை நன்றாகச் சுத்தம் செய்துகொண்டு அவளுடைய சிறந்த ஆடைகளை அணிந்து கொள்கிறாள். குறிப்பிட்ட நாளில் எதிரியை எதிர்சென்று தானே முதலில் பலியாகிறாள். நாம் எண்ணுகின்ற முறையில் இது தற்கொலையாக இருந்தாலும் அவர்கள் இதைப் பழிவாங்குதல் என்று குறிப்பிடுகிறார்கள். ‘அவள் மிகவும் தாழ்ந்த எண்ணங் களுடையவள். நாங்கள் இப்போது அப்படிச் செய்வதில்லை’ என்று அவர்கள் சொல்லுகின்றனர். பழிவாங்குவதற்காக அவள் இம்மாதிரிச் செய்தாள் என்று மட்டும்தான் அவர்கள் நம்பு கிறார்கள். தனக்கு மறுக்கப்பட்ட மகிழ்ச்சி தன் கிராமத்தாருக்கே இல்லாமல்செய்துவிட்டாள். தன் கணவன் புதிதாகக்கொண்ட இன்பத்தை அழித்துவிட்டாள். ஸூனி மக்கள் அனுபவங்களுக்கு அப்பாற்பட்டதினாலே மீதிக் கதை வெறும் கற்பனையாக இருக் கிறது. உதாரணமாக அப்பாச்சிகளுக்குச் செய்தி அனுப்ப ஒரு இயற்கைக்கப்பாற்பட்ட தூதுவனை அவள் அடைகிறாள். என்ன தான் விவரித்துத் தற்கொலையை ஸூனி மக்களுக்கு விளக்கினாலும் அவர்கள் நம்பமுடியாத ஒன்றைச் சொல்வதாக நினைத்து நகைக் கின்றனர். மிகவும் நகைப்புக்கிடமான இந்தச் செயல் வெள்ளை யனின் விநோதச் செயலாகும்.

ஆனால், சமவெளி இந்தியர்கள் தற்கொலையைப்பற்றி நமக்கும் அதிகமாகவே புரிந்துகொண்டிருந்தார்கள். தனக்கு வேண்டிய கவர்ச்சியான வாழ்க்கை ஒருவனுக்கு நேரிடாவிட்டால் அவன் ஓராண்டுத் தற்கொலைப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறான். இதற் காக எட்டடி நீளமுள்ள ஒரு மான் தோலைச் சின்னமாக அணிந்து

கொள்கிருன். தரையில் புரளுகிற இடத்தில் அத் தோலில் ஒரு வெட்டு இருந்தது. கொரில்லாமுறைப் போரில் அந்தத் தோலின் வெட்டப்பட்ட பகுதியால் அவன் ஒரு குறிப்பிட்ட இடத்திலே நிறுத்தப்படுவான். அவன் பின்வாங்கமுடியாது. ஆனுல், அத் தோல் முன்னேறிச்செல்ல இடையூறு அளிக்காது. அவனுடைய கூட்டத்தார் பின்வாங்கிவந்துவிட்டாலும் அவன் முன்னணியிலேயே இருக்கவேண்டும். அவன் இறந்தால்கூட அவன் விரும்புகின்ற மகிழ்ச்சிதரக்கூடிய ஈடுபாட்டில்தான் உயிர் விடுகின்றுன். அவன் அந்த ஆண்டு முடிய சாகாமல் தப்பி விட்டால், சாவை எல்லாமுறையிலும் எதிர்நோக்கி வெற்றி பெற்றுவிட்டான் என்ற முறையிலே அவனுக்கு சமவெளி மக்கள் கொண்டாடும் எல்லாப் பெருமைகளும் கிடைக்கின்றன. ஆயுள் முழுதும், பெரியவர்கள் தங்கள் வெற்றிகளைச் சொல்லிக்கொள்ளும் பொழுது, இவனும் தன்னுடைய பிரமாண ஆண்டையும் அவனது வெற்றிகளையும் குறிப்பிடலாம். இப்படி அடைந்த வெற்றிகளைக்கொண்டு, அவன் பலகூட்டங்களில் சேரத்தகுதியையும், தலைவனுக மாறுவதற்கு உரிமையையும் பெறுகிருன். தன் வாழ்வை முடித்துக்கொள்ளவேண்டும் என விரும்பாதவன்கூட இப்படிப்பட்ட பெருமைகளைக்கண்டு, தற்கொலைப் பிரமாணம் எடுத்துக்கொள்ளக்கூடும். விரும்பாத ஒருவனை சமூகம் பிரமாணம் எடுத்துக்கொள்ளச்சொல்லிக் கட்டாயப்படுத்தலாம். சமவெளிகளிலே இப்படி ஒரு வீரனுடைய பிரமாணத்தை மட்டும் தற்கொலை முயற்சியாகக்கொள்ளவில்லை. மற்றக் குடிகளிலே நிகழ்வதுபோல் சர்வசாதாரணமாக நிகழாவிட்டாலும், காதலுக்காகத் தற்கொலைகளும் ஏற்படுகின்றன. ஒருவன் தனது உயிரைப் பலாத்காரமாக உதறித் தள்ளுவதை அவர்கள் புரிந்து கொள்கின்றனர்.

ப்யூப்லோ நிறுவனங்களில் அப்போலோனியன்முறை வேறு விதத்திலும் வெளிப்படுகிறது. நடுங்கக்கூடிய நிலைகளும் அபாயங்களும் அவர்களது பண்பாட்டிலே விரிவாக அமைக்கப் பெறவில்லை. தீட்டு, பயம் என்ற உணர்ச்சிகளை ஏற்படுத்தும் டையோனிஷியன் மனப்பாங்கு அவர்களிடத்திலே கிடையாது. உலகத்தின் எல்லாப்பகுதிகளிலும் துக்கம் கொண்டாடுதலின் போது இதுபோன்ற உணர்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். துக்கத்தை விட ஒருவித பயத்தைப் புதைக்கும் சடங்கு உண்டாக்குகிறது. ஆஸ்ட்ரேலியக் குடிகளில் இறந்தவனின் நெருங்கிய உறவினன், அவன் உடல்மீது விழுந்து மண்டையை அது மறுபடியும் தொல்லை தராமலிருக்கத் துகள்களாக உடைத்துவிடுகிருன். இறந்தவனின் ஆவி பின்தொடராமலிருக்க அவன் கால் எலும்பு

களை முறித்துவிடுகின்றனர். ஐலெட்டாவில் (Isleta) இறந்த உடலில் எலும்புகளை ஒன்றும் செய்யாமல் அவனது மயிர்த் தூரிகையை மட்டும் உடைக்கின்றனர். ப்யூப்லோ மக்களுக்கு மிகவும் நெருங்கியிருக்கிற நவாஜோ (Navajo) மக்கள் இறந்தவன் வீட்டையும் அதற்குள்ளே இருக்கும் சாமான்களையும் கொளுத்தி விடுகின்றனர். இறந்தவனின் பொருள்கள் வேறுயார் கைக்கும் கிட்டுவதில்லை. அவை தீட்டுடையவை ஆகும். ப்யூப்லோ மக்களில் இறந்தவனது வில், அம்புகள், மருத்துவனின் தூய்மைச் சின்னமான தானியக்கதிரான மிலி (Mili) ஆகியவைமட்டும் (இவற்றின் மதிப்புள்ள இறகுகள் பிய்க்கப்பட்டபிறகே) இறந்தவனோடு சேர்த்துப் புதைக்கப்பட்டன. அவர்கள் ஒன்றையும் எறிந்து விடுவதில்லை. ப்யூப்லோ மக்கள் இறந்தவனின் வாழ்க்கை முடிந்துவிட்டதைக் குறிக்கின்றனரே தவிர, அவனது உடலின் தீட்டையோ, அவனது ஆவியின் பொருமை, பழிவாங்கும் எண்ணம் இவைகளையோ கண்டு அஞ்சி அதற்கான தற்காப்புகள் செய்துகொள்வதில்லை.

பிறத்தல், பருவமடைதல், திருமணம், சாவு ஆகிய வாழ்க்கையின் முக்கியமான கட்டங்கள், சில நாகரிகங்களிலே அச்சப்படக்கூடிய நிலைகளாகக் கொள்ளப்பெற்றிருக்கின்றன. சாவிலும், துக்கம் கொண்டாடுதலிலும் எப்படி இந்த நிலையை ப்யூப்லோ மக்கள் சமாளிக்கிறுர்களோ அவ்விதமே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடந்துகொள்கின்றனர். அவர்கள் மாதவிடாய் காலத்தில் பெண்களை நடத்தும் விதம் குறிப்பிடத்தக்கது. ஏனென்ருல், அவர்களைச் சுற்றியுள்ள பல குடிமக்களில் மாதவிடாய் உள்ள பெண்களுக்கெனத் தனியாகச் சிறு விடுதிகள் உள்ளன. சாதாரணமாக அவள் தன் உணவைத் தானே சமைத்து, தனக்கெனத் தனிப் பாத்திரங்களைக்கொண்டு, தனியாக ஒதுங்கி வாழ வேண்டும். வீட்டில் அவள் தொட்டாலே தீட்டு உண்டாகிவிடும். வேட்டையாடுபவனின் சாதனங்களை அவள் தொட்டுவிட்டால் அவை பயனற்றுப்போய்விடும். ஆனுல், ப்யூப்லோ மக்களிடையே மாதவிடாய்க்கென தனிவிடுதி கிடையா. இச் சந்தர்ப்பங்களில் பெண்களைப்பற்றியுள்ள முன்னெச்சரிக்கைகளும் கிடையாது. பெண்களின் வாழ்க்கையில் இக் காலங்கள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை.

சுற்றியுள்ள குடிமக்கள் சூன்யத்தைக்கண்டு மிகவும் அஞ்சுகின்றனர். ஆப்பிரிக்கா, மெலெனீஷியா ஆகியவற்றில் உள்ள பழக்கங்களையே சூன்யம் என்பது குறிக்கிறது. வட அமெரிக்காவில் அலாஸ்கா முதல், க்ரேட் பேஸினில் (Great Basin) உள்ள ஷோஷோனியன் மக்கள் வழியே தென்மேற்கு பிமா (Pima)

மக்கள்வரை பரவியுள்ள, மருத்துவனின்மேல் கட்டுப்பாடின்றி உள்ள எதிர்ப்பும், பயமும், சந்தேகமும் சூன்யத்திஞல் ஏற்படுகின்ற குணுதிசயங்களாகும். இது கிழக்கேயுள்ள மிடேவிவின் (Midewiwin) சமூகத்தையும் பற்றியிருக்கிறது. எந்த டையோனீஷியன் சமூகமும் இயற்கைக்கப்பாற்பட்டவைகளைச் சக்திவாய்ந்தவை என்பதற்காகமட்டுமன்றி, அபாயம் விளைவிக்கக்கூடியவை என்பதற்காகவும் மதிக்கிறது. அபாயமான அனுபவங்களை பயன்படுத்திக்கொள்வதற்கு உள்ள ஊக்கம், பழங்குடிகள் அவர்களது மருத்துவ மனிதரின்மேல் கொண்டுள்ள ஈடுபாட்டிஞல் நன்கு தெளிவாகிறது. அவன் உதவி செய்வதற்கான சக்தியை விட துன்புறுத்த அதிக சக்தியைப் பெற்றிருந்தான். பயம், வெறுப்பு, சந்தேகம் ஆகிய உணர்ச்சிகளோடுதான் அவைகளை நோக்கினர். அவனுடைய சாவிற்குப் பழிவாங்குவதில்லை. அவன் நோயைக் குணப்படுத்தத் தவறிவிட்டால், அவன்மேல் சந்தேகப்பட்டு மக்கள் அவனைக் கொன்றுவிடுவர்.

ப்யூப்லோ மக்களல்லாத மொஜாவே (Mojave) என்ற தென் மேற்குப் பகுதியிலுள்ள ஒரு குடிகள் இந்த ஈடுபாட்டை அதிகமாகக் கொண்டிருந்தனர். 'பருந்து தன் வ ழ்விற்காகச் சிறுபறவைகளைக் கொல்வதுபோல் மருத்துவர்கள் மக்களைக் கொல்வது இயற்கையே' என்று அவர்கள் சொல்கின்றனர். தான் கொன்ற மனிதரெல்லாம் தன்னுடைய சாவிற்குப் பின்னுள்ள வாழ்க்கையில் தனக்கு அடங்கியிருப்பவர் என மருத்துவர்கள் எண்ணினர். அப்படி இறந்தவர்கள் அவனுடைய கூட்டத்தைச் சார்ந்திருந்தனர். ஒரு பெரிய கூட்டத்தை இப்படிச் சேர்த்தால் அஃது அவனுக்கு நன்மையே ஆகும். மருத்துவன் வெளிப்படையாகவே 'நான் இன்னும் சாக விரும்பவில்லை. இன்னும் ஒரு பெரிய கூட்டத்தை நான் தயார் செய்யவில்லை' என்று சொல்லுவான். சில காலத்திற்குப்பிறகு தான் பெருமைப்படக்கூடிய அளவுக்கு ஒரு கூட்டத்தைச் சேர்த்துவிடுவான். அவன் ஒரு மனிதனிடம் சின்னமாக ஒரு கம்பைக் கொடுத்து 'உன் தகப்பனை நான் கொன்றேன் என உனக்குத் தெரியாதா?' என்று சொல்லுவான். அல்லது ஒரு நோயாளியிடம் வந்து 'நான்தான் உன்னைக் கொலை செய்கிறேன்' என்று சொல்லுவான். அப்படியெல்லாம் சொல்வது அந்த இளைஞனின் தகப்பனை அவன் கத்தியால் கொன்றதாகவோ அல்லது விஷத்தை அவன் பயன்படுத்துவதாகவோ அர்த்தமாகாது. அது வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளும் இயற்கைக்கப்பாற்பட்ட முறையிஞல் சொல்லுவதாகும்.

ஸூனி மக்களிடையே இப்படிப்பட்ட ஒருநிலையை எண்ணிப் பார்க்கக்கூட முடியாது. அவர்களது பூசாரிகள் வெறுப்புக்கும்

சந்தேகத்திற்கும் ஆளாவதில்லை. ஒரே சமயத்தில் சாவைக் கொண்டுவருபவர்களும், நோயைக் குணப்படுத்துபவர்களுமாக டையோனிஷியன் முறையில், இருவித எதிர்சக்திகள் கொண்டவர்களாக அவர்கள் இல்லை. தற்சமயம், ப்யூப்லோ மக்களிடையே, ஐரோப்பிய நுண்விவரங்களைக்கொண்ட மாயாஜாலச் செயல்கள் நிறைந்திருந்தாலும் அவை சூன்யமாகக் கருதப்பெறவில்லை. ஸுனி மக்களிடையே, இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப்பெற ஒருவன் துணிச்சலோடு செய்கிற காரியமாகச் சூன்யம் எண்ணப் பெறவில்லை. யாரும் தொழிலாகக் கொள்வதற்கு சூன்யமுறைகளைத் தெரிந்துவைத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தன்னுடைய கண்களைப்பறித்து சுவரிலுள்ள பொந்தில் வைத்து விட்டு, அவைகளுக்குப் பதிலாக ஓர் ஆந்தையின் கண்களைத் தன் முகத்தில் கொண்டான் என்பதுபோன்று சில கட்டுக்கதைகளில் அவர்களது சூன்யக்காரர்களின் நடத்தை வர்ணிக்கப்படுகிறது. மற்ற இடங்களில், தீய எண்ணத்தோடு செய்யப்படுகிற சில சகிக்கவொண்ணு விவரங்கள் இங்கே கிடையாது. ப்யூப்லோ மக்கள், கவலையோடு சூன்யம்வைத்தலைக் கவனிக்கிருர்கள். யாரையாவது பிடிக்கவில்லையென்ருல் அவனை உடனே சூன்யக்காரன் என்று சந்தேகப்படுகின்றனர். சாதாரணமான சாவுகள் ஏற்பட்டால் அவைகளைச் சூன்யத்தினுல் ஏற்பட்டவை எனக் கொள்வதில்லை. ஆனுல், தொத்து நோய்கள் பரவிவிட்டால் அவர்கள் சூன்யக்காரர்களைத் துரத்துகிருர்கள். தங்களுடைய தூய்மையான மனிதர்களின் சக்திகளை அச்சுறுத்துபவைகளாக அவர்கள் எண்ணுவதில்லை.

ப்யூப்லோ மக்கள் அதீதச் செயல்களை நாடுவதில்லை. பலாத்காரத்தைப் பொறுத்துக்கொள்வதில்லை. அதிகாரத்தை ஆட்சி செலுத்த முற்படுவதில்லை. தனிப்பட்ட ஒருவனைப்பற்றிய எந்த நிலையையும் மகிழ்ச்சியூட்டுவதாக எண்ணுவதில்லை. டையோனிஷியன் மதிக்கின்ற எவ்விதச் சந்தர்ப்பங்களும் இவர்களிடத்தில் இல்லை. செழுமை அல்லது பயன்பெற்றிருத்தல் என்ற கருவள முறை (fertility cult) டையோனிஷியன் வகையைச் சார்ந்ததாயினும் இவர்கள் அது சம்பந்தமான மதத்தைக் கொண்டிருக்கின்றனர். டையோனியஸ் என்பான் கருவளத்திற்கான தேவனேயாவான். உலகத்தின் பலபாகங்களிலும், இனப் பெருக்கத்தின் சக்திக்கான கருவளமுறையும் அமிதச் செயல்களும் ஒன்ருக இணைந்த பண்பாடுகளையே நாம் காண்கிருேம். அப்போலோனியன் வழியில் ப்யூப்லோ மக்கள் இந்தக் கருவளச் சடங்குகளைப் பின்பற்றுவது அவர்களது அடிப்படை வாழ்க்கை நோக்குகளைத் தெளிவுறுத்துகிறது.

அவர்களது கருவளச் சடங்குகளில் (fertility ceremonies) பெரும்பாலானவை இனக்குறி அடையாளங்களைப் பயன்படுத்தாமலே நடத்தப்பெறுகின்றன. ஒரேமாதிரியான நடனத்தைத் திருப்பித்திருப்பி ஆடி விண்ணிலுள்ள மேகங்களை மழைபொழிய வைக்கின்றனர். இயற்கைக்கப்பாற்பட்டவைகளைப்போன்று வேடமிட்டவர்கள் உபயோகித்த, அல்லது தொழுகைப்பீடங்களின் மேல் வைத்திருந்த, பொருள்களைத் தானிய நிலங்களில் புதைப்பதன்மூலம் அவைகளின் வளம் உறுதி செய்யப்படுகிறது. ஸூனி மக்களைவிட அவர்கள் அருகேயுள்ள ஹோப்பி (Hopi) என்ற ப்யூப்லோ மக்கள் இனக் குறிகளைப் (sex symbols) பயன்படுத்துகின்றனர். ஹோபி மக்களின் சாதாரணச் சடங்குகளில் சிறிய கறுப்பு உருளைகளையும், நாணலிலான வட்டமான சக்கரங்களையும் கொண்டுள்ளனர். உருளைகள் ஆண் இனக் குறியாகவும் சக்கரங்கள் பெண் குறியாகவும் கொள்ளப்பெறுகின்றன. அவைகள் ஒன்ருகப் பிணைக்கப்பெற்று தூய்மையான ஊற்றுக்களிலே போடப்பெறுகின்றன.

புல்லாங்குழல் கூட்டத்தின் சடங்கில் ஒரு சிறுவன் மழை கொண்டு வருவதற்காக இரு பெண்களுடன் வருகிருன். முன்னேற்பாடாக சிறுவனுக்கு ஓர் உருளையும் பெண்களுக்கு ஆளுக்கு ஒரு நாணல் வளையத்தையும் கொடுக்கிருர்கள். அச் சடங்கின் கடைசி தினத்தன்று இக் குழந்தைகள் பூசாரிகளோடு தூய்மையான ஊற்றுக்குச் செல்கின்றனர். அங்கே அந்த ஊற்றின் அடியிலிருந்து வளமான சேற்றை அவர்கள் எடுத்துச் செல்லும் சாமான்களின்மேல் பூசுகின்றனர். பிறகு ஊர்வலம் ப்யூப்லோவை நோக்கித் திரும்புகிறது. அவர்கள் திரும்பும் வழியில், தொழுகைப் பீடத்திற்கு வரைவதுபோன்று, நான்கு கோலங்கள் வரையப்படுகின்றன. அக் குழந்தைகள் எல்லோருக்கும் முன்னே வந்து பையன் தன் உருளையையும் பெண்கள் அவர்களது வளையங்களையும் ஒன்றன்பின் ஒன்ருக இந்த கோலங்கள்மீது போடுகின்றனர். இறுதியாக அவைகளை வீதி முற்றத்திலுள்ள (plaza) நடனக் கோவிலில் வைக்கின்றனர். இது சாதாரணமாகக் கடைசிவரை கண்ணியமாகவும், அமைதியாகவும், உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு இடமில்லாமலும் நடக்கின்ற ஒரு சடங்காகும்.

ஹோப்பி மக்கள் இதுபோன்ற இனக்குறிச் சடங்குகளை அடிக்கடிப் பயன்படுத்தினர். பெண்கள் கூட்டத்து நடனங்களில் இஃது அதிகமாக இருந்தது. ஸூனி மக்களிடையே பெண்கள் கூட்டம் என்பதே இல்லை. இம்மாதிரிச் சடங்கு ஒன்றில் பெண்கள் கைகளில் தானியக் கதிர்களைக்கொண்டு ஒரு வட்டமான

முறையில் நடனமாடுகின்றனர். அச் சமயம் ஆண் வேடங் கொண்ட நான்கு பெண்கள், இருவர் வில் வீரர்கள்போலவும், இருவர் கத்திச்சண்டை செய்பவர்கள்போலவும் இதில் கலந்து கொள்கின்றனர். வில் வீரர்கள் ஒவ்வொருவரும் வில் அம்புகளை யும், ஒரு கொடிகளாலான கட்டையும் கொண்டிருந்தனர். கொடிக்கட்டுகளுக்குள் அம்பால் எய்தனர். கத்திச்சண்டை செய்பவர்கள் ஒரு வளையத்தையும் ஒரு நீண்ட கம்பையும் கொண் டிருந்தனர். சுழலுகின்ற வளையத்தினுள்ளே கம்பை எறிகின்றனர். மற்றவர் நடனமாடும் வட்டத்திற்கு வந்தவுடன் வளையங்களையும், கம்புகளையும் அவ் வட்டத்திற்குள்ளே எறிகின்றனர். பிறகு வட் டத்தின் நடுவே இருந்து ஈரமான சோற்றுருண்டைகளை வெளியே எறிகின்றனர். வெளியே வேடிக்கை பார்க்கின்ற மக்கள் இவை களை அடைவதற்காகப் போட்டியிடுகின்றனர். இந்த நடனத்தின் குறிகள் இனக்குறிகளாயிருந்தபோதிலும், இந் நடனத்தின் நோக் கம் கருவளம்பற்றியதாயினும், இவர்களது நடத்தை டையோனீ ஷியன் முறைக்கு மாறுபட்ட ஒன்ருகும்.

ஸுனி மக்களிடையே இக் குறியீட்டு வழிபாடுகள் வளர வில்லை. ப்யூப்லோ மக்களிடையே எங்கும்காணப்படுகிற கருவளத் திற்கான ஓட்டப்பந்தயங்களை இவர்கள் கொண்டிருக்கிருர்கள். அதில் ஒன்று ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடத்துகிருர்கள். ஆண்கள் சிறிய கம்புகளைக் கால்களால் எத்திச் செல்கின்றனர். பெண்கள் சிறிய வளையங்களை எத்திச் செல்கின்றனர். சில சமயங் களில் பெண்கள் முகமூடியிட்ட நகைச்சுவை நடிகர்களோடு இந்தப் பந்தயத்தை நடத்துகிருர்கள். எப்படியிருந்தாலும் பெண் களே வெற்றிபெறவேண்டும். இல்லையேல் அது பயனற்றதாகி விடும். பெரு (Peru) நாட்டிலே, இதே நோக்கத்திற்காக இப்படி நடத்தப்படும் பந்தயங்களில் ஆண் நிர்வாணமாக ஓடினுன். அவன் வெற்றிகொள்ளும் ஒவ்வொரு பெண்ணையும் கற்பழித்தான். ஸுனி, பெரு ஆகிய இரு மக்களும் ஒரே வழிபாட்டை குறியீடு களாகக் கொண்டாலும், பெரு மக்கள் அதை டையோனீஷியன் முறையிலும், ஸுனி மக்கள் அதையே அப்போலோனியன் முறை யிலும் கொண்டிருந்தனர்.

ஸுனி மக்களிடையேகூட, கருவளச் சடங்கோடு இணைந்த கட்டுப்பாடற்ற இனச் சேர்க்கை கொள்ளும் வழக்கம் இருக் கின்றது. முயல்வேட்டை, தலைத்தோல் நடனம் ஆகிய இரவு களில், இந்தக் கட்டுப்பாடு நெகிழ்வு காணப்படுகிறது. இந்த இரவுகளில் கருவுறும் குழந்தைகள் பலசாலிகளாக இருப்பர் என்ற எண்ணமே இதற்குக் காரணம். இச் சமயங்களில் 'பையன்கள்

பையன்களாகவேதான் இருப்பர்' என்ற ஈடுபாட்டின்படி பெண்களைக் கண்டிப்போடு கண்காணிப்பது சற்றே தளர்த்தப்படுகிறது. ஆனால், கண்டவரோடு புணர்வது என்பதும் அதீதச் செயல்களும் ஏற்படுவது இல்லை. மேலும் பனி, குளிர்காலம் இவைகளைக் கட்டுப்படுத்த சக்திவாய்ந்த மருத்துவக்கூட்டங்களில் சில பழக்கங்கள் முன்பு இருந்தன. மருத்துவக்கட்டின் பூசாரிப் பெண்கள் ஓர் இரவிலே பல காதலர்களை வரவேற்றார்கள். அச்சமயம் தன் மருத்துவக்கட்டை அணிசெய்ய, ஒரு கட்டைவிரல் அளவுக்கு நீலக்கற்களை அவளுடன் சேர்ந்தவர்களிடமிருந்து பெறுகிறாள். ஆனால், இப் பழக்கம் இப்பொழுது இல்லை. எந்த அளவுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் நெகிழ்வு தரப்படுகிறது என்று சொல்வதற்கில்லை.

இனவேறுபாடு ஸுனி மக்களால் நன்கு அறிந்துகொள்ளப் படவில்லை. நாம் நம்முடைய பண்பாட்டுமுறைகளிலே அறிந்தது போன்று, ஸுனி மக்களும் இனக் குறியீடுகளை வேறுவிதமாக வெளியிடுகின்றனர். ஹோபி மக்கள் பயன்படுத்தும் உருளைகளையும், வளையங்களையும், மழையினால் சேற்றில் ஏற்படுகின்ற களிமண் உருளைகளைக் குறிக்கின்றன என்று கூறுகின்றனர். தானியம் விளையும் நிலத்தை மின்னல் தாக்குவதுபோன்று உமிக் கட்டுகளில் அம்புகளை எய்வதாக எண்ணுகின்றனர். இன்னும் சில கருத்துக்கொவ்வாத முறைகளிலும் இவர்களுடைய தெளிவுரைகள் இருக்கின்றன. மிகவும் கேலிக்கூத்தாக இருக்கும் இந்த விளக்கங்கள் அவர்கள் தங்கள் செய்கைகளை மூடி மறைப்பதற்காகச் செய்யப் பெறுபவையாகும்.

இனச் சேர்க்கையினாலே உலகம் தோன்றியது என்ற பிரபஞ்சக் கதைகளைக்கூட இவர்கள் மூடிமறைக்கிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே குஷிங் (Cushing) என்பவர் ஸுனி மக்களிடையே வழங்கும் ஒரு கதையைக் குறிப்பிட்டுள்ளார். இது பக்கத்திலுள்ள பகுதிகளிலும் தென்மேற்கில் ப்யூப்லோ அல்லாத யூமன் (Yuman) குடிகளிலும் சொல்லப்பட்ட பிரபஞ்சக் கதையேயாகும். பூமியோடு ஆதவன் புணர்ந்தான் என்றும், பூமியின் கருவில் மனிதனும், விலங்குகளும், மனிதன் பயன்படுத்தும் உயிரற்ற பொருள்களும் உண்டாயின என்றும், இக் கதையில் சொல்லப்பெறுகிறது. குஷிங் காலத்திற்குப்பிறகு ஸுனி மக்களிடையே பல கூட்டங்களிலிருந்தும், பூசாரிகளிடமிருந்தும், சாதாரண மக்களிடமிருந்தும், உலகம் தோன்றிய கதைகள்பதிவுசெய்யப்பட்டன. அவைகளில், பூமியின் கீழே நான்காவது உலகத்தில் உயிர் முதலில் உண்டானதாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால், விண்,

என்கிற தந்தையால் பூமியின் கருவில் உணர்வூட்டப்பெற்றதாக உயிர்களை அவர்கள் எண்ணுவதில்லை. அத் துறையிலே அவர்கள் கற்பனை செல்லவில்லை.

ஸுனி மக்களின் இனப் பாகுபாடு, நமது நாகரிகத்திலே சில நெறிதவருத ஆசாரசீலர்கள் கொண்டுள்ள ஈடுபாடுகளுக்கு ஒத்திருக்கிறது. அஃது ஒத்திருப்பதுபோலவே சில விஷயங்களில் மாறுபட்டும் இருக்கிறது. இனச் சேர்க்கையை ஒரு பாவச்செயல் என எண்ணும் எண்ணத்தினுலே ஆசாரசீலர்கள் அவ்வித மனப் பாங்கைக் கொண்டிருக்கின்றனர். ஸுனி மக்களில் பாவச்செயல் என்பதே இல்லை. இனச் சேர்க்கையில் மட்டுமன்றி எந்தவித அனுபவத்திலும் அவர்கள் பாவம் என்றும் ஒன்று உள்ளதாகவே நினைக்கவில்லை. அவர்கள் இனக் கவர்ச்சியை மிகவும் திடசித் தத்தோடு தடுக்கவேண்டும் என்றே அல்லது ஒரு குற்ற மனப் பான்மையையோ கொள்வதில்லை. வாழ்க்கையில் தூய்மையான கற்போடிருத்தல் என்பதை அவர்கள் விரும்புவதில்லை. அவர் களது கட்டுக்கதைகளில் தற்பெருமை கொண்டு திருமணம் வேண்டாம் என்று சொல்லுகிற பெண்களை மிகவும் கண்டிக்கின் றனர். அவர்கள் இளைஞர்களால் ரசிக்கப்படவேண்டிய காலங் களில் வீட்டுக்குள்ளேயே வேலைசெய்து கொண்டிருந்தனர். ஆசாரசீலர்களின் சமூக நெறிமுறைகளில் கடவுள்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை அவர்களின் கடவுள்கள் எடுப்பதில்லை. அவர்கள் கீழிறங்கி வந்து, எவ்வளவு தடைகள் இருந்தாலும் அவற்றைக் கடந்து அப் பெண்களோடு உறங்கி அவர்களுக்குப் பணிவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிருர்கள். இம்மாதிரி 'சாதுவான கட்டுப்பாட்டுத் திட்டங்களால்' அப் பெண்கள் மனிதர்கள் அடையவேண்டிய இன்பத்தை திருமண மூலமாக அடையவேண்டும் என்பதை ஏற்படுத்துகின்றனர்.

ஆண் பெண்களிடையே மகிழ்ச்சிகரமான உறவுகள் மனிதர் களிடையே உள்ள உறவுகளைப்போன்ற ஒன்றுதான். நாம் சில குணுதிசயங்களைக் குறிப்பிட்டுச் சொல்வதுபோல அவர்கள் 'எல் லோருக்கும் அவனைப் பிடித்திருக்கிறது. பெண்களோடு அவன் எப்பொழுதும் தொடர்பு கொண்டிருக்கிருன்.' என்றே 'ஒருவருக் கும் அவனைப் பிடிக்கவில்லை. பெண்கள் விஷயத்தில் அவனுக்குத் தொந்தரவு கிடையாது' என்றே சொல்கிருர்கள். இனச் சேர்க்கை அவர்களது மகிழ்ச்சிகரமான வாழ்க்கையில் ஒரு சாதாரண சம்பவமாகும்.

ஒரேமாதிரியான உணர்ச்சிகளை அவர்கள் வெளியிடுவது போன்றே பிரபஞ்சத்தைப்பற்றிய எண்ணங்களிலும் வெளியிடு

கிருர்கள். தீவிரம், அபாயம், முரண்பாடு ஆகியவை இல்லாத இவ்வுலக சம்பந்தமான நிறுவனங்கள் போலவே, விண்ணுலகிலும் இவர்கள் ஏற்படுத்துகின்றனர். டாக்டர் புன்ஸெல் 'இயற்கைக்கப்பாற்பட்டவைகள்' மனிதன்மீது வெறுப்புக்கொண்டவையல்ல. பலி, பிரார்த்தனை, மாயாஜாலம் இவைகளைக்கொண்டு அவைகள் தங்கள் பரிசுகளை நிறுத்திக்கொள்ளாமல் உதவுவதற்கு வழிசெய்துகொள்ளவேண்டும்' என்று சொல்லுகின்ருர். கெட்ட சக்திகளைச் சமாதானம் செய்வதாக இவைகளை நாம் கொள்ளக்கூடாது. இந்த எண்ணமே அவர்களிடத்து இல்லை. இயற்கைக்கப்பாற்பட்டவைகள் மனிதன் விரும்புவதையே விரும்புகின்றன என்றும், மனிதன் நடனங்களை விரும்பினுல் அவைகளும் நடனங்களை விரும்புகின்றன என்றும் நம்பினுர்கள். ஆகையினுல், அவர்கள் இயற்கைக்கப்பாற்பட்டவற்றை அவைகளின் முகமூடிகளை அணிந்துகொண்டு ஸூனியில் திரும்பி நடனமாட அழைக்கின்றனர். அவர்களுடைய மருத்துவக்கட்டுகளை எடுத்துவைத்து அவர்களுக்காகவும் 'நடனம்' புரிகின்றனர். அஃது அவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. களஞ்சியத்திலுள்ள தானியமும் நடனமாடப்பெறவேண்டும். 'பனிக்கால சங்கராந்தியின்போது, எல்லாச் சடங்குக் கூட்டங்களும் தங்கள் சடங்குகளை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது, வீட்டுத் தலைவர்கள் ஆறு நல்ல தானியக்கதிர்களை ஒரு கூடையில் வைத்துப் பாடுகிருர்கள். இது தானியங்களுக்கு 'நடனம்' எனப் பெயரிடப்பெறுகிறது. இது சடங்குக் காலங்களில் தங்களைப் புறக்கணித்துவிட்டதாகத் தானியங்கள் எண்ணக்கூடாது என்பதற்காகச் செய்யப்பெறுகிறது.' அதுபோன்றே தானிய 'நடனம்' என்ற சிறந்த நடனம் அவர்கள் தானியக்கதிர்களோடு பகிர்ந்துகொள்ளும் ஒரு சடங்காகும். இஃது இப்போது நடைபெறுவதில்லை.

நன்மையும் தீமையும் எதிர்பட்டுள்ள ஒன்ருக இந்த உலகத்தை அவர்கள் கருதுவதில்லை. அவர்கள் இருவித மனப்பாங்கு கொண்டவர்களன்று. ஐரோப்பியர் கண்ட சூன்யம் ப்யூப்லோ மக்களிடையே ஊன்றியபோது அது பல மாறுபாடுகள் அடைந்தது. ஒரு நல்ல கடவுளுக்கெதிராக, சாத்தான் (Satan) வழிப்பட்டதாக அஃது இல்லை. அஃது அவரவர்கள் பண்பாட்டோடு இணைந்துவிட்டது. சாத்தானுல் கொடுக்கப்பட்டது என்பதற்காக, சூன்யத்தின் சக்தியை அவர்கள் சந்தேகப்படுவதில்லை. ஒரு முறை எடுத்துக்கொண்டால் அந்தச் சக்தி எடுத்துக்கொண்டவனை ஆட்சி செலுத்துகிறது; அதை அவன் அகற்றமுடியாது என்பதற்காகவே வெறுக்கிருர்கள். எந்த இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளும் தேவையான சந்தர்ப்பங்களின்போது மட்டுமே

எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஒருவன் தொழுகைக் குச்சிகளை நடுவதன்மூலமும், தான் சில விதிவிலக்குகளை அனுசரிப்பதன் மூலமும், தூய்மையான காரியத்தில் ஈடுபட்டிருத்தலைக் குறிப்பிடுகிறான். அந்தக் காரியம் முடிந்தவன் தன் தந்தையின் சகோதரிகள் வீட்டுக்குச்சென்று தலை கழுவிக்கொண்டு மறுபடியும் மதசம்பந்தமற்ற வாழ்வில் ஈடுபடுகிறான். அல்லது ஒரு பூசாரி மற்றொரு பூசாரியிடம் தன் சக்திகளை அவைகள் மறுபடியும் தேவைப்படுகிற வரையிலே கொடுத்துவைக்கிறான். இடைக்காலத்தில் ஒருவர்மீது இட்ட சாபத்தை அகற்ற உள்ள எண்ணமும் செய்முறைகளும் போலவே தூய்மையையும் அவர்கள் அகற்றினர். ப்யூப்லோ சூன்யமுறையில் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளினின்றும் விடுபெற செய்முறைகள் எதுவும் கிடையாது. இந்தத் தீச்சக்தியினின்று விடுதலைபெற இயலாததால் சூன்யத்தைக் கெட்டதாகவும், அச்சுறுத்துகிற ஒன்றாகவும் பாவித்தனர்.

நன்மைக்கும், தீமைக்கும் உள்ள ஒரு போராட்டமாக உலகை நாம் காணுகின்ற மனோபாவத்தை அகற்றி ப்யூப்லோ மக்கள் அதை எவ்விதம் காண்கின்றனர் என்று கவனிப்பது சிறிது கடினம். பருவக் காலங்களையும் மனிதனது வாழ்வையும், வாழ்வுக்கும் சாவுக்கும் நடக்கிற ஒரு பந்தயமாக அவர்கள் காணுவதில்லை. வாழ்வு எப்பொழுதும் உண்டு. அதேவிதம் சாவும் எப்பொழுதும் உண்டு. சாவு வாழ்வை மறுப்பதில்லை. நமக்கு முன்னே பருவங்கள் தோன்றி மறைதல் போலவே, மனிதனுடைய வாழ்வும் நடைபெறுகிறது. அவர்கள் ‘ஒதுங்குவதுமில்லை, பெரிய சக்திகளுக்குத் தங்கள் விருப்பங்களை அடிமைப்படுத்துவதுமில்லை. ஆனால், மனிதன் உலகத்தோடு ஒன்றிவிட்ட ஓர் உணர்ச்சி’யோடு வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அவர்கள் பிரார்த்தனைகளில் தெய்வங்களிடம்,

‘நாம் ஒன்றாக இருப்போம்’ எனச் சொல்கிறார்கள்.

அவர்களுடன் நெருங்கிய உறவுபூண்ட பதங்களை உபயோகிக்கின்றனர்:

‘உன்னுடைய நாட்டையும்
உன்னுடைய மக்களையும் பற்றிக்கொண்டு
எங்களுக்காக நீ உறைவாய்’
‘ஒருவர்க்கொருவர் குழந்தைகளாக
நாம் எப்போதும் இருப்போம்.
என் வார்த்தைகளிலே
என் குழந்தை

என் தாய்[1]
என்பதுபோன்றே இருக்கட்டும்.'

அவர்கள் தெய்வங்களோடு மூச்சு மாற்றிக்கொள்வதாகச் சொல்லிக்கொள்கின்றனர்.

'என்னைச் சுற்றிலும் வெகு தொலைவுக்கு
உயிர்கொடுக்கும் பூசாரிகளாக,[2] என் தந்தையராகப்
பெற்றிருக்கிறேன்
உயிர்கொடுக்கும் அவர்களது மூச்சைக் கேட்டுக்கொண்டு
அதிக வயதுக்கான அவர்களது மூச்சை
நீருக்கான அவர்களது மூச்சை
விதைகளுக்கான அவர்களது மூச்சை
செல்வங்களுக்கான அவர்களது மூச்சை
கருவுறலுக்கான அவர்களது மூச்சை
பலமுள்ள ஆவிக்கான அவர்களது மூச்சை
சக்திக்கான அவர்களது மூச்சை
அவர்கள் வசமிருந்த எல்லா நல்லதிருஷ்டத்திற்கான
அவர்களது மூச்சை
அவர்களது மூச்சைக் கேட்டுக்கொண்டு
எங்களுடைய[3] சூடான உடல்களில் அவர்கள் மூச்சைப்
பெற்றுக்கொண்டு
உன்[4] மூச்சுகளை அதிகப்படுத்துகிறோம்.
உனது தந்தையர்களின் மூச்சை வெறுக்காதே;
உன் உடலுக்குள் இழுத்துக்கொள்;
அதனால் நாம் சேர்ந்தே நமது பாதைகளை முடிப்போம்.
எனது தந்தை உனக்கு ஆயுளைக் கொடுக்கட்டும்
உனது பாதை முற்றுப்பெறட்டும்.'

தெய்வங்களின் மூச்சே அவர்களின் மூச்சு. அவர்கள் சேர்ந்து பொதுவாகப் பகிர்ந்துகொள்வதனால் எல்லாக் காரியங்களும் நிறைவேறுகின்றன.

மற்றைய மனிதரோடு ஒரு மனிதனின் உறவைச் சொல்கிறது போலவே, பிரபஞ்சத்தோடு மனிதன்கொண்ட உறவும் ஒரு வீரச்

[1] கடவுள்கள் மனிதர்களின் குழந்தைகளாகவும் பெற்றோர்களாகவும் கருதப்பெறுகின்றனர்.
[2] இயற்கைக்கப்பாற்பட்டவைகள் :— தெய்வங்கள்.
[3] மருத்துவ மனிதர்களின்
[4] நோயாளியின்.

செயலுக்கோ, ஒரு தனி மனிதன் தடைகளைத்தாண்டி வெற்றி பெறும் எண்ணத்தையோ கொள்ளவில்லை.

'சண்டையிட்டு, சண்டையிட்டு, சண்டையிட்டுச்
சுவரின்மீது மோதி இறக்கும்'

துறவிகள் நிலைபோன்றவைகளுக்கு அதிலே இடமில்லை.

அவைகளின் குணாதிசயங்கள் ஒரேமாதிரியாக நிலைபெற்றுள்ளன. அவர்களுக்குத் தகாதவைகளை அவர்களுடைய உலகத்திற்கே புறம்பாக்கிவிட்டனர். அவர்கள் வட அமெரிக்காவிலே ஒரு சிறிய, ஆனால், நீண்டகாலமாக அமைந்திருக்கும் ஒரு தனிப் பண்பாட்டுத் தீவை ஏற்படுத்தியுள்ளனர். அவர்களுடைய நாகரிகம் அப்போலினியன் முறையில் உள்ள உருவகங்களைக் கொண்டது. அவைகளை முறையாகச் செய்வதிலே மகிழ்ச்சி கொள்ளுகின்றனர். ஓர் அளவோடும் நிதானத்தோடும் அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது.

5. தோபு (Dobu)

கிழக்கு நியூ கினியாவின் தென் கடற்கரைக்கப்பால் உள்ள டி என்ட்ரகாஸ்டோ (d' Entrecasteaux) தொகுதியில் தோபுத் தீவுகள் இருக்கின்றன. டாக்டர் ப்ரானிஸ்லா மாலினேவ்ஸ்கி (Dr. Bronislaw Malinowski) ட்ரோபிரியாண்ட் (Trobriand) தீவுகளைப் பற்றி எழுதியுள்ளவைகளிலிருந்து நன்கு பிரசித்தியான வடமேற்கு மலேனீஷியா (Melanesia) மக்களில் மிகவும் தெற்கே உள்ளவர்கள் தோபுக் குடிமக்கள் எனத் தெரிகிறது. தோபு மக்கள் ட்ரோபிரியாண்ட் தீவுகளுக்குப் பண்டமாற்றுக்காக அடிக்கடிப் படகில் செல்லும்படி இரண்டு தீவுக் கூட்டங்களும் அருகருகே அமைந்திருக்கின்றன. ஆனாலும், அவர்கள் வேறுவித சூழ்நிலையும் மனப்பாங்கும்கொண்டவர்கள். வாழ்க்கை சுலபமாகவும் வளமுற்றும் இருக்கும்படி அதிக செழிப்புள்ள தாழ்ந்த நிலையிலுள்ள தீவுகளைக் கொண்டது ட்ரோபிரியாண்ட் கூட்டம். மண் மிக வளமுள்ளதாயும், கடலேரிகள் (lagoons—காயல்கள்) மீன்கள் நிறைந்ததாயுமுள்ளன. ஆனல், தோபுத் தீவுகள் எரிமலை வெடிப்புகளால் தோன்றியுள்ளவையாதலால் பாறைகளாக ஆங்காங்கே சிறிதளவே மண் பகுதிகளைப்பெற்று மீன் பிடிக்க வசதியற்றதாய் உள்ளன. ஜனத்தொகை, கிடைக்கக்கூடிய வசதிகளுக்கு அதிகமாகி நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது. ட்ரோபிரியாண்ட் குடிமக்கள் ஜனநெருக்கம் அதிகமாக இருந்தாலும் நன்குகப் பிணைக்கப்பட்ட பெரிய கூட்டங்களாய் சுலபமாக வாழமுடிகிறது. ஆனல், தோபு மக்கள் மிக நல்ல நிலையில் உள்ள சமயத்திலேகூட இருபத்தைந்து பேர்கள்கொண்ட சிறிய கிராமங்களாய் ஆங்காங்கே வாழ்ந்து வந்தனர். தற்சமயம் இந்தக் கிராமங்களில் அதில் சரிபாதிதான் இருக்கிருர்கள். இந்தப் பிரதேசத்தில் கூலிவேலைக்கு ஆள்சேர்க்கும் வெள்ளையர்களுக்குத் தோபு மக்கள் சுலபமாகக் கிடைப்பர் என நன்கு தெரியும். கூலி

வேலைக்கு, வீட்டிலே உள்ள பசியை மறக்க உடனே சுலபமாகச் சேர்ந்துவிடுகின்றனர். அவர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்பவர்களாகையால் அவர்கள் வேலைக்குக் கிடைக்கும் பொருள்களினால் அவர்களுக்குள்ளே கலகம் ஏற்படுவதில்லை.

அவர்களுடைய ஏழ்மையினால் தோபு மக்களின் பெயர் அருகில் உள்ள தீவுகளில் பரவவில்லை. ஆனால், அவர்கள் அபாய கரமானவர்களெனப் புகழ்பெற்றவர்கள்; மிக அபூர்வ சக்தி வாய்ந்த ஜாலவித்தைக்காரர்கள் (Magicians) எனவும், எந்தச் சூழ்ச் சிக்கும் தயங்காத வீரர்கள் எனவும் பெயரெடுத்தவர்கள். வெள்ளை யர் குடிபுகுவதற்கு இரண்டு தலைமுறைகளுக்குமுன்னால், அவர்கள் தன்னின உண்ணிகளாக (Cannibals) இருந்தனர். அதுவும் அவர்களைச் சுற்றியுள்ள பலர் அம்மாதிரி இல்லாமை குறிப்பிடத் தக்கது. சுற்றிலுமுள்ள தீவுகளில் உள்ளவர்கள் நம்பத்தகாத காட்டுமிராண்டிகளான இவர்களைக் கண்டு பயப்படுகிறார்கள்.

அண்டையிலுள்ளோர் இவர்களைப்பற்றிச் சொல்வது முற்றி லும் பொருத்தமே. இவர்கள் சட்ட வரம்புக்குட்படாத நம்பிக் கைத் துரோகிகள். ஒவ்வொரு மனிதனும் மற்றொருவனுக்கு எதிரியாகிவிடக்கூடும். நன்மதிப்புக்குரிய பல வகுப்புத் தலைவர் களால் (Chiefs) தலைமை தாங்கப்பட்டுப் பண்டங்களை மாற்றுவ திலும், உரிமைகளைப் பரிமாறிக்கொள்வதிலும் நன்றாகச் சீர்பட்ட ஒரு சமூக அமைப்பு ட்ரோபிரியாண்ட் மக்களிடம் காணப்படுவது போல் இவர்களிடத்திலில்லை. தோபு மக்களிடையே வகுப்புத் தலைவர்கள் கிடையா. அரசியல் அமைப்பு எதுவும் இவர்களி டத்திலில்லை. சொல்லப்போனால் சட்டவரையறைகூட எதுவும் இல்லை. இந்த நிலை, தோபு மக்கள் ஆட்சியற்று (anarchy) வாழ்வ தாலோ, அல்லது 'ரூஸோ'வின் (Rousseau's) சமூகக் கட்டுப்பாடு களினால் பாதிக்கப்படாத 'இயற்கை மனிதனைப்'போல வாழ்வ தாலோ ஏற்பட்டதன்று. தோபு மக்கள் சமுதாயத்திலே கெட்ட எண்ணங்களும் நம்பிக்கைத் துரோகமும் நற்குணங்களாக மதிக் கப்படுகின்றன.

தோபு மக்களை ஓர் ஆட்சியற்ற நிலையிலே காண்பது உண்மைதான். தோபு சமூக அமைப்பு ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களிலே (Concentric Circles) அமைந்திருக்கிறது. ஒவ்வொன்றுக்குள்ளும் சில குறிப்பிட்ட விரோதச்செயல்கள் மரபு வழியாக (Traditionals) அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட கூட்டத்திலும் பண்பாடு அனுமதிக்கும் சில விரோதச் செயல்களைத் தவிர வேறெந்த வகையிலும் சட்டத்தைத் தானே

ஏற்று நீதி வழங்கும்வகையில் எவனும் துணிவதில்லை. நாலில் இருந்து இருபதுவரை ஒன்றுசேர்ந்த கிராமங்கள், பெயரிடப்பட்ட ஓர் இடத்தில் இயங்குகின்ற ஒரு பெரிய தோபு சமுதாயமாகும். இஃது ஓர் போர்த் தொகுதியாக (War Unit) அமைந்து அதே போன்று அமைந்த ஒவ்வொரு தொகுதியோடும் என்றும் விரோத மனப்பான்மையோடு வாழ்கின்றது. வெள்ளையனுடைய கட்டுப் பாடு ஏற்படுவதற்கு முன்னால் ஒருவனும் கொலைக்கோ, அல்லது கொள்ளைக்கோ அன்றி வேறொரு கூட்டத்தினுள்ளே துணிந்து செல்லமாட்டான். ஆனால், ஒரு காரியத்திற்குமட்டும் ஒவ்வொரு கூட்டமும் மற்றொரு கூட்டத்திலிருந்து உதவிபெறுகிறது. சாவோ, அல்லது பெரும் பிணியோ ஏற்படும்போது அதற்குக் காரணமானவனைக் கண்டுபிடிக்க எதிரிக் கூட்டத்திலிருந்து ஒருவன் அழைக்கப்படுகிறான். குற்றவாளியைக் கண்டுபிடித்து அதனால் பின் விளையக்கூடிய தொல்லைகளிலிருந்து தன் கூட்டத் தில் உள்ளவனைத் தப்புவிக்க நேரிடுவதைத் தடுக்கவே தன் கூட்டத்திலிருந்து எவனையும் தேர்ந்தெடுப்பதில்லை. வேறு ஒரு வனைக் கூப்பிடுவதால் அவனுக்குக் கூட்டங்களிடையே உள்ள தொலைவு பாதுகாப்பாக அமைகிறது.

அபாயம் அந்தந்தக் கூட்டங்களிலேயேதான் அதிகமாக இருக்கிறது. ஒரே கரையில் வசிப்பவர்களுக்குள்ளேயும், தினம் ஒரேமாதிரியான அலுவல்கள் உள்ளவர்களிடையேயும்தான் ஒருவர்க்கொருவர் பல உண்மையான தொந்தரவுகளையும், இயற் கைக்கப்பாற்பட்ட தெய்விகமான தொந்தரவுகளையும் செய்து கொள்கிறார்கள். அறுவடையைக் கெடுத்துவிடுகிறார்கள், அல்லது பொருளாதாரப் பண்டமாற்றுக்களில் குழப்பத்தை விளைவிக்கிறார் கள். மேலும், பிணியையும் சாவையும் ஏற்படுத்திவிடுகிறார்கள். இந்தமாதிரிச் செயல்களுக்காக ஒவ்வொருவனும் ஜாலவித்தை களைத் (Magic) தெரிந்துவைத்திருக்கிறான். அதை எந்தச் சமயத் திலும் பயன்படுத்துகிறான். ஒரு கூட்டத்தினுள்ளே எந்தச் செய லுக்கும் ஜாலவித்தையானது இன்றியமையாதது. தெரிந்த, பழக் கமான கிராம வட்டங்களுக்கப்பால் அச் சக்தி பயனளிக்காது என்று நம்பப்படுகிறது.

இந்தக் கூட்டத்தின் மத்தியிலே ஒரு சிறு கூட்டம் இருக் கிறது. இங்கே வேறுவிதமான நடத்தை தேவைப்படுகிறது. வாழ்க்கை முழுவதும் ஒருவன் இதை நம்பி வந்தடையலாம். தகப்பனையோ, அவனுடைய சகோதரர்களையோ, சகோதரி களையோ, அவன் குழந்தைகளையோ சேர்த்துக்கொள்ளாததனால் அதை ஒரு குடும்பம் (Family) என்று சொல்வதற்கில்லை. அது

தாய்வழியிலே பிரிந்து போகாத ஒரு கூட்டம். அவர்கள் பொதுக் கிராமத்திலே வாழ்ந்துகொண்டு, அவர்களுடைய தோட்டங் களையும் வீடு மனைகளையும் சொந்தமாகக்கொண்டிருக்கிறார்கள். இறந்தால் மூதாதையர்களுடைய (Ancestor) நிலத்திலே பொது வான ஓர் இடத்திலே புதைக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு கிராம நடுவேயும் அழகான இலைகளமைந்த க்ரோட்டன்ஸ் செடிகளுள்ள இடுகாடுகள் (Graveyard) உள்ளன.

தங்களுடைய வாழ்க்கைக் காலத்தில் அந்தக் கிராமத்தின் சொந்தக்காரர்களாயிருந்த ஆண், பெண் அடங்கிய தாய்வழி உறவினர்கள் (Matrilineal) அந்த இடுகாட்டின் நடுவே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதைச் சுற்றிலும் வாழ்ந்துகொண் டிருக்கிற தாய்வழி உறவினர்களுடைய மேடை வீடுகள் (Platform houses) கூடி நிற்கின்றன. இந்தக் கூட்டத்திற்குள்ளேயேதான் பரம்பரை மாறிக் கூட்டுறவு நிலைக்கிறது. இதற்கு 'சுசு' (Susu) என்றும் 'தாய்ப்பால்' என்றும் பெயரிடப்பட்டுள்ளது. 'சுசு' என்பது ஒவ்வொரு தலைமுறையிலும் பெண்வழித் தோன்றியவர் களும், (Female line of descent) அப் பெண்களுடைய சகோதரர் களும் அடங்கிய ஒன்றாகும். அச் சகோதரர்களுடைய குழந்தைகள் இதில் சேர்க்கப்படுவதில்லை. அக் குழந்தைகள் தங்கள் தாயின் கிராமங்களைச் சார்ந்தவர்களாவார்கள். அவர்கள் அநேகமாக இந்தக் கிராமங்களுடன் விரோதமாகவே இருப்பார்கள்.

ஒவ்வொரு 'சுசு'வும் அதனுடன் நெருங்கிய உறவுகொண்ட மற்றச் 'சுசு'க்களோடு கிராமங்களிலே ஒட்டி வாழ்கின்றது. கிராமத்தினுடைய தனிநிலை (Privacy) கட்டாயமாகக் கண்காணிக் கப்படுகிறது. தோபு மக்களிடையே சாதாரணமாக வருவதும் போவதும் கிடையாது. கிராமங்களைச்சுற்றி ஒரு பாதை செல்கிறது. அவ்வளவு அருகே செல்ல உரிமை பெற்றவர்கள் இப் பாதை வழியே சுற்றிச் செல்லலாம். தந்தை இறந்த பிறகு குழந்தைகள் அவனுடைய கிராமத்திற்கு அருகே செல்லும் இந்த உரிமையையும்கூட இழந்துவிடுகின்றனர். தந்தை உயிரோடு இருந்தாலும் அல்லது அந்தக் கிராமம் மனைவியுடையதாயினும் அவர்கள் அழைப்பை ஏற்று உள்ளே நுழையலாம். மற்ற எல் லோரும் சுற்றுவழிமூலம் கடந்து செல்லவேண்டும். அவர்கள் எங்கும் நிற்கக்கூடாது.

மதசம்பந்தமான விழாக்கள், அறுவடை விழாக்கள் அல்லது பழங்குடி மக்களின் வயதடையும் விழாவானாலும் சரி எதிலும் தோபு மக்கள் கட்டுப்பாடின்றி ஒன்றுகூடுவதில்லை. ஏனென்றால்,

தோபு மக்கள் அவைகளில் சிறப்படைந்திருக்கவில்லை. ட்ரோபிரியாண்ட் மக்களின் திறந்தவெளி நடனமேடையைப்போன்று கிராமத்தின் நடுவே இருக்கின்ற இடுகாடு பயன்படுகிறது. மத சம்பந்தமான காரியங்களுக்கும் சமூக நடவடிக்கைகளுக்கும் வெளியே புதிய இடங்களுக்குச் செல்வதிலுள்ள ஆபத்தை நன்கறிந்தவர்கள் தோபு மக்கள். பொருமையினுல் ஏற்படும் சூன்யம் முதலிய ஆபத்துக்களால் வெளியார்களைத் தங்களுடைய இடங்களுக்குள்ளே வைத்துக்கொள்ளவும்மாட்டார்கள்.

என்ன ஆனுலும், மணம், இந்த நம்பத்தகுந்த வட்டத்திற்கு வெளியே உள்ள ஒருவரோடுதான் செய்துகொள்ளமுடியும். ஒன்றுக்கொன்று விரோதம் முற்றியிருக்கும் இரு கிராமங்களை அது ஒன்றுசேர்க்கிறது. ஆனுலும், விரோத மனப்பான்மையை மணம் குறைப்பதில்லை. ஆரம்பமுதலே அதைப்பற்றியுள்ள சடங்குகள் இருதரப்பாருக்குமிடையே முரண்பாடுகளையும் மனக்கஷ்டங்களையும் வளர்க்கின்றன. மாமியார் (பெண்ணின் தாய்) செய்யும் விரோதச் செயலால் மணவிழா தொடங்குகிறது. தன் வீட்டினுள்ளே தன் பெண்ணுடன் ஓர் இளைஞன் உறங்கிக்கொண்டிருக்கும்போது தன் வீட்டு வாயிலைத் தன்னுடலால் மறைத்துக் கொள்கிருள். இவ்விதம் அந்த இளைஞன் வெளிப்படையான மண உறுதி வினைக்கு (Betrothal) இணங்கும்படிச் செய்யப்படுகிருன். இதற்கு முன்னுல் அந்த இளைஞன் வயதுவந்த காலந்தொட்டு ஒவ்வொரு இரவும் மணமாகாத பெண்களுடைய வீடுகளிலேயே கழிக்கிருன். வழக்கத்தில் அவனுக்கு அவனுடைய வீடே மூடப்படுகிறது. பல வருஷங்களுக்கு அவன் பலருடன் தொடர்பு வைத்துக்கொண்டு, வீடுகளைவிட்டு அதிகாலையில் வெளியேறி மணவினையிலிருந்து தப்பித்துக்கொள்கிருன். அவன் கடைசியாக இணங்கும்படி செய்யப்படுகிருனென்ருல், அது அவன் சுற்றியலைவதிலிருந்து ஓய்ந்து ஒரு நிரந்தரத் தோழமையை நாடிவிட்டான் என்று பொருள்படும். அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிடுகிருன். இருந்தாலும், மணவினையின் பொறுப்புகளை ஏற்க உடன்படான் எனக் கருதி வாயிற்படியில் நிற்கும் மாமியாரால் கட்டாயப் படுத்தப்படுகிருன். பெண்ணின் தாய்வழி உறவினர்கள், தாய் வாசலில் அசையாமல் நிற்பதைக் கவனித்தவுடன், ஒன்று கூடுகிருர்கள். இவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மணமக்கள் இறங்கிவந்து தரைமீதுள்ள ஒரு பாயில் உட்காருகிருர்கள். கிராம மக்கள் அவர்களைச் சுமார் அரை மணி நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுச் சிறிது சிறிதாகப் பிரிந்துசென்றுவிடுகின்றனர், அவ்வளவுதான். இப்பொழுது மணமக்கள் சதிபதியாகிவிடுகின்றனர்.

இது முதற்கொண்டு அந்த இளைஞன் தன் மனைவியின் கிராமத்தோடு ஒன்றி வாழவேண்டும். முதன்முதலாக அவன் வேலை செய்யவேண்டும். உடனே மாமியார் அவனிடத்தில் ஒரு 'தோண்டு கழி' (Digging-stick) கொடுத்து வேலை செய்ய உத்தர விடுகிருள். அவன் மாமனர், மாமியார் மேற்பார்வையில் தோட்டம் போடவேண்டும். அவர்கள் சமையல்செய்து சாப்பிடும் போதுகூட அவன் வேலை செய்துகொண்டிருக்கவேண்டும். ஏனென்றல், அவர்கள் முன்னிலையில் அவன் உணவருந்தக் கூடாது. தன்னுடைய மாமனருடைய தோட்டத்தில் கிழங்கு பயிரிடும் வேலை முடிந்தவுடன் அவன் தனக்கென்றுள்ள தோட்டத்தில் வேலை செய்யவேண்டும். ஆக இருமடங்கு வேலை செய்யவேண்டியவனுகிருன். தன்னுடைய மருமகன் (Son-in-law) மேல் தனக்கிருக்கும் அதிகாரத்தைக் கண்டு மாமனர் மிக்க மகிழ்ச்சியடைகிருன். இந்நிலை சுமார் ஓராண்டு காலம் நீடிக்கிறது. இந்த மணவினை மணமகனைமட்டுமின்றி அவனுடைய சொந்தக்காரர்களையும் பாதிக்கிறது. அவனுடைய சகோதரர்கள், அவனுடைய மணத்திற்காகக் கொடுக்கவேண்டிய தோட்ட வேலைச் சாமான்களையும், மணப் பரிசுக்காக விலையுயர்ந்த பொருள்களையும் கொடுக்கவேண்டியிருப்பதால் அதனின்றும் தப்பித்துக் கொள்ள ஆள் சேர்க்கும் வெள்ளையனிடம் வேலைக்கு அமர்ந்து விடுகிருர்கள். மணமகளைச் சார்ந்த 'சுசு' கூட்டம் மணத்திற்கான பொருள்களைச் சேர்த்தது மணப்பெண்ணின் கிராமத்திற்கு அவைகளை முறையாக எடுத்துச்செல்கின்றனர். மணமகனுடைய சகோதர சகோதரிகளும், அவனுடைய தாயும், அவளுடைய சகோதர சகோதரிகளும் சேர்ந்து செல்கின்றனர். அவனுடைய தகப்பனும், அக் கூட்டத்திலுள்ளவர்களின் கணவன்மார்களும் மனைவியரும், குழந்தைகளும் இதில் சேர்க்கப்படுவதில்லை. அவர்கள் பரிசுப்பொருள்களை மணமகளுடைய 'சுசு'க்குக் கொடுக்கின்றனர். ஆனுலும், இருதரப்பாரும் சிநேக மனப்பாண்மையில் கலப்பதில்லை. மணமகளைச் சார்ந்தோர் அவர்களுடைய பரம்பரைக் கிராமத்தின் எல்லையிலேயே சார்ந்திருக்கின்றனர். மணவினையைக் காண வருபவர்கள் அவரவர்களுடைய கிராம எல்லையிலேயே நின்றுவிடுகின்றனர். மற்றவர் இருப்பதாகவே அறியாதவர்கள்போல் தோன்றுகிருர்கள். பெரிய இடைவெளி அவர்களைப் பிரிக்கிறது. மற்றவர்களை அவர்கள் பார்க்க வேண்டுமானுல் குரோதத்துடனேயேதான் பார்க்கிருர்கள்.

மணவினையிலே ஒவ்வொரு சடங்கும் இருதரப்பாருக்கும் சமமாக உள்ளது. மணமகளைச் சார்ந்தோர் மணமகன் கிராமத்திற்குச் சென்று முழுவதும் சுத்தம் செய்யவேண்டும். சமைக்கப்

படாத உணவு வகைகளையும் சீர்கொண்டு செல்லவேண்டும். மறு நாள் மணமகனுடைய உறவினர்கள் கிழங்கு வகைகளைக் கொண்டு எதிர்சீர் (Reciprocal gift) அனுப்புவார்கள். மணமகன் தன் மாமியிடமிருந்து அவளே சமைத்த ஒரு கவளம் உணவைப் பெறுதலும், அதேமாதிரி மணமகள் தன் மாமியிடமிருந்து மண மகனுடைய கிராமத்திலே உணவைப் பெறுதலும் மணவினையின் முக்கியச் சடங்குகளாகும். ஒன்றுகூடி உணவருந்துதல் என்ற ஒரு நியதியைக்கொண்ட ஒரு சமூகத்திலே இந்தப் பழக்கம் மிகப் பொருத்தமானதுதான்.

பொதுவான ஈடுபாடுகளும், நெருங்கிப் பழகுதலும் மதிக்கப் படும் ஒரு புதிய கூட்டமைப்பைத் திருமணம் ஏற்படுத்துகிறது. தோபு மக்களைப்போலவே பலமான மரபுவழிக் (Clan) கூட்டங்களை யுடைய டச்சு நியூகினியாவிலுள்ள பல பழங்குடிகள் திருமணத் தினால் ஏற்படும் உறவுமுறைகளை அலட்சியம் செய்து மணவினைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதுபோல் இவர்கள் செய்வது இல்லை. இந்தக் குடிகளில் தாய்வழியினர் ஒன்றாக வாழ்ந்து, அறுவடை செய்து பொருளாதார ஈடுபாடுகளிலும் பங்குகொள் கின்றனர். கணவன்மார் இரகசியமாக இரவிலே பெண்களைச் சேர்கின்றனர் அல்லது செடிகள் மறைவிலே சந்திக்கின்றனர். அவர்கள் 'வந்து காணும்' (Visiting) கணவன்களாக இருக்கிறார் களேயன்றி, தாய்வழிக் குடும்பத்தின் (தன் தேவைகளைத் தானே பூர்த்திசெய்து தேடிக்கொள்ளும்—Self-sufficiency) நிலையைக் குலைப்பதில்லை.

தோபு மக்கள் கணவனுக்கும் மனைவிக்கும் ஒரு பொதுவான வீட்டறையைக் கொடுத்து அவர்களுடைய தனிமையை அவர்கள் வீட்டிலே பாதுகாக்கின்றனர். தம்பதிகள் தங்களுக்கும், தங்கள் குழந்தைகளுக்கும் பொதுவாகத் தோட்ட உணவை வைத்துக்கொள்கின்றனர். மேற்கத்திய நாகரிகத்தில் மிகச் சாதாரணமாகத் தோன்றக்கூடிய இந்த இரண்டுவித தேவை களுக்காகவும் தோபு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. 'சுசு' என்ற கூட்டத்திற்குத்தான் அவர்கள் மிக்க பற்றுடையவராயிருக்கின்றனர். உட்புக முடியாத ஒரு தனிப்பட்ட வீடும் தோட்டமும் ஒரு தம்பதிக்குக் கொடுக்கப் பட்டால், பிறகு அவர்கள் எங்கே, யாருடைய கொடூரக் கண் களுக்குட்பட்டு, யாருடைய வீட்டு நிலத்திலே உறைவர்? கணவனுடைய 'சுசு'விலா? அல்லது மனைவியின் 'சுசு'விலா? இந்தப் பிரச்சினை, சாதாரணமாக, ஆனால், அபூர்வமானமுறையில் தர்க்கரீதியாகச் சமாளிக்கப்படுகிறது. மண நாள் தொடங்கிச் சாவு

வரையில் தம்பதிகள் மாறிமாறி ஓராண்டுக்காலம் கணவன் கிராமத்திலும், ஓராண்டுக்காலம் மனைவியின் கிராமத்திலும் வசிக்கின்றனர்.

ஓராண்டில் கணவன் தன் கூட்டத்தாரின் ஆதரவுபெற்று நிலைமையைச் சமாளிக்கிறான். மறு ஆண்டு அவன் தன் மனைவியின் கூட்டத்தாரைச் சார்ந்து அவர்களிடையே தன்னை ஒரு பொருட்டாக நினைக்காதவனாகி அடக்கமுற்று வசிக்கிறான். அங்கே அவன் சகித்துக்கொள்ளக்கூடிய ஒரு மாற்றானாக வாழ்கிறான்.

தோபுக் கிராமங்கள் இவ்விதம் ஒன்றையொன்று எதிர்க்கும் இரு கூறுகளாக நிற்கின்றன. ஒரு பக்கம் கிராமத்துக்குச் சொந்தக்காரர்களென நிற்கும் தாய்வழிக் குடும்பத்தாரும், மறு பக்கம் அந்தக் குடும்பத்தில் மணம்செய்துகொண்டவர்களும், அந்தக் குடும்பத்திலுள்ள ஆண்களின் குழந்தைகளுமாகவும் பிரிந்து நிற்கின்றனர். முன் சொன்ன கூட்டம் எப்பொழுதும் அதிக அதிகாரத்துடன், மணமான காரணத்தினால், அந்த ஆண்டு மாத்திரம் அங்கே தங்கியிருக்கும். பின் சொல்லப்பட்ட கூட்டத்தினரை அடக்கி ஆள்கிறது. சொந்தக்காரர்கள் என்றும் பலமுடைய பக்கத்தினராக இருக்கின்றனர். வெளியார் கூட்டம் அவர்களுக்குள்ளே ஒற்றுமையின்றி இயங்குகின்றது. தோபு மக்களின் சித்தாந்தமும் (Dogma) பழக்கமும் இரண்டு கிராமங்களைத் திருமண உறவுகளால் ஒன்றுபடுத்த இடங்கொடுப்பதில்லை. நெடுந்தொலைவுக்கப்பாலுள்ள கிராமங்களிடையே ஏற்படும் உறவுகள் வரவேற்கப்படுகின்றன. ஆதலால் மணம்செய்துகொண்ட தம்பதிகளிடையே பொதுவான 'சுசு' கூட்ட உறவு முறைகள் இருப்பதில்லை. ஒரே இடத்திலுள்ளோரின் கூட்டுறவை விடக் குலக்குறி (Totan) ஒன்றாக உள்ளவரிடத்தே ஒற்றுமை அதிகம். ஆனால், ஒரே கிராமத்தில் மணம்செய்துகொண்ட பலரை அது இணைக்காததனால், அது ஓர் அர்த்தமற்ற, முக்கியமல்லாத தோபுப் பிரிவு என்றெண்ணி, அதை நாம் இங்கே விட்டு விடுவோம்.

தோபு மக்களிடையே இருக்கின்ற மரபுப்படி, இந்தச் சமூகத்திலே, வேறான கூட்டத்திடையே ஓராண்டு வாழ்கின்றபோது மணமகனோ அல்லது மணமகளோ மிகவும் தாழ்வாக (அகௌரவமாக) நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. கிராமத்துச் சொந்தக்காரர்கள் எல்லோரும் அவர்களைப் பெயரிட்டு அழைக்கலாம். ஆனால், அவர்கள் மற்றவர்களைப் பெயரிட்டு அழைக்கக்

கூடாது. நமது நாகரிகத்தில் பெயரிட்டு அழைப்பதுபோல் தோபுச் சமுதாயத்திலே பெயர்களிடாமலிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனல், பெயரிட்டு அழைக்கப்படும்போது அப்படி அழைப்பவர்கள் பல முக்கிய உரிமைகளைப் பெற்றிருக்கின்றனர் எனத் தெரிகிறது. பெயரிட்டு அழைக்கப்படுபவன் மேல் உள்ள உரிமையை அது குறிக்கின்றது. கிராமத்தில் மணச் சடங்குக்கான பரிசுகள் கொடுக்கும்போதும் வாங்கும்போதும் அல்லது ஆண்டுதோறும் மணப் பரிசுகளைப் பரிமாறிக்கொள்ளும் போதும், சாவின்போதும் கூட்டத்திற்குள்ளே மணம்செய்து கொண்டு வந்து அந்த ஆண்டு அங்குத் தங்கியிருக்கும் மணமகனே மணமகளோ அங்கு இருக்கக்கூடாது. அவன் எப்பொழுதுமே மாற்றானுகக் கருதப்படுகிறன்.

அவன் நிலையில் அனுபவிக்கிற தாழ்வுக்கு மேலே சொன்னவைகளெல்லாம் பெரியவையல்ல. மிக முக்கியமான வேறென்று உள்ளது. எந்தக் கிராமத்திலே தம்பதிகள் அச் சமயம் வசிக்கிறர்களோ அக் கிராமத்து மக்கள் அங்கே மணம் செய்து கொண்டு வந்து வசிக்கின்றவன் நடத்தையில் திருப்தி கொள்வதில்லை. ‘சுசு’வைப் பொறுத்தவரை திருமணமானது ஒரு முக்கியமான முதலீடாகும். ஏனென்றல், இரு கிராமத்தினரும் திருமண நாள் தொட்டு மணமகனே அல்லது மணமகளோ சாகும்வரை, ஒருவர்க்கொருவர் பரிசுகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். தாய் வழிக் குடும்பத்தில் உள்ள ஆண்கள் பொருளாதாரத் துறையிலே முக்கியப் பங்குகொள்கின்றனர். தோபு மக்களிலே அடிக்கடி உண்டாகும் திருமணச் சண்டைகளில் தாயகத்தே தங்கியிருக்கும் மணமகனே, அல்லது மணமகளோ தன் கூட்டத்தாரை (சுசு) அதிலும் முக்கியமாகத் தன் தாயின் உடன்பிறந்தானை எளிதாக உதவிக்கு அழைக்கலாம். மாற்றனுக்கு எல்லாருடைய எதிரிலும் புத்தி புகட்டுவதற்கும், அவனைக் கிராமத்திலிருந்து தாறுமாறுகப் பேசி வெளியே அனுப்புவதற்கும் தாயுடன் பிறந்தான் தயாராக இருக்கிறன்.

இன்னும் ஓர் அந்தரங்கமான நெருக்கடி நிலையும் இருக்கின்றது. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் வஞ்சனையின்றி நாணயமாக நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப் படுவதில்லை. ஆண், பெண் உறவுக்கு மட்டுமின்றி வேறு எந்த நேரமும் கணவனும் மனைவியும் சிறிது காலங்கூட சேர்ந்திருப்பார்கள் என்று எந்தத் தோபுக் குடிமகனும் ஒப்புக்கொள்ள மாட்டான். வெளியே இருந்து வந்து, அந்த ஆண்டு அங்குத் தங்கியிருக்கும் ஆடவனே மகளிரோ நாணயமின்மையை

உடனே சந்தேகப்படக்கூடும். அதற்கு அவர்களுக்கு ஆதார மில்லாமலில்லை. அப்படிச் சந்தேகம் நிறைந்த சூழ்நிலையில் தோபு வுக்குக் கிராமத்து 'உடன்பிறந்தானே' அல்லது 'உடன்பிறந் தாளோ' உறவுக்குக் கிடைக்கக்கூடும். ஒருவன் தன்னுடைய கிராமத்திலேயே வசிக்கின்ற ஆண்டில் மிகவும் சாதகமான சூழ்நிலைகளும், இயற்கைக்கப்பாற்பட்ட அபாயங்கள் குறைந்து காணுதலும் ஏற்படுகின்றன. இப்படிப் பாகுபாடு செய்யப்பட்ட 'உடன்பிறந்தான்' 'உடன்பிறந்தாள்' முதலியவர்களுக்குள்ளே திருமணம் செய்துகொள்வதைப் பொதுமக்கள் அனுமதிப்பதில்லை. ஒரே இடத்திலே உள்ள இரு பகுதிகள் திருமண ஏற்பாட்டில் பரிமாறிக்கொள்வது கிராமத்தையே தகர்த்துவிடக்கூடும். கூடா ஒழுக்கம் அல்லது பிறர்மனை நயத்தல் (Adultery) இந்தக் கூட்டத் திற்குள்ளே ஒரு விரும்புகின்ற பொழுதுபோக்கு. புராணங்களிலே இது அடிக்கடி போற்றப்படுகிறது. மேலும் கிராமத்திலே நடக் கின்ற கூடா ஒழுக்கம் சிறு வயதுமுதலே எல்லோருக்கும் தெரிந்து இருக்கின்றது. ஆனால், ஏமாற்றப்பட்ட ஆடவனுக்கோ அல்லது பெண்ணுக்கோ இது மிகுந்த கவலையைக்கொடுக்கிறது. அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கோ அல்லது கிராமத்திலுள்ள வேறு குழந்தைகளுக்கோ லஞ்சம் கொடுத்து விவரமறிகின்றனர். கணவனாக இருந்தால் அவன் தன் மனைவியுடைய சமையல் சட்டிகளை உடைக்கிறான். மனைவியாக இருந்தால் அவள் தன் கணவனுடைய நாயைக் கொடுமைப்படுத்துகிறாள். அவர்களிரு வரும் இரைந்து சண்டைபோடுகின்றனர். பெரும்பாலும் இலை வேய்ந்த கூரைகளுள்ள நெருங்கி அமைந்த தோபு வீடுகளில் இந்தச் சண்டைகள் வெளியே கேட்காமல் இருக்கமுடியாது. கோபத்தில் அவன் கிராமத்தைவிட்டே வெளியேறுகிறான். பயனற்ற கோபத்தின் முடிவில் சில சமயம் அவன் வழக்கமான பல முறைகளில் தற்கொலை செய்துகொள்ள முற்படுகிறான். ஆனால், எந்த முறையும் சாவை விளைவிக்கக்கூடியதல்ல. அவ மானப்படுத்தப்பட்டதால் கோபங்கொண்ட அவன் தற்கொலை முயற்சியில் வெற்றிபெற்றுவிட்டால் அவனுடைய உறவினர்கள் என்ன செய்துவிடுவார்களோ என்ற பயத்தால் அவனுடைய மனைவியைச் சார்ந்தோர் சமாதான ஏற்பாடுகளுக்கு இசைந்து அவனைப் பெரும்பாலும் காப்பாற்றுகிறார்கள். அவர்கள் வேறு எந்தவித நடவடிக்கையும் எடுக்க மறுத்துவிடுகின்றனர். தம்பதி களும் கோபத்தோடும் வெறுப்புணர்ச்சியோடும் கூடி வாழ்கின்ற னர். அடுத்த ஆண்டு மனைவி தன்னுடைய கிராமத்திலே (இதைத் திருப்பி நடத்திக்காட்டலாம்) இதற்குப் பழி வாங்கலாம்.

நமது நாகரிகத்திலே சாதாரணமாகத் தோன்றும் கணவன் மனைவி இரண்டுபேரும் சேர்ந்து ஓரிடந்தங்கி வாழவேண்டு

மென்பது, தோபு மக்களிடையே அவ்வளவு எளிதல்ல. சூழ்நிலைகள் இந்த நிறுவனத்தை மிகவும் கடினமாகச் செய்து குடும்ப உறவையே அச்சுறுத்திக் கெடுத்தும்விடுகின்றன. டாக்டர் ஃபார்ச்சூன் அவர்கள் விவரித்திருக்கிற மற்ருெரு ஓஷியானிக் பண்பாட்டைக்கொண்ட மனுக்களைப்போல (Manus) கிட்டத்தட்ட ஐந்து மடங்குக்கு அதிகமாக மண உறவுகள் முறிந்துபோவது சாதாரணம். அவர்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் தோட்டத்து உணவைத் தயார்செய்துகொள்ள வேண்டும் என்ற நிபந்தனை மணமான தோபுத் தம்பதிகளுக்குக் கடினமாக இருக்கிறது. இத் தேவை அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கும் கண்கட்டு வித்தைகளில் அவர்களுக்குள்ள நம்பிக்கைக்கும் முரண்பாடாக இருக்கிறது.

வம்ச பரம்பரையாகக் கிழங்குகளின்மேல் இருக்கும் உரிமையைப்பற்றிய நம்பிக்கையைப்போல் வேறெதற்கும் தோபுக் குடிகளிலே சொந்தம் கொண்டாடும்முறை காணமுடியாது. அவர்களுக்குள்ளே எப்படி இரத்தக் குழாய்களிலே இரத்தமானது பரம்பரையாக வருகின்றதோ அதேபோல் கிழங்கு வரிசையும் அந்தக் கூட்டத்துக்குள்ளே (Susu) வருகின்றது. மணமான தம்பதிகளுடைய தோட்டங்களில்கூட விதைக் கிழங்குகள் ஒன்று சேர்வதில்லை. ஒவ்வொருவரும் அவர்கள் வம்ச பரம்பரையாக வந்த விதைக் கிழங்குகளைக்கொண்டு அவர்கள் தோட்டத்தைப் பயிர்செய்கிருர்கள். அவர்கள் கூட்டத்தின் (Susu) வழியே தனிப்பட்டமுறையிலும் இரகசியமாகவும் உரிமையாக இருக்கின்ற மாயாஜால ஜபங்களைக்கொண்டு வளர்ச்செய்கிருர்கள். ஒவ்வொருவருடைய தோட்டத்திலும் அவள் வம்சத்திலே வந்த கிழங்குகள்தான் நன்ருக வளரும் என்று தீவிரமாக நம்புகிருர்கள். விதைகளுக்கேற்ப ஏற்பட்டுள்ள மாயாஜால ஜபங்களால் அவைகள் பயனுள்ளதாக இருக்கும் என்றும் நம்புகிருர்கள். இதற்கு வழக்கத்திலே அனுமதிக்கப்படும் சில விதிவிலக்குகளைப் பின்னுல் விவரிப்போம். கணவன் மனைவி சேர்ந்து பயிரிடும் தோட்டங்களைப் பொறுத்தவரையில் விதிவிலக்குகள் அனுமதிக்கப்படுவதில்லை. தனிப்பட்ட முறையிலே கணவனும் மனைவியும் முன் பயிரிலிருந்து விதைகளைக் காப்பாற்றியும் வம்சாவழிக் கிழங்குகளை நட்டும் இறுதியில் கிடைக்கக்கூடிய பலனுக்குப் பொறுப்பாக இருக்கிருர்கள். விதைகளுக்குத் தேவையான கிழங்குகளை ஒருவன் பெற்றிருக்கவேண்டுமேயானுல் நடவுக்குச் சில மாதங்களுக்கு முன்பே ஒவ்வொருவனும் பட்டினி கிடக்க வேண்டும். ஏனென்ருல், தோபுவிலே உணவு போதிய அளவில் இருப்பதில்லை. ஒருவன் தன் விதைக் கிழங்குகளைத் தின்று

விடுவது தோபுக் குடிமக்களிலே ஒரு பெரிய தவருகக் கருதப்படு கிறது. இந்த நஷ்டம் ஈடுசெய்யப்படுவதேயில்லை. கணவனுக்கோ மனைவிக்கோ இது ஈடுசெய்யமுடியாத ஒன்ருகும். ஏனென்ருல், தாய்வழியில் வராத கிழங்குகள் ஒருவனுடைய தோட்டத்திலே வளர்வதில்லை. விதை நஷ்டத்தால் அழிந்துபட்ட ஒருவனுக்கு அவனுடைய கூட்டங்கூட (Susu) ஈடுசெய்வதில்லை. அவ னுடைய பிரிவைச் சார்ந்தவர்கூட அவனுக்கு ஆதரவு தரா வண்ணம் நடவுக்கு வைத்திருக்கும் கிழங்குகளைத் தின்பவன் தாழ்ந்தவனுகக் கருதப்படுவான். வாழ்க்கை முழுவதுமே அவன் கிடைத்ததைத் தின்னும் தோபுவாக வாழ்கிருன்.

ஆகையினுல் கணவன் மனைவி இருவருடைய தோட்டமும் தனித்தனியாக இருந்துதான் தீரவேண்டும். விதைக் கிழங்குகளும் நிரந்தரமாகத் தனித்தனியே சொந்தமாகக் கொள்ளப்பட்டு மாயா ஜால ஜபங்களால் வளர்க்கப்பட்டுத் தனித்தனியே அடுத்த வாரிசு களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அவைகள் ஒன்றுசேர்க்கப் படுவதில்லை. எவருடைய தோட்டமாவது சரியான பயன்தரா விட்டால், அது மிகவும் வருத்தப்படத்தக்க ஒன்ருக மாறிக் குடும் பச்சண்டை, விவாகரத்து முதலியவைகளுக்கு ஏதுவாகிறது. ஆனுலும், தோட்டத்திலே செய்கின்ற வேலை இருவராலும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. வீட்டைப்போலவே தோட்டங் களும், கணவன், மனைவி, குழந்தைகளுக்குத் தனிப்பட்டு இருந் தாலுங்கூடத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் உணவானது பொது உபயோகத்திற்காக ஒன்று திரட்டப்படுகிறது.

சாவினுல் மணஉறவு அறுந்துபோனுலும்சரி, அல்லது தகப்ப னும் தாயும் பிரிந்து பல ஆண்டுகள் கழித்துத் தகப்பன் இறந்து போனுலும்சரி, தகப்பனுடைய கிராமத்திலிருந்து கிடைக்கும் உணவானது குழந்தைகளுக்கு விலக்கப்படவேண்டிய ஒன்ருகும். தாய் தந்தையர் இருவராலும் வளர்க்கப்படுகின்ற தோபுக் குழந்தைகள், தகப்பன் உயிரோடிருக்கும்வரைதான் அந்த உணவை இடையூறின்றி உண்ணமுடியும். அதேபோலத் தகப்பன் இறந்தஉடனே அவனுடைய குழந்தைகள் அவனுடைய கிரா மத்திலே அனுமதிக்கப்படுவதில்லை. திருமணத்தினுல் ஏற்பட்ட உறவுகள் இனிமேல் கொண்டாடப்படவேண்டியதில்லை என்ற நிர்ணயம் ஆனஉடனே, தாயின் கிராமத்தார் குழந்தைகளை, வெளியார் தொடர்பு கொள்ளவொட்டாமல், தாங்களே உரிமை கொண்டாடுகின்றனர். வயதுவந்த பிறகும், முதியவர்களான பின்பும் தகப்பனுடைய கிராமத்திற்குச் சடங்குகளுக்கான

உணவை எடுத்துச்செல்லும்போது, அவர்கள் கிராமத்திற்கு வெளியே தலைகுனிந்து அசையாமல் நிற்கிருர்கள். பிறர் வந்து இவர்கள் சுமையை கிராமத்திற்குள் எடுத்துச் செல்கின்றனர். இந்தக் கூட்டம் திரும்பிவரும்வரை காத்திருந்து, பிறகு தாயின் கிராமத்திற்கு ஊர்வலத்திற்குத் தலைமைதாங்கித் திரும்புகிருர்கள். அவர்கள் 'தலைவணங்க வேண்டிய' ஓரிடம் எனத் தகப்பனுடைய கிராமத்தை எண்ணுகிருர்கள். கணவனே, மனைவியோ இறந்து விட்டால், இறந்துபட்டவருடைய கிராமத்தருகே எஞ்சியிருப்பவர் செல்வது தீவிரமாக விலக்கப்படுகிறது. அவர்கள் கிராமத்திற்கு வெகு தொலைவுக்கப்பால் நின்றுவிடவேண்டும். இல்லையானல் கிராமத்தைச் சுற்றிச் செல்லவேண்டும். மண உறவினல் இருதரப்பாரிடையே அனுமதிக்கப்பட்ட சில சலுகைகள், இரட்டித்த கட்டுப்பாடுகளோடு ரத்து செய்யப்படுகின்றன.

தோபு மக்களுக்கே உரிய பொருமை, சந்தேகம், சொந்தம் கொண்டாடுவதில் உள்ள ஒரு தனித்தன்மை இவைகளெல்லாம் மணவினையைச் சார்ந்தே இருக்கின்றன. இருந்தாலும் மற்ற விஷயங்களில் அவர்களுடைய வாழ்க்கைமுறையை நாம் கவனிப்பதற்கு முன்னல், இதைப்பற்றி முடிவாகக்கொள்ளலாகாது. தோபு மக்கள் வாழ்க்கையினூடே அமைந்திருக்கும் நோக்கங்கள் பெரும்பாலும் குறைந்த அளவுடையவை. அவர்களுடைய பண்பாட்டு நிறுவனங்கள் அந்த நோக்கங்களை எந்த அளவு கொண்டிருக்கின்றன? அவர்கள் அவைகளை எவ்வளவுதூரம் கடைப்பிடிக்கிருர்கள் என்பவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. வெறிபிடித்த செயல்கள்போல் அவை சாதாரணமானவை. வாழ்க்கையே ஓர் ஈவிரக்கமற்ற போட்டியாகும். தோற்றுப்போன எதிரியின் செலவிலே எதையும் சாதித்துக்கொள்வார்கள். மேலே நாம் காணப்போகும் வடமேற்குக் கடற்கரை மக்களுடைய போட்டியும், சண்டைகளும், எப்படிப் பொதுமக்கள் எதிரிலேயும், சூதுவாதுகளற்றும் இருக்கின்றனவோ, அவைகளைப் போலன்றித் தோபு மக்களுடைய சண்டை, சச்சரவுகள் இரகசியமாகவும் கபடமாகவும் நடைபெறுகின்றன. மற்றொருவனை ஏமாற்றிய ஒருவன் தான் வெற்றிபெற்றவனுகவும் நல்லவனுகவும் கருதப்படுகிருன். அந்தமாதிரி நடத்தைகளுக்காக அவர்களுடைய பண்பாடு மிகையான நடவடிக்கைகளும், விரிவான விழாக்களும் கொண்டதாயிருக்கிறது. முடிவாகச் சொல்வோமேயானல் தோபு மக்களின் வாழ்க்கையே இம்மாதிரிச் செய்கைகளால் நிறைந்திருக்கிறது.

உரிமை (சொந்தம்) கொண்டாடுவதில் தோபு மக்கள் காட்டும் தீவிரமும், பிறரை எவ்வளவுதூரம் அவர்கள் கொடுமைப்

படுத்துகின்றனர் என்பதும் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள், இதற்காக அவர்கள்மேல் கொண்டுள்ள கெட்ட எண்ணமும் சந்தேகமும் அவர்களுடைய சமயத்திலே (Religion) நன்கு புலப்படுகிறது. உலகத்திலே கண்கட்டு அல்லது மாயா ஜாலப் பழக்கங்களுக்குத் தோபுத் தீவுகளை அடுத்த கடற் பிரதேசம் பெயர்போனது. மாயாஜால வேலைகளும் சமயமும் ஒன்றுக்கொன்று விலக்கானது என்று கருதும் சமயவாதிகள் தோபு மக்களிடையே சமயம் என்ற ஒன்று இருப்பதாக ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மானிடவியல் (Anthropology) கண்ணேக் குடன் கவனிக்கும்போது மாயாஜாலாங்களும் சமயமும் ஒன்றோ டொன்று இணைந்து, இயற்கைக்கப்பாற்பட்டவைகளைக் கையாள உபயோகப்படுகின்றன. அந்த உலகத்தோடு விரும்பத்தக்க உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள சமயமும், அந்த உறவுகளைத் தாமாகவே கட்டுப்படுத்த செய்முறைகளோடுகூடிய மாயாஜாலங் களும் இருக்கின்றன. கடவுள்களுக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இடையே கூட்டுறவை ஏற்படுத்த இயற்கைக்கப்பாற்பட்டவை களுக்குத் தொழுகையோ, பரிசுகளோ, பலிகளோ தோபு மக்கள் கொடுப்பதில்லை. தோபு மக்களுக்குத் தெரிந்த இயற்கைக்கப்பாற் பட்டவைகள் ஒருசில இரகசிய மாயாஜாலாப் பெயர்கள்தாம். நாடோடிக் கதைகளிலே எப்படி 'ரம்பெல்ஸ்டில்சென்' (Rumpels- tilchen) என்ற பெயர் அடக்கியாளும் சக்தியைக் கொடுக்கிறதோ அவ்விதம் இப் பெயர்களும் கொடுக்கின்றன. ஆதலால், தோபு மக்களிலே பெரும்பான்மையோருக்கு இந்த இயற்கைக்கப்பாற் பட்ட பெயர்கள் தெரிந்திருக்கவில்லை. பரம்பரையாக வந்த அல்லது விலைக்கு வாங்கப்பட்ட சில பெயர்களைத் தவிர வேறு பெயர்கள் எவனுக்கும் தெரியாது. வேறு யாரும் கேட்டுவிடாம லிருப்பதற்காக முக்கியமான பெயர்கள் இரைந்து பேசப்படாமல் முணுமுணுக்கப்படுகின்றன. இதிலே உள்ள நம்பிக்கையெல்லாம், அந்தப் பெயர்களின் மாயா சக்திகளைப்பற்றி உள்ளனவேயன்றித் தொழுகைமுறையைச் சார்ந்து நிற்கவில்லை.

ஒவ்வொரு நடவடிக்கையும் அற்கான மந்திர உச்சரிப்பைப் பெற்றிருக்கிறது. மாயாஜாலங்களின்றி வாழ்க்கையில் எத்துறை யிலும் பயன்கிடைக்காது என்பது தோபு மக்களின் ஆழ்ந்த நம்பிக்கை.

ஸுனி (Zuni) மக்களின் வாழ்க்கையிலே சமயம் எவ்வளவு தொடர்புகொண்டிருக்கிறது என்பதைக் கவனித்தோம். அங்கே எல்லாச் சமய வழிபாடுகளும் மழைக்காகவேதான் என்று மரபு

வழியே மிகைப்படுத்திச் சொல்லப்பட்டாலும் அவர்களுடைய வாழ்க்கையிலே பல விஷயங்களுக்குச் சமய சம்பந்தமான செய்முறைகள் கிடையா. வடமேற்குக் கடற்கரை மக்களிடையே தன் நிலையை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் முக்கியமான வேலையைக்கொண்ட அவர்கள் வாழ்க்கையிலே சமயம் எவ்வளவு குறைந்த அளவுக்குப் பயன்படுகிறது என்று பார்க்கப்போகிறோம். தோபு மக்களிடையே இது வேறுவிதமாக அமைந்திருக்கிறது. தனக்குத் தெரிந்த மாயாஜாலங்களையே ஒருவன் எந்தவிதமான பயனுக்கும் நம்பியிருக்கிறன். உதாரணமாக மாயாஜால உச்சரிப்பின்றிக் கிழங்குகள் வளர்வதில்லை. சிற்றின்ப ஆசை தோன்றுவதில்லை. பொருளாதாரப் பண்டமாற்றுகள் நடைபெறுவதில்லை. மரங்களின்மேல் சூன்யம் வைக்காவிட்டால் அவைகள் திருட்டுப்போவதினின்றும் காப்பாற்றப்படுவதில்லை. மாயாஜால முறைப்படி அழைக்கப்படாமல் காற்று வீசுவதில்லை, மந்திர தந்திர, சூன்யங்கள் ஏவலின்றிப் பிணியோ, சாவோ ஏற்படுவது இல்லை.

ஆகையினல், மந்திர, மாயாஜால உச்சரிப்புகள் ஈடுயிணையற்ற முக்கியத்துவம் வாய்ந்திருக்கின்றன. வெற்றியைக் கோரும் வேகமானது இவர்கள் மாயாஜால முறைகளுக்காக நடத்தும் தீவிரப்போட்டியிலே நன்கு பிரதிபலிக்கிறது. இந்த முறைகள் பொதுவான ஒன்ருகக் கொள்ளப்படுவதில்லை. தனக்கே உரிமையாகக் கொள்ளும் சில இரகசியக்கூட்டங்கள் கிடையா. இவைகள் பரம்பரையாக வந்திறங்க, உடன்பிறந்தார் கூட்டங்களும் கிடையாது. இந்த உச்சரிப்புகளின் சக்தியினல் கிடைக்கக்கூடிய பயன்களை அடைவதற்கு இக் கூட்டங்களிடையே (susu) கூட்டுறவு ஏற்படவில்லை. தனிப்பட்டவர் வாரிசாக மாயாஜாலங்கள் இருக்கவே கூட்டம் (susu) வழிவகுத்துக்கொடுக்கிறது.

தாயோடு உடன்பிறந்தானுடைய மாயாஜால முறைகளுக்கு ஒருவன் உரிமைகொண்டாடலாம். ஆனுலும், ஒவ்வொரு உச்சரிப்பும் கூட்டத்திலே ஒருவனுக்கு மட்டுமே சொல்லிக் கொடுக்கப்படும். முறை தெரிந்தவன் தன் சகோதரியின் இரண்டு பிள்ளைகளுக்கும் கற்றுத்தரமுடியாது. வாரிசுகளில் ஒருவனைப் பொறுக்கியெடுக்க உரிமை தாய் மாமனுக்கு உண்டு. மூத்த மகனைத்தான் சாதாரணமாகத் தேர்ந்தெடுப்பான். ஆனுல், சில சமயங்களில் மூத்தவனைத் தள்ளிவிட்டுத் தன்னுடன் நெருங்கிப் பழகி தனக்கு உதவியாக இருக்கும் இளையவனைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு. மூத்தவனுக்கு இதைத் தவிர்க்க வழியில்லை. பொருளாதாரப் பண்டமாற்றுக்காகவும், கிழங்குகளுக்காகவும் உள்ள சில முக்கிய

மான முறைகள் இல்லாமலே அவன் வாழ்நாள் கடந்துவிடக் கூடும். தவிர்க்க வேறுவழியில்லாத இந்த நிலையை அவன் வெளியே சொல்லிக்கொள்வது ஓர் அவக்கேடாகும். ஆனால், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சில வசியங்களைப் (charms) பெற்றிருக்கிறார்கள். பிணி உண்டாக்கும் மந்திரங்களையும் காதல் வசியங்களையும் பெரும்பான்மையோர் அறிந்திருக்கின்றனர். வீட்டைவிட்டு வெளியேறிக் கூலிவேலைசெய்பவர்கள், பரம்பரையையோ, வாரிசுகளையோ கவனியாமல் வசியங்களை விற்கலாம். தன்னுடைய பண்பாட்டிலிருந்து சிறிது வேறுபட்டு, வெள்ளையனிடம் வேலைசெய்பவர்கள்கூட ஒரு வசியத்திற்காக ஏறக்குறையத் தன்னுடைய நான்குமாத ஊதியத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் அதன்மேல் கொண்டுள்ள மதிப்புக்கு, அவர்கள் கொடுக்கும் தொகை ஒரு சான்று.

டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) அவர்கள் வசித்துவந்த தேவாரா (Tewara) என்ற சிறிய தீவிலுள்ள தோபு மக்கள், தோபுத் தீவிலுள்ள வெள்ளையனோ அல்லது பாலினீஷியா (Polynesia) மதக்குழுவைச்சார்ந்த (mission) ஆசிரியர்களோ தோட்டங்கள் பயிரிட்டதாக ஒப்புக்கொள்ளவில்லை. மாயாஜாலங்கள் இல்லாமல் அது முடியாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஒருநாட்டு மக்களுடைய சட்டதிட்டங்கள் அந் நாட்டு மக்களுக்கு மட்டுமே என்ற உலகமறிந்த கோட்பாட்டை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. மாயாஜாலம் ஒன்றிலேயே ஆழ்ந்த நம்பிக்கைகொண்ட தோபு மக்களுக்கு வெள்ளையனுக்கோ, பாலினீஷியா மக்களுக்கோ அதனுடைய தேவை இல்லை என்று நம்ப முடிவதில்லை.

மாமனிடமுள்ள மாயாஜால முறைகளைப் பெறுவதற்கு, அவனுடைய உடன்பிறந்தாளின் பிள்ளைகளுக்குள்ளே கடும்போட்டி ஏற்படுகிறது. இதற்கு எதிராகத் தன் தகப்பனுடன் ஒரே வீட்டில் சேர்ந்திருந்து அவனுடன் தோட்ட வேலைகளிலே பங்குகொள்ளும் அவனுடைய சொந்தப் பிள்ளைகளும் போட்டியிடுகிறார்கள். இதுவும் தோபுப் பழக்கத்திலே அனுமதிக்கப்படுகிறது. தோபு மக்கள் பழக்கத்திலே கிழங்கின் விதையோடு வாரிசு பரம்பரையாக வந்த மாயாஜாலம்தான் விதையை வளரச்செய்ய முடியும் என நம்பப்படுகிறது. கால்வழிப் பிரிவை (clan) விட்டு விதை பிரிக்கமுடியாததொன்று. ஆனாலும், தோட்டசம்பந்தமான உச்சரிப்புகள் சொந்தக்காரனுடைய பிள்ளைகளுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உரிமைகளை

வழங்கும் தோபுப் பழக்கத்திலேயிருந்து மாறுபட்ட ஒன்றும் உண்டு. திருமணத்தினுல் ஏற்பட்ட உறவுகள்கொண்ட கூட்டத்திற்குச் சலுகைகள் திருட்டுத்தனமாக வழங்கப்படுகின்றன.

'ஒரு மருத்துவரின் (Doctor) வாடிக்கை, ஒரு வியாபார ஸ்தலத்தின் நல்லெண்ணம் (goodwill), அல்லது ஒரு பெரு மகனின் (peer) பட்டத்தையும், நிலங்களேயும்போல மந்திர உச்சரிப்புகள் இருக்கின்றன. ஒரு மருத்துவர் தன் வாடிக்கையைத் தொழில்முறையில் பங்குதாரர்களல்லாத ஆனுல் தொழில்துறையில் விரோத மனப்பான்மைகொண்ட இருவருக்குக் கொடுத்தோ விற்ருேவிட்டால் அது சட்டத்தின் ஆதரவு பெறுவதில்லே. அதேபோலத்தான் வியாபார நல்லெண்ணமும். ஓர் அரசன், மானியங்கள் வழங்கிக் கொண்டிருந்த காலத்திலே ஒரே பட்டத்தையும் நிலத்தையும் இருவருக்குக் கொடுத்துவிட்டால், கலகத்தைத் தன் வாயிலிலேயே காணலாம்.

ஆனுல், தோபு மக்களிடையே, பொதுச் சொத்தில் கூட்டாளிகளாகவோ, நெருங்கிய நண்பர்களாகவோ, பங்குடையவர்களாகவோ இல்லாமல் ஒருவருக்கொருவர் (இரண்டு வாரிசுகள்) விரோத மனப்பான்மைகொண்டால் இந்தப் பழக்கம் சட்டபூர்வமானதாகக் கொள்ளப்படுகிறது. ஒரே நல்லெண்ணம் இருவருக்கும் கொடுக்கப்படுகிறது'.

தகப்பன் இறந்தபொழுது அவனுடைய மகன் அவனுடைய உடன்பிறந்தாள் மகனேக்காட்டிலும் அதிகமான மாயாஜாலங்களேப் பெற்றிருந்தான் என வைத்துக்கொள்வோம். அப்போது, தோபு மக்கள் ஆசாரப்படி, அதிக உரிமைகொண்ட உடன் பிறந்தாள் மகன், கட்டணமேதுமின்றித் தன் மாமன் மகனிடமிருந்து உரிமைகொண்டாடி கற்றுக்கொள்கிருன். நிலேமைமாறியிருந்தால் மகனுக்குத் தன் தகப்பன் உடன்பிறந்தாள் மகன்மேல் எவ்வித உரிமையும் இல்லே.

பலன்தரவேண்டுமென்ருல், தோபு மக்களுடைய மாயாஜால உச்சரிப்புகள் வார்த்தை சுத்தமாக இருக்கவேண்டும். சில குறிப்பிட்ட இலேகளும், கட்டைகளும் அவைகளுக்கேற்ற அசைவுகளோடு பயன்படுத்தப்படவேண்டும். அவைகள் பெரும்பாலும் அனுதாப (sympathetic) மாயாஜால முறைகளாக இருக்கின்றன. உதாரணமாகப் புதிதாக இலேகள்விடும் கிழங்குகளுக்குப் புதரிலே இருக்கும் நீர்வாழ்ச் செடிகளேப்பற்றி உச்சரித்தால், அவைகளின் செழிப்புத் தன்மையை இவைகளும் பின்பற்றும் என்பதுபோல கங்கோஸாவினுடைய (gangosa) (ஒருவகைப் பிணி) அழித்தல்

தன்மையைப் பெறுவதற்கு, ஒரு மரத்துண்டின்மேல் ஹார்ன்பில் (கொம்பு மூக்கன்) என்ற பறவை குத்துவதை விவரிக்கலாம். ஒருவனுடைய நஷ்டம் மற்றொருவனின் லாபம் என்ற தோபு மக்களின் நம்பிக்கையை உட்கூடாகக்கொண்ட வகையில் இவை மிகவும் குறிப்பிடத்தக்க உச்சரிப்புகளாகும்.

கிழங்கு விதைகள் பயிரிடுவதற்காக நிலம் பண்படுத்துவது முதல் ஆரம்பமாகும். தோட்ட சம்பந்தமான சடங்குகள் அறுவடைவரையில் நீடிக்கும். நடவு வசியங்கள், அப்போதுதான் பயிர் உண்டாக்கப்பட்ட கிழங்குகளை, மிகப் பெரியவைகளாயும், ஏற்கெனவே வளர்ந்துவிட்டனவாயும் வர்ணிக்கின்றன. ஆரம்ப வளர்ச்சியின்போது தேவைப்படுகிற வசியமானது கபாலி என்ற ஒரு பெரிய கூடுகட்டும் சிலந்தியின் உருவத்தின் கீழே சுற்றிக் கொண்டிருக்கும் கொடிகளைச் சித்திரிக்கிறது.

'கபாலி, கபாலி
சுற்றிப் பிணைந்து
மகிழ்ச்சியோடு அவன் சிரிக்கிறான்
இலைகளால் மறைக்கப்பட்ட என் தோட்டத்துடன் நான்
என் இலைகளுடன் நான்
கபாலி, கபாலி,
சுற்றிப் பிணைந்து
மகிழ்ச்சியோடு அவன் சிரிக்கிறான்'

இப்பொழுதெல்லாம் கிழங்குகளின்மீது மாயாஜாலக் கண் காணிப்பு ஒன்றும் வைப்பதில்லை. மாயாஜாலத் திருட்டும் நடைபெறுவதில்லை. அவைகள் சிறிதளவு வளர்ந்துவிட்டமையால் அவைகளை ஓரிடத்திலேயே வேர்விடச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏனென்றால், கிழங்குகள் இரவிலே ஒரு தோட்டத்திலிருந்து பிற தோட்டங்களுக்குச் சுற்றித்திரியும் ஆட்களாக நினைக்கப்படுகின்றன. கொடிகளைப் பின்தங்க விட்டுவிட்டு கிழங்குகள் மட்டும் போய்விடுகின்றன. அவைகள் நடுக்காலையிலே திரும்பிவிடுகின்றன. இதற்காகவேதான், தோட்ட வேலை சாதாரணமாக நடைபெறும் அதிகாலையில் கிழங்குகளைத் தோண்டுவதில்லை. அது வீணான வேலையாகத்தான் முடியும். அவைகள் திரும்பிவரும்வரை பொறுமையோடு காத்திருக்க வேண்டும். மேலும், கிழங்குகள் வளரும்போது அவைகளுடைய சுதந்திரம் சீக்கிரம் குறைக்கப்படுவதை விரும்புவதில்லை. ஆகையால், அவைகள் ஒரு குறிப்பிட்ட அளவு வளரும்வரை, விதை உண்டாகவேண்டிய உச்சரிப்புகள் ஆரம்பிக்கப்படுவதில்லை.

கிழங்குகள் எந்தத் தோட்டத்திலே பயிரிடப்பட்டனவோ, அங்கேயே தங்கி, அத் தோட்டத்தின் சத்தை உட்கொண்டு வளருவதற்கு உச்சரிப்புகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. வாரிசு பெறுவதற்கு நடக்கும் போராட்டத்தைப்போலவே, தோட்டமிடுவதற்கும் தோபு மக்களிடையே போட்டி நடைபெறுகிறது. ஒருவன் அவனுடைய விதைக் கிழங்குகளிலிருந்து அதிகமான கிழங்குகளைப் பயிரிடமுடியும் என்பதையோ, தன்னைவிட அதிக அளவுள்ள கிழங்குகளை நடவுசெய்ய முடியுமென்பதையோ அறிவதில்லை. அக்கம்பக்கத்திலுள்ளவன் தன்னைவிட அதிகமாக அறுவடை செய்துவிட்டான் என்றால் அது தன்னுடைய தோட்டத்திலிருந்தோ பிறருடைய தோட்டத்திலிருந்தோ மாயாஜால மூலம் திருடப்பட்டதென்று நினைக்கிறான். அறுவடைவரையில் தன் தோட்டத்திற்குக் காவல்செய்துகொண்டு, தனக்குத் தெரிந்த வசியங்களைக்கொண்டு பக்கத்து வீட்டுக்காரர்களுடைய கிழங்குகளை வசீகரிக்கவும் அவர்களுடைய வசிய மந்திரங்களுக்கு எதிர் வசியம் செய்துகொண்டும் இருக்கிறான். இப்படிச் செய்யப்படும் எதிர் வசியங்கள், சொந்தக்காரனுடைய அறுவடைக்காக கிழங்குகளை, அவைகள் பயிரிடப்பட்ட இடங்களிலேயே நிலையாக வேர் விடச் செய்கின்றன.

கசியாருப்பனை[1] எங்கே இருக்கிறது
என் தோட்டத்தின் வயிற்றிலே
என் வீட்டு மேடைக்குக் கீழே
அது நிற்கிறது.
வளையாமல், கோணாமல் அது நிற்கும்
அசையாமல் நிற்கிறது.
மரங்களை உடைக்க வல்லது உடைக்கின்றது
கற்களைத் தூக்கியெறியக்கூடியது எறிகின்றது.
அவைகள் அசையாமல் இருக்கின்றன.
நிலத்தை உதைப்பவர்கள் உதைத்தாலும்
அவைகள் அசையாமல் இருக்கின்றன.
அது நிற்கிறது, அது நிற்கிறது
வளையாமல், கோணாமல்
குலியா[2] கிழங்கு
வளையாமல், கோணாமல் இருக்கிறது
அது நிற்கிறது, இருக்கிறது அசையாமல்
என் தோட்டத்தின் வயிற்றினிலே.

[1] புதர்களிலே உள்ள ஒருவகைச் செடி. புயல் காற்றிலே எல்லாச் செடிகளும் வளைந்தால்கூட இது நிமிர்ந்தே நிற்கும்.
[2] ஒருவகைக் கிழங்கு. எல்லா வகைகளுக்கும் இதே செய்யுள் திருப்பிச் சொல்லப்படுகிறது.

கணவனும் மனைவியும் தோட்டத்திற்குள்ளேயே கலவி செய்யுமளவுக்குத் தோட்டங்களுடைய தனித்தன்மை மதிக்கப் படுகிறது. நல்ல பயிர் கிடைத்துவிட்டால் அது திருடுவதை ஒப்புக்கொண்டமாதிரி ஆகின்றது. அச்சமூட்டும் சூன்யங்களைக் கொண்டு ஒருவனுடைய சொந்தக் கூட்டத்தினரின் தோட்டங் களிலிருந்தே வேறுபடுத்திக்கொண்டு வந்து விட்டதாக எண்ணப் படுகிறது. அறுவடையின் அளவு கவனமாக மறைக்கப்படுகிறது. அதைப்பற்றிப் பேசுதல் அவமானச் செயலாகும். சுற்றியிருக்கிற கடல் தீவுகளிலெல்லாம் கிழங்குகளைக் காட்சிப்பொருள்களாகச் சடங்குகள்மூலம் தெரியப்படுத்தி அறுவடைக் காலத்தை ஆண்டின் பெருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். தோபு மக்க ளிடையே அறுவடை திருடுவதைப்போன்று ரகசியமாக வைக்கப் படுகிறது. அறுவடைப் பொருள்களைக் கணவனும் மனைவியும் சிறிது சிறிதாகக் களஞ்சியத்திற்கு எடுத்துச்செல்லுகிறார்கள். ஒரு நல்ல அறுவடை கிடைத்தால் பிறர் பார்த்துவிடக்கூடாது என்று பயப்படுகின்றனர். இதற்குக் காரணம், பிணியோ அல்லது சாவோ ஏற்பட்டால் அதற்குக் காரணம் கண்டுபிடிப்பவன், இயற்கையாக நல்ல அறுவடையைச் சுட்டிக்காட்டுவதேயாகும். பயிர் நல்லமுறையிலே கிடைத்ததைப் பார்த்து பொறாமைப்படுகிற ஒருவன், வெற்றியுடன் பயிர்செய்த தோட்டக்காரன்மேல் சூன்யம் வைத்துவிட்டான் என நம்பப்படுகிறது.

பிணி உண்டாக்கும் வசியங்கள் தங்களுக்கே உரிய கொடுமையைப் பெற்றிருக்கின்றன. தேவாரா (Tewara) கிரா மத்திலே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒன்றிலிருந்து ஐந்து வரை வசியங்களைத் தெரிந்துவைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வசியமும் ஒரு குறிப்பிட்ட பிணிக்காக ஏற்பட்டது. பிணி ஏற்படுத்துவதற்கான உச்சரிப்புகளைத் தெரிந்தவன், அந்தப் பிணியை அகற்றுவதற்கும் ஓர் உச்சரிப்பைத் தெரிந்துவைத் திருக்கிறான். சில குறிப்பிட்ட பிணிகளை உண்டாக்குவதற்கும், குணப்படுத்துவதற்குமான சக்திகளைச் சிலர் தனி உரிமையாகப் பெற்றிருக்கின்றனர். யாருக்கு யானைக்கால் வியாதி (Elephantiasis) அல்லது கண்டமாலை (Scrofula) இருக்கிறதோ அவர்களுக்கு அதை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று தெரியும். இந்த வசியங்கள் அவைகளுடைய சொந்தக்காரர்களைச் சக்திவாய்ந்த வர்களாகச் செய்கின்றன. ஆதலால், இவை மிகவும் விரும்பப் படுகின்றன.

பண்பாடு அனுமதிக்கிற விரோத மனப்பான்மையை வெளிக் காட்டுவதற்கு உச்சரிப்புகளின் சொந்தக்காரர்களுக்கு வாய்ப்பு

கிட்டுகிறது. சாதாரணமாக இதுமாதிரி வெளிக்காட்டுதல் விதி விலக்கு. தோபுக் குடிமகன் மற்ளெருவனைப் புண்படுத்தவேண்டு மென்ருல் வெளிப்படையான சவால் விடுதலைத் துணிந்து செய்ய மாட்டான். நட்புரிமையை இருமடங்காக வெளிக்காட்டிக் கெஞ்சுகிற ஒருவனுகிருன். நெருங்கிப் பழகுவதால் சூன்யம் பலப்படும் என்று நம்புகிறபடியால் அவன் துரோகச் செயலுக்கு வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருக்கிருன். தன் உடன்பிறந் தாளுடைய மகனுக்கு வசியங்களைக் கற்றுத்தருவதிலோ, தன் எதிரியின்மீது பிணிக்கான வசியமிடுவதிலோ, தன்னுடைய விரோத மனப்பான்மையைக்காட்ட அவனுக்குப் பூரண உரிமை உண்டு. அவன் தன்னுடைய புறத்தோற்றத்தை ஒதுக்கி வைத்துவிடுகிருன். இதுபோன்ற சம்பவம், அவனுடைய எதிரி யின் கண்களுக்கோ காதுகளுக்கோ எட்டாத ஒன்ருகையினுலே தனக்குப் பலியாகக்கூடியவனுடைய கழிவுப்பொருள்கள்மீது வசியத்தை ஏவுகிருன். அல்லது எதிரி வரும் வழியிலே ஒரு கொடியின்மீது வசியத்தை ஏவி வைத்துவிடுகிருன். பலியாகக் கூடியவன் அதன்மீது உரசிச் செல்லும்வரை காத்திருந்து கவ னிக்கவும் செய்கிருன். வசியத்தை ஏவும்போது, தான் உண்டாக் கக்கூடிய பிணியின் இறுதியிலே ஏற்படக்கூடிய துன்பங்களை எதிர்நோக்கி இவனும் அதுமாதிரி போலியாக நடிக்கிருன். அவன் தரையின்மீது விழுந்து புரண்டு வீரிட்டுக் கத்துகிருன். அப்படி எந்த வேலைக்காக வசியம் செய்யப்படுகிறதோ அதேபோன்ற நிலையைச் செய்துகாட்டினுல்தான் வசியம் வேலை செய்யும். வசியம் செய்பவன் அப்போதுதான் திருப்தி அடைகிருன். பலியாகக்கூடியவன் அந்தக் கொடியின்மேல் உரசிச் சென்றபிறகு அந்தக் கொடியைத் தன் வீட்டுக்கு எடுத்துச்சென்று அதை வாடச் செய்கிருன். எதிரியின் மரணத்திற்கு அவன் தயார்செய்து கொண்டவுடன் அதைத் தீயிலிட்டு எரித்துவிடுகிருன்.

வசியங்களைத் தொடர்ந்துவரும் வேலைகளைப்போலவே வசி யங்களும் மிகவும் விரிவாக அமைந்திருக்கின்றன. எந்தப் பொருள் வசியத்தை எடுத்துச்செல்லவேண்டுமோ அதன்மேல் வரிசை யாக இஞ்சியை மென்று துப்புகிருர்கள். கொம்பு மூக்கன் (Hornbill) என்ற பறவை எப்படித் தன்னுடைய குடையும் அலகால் மரத்துண்டைக் குடைந்து எடுத்துவிடுகிறதோ அதே போன்று கங்கோஸா (gangosa) என்ற சதையை அரித்துத் தின்னும் ஒருவகைப் பிணியை உண்டாக்கும் வசியம் கீழே தரப்பட்டிருக்கிறது.

'ஸிகாஸிகாவில் (Sigasiga) வதியும் கொம்பு மூக்கன் (Hornbill)
லோவானு (lowana) மர உச்சியிலே

அது வெட்டுகிறது, வெட்டுகிறது
அது கிழித்துவிடுகிறது
மூக்கிலிருந்து
தாடைகளிலிருந்து
தொண்டையிலிருந்து
இடுப்பிலிருந்து
நாவின் அடியிலிருந்து
கழுத்தின் பின்புறமிருந்து
கொப்பூழிலிருந்து
முதுகின் அடியிலிருந்து
சிறுநீரகங்களிலிருந்து
குடலிலிருந்து
கிழித்துவிடுகிறது
நின்றுகொண்டே கிழித்துவிடுகிறது
டோக்கூக்குவில் (Tokuku) வதியும் கொம்பு மூக்கன்
லோவானு மர உச்சியிலே
அவன்[1] முடங்கிக் கிடக்கிறான்
முதுகைப் பிடித்துக்கொண்டு முடங்கியிருக்கிறான்
கைகளைத் தனக்கு முன்னால் பிணைத்துக்கொண்டு முடங்கியிருக்கிறான்
சிறுநீரகங்களின்மேல் கைகளை வைத்துக்கொண்டு முடங்கியிருக்கிறான்
தலைவணங்கியும் அதைக் கைகளால் சுற்றிக்கொண்டும் முடங்கியிருக்கிறான்
இரண்டாக மடித்ததுபோல் முடங்கியிருக்கிறான்
அழுதுகொண்டு, வீறிட்டுக் கதறிக்கொண்டு
அது[2] இங்கிருந்து பறந்து செல்கிறது
வேகமாக அது இங்கிருந்து பறந்து செல்கிறது'

ஒருவன் பிணியால் பீடிக்கப்பட்டவுடன், அந்தப் பிணி ஏவியவனுக்குச் சொல்லியனுப்புகிறான். சாவிலிருந்து தப்பித்துக் கொள்ள இதைவிட வேறு வழியில்லை. அதே சூன்யக்காரனிடம் இருக்கும், அதற்குத் தகுந்த எதிர் வசியத்தினால் மட்டுமேதான் பிணி குறைக்கப்படவோ அல்லது குணப்படுத்தப்படவோ இயலும். சூன்யக்காரன், பிணியை அகற்ற ஒப்புக்கொள்ளச் செய்யப்பட்டால், பிணியால் வாடுபவனை நேரில் வந்து பார்ப்பதில்லை. வியாதிக்காரனுடைய சொந்தக்காரன் ஒருவனால் கொண்டுவரப்பட்ட ஒரு கலயத்தில் உள்ள தண்ணீரில் எதிர் சூன்யத்தை ஏவிவிடுகிறான். அந்தப் பாத்திரத்தை உடனே

1 பலியாகக்கூடியவன். 2 வசியத்தின் பொருள்படாத ஒரு சக்தி.

மூடி எடுத்துச்சென்று, பிணியால் வாடுபவனை அவன் வீட்டி லேயே குளிப்பாட்டுகிறார்கள். எதிர் சூன்யமானது சாவுக்குப் பதிலாக உடல் குறையைமட்டும் உண்டாக்கிவிடும். அந் நாட்டுப் பிணிகள் சாதாரணமாக சாவைவிட உடற் குறைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை இது காட்டுகிறது. சாக்காடு விளைவிக்கக்கூடிய காசநோய் (tuberculosis), அம்மை (measles), சுரம் (இன்புளுயன்ஸா) (influenza), பேதி (dysentery) முதலிய வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட வியாதிகள் ஐம்பது ஆண்டு களாகத் தெரிந்திருந்தும் அவைகளுக்கு உச்சரிப்புகள் இல்லை.

தோபு மக்கள் இந்தப் பிணிக்கான வசியங்களைத் தாராள மாகவும் குறிப்பிட்ட வேலைகளுக்காகவும் பயன்படுத்துகின் றனர். பொருள்கள் மீதோ மரங்களின் மீதோ சொத்துரிமைக் குறிகள்போட அவைகள்மீது அவர்களுடைய உரிமைப் பிணியைக் குறிப்பிடுகிறார்கள். அந் நாட்டு மக்கள் 'அது அலோ வுடைய (Alo's) மரம்' 'அது நடாவுடைய (Nada's) மரம்' என்று சொல்கிறார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட மரத்தை யா (yaw) என்ற வியாதியால் அலோ குறியிட்டிருக்கிறான் என்றும், மற் றொரு மரத்தை நடா என்பவன் பாரிச வாயுவைக் (paralysis) கொண்டு அடையாளமிட்டிருக்கிறான் என்றும் பொருள். பிணி வசியங்களை யார்யார் பெற்றிருக்கிறார்கள் என்று ஒவ்வொருவனும் அறிவான். யாரிடம் அவை உள்ளனவோ, அவர்கள் அதை சொத்துரிமைக் குறிகளாக உபயோகிக்கின்றனர். தன்னுடைய சொந்த மரத்திலிருந்து பழங்கள் சேகரிக்கவேண்டுமென்றால் முதலில் அந்தப் பிணியை அகற்றுவதுதான் ஒரே வழி. பிணியை உண்டாக்கும் வசிய உரிமை பெற்றிருப்பவன்தான் அதை அகற்றும் வசியமும் கொண்டிருப்பதால், மரங்களுக்கு முதலில் ஏற்படுத்தப்பட்ட பிணிகளிலிருந்து காப்பு அளிப்பது எளிதாக முடிகிறது. பிணி வசியம் ஏவப்பட்ட மரத்திலிருந்து திருட்டுப் போவதைத் தடுப்பதுதான் கடினம். ஏனென்றால் அந்த மரத்தின் மீது திருடன் மற்றொரு வசியத்தை வைத்திருப்பான். அந்த மரத்தின்மீது முதலில் இருக்கும் பிணியை அகற்றுவதற்குத் தகுதியில்லாத மற்றொரு பிணி வசியத்தை ஏவுவதால், முதல் பிணி அகன்றிடாமலே இருந்துவிடுவதும் உண்டு. மரத்திலிருந்து பிணியை அகற்றுவதற்காக அப் பிணியின் பெயரைக் குறிப்பிட்டு தனக்குப் பரம்பரையாகக் கிடைத்த பிணி அகற்றும் வசியத்தைப் பயன்படுத்துகிறான். பிறகு தன்னுடைய பரம்பரையிலே வந்த பிணி வசியத்தை ஏவுகிறான். ஆகையினால் மரத்தின் சொந்தக் காரன் பழங்களோடு வேறொரு பிணியையும் அடைகிறான்.

எப்பொழுதும் அவன் பயன்படுத்தும் பிணி அகற்றும் வசியங்கள் (exorcism) பன்மையாகவே இருக்கின்றன

'அவைகள் பறந்து செல்கின்றன
அவைகள் போகின்றன'

என்று அவை அமைந்திருக்கின்றன.

தோபு மக்களிடையே சந்தேகம் என்பது தீவிரமாக வேரூன்றி யிருக்கிறது. எதற்கும் எதிர் வசியம் இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

ஏவப்பட்ட பிணிகளைக் கண்டு அவர்கள் கொண்டுள்ள அச்சம் சிறு திருட்டுகள் நடவாதவண்ணம் தடுக்கிறது. ஆனால், பஞ்சம் ஏற்படும்போது பட்டினி கிடந்து சாவதைவிடத் திருடலாம் என்ற துணிவு ஏற்படுகிறது. சொத்துகளின்மேல் பிணி ஏவப்பட்டிருந்தால் அதைக்கண்டு மிகவும் அச்சப்படு கிறார்கள். கிராமத்திற்குப் புறத்தே உள்ள மரங்கள்மீதுதான் பிணிகள் ஏவப்படுகின்றன. கிராமத்தின் உள்ளே உள்ள மரங்கள் மீது பிணியை ஏவினால் அவை கிராமத்தையே அழித்துவிடும். பிணி ஏவப்பட்டதைத் தெரியப்படுத்தும் ஒரு உலர்ந்த தென்னை மட்டை ஒரு மரத்தின்மீது கட்டப்பட்டிருந்தால் அதை விட்டு விலகிச் செல்கின்றனர். கங்கோஸா (gangosa) என்ற பிணியின் வசியம் கற்றுக்கொடுக்கப்படுமுன்பே டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) ஒரு பழக்கமில்லாத கிராமத்திலே வைத்துச் செல்ல வேண்டிய தன்னுடைய சாமான்களின்மீது உலர்ந்த தென்னை மட்டையை வைத்துச் சென்றார். அதைக்கண்டு அந்த வீட்டுப் பையன்கள் இரவிலேயே கண்காணாமல் ஓடிவிட்டனர். இந்த இடத்தைச்சுற்றி ஓர் ஐம்பது அல்லது நூறு கெஜத்திற்குள் வசிக்கும் குடும்பங்கள் எல்லாம், தங்கள் வீடுகளை விட்டுவிட்டு மலைகளின்மீதுள்ள தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர் என்று பிறகு தெரிந்துகொண்டார். எல்லோருக்கும் தெரிந்த சில குறிப் பிட்ட பிணிகளை உண்டாக்கும் வசியங்களோடு, பிணி உண் டாக்கும் சக்தி நின்றுவிடுவதில்லை. 'வத' (vada) என்ற ஒரு தீவிர முறையைச் சில வலிமையுள்ள சூன்யக்காரர்கள் (sorcerers) (அதாவது எல்லா ஆடவர்களும் சூன்யக்காரர்களாக இருப்பதால், சில வலிமைமிக்க ஆடவர்கள் என்றுகூடக் கொள்ளலாம்) பெற்றி ருக்கின்றனர். அவர்கள் பலியாகக்கூடியவனை நேரிலேயே சந்திக்கலாம். பலியாகக்கூடியவன் நடுநடுங்கிக் கீழேவிழுந்து துடிக்கிறான். அந்த அளவுக்கு அவன் சாபத்தைக்கண்டு பயப் படுகிறான். அவன் மறுபடியும் தன் சுயநினைவு பெறாமலேயே சிறிதுசிறிதாக வாடி, முடிவாக மரணமடைகிறான். இத்தகைய

சாபத்தை இட நினைப்பவன் தக்க தருணம் கிடைக்கும்வரை பொறுத்திருக்கிறான். நேரம் நெருங்கியவுடன் சாபம் சரியான வேகத்துடன் வேலைசெய்யவேண்டி அதிகமான அளவு இஞ்சியை மென்று தன் உடம்பை சூடு ஏற்படுத்திக்கொள்கிறான். பெண் சேர்க்கையைத் (புணர்ச்சி) தவிர்க்கிறான். தன்னுடைய சாபத்தைத் (வசியத்தை) தானே உமிழ்நீரோடு உட்கொள்ளாமலிருக்க அதிக அளவு கடல்நீரைக் குடித்துத் தன் தொண்டையை வரண்டுபோகச் செய்கிறான். அப்பாவியான (இதைச்சற்றும் எதிர்பாராத) பலியாகக் கூடியவன் எங்கே தனித்து ஒரு தோட்டத்தில் வேலை செய்கிறானே அங்கு அருகிலுள்ள மரத்தின்மேல் ஏறுவதற்காக, நம்பத்தகுந்த உறவினன் ஒருவனை, எச்சரிக்கை செய்வதற்காக, உடன் சேர்த்துக்கொள்கிறான். இருவரும் தங்களை மாயாஜால முறைகளால் கண்களுக்குப் புலப்படாவண்ணம் செய்துகொள்கின்றனர். யாராவது கிட்டே நெருங்கி வந்தால், எச்சரிக்கை செய்வதற்காகக் கண்காணிப்பவன் மரத்தின்மீதேறி அமர்ந்துகொள்கிறான். பலியாகக்கூடியவனை நேருக்குநேர் சந்திக்கும்வரை சூன்யக்காரன் மெதுவாகச் சத்தம் செய்யாமல் நகர்ந்து வருகிறான். சந்தித்தவுடன் சூன்யக்காரன் இரத்தம் உறையுமளவுக்கு வீறிட்டுக்கத்துகிறான். உடனே பலியாகக்கூடியவன் தரையிலே விழுந்துவிடுகிறான். சூன்யம் ஏவப்பட்ட ஒரு சுண்ணாம்புக் கரண்டியால் அவனுடைய அவயவங்களை, வெளியே எடுத்துவிட்டு, அந்த அடையாளங்கள் தெரியாதபடி மூடிவிடுகிறான் என்று அவர்கள் சொல்கிறார்கள். மூன்றுமுறை 'என்னைத் தெரிகிறதா' என்று கேட்டு பலியானவனைச் சோதனை செய்கிறான். அவன் யாருடைய பெயரையும் சொல்லவோ, யாரையும் அறிந்துகொள்ளவோ முடியவில்லை என்றால் அது சூன்யக்காரனின் வெற்றிக்கு அறிகுறியாகும். அர்த்தமில்லாத சில வார்த்தைகளை முணுமுணுத்துக்கொண்டு பாதைவழியே பிதற்றிக்கொண்டு ஓடுகிறான். பிறகு அவன் உண வருந்துவதேயில்லை. மலம், சிறுநீர் ஆகியவைகளை அவனால் அடக்கமுடிவதில்லை. அவன் வலியிழந்து இறந்துவிடுகிறான்.

நன்றாகத் தெரிந்த, நம்பத்தகுந்த, அந்த ஊர்க்காரர்கள் ஒருவனால் மேற்கண்ட விவரம் சொல்லப்பட்டது. சூன்யக்காரனைச் சந்தித்ததிலிருந்து, சாவுக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் நபர்களைக் காணும்போது, இதில் அந் நாட்டவர் எவ்வளவுதூரம் நம்புகிறார்கள் என்பது விளங்கும். தோபு மக்கள் பழக்கத்திலுள்ள கொடூரத்தன்மையிலும் அவைகளால் ஏற்படக்கூடிய பலன்களைத் தர ஏதுவாகும் அச்சத்தையும் தீவிரமாக 'வத' (vada) என்ற முறை வற்புறுத்துகிறது.

தோபு மக்களின் பொருளாதாரப் பண்டமாற்றுகளைப்பற்றி இதுவரை நாம் சொல்லவில்லை. ஒருவர்க்கொருவர் எல்லையில்லாது மாறிமாறி வணிக முறையிலே பரிமாறிக்கொள்வது மலேனீஷியாவில் (Melanesia) உள்ளதுபோல் தோபு மக்களிடையேயும் உள்ளது. ஆண் பெண் உறவிலும், பண்டங்களைச் சொந்தமாகக்கொள்வதிலுமான இரண்டு துறைகளிலும் தோபு மக்கள் தீவிர ஆசைகொண்டிருக்கின்றனர். சூன்யம் வைத்தலை மற்றொரு துறையாகக்கொண்டிருந்தாலும் அது முதலிலே சொல்லப்பட்டவைகளை அடைய வேண்டிப் பயன்படுத்தப்படும் சாதனமாகக் கொள்ளப்படுகிறது.

நமது நாகரிகத்திலே நாம் காணும் பொருளாதார இலக்குகளைப் போலன்றி, சந்தேகமும் துரோகமும் நிறைந்த தோபு மக்களின் சமுதாயத்திலே, பொருளாதார வெற்றியென்பது பல முரண்பாடுகளை ஏற்படுத்துகிறது. சாமான்களைச் சேர்த்துவைத்தல் என்பது முதலிலேயே விலக்கப்படுகிறது. பிறரால் பார்க்கப்பட்டு, ஆனால் ஒப்புக்கொள்ளப்படாத, வெற்றிகரமான அறுவடை, சாவை ஏற்படுத்தக்கூடிய சூன்யம் வைத்தலுக்கு ஏதுவாகிறது. வெளிப்பகட்டாகக் காட்சியணி (display) செய்வதும் ஒதுக்கப்படுகிறது. ஒருவனிடமும் நிலையாகத் தங்கியிராத, ஆனால் ஒவ்வொருவன் கையிலிருந்தும் மாறிமாறிச் செல்கிற எண்ணக்கூடிய அடையாளங்களைப் (counters) பயன்படுத்தும் முறைதான் ஒரு சிறந்த வாணிப முறையாகும். அந்த முறைதான் தோபு மக்களிடையே கையாளப்படுகிறது. சுமார் ஒரு நூற்றைம்பது மைல் விட்டமுள்ள வட்டத்திற்குள்ளே அமைந்திருக்கும் தீவுகளிடையே நடக்கும் பண்டமாற்றுதான் இங்கே வாழ்க்கையின் முக்கிய வாணிபமாகும். டாக்டர் மாலினேவ்ஸ்கி (Malinowski) விவரித்துள்ளபடி தோபு மக்களின் வடக்கேயுள்ள பங்காளிகளான ட்ரோபிரியாண்ட் (Trobriand) மக்களுடையதைப்போல, இந்தத் தீவுகள் ஒரு குலா வட்டத்தைக் (Kula ring) கொண்டிருக்கின்றன.

தோபு மக்களின் பண்பாட்டு நிலைகளையும் தாண்டி குலா வட்டம் அமைந்திருக்கிறது. அதில் பங்குகொள்ளும் மற்றப் பண்பாடுகளெல்லாம் அதனுடைய செய்முறைகளுக்கு வேறுபல நோக்கங்களையும், திருப்திகளையும் அளித்திருக்கின்றன. குலாவட்டத்திலே தோபு மக்கள் பண்பாட்டோடு ஒன்றிவிட்ட சில விநோத வழக்கங்கள் அவர்கள் பண்பாட்டிலிருந்தோ அல்லது தற்போது அவர்கள் வாழ்க்கையிலுள்ள குறிக்கோள்களாலோ ஏற்பட்டவை அல்ல. தோபு மக்களின் பண்டமாற்று ஒன்றைமட்டும் கவனிப்போம். ட்ரோபிரியாண்ட் (Trobriand) மக்களையன்றி வேறு தீவுகளுடைய குலா வழக்கங்களைப்பற்றி நமக்குத் தெரியாது.

அரை ஆண்டுக்கொருமுறை மதிப்புள்ள ஒரு பண்டம் ஒரு திசையிலேயும், வேறொன்று எதிர் திசையிலேயும் சுற்றிவரும் பண்டமாற்று வணிகம்கொண்ட பல தீவுகளைக்கொண்டதே குலா வட்டமாகும். சங்குகளினாலான கழுத்தணிகளை (shell necklace) எடுத்துக்கொண்டு வலச் சுழியாகவும், சங்குகளினாலான போர்க் கருவிகளை (armshells) எடுத்துக்கொண்டு இடச் சுழியாகவும், தோபு ஆடவர், பரந்த கடலில் நீண்டதூரம் பிரயாணஞ் செய்கின்றனர். ஒவ்வொரு தீவிலேயும் பண்டமாற்றுச் செய்ய ஒவ்வொருவனுக்கும் கூட்டாளி உண்டு. அவனோடு தனக்குத் தெரிந்த முறைகளையெல்லாம் கையாண்டு பயன்தரத்தக்க வியாபாரம் செய்கிறான். இறுதியாக இத்தகைய மதிப்புப் பண்டங்கள் முழுவதும் சுற்றி வந்துவிடும். பல புதிய பொருள்கள் சேர்க்கப்படலாம். சங்குகளினாலான போர்க்கருவிகளுக்கும், கழுத்தணிகளுக்கும் தனித்தனிப் பெயர்கள் இடப்படுகின்றன. சில பொருள்களுக்கு அவைகளுக்கேற்பட்ட புகழுக்குத் தகுந்தாற்போல் மதிப்பும் அதிகரிக்கிறது.

செய்முறை வகையிலே தோன்றுகிறமாதிரி இந்த விஷயம் அவ்வளவு விசித்திரமானதல்ல. மலேனீஷியா (Melanesia) பாபுவா (Papua) இவைகளின் பெரும்பகுதிகள் தொழில்களிலே ஆங்காங்கு சிறப்புற்று விளங்குகின்றன. குலா வட்டத்திலே சிலர் பச்சைக் கற்களுக்கு மெருகேற்றுகின்றனர். சிலர் படகு கட்டுகிறார்கள். மற்றும் சிலர் மண்பாண்டங்கள் செய்கின்றனர், இன்னும் சிலர் மரங்களைச் செதுக்குகிறார்கள். வேறுசிலர் வண்ணங்களைக் குழைக்கிறார்கள். மிக அதிக மதிப்புற்ற பொருள்களை வியாபாரம் செய்கின்ற போர்வையிலே இந்தப் பொருள்கள் மாற்றிக்கொள்ளப்படுகின்றன. ஒருவர்க்கொருவர் பண்டங்களைப் பரிமாறிக் கொள்வதில் தீவிரம் அதிகமாக வளர்ந்துள்ள பிரதேசத்திலே, குலா வட்டத்தில் கொண்டாட்டங்களோடுகூடிய பண்டமாற்று வெளிப் பார்வையாளருக்கு, அதுவும் இந்தமாதிரி ஏற்பாடு இல்லாதவர்களுக்கு அதிதீவிரமாகத் தோன்றலாம். சங்குகளினாலான போர்க் கருவிகளையும், கழுத்தணிகளையும் மாற்றுகின்றவிதம் மனம்போன வழியே நடப்பதாகத் தோன்றினாலும் அவை சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். குலா வட்டத்தின் வடக்குப் பகுதியிலே கிடைக்கின்ற ட்ரோகாஸ் (trocus) என்ற ஒருவகை சங்கினால் போர்க்கருவிகள் செய்யப்படுகின்றன. தெற்கேயிருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்பான்டைலஸ் (spondylus) என்ற சங்கிலிருந்து தென்பகுதியில் கழுத்தணிகள் செய்யப்படுகின்றன. கிழக்கைவிட வட்டத்தின் மேற்குப் பகுதியிலே நிறைந்திருக்கிற தீவுகளில் வியாபாரம் செய்யும்

பொழுது, வடக்கிலுள்ள மதிப்புயர்ந்த பொருள்கள் தெற்கேயும், தெற்கிலுள்ள மதிப்புயர்ந்த பொருள்கள் வடக்கேயும் செல்கின்றன. தற்போது அந்தப் பொருள்கள் தொன்மையோடு மரபு வழியே இருப்பனவாயும், முக்கியத்துவம் குறைந்தனவாயும் உள்ளன. ஆனால், அதேமுறை இருந்துவருகிறது.

ஒவ்வொரு ஆண்டும், கிழங்குகள் நடப்பட்ட பிறகு, அவைகளை மாயாஜால உச்சரிப்புகள் செய்து தோட்டத்திலேயே தங்கவைக்கவேண்டிய காலம்வரை, தோட்டவேலைகளில் ஏற்படுகின்ற மந்த நிலையிலே தோர்புப் படகுகள் வடக்கேயும் தெற்கேயும் குலா யாத்திரைகள் கிளம்பிவிடுகின்றன. வடக்கேயிருந்து பெற வேண்டிய மதிப்புயர்ந்த பொருள்களுக்கு மாற்றுப் பண்டமாகக் கொடுப்பதென்று உறுதி சொல்வதற்காக ஒவ்வொருவனும் தெற்கிலிருந்து கிடைக்கிற மதிப்புயர்ந்த பண்டங்களைப் பெற்றிருக்கிறான்.

குலா பண்டமாற்று முறையிலே உள்ள தனித்தன்மை என்னவென்றால் ஒரு தீவிலுள்ளவர் மதிப்புயர்ந்த பொருள்களைப் பெறுவதற்கு அவர்கள் கூட்டாளிகள் உள்ள தீவுகளுக்கே செல்கின்றனர். தங்களிடமுள்ள மதிப்புயர்ந்த பொருள்களை அவர்கள் மறுபடியும் வரும்போது தருவதாக உறுதி கூறிவிட்டு, ஒரு தீவிலுள்ளவர், வேறு தீவுக்குப் பரிசுகளை எடுத்துச்சென்று, மன்றாடி, அங்குள்ள மதிப்புயர்ந்தவைகளைப் பெறுகிறார்கள். குலா பண்டமாற்றானது, சாதாரணமாகக் கடைகளில் நடக்கும் முறைபோலன்றி, ஒருவன் தன்னிடமுள்ள மதிப்புயர்ந்த பொருள்களை நெடுகிலும் பகிர்ந்தளித்துவிட்டு, அவைகளுக்குத் தகுந்த ஒப்புக்கொள்ளக் கூடியவைகளை ஈடாகப்பெற ஏற்பாடு செய்துவிட்டு வந்துவிடுகிறான். தகுந்த சமயத்திலே தன்னிடமுள்ள, ஆனால் தன்னுடன் கொண்டு வராத விலைமதிப்புயர்ந்த பொருளைத் தருவதாக அளிக்கும் உறுதிமொழியாலும், எடுத்துச் செல்கிற பரிசுப் பொருள்களாலும் ஒருவன் தன்னுடைய பரிசைப் பெறுகிறான்.

குலா என்பது கூட்டமாகச் செய்யும் பண்டமாற்றல்ல. தனி ஒருவனிடம், மற்றொருவன் எல்லா வகைகளிலும் உறவாடி செய்து கொள்ளும் பண்டமாற்றாகும். குலா முறையிலே வெற்றிபெற இருக்கும் வசியங்கள் அன்பு வசியங்களாகும். மனுதார் ஒருவருடைய தேவையைக் கூட்டாளி செய்துகொடுக்க அவனை மாயாஜால முறைப்படி வசியப்படுத்துகின்றனர். தைலங்களாலும், வாசனைத்திரவியங்களாலும் வாசனையூட்டுகிறார்கள். வாயைச் சிவப்பாக்கிக் கொள்கிறார்கள். அவன் தோலிலுள்ள படர்தாமரை (ringworm) போன்ற நோயினால் ஏற்பட்ட வடுக்களைச் சுத்தம்

செய்து தோலை வழவழப்பாகச் செய்துகொள்கின்றனர். இம் மாதிரிச் செய்கைகளால் மனுதாரனைக் கவர்ச்சியுள்ளவனுகச் செய் கின்றனர். தோபு மக்களிடையே இருக்கின்ற அதீதமான கொள் கைகளின்படி, உடற் காமத்தைப்போன்ற ஒன்றுதான், மதிப் புயர்ந்த பொருள்களைப் பரிமாறிக் கொள்வதிலே அமைதியாகவும், சிறப்பாகவும் விளங்கும்.

படகிலே செல்லவேண்டிய ஆடவர், தயார் செய்யப்பட்ட பொருள்களையும், உணவுப் பரிசுகளையும், ஒன்ருகச் சேர்க் கின்றனர். படகிலே செல்வதற்கு முன்னுல் படகின் சொந்தக் காரனும் அவன் மனைவியும் மட்டுமே மாயாஜால உச்சரிப்புகளைச் செய்திருக்கின்றனர். குலா, நடக்கத் தொடங்கும்வரை மற்ற மாயாஜால முறைகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. படகின் சொந்தக்காரன் அதிகாலையில் எழுந்திருந்து, படகிலே திரும்பி வரும்போது சாமான்களை மூட உபயோகமாகும் பாயை, அது அதிகச்செல்வத்தை மூடி எடுத்துவர வேண்டுமென்று மாயாஜால முறைப்படி வசியம் செய்கிருன். அவனுடைய மனைவியும் அவள் உபயோகிக்க ஒரு வசியம் வைத்திருக்கிருள். அதன்மூலம் தன் கணவனது பயணம் சிறந்து விளங்கவேண்டுமென்றும் கடலின் மேல் இடியைப்போன்று அவன் திரும்பி வரமேண்டுமென்றும் விரும்புகிருள். மற்றும் தன் கணவனேடு வியாபாரம் செய்யும் கூட்டாளியும், அவனது மனைவி மக்களும் தன் கணவனைப் பற்றியே கனவு காணவேண்டுமென்றும், கூட்டாளி வியா பாரத்தில் ஊக்கமாக ஈடுபடவேண்டுமென்றும் விரும்புகிருள். எல்லா ஏற்பாடுகளும் முடிந்தவுடன், என்னதான் காற்று உதவி யாக இருந்தாலும், அன்றைய பொழுதை அவர்கள் வேருெரு இடத்திலே தங்கிக் கழிக்கவேண்டுமென்று ஒரு சடங்கு உள்ளது. பெண்கள், குழந்தைகள், நாய்கள் மற்றும் அன்ருட நட வடிக்கைகள் சம்பந்தமில்லாத மனிதன் குடியேருத தனித்த ஒரு கடற்கரையிலேதான் இந்தச் சடங்கு நடக்கவேண்டும். தெற்கே அந்த மாதிரித் தீவு எதுவும் இல்லாததால் தெற்கே செல்ல வேண்டிய படகுகள், கடற்கரையிலேயே அச்சடங்கை முடிக் கின்றனர். இரவிலே, உண்மைக்கும் புறம்பாக இருந்தாலுங்கூட, அவர்கள் காற்று சரியில்லை எனச் சொல்லி கிராமத்திற்குள்ளே சென்று விடுகின்றனர். சடங்குக்காக ஏற்படும் இந்த சந்தேகப் படும் வழக்கம் தவறவிடப்படுவதேயில்லை. சமூகத்திற்குப் பொதுப்படையாக உள்ள தன்னுடைய இரண்டாவது வசியத் தைப் பயன்படுத்தி, மறுநாள் காலை படகின் சொந்தக்காரன் படகை நிறைக்கிருன். இதில் கூடத் தன் மனைவி முன்னுல் உப யோகித்த வசியத்தைப் போல, தன்னையே சிறந்தவனுகக் குறிப்

பிட்டுக் கொள்கிறான். அவன் அன்பளிப்பாக எடுத்துச் செல்லும் உணவுப் பொருள்களைக் குலா முறையிலே மதிப்புயர்ந்த பொருள் களாகவே மாயாஜால முறைப்படி மாற்றிவிடுகிறான். அவை எந்தக் கூட்டாளிகளிடத்திலே சேரவேண்டுமோ, அவர்களை அமாவாசைக்குக் காத்திருப்பதுபோல அவர்களுடைய வருகைக் காகக் காத்திருப்பவர்களாகவும், அவர்கள் வீட்டு மேடையின் ஓரத்திலே அவர்களுக்காகக் காத்திருப்பவர்போலவும், படகின் சொந்தக்காரனுக்காகவே காத்திருப்பவர்போலவும் வர்ணிக் கிறார்கள்.

தோபு மக்கள் சிறந்த மாலுமிகளல்ல. ஒவ்வொரு இரவும் அவர்கள் பவழப் பாறைகளில் இறங்கிவிடுகிறார்கள். நீண்ட அமைதிக்காலங்களில்தான் குலாப் பயணம் மேற்கொள்ளப் படு கிறது. அவர்கள் பல காற்று வசியங்களைப் பயன்படுத்துகின் றனர். அவர்களுக்குத் தேவைப்படுகிற வடமேற்குக் காற்றைப் பார்த்து, தாழை இலைகளான அவர்களுடைய நல்ல கப்பற்பாய் களை (sail) மணம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர். மேலும் அவளுடைய கணவனை வேறொருவர் திருடிப் போகாமல் தடுக்கவும், தவறு செய்யும் அவளுடைய குழந்தையை அணைக்க வும், (காற்றைப் பெண்பாலாகக் கொண்டு) வேண்டிக்கொள் கின்றனர். (கணவன் குழந்தை என்ற சொற்கள் கப்பற் பாயைக் குறிக்கின்றன.) வாழ்க்கையிலே உள்ள எல்லாச் சம்பவங்களையும் போலவே காற்றையும் மாயாஜாலத்திலிருந்தே உண்டானதாக நம்புகிறார்கள்.

பெயர்பெற்ற குலாவுக்கான முன்சடங்குகளைச் செய்வதற் காக, படகுகள் போய்ச் சேரவேண்டிய தீவுகளை அடைந்ததும், ஒரு பவழப் பாறையைத் (coral reef) தேர்ந்தெடுத்து இறங்குகிறார் கள். ஒவ்வொருவனும் தன்னுடலை, அலங்காரம் செய்து கொள்வ தாலும், மாயாஜாலங்களாலும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு அழகுபடுத்திக்கொள்கிறான். தோபு முறைப்படி இதற்கான மாயாஜால உச்சரிப்புகள் ஒவ்வொருவனுடைய தனிச் சொத்தாக இருப்பதால், ஒவ்வொருவனும் அதைத் தன் சுயதேவைக்கு மட்டுமே பயன்படுத்துகிறான். இந்த மாதிரி உச்சரிப்புகள் தெரி யாதவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இவைகளுக்கு ஈடாக வேறெந்த வசியங்களாவது தங்களுக்குத் தெரிந்திருந்தால் அதை வைத்துக் கொண்டு சமாளிக்கிறார்கள். நாம் கண்டவரையில், பெரிய குலா பண்டமாற்றுச் செய்பவர்கள்தான் இந்த வசியங்களை அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஒரே படகுக்குள்ளே இருப்பவர் கள்கூட அவர்களுக்குள்ளே யாரிடம் வசியமிருக்கிறது என்பதை

அறியமுடியாதவண்ணம் அது காப்பாற்றப்படுகிறது. என்னதான் இந்த வசியங்கள் மிகவும் இரகசியமாக வைத்திருக்கப்பட்டாலும் இந்த விபரம் தெரிந்துவிடுகிறது. அவர்களிடம் உள்ள தன்னம்பிக்கை அவர்கள்கூட இருப்பவர்கள்மீது ஒருவித சிறந்த உரிமையைக் கொடுக்கிறது. வசியங்களைத் தெரிந்தவராயினும் சரி, தெரிந்திராதவராயினும் சரி, குலாவுக்காக ஒரேவிதமான முயற்சிகள் எடுத்துக்கொள்கின்றனர். காதல்செய்யும்போது பயன்படுத்துகிற மணமுள்ள இலைகளைக்கொண்டு தங்களை வாசனையூட்டிக்கொள்கிறார்கள். இடையிலே உடுக்க, புதிய அரசிலையை (pubic leaf) உபயோகிக்கிறார்கள். பற்களையும் முகத்தையும் வண்ணமூட்டிக் கொள்கிறார்கள். தேங்காயெண்ணெயை உடல் முழுவதும் பூசிக்கொள்கிறார்கள். கூட்டாளிகளின் முன்னால் செல்வதற்கு அப்போதுதான் அவர்கள் தகுதியடைகிறார்கள்.

ஒவ்வொருவனுடைய விவகாரங்களும் தனிப்பட்ட வியாபாரமாக நடத்தப்படுகிறது. கூர்மையான அறிவோடு செய்யப்படும் வியாபாரம் மதிக்கப்படுகிறது. ஒருவனுடைய இடத்தைச் சார்ந்தவனே அல்லது ஒருவனுடைய படகைச் சேர்ந்தவனே வியாபாரத்தில் வெற்றியடையாவிட்டால், அவனால் வெற்றியுடன் குலா வியாபாரம் நடத்தியவன் உயிர் அச்சுறுத்தப்படுகிறது. வெளிநாட்டாரால் அம்மாதிரி செய்யப்படுவதில்லை. ஹோமர் (Homer) கூறியதுபோல் 'அவைகளினாலேயே பலர் இறந்தனர்' என்று குலாவிலே மதிப்புயர்ந்த பொருள்களைப்பற்றிச் சொல்லலாம். தோபுக் குடிமகனுக்கும், ட்ரோபிரியாண்ட் குடிமகனுக்கும் இடையேயோ, அல்லது தோபுக் குடிமகனுக்கும் ட்யூபெட்யூபெ (Tubetube) குடிமகனுக்குமிடையேயோ நடக்கும் வியாபாரத்தில் கோபப்பட்ட கூட்டாளியினால் என்றும் சாவு நிகழ்வதில்லை; தோல்வியடைந்த ஒரு தோபுக் குடிமகனால் அதே இடத்தைச் சார்ந்த வெற்றிபெற்ற தோபுக் குடிமகனுக்கு ஏற்படுவதாகும்.

வாபுவாபு (wabuwabu) என்ற ஒருவகை வியாபார முறையிலேதான் துரோக எண்ணங்கள் உருவாகின்றன. 'வடக்கே, தன்வீட்டில் வைத்துவிட்டுவந்திருக்கும் சங்காலான போர்க் கருவி ஒன்றை ஈடாகக் காட்டி தெற்கிலுள்ள பல இடங்களில் ஸ்பான்டைலஸ் (spondylus) என்ற சங்குகளினாலான பல கழுத்தணிகளைப் பெறுவதுதான் வாபுவாபு எனப்படும். இது வேறு மாதிரியாகவும் நிகழலாம். அதாவது வியாபாரம் செய்யச் செல்லும் பலரிடம், தன்னிடம் உள்ள ஒரே ஒரு மதிப்புக்குரிய பொருளை, சரிசெய்யமுடியாத ஈடாகக் காட்டி, உறுதிமொழிகூறி, வடக்கிலிருந்து பல சங்காலான போர்க்கருவிகளைப் பெறுவதும்

உண்டு. இது நம்பிக்கைத் துரோகமானது; ஆனால், அறிவுக் கூர்மையுடன் செய்யப்படும் ஒன்றாகும். 'உதாரணமாக தேவாரா தீவிலுள்ள (Tewara) கிஸியன் (Kisian) என்ற பெயருடைய நான், ட்ரோபிரியாண்ட் தீவுகளுக்குச் சென்று, அங்கே மானிட்டர் லிஸார்ட் (Monitor Lizard) என்ற பெயருள்ள சங்காலான போர்க்கருவி ஒன்றைப் பெறுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். பிறகு நான் ஸானரோவா (Sanaroa) தீவிற்குச் சென்று,அங்கு நாலு வெவ்வேறான கிராமங்களில், என்னிடமுள்ள மானிட்டர் லிஸார்டை பிறகு ஈடாகத் தருவதாகச் சொல்லி, தனித்தனி நபரிடம் நாலு சங்காலான கழுத்தணிகளைப் பெற்றுக் கொள்கிறேன். 'கிஸியன்' என்று பெயர்கொண்ட நான், என்னுடைய உறுதிமொழிகளில் குறிப்பாக ஒன்றும் சொல்லவேண்டாம். பிறகு தேவாரா (Tewara) தீவிலுள்ள என் வீட்டிற்கு மானிட்டர் லிஸார்டை எதிர்பார்த்து வரும் நால்வரில் ஒருவன் தான் அதைப்பெற முடியும். ஆனாலும், மற்ற மூவரும் நிரந்தரமாக ஏமாற்றப்படுவதில்லை. அவர்களுக்கு மிகக் கோபமேற்படுவது இயற்கை. ஏனென்றால், மற்றொரு ஆண்டுக்கு அவர்கள் வியாபாரம் நிறுத்திவைக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு, கிஸியன் என்ற நான், ட்ரோபிரியாண்ட் தீவுகளுக்குச் செல்லும்போது என்னிடம் நான்கு கழுத்தணிகள், யார் எனக்கு நான்கு சங்காலான போர்க்கருவிகள் தருகிறார்களோ அவர்களுக்காக, என் வீட்டிலே காத்திருக்கின்றன என்று சொல்லமுடியும். நான் முன்னடைந்ததைவிட அதிகமாகச் சங்காலான போர்க்கருவிகளையடைந்து என்னுடைய கடன்களை ஓராண்டு கடந்து தீர்க்கமுடிகிறது.'

'என்னுடைய இடமான தேவாரா (Tewara) தீவிலே, மானிட்டர் லிஸார்ட் (Monitor Lizard) கிடைக்கப்பெறாத மற்ற மூவரும் ஒன்றும் செய்ய இயலாதவராயிருக்கின்றனர். பிறகு அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றதும் என்னிடமிருந்து அதிக தொலைவில் இருப்பதால் எனக்கு எந்தவித அபாயமும் ஏற்படாது. மானிட்டர் லிஸார்ட் (Monitor Lizard) பெற்றுக் கொண்டு வெற்றிபெற்ற அவர்களுடைய போட்டிக்காரனைக் கொல்வதற்கு அவர்கள் சூன்யங்களை உபயோகிக்கக்கூடும். இது உண்மைதான். ஆனால், அது அவர்கள் சொந்த விஷயம். ஓராண்டுக்கு அவர்களுடைய வியாபாரத்தைத் தடைசெய்து என்னுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்ட நான் ஒரு பெரிய மனிதனாக மதிக்கப்படுகிறேன். நீண்ட காலத்திற்கு அவர்களுடைய வியாபாரத்தைத் தடைசெய்ய என்னால் இயலாது. ஏனென்றால், பிறகு என்னுடைய பண்டமாற்றுக்களை எவனும்

நம்பமாட்டான். இறுதியிலே நான் நாணயமுடையவனுகவே இருக்கிறேன்.'

தோபு மக்களிடையே நல்லமுறையிலே வாபுவாபு நடத்திஞல் அது ஒரு பெரிய வெற்றியாகவும், பொருமைப்படத்தக்க ஒன்ருகவும் எண்ணப்படுகிறது. குலாவின் புராண புருஷன் (mythical hero) அதிலே ஒரு வல்லவனுக இருந்தான். எல்லா தோபுப் பழக்கங்களைப்போலவே இதுவும் ஒருவனுடைய நஷ்டத்திஞல் மற்ருெருவன் பயனடைதலை வலியுறுத்துகிறது. பலர் கஷ்டப்படும்போது அந்த நிலையைப் பயன்படுத்தி ஒருவன் தனக்குப் பயனை அடைந்துகொள்வதை இது அனுமதிக்கிறது. குலா ஒன்றில் மட்டும் இந்த வாபுவாபுப் பழக்கம் நடப்பதில்லை. திருமணச் சடங்கில் உள்ள பண்டமாற்றுக்களின்போதும் பிறரைத் துயருறுத்துவதும் ஒருவித வாபுவாபுப் பழக்கமே. திருமண ஏற்பாடுகள் செய்யப்படும்போது இரண்டு கிராமங்களுக்கிடையே நடக்கவேண்டிய வரிசையான பண்டமாற்றுக்கள், அதிகச் சொத்துக்களைக் கொண்டதாகும். பொருளாதார இலாபங்களுக்காக ஒருவன் துணிந்து திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளலாம். பண்டமாற்றுக்களின்போது தன் பக்கம் அதிகமாகச் சேர்ந்த உடனே மண ஏற்பாட்டை அவன் முறித்துவிடலாம். இதை ஈடுசெய்ய வேறுவழியே இல்லை. எந்த கிராமத்தை இப்படி ஏமாற்றுகிருனே அந்த கிராமத்தாரின் மாயாஜால சக்திகளைக்காட்டிலும் தன்னுடைய மாயாஜாலங்கள் வலிமை மிக்கன என்று அவன் நிரூபிக்கிருன். ஆனுல், ஏமாற்றப்பட்ட கிராமம் அவனுடைய உயிரைப் பழிவாங்க முயலலாம். அவன் பொருமைப்படத்தக்க ஒருவனுகிருன்.

ஓர் இடத்திற்குள்ளேயே பண்டமாற்றுக்கள் நடப்பதால் பின் சொல்லப்பட்ட இந்த வாபுவாபுப் பழக்கம் குலாவில் நடப்பதைக் காட்டிலும் வேறுபட்டது. குலாவிலே, ஒரே படகில் வியாபாரம் செய்வதற்காக ஒன்றுசேர்ந்தவர்களிடையே விரோதம் ஏற்படுத்துவது போலன்றி, இது ஒரே கூட்டத்தினரிடையே சொந்தக்காரர்களிடத்திலே விரோதத்தை ஏற்படுத்துகிறது. இரண்டுக்கும் பொதுவாக உள்ள ஒற்றுமை என்னவென்ருல், இரண்டிலும் ஒருவன் ஏமாற்றப்பட்டு மற்றவன் பயனடைகிருன்.

நாம் இதுவரை பார்த்த ஈடுபாடுகள், மற்றும் திருமணம், மாயாஜாலங்கள், தோட்டமிடுதல், பொருளாதாரப் பண்டமாற்றுக்கள் ஆகியவைபோன்ற செயல்களிலே உள்ள ஈடுபாடுகள் எல்லாம் சாவின்போது தீவிரமாக வெளிப்படுகின்றன. டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) வார்த்தைகளிலே, தோபு 'சாட்டையால்

அடிக்கப்படும்போது எப்படி அஞ்சுகிறுனே அப்படி மரணத்தைக் கண்டு அஞ்சிப் பதுங்குகிறுன்'. உடனேயே பலியாகக்கூடிய வனைத் தேடுகிறுன். தோபுக் கொள்கைப்படி இறந்தவனுக்கு நெருங்கிய ஒருவன்தான் பலியாகக்கூடியவன்; அதாவது எஞ்சியுள்ள மனைவியோ கணவனேதான். எவர் மற்றொருவரின் படுக்கையிலே பங்குகொள்கிறுர்களோ அவர்கள்தான் சாக்காடு விளைவிக்கக்கூடிய நோயால் பீடிக்கப்படத் தகுதியுள்ளவர் என நம்புகிறுர்கள். கணவன் பிணி உண்டாக்கும் வசியங்களைப் பயன்படுத்தியிருக்கிறுன். மனைவி சூன்ய வித்தையைப் பயன்படுத்தியிருக்கிறுள். பெண்களுக்குப் பிணி உண்டாக்கும் வசியங்கள் தெரிந்திருந்தாலும் அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட சக்தி உண்டென்று ஆடவர் கருதுகின்றனர். சாதாரண உரையாடல்களிலிருந்து பெண்கள்தான் சாவிற்கும் பஞ்சத்திற்கும் காரணம் எனத் தெரியவருகிறது. காரணம் கண்டுபிடிப்பவனை அழைத்து கொலையாளியைக் கண்டுபிடிக்கச் செய்தால், அவன் இந்த மரபு ஒழுங்கில் (convention) கட்டுப்படாமல் ஆணென்றும் பெண்ணென்றும் கவனியாது சாவிற்குக் காரணமான ஒருவரைச் சுட்டிக்காட்டுகிறுன். கொலைசெய்ய முயன்றதைக்காட்டிலும் இது அவர்களிடையே உள்ள (sex antagonism) ஆண்கள், பெண்கள் இவர்களிடையே உள்ள வெறுப்புணர்ச்சிகளைக் காட்டுகிறது. ஐரோப்பாவில் வழக்கமான விளக்குமாற்றுடன்கூடிய சூன்யக்காரிகளைப் போல், பெண்களிடம் ஒரு தனிப்பட்ட தீச்செயல்முறை இருப்பதாக ஆண்கள் நினைக்கின்றனர். தோபுச் சூன்யக்காரிகள் தங்கள் உடலைக் கணவன் பக்கத்திலேயே தூங்கும்படி விட்டுவிட்டு காற்றிலே பறந்துசென்று எதிர்பாரா நிகழ்ச்சிகளை உண்டாக்குகின்றனர்—ஒரு மனிதன் மரத்திலிருந்து கீழே விழுவதோ, ஒரு படகானது தன் இடம்விட்டு அலைக்கழித்துச் செல்லுதலோ, இந்த பறக்கும் சூன்யக்காரிகளாலாகும். ஒரு விரோதியின் ஆத்மாவைப் பிரித்தெடுத்து அதனுல் அவனை இளைத்து இறக்கவும் காரணமாகின்றனர். தங்களுடைய பெண்மக்களின் இந்த வேலைகளைக் கண்டு ஆடவர் அஞ்சி நடுங்குகின்றனர். ட்ரோபிரியாண்ட் பெண்களுக்கு இவை தெரிந்திருப்பதில்லை என்று நம்புவதால் அங்கே ஆடவர்கள், தங்கள் ஊரில் இருப்பதைவிட அதிக தன்னம்பிக்கையோடு பழகுகின்றனர். தோபு மக்களிடையே கணவன் மனைவியிடம் எவ்வளவு அச்சப்படுகிறுனே அவ்வளவு மனைவியும் கணவனிடம் அச்சப்படுகிறுள்.

இருவரில் யாரேனும் ஒருவர் பிணியால் பீடிக்கப்பட்டால் அவர்கள் பீடிக்கப்பட்டவருடைய கிராமத்திற்குச் சென்றுவிட வேண்டும். அதாவது அவர்கள் அந்த ஆண்டு மற்றவருடைய

கிராமத்திலே வசித்துக்கொண்டிருந்தால் இப்படிச் செய்ய வேண்டும். அங்கேதான் சாவு நிகழவேண்டும். இறந்தவனின் கணவனே அல்லது மனைவியோ, அவர்களுடைய கூட்டத்தின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கவேண்டும். அவன் எதிர்த்துநின்ற அணிகளிலே பிளவு உண்டாக்கிய ஒரு சூன்யக்காரனாகவோ, ஒரு மந்திரவாதியாகவோ, அந்தக்கூட்டத்தினுள்ளே இருக்கும் விரோதியாக எண்ணப்படுகிறான். இறந்துபோனவனின் சடலத்தைச் சுற்றிலும் அவனுடைய கூட்டத்தினர் சூழ்ந்துகொள்கின்றனர். அவர்களுக்குமட்டும்தான் இறந்தவனின் சடலத்தைத் தொடவோ சவ அடக்கத்திற்கான செய்கைகளை நடத்தவோ உரிமை உண்டு. துக்கக் குரல்களைக்கூட அவர்கள்மட்டுமே எழுப்பலாம். இந்தக் காரியங்கள் நடைபெறுகின்ற இடங்களில் எஞ்சியிருக்கும் கணவனே அல்லது மனைவியோ கண்படாவண்ணம் ஒதுங்கியிருக்க வேண்டும். இறந்தவன் செல்வந்தனாக இருந்தால் அவன் உடலை மதிப்புயர்ந்த பொருள்களைக்கொண்டு அலங்காரம் செய்து வீட்டு முன் மேடையிலே சவத்தைக் காட்சிப்பொருளாக வைக்கின்றனர். அவன் ஒரு சிறந்த தோட்டக்காரனாக இருந்திருந்தால் கிழங்குகளைச் சுற்றிலும் வைக்கிறார்கள். தங்கள் மரபுப்படி, பாடி அழுவதற்குத் தாய்வழிச் சொந்தக்காரர்கள் குரலெழுப்புகிறார்கள். இறந்தவருடைய சகோதரியின் மக்கள், அன்றிரவோ அல்லது மறுநாள் காலையிலோ சவத்தை அடக்கம்செய்ய எடுத்துச் செல்கின்றனர்.

இறந்தவனுடைய வீடு காலியாக விடப்படுகிறது. மறுபடியும் அது பயன்படுத்தப்படுவதில்லை. எஞ்சியிருக்கிற கணவனையோ அல்லது மனைவியையோ, வீட்டில் பின்னப்பட்ட பாய்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறு அறைக்குப் போகச்செய்கிறார்கள். துக்கத்திற்கு அடையாளமான ஒரு கறுப்புச் சுருக்குக் கயிற்றை அவன் கழுத்தில் தொங்கவிட்டு அவன் உடம்பு முழுவதும் நெருப்பிலிருந்து கிடைக்கிற கரியைக்கொண்டு பூசிவிடுகிறார்கள். அந்த இருண்ட அறையில் அவன் உட்கார்ந்துகொண்டே முதல் ஓரிரண்டு மாதங்களைக் கழிக்கிறான். பிறகு, முதலிலே திருமண ஏற்பாடு ஆரம்பித்த உடனே செய்ததுபோல் தன்னுடைய மாமனார், மாமியார்களுடைய மேற்பார்வையின்கீழ் அவர்களுடைய தோட்டங்களில் வேலைசெய்கிறான். இறந்துபோன தன் மனைவி, அவளுடைய சகோதர சகோதரிகள் ஆகியவர்களின் தோட்டங்களிலும் அவன் வேலை செய்கிறான். உணவுப் பண்டங்கள் பரிமாறிக்கொள்ளவும் சிரிப்பதற்கும் அவனை அனுமதிக்கமாட்டார்கள். சவக் குழியிலிருந்து மண்டையோட்டை எடுத்து, அதை வைத்துக்கொண்டு இறந்தவருடைய

சகோதரியின் மக்கள் நடனம் புரியும்போது, அவன் அவர்களைப் பார்க்கக்கூடாது. மண்டையோடு இறந்தவருடைய சகோதரியின் மகனிடம் வைத்துக்கொள்ளப்படுகிறது. இறந்துபோனவரின் ஆத்மா இறந்தவர்களுடைய நாட்டிற்கு விதிமுறையே அனுப்பப் படுகிறது.

அவனுடைய துக்கம் கொண்டாடும் நாட்களில் அவனுடைய சொந்தக்காரர்கள் அவனுடைய தோட்டங்களைக் கவனித்துக் கொள்வதுமட்டுமன்றி வேறு கடினச் சுமைகளையும் தாங்க வேண்டும். இறந்தவருடைய கிராமத்திற்கு, சவ அடக்கமான பின்பு, அதற்கான கட்டணத்தைக் கொண்டுவரவேண்டும். அவர்கள் சவக் காரியங்களைச் செய்த சகோதரியின் மக்களுக்குச் சமைக்கப்பட்ட கிழங்குகளைப் பரிசளிக்கிறார்கள். சமைக்காத கிழங்குகளை நிறைந்த அளவில் கொடுக்கிறார்கள். அவைகள் இறந்தவருடைய கிராமத்திலே கண்காட்சிப் பொருளாக வைக்கப் பட்டு, இறந்தவருடைய சொந்தக்காரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுகிறது. அவருடைய கூட்டத்தினர் அதிகப் பங்கைப் பெறு கிறார்கள்.

இறந்துபோன கணவனின் சொந்தக்காரர்களுக்கு அவனு டைய விதவை அடிமைப்பட்டிருக்கிறாள். அவளுடைய குழந்தை களுக்கும் சில தனிப்பட்ட கடமைகள் உண்டு. ஆண்டு முழு வதும் அவர்கள் வாழை, தாரோ (taro) முதலியவைகளைச் சமைத்து இறந்தவனுடைய கூட்டத்திற்கு எடுத்துச்சென்று 'தகப்பனுக்காகக் கட்டணம் செலுத்தவேண்டும்.' 'எங்களையெல் லாம் அவன் கைகளிலே தூக்கிவைத்துக்கொண்டிருக்க வில்லையா?' தகப்பனுடைய நெருங்கிய உறவினர்களுக்குக் கட் டணம் செலுத்தும் வெளியாராகத்தான் எண்ணப்படுகின்றனர். அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்களேயன்றி இதற்காக அவர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

துக்கம் கொண்டாடுபவன் தன்னுடைய கூட்டத்தாரால் இறந்துபட்டவனின் கூட்டத்திற்கு மேலும் கட்டணங்கள் செலுத்தி அவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். முன்போலவே அவர்கள் சமைக்கப்படாத கிழங்கு களைப் பரிசாகக் கொண்டுவருகின்றனர். இறந்தவனுடைய சொந் தக்காரர்கள், துக்க அடையாளமான கயிற்றை வெட்டிவிட்டு, துக்கம்கொண்டாடுபவன் உடம்பிலுள்ள கரியைக் கழுவிவிடுகிறார் கள். நடனங்கள் நடந்தபிறகு அவனை மறுபடியும் அவன் கிராமத் திற்குச் சொந்தக்காரர்கள் அழைத்துச் செல்கின்றனர். அவனு

டைய ஓராண்டுத் தவம் முடிகிறது. மறுபடியும் தன்னுடன் வாழ்ந்தவரின் கிராமத்தில் அவன் நுழைவதேயில்லை. துக்கத்திலிருந்து விடுதலையடைவது ஆணாக இருந்தால், அவனது குழந்தைகள் தங்கள் உண்மையான சொந்தக்காரர்களுடைய, தம் தகப்பன் மறுபடி நுழையமுடியாத (தாயுடைய) கிராமத்திலேயே தங்கிவிடுகின்றனர். துக்கம் முடிகின்ற நாளிலே பாடப்படும் பாட்டில் இவர்களுக்கிடையே விடைபெறுதல் கொண்டாடப்படுகிறது. அந்தப் பாட்டு தவத்தின் கடைசிநாளை நெருங்கிவிட்ட தகப்பனை நோக்கியுள்ளது.

'விழித்திரு விழித்திரு, பேசு
நள்ளிரவு நேரத்திலே.
முதலிலே விழித்திரு, பேசு
விழித்திரு, பேசு.
மைவோர்த்து (Maiwortu) உன்னுடை உடம்பின் கரிப்பூச்சு
கீழே மிவானிவாராவினால் (Mwaniwara).
இரவின் கருமை வைகறையினால் உடைபடுகிறது
முதலிலே விழித்திருந்து பேசு'.

மைவோர்த்து (Maiwortu) என்பதுதான் எஞ்சியிருக்கும் கணவன். அவன் தன் குழந்தைகளோடு பேசக்கூடிய ஒரே இரவுதான் மிஞ்சியிருக்கிறது. நாளை அவனுடைய கரிப்பூச்சு கழுவப்பட்டுவிடும். 'வைகறையிலே இரவின் கருமை கலைந்து விடுவதுபோல்' அவனுடைய உடம்பும் கரி அகன்று துலங்கும். அவனும் அவன் குழந்தைகளும் மறுபடி சேர்ந்து பேச மாட்டார்கள்.

துக்கம்கொண்டாடும்போது ஒருவர்க்கொருவர் குற்றம் சாட்டிக்கொள்வதிலே கணவன், மனைவி ஆகியோருடைய இரு கூட்டங்கள்மட்டும் கலந்துகொள்வதில்லை. எஞ்சியிருப்பவர், மரபுவழியே, இறந்தவரின் சாவிற்காகக் குற்றம் சாட்டப்படும் விரோதமான கிராமத்திற்குமட்டுமன்றி இறந்தவருடைய கிராமத்தில் மணம் செய்துகொண்ட அனைவருக்கும் பிரதிநிதியாகக் கருதப்படுகிறார். ஒரே கிராமத்திலே பல திருமண உறவுகள் செய்யக்கூடாது என்ற கொள்கைப்படி, இந்த எதிரிக்கூட்டம் பல கிராமங்களினின்று சேர்ந்த ஒன்றாகிறது. கிராமத்தினுள்ளே மணம்செய்துகொண்டு வந்தவர்கள் தற்போது மனைவியுடன் இருந்தாலும், இறுதியிலே இதேமாதிரி நிலையை அடையவேண்டியவர்கள்தாம். துக்கம்கொண்டாடத் தொடங்கும்போதே அவர்கள் கிராமத்திலே உள்ள சில சொந்தக்காரர்களின் பழந்தரும் மரங்கள்மீது தடை

விதிக்கிருர்கள். கோபத்தை வெளியிட்டு அவர்கள் சில மரங்களை வெட்டவும் செய்கிருர்கள். சில வாரங்கள் சென்றதும், போரிலே ஒரு கிராமத்தை வெல்ல வருபவர்கள்போல, ஈட்டிகளைக்கொண்டு படைபலம் ஏந்தி கிராமத்தின்மீது மோதுகிருர்கள். இறந்தவருடைய நெருங்கிய உறவினரது குடிசையின் முன்னே, தங்களுடன் எடுத்துச்சென்ற ஒரு பெரிய பன்றியை வேகமாக எறிகிருர்கள். பாக்கு மரங்களின்மீதேறி கொட்டைகளையெல்லாம் பிய்த்தெறிந்துவிட்டு, என்ன நடக்கிறது என்று ஜனங்கள் புரிந்து கொள்ளுமுன்பே ஓடிவிடுகின்றனர். இந்த இரண்டு தாக்குதல்களும், துக்கம்கொண்டாடும்போது தவம்செய்யச்சொல்லி வற்புறுத்தும் கூட்டத்தினர்மேல் உள்ள வெறுப்புக்கு அறிகுறியாகும். மரபுவழியே, கொழுத்த பன்றியானது மானிட பலியாக இருந்தது. முடிவிலே, படையெடுத்து வந்தவர்கள் கண்களுக்கப்பால் மறைந்ததும் கிராமத்தார் ஒரு கிளர்ச்சி அடைகிருர்கள். அந்தப் பன்றி சமைக்கப்பட்டு, மணம்செய்துகொண்ட்வர்களின் கிராமங்களுக்கு அளிக்கப்படும் பல விருந்துகளுக்கு அடிப்படையாக அமைகிறது. இந்தச் சமைத்த உணவுப் பரிசுகள் மிகவும் அவமானம் செய்கிற முறையிலே வழங்கப்படுகிறது. வழங்குகிறவர்கள், பெற்றுக் கொள்ளும் கிராமத்திலிருக்கும் ஒரு மதிப்புக்குரிய கிழவன்மேல் பன்றிக்கொழுப்பை ஊற்றுகிருர்கள். அவன்மேல் அதைப் பூசி விடுகிருர்கள். உடனே அவன் துள்ளியெழுந்து, மரபுவழியே வந்த சில இழிச் செயல்களை கூறிக்கொண்டு, அச்சுறுத்தும் முறையிலே, கையிலே ஈட்டி இருப்பதாக அபிநயித்துத் தனக்கு விருந்தளிப்பவர்களை நோக்கி நடம்புரிகிருன். தங்களைத் தவம்செய்ய வற்புறுத்தக்கூடிய, இறந்தவரின் கூட்டத்தாரை இழிசொற்களால் அவமானப்படுத்த உரிமை கொடுக்கப்படுகிருன். ஆனல், இதை அவர்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. இறந்தவரின் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் அக் கிழவனை அச்சுறுத்துவது போன்று பாவனை செய்கிருன். ஆனல், எவ்வித இழிச் சொல்லையும் பயன்படுத்துவதில்லை. மற்றவனும் சிறிதுநேரம் சென்று குளித்து விட்டு வயிருர உண்கிருன். இறந்தவனுடைய கிராமம் சமைக்கப்பட்ட கூழை, பன்றிக்குப் பதிலாக எடுத்துச் சென்ருல் அதுவும் பெற்றுக்கொள்பவர்மேல் ஊற்றப்பட்டு இதுமாதிரியே ஒரு பொது நடனத்தால் சிறப்பிக்கப்படுகிறது. இந்த இரண்டு கூட்டங்களுக்கும் உள்ள நெருக்கடிநிலை தோபு மக்களிடையே ஒரு பெரிய விருந்தின்மூலம் முடிவடைகிறது. இந்த விருந்து இறந்தவருடைய கிராமத்திலே அங்கே திருமண உறவுகளால் தொடர்புகொண்ட மற்றக் கிராமங்களிலிருந்து வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு இழிவோடு கொடுக்கப்படுகிறது. ‘டாவா, இது உன் பங்கு. இறந்தவர் நிறைய பன்றிகள் வைத்திருந்தார். ஆனல், உன் பெண் பன்றி

மலடு.' 'டோகோ, உன் பங்கு. இறந்தவர் மீன் வலைகளிலே வல்லவர். நீ இப்படித்தான் மீன் பிடிக்கிறாய்'. 'கோபு, உன் பங்கு. இறந்தவர் ஒரு சிறந்த தோட்டக்காரர். அவர் அந்தி நேரத்தில் தான் வேலையைவிட்டு வந்தார். நீ நடுப்பகலிலேயே வீட்டிற்கு வந்துவிடுகிறாய்'. டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) கூற்றுப்படி, 'சாவு ஏற்பட்ட அந்த இடம், இதுபோன்ற மகிழ்ச்சிதரும் செயல் களால் மறுபடியும் தன்னிலை அடைகிறது'.

மரபுப்படி, எஞ்சியிருக்கும் கணவனுடைய அல்லது மனைவி யினுடைய கிராமத்திற்கும் இறந்தவருடைய கிராமத்திற்கும் இடையே உள்ள சந்தேகத்தால், எஞ்சியிருப்பவர்தான் கொலை யாளி என்று திட்டவட்டமாகக் கருதப்படுவதாக நாம் கொள்ளக் கூடாது. அவர் கொலையாளியாக இருக்கவும் கூடும். ஆனால், இறந்தவர் எத்துறையிலாவது வெற்றிபெற்றிருந்தால், அந்த வெற் றியினால் ஏற்பட்ட பொறாமைதான் மரணத்திற்குக் காரணம் என்று, காரணம் கண்டுபிடிப்பவன் சுலபமாகத் தீர்ப்பளிக்கிறான். துக்கம் கொண்டாடுவது வெறும் சடங்காக இல்லாமல் 'அநேக மாக ஒரு தரப்பாரின் சந்தேகத்தையும், அவர்கள்மேல் சந்தேகப் பட்டவர்கள் கொண்டுள்ள அசூயையு'மாக இருக்கும். தோபு மக்களிடையே சர்வசாதாரணமாக விளங்கும் இவை அவர் களுடைய மனப்பாங்கின் வெளித்தோற்றங்களாக அமைகின்றன.

மாயாஜாலங்களாலும் அவை தவிர மற்றவைகளாலும் கொலை யானது நடக்கலாம். நஞ்சைக்கூட (poison) சூன்யமாகவோ வினைவைப்பாகவோ கருதுகிறார்கள். யாராவது அருகில்வந்து ஏதாவது செய்துவிடுவார்களோ என்று பயந்து எந்தப் பெண்ணும் தன்சமையல் சட்டியைக் கொஞ்சநேரம்கூட விட்டு அகலுவ தில்லை ஒவ்வொருவரும் பலவகை நஞ்சுகள் வைத்திருக்கிறார்கள். மாயாஜால உச்சரிப்புகள் போலவே நஞ்சுகளையும் அவர்கள் சோதனை செய்து பார்க்கிறார்கள். இந்த நஞ்சுகள், கொல்லும் சக்தி வாய்ந்தவை என்று நிரூபிக்கப்பட்டபிறகு, நேரிடைப் போரிலே பயன்படுகின்றன.

'அதன் பெயர் பூடோபூடோ (Budobudo); அதைப்பற்றி என் தகப்பன் என்னிடம் சொல்லியிருக்கிறார். கடலருகில் அது நிறைய வளர்ந்திருக்கிறது. நான் அதைச் சோதனைசெய்ய விரும்பினேன். அதிலிருந்து சாறு பிழிந்தெடுத்தோம். நான் ஒரு தேங்காயை எடுத்து அதிலிருந்த நீரைக் குடித்துவிட்டு, இந்தச் சாற்றை அதற் குள்ளே நிரப்பி பிறகு மூடிவிட்டேன். மறுநாள் அதை நான் குழந் தையிடம் கொடுத்து 'நான் இதிலிருந்து குடித்தேன். நீயும் குடி' என்றேன். அன்று நடுப்பகலில் அவள் நோய்வாய்ப்பட்டாள்.

இரவில் அவள் இறந்துவிட்டாள். அவள் என் தந்தையின் 'கிராமத்துச் சகோதரியின்' பெண். என் தகப்பனுர் அவளுடைய தாயை பூடோபூடோ என்ற நஞ்சிட்டுக் கொன்ருர். நான் பிறகு அந்த அனுதையை நஞ்சிட்டேன். (ஏனிப்படி ஏற்பட்டது,) 'இதற்குக் காரணம் என்ன?' 'அவள் என் தந்தையை மயக்கி விட்டாள். அவர் உடனே பலவீனமாகி விட்டார். அவர் அவளைக் கொன்றபிறகு மறுபடியும் பலமடைந்துவிட்டார்.'

சாதாரணமாக நாம் ஒரு பரிசைப் பெறும்போது நன்றி சொல்வதுபோல், அவர்கள் 'இப்பொழுது என்னை நீ நஞ்சிட்டுவிட்டால் பிறகு எப்படி நான் நன்றிக்கடன் செலுத்துவேன்,' என்று சொல்கிருர்கள். தாங்கள் நன்றிக்கடன் செலுத்தவேண்டியிருப்பதால், எதிரி நஞ்சிட்டுவிட்டால் அது அவனுக்குச் சாதகமாக ஆகாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் காட்டுகிருர்கள்.

தோபுக் கொள்கைகள் நகைத்தலைப் புறக்கணித்து, கடுகடுத்த முகத்துடனிருப்பதை ஒரு நல்ல குணமாகக்கொள்கின்றன. அண்டையிலுள்ள வஞ்சமில்லாத மக்களைப்பார்த்து 'அவர்கள் நகைப்புக்குறைவிடம்' என்று வெறுப்பிலே சொல்லுகிருர்கள். தோட்டவேலையின்போதும், குலா வியாபாரத்தின் போதும் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய அமிசம், அவர்கள் அந்தச் சமயங்களில் எந்தவிதமான இன்பந்தரும் செய்கைகளிலும், மகிழ்ச்சியை வெளிக்காட்டிக்கொள்வதிலும் ஈடுபடுவதில்லை. 'தோட்டங்களில் நாங்கள் விளையாடுவதில்லை. பாடுவதில்லை, கதைகள் சொல்வதில்லை. தோட்டங்களில் நாங்கள் இப்படி நடந்துகொண்டால் விதைக் கிழங்குகள் 'இது என்ன வசியம்; ஒருகாலத்தில் இது நல்ல வசியமாக இருந்தது. ஆனுல், இது என்ன? என்று கேட்கின்றன. விதைக் கிழங்குகள் நாங்கள் பேசுவதைத் தவருகப் புரிந்துகொள்கின்றன. எனவே, அவை வளரமாட்டா.' இதுபோன்ற தடை, குலாவின் போதும் இருக்கிறது. மக்கள் நடனமாடிக்கொண்டிருந்த ஆம்ப்ளெட்ஸ் (Amphletts) என்ற கிராமத்தின் புறத்தே பதுங்கியிருந்த ஒருவனை நடனத்திலே சேர்ந்துகொள்ளச் சொன்னபொழுது 'நான் மகிழ்ச்சியோடிருந்தேன் என்று என் மனைவி சொல்வாள்' என்று சொல்லி மறுத்துவிட்டான். அது ஒரு தீவிரமான விதிவிலக்கு.

தோபு மக்களிடையே பொருமையும் சந்தேகமும் எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்குக் கடுகடுத்திருத்தலை ஒரு சிறப்புப் பண்பாக அவர்கள் பெற்றிருக்கிருர்கள். நாம் முன்னேமே கண்டபடி, அயலான் தோட்டத்திலோ வீட்டிலோ நுழைவது தடைசெய்யப்

பட்ட ஒன்றுகும். ஒவ்வொருவனும் அவனுடைய சொத்தை அனுபவிக்கிருன். ஓர் ஆணும் பெண்ணும் சந்தித்தால் அது ஒழுக்கக் கேடாக நினைக்கப்படுகின்றது. ஒரு பெண் ஆடவனைக் கண்டதும் ஓடி ஒளியாவிட்டால் அவன் அவளைப் பயன்படுத்திக் கொள்கிருன். அவள் தனிமையாக இருப்பதையே அனுமதியாக நினைக்கிருன். எப்பொழுதும் ஒரு பெண் தன்னுடன் ஒரு சிறு குழந்தையை எடுத்துச் செல்கிருள். இது அவளை இயற்கைக்கப் பாற்பட்ட அபாயங்களிலிருந்தும், ஊர் வம்பிலிருந்தும் காப்பாற்றுகிறது. ஆகையால், பெண்கள் வேலைசெய்யும் காலங்களில் கணவன் தோட்டத்தின் வாயிலில் காவலிருக்கிருன். தன் மனைவி வேறு யாரிடமும் பேசாமலிருக்க அவளைக் கவனித்துக்கொண்டே குழந்தையை வைத்துக்கொண்டு அதனுடன் பேசிக் களிப்பெய்துகிருன். சிறுநீர் கழிக்கவோ அல்லது மலம் கழிக்கவோ அவள் புதர்மறைவுக்குச் செல்லும்போது அவள் எவ்வளவுநேரம் எடுத்துக்கொள்கிருள் என்றுகூட கவனிக்கிருன். சில சமயங்களில், என்னதான் தோபு மக்களிடையே திட்டங்கள் கடுமையாக இருந்தும், அவன் அவள்கூடவே செல்கிருன். நம்முடைய ஆசாரமான 'முன்னோர்களிடை இருப்பது'போலவே தோபு மக்களிடையேயும் இந்தக் கட்டுப்பாடுகள் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். எவனும் மற்ருெருவனுக்கெதிரில் ஆடைகளைக் களைவதில்லை. படகிலே செல்கின்ற மாலுமிகள் எல்லோரும் ஆண்களாக இருந்தும்கூட, ஒருவன் சிறுநீர் கழிக்கவேண்டுமாகுல், யார் கண்ணிலும் படாமல் ஒருபக்கமாகச் செல்கிருன். ஒருவனுடைய ஆண் பெண் உறவுகளைப்பற்றி வெளியிடுவது தடைசெய்யப்பட்ட ஒன்ருகும். ஒருவனைத் திட்டும் சமயம் தவிர, மற்ற நேரங்களில் அதைப்பற்றிக் குறிப்பிடவே கூடாது. முதலிரவுக்கு முன்னுல் நடக்கின்ற உரையாடல்கள் மிகவும் கண்ணியமானவை. ஆனுல், நடனங்களில் பயன்படும் பாட்டுக்கள், வயதுவந்தவர்களின் அனுபவத்தையொட்டி, காமத்தின் வேகத்தைத் தெரிவிக்கின்றன. நமது முன்னோர்களின் நெறிதவரு முறைகளைப்போலவே தோபு மக்களின் பண்பாட்டிலுள்ள நெறிமுறைகள் நமக்குப் பழக்கமானவையே. அவர்கள் மகிழ்ச்சிகொள்ளாதிருத்தல் அவர்களுடைய பண்பாட்டைக் குறிக்கிறது. ஆனுல், வேறுபாடுகளும் உண்டு. ஆண் பெண் உறவின்மேல் அதிகக் கவனம் செலுத்தாமல் காமத்தை வெறுக்கின்ற முறையோடு இதை நாம் இணைத்துப் பார்க்கிருேம். இது தவிர்க்கமுடியாததல்ல. மணமாவதற்கு முன்னுல், கண்டபடி காமத்தில் ஈடுபடுதலையும், ஆண் பெண் உறவிலே தீவிரத்தையும் கொண்டுள்ள அதே தோபு மக்கள் தாம் கடுகடுத்த தன்மையும் நெறிமுறையும் கொண்டு பழகிவருகிருர்கள். ஆண் பெண் இருபாலர்களும் காமத்திலே திருப்திப்படுதலை மிக

முக்கியமாக எண்ணுகிருர்கள். மனைவி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்று எண்ணும் ஒருவனை ஆதரிக்கவோ அல்லது தள்ளி விடவோ தோபுக் கொள்கைகள் இடங்கொடுப்பதில்லை. காமத்தின் பல்வேறு நிலைகள் ஸுனி (Zuni) மக்களிடையே பல மரபு நிறுவனங்களால் (tribal institutions) கட்டுப்படுத்தப்படுவதுபோல இல்லாமல், தோபு மக்களிடையே சாதாரணமாகப் பயன்படுத்தப் படுகின்றன. கணவன் தன்னிடமே இருக்கவேண்டுமானல் அவன் களைத்துச் சோர்ந்திருக்கவேண்டும் என்ற போதனையுடன் தான் பெண்கள் திருமணத்தில் ஈடுபடுகிருர்கள். ஆண் பெண் உடல் உறவுமுறைகள் மதிப்புக்குறைவாக எண்ணப்படுவதில்லை.

தோபுக் குடிமகன் கடுகடுத்தும், நெறிதவருமலும், காமவசப் பட்டும், பொருமை, சந்தேகம், வெறுப்புணர்ச்சி ஆகியவைகளால் நிறைந்தும் காண்கிருன். வாழ்க்கையிலே பெறும் நலன்கள் ஒவ்வொன்றையும், தீவினை சூழ்ந்த உலகத்திலே, தன் எதிரியை சண்டையிட்டுத் தோற்கடித்துத் தான்பிடுங்கிக்கொண்டவைகளாக எண்ணுகிருன். வாழ்க்கையிலே ஒருவன் வளம்பெற்று விளங்குவானேயாகில் அவன் பலமுறை சண்டையிட்டு வெற்றி கண்டவன் என்றும், நல்ல மனிதன் என்றும் கருதப்படுகிருன். அவன் துணிவு ஏற்படுகிறபோதெல்லாம், பிறரை ஏமாற்றித் தன்னுடன் நெருங்கிப் பழகுவோரைச் சூன்யமிட்டு, குழந்தைகளைக் கொன்று, பல திருட்டுச் செய்கைகளும் செய்திருப்பான் என நம்பப்படுகிறது. திருட்டும் பிறன்மனை நயத்தலும் சமுதாயத்திலே மதிப்புயர்ந்த மனிதர்களிடையே சிறந்த வசியங்களாலே ஏற்படுவன. அந்தத் தீவிலே மிகவும் மதிக்கத்தக்க ஒருவன் டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) அவர்களுக்குத் தன்னைப் பிறர் கண்ணில்படாமல் மறைத்துக்கொள்ள ஒரு வசியத்தைச் சொல்லிக் கொடுத்தான். அவன், 'இப்பொழுது நீங்கள் ஸிட்னியில் (Sydney) உள்ள கடைகளுக்குச்சென்று உங்களுக்குப் பிடித்தமானவற்றைத் திருடிக்கொண்டு கண்ணுக்குப் புலப்படாமல் சென்றுவிடலாம். நான் பலமுறை பிறருடைய சமைத்த பன்றியை எடுத்திருக்கிறேன். கண்களுக்குப் புலப்படாமலேயே நான் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தேன். பன்றி மாமிசத்தோடு யார் கண்ணுக்கும் புலப்படாமல் வெளிவந்துவிட்டேன். சூன்யம், வினைவைப்பு ஆகியவை குற்றமாகாது. அவைகளில்லாமல் மதிப்புக்குரிய எவனும் இருக்கமுடியாது. பிறருடன் ஏற்படுகின்ற மோதல்களிலே, அவர்களால் வெற்றி காணப்பட்டு, தன்னுடைய பொருளையோ அல்லது அங்கங்களையோ இழந்தவன் கெட்டவனாக எண்ணப்படுகிருன். அங்கக் குறைபாடுள்ளவன் எப்பொழுதும் கெட்டவனாக மதிக்கப்படுகிருன். அவனுடைய தோல்வியை

எல்லோரும் காணும்வண்ணம் தன் உடம்பிலே பெற்றிருக்கிறான்.

இவ்வண்ணம் ஒருவருக்கொருவர் கொன்றுகொள்ளும் போர்முறையிலே, வழக்கமாக நாம் காணும் சட்டதிட்டங்கள் எதுவும் கிடையாது. பல வேறுபட்ட பண்பாடுகளில் சட்டபூர்வமான அனுமதிகள் பெறுவதற்கு பலவகைப்பட்ட செய்முறைகள் உள்ளன. வேறு எந்த வழியிலும் கிட்டமுடியாத சொத்துரிமை, சொந்தக்காரனைக் கொன்றுவிடுவதால் உடனே சட்டபூர்வமாக அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியின் மக்களுக்குக் கிட்டுவதை நாம் காணப்போகிறோம். இதே சட்டபூர்வமான சொத்துரிமை, சடங்குகளிலே பயன்படும் வார்த்தைகளை நன்கு தெரிந்து வைத்திருப்பதாலோ அல்லது சடங்குகளின் பின் கையாளக்கூடிய செய்முறைகளைத் தவருது செய்வதாலோ கிடைப்பதில்லை. ஒட்டுக்கேட்டு, ஒரு சடங்கு முறையைத் திருடிவிடமுடியாது. நாம், நம்முடைய நாகரிகத்திலே எதைச் சட்டவிரோதமானது என்று சொல்வோமோ, அதே செய்கையினுல் சட்டத்தின் அனுமதி அடையப்பெறுகிறது. சட்டத்தின் அனுமதிபெற ஒரு செயல் உள்ளது என்று தெரிகிறது. ஆனுல், தோபு மக்களிடையே அம்மாதிரி இல்லை. ஒட்டுக் கேட்டு விடுவார்களோ என்று பயப்படுகிருர்கள். ஏனென்ருல், இந்த முறையில் கற்றுக்கொண்ட வசிய உச்சரிப்புகளும் மற்ற வேறு எந்த முறையிலே தெரிந்துகொண்ட வசியங்களும் ஒரே பலனைத்தான் அளிக்கின்றன. எதை எவன் எப்படி அடைந்தாலும் அது மதிக்கப்படுகிறது. வாபுவாபு (wabuwabu) என்பது திறுவனமான ஒரு பழக்கமாகும். சமூகத்திலே, கட்டுப்பாடுகளின் அனுமதியின்றி நடக்கும் எந்த அறிவுக் கூர்மையான செயலுக்கும் தோபு மக்களிடையே நெறிமுறைகள் கிடையாது, சில உணர்ச்சியற்ற திமிர் பிடித்தவர்கள் இறந்தபின் துக்கம் கொண்டாட ஒப்புக்கொள்வதில்லை. மற்ருெருவன் தன்னை இழுத்துக்கொண்டு ஓடிவிடத்தயாராகஇருந்தால் ஒருமனைவி தன் கணவனுக்காகத் துக்கம் கொண்டாடுவதினின்றும் தப்பலாம். அப்படி ஏற்பட்டால் இறந்த கணவனுடைய கிராமத்தார் அவள் ஓடிச் சென்றிருக்கும் கிராமத்தில் மரத் துண்டுகளையும் இலைகளையும் இறைக்கிருர்கள். கணவன் அவ்வாறு ஓடிவிட்டால் ஒன்றுமே செய்யப்படுவதில்லை. அவன் எந்தக் கிராமத்தினுள் மணம் செய்துகொண்டு வந்தானே அக் கிராம மக்கள் அவன்மீது செயலற்றுப் போகும்படி, அவனுடைய மாயாஜால வித்தைகள் பலமுள்ளவை என்று பொதுவாக நினைக்கின்றனர்.

தனி ஒருவனுக்கு எந்தவித அதிகாரமும் கொடுக்கப்படாமல் இருத்தலுக்கும், தலைவன் யாரும் இல்லாமல் இருப்பதற்கும் இந்தச் சட்ட ஒழுங்குமுறை இல்லாமையே காரணம் ஆகும். ஒரு கிராமத்திலே 'அலோ' என்ற ஒருவனுக்கு சூழ்நிலைகளின் சேர்க்கை ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரத்தை அளித்தது.

'முதல் தலைமுறையிலிருந்தே அவன் பரம்பரையாக மாயா ஜாலங்களைத் தெரிந்தவனுனதாலும், அவனுடைய குண இயல்பினுலும், அவனுடைய தாயாரும் பாட்டியும் அதிகக் குழந்தைகள் பெற்றிருந்ததாலும், அலோவுக்குப் பெரும்பகுதி சக்தி உண்டாயிற்று. மூத்தவனுடைய வழியிலே அவன் மூத்த மகன். கிராமத்திலே பெரும்பாலும் அவனுடன் இரத்தத் தொடர்புகொண்ட சகோதரிகளும் சகோதரர்களுமே இருந்தனர். தோபு மக்களிடையே, சட்ட ஒழுங்கு சிறிதளவேனும் காணப்படுமானுல் அது இம்மாதிரி அரிய சில இயல்புகளின் சேர்க்கையால் உண்டானவையாகும். அதாவது, வலுவான குண இயல்பு, மாயா ஜால அறிவில் சிறந்த குடும்பத்திலே வரும் பரம்பரையான பெருமை, அதிக அளவிலே குழந்தைகள் பெற்றிருத்தல் ஆகிய சிறப்பியல்புகளாகும்'.

ஒழுங்குமுறை அமைவதற்கான சமூகக் கட்டுப்பாடுகள், தோபு மக்கள் மிகச் சிறந்ததெனக் கருதும் வஞ்சத்தோடுகூடிய சண்டைகளைக் குறைப்பதில்லை. இரக்கம், அன்பு ஆகியவைகளாலேயும் அது குறைக்கப்படுவதில்லை. அவர்கள் சண்டை செய்யும் போர்க்கருவிகளுக்கு உறைகள் கிடையா. சவால் விடுதல், இழிச்சொல் பேசல் முதலியவைகளில் ஈடுபட்டு அதனுல் தங்களுடைய திட்டங்களுக்கு இடையூறு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அவர்கள் அதிகம் பேசுவதில்லை. நாம் ஏற்கனவே சொன்ன ஒரே ஒரு விருந்தின்போதுதான் இழிந்துரைத்தலில் மரபுவழியே ஈடுபடுகிருர்கள். தோபு சாதாரணமாக உரையாடும்போது மிகவும் மரியாதையோடும் அமைதியோடும் காணப்படுகிருன். 'நாங்கள் ஒருவனைக் கொல்ல நினைத்தால் அவனுடன் உறவு பூண்டு, அவனுடனேயே உண்டு, குடித்து, தூங்கி, வேலை செய்து, அவனுடனேயே பல மாதங்களுக்குத் தங்கியிருக்கிறேம்; காலம் வரும்வரை காத்திருக்கிறேம். அவனை நண்பனென்றே அழைக்கிறேம்'. ஆகையால், கொலையாளியைக் கண்டுபிடிக்கக் காரணங் கண்டுபிடிப்பவன் சாட்சிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, யார் கொலை செய்யப்பட்டவனுடன் நெருங்கிப் பழகி வந்தார்களோ அவர்கள்மீது சந்தேகம் வலுவடைகிறது. அவர்கள் வழக்கத்திற்கு விரோத

மாகச் சேர்ந்திருந்தார்கள் என்றால் அது நிரூபிக்கப்பட்ட ஒன்றாகி விடுகிறது. டாக்டர் ஃபார்ச்சூன் கூற்றுப்படி 'தோபு மக்கள், ஒன்று, மிகக் கெட்டவர்களாக நடந்து கொள்கிறார்கள், இல்லா விட்டால் நல்லவர்களாகவே இருக்கிறார்கள்.'

நட்பையும், கூட்டுறவு முறையையும், மேலும் வாழ்க்கையின் எந்தத் துறையையும் தோபு, வஞ்சனை உள்ள ஒன்றாகத்தான் நம்புகிறான். அவர்களுடைய நிறுவனங்களின்படி மற்றானுடைய எந்த முயற்சியும், தன்னுடைய திட்டங்களைக் குழப்பி நாச மடையச் செய்வதற்காகவே என்று கருதப்படுகிறது. ஆகை யினால், குலாவிற்காக அவன் வெளியே செல்லும்போது 'வீட்டி லிருக்கிறவன் வாயை மூட' ஒரு வசியத்தைப் பயன்படுத்து கிறான், பின்தங்குகிறவன் கட்டாயம் தனக்கெதிராக வேலை செய்வான் என்று நம்புகிறான். வெறுப்புணர்ச்சி, எதையும் சாதிக்கவல்ல ஒரு சாதனமாகக் கருதப்படுகிறது. அவர் களுடைய மாயாஜால உச்சரிப்புகள், தோட்டங்களிலே பயிரிடப் படும் முதல் கிழங்குகளின்மீதும், குலாவிற்காகப் படகிலே ஏற்றப் படும் முதல் உணவு, மற்றும் பரிசுப் பொருள்கள்மீதும்தான் ஏவப் படுகிற ஒரு முறையைப் பின்பற்றுகிறது. டாக்டர் ஃபார்ச்சூன் (Dr. Fortune) ஒரு மாயாஜாலக்காரனை அதுபற்றி விசாரித்தார். அவன் பின்வருமாறு பதிலுரைத்தான். 'கிழங்குகள் மனிதர்களைப் போலவேதான். அவைகள் புரிந்துகொள்கின்றன. 'அந்தக் கிழங்கை அவன் வசியம் செய்கிறான், என் கதி என்ன? ஓ! அது கோபமாயிருக்கிறது. வேகமாக வளர்கிறது' என்று ஏதாவது ஒன்று சொல்லும்.' மனிதர்களிடம் நடந்து கொள்வதில் எதிலெல்லாம் நம்பிக்கை வைக்கப்படுகிறதோ அதேபோல் இயற்கைக்கப்பாற்பட்டவைகளிடம் நடந்துகொள்வதிலும் நம் பிக்கை வைக்கப்படுகிறது.

தோபு எவனும், இயற்கைக் கப்பாற்பட்டவைகளுடைய தென்று நம்பாத, ஒருவழி, வாழ்க்கையில் வெறுப்படைந்த ஒருவ னுக்கு இருக்கிறது. எந்த மரத்திலிருந்து திருட்டுப் போயிற்றோ அதை அவன் வெட்டிவிடலாம். இல்லையேல் தற்கொலை செய்துகொள்ளலாம். தன்னுடைய கூட்டத்தாரின் ஆதரவைத் தேடப் பயன்படும் இவ்வழி அவமானப்பட்டவனின் மானத்தைக் காக்க ஏற்பட்ட கடைசிவழியாகும். கணவன் மனைவிகளிடையே உள்ள பூசல்கள் பெரும்பாலும் இத் தற்கொலை முயற்சிக்குக் காரணம். இம்முயற்சி தன் உயிரை மாய்த்துக்கொள்ள விரும் பும் வெறுப்படைந்த ஒருவனை அவன் பிரிவினர் ஆதரிக்கச் செய்கிறது. எந்த மரங்களில் திருட்டுப் போயிற்றோ அந்த மரங் களை ஏன் வெட்டுகிறார்களென்று சரியாக விளங்கவில்லை. மரங்

களின் மேல் பிணி உண்டாக்கும் வசியம் அறியாதவர்கள் தங்களுடைய நெருங்கிய உறவினன் ஒருவனது தீராத பிணிக்கோ, சாக்காடு விளைக்கக்கூடிய ஒரு தீவினைக்கோ குறிப்பிடுகின்றனர். மரங்களிலிருந்து திருடுபவன் இத் தீவினைக்காளாகிறான். யாராவது ஒருவர் சாபத்திற்குத் துணிந்து திருடிவிட்டால் உடனே மரத்தை வெட்டிவிடுகிறார்கள். இது தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் தற்கொலை முயற்சிக்குச் சமமானது. ஆனால், இரண்டிலும் தன் உறவினர்களின் அநுதாபத்தையோ, ஆதரவையோ பெறுவதற்காகச் செய்வதல்ல; அது வெறுப் புணர்ச்சியின் உச்ச நிலையிலே, தன்னுடைய நிறுவனங்களிலே தேவையானவற்றை அழிக்கத் தேவையான உள்ள உறுதியையும் வஞ்ச எண்ணத்தையும் காட்டுகிறது. தனக்கெதிராகவே இந்த விஷயங்களைப் பயன்படுத்திக் கொண்டாலும் இம்முறைகள் அளவுக்கடங்கியே இருக்கின்றன.

பல சமூகங்கள் தங்களுடைய நிறுவனங்களாலே குறைத்துக் கொண்டு விட்ட குரோதமும், வஞ்ச எண்ணமும், தோபு மக்கள் வாழ்க்கையிலே சிறந்து விளங்குகின்றன. தோபு நிறுவனங்கள் இம்மாதிரிச் செய்கைகளை மிகவும் உயர்த்திச் சொல்கின்றன. மனிதன் கண்டு நடுங்கக்கூடிய கெட்ட எண்ணங்களைக் கண்டு அனைத்துலகிலும் அஞ்சாமல் தோபு வாழ்கிறான். மனித சமுதாயமும், இயற்கைச் சக்திகளும் கொண்டுள்ள வஞ்சத்தை எவன்மேல் தீர்க்க முடியுமோ அப்படிப்பட்ட பலியாகக் கூடியவனைத் தேர்ந்தெடுப்பதுதான் ஒருவனுடைய சிறந்த குண இயல்பு என அவர்கள் கண்ட வாழ்க்கையில் அவன் நம்புகிறான். வாழ்க்கையின் பொருள்களை அடையவேண்டி ஒருவர்க்கொருவர் எதிர் நின்று கொலை செய்யக்கூடிய அளவு தீவிரமான போர் செய்வதுதான் வாழ்க்கை என நினைக்கிறான். சந்தேகமும் கொடுமையுந்தான் போரிலே அவன் நம்பத்தகுந்த ஆயுதங்கள். அவன் இரக்கம் காட்டுவதுமில்லை, இரக்கம் வேண்டி நிற்பதுமில்லை.

6. அமெரிக்காவின் வடமேற்குக் கடற்கரைப் பகுதி

அலாஸ்காவிற்கும் (Alaska) பூகட் ஸௌண்ட்டுக்கும் (Puget Sound) இடையே உள்ள பசிபிக் கடலின் ஓரமுள்ள சிறிய இடத்தில் வாழ்ந்த இந்தியர்கள் திறமை மிக்கவர்களாகவும் பலசாலிகளாகவும் இருந்தனர். அவர்கள் சிறப்பான ஒரு பண்பாட்டைப் பெற்றிருந்தனர். சுற்றிலுமுள்ள பழங்குடிகளின் பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு தனி ஆர்வம் படைத்த அவர்களது பண்பாடு மற்றையோருடைய பண்பாட்டைவிட இணையற்ற ஒன்றாகும். அவர்களுடைய வாழ்க்கை இயல்புகள் நமக்குத் தெரிந்தவற்றினின்றும் வேறுபட்டவை. அப் பண்பாடு நாம் மதிக்கும் வாழ்க்கை இலக்குகளைக்கொண்டதல்ல.

ஆதிக் குடிமக்களைப்போன்று அவர்கள் அதிகமான பொருள்களைப் பெற்றிருந்தவர்கள். அதிக உழைப்பின்றி நிறையக் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு அவர்களது நாகரிகம் உருவாயிற்று. அவர்கள் உணவிற்காக நம்பியிருக்கும் மீன்கள் கடலிலிருந்து நிறையக் கிடைக்கின்றன. ஸால்மன் (salmon), காட் (cod) ஹாலிபட் (halibut), ஸீல் (seal), காண்டில் மீன் (candlefish) ஆகியவைகளை எண்ணெய்கள் எடுக்கவும், சேமிப்புக்காக உலர்த்தியும் பயன்படுத்தினர். கடற்கரையிலே வந்து ஒதுங்கிய திமிங்கிலத்தையும் அவர்கள் உபயோகப்படுத்தினர். இன்னும் தெற்கே உள்ள சிலர் திமிங்கில வேட்டைக்கும் சென்றனர். கடலின்றி அவர்கள் வாழ்க்கை நடக்கமுடியாது. அவர்களது கடற்கரைப் பிரதேசத்திலே மலைகள் வந்து முட்டி நின்றன. அவர்கள் கடற்கரையிலே வீடுகள் கட்டிக்கொண்டார்கள். அவர்களது தேவைக்குத் தக்கவாறு அந்த நாடு அமைந்திருந்தது. ஆழமாகப் பிளவுபட்ட அவர்களது கடற்கரையைச் சார்ந்து அநேக எண்ணி

லடங்கா சிறு தீவுகள் இருந்தன. இவை கடற்கரைப் பகுதியை மூன்று மடங்குக்கும் அதிகமாக ஏற்படுத்திப் படகோட்டுவதற்கு வசதியாகப் பெரிய நீர்ப்பரப்புகளைத் திறந்த பசிபிக் கடலினின்றும் பாதுகாத்து நின்றன. இந்தப் பரப்பில் அவர்களது கடல் வாழ்க்கை பெயர்போனது. இதுதான் உலகத்திலேயே அதிகமாக மீன்கள் குஞ்சு பொரிக்கும் இடம். மற்றைய இடத்திலுள்ளோர் எவ்விதம் கரடிகளின் பழக்கங்களையும், நிலத்திலே விதையூன்று வதற்கு ஏற்ற காலத்தையும் அறிந்திருக்கிறார்களோ அவ்விதம் வடமேற்குக் கடற்கரையிலுள்ள பழங்குடிகள் மீன்களின் கால நிர்ணயங்களை அறிந்திருக்கின்றனர். வீடுகட்டுவதற்காக மரங் களைப் பலகைகளாகப் பிளக்கும்போதும், கோடரி, நெருப்பு இவைகளைக்கொண்டு மரங்களைப் படகுகளாகச் செய்யும்போதும், இதுமாதிரி மற்றும் பூமியில் விளையும் பொருள்களை நாடுகின்ற போதும் அவர்கள் நீர்த்துறைகளுக்கருகாமையிலேயே இருந் தனர். அவர்களுக்குச் சாமான்களை ஓரிடம்விட்டு ஓரிடம் எடுத் துச்செல்ல தண்ணீரைத் தவிர வேறு வழிகள் தெரியாது. கிராமத் திற்கு மரங்களை மிதக்கவிட்டு எடுத்துச்செல்ல வசதியாக நீரோடை களின் அருகிலேயே மரங்களை வெட்டுவர்.

கடலிலே செல்லுகின்ற படகுகள்மூலம் அவர்கள் ஒருவர்க் கொருவர் தொடர்புகொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் துணி வுள்ளவர்கள். வடக்கேயும் தெற்கேயும் வெகுதூரத்திற்குப் பயணம் செய்வார்கள். மதிப்புக்குரிய பெருமக்களுக்கு மற்றப் பழங்குடிகளின் பெருமக்களோடுதான் திருமணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பாட்லேட்ச் (potlatch) என்று சொல்லப்பட்ட பெரிய விருந்துகளுக்குப் பலநூறு மைல்களுக்கப்பால் உள்ளவர் களுக்கு அழைப்பு அனுப்பப்படும். வெகுதூரத்திலுள்ள குடிகளும் படகிலே நிறைந்து அழைப்புக்கிணங்க வந்துசேர்வார்கள். இவர் கள் பேசிய மொழிகள் பலவேறு மொழி மூலங்களாலானபடியால், பெரும்பான்மையோர் சம்பந்தமில்லாத பல மொழிகளிலே உரை யாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. விழாவின் நுண்ணிய விவரங்கள் அவர்களுக்குள்ளே பரவுவதற்கும் அவர்கள் பொது வாகப் பகிர்ந்துகொண்ட நாடோடிக் கதைகளின் கருத்துக் களுக்கும் மொழிகளிலே உள்ள வேற்றுமைகள் தடையாக இல்லை.

அவர்கள் விவசாயத்தின்மூலம் தங்கள் உணவை அதிகமாக் கிக்கொள்வதில்லை. சிறு நிலங்களை க்ளோவர் (clover), சின்குபாயில் (cinquefoil) முதலிய செடிகளால் பயிரிட்டு வந்தனர். வேட்டை யாடுதலையும், மீன் பிடித்தலையும் தவிர, மரவேலை செய்வதுதான் ஆண்களுடைய பெரிய வேலையாக இருந்தது. அவர்கள் மரப்

பலகைகளினுல் வீடுகள் கட்டிக்கொண்டார்கள். குலக் குறியீட்டுக் கம்பங்களைச் (totem poles) செதுக்கிக்கொண்டனர். பெரிய பலகைகளைக்கொண்டு பெட்டியின் பக்கங்களைச்செய்து அவைகளைச் செதுக்கி அழகுபடுத்தினர். கடலிலே செல்லும் படகுகளை மரங்களினுல் குடைந்துகொண்டனர். மரங்களாலான முகமூடிகளையும், வீட்டுக்கான சமான்களையும், பாத்திரங்களையும் செய்துகொண்டனர். உலோகங்களாலான கோடரிகளோ, வாள்களோ இன்றிப் பெரிய தேவதாரு (cedar) மரங்களை வெட்டிப் பலகைகளாகப் பிளந்து சக்கரங்களின் உதவியில்லாமல் கிராமங்களுக்குக் கடல்மூலம் எடுத்துச்சென்று, தங்களுக்கான பெரிய பல குடும்பங்கள் தங்கும்படியான வீடுகளைச் செய்துகொண்டனர். அவர்களுடைய முறைகள் வியக்கத்தக்கதாகக் கணக்கிடப்பட்டு அறிவுக் கூர்மையுடன் அமைந்திருந்தன. அவர்கள் மரத்துண்டுகளைப் பலகைகளாக அறுத்தலைச் சரியாகச் செய்தனர். பெரிய அடிமரங்களை வீட்டுக் கால்களாகவும் உத்தரங்களாகவும் நிறுத்திவைத்தனர். சாய்வான துளைகளையிட்டு மரங்களை வெளியே தெரியாதபடி பிணைக்கும்முறையை அறிந்திருந்தனர். ஐம்பது, அறுபது பேர்களை ஏற்றிக்கொண்டு திறந்த கடலிலே செல்லக்கூடிய பெரிய படகுகளை ஒரே தேவதாரு மரத்தினின்றும் செய்துகொண்டனர். அவர்களுடைய கலைமுறை சிறந்ததாகவும், விசித்திரமானதாகவும், மற்றப் பழங்குடி மக்கள் அடைந்திருந்த அளவு திறம்படைத்ததாகவுமிருந்தது.

வடமேற்குக் கடற்கரைப் பகுதியினரின் பண்பாடு சென்ற நூற்ருண்டின் இறுதியிலே சீர்கெட்டுவிட்டது. நாம் அவர்களைப் பற்றி அறிந்ததெல்லாம் சென்ற தலைமுறைக்கு முன்னுல் வர்ணிக்கப்பட்ட சில பழங்குடிகளைப் பற்றியவைகளேயாகும். வான்கூவர் (Vancouver) தீவிலுள்ள க்வாக்யூட்ல் (Kwakiutl) குடிகளின் பண்பாட்டைப்பற்றித்தான் நமக்கு விவரமாகத் தெரியும். ஆகையினுல், நாம் இங்கே வர்ணிக்கப்போகும் பண்பாடு பெரும்பான்மையாக க்வாக்யூட்ல் மக்களைப்பற்றித்தான் இருக்கும். ஆங்காங்கே மற்றக் குடிமக்களிடம் நாம் காணுகின்ற வேறுபாடுகளையும், இப்பொழுது மறைந்துவிட்ட அந்த நாகரிகத்தில் ஒரு சமயம் பங்குகொண்டிருந்த கிழவர்களின் ஞாபகசக்தியால் நமக்குக் கிடைக்கிற தகவல்களையும்கொண்டு சரிசெய்துகொள்ள வேண்டும்.

தென்மேற்கிலுள்ள ப்யூப்லோக்களைத் (pueblos) தவிர மீதமுள்ள எல்லா அமெரிக்க இந்தியர்களைப்போலவே வடமேற்குக்

கடற்கரைப் பகுதியினரின் டையோனீஷியன் (Dionysian)[1] பண்பாட்டைப் பெற்றிருக்கின்றனர். தன்னிலை மறந்து உணர்ச்சியின் உச்சநிலையை அடைவதற்காக அவர்கள் தங்களது மதசம்பந்தமான சடங்குகளிலே முயல்கின்றனர். அதிலே முக்கியமான நடனக்காரன், தன் ஆட்டத்தின் இறுதியிலே தன் வசமிழந்து வேறுபட்ட நிலையொன்றை எய்தவேண்டும். சாதாரணமான நிலையிலே மிகவும் அச்சுறுத்தக்கூடிய சில காரியங்களைச் செய்துகொண்டு, வேகமாகவும் இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டும் தன் உடம்பை நடுங்கச் செய்துகொண்டு வாயிலே நுரை தள்ள வேண்டும். அவர்கள் தங்கள் உணர்ச்சி வேகத்திலே எதுவும் கெடுதல் செய்துவிடாமலிருக்கச் சில ஆட்டக்காரர்களை நான்கு கயிறுகள்கொண்டு கட்டி, வேலைக்காரர்கள் இழுத்துப் பிடித்துக் கொள்வார்கள். இந்த வெறியை இயற்கைக்கு மேம்பட்ட சக்தி வாய்ந்த ஒன்றென்று அவர்களது நாட்டியப் பாட்டுகள் புகழ்கின்றன.

'மனிதனின் பகுத்தறிவை நாசமாக்கும் ஆவியின் பரிசு
ஓ! உண்மையான இயற்கைக்கப்பாற்பட்ட நண்பன்[2] மக்களை அச்சுறுத்துகிருன்
மனிதனின் பகுத்தறிவை நாசமாக்கும் ஆவியின் புரிசு
ஓ! இயற்கைக்கப்பாற்பட்ட உண்மையான நண்பன், வீட்டிலுள்ள மக்களைச் சிதற அடிக்கிருன்[3].'

ஆடுகிறவன் கைகளிலே எரிகின்ற தணலை வைத்துக்கொண்டு ஆடுகிருன். சிறிதும் கவலையில்லாது கண்டபடி அதனுடன் விளையாடுகிருன். சிலவற்றை அவன் வாயில் போட்டுக்கொள்கிருன். சிலவற்றை அங்குக் கூடியிருக்கும் மக்கள்மீது விட்டெறிந்து, அவர்கள் உடுத்தியிருக்கும் தேவதாருப் பட்டையான உடுப்புகளுக்கு நெருப்பிட்டுச் சுட்டுவிடுகிருன். கரடி ஆட்டக்காரர்கள் ஆடும்பொழுது கீழ்க்காணும் பாட்டுப் பாடப்பட்டது.

'இந்த இயற்கைக்கப்பாற்பட்டவனின் கோபம் மிகக்கொடிது;
கைகளால் ஆட்களை எடுத்துச்சென்று துன்புறுத்துவான்;
பற்களால் எலும்புகளையும் சதையையும் நொறுக்கி,
எலும்புகளோடும் தோலோடும் அவர்களை விழுங்கிவிடுவான்'

[1] டையோனீஷியன் (Dionysian) வாழ்க்கையிலேயே. கடினமானதும் கொடூரம் நிறைந்ததுமான முறைகளைக் கையாளுபவன்.

[2] உலகத்தின் வடக்குக் கோடியிலுள்ள தன்னின உண்ணி (Cannibal) எவருடைய சக்தியால் ஆடுகிருனே அந்த இயற்கைக்கப்பாற்பட்ட ஆதரவாளர்.

[3] அதாவது, அவர்கள் பயத்தினுல் ஓடிவிடுகின்றனர்.

ஆட்டக்காரன் ஏதாவது தவறு செய்துவிட்டால் உடனே இறந்ததுபோல் கீழே விழுந்துவிடவேண்டும். கரடி வேஷக்காரர்கள் இவர்கள்மேல் விழுந்து இவர்களைக் கிழித்துவிடுவார்கள். சில சமயம் இது வெறும் நடிப்பாகவும் இருக்கலாம். ஆனால், மரபு வழக்கப்படி சில குற்றங்களுக்கான தண்டனை குறைக்கப்படுவதேயில்லை. பெரிய விழாக்களுக்காகக் கரடி ஆட்டக்காரர்கள் தங்கள் உடலின்மேல் கறுப்புக் கரடித் தோலால் உடுப்புப் போட்டிருப்பார்கள். சிறிய சில விழாக்களில், கரடியின் முன் கால்களுடைய தோலை நன்றாக நகங்கள் வெளியே தெரியும்படி கைகளில்மட்டும் போட்டுக்கொள்கின்றனர். கரடி ஆட்டப் பாடலை மக்கள் பாடும் பொழுது நெருப்பைச் சுற்றி ஆடி, நிலத்தை நகங்களால் கீறிக் கொண்டு கோபமடைந்த கரடியைப்போல ஆடுவார்கள்.

> 'உலகைச் சுற்றிவந்துகொண்டிருக்கும் கரடியிடமிருந்து
> நாம் எப்படி மறைந்துகொள்ள முடியும்?
> நாம் பூமியின்கீழே தவழ்ந்து சென்றுவிடுவோம்! உலகின் வடக்கே இருந்து வருகிற பெரிய, கொடிய கரடி நம்மைக் காணுவண்ணம் நம்முடைய முதுகைக் குப்பைகளால் மறைத்துக் கொள்வோம்.'

வடமேற்குக் கடற்கரையின் இந்த ஆட்டங்கள் அவர்களுடைய மதசம்பந்தமான கூட்டங்களுடையவை. இந்தக் கூட்டத்தின் இயற்கைக்கப்பாற்பட்ட ஆதரவாளர்களால்தான் இதிலே யாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். இயற்கைக்கப்பாற்பட்ட ஆவிகளைச் சந்திப்பது. வட அமெரிக்காவிலே பல இடங்களில் காணும் தோற்றங்களைப் (vision) போன்றது. ஆயுள் முழுவதும் தனக்குத் துணைபுரியும் ஆவியைச் சந்திக்கத் தனியேயிருந்து பட்டினிகிடத்தல், தன்னையே துன்புறுத்திக் கொள்ளல் ஆகிய அனுபவங்களை அடைகிறான். வடமேற்குக் கடற்கரையிலே நேருக்குநேர் ஆவிகளைச் சந்திப்பது என்பது ஒரு சாதாரண விஷயம். விரும்புகிற இரகசியக் கூட்டத்திலே சேர சில வார்த்தைத் தொகுப்புகளைச் சேர்க்கின்றவிதமே போதும். இத் தோற்றம் மதிப்பை இழக்கவே, இயற்கைக்கப்பால் உள்ள சக்திகளைப் பெற விரும்பும் ஒருவனுடைய ஒரு தெய்வீக வெறிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. க்வாக்யூட்ல் மக்களிலே மதசம்பந்தமான கூட்டத்தில் சேர இருந்த ஓர் இளைஞனை ஆவிகள் (spirits) தூக்கிச்சென்று, காட்டிலே தங்களுடைய சக்திக்குக் கட்டுப்பட்டு இருக்கும்படி சில காலத்திற்குத் தனித்திருக்க வைத்தன. அவன் தான் திரும்பிவந்தவுடன் காட்டவேண்டிய ஒரு வெறிக்காகத் தன்னைத் தயார் செய்துகொண்டு, மிகவும் இளைத்துத் தோன்ற

வேண்டி பட்டினிகிடந்தான். பனிக்காலத்திலே நடக்கும் க்வாக்யூட்ல் மக்களின் மதச்சடங்குகள் எல்லாமே, 'மனிதனின் பகுத்தறிவை நாசமாக்கும் சக்தியோடு' திரும்பி வந்திருக்கும் அந்தப் புதியவனை மறுபடியும் சாதாரண வாழ்க்கைக்குக்கொணரவேண்டி ஏற்பட்டவைதாம்.

தன்னின உண்ணி (Cannibal) ஆட்டக்காரனின் தொடக்கச் சடங்குகள் வடமேற்குக் கடற்கரைப் பகுதியினரின் டையோனீஷியன் பண்பாட்டை வெளிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்டவை. க்வாக்யூட்ல் மக்களிடையே தன்னின உண்ணிகள் கூட்டம் மற்றெதையும்விடச் சிறந்து விளங்கியது. பனிக்கால நடனங்களின்போது அவர்களுக்கு மதிப்புக்குரிய சிறந்த இடங்கள் கொடுக்கப்பட்டன. விருந்திலே தன்னின உண்ணிகள் சாப்பிட ஆரம்பிக்கும்வரை மற்றவர் பொறுத்திருக்கவேண்டும். மனித மாமிசத்தின்மீதுள்ள ஆசைதான் தன்னின உண்ணிகளை மற்றக் கூட்டங்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. அவன் பார்த்துக்கொண்டிருப்பவர்கள்மேல் பாய்ந்து அவர்கள் கைகளில் பற்களால் கடித்து வாய் நிறையச் சதையை எடுத்துவிடுவான். ஒரு பெண்ணின் கைகளிலே ஏந்திக்கொண்டிருக்கும் தயார்செய்யப்பட்ட பிணத்தைக் கண்டு, 'உணவு'க்காக அவன் வெறிகொண்டு ஆடுவதுதான் அவனுடைய நடனம். சில பெரிய விழாக்களிலே, அதற்காகவே கொல்லப்பட்ட அடிமைகளின் உடல்களைத் தன்னின உண்ணி தின்றுவிடுவான்.

ஓஷியானியாவில் (Oceania) உள்ள சில பழங்குடிகளும், ஆப்பிரிக்காவில் உள்ள சில பழங்குடிகளும் அனுசரிக்கும் தன்னின உண்ணுதலுக்கும், க்வாக்யூட்ல் தன்னின உண்ணுதலுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. மனிதஉடலைத் தின்பதற்குக் க்வாக்யூட்ல் மக்கள் வெறுத்தனர். தான் உண்ணவேண்டிய மாமிசத்திற்கு முன்னால் தன்னின உண்ணி நடுங்கிக்கொண்டே நாட்டியமாடும் போது அவனுக்காக இந்தப் பாட்டு பாடப்படும்.

'இப்பொழுது நான் உண்ணப் போகிறேன்;
என் முகம் மிகவும் வெளிறியிருக்கிறது.
உலகத்தின் வடகோடியிலிருக்கும் தன்னின உண்ணி
எனக்குக் கொடுத்திருப்பதை நான் உண்ணப்போகிறேன்.

பார்த்துக்கொண்டிருப்பவர்களின் கைகளிலிருந்து எவ்வளவு தன்னின உண்ணி கடித்து எடுத்திருக்கிறான் என்று கணக்கு வைத்துக்கொள்ளப்படுகிறது. அவன் அவைகளை வாந்தி எடுக்கும்

வரை வாந்திமருந்து சாப்பிடுகிருன். அநேகமாக அவன் அவைகளை விழுங்குவது இல்லை.

உயிரோடிருப்பவரின் கைகளைக் கடித்ததினுல் ஏற்படுகின்ற தீட்டைவிடத் தயார்செய்யப்பட்ட பிணங்கள், அல்லது தன்னினம் உண்ணும் விழாக்களுக்காகக் கொல்லப்பட்ட அடிமைகள் ஆகியவற்றின் சதை மிகவும் கெட்டதாக எண்ணப்படுகிறது. இப்படித் தீண்டப்பட்ட ஒரு தன்னின உண்ணி நான்கு மாதங்களுக்கு விலக்கப்படுகிருன். அவன் தன்னுடைய சிறிய தூங்குகின்ற அறையிலே தனித்திருக்கிருன். வெளியே கரடி ஆட்டக்காரன் காவல்செய்கிருன். அவன் குடிப்பதற்கும் சாப்பிடுவதற்கும் தனக்கெனத் தனிப் பாத்திரங்கள் வைத்திருந்து அந்தக் குறிப்பிட்ட நாட்கள் சென்றவுடன் அவைகளை உடைத்துவிடுகிருன். குவளை உதடுகளிலே படாமல், ஒருமுறைக்கு நான்கு வாயளவு மட்டுமே குடிப்பான். குடிப்பதற்காக ஒரு குழாயையும், தலை சொறிய ஒரு கருவியையும் பயன்படுத்துகிருன். சிறிதுகாலத்திற்கு அவன் சூடான உணவு எதுவும் சாப்பிடக்கூடாது. தனித்திருக்க வேண்டிய காலம் முடிந்தவுடன், மற்றவர்களோடு பழகத் தகுந்தவனுகி வெளியே வருகிருன். ஆனுல், அவன் தன்னுடைய சாதாரண வாழ்க்கையை மறந்துவிட்டதுபோல் பாவனை செய்கிருன். நடப்பதற்கும், பேசுவதற்கும்,சாப்பிடுவதற்கும் அவனுக்குக் கற்றுத்தரவேண்டும். அவனுடைய வாழ்க்கையிலிருந்து வெகுவாகப் பிரிந்துபோய்விட்டபடியாலே வாழ்க்கை வழிகள் அவனுக்குப் பழக்கமற்றவைகளாகக் கருதப்படுகின்றன. அவன் நான்கு மாதம் தனித்திருந்த பிறகு, ஒரு பரிசுத்தத்தன்மையுடையவனுக எண்ணப்படுகிருன். ஓராண்டுக்கு அவன் தன் மனைவியை நெருங்கவோ, சூதாடவோ, வேறு எதுவும் வேலைசெய்யவோ கூடாது. மரபுவழக்கப்படி, அவன் நான்கு ஆண்டுகளுக்கு ஒதுங்கியே இருக்கவேண்டும். மனித உடலைத் தின்பதிலே க்வாக்யூட்ல் மக்களுக்கு இருக்கின்ற வெறுப்பு, அதையே, கொடூரமும் கடுமையும் நிறைந்த டையோனீஷியன் (Dionysian) பண்பாட்டை வெளிப்படுத்தும் சான்ருக அமைந்துள்ளது.

தன்னின உண்ணி, தொடக்கச் சடங்குகளுக்கு முன்னுல் காட்டில் தனித்திருக்கும்போது அங்கே மரத்தின்மீது எறியப்பட்ட ஒரு பிணத்தை எடுத்துக்கொள்கிருன். திறந்து கிடந்ததாலே ஏற்கெனவே தோல் உலர்ந்து போயிருந்த அதை அவன் தன் நடனத்தின்போது உணவாகக் கொள்ளத் தயார்செய்கிருன். அவனுடைய தனித்திருக்கவேண்டிய காலம் குறுகிக்கொண்டு வருகிறது. பழங்குடிகளும் பனிக்கால நடனத்திற்கான ஏற்பாட்டைச்

செய்கின்றனர். அப்போதுதான் அவன் தன்னின உண்ணிகள் கூட்டத்திலே சேர்வதற்கான தொடக்கச் சடங்கு நடைபெறுகிறது. பழங்குடி மக்கள், அவர்களுக்கு விழாவிலே உள்ள உரிமைகளுக்கேற்றவாறு தங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்கின்றனர். தங்கள் மத்தியிலே பனிக்கால நடனத்திற்கான ஆவிகளை அழைக்கின்றனர். உரிமையுள்ளவர்கள் தங்கள் தெய்வீக வெறியைக் காட்டுகின்றனர். ஆவிகளுடன் சுற்றுலா செய்யும் தன்னின உண்ணியை மறுபடியும் அழைக்க அவர்களுக்குச் சிறந்த சக்தி தேவைப்படுகிறதாகையால், அவர்கள் கையாளும் முறைகளிலே கட்டுப்பாடும் பெரிய முயற்சியும் தேவைப்படுகிறது. பரம்பரை வழியாக வந்த சக்திகளாலும், பலமுள்ள நடனங்களாலும் அவனை அழைக்கின்றனர். ஆனால், முதலில் அவர்களுடைய முயற்சி தோல்வியடைகிறது.

கடைசியில், தன்னின உண்ணிக் கூட்டத்தினர் ஒன்று சேர்ந்து வெறியாட்டங்களினால் புதிதாகச் சேருகின்றவனைக் கூப்பிடுகின்றனர். அவன் திடீரென்று கூரையின்மீது காணப்படுகிறான். அவன் தன்வசமிழந்து கூரையின் மீதுள்ள பலகைகளைத் தள்ளிவிட்டு மக்களின் மத்தியிலே குதிக்கிறான். மக்கள் அவனைச் சூழ்ந்துகொள்ள முயன்று தோல்வியடைகின்றனர். அவன் நெருப்பைச்சுற்றி ஓடி, ஒரு இரகசிய வழிமூலம் வெளியே ஓடிவிடுகிறான். போகும்போது தான் அணிந்திருந்த ஒரு ஹெம்லாக் (hemlock) இலை மாலையைப் போட்டுவிட்டுச் செல்கிறான். எல்லாக் கூட்டங்களும் அவனைப் பின்தொடர்ந்து காட்டை நோக்கிச் செல்கின்றன. உடனே அவன் தென்படுகிறான். மூன்று முறைகள் அவன் இம்மாதிரி மறைகிறான். நான்காவது முறை 'பலி' என்று சொல்லப்படும் ஒரு கிழவன் முன்னே போகிறான். தன்னின உண்ணி அவன்மேல் பாய்ந்து கையைப்பிடித்து கடித்துவிடுகிறான். அப்பொழுது மக்கள் அவனைப் பிடித்து, விழா நடக்க வேண்டிய வீட்டிற்குக் கொண்டுவருகின்றனர். அவன் தன் உணர்வின்றி யாரையெல்லாம் நெருங்கமுடியுமோ அவர்களை எல்லாம் கடித்துவிடுகிறான். விழா நடக்கவேண்டிய வீட்டிற்கு வந்ததும் அவனை அதனுள்ளே நுழையச் செய்ய முடிவதில்லை. இறுதியில் தயார்செய்யப்பட்ட பிணத்தைக் கைகளில் ஏந்தி எடுத்துச் செல்லவேண்டிய (அவனோடு புதிதாகக் கூட்டத்தில் சேர இருக்கும்) பெண், பிணத்தை எடுத்துக்கொண்டு நிர்வாணமாக அவன் முன் தோன்றுகிறாள். அவள் தன்னின உண்ணியை எதிர் நோக்கியிருந்துகொண்டு பின்புறமாக நடனமாடிக்கொண்டே அவனை வீட்டினுள் நுழையச் செய்வதற்கு வசப்படுத்துகிறாள். அப்படியும் அவனை வசப்படுத்த முடிவதில்லை. கடைசியில் அவன்

கூரைமீதேறி பலகைகளைத் தள்ளிவிட்டு உள்ளே குதிக்கிறன். க்வாக்யூட்ல் மக்கள் உணர்ச்சி வேகத்தைச் சுட்டுகின்ற ஓர் நடுக்கத்தோடு அவன் தன் தசைகளை ஆட்டிக்கொண்டு மிக வேகமாகத் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளமாட்டாமல் ஆடுகிறன்.

பிணத்துடன் ஆடும் நடனம் மறுபடியும் தன்னின உண்ணி தன்னிலை மறந்திருக்கும் நேரத்தில் மறுபடியும் ஆடப்படுகிறது. பனிக்கால விழாவிலே தன்னின உண்ணியை வழிக்குக் கொண்டுவந்து அவன் நான்கு மாத காலம் தனித்திருக்கச் செய்யும் செய்முறைதான் டையோனீஷியன் பண்பாட்டிலே குறிப்பிடத்தக்க ஓர் அமிசம். அது அவர்களுடைய பண்பாட்டின்படி தடைசெய்யப்பட்டதும், மிகவும் பயங்கரமானதுமான ஒன்றிலே இருக்கின்ற இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியை வெளிப்படுத்துகின்றது.

தன்னின உண்ணியை வசப்படுத்த, இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியைப் பரம்பரையாகப் பெற்ற நான்கு பூசாரிகளால் இந்தச் சடங்கு நடந்தப்பெறுகிறது. புதிதாகச் சேருகிறவன் தன்னை மறந்திருக்கிறன். வேலைக்காரர்கள் அவனைக் கட்டிப் பிடிக்க முயலும்போது அவன் கண்டபடி ஓடுகிறன். உணர்ச்சியின் மிகுதிக்குச் சென்றுவிட்டபடியாலே அவனல் நடனமாட முடிவதில்லை. பலவிதமான பேயோட்டு வித்தைகளால் அவர்கள் தன்னின உண்ணி அடைந்திருக்கும் நிலையை ‘எட்ட’ எண்ணுகிறர்கள். அவன் அடங்கும்வரை எரிகின்ற தேவதாருப்பட்டைகளை அவன் தலைக்குமேலே சுற்றி நெருப்பினல் பேயோட்டுதலை முதலில் செய்கிறர்கள். ஒரு பெட்டியிலே உள்ள தண்ணீரில் சுட்ட கற்களைப்போட்டு அந்த நீரைச் சூடாக்கி அவன் தலையிலே கொட்டி நீரினல் பேயோட்டுதல் நடத்துகிறர்கள். பிறகு அவர்கள், உணர்ச்சிவசப்பட்டிருக்கும் தன்னின உண்ணியைப்போல் தேவதாருப்பட்டையால் ஓர் உருவம் செய்து அதைத் தீயிலிட்டு எரிக்கிறர்கள்.

மாதவிடாய் இரத்தத்தைக்கொண்டு செய்யும் பேயோட்டுதல்தான் இறுதியாகச் செய்யப்படுவது. வடமேற்குக் கடற்கரையிலே மாதவிடாய் இரத்தமானது உலகெங்கிலும் இல்லாத அளவுக்குத் தீய இயல்புள்ளதாகக் கருதப்படுகிறது. மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் ஒதுக்கிவைக்கப்பட்டனர். அவர்கள் இருந்தால் தெய்வீகச் செயல்கள் எதுவும் பயனற்றுப்போய்விடும். அவர்கள் சிறு ஓடைகளைத் தாண்டவோ, கடலருகே செல்லவோ கூடாது. ஏனென்றல், ஸால்மன் (Salmon) என்ற மீன்கள் கோபப்பட்டுவிடும். தெய்வீகமுறையில் செய்யப்படும் மருத்துவத்தினல்

குணமடையாமல் சாவானது நிகழுமேயானால், அதற்குக் காரணம் தேவதாருப்பட்டைகளாலான வீட்டிலே, மாதவிடாய் இரத்தம் எங்கோ சிறிது பட்டிருக்கவேண்டும் என நம்பப்படுகிறது. ஆகையால், இறுதியாகத் தன்னின உண்ணிக்குச் செய்யும் பேயோட்டுதலின்போது, பூசாரி, உயர் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பெண்களுடைய மாதவிடாய் இரத்தம் உள்ள தேவதாருப்பட்டையைக்கொண்டு தன்னின உண்ணியின் முகத்தில் புகையேற்றுகிறான். இந்தச் சடங்கு நடக்கும்போது தன்னின உண்ணியின் ஆட்டம் குறைந்துவிடுகிறது. நான்காவது முறை நடனத்தில் அவன் வெறி அவனை விட்டகன்று சமாதான மடைகிறான்.

வடமேற்குக் கடற்கரைப் பழங்குடிகளுடைய டையோனீஷியன் பண்பாட்டுச் சாயல் அவர்களது நடன விழாக்களிலும், புதிதாக ஒருவன் கூட்டத்தைச்சேர அனுஷ்டிக்கும் முறைகளிலும் உள்ளதுபோலவே அவர்களது பொருளாதார வாழ்க்கை, போர் முறை, துக்கம்கொண்டாடுதல் ஆகியவைகளிலும் கடுமை நிறைந்து காணப்படுகிறது. அவர்கள் அப்போலோனியன் (Apollonian) முறைகொண்ட ப்யூப்லோ (Pueblo) மக்களுக்கு எதிர்க் கோடியிலுள்ளனர். வட அமெரிக்காவிலுள்ள மற்றைய பல பழங்குடிகளுக்கு இணையாக இருக்கின்றனர். அவர்களிடையே சொத்துரிமை, செல்வத்தைக் கையாளுதல் போன்றவைகளில் அவர்களுக்குள்ள சில தனி எண்ணங்களால் உருவாக்கப்பட்ட பண்பாடு தனித் தன்மை வாய்ந்தது.

வடமேற்குக் கடற்கரைக் குடிகள் தங்களுக்கென்று நிறையப் பொருள்கள் சேர்த்தனர். அவைகளின்மீது கண்டிப்பான உரிமையும்கொண்டாடினர். அவைகள் பரம்பரையாக வரும் சொத்துக்கள். அவைதான் அவர்களுடைய சமுதாயத்தின் அடிப்படை; அவர்களிடையே இரண்டுவிதமான சொத்துக்கள் இருந்தன. சொந்தக்காரர்களின் கூட்டம் நிலத்தையும், கடலையும் பொதுவாக உரிமைகொண்டாடிற்று. அவர்களுடைய கூட்டத்தின் நபர்களுக்கு அது வழிவழியாக வந்தது. பயிர் செய்யப்பட்ட நிலங்கள் இல்லாவிட்டாலும், வேட்டையாடும் இடம், பழங்கள், வேர்கள் கிடைக்குமிடங்கள் இவை யாவும் சொந்தங்கொண்டாடப்பட்டன. யாரும் இந்தக் குடும்பச் சொத்தில் தலையிட முடியாது. குடும்பங்கள் மீன் பிடிக்குமிடங்களின்மீதும் இதுபோன்று கண்டிப்பான உரிமைகொண்டாடின. அப்போலோனியன் (Apollonian) வாழ்க்கையிலே எளிமையையும் நுண்கலைகளையும் கையாளுபவர் டையோனீஷியன் பண்

பாட்டுக்கு எதிரானவர்கள் தங்களுடைய கிராமத்திற்கு அருகே இருக்கும் கடற்கரை வேருெரு கூட்டத்திற்குச் சொந்தமாக இருப்பதால், அவர்கள் வெகுதூரம் சென்று தங்களுக்குச் சொந்தமான கடற்கரையிலே கிளிஞ்சல்களைத் தோண்டவேண்டி ஏற்படலாம். இந்த இடங்கள் வெகு காலத்திற்கு உரிமைகொண்டாடப் படுகின்றன. அதற்குள் கிராமமே இடம் மாறிவிடவும்கூடும். ஆனுலும், கிளிஞ்சல் எடுக்கும் இடங்களின்மீதுள்ள உரிமைகள் மாறுவதில்லை. கடற்கரைமட்டுமின்றி ஆழ்கடலின் பரப்புகளும் சொந்தங்கொண்டாடப்பெற்றன.ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்குச் சொந்தமான ஹாலிபட் (Halibut) என்ற மீன் பிடிக்கும் பரப்புகள் சில குறியீடுகளால் அடையாளம் செய்யப்பட்டன. நதிகளும் இவ்வாறே பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வஸந்த காலத்திலே (Spring) கான்டில் மீன் பிடிக்கச் சொந்தங்கொண்டாடப் பட்டன. அவர்களுக்குச் சொந்தமான நதியின் பகுதிகளிலே மீன் பிடிக்கக் குடும்பங்கள் வெகு தொலைவிலிருந்து வருவதுண்டு.

இவைகளைத் தவிரச் சொந்தங்கொண்டாடும் மற்ருெருவகை மதிப்புயர்ந்த சொத்துக்களும் உண்டு. க்வாக்யூட்ல் மக்களிடையே வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின்மீது எவ்வளவு அதிகமான சொந்தங்கொண்டாடுவது இருந்தாலும் அதுவே முடிவான ஒன்றல்ல. வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை விட அதிகமாக மதிக்கப்படுபவை சில பெயர்கள், புராணங்கள், பாட்டுகள் ஆகியவைபோன்ற பொருளல்லாத சில விஷயங்களாகும். இவைகளிலே வீட்டிலே உள்ள பெயரிட்ட தூண்கள், கரண்டிகள், விளம்பரச் சின்னங்கள் முதலிய பொருள்களும் சேர்ந்தவை. இவைகளின் மேலுள்ள உரிமைகள் செல்வமுள்ள ஒருவனுடைய பெருமைக்குச் சான்ருகும். இந்த உரிமைகள் எல்லாம் இரத்தப் பரம்பரைவழி வந்தவையாயினும் பொதுவாக வைத்துக்கொள்ளப்படாமல், தனி ஒருவனல் வைத்துக்கொள்ளப்பட்டு உபயோகிக்கப்பட்டு வந்தன.

மற்ற எல்லாவற்றிற்கும் அடிப்படையான உயர்குடிப் பட்டங்கள்தான் (nobility titles) இவைகளில் சிறந்த உரிமைகளாகும். ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு மதசம்பந்தமான கூட்டமும் பல பட்டப்பெயர்களைப் பெற்றிருந்தார்கள். தங்களுடைய செல்வநிலை, பரம்பரை வாரிசுரிமை இவைகளுக்குத் தக்கவாறு அப் பெயர்களைப் பெற்றிருந்தனர். இப் பட்டப் பெயர்கள் பழங்குடிகளிலே அவர்களுக்கு உயர்மக்கள் இடங்களை அளித்தன. அவைகள் தங்களுடைய பெயர்களாயிருந்தாலும்

உலகந்தோன்றியதிலிருந்தே கூட்டவோ, குறைக்கவோ படாத பெயர்களென மரபுவழியே நம்பப்படுகின்றன. ஒருவன் அப் பெயரை எடுத்துக்கொள்ளும்பொழுது, அப் பெயரைத் தங்கள் வாழ்நாளிலே கொண்டிருந்த தன் மூதாதையர்களின் பெருமை களெல்லாம் தனக்கிருப்பதாக நினைக்கிறன். அவன் தன் வாரிசுக்கு அப் பெயரைக் கொடுக்கும்பொழுது அதைத் தன்னு டையது என்று சொல்லிக்கொள்ளும் உரிமையையும் விட்டு விடுகிறன்.

அப்படிப்பட்ட பெயரை எடுத்துக்கொள்வது இரத்த வழித் தோன்றிய பரம்பரையைமட்டும் பொறுத்ததன்று. முதலாவ தாக மூத்த மகனுக்கு மட்டும்தான் இந்தப் பட்டப்பெயர் களின்மீது உரிமை உண்டு. இளையவர்கள் பட்டமின்றிச் சாதாரண மக்களாகக் கருதப்பட்டனர். இரண்டாவதாகப் பட்டப்பெயர் பெறும் உரிமை அதிகமான செல்வத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் நிச்சயிக்கப்படுகிறது. பெண்களுக்கு வீட்டு வேலை மாத்திரம் பெரிதன்று. அதிக அளவிலே பாய்கள், கூடைகள், தேவதாருப் பட்டைகளால் ஆன கம்பளங்கள் ஆகியவை தயார் செய்யவேண்டும். ஆடவர் களால் இதற்காகவே தயார் செய்யப்பட்ட மதிப்புயர்ந்த பெட்டி களில் இவைகளைச் சேமித்து வைக்கிறர்கள். ஆடவரும், நாணயமாக உபயோகிக்கும் படகுகள், சங்குகள், பற்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைக்கிறர்கள். பெரிய மனிதர்கள் அதிக அளவு பொருள்களைச் சொந்தமாகவோ, வட்டிக்கு வாங்கியோ வைத்திருந்தார்கள். உரிமைகளைப் பெறுவதைச் சட்ட பூர்வமாக ஆக்குவதற்கு இவைகள் பணநோட்டுகள் (கரன்ஸி) போல அடிக்கடிக் கைமாறிக்கொண்டேயிருந்தன.

அதிக அளவிலே வட்டி வசூல் செய்கின்ற ஒரு செலா வணியிலே இந்தப் பொருள்கள் நாணயங்களாகப் பயன்பட்டன. ஓர் ஆண்டுக் கடனுக்கு நூறு சதவிகிதம் வழக்கமாக வட்டி வசூல் செய்யப்பட்டது. ஒருவன் வெளியே வட்டிக்கு எவ்வளவு பொருள் கொடுத்து வைத்திருக்கிறன் என்பதைப் பொறுத்து அவனுடைய செல்வம் மதிப்பிடப்பட்டது. கடலிலிருந்து உணவு அபரிமிதமாக, எளிதாகக் கிடைப்பதாலும், நாணயங்களாகப் பயன்படும் சங்குகளைக் கடலிலிருந்து எடுத்து ஈடு செய்து கொள்ள முடிவதாலும், மதிப்புப் பெற்ற பொருள்களைக் குறிக்கச் 'செப்பு' பயன்படுத்தப்படுவதாலுந்தான் இம்மாதிரிக் கொள்ளை வட்டி வாங்குதல் நடைபெற முடிகிறது. இந்த அடையாள மிடப்பட்ட அந் நாட்டுச் செப்புத்தகடுகள் புத்தாயிரம் கம்பளங்

களுக்கதிகமான பொருளை மதிப்பிடுகின்றன. சென்ற தடவை அவைகள் கைமாறும்பொழுது அவைகளுக்காக எவ்வளவு பொருள்கள் தரப்பட்டனவோ அந்த மதிப்பைத்தான் அவை பெற்றிருக்கின்றன. எந்தப் பண்டமாற்றிலேயும் திருப்பித்தர வேண்டிய பொருள்களைச் சேர்ப்பது ஒரு தனிமனிதனின் வேலையன்று. இதில் ஈடுபடுகிறவன் ஒரு கூட்டத்தின் தலைவனுகவோ, இருவேறுபட்ட குடிமக்களிடையே நடக்கும் பண்டமாற்றினால் ஒரு குடிமக்களுடைய தலைவனுகவோ இருக்கிருன். அவர்களுடைய கூட்டத்திலேயுள்ள எல்லாத் தனி மனிதர்களின் சொத்துக்கள் பேரிலும் அவனுக்கு அதிகாரம் உண்டு.

ஒவ்வொரு மதிப்புக்குரியவரும், ஆணுக இருந்தாலும் பெண்ணுக இருந்தாலும், சிறு குழந்தையாக இருக்கும்போதே இந்தப் பொருளாதாரப் போட்டியில் இறங்குகின்றனர். குழந்தையாக இருக்கும்பொழுது, அவன் பிறந்த இடத்தைக் குறிக்கக்கூடிய ஒரு பெயர் அவனுக்கு இடப்படுகிறது. சிறந்த மதிப்புக்குரிய பெயரை அவன் எடுத்துக்கொள்ளும் காலம்வந்தவுடன், குடும்பத்திலுள்ள பெரியவர்கள் அவனிடம் நிறையக் கம்பளங்களைக் கொடுத்துப் பகிர்ந்தளிக்கச் சொல்கின்றனர். அவன் பெயரை எடுத்துக்கொண்ட உடனே (அக் கம்பளங்களை) அச் செல்வத்தைத் தன் சொந்தக்காரர்களிடையே பகிர்ந்தளிக்கிருன். குழந்தையிடமிருந்து பரிசுகள் பெற்றவர்கள், உரிய காலத்திலே அவைகளை அதிக வட்டியோடு சேர்த்துத் திருப்பித் தருவதற்கு உறுதிகொள்கின்றனர். இப்படிப் பயனடைந்தவர்களிலே தலைவன் ஒருவன் இருப்பானேயாகில், அவன் அடுத்துச்செய்கின்ற பொதுப் பண்டமாற்றின்போது அக் குழந்தைக்குத் தான் பெற்றுக் கொண்டதைப்போல மூன்றுமடங்கு கொடுக்கிருன். அந்த ஆண்டு பையன் தனக்கு முதலிலே நிதி கொடுத்துதவியவர்களுக்கு நூறு சதவிகிதம் வட்டி சேர்த்துத் திருப்பிக்கொடுக்க வேண்டும். மிகுதியுள்ளவற்றை அவன் தன் பெயரிலேயே வைத்துக்கொள்ளலாம். அநேகமாக இது அவன் முதலிலே வைத்திருந்த கம்பளங்களுக்குச் சமமாக இருக்கும். மரபுவழியே பாட்லேட்ச் (potlatch) என்ற முறைப்படி பெயர்பெறுவதற்குக் கட்டணம் செலுத்த அவன் தயாராகும்வரை, சுமார் இரண்டாண்டுகளுக்கு அவன் தன்னுடைய சொத்தை வட்டிக்குவிட்டு வசூல் செய்கிருன். அவன் தயாரானவுடன் அக் குடிகளிலே முதியவர்களும் அவன் உறவினர்களும் ஒன்றுகூடுகிருர்கள். மக்கள் முன்னிலையில், அந்தக் குடிமக்களின் தலைவன், மற்றும் வயது முதிர்ந்தவரின் எதிரில் அவனுடைய தகப்பன், அவனுடைய நிலையைக் குறிக்கும் ஒரு பெயரைக் கொடுக்கிருன்.

இது முதற்கொண்டு பையன் அக் குடியினரின் பட்டம் படைத்த மனிதர்களிடையே ஒரு தகுதியைப்பெற்று விளங்கு கிறன். அதற்குப் பிறகு அவன் கலந்துகொள்ளும் அல்லது கொடுக் கும் பாட்லேட்ச் விழாக்களிலே இன்னும் சிறந்த பெயர்களை எடுத் துக்கொள்கிறன். பாம்புகள் தோல் மாற்றிக்கொள்வதுபோல முக்கியமான மனிதன் அடிக்கடிப் பெயரை மாற்றிக்கொள்கிறன், அப்பெயர்கள் அக்குடிமக்களிடையே அவனுடையதகுதியையும், குடும்ப உறவுகளையும், செல்வத்தையும் குறிக்கின்றன. திருமணம், பேரக்குழந்தை பருவமடைதல், போட்டித் தலைவனுக்குப் பிற குடி மக்களிடையே ஏற்படும் சவால் ஆகிய எதற்காகவேனும் பாட் லேட்ச் நடைபெற்றல் அப்பொழுது தனக்கோ அல்லது தன் வாரி சுக்கோ புதிய பட்டப்பெயர்களையும் அதற்கான உரிமைகளையும் பெறுகிறன்.

க்வாக்யூட்ல் மக்களிடையே இதுபோன்ற தகுதிகளை அடை வதற்குத் திருமணம் பயன்பட்டது. அவர்களுக்கு வடக்கே உள்ள மற்ற வடமேற்குக் கடற்கரை மக்கள் தாய்க்குலவழி யைப் (matrilineal) பின்பற்றியிருந்தனர். ஆண்கள் தகுதிகளை அனுபவித்தபோதிலும் தகுதிகள் பெண்கள்வழி பரம்பரையாக வந்துகொண்டிருந்தது. ஆனல், க்வாக்யூட்ல் மக்கள் முதலில் சிறு கூட்டங்களாக வசித்தனர். ஆண்கள் தங்கள் தந்தைகளின் கிராமங்களிலே வீடுகள் கட்டிக்கொண்டனர். இது அவர்களு டைய சமூகத்தின் அடிப்படையை மாற்றினலுங்கூட முற்றிலும் அதனுடைய பழமையான தன்மையை ஒதுக்கிவிடவில்லை. ஒரு நடுநிலையானது ஏற்பட்டது. அநேக உரிமைகள் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டன. அதாவது தன் மகளை மணந்து கொண்டவனுக்கு ஒருவன் தன் உரிமைகளை வழங்கினன். ஆனல், அந்த உரிமைகள் மருமகனல் அனுபவிக்கப்பட்டனவே யன்றி, அவனுடைய சொந்தச் சொத்தாக மாறவில்லை. அவைகள் அவன் உறவினர்களுக்காக ஒரு சேமிப்பு நிதிபோலப் பாதுகாத்து வரப்பட்டன. முக்கியமாக உரிமைகளைக் கொடுத்தவனது மக ளுடைய குழந்தைகளுக்காகப் பாதுகாக்கப்பட்டன. தாய்வழிக் குடும்பங்கள் இல்லாதுபோனலும் தாயின் வழியே சொத்துரிமைப் பரம்பரையானது இம்மாதிரி உறுதிப்படுத்தப்பட்டது.

ஒருவனுடைய குடும்பத்தாரால் அவனுடைய திருமணத்தின் போது கொடுக்கப்படும் மணப்பெண்ணுக்கான பரிசு (bride price) திருப்பித் தரப்படுவதுபோல, அவனுக்குக் குழந்தைகள் பிறந்த வுடனே அல்லது அவனது குழந்தை பருவமடையும்போதோ மருமகனுக்கு உரிமைகளும் சொத்துக்களும் வழங்கப்பட்டன.

சொல்லப் போனுல் ஒருவன் எப்படிச் 'செப்பைப்' பெறுகிருனே அதேபோலத் தன் மனைவியையும் பெற்ருன். ஒரு செய்கையை உறுதிப்படுத்த எப்படிப் பொருளாதாரப் பண்டமாற்றின்போது கட்டணம் கட்டவேண்டுமோ அப்படியே கட்டணம் உடனே செலுத்தப்படவேண்டும். திருமணத்தின்போது கொடுக்கப்படும் மணப்பெண்ணுக்கான பரிசு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு மணமகனின் கூட்டத்தார் பெருமை கோருகிருர்கள். முதல் குழந்தை பிறந்தவுடனே கொடுக்கப்படும் பாட்லேட்ச் விழாவின்போது இந்தத் தொகை வட்டியுடன் சேர்த்துத் திருப்பித் தரப்படவேண்டும். இந்தக் கட்டணம் செலுத்தப்பட்டவுடனே மனைவி அவளது குடும்பத்தாராலே திரும்பி அடையப்பெற்ருள் என்று சொல்லப்படுகிறது. அவளுடைய திருமணம் 'இனமாக (தன் கணவன்) வீட்டிலே தங்கியிருக்கிருள்' என்று சொல்லப்படுகிறது. ஆகையால், கணவன் தன் மனைவியைத் தங்கவைக்கவேண்டி மற்றுமொரு கட்டணத்தைச் செலுத்துகிருன். இதற்குப் பதிலாக மனைவியின் தகப்பன் செல்வத்தைக் கொடுக்கிருன். திருமணத்தினுல் உண்டாகும் குழந்தைகளுக்காகத் தன் மகளுடைய கணவனுக்குக் குழந்தைகளின் பிறப்பின்போதும், அவர்கள் பருவமடையும்போதும், மாமன் தன் உரிமைகளையும் சொத்துகளையும் ஆயுள் முழுதும் வழங்கிக்கொண்டேயிருக்கிருன்.

க்வாக்யூட்ல் மக்களிடையே மதசம்பந்தமான அமைப்புகளும் மதசம்பந்தமற்ற அமைப்புகளுமாக இரட்டித்திருந்தன. உயர்குடிப் பட்டப்பெயர்கள் கொள்ளுவதிலே எப்படி அவர்கள் வழிவழியாக ஓர் அமைப்பைக் கொண்டிருந்தார்களோ, அவ்விதமே இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகள்கொண்ட தன்னினஉண்ணிகள், கரடிகள், முட்டாள்கள் என்பன போன்ற கூட்டங்களிலும் கொண்டிருந்தார்கள். குடும்பங்களில் உள்ளதுபோலவே அவர்களிடை பலதரப்பட்ட பட்டப்பெயர்கள் இருந்தன. மதசம்பந்தமான உயர்நிலை, தாழ்நிலை வரிசையிலும் மற்றவைகளிலும் ஒரு தனியிடம் பெருதவன் தகுதியற்றவனுகக் கருதப்பட்டான். ஓராண்டு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோடையில் மதசம்பந்தமற்ற அமைப்பு அமுல் நடத்தப்பட்டது. அவனவன் பெற்றிருந்த உயர்குடிப் பட்டப்பெயர்களுக்கேற்ப இடங்களைப் பெற்ருன். பனிக்காலத்திலே இந்த முறை ஒதுக்கிவைக்கப்பட்டது. பனிக்கால விழாவின் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளின் ஊதல் கேட்டவுடனே, எவனையும், மதசம்பந்தமற்ற பெயர்களால் குறிப்பிடுவது விலக்கப்படவேண்டும். அம்மாதிரி பெயர்களைக்கொண்ட சமூக அமைப்பு ஒதுக்கி

வைக்கப்படுகிறது. பனிக்கால மாதங்களிலே 'அவர்களை இயற்கைக்கப்பாற்பட்ட கூட்டங்களிலே ஈடுபடச்செய்த' ஆவிகளுக்குத் தக்கவாறு பிரித்து அமைக்கப்படுகிறது. பனிக்கால விழாக்களின்போது ஒருவன் தன்னின உண்ணி, க்ரடி, முட்டாள் அல்லது வேறு ஏதாவது கூட்டத்திலே தான் பெற்றிருக்கும் பெயரின் பெருமைக்குத் தக்கவாறு ஒரு நிலையைப் பெற்றான்.

நாம் எண்ணுகிறபடி இவை இரண்டுக்கும் வேறுபாடு அதிகமில்லை. எப்படி மதசம்பந்தமற்ற உயர்குடிப்பட்டங்கள் வமிச வாரியாக வந்தனவோ அதேபோல் மதசம்பந்தமுள்ள கூட்டங்களிலும் சிறந்த பட்டங்கள் வாரிசாகக் கொடுக்கப்பட்டன. திருமணத்திற்காகக் கொடுக்கவேண்டிய வரதட்சிணை (dowry) வாக்குறுதியிலே இவைகளும் முக்கிய அங்கம் வகித்தன. தன்னின உண்ணி, முட்டாள் முதலிய கூட்டங்களிலே சேருவதற்கு, ஒருவனது பிறப்பின் மூலமோ, திருமணத்தின் மூலமோ பெறும் உரிமைகள்தாம் காரணமாயிருந்தன. சொத்தைப் பகிர்ந்தளிப்பதன்மூலம் இப்படிக் கிடைக்கும் உரிமைகள் உறுதிசெய்யப் பட்டன. மதசம்பந்தமான உறவுகளைக்கொண்டு அமைக்கப் பட்ட சமுதாய வாழ்க்கையின் காலங்களிலே, அவர்களது மதசம்பந்தமற்ற அமைப்பு முற்றிலும் கைவிடப்படுவதில்லை. மதசம்பந்தமற்ற அமைப்புகளுக்கு ஈடான, இரண்டாவது அமைப்பின் உரிமைகளை அவர்கள் வெளிக்காட்டுகிறார்கள்.

மூதாதையரிடமிருந்தோ, பரிசுமூலமாகவோ, திருமணத்தின் வாயிலாகவோ பெறுகின்ற உரிமைகளைக் கொண்டாடுவதிலும், உறுதிசெய்துகொள்வதிலும் வடமேற்குக் கடற்கரை இந்தியர்களின் வாழ்க்கை செலவிடப்பட்டது. இவைகளிலே ஒவ்வொருவனும் அவன் தகுதிக்கேற்பப் பங்குகொண்டான். அடிமைகள் மட்டும் இதிலிருந்து விலக்கப்பட்டனர். இந்தப் பண்பாட்டிலே, உண்மையான பொருளாதாரத் தேவைகளையும் அவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளுதலையும் தாண்டிய ஒரு நிலையிலே செல்வத்தைக் கையாளுதல் கொண்டுசெல்லப்பெற்றது. அவைகளிலே, முதல், வட்டி, விரயம் ஆகியவை உட்பட்டிருந்தன. பொருளாதாரப் பொருள்கள்மட்டுமின்றிப் பண்டமாற்றுக்காக மட்டும் தேவைப்படும் பாட்லேட்ச்சுக்கான பெட்டிகளில் வைக்கப்படும் பொருள்களும் பொருளாதார ஈடுபாடே இல்லாத உரிமைகளும் செல்வமாகக் கருதப்பட்டன. தலைவர்களின் பெயர்களும், அவர்கள் வீட்டுத் தூண்கள், நாய்கள், படகுகள் ஆகியவற்றின் பெயர்களும், பாட்டுகளும், புராணங்களும் செல்வமாக இருந்தன.

ஆட்டக்காரனை ஒரு மூலையில் கட்டும் உரிமை, ஆட்டக்காரன் முகத்திலே தடவிக்கொள்ளும் கொழுப்பைக் கொண்டுவரும் உரிமை, அவன் மறுபடி துடைப்பதற்காகக் கிழித்த தேவதாருப் பட்டையைக் கொண்டுவரும் உரிமை ஆகிய மதிப்புக்குரிய உரிமைகள் எல்லாம் செல்வமாகக் குடும்பப் பரம்பரையாக வந்து கொண்டிருந்தன. அருகிலுள்ள பெல்லா கூலா (Bella Coola) என்ற குடிமக்களிலே, குடும்பப் புராணங்கள் மிகவும் மதிக்கப் பட்டுப் பாதுகாக்கப்பட்ட சொத்தாக இருந்தன. எங்கே அவை தங்கள் குடும்பத்தில் பிறக்காதவர்களுக்குக் கிடைத்துவிடுமோ என்று அவர்களுடைய உயர்மக்கள் தங்கள் குடும்பத்திற் குள்ளேயே திருமணங்கள் செய்துகொள்வதை வழக்கமாகக் கொண்டனர்.

வடமேற்குக் கடற்கரையில் செல்வத்தைக் கையாளுவது, பல வழிகளில் நமது பொருளாதார ஏற்பாடுகளைக் கேலிசெய்வது போலுள்ளது. இக் குடிகள் செல்வத்தை, அவற்றுக்கீடாகப் பொருளாதாரப் பொருள்களைப்பெற உபயோகப்படுத்தவில்லை. வெற்றியடைய அவர்கள் கொண்டிருந்த விளையாட்டில் ஒரு குறிப் பிட்ட மதிப்புடைய நாணயங்களாகக் கொண்டிருந்தனர். அவர் கள் வாழ்க்கையை, அவர்கள் பெற்றிருந்த உரிமைகளால்கொண்ட பட்டப்பெயர்களாலான படிகள்கொண்ட ஓர் ஏணியாகப் பாவித் தனர். ஒவ்வொரு படி மேலே ஏறுவதற்கும், செல்வத்தை அதிக மாகப் பகிர்ந்தளிக்கவேண்டும். அவைகள் வட்டியுடன் திருப்பித் தரப்பட்டு மேலே ஏறுபவன் அடுத்தபடி ஏறுவதற்குத் துணை புரிகின்றன.

உயர்குடிப் பட்டங்களை உறுதிசெய்துகொள்வதிலே செல் வத்தை ஈடுபடுத்துவது அவர்களது வாழ்க்கையின் ஒரு பாங்கு. சொத்தைப் பகிர்ந்தளிப்பது அவ்வளவு சாதாரணமானதல்ல. வடமேற்குக் கடற்கரைக் குடிமகன், உயர்குடிப் பட்டங்கள், செல்வம், அடையாளச் சின்னங்கள், உரிமைகள் ஆகிய இவை களின்மேல் கொண்டுள்ள மதிப்பு அவர்களது பண்பாட்டின் தன் மையை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய எதிராளியை அவமானப்படுத்துவதற்கான போட்டியில் அவர்கள் அவைகளைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு தனி மனிதனும், அவன் சக்திக் கேற்றவாறு, பிறரை, சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதிலே, மிஞ்சி விடவேண்டும் என்று போட்டியிட்டான். முதன் முதலாகப் பரிசுச் சொத்தைப்பெற்ற பையன் உடனே தன்னிடமிருந்து பரிசை வாங்கிக்கொள்ள ஓர் இளைஞனைத் தேர்ந்தெடுத்தான். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞன் தோல்வியை ஒப்புக்

கொள்ளாமல் மறுக்கமுடியாது. அவன் அதே அளவுகொண்ட சொத்தைக்கொண்டு பரிசை ஈடுசெய்யவேண்டும். திருப்பித் தருவதற்குரிய காலம் வந்தவுடனே, வட்டியுடன் ஈடுசெய்வதற்கு வேண்டிய, முதலிலே கிடைத்த பரிசைப்போல் இரண்டு மடங்கு அவனிடத்திலே இல்லாவிட்டால் அவன் அவமானப்பட்டு நிலை யிறங்கிவிடுகிறான். அவனுடைய எதிரியின் கௌரவம் அதற் கேற்ப உயர்கிறது. இப்படித் தொடங்கும் போட்டி ஆயுள் முழுவதும் நீடிக்கிறது. அவன் வெற்றியாளனாக இருந்தால் மேலும் வலிமைபெற்ற எதிரிகளோடு இன்னும் அதிகமான சொத்து களைக்கொண்டு விளையாடுகிறான். அது ஒரு சண்டையே ஆகும். 'நாங்கள் போர்க்கருவிகளைக்கொண்டு சண்டை செய்வதில்லை, சொத்துகளைக்கொண்டு சண்டை செய்கிறோம்' என்று சொல் கிறார்கள். ஒருவன் தன் எதிராளியைச் 'செப்பை'க் கொடுப்பதினால் வெல்வதை, போரணியிலே வெல்வது போன்று எண்ணுகிறான். க்வாக்யூட்ல் மக்களுக்கு இரண்டும் ஒன்றுதான். அவர்களுடைய ஒரு நடனம் 'வீட்டிற்குள்ளே இரத்தம் கொண்டுவருதல்' என்று பெயரிடப்பட்டது. போரிலே தலைகளைக் கொய்து கொணர்வது போல் அவர்கள் ஹெம்லாக் (hemlock) மாலைகளை எடுத்து வந் தனர். அவைகளை நெருப்பிலிட்டு, அவைகள் யாரைக் குறிக்கின் றனவோ அவ் விரோதிகளின் பெயர்களைக் கூப்பிடுவார்கள். அவைகள் எரிக்கப்படுகின்ற நெருப்பு பற்றி எரியும்போது கூச்ச லிடுகிறார்கள். அந்த மாலைகள் இவர்கள் கொடுத்த 'செப்பு'களைக் குறிக்கின்றன. சொத்துகளைக் கொடுத்து யாரை இவர்கள் தோற்கடிக்கின்றனரோ அந்த எதிரிகளின் பெயர்களைத்தான் கூவி அழைக்கிறார்கள்.

க்வாக்யூட்ல் மக்களுடைய செயல்களின் நோக்கமெல்லாம் தன்னைத் தன்னுடைய எதிரியைவிட உயர்த்திக் காட்டுவதே யாகும். தடைசெய்யப்படாத முறையினால் தங்களுடைய இந்த உயர்த்திக்கொள்ளும் ஆசையை அவர்கள் வெளிக்காட்டினார்கள். வெளியிலிருந்து வருபவர்களை இகழ்தலும், தங்களை மிகையாகப் பெருமைப்படுத்திக்கொள்வதிலும் இது வெளிப்படுகிறது. பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இவர்களது தலைவர் கள் பாட்லேட்ச் விழாவின்போது நடத்துகின்ற உரையாடல்கள், வெட்கத்தைவிட்டுத் தங்களைப் பெருமையடித்துக் கொள்வனவாக அமைந்துள்ளன.

'நான் மக்களை அவமானப்படுத்துகிற ஒரு பெருந்தலைவன்.
நான் மக்களை அவமானப்படுத்துகிற ஒரு பெருந்தலைவன்.
எங்கள் தலைவன் முகங்களுக்கு வெட்கம் உண்டாக்குகிறான்.

எங்கள் தலைவன் முகங்களுக்குப் பொருமை ஏற்படுத்துகிருன்.
எங்கள் தலைவன் இந்த உலகத்திலே தொடர்ந்து செய்து
கொண்டிருக்கும்
செயல்களால் மக்களை அவர்களுடைய முகங்களை மூடிக்
கொள்ளுமாறு செய்கிருன்
மறுபடியும், மறுபடியும் எல்லாக் குடிகளுக்கும் எண்ணெய்
விருந்துகள் கொடுத்துக்கொண்டு'

* * *

'நான்தான் ஒரே பெரிய மரம், தலைவனுன நான்!
நான்தான் ஒரே பெரிய மரம், தலைவனுன நான்!
குடிகளே, நீங்கள் எனக்கடங்கியவர்கள்.
குடிகளே, என்னுடைய வீட்டின் பின்புறத்தின் நடுவிலே
உட்கார்ந்திருக்கிறீர்கள்.
குடிகளே, உங்களுக்குச் சொத்துக் கொடுப்பதில் நான்தான்
முதல்,
குடிகளே, நான் உங்களுடைய பருந்து!'

* * *

'குடிகளே, உங்கள் சொத்தை அளவிடும் நாணயங்களைக்
கொண்டுவாருங்கள்.
சிறந்த 'செப்புகள்' தயார் செய்யும் தலைவன் கொடுக்கப்
போகும்
சொத்தை எண்ண அவன் வீணுக முயன்று பார்க்கட்டும்
போங்கள், யாருக்கும் கிடைக்காத பாட்லேட்ச்
ஸ்தம்பத்தைத் தூக்கி நிறுத்துங்கள்.
ஏனென்ருல் இது ஒன்றுதான் தடித்தமரம்; குடிகளுடைய
ஒரே தடித்த வேர்.
வீட்டிலே இப்பொழுது நமது தலைவன் கோபமடைவான்.
அவன் கோபத்திற்கான ஆட்டத்தை ஆடுவான்.
நமது தலைவன் வெறிக்கான ஆட்டத்தை ஆடுவான்.'

* * *

'நான் யாகட்லென்லிஸ் (Yaqatlenlis), நான் க்ளௌடி (Cloudy), ஸீவிட்டும் (Sewid) கூட. நான் பெரிய ஒரே ஒருவன். நான் புகையின் சொந்தக்காரன், நான் பெரிய அழைப்போன். இப் பெயர்கள் எல்லாம், நான் சென்றவிடங்களில் அக் குடிகளின் தலைவர்களுடைய பெண்களை மணந்துகொண்டபொழுது எனக்குக் கிடைத்த திருமணப் பரிசுகள். என் பெயருக்கெதிராகப் பேசி என்னைச் சிறுமைப்படுத்த வீண்முயற்சிகள் செய்யும் கீழ்த்தரத் தலைவர்கள் சொல்வதைக்கேட்டு எனக்குச் சிரிப்பு வருகிறது.

என்னுடைய மூதாதையர்களான பெருந்தலைவர்கள் செய்ததற் கீடாக எவர் செய்யமுடியும்? நான் உலகிலுள்ள எல்லாக் குடி மக்களுக்கும் தெரிந்தவனாக இருக்கிறேன். என்னுடைய மூதாதை யான தலைவன் ஒருவனால்தான் பெரிய விருந்தில் சொத்துகள் கொடுக்கப்பட்டன. மற்றவர் என்னைப்போல் நடிக்கத்தான் முயன்று பார்க்கலாம். என்னுடைய குடும்பத்தின் வேரான தலைவனை, என் தாத்தாவைப் போன்று நடக்க அவர்கள் முயற்சிக் கிறார்கள்.'

* * *

'குடிகளிலே நான் முதல்வன்
குடிகளிலே நான் ஒரே ஒருவன்
குடிகளுடைய தலைவர்களெல்லாம் இவ்விடத்திய
தலைவர்களே
நான் குடிகளிடையே ஒரே ஒருவன்
அழைக்கப்பட்டிருக்கிற தலைவர்களுக்கு எனக்கீடான
பெருமை யுடையவனைத் தேடுகிறேன்'
விருந்தாளிகளில் ஒரு தலைவனைக்கூடக் காணமுடியவில்லை.
அவர்கள் விருந்துகளை மறுபடியும் அளிப்பதில்லை
குடிகளின் தலைவர்கள், ஏழைமக்கள், அனாதைகள்
அவர்கள் அவமானப்படுத்திக்கொள்கிறார்கள்.
குடிகளின் தலைவர்களுக்கு, விருந்தாளிகளுக்கு,
தலைவர்களுக்கு
கடல் நீர்நாய்களைக் கொடுக்கிறவன் நான்தான்
குடிகளின் தலைவர்களுக்கு, விருந்தாளிகளுக்கு,
தலைவர்களுக்கு
படகுகளைக் கொடுக்கிறவன் நான்தான்.'

அவர்களுடைய பண்பாட்டை விளக்குகின்ற இந்தப் பாடல்கள் அவர்களுடைய தலைவனால் ஏற்பாடுசெய்யப்பட்ட வர்களால் எல்லாப் பெரிய விழாக்களிலும் பாடப்பெற்றன. அவர்கள் அறிந்திருந்த எல்லா நோக்கங்களிலேயும் உயர்ந்து காணவேண்டிய உறுதியை நாம் காண்கிறோம். அவர்களுடைய சமூக அமைப்பு, பொருளாதார நிறுவனங்கள், மதம், பிறப்பு, இறப்பு ஆகிய எல்லாவற்றிலும் இதைக் குறிக்கோளாகக் காண் கிறோம். அவர்களது வெற்றிப் பெருமிதம், அவர்களால் அழைக் கப்பட்ட விருந்தினர்களிடையே உள்ள எதிரிகளின்மீது அவர்கள் வெளிப்படையாகச் சுமத்தும் இழிவையும், வெறுப்பை யும் கொண்ட ஒன்றாகும். பாட்லேட்ச் நடக்கும்போது விருந்து

கொடுப்பவனைச் சார்ந்தோர், 'செப்பை'ப் பெறுகின்ற தலைவனைப் போல நகைக்கத் தகுந்த ஓர் உருவத்தைச் செதுக்கிக் கொள் கின்றனர். அவனுடைய ஏழைமையை வெளித் தெரிகின்ற விலா எலும்புகளாலும், அவனுடைய சிறுமையைப் பதுமையின் உட லமைப்பாலும் கேலி செய்தனர். விருந்தினர்களை வெறுப்புடன் நோக்கி விருந்தளிக்கும் தலைவன் பாட்டுகள் பாடினான்.

'வா, வழியை விட்டுப்போ,
வா, வழியை விட்டுப்போ.
என்னுடனிருக்கும் தலைவர்களை அடிப்பதன் மூலம் என்னுடைய
கோபத்தை வெளிக்காட்டப்போகிறேன். உங்கள்
முகங்களைத் திருப்பிக் கொள்ளுங்கள்.
அவர்கள் நடிக்கிறார்கள். ஒரே செப்பை மறுபடியும் மறுபடியும்
விற்கிறார்கள். குடிகளின் சிறிய தலைவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள்.
ஆ, இரக்கம் வேண்டாதீர்கள்
ஆ. தொங்குகிற நாக்குடைய நீங்கள், வீணாக இரக்கம் வேண்டி
கைகளை உயர்த்தாதீர்கள்.
எவன் தன்னுடைய வீட்டிலே, பாட்லேட்ச் வீட்டிலே, அழைக்கின்ற
வீட்டிலே, எங்கே நாம் பசிகொள்ளச் செய்யப்படுகிறோமோ
அங்கே, (சொத்து வைத்திருக்கும் பெட்டிகளைக்) காலி
செய்கிறானோ அவனை நான் வெறுக்கிறேன். அவனைக்கண்டு சிரிக்கிறேன்'.

* * * *

'என்னுடைய சிரிப்புக்கு இதுதான் காரணம்,
கஷ்டப்படுகிறவனைக் கண்டு நான் சிரிக்கும் காரணம்
தலைவர்களாயிருக்கிற தன் மூதாதையர்களைக் காட்டும் ஒருவன்
சிறியவர்களுக்குத் தலைவர்களாக இருந்த மூதாதையர்கள் கிடையாது.
சிறியவர்களுக்கு அவர்களுடைய தாத்தாக்களிடமிருந்து வருகின்ற பெயர்கள் கிடையாது
வேலை செய்கின்ற சிறியவர்கள்,
கஷ்டப்பட்டு வேலை செய்கின்ற சிறியவர்கள்,
தவறு செய்கிறவர்கள், உலகத்தில் முக்கியமில்லாத இடங் களிலிருந்து வருகின்றவர்கள்
இது ஒன்றுதான் என் சிரிப்புக்குக் காரணம்'.

* * * *

'நான் தோற்கடிக்கின்ற ஒரு பெரிய தலைவன்
நான் தோற்கடிக்கின்ற ஒரு பெரிய தலைவன்
ஓ, நீங்கள் செய்தது போலவே செய்யுங்கள்!
கடினமாக வேலைசெய்துகொண்டு (ஸால்மனைப் போல)
வாலை இழந்து உலகத்திலே சுற்றிக்கொண்டிருப்பவர்களைக் கண்டு
மட்டுமே நான் ஏளனம் செய்கிறேன்.
உண்மையான பெரிய தலைவனுக்குக் கீழே உள்ள தலைவர்களைக் கண்டு
ஹா! அவர்கள்மேல் இரக்கம் காட்டுங்கள்! எளிதில்
உடையக்கூடிய மயிர்களைக்கொண்ட, மயிரை வாரிக்
கொள்ளாத தலைகளையுடைய அவர்கள்மீது எண்ணெயை ஊற்றுங்கள்
உண்மையான பெரிய தலைவனின் கீழுள்ள தலைவர்களை நான் ஏளனம் செய்கிறேன்
மக்களை அவமானப்படச்செய்கிற நான் ஒரு பெரிய தலைவன்.'

வடமேற்குக் கடற்கரையினரின் எல்லாப் பொருளாதார ஏற்பாடுகளும் இம்மாதிரியான ஒரு தீவிர எண்ணத்தைப்பற்றியது தான். ஒரு தலைவன் அவன் விரும்புகிற வெற்றியைப் பெறுவதற்கு இரு வழிகள் இருந்தன. தன் எதிராளிக்கு, வட்டியுடன் அவன் திருப்பித்தர முடியாத அளவுக்குச் சொத்துகளை நிறைய அளித்து அவனை அவமானப்படுத்துவது ஒரு வகை. சொத்துகளை அழிப்பது மற்றொரு முறை. முதல் முறையிலே அவனது சொத்துகள் அதிகப்பட்டன. இரண்டாவது முறையிலே அவனது சொத்துகள் அவனை விட்டு அகன்றன. இரண்டு முறைகளிலும் எதிரி திருப்பிச் செய்யவேண்டிய கட்டாயம் உண்டு. நமக்கு இவ்விரண்டு முறைகளின் விளைவுகள் எதிரிடையாகத் தோன்றுகின்றன. க்வாக்யூட்ல் மக்களுக்கு, எதிரியைப் பணியச் செய்வதில் இரண்டு முறைகளும் ஒன்றுக்கொன்று உதவியாயிருந்தன. முழுவதும் அழித்துவிடுதல்தான் வாழ்க்கையிலே மிகவும் பெருமை தேடித்தரும் செயலாகும். 'செப்பை' விற்பதுபோலவே இதுவும் ஒரு சவாலாகும். தன்னை அவமானத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள எதிராளியும் அதே அளவு மதிப்புயர்ந்த பொருள்களை அழிக்கவேண்டும்.

பொருள்களை அழித்தல் பலவிதங்களிலே நடந்தது. கான்டில் மீன் எண்ணெய் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் பெரிய பாட்லேட்ச் விருந்துகள், அழித்தலில் போட்டியாகக் கருதப்பட்டன. இந்த எண்ணெய் விருந்தினருக்கு நிறையப் படைக்கப்படுகிறது.

நெருப்பின்மீதும் இது நிறைய ஊற்றப்படுகிறது. விருந்தினர் நெருப்பின் அருகில் அமர்ந்திருந்ததனால், எரிகின்ற எண்ணெயின் வெப்பம் அவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது. இதுவும் போட்டியின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டது. நெருப்புப் பற்றி எரிந்து வீட்டின் உத்திரங்களை எட்டினாலும்கூடத் தங்களை அவமானத்திலிருந்து காத்துக்கொள்ள விருந்தினர்கள் அசையாமல் அவர்கள் இடத்திலேயே இருக்கவேண்டும். தன் வீடு அழிந்துவிடும் என்ற பயம் தோன்றினாலும்கூட விருந்தளிப்பவன், அதைக் கவனியாதுபோல் இருக்கவேண்டும். பெரிய தலைவர்கள் மனித உருவில் செதுக்கப்பட்ட ஒரு பதுமையைக் கூரையின்மீது வைத்திருந்தார்கள். அதற்கு வாந்தி எடுப்பவன் என்று பெயர். மதிப்புயர்ந்த கான்டில் மீன் எண்ணெய் பதுமையின் வாயிலிருந்து கீழேயுள்ள வீட்டு நெருப்பின்மீது சீராக விழும்வண்ணம் ஒரு தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. விருந்தாளித் தலைவன் இது வரை கொடுத்த விருந்துகளை மிஞ்சுகிற அளவில் இந்தஎண்ணெய் விருந்து அமைந்ததானால் அவன் வீட்டைவிட்டு வெளியேறித் தன்னுடைய எதிரி கொடுத்த விருந்தைவிடச் சிறந்த ஒரு மறு விருந்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும். தான் முன்னால் கொடுத்த விருந்துக்குச் சமமாக அது இல்லையென்று அவன் நம்பினால் விருந்து கொடுப்பவனை இழிவாகப் பேசுவான். பிறகு விருந்து கொடுப்பவன் தன் பெருமையை நிலைநாட்ட வேறு வழிகளைக் கையாளுவான்.

இதற்காக விருந்தளிப்பவன் தன் தூதுவர்களை அனுப்பி நான்கு படகுகளைத் துண்டுகளாக உடைக்கச் செய்து அத் துண்டுகளை நெருப்பிலிடச் செய்யலாம். இல்லாவிட்டால் அவன் ஒரு அடிமையைக் கொல்லலாம். அதுவும் இல்லாவிட்டால் ஒரு 'செப்பை' உடைக்கலாம். பாட்லேட்ச் விழாக்களில் உடைக்கப் படுகின்ற 'செப்பு'களை அதன் சொந்தக்காரர்கள் இழந்துவிடுவதில்லை. 'செப்பை' அழித்துவிடுவதில் பல வரையறைகள் இருந்தன. சந்தர்ப்பம் தன்னுடைய 'செப்பு' முழுவதும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாவிட்டால் தலைவன் தன் 'செப்பி'ன் ஒரு பகுதியை மட்டும் வெட்டுவான். அவனது எதிரியும் அதே மதிப்புள்ள 'செப்பின்' ஒரு பகுதியை மட்டுமே வெட்டவேண்டும். 'செப்பை' முழுவதும் கொடுத்துவிட்ட மாதிரியே பண்டங்கள் திருப்பித்தருவதும் நடந்தது. வேறுபட்ட பல எதிரிகளுடன் நடக்கும் போட்டிகளிலே ஒரு செப்பானது கடற்கரையில் பல நூறு மைல்களுக்குச் சிதறிவிடக்கூடும். இறுதியில் ஒரு பெரிய தலைவன் சிதறிய துண்டுகளை அடைந்து வெற்றி கண்டால் அவன் அவைகளை ஒன்று சேர்த்து அடித்துவைத்துக்

கொள்கிருன். அப்படிச் செய்யப்பட்ட செப்பு இன்னும் அதிக மதிப்பைப் பெறுகிறது.

க்வாக்யூட்ல் மக்களின் சித்தாந்தப்படிச் 'செப்பை' வெட்டுவது இப் பழக்கத்தின் ஒரு மாறுபாடுதான். பெரிய தலைவன் அவனுடைய குடிகளை அழைத்து ஒரு பாட்லேட்ச் விழாவை அறிவிப்பான். ''என் வீட்டிலே முனகிக்கொண்டிருக்கிற 'தண்டலாயு' என்ற என்னுடைய செப்பை இந்த நெருப்பிலிட்டுக்கொன்றுவிடுவேன். என் கர்வம் அவ்வாறிருக்கிறது. நான் அதற்காக எவ்வளவு கொடுத்தேன் என்று உங்களுக்குத் தெரியும். நாலாயிரம் கம்பளங்களைக் கொடுத்து அதை நான் வாங்கினேன். என் எதிராளியைத் தோற்கடிக்க அதை நான் இப்பொழுது உடைக்கப்போகிறேன். என் குடிகளே ! உங்களுக்கு என் வீட்டை ஒரு போட்டி இடமாக ஆக்கிவிடுகிறேன். முதன் முதலாக இவ்வளவு பெரிய பாட்லேட்ச் விருந்து இப்பொழுதுதான் அளிக்கப்படுகிறது. ஆகையால் தலைவர்களே,மகிழ்ச்சியோடு இருங்கள்'' அத்தலைவன் தன்னுடைய செப்பைத் தீயிலிட்டான். அது எரிக்கப்பட்டது. இல்லாவிட்டால் மேடான இடத்திலிருந்துகொண்டு அதைக் கடலுக்குள் விட்டெறிந்தான். அவனுடைய செல்வம் அவனை விட்டுப்போனாலும், ஈடு இணையற்ற ஒரு கௌரவத்தை அவன் அடைந்தான். அவனுடைய எதிராளி அதே அளவு மதிப்புள்ள செப்பை அழிக்கவேண்டும், அல்லது போட்டியில் தோல்வியை ஒப்புக்கொண்டு ஓய்வுபெறவேண்டும். இம்முறையில் எதிரியிடம் ஒரு பெருமையை அடைந்தான்.

தலைவனிடம் காணவேண்டிய நடத்தை ஓரளவுக்குக் கொடுங்கோன்மை போன்றும், திமிர்பிடித்த செயல்போன்றும் இருந்தது. தலைவனுடைய வேலை மிகவும் விரயத்தை ஏற்படுத்தாமல் அவர்களுடைய பண்பாடு கண்டித்தது. அவனுடைய மக்களை மிகவும் ஏழைகளாக ஆக்கும் அளவுக்குச் சொத்துகளை அழிக்கத் தலைவனுக்கு உரிமைகிடையாது. அவர்களை அழித்துவிடக்கூடிய போட்டிகளிலே அவன் ஈடுபடக்கூடாது. அவனுடைய செய்கைகளை ஒரு வரையறைக்குள் இருக்கச்செய்தது அவர்களுடைய 'மிகைபடச்செய்தலின் மீதுள்ள தடையாகும்'. மிகைபடச் செய்தல் ஆபத்தை விளைவிக்கக்கூடும். ஆதலால், தலைவன் கட்டுக்கடங்கியே இருக்கவேண்டும். சில தீவிரச் செய்கைகளுக்குக் கூட பழக்கத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் இடங்கொடுத்தன. குடிமக்கள் தனக்களிக்கும் உரிமைகளைத் தலைவன் மீறுவானேயாகில் இந்தக் கட்டுப்பாடு உடனே அமுலாக்கப்படும். நல்ல அதிருஷ்டம், மிகைபடச் செய்யும் தலைவனை விட்டகன்றுவிடும்

என்று அவர்கள் நம்பினர். அவனைப் பின்பற்றுகிறவர்கள் பிறகு அவனை ஆதரிப்பதில்லை. சமூகம் சில வரையறைகளை விதித்தது. நமக்கு அவை விசித்திரமாகத் தோன்றலாம்.

வடமேற்குக் கடற்கரையிலே, இவ்வளவுதூரம் இடம் கொடுக்கும், தன்னை உயர்த்திக்கொள்ளும் உறுதிப்பாடு, அவர்களுடைய பாட்லேட்ச் பண்டமாற்றுகளின் ஒவ்வொரு விபரத்திலேயும் நன்கு வெளிப்பட்டது. பெரிய பாட்லேட்ச் விழாக்களுக்கு ஓர் ஆண்டுக்கு முன்னதாகவோ, இல்லை அதற்கும் முன்னதாகவோ அழைப்புகள் அனுப்பப்பட்டன. வெகு தொலைவிலுள்ள குடிமக்களுடைய உயர்மக்கள் படகுகளில் நிறைந்து வந்தார்கள். தன்னுடைய பெயர், தன் செப்பு ஆகிய பெருமைகளின் பேரில் தனக்குள்ள உரிமைகளாலேயும், தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளும் உரைகளாலேயும் விருந்தளிப்பவன் செப்பின் விற்பனையைத் துவங்குவான். தன் விருந்தினரை நோக்கி அவர்கள் திருப்பித்தருவதற்கு வைத்திருக்கும் பொருள்களைக் கொண்டுவரும்படி சவால் விடுவான். விருந்தினரும், உண்மையான மதிப்பின் ஒரு சிறு பகுதியைத் தருவதாக, அடக்கமாக ஆரம்பித்து, கொஞ்சங் கொஞ்சமாக உச்சநிலைக்கு வந்துவிடுவர். விற்பவனைச் சார்ந்தோரும், ஒவ்வொரு அதிகப்படியையும் வெறுப்புடன் வாங்கிக்கொண்டு 'முடித்துவிட்டோம் என்று நினைக்கிறீர்களா! இந்தச் சிறந்த செப்பை வாங்கவேண்டும் என்று நீங்கள் தீர்மானித்தபொழுது அதற்கான தொகை வைத்திருக்கவில்லை. நீங்கள் முடிக்கவில்லை, நீங்கள் இன்னும் அதிகம் கொடுப்பீர்கள். இந்தச் செப்பின் விலை என் பெருமைக்கேற்ப இருக்கிறது. இன்னும் நானூறு நான் கேட்கிறேன்'. வாங்குபவனும் 'ஆமாம், தலைவா! உங்களுக்குக் கருணையே இல்லை' என்று பதிலுரைத்து, அவனிடமிருந்து கேட்கப்பட்ட அதிகப்படியான கம்பளங்களுக்கு உடனே சொல்லி அனுப்புவான். அவனுடைய கம்பளங்களை எண்ணுகிறவன் அவைகளை உரக்க எண்ணிவிட்டு அங்குக் கூடியிருந்த குடிகளை நோக்கி 'யா! குடிகளே, கம்பளங்களை வாங்குகிற எங்கள் முறையைக் கவனித்தீர்களா! செப்புகள் வாங்கும்போது எங்கள் குடிகள் பலமுள்ளவர்கள். அவர்கள் உங்களைப் போல இல்லை. நான் இங்கே கொண்டுவந்திருக்கும் மூட்டையில் ஆயிரத்து அறுநூறு கம்பளங்கள் உள்ளன. க்வாக்யூட்ல் தலைவர்களே! செப்புகள் எப்படி வாங்குவது என்று தெரியாத அவர்களுக்கு இவைதான் என்னுடைய சொற்கள்' என்று பேசுவான். அவன் முடித்த உடனே அவனது தலைவன் குடிகளை நோக்கி 'இப்பொழுது நீங்கள் என் பெயரைப் பார்த்தீர்கள். இதுதான் என்னுடைய பெயர். இதுதான் என் பெயரின் எடை. இக்

கம்பளங்களின் மலை ஆகாயமளாவி நிற்கின்றது. குடிகளே, என்னுடைய பெயர் க்வாக்யூட்லின் பெயர்தான். நாங்கள் செய்கின்ற மாதிரி நீங்கள் செய்யமுடியாது. பிறகு என்னிடமிருந்து உங்களை வாங்கச் சொல்கிறேன். எதிர்பாருங்கள். குடிகளே, என்னிடமிருந்து நீங்கள் வாங்கும் காலத்தை நான் எதிர்பார்க்கவில்லை' என்று மொழிவான்.

ஆனால், அப்போதுதான் செப்பின் விற்பனை ஆரம்பிக்கப்படுகிறது. விற்பவனின் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு தலைவன் எழுந்திருந்து அவனுடைய பெருமையையும் உரிமைகளையும் எடுத்துரைப்பான். அவன் தன்னுடைய புராணசம்பந்தமான மூதாதையர் வழியைப்பற்றிச் சொல்லி 'செப்புகளை எப்படி வாங்குவது என்று எனக்குத் தெரியும். தலைவனே! எப்பொழுதும் நீ செல்வந்தன் என்று சொல்கிறாய், இந்தச் செப்பைப்பற்றி நீ நினைக்கவேயில்லையா! தலைவா! இன்னும் ஓர் ஆயிரம் கம்பளங்களைமட்டும் கொடு' என்று சொல்வான். இப்படியே செப்பின் விலை மூவாயிரத்து இருநூறு கம்பளங்கள் எண்ணிக் கொடுக்கப்படும்வரை உயர்ந்துகொண்டே போகும். பிறகு வாங்குபவனிடமிருந்து அக் கம்பளங்களை வைப்பதற்கான மதிப்புயர்ந்த பெட்டிகள் கேட்கப்படுகின்றன. அவைகள் கொண்டுவரப்படும். 'செப்பின் சொந்தக்காரனை அலங்கரிக்க' இன்னும் அதிக பரிசுகள் தேவைப்படுகின்றன. வாங்குபவன் அதற்கும் இணங்கி, 'தலைவர்களே கேளுங்கள்! ஐம்பது கம்பளங்கள் மதிப்புக்கொண்ட இந்தப் படகாலேயும், ஐம்பது கம்பளங்கள் மதிப்புடைய இந்தப் படகாலேயும், ஐம்பது கம்பளங்களின் மதிப்புக்கீடான இந்தப் படகாலேயும் மேலும் இருநூறு கம்பளங்களாலேயும் உங்களை அலங்காரம் செய்துகொள்ளுங்கள். இப்பொழுது நாலாயிரம் கம்பளங்கள் இருக்கின்றன. இது முடிந்தது' என்று சொல்லிப் பரிசை அளிக்கிறார்கள். சொந்தக்காரன் உடனே 'நான் இந்த விலையை ஒப்புக்கொள்கிறேன்' என்று சொல்கிறான். ஆனால், வியாபாரம் முடிவதில்லை. வாங்குபவன், செப்பின் சொந்தக்காரனை நோக்கி 'தலைவ, ஏன் அந்த விலையை ஒப்புக்கொண்டாய்? நீ அவசரமாக விலையை ஏற்றுக்கொண்டாய். தலைவ! என்னைப்பற்றி நீ குறைவாகவே எண்ணவேண்டும். நான் ஒரு க்வாக்யூட்ல் குடிமகன். உலகம் முழுவதிலும் உன்னுடைய குடிகள் எவரிடமிருந்து பெயர்களை எடுத்துக்கொண்டனரோ அவர்களில் நானும் ஒருவன். நான் உன்னுடன் வியாபாரத்தை முடிக்குமுன்பே நீ விட்டுவிடுகிறாய். நீ எப்பொழுதும் எங்களுக்குக் கீழே இருக்கவேண்டும்' என்று உரைப்பான். அவன் அரசிளங்குமரியான தன் உடன்பிறந்தாளைக் கூப்பிடத் தன் தூதுவர்களை அனுப்பிவைப்பான். 'தன்

னுடைய அரசிளங்குமரியின் துணிகள்' என்று மேலும் இருநூறு கம்பளங்களை அவன் தன் எதிரிக்கு அளிப்பான். ஐந்தாவது ஆயிரத்துக்கான இருநூருக இவை ஆகின்றன.

இதுதான் செப்பு வாங்குவதிலுள்ள வழக்கமான முறை. அவர்களுடைய பண்பாட்டுக்கு அஸ்திவாரமான பலாத்காரமும், போட்டியும், பெரிய தலைவர்களிடையே நடக்கின்ற போட்டிகளில் வெளிப்பட்டன. ஃபாஸ்ட் ரன்னர் (Fast Runnr), த்ரோ அவே (Throw Away) ஆகிய க்வாக்யூட்ல் தலைவர்கள் இருவருக்குமிடையே நடந்த போட்டி எப்படிப் பகையில் முடிந்தது என்பதைக் கீழே காணலாம். இரண்டு தலைவர்களும் நண்பர்களாக இருந்தார்கள். த்ரோ அவே தன் நண்பனின் கூட்டத்தாரை ஸால்மன், பழங்கள் ஆகியவைகொடுக்கும் விருந்திற்கு அழைத்தான். அவர்களைப் பெருமைப்படுத்தும்வண்ணம் சுத்தம் செய்யப்படாத படகுகளில் பழங்களையும் பசையையும் வழங்கினுன். இதை ஒரு பெரும் குற்றமாக ஃபாஸ்ட ரன்னர் எடுத்துக்கொண்டான். கீழே படுத்துக்கொண்டு, கறுப்புக் கரடி கம்பளத்தினுல் தன் முகத்தை மூடிக்கொண்டு உணவை மறுத்தான். அவன் அதிருப்தி அடைந்ததைக் கண்ட அவன் உறவினர்களும் அதுமாதிரியே செய்தார்கள். விருந்தளிப்பவன் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினுன். அதற்கு ஃபாஸ்ட் ரன்னர் அவனுடைய பேச்சாளனைக்கொண்டு 'ஓ அழுக்குள்ளவனே ! எங்கள் தலைவன் நீ அளிக்கும் அசுத்தமானவற்றைச் சாப்பிடமாட்டான்' என்று மரியாதைக் குறைவைச் சுட்டிக்காட்டிப் பதிலுரைக்கச் செய்தான். அதற்கு த்ரோ அவே 'அப்படியே இருக்கட்டும். நீ ஏதோ செல்வம் படைத்தவன்போலப் பேசுகிருயே' என்று வெறுப்புடன் பதில் சொன்னுன். அதற்கு ஃபாஸ்ட் ரன்னர் 'சந்தேகமில்லாமல் நான் பெரும் செல்வந்தன்தான்' என்று சொல்லி அவனுடைய ஸீமான்ஸ்டர் (Sea Monster) என்ற செப்பைக் கொண்டுவரத் தூதுவர்களை அனுப்பினுன். அவர்கள் அதை அவனிடம் கொடுத்தனர். அவன் 'எதிராளியின் நெருப்பை அணைக்க' அதை நெருப்புக்கடியிலே தள்ளினுன். த்ரோ அவேயும் தன்னுடைய செப்புக்காகச் சொல்லி அனுப்பினுன். அவனுடைய வேலைக்காரர்கள் லுக்ட் அட் அஸ்கான்ஸ் (Looked at Askance) (செப்பு) ஐக் கொண்டுவந்தனர். அதை 'நெருப்பை எரிந்துகொண்டிருக்கச் செய்ய' விருந்து நடக்கும் இடத்தில் நெருப்புக்கடியில் தள்ளினுன். ஆனுல், ஃபாஸ்ட் ரன்னரின் க்ரேன் (Crane) என்ற மற்ருெரு செப்பு இருந்தது. அதைக் கொண்டுவரச் சொல்லி 'அவிப்பதற்காக' நெருப்பின்மேல் வைத்தான். த்ரோ அவேயிடம் வேறு செப்பு இல்லை, ஆதலால், அவன் தன் நெருப்பை

வளரச்செய்ய இன்னும் எரிபொருள் போட முடியாமல் முதல் சுற்றிலே தோற்றுப்போனுன்.

மறுநாள் ஃபாஸ்ட் ரன்னர் விருந்தைத் திருப்பி அளித்தான். அதற்குத் த்ரோ அவேயைக் கூப்பிட வேலைக்காரர்களை அனுப்பினுன். இதற்குள் த்ரோ அவே மற்ருெரு செப்புக் கடனுகப் பெறுதற்கு வேண்டிய சொத்துகளை அடமானம் வைத்து அதைப் பெற்ருன். ஆகையினுல், அவன் எதிரில் நண்டுப் பழங்களும் பசையும் வைக்கப்பட்டபொழுது முதல்நாள் ஃபாஸ்ட் ரன்னர் சொல்லியதுபோன்ற சொற்களால் மறுத்துவிட்டுத் தன்னிடமுள்ள டே ஃபேஸ் (Day Face) என்ற செப்பைக் கொண்டுவர ஆட்களை அனுப்பினுன். இதைக் கொண்டு தன் எதிராளியின் நெருப்பை அணைத்துவிட்டான். ஃபாஸ்ட் ரன்னர் எழுந்திருந்து 'இப்பொழுது என்னுடைய நெருப்பு அணைக்கப்பட்டுவிட்டது. ஆனுல், பொறுங்கள், நான் செய்யப்போவதை மறுபடியும் உட்கார்ந்து பாருங்கள்' என்று சொன்னுன். அவன் தான் சேர்ந்திருந்த 'முட்டாள்கள் நடனத்தின்' வெறிகொண்டு தன் மாமனுருடைய நான்கு படகுகளை உடைத்தான். த்ரோ அவேயின் செப்பால் நெருப்பு அணைக்கப்பட்டதால் ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க அவர்கள் உடைந்த படகுகளைக் கொண்டுவந்து விருந்து அளிக்கப்பெறும் வீட்டில் தீயிலிட்டார்கள். அவனுடைய விருந்தாளிகள் என்ன ஆனுலும் அவர்கள் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும் அல்லது தோல்வியை ஒப்புக்கொள்ளவேண்டும். த்ரோ அவேயின் கறுப்புக்கரடிக் கம்பளம் எரிக்கப்பட்டது. அதனுல் அவன் கால்களின் தோல் கொப்புளித்துவிட்டது. ஆனுல், அவன் இடத்தைவிட்டு அசையவில்லை. நெருப்பின் ஜ்வாலை தணிந்த பிறகு, ஒன்றுமே நடவாததுபோல் எழுந்திருந்து விருந்தை உண்டான். இது அவனுடைய எதிரியின் அளவுமீறிய செயலை மதியாததுபோன்று நடப்பதாகும்.

ஃபாஸ்ட் ரன்னரும் த்ரோ அவேயும் வெளிப்படையான விரோதிகளாயினர். அவர்கள் மதசம்பந்தமான உரிமைகளைப் பயன்படுத்தி இரகசியக்கூட்டங்களில் போட்டிபோட்டுக்கொண்டு துவக்கச் சடங்குகளை அளிக்கலாயினர். த்ரோ அவே பனிக்கால விழாவை நடத்த இரகசியமாகத் திட்டமிட்டான். ஃபாஸ்ட் ரன்னர் இதை உளவாளிகள் மூலம் கேள்விப்பட்டு அவனை மிஞ்சுவதற்குத் தீர்மானித்தான். த்ரோ அவே ஒரு மகனையும் ஒரு மகளையும் சேர்த்தான். ஆனுல், ஃபாஸ்ட் ரன்னர் இரண்டு மகன்களையும் மகள் இருவரையும் சேர்த்தான். இம்முறையில் ஃபாஸ்ட் ரன்னர் தன்னுடைய எதிராளியை மிஞ்சிவிட்டான்.

அவனுடைய நான்கு குழந்தைகளும் தனியிடத்திலிருந்து கொண்டுவரப்பட்டவுடன், நடனத்தின் உணர்ச்சி மிகுந்திருக்கையில் ஒரு அடிமை அழைத்துவரப்பட்டான். கரடிக்கூட்டமும் முட்டாள் நடனக்காரர்களும் அந்த அடிமையைக்கொன்று துண்டு துண்டாக வெட்டினார்கள். தன்னின உண்ணிகள் அந்த மாமிசத்தைத் தின்றார்கள். த்ரோ அவேயிடம் அவன் அந்த அடிமையின் தலைத் தோலைக் கொடுத்தான். இந்தப் பெருஞ் செயலுக்கு ஈடாக த்ரோ அவேயினால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

மற்றொரு பெருமையையும் ஃபாஸ்ட் ரன்னர் அடைந்தான். போர் நடனக்காரர்களாகச் சேரவிருந்த அவனுடைய பெண்கள் தங்களை நெருப்பிலிடும்படி கேட்டுக்கொண்டனர். நெருப்பைச் சுற்றி ஒரு பெரும் சுவர்போல் கட்டைகளை அடுக்கிவிட்டு, பெண்களை நெருப்பிலிடுவதற்காகப் பலகைகளில் பிணைத்தனர். ஆனால் அவர்களுக்குப் பதிலாக, போர் நடன உடுப்புகள் போடப்பட்டு அதேமாதிரி பலகைகளில் பிணைக்கப்பட்ட இரு அடிமைகள் நெருப்பிலிடப்பட்டனர், நான்கு நாட்களுக்கு ஃபாஸ்ட் ரன்னரின் பெண்கள் ஒளிந்துகொண்டிருந்தனர். பிறகு பாதுகாக்கப்பட்ட அந்த அடிமைகளின் சாம்பலிலிருந்து மீண்டும் உயிர்பெற்றவர் போல அவர்கள் திரும்பிவந்தனர். த்ரோ அவே இதற்கு ஈடான பெரும் செயல் எதுவும் செய்ய இயலாமல் தன் மக்களோடு நூட்கா (Nootka) என்றவரோடு போர்செய்யப் போய்விட்டான். சண்டை செய்யச்சென்ற கூட்டம் தோல்வியடைந்ததையும் இறந்துபோனதையும் தெரிவிக்க ஒருவன்மட்டுமே திரும்பி வந்தான்.

இது ஒரு உண்மைக் கதையாகச் சொல்லப்பெறுகிறது. எதிரிகளான தலைவர்கள், தங்கள் பெருமைகளை வெளிக்காட்ட, செயல் முறைகளில் சிறிது மாறுபட்டு நடத்திய பல போட்டிகளை நேரில் கண்டவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற சிலர் வாழ்விலேயே கண்ட காட்சி ஒன்று ஒரு தலைவன் தன் எதிரியின் நெருப்பை 'அணைக்க' ஏழு படகுகளையும் நானூறு கம்பளங்களையுங்கொண்டு முயற்சித்தான். அவனது எதிரி இதற்கு எதிராக நெருப்பில் எண்ணெயை ஊற்றினான். வீட்டின் கூரை பற்றியெரிந்து வீடே அநேகமாக அழிக்கப்பட்டது. ஆயினும், அங்கிருந்தோர் ஒன்றும் நடவாததுபோல் தங்கள் இடங்களை விட்டசையாமல், நெருப்பின்மீது குவிக்க இன்னும் அதிகப் பொருள்களை வரவழைத்தனர்.

இருநூறு கம்பளங்களை எடுத்துவரச் சென்றவர்கள் திரும்பி வந்து விருந்தளிப்பவன் நெருப்பின்மீது அவைகளை விரித்தனர். இப்பொழுது அவர்கள் 'அதை அணைத்தனர்'. பிறகு விருந்தளிப்பவன், இன்னும் அதிக 'ஸலால்' பழங்களையும், நண்டுப் பழங்களையும், நடனமாடும்போது தன் மகள் போட்டிருந்த செப்பையும். விருந்து நெருப்பின் கீழே தள்ளினன். எண்ணெயைக் கிளறிக்கொண்டிருந்த நான்கு யுவர்களும், நெருப்பில் எண்ணெயை ஊற்றினர்கள். எண்ணெயும் கம்பளங்களும் சேர்ந்து எரிந்துகொண்டிருந்தன. விருந்தளிப்பவன் எண்ணெயை எடுத்துத் தன் எதிரிகளின் மத்தியிலே ஊற்றினன்.

இம்மாதிரிப் போட்டிகள் பேராசையின் உச்சநிலையைக் காட்டுகின்றன. இந்தப் போட்டிகளால்தான் அவர்கள் சிறந்த ஒரு மனிதனுடைய நிலையை அளவிட்டனர். இதற்கான காரணங்கள் சிறந்த குணங்களாக எண்ணப்பெற்றன. ஒரு வயதான தலைவி பாட்லேட்ச் விழாவின்போது தன் மகனைப்பார்த்து 'என் குடிகளே! நான் குறிப்பாக என் மகனுடன் பேசுகிறேன். நண்பர்களே! உங்களுக்கு என் பெயர் தெரியும். என் தகப்பனை நீங்கள் அறிவீர்கள். அவனுடைய சொத்துகளை அவன் என்ன செய்தான் என்றும் உங்களுக்குத் தெரியும். அவன் என்ன செய்தான் என்பதைப்பற்றி அவன் கவலைப்படவே இல்லை. அவன் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டான். அல்லது அடிமைகளைக் கொன்ருன். விருந்து வீட்டிலே, நெருப்பில் படகுகளை எரித்தான். இல்லையெனில் பிறருக்குக் கொடுத்துவிட்டான். தன் குடிகளிலே உள்ள எதிரிகளுக்கோ அல்லது பிற குடிகளில் உள்ள தலைவர்களுக்கோ நீர்நாய்களின் தோல்களைக் கொடுத்துவிட்டான். இல்லையென்ருல் அவைகளைத் துண்டுதுண்டாக வெட்டினன். நான் சொல்வது உண்மை என்று உங்களுக்குத் தெரியும். மகனே! இதுதான் உன் தந்தை உனக்காக, நீ நடந்து செல்லவேண்டி ஏற்படுத்திய பாதை. உன் தந்தை சாதாரண மனிதனல்ல. கோஸ்கிமோ' (Koskimo) மக்களிடையே அவன் ஒரு உண்மையான தலைவன். உன் தகப்பன் செய்ததுபோலவே செய், பித்தான் கம்பளங்களை கிழித்தெறி, அல்லது நமது எதிரிகளான குடிகளுக்குக் கொடுத்து விடு, அவ்வளவு தான்' என்று அறிவுறுத்திஞள். அதற்கு அவள் மகன் 'என் தந்தை எனக்காகப் போட்ட பாதையை நான் தடை செய்யமாட்டேன். என் தலைவன் எனக்காக இட்ட சட்டத்தை நான் மீறமாட்டேன். என்னுடைய எதிரிகளுக்கு இக்கம்பளங்களைக் கொடுக்கிறேன். இப்பொழுது நாம் கொண்டிருக்கும் போர் இனிதாகவும் பலமாகவும் இருக்கிறது' என்று பதில் உரைத்தான். அவன் கம்பளங்களைப் பகிர்ந்தளித்தான்,

வடமேற்குக் கடற்கரையிலே, இம்முறையில் சொத்துகள் பகிர்ந்தளிக்கப்படுவது மிக அதிகமான அளவில் நடந்தது. பல சமயங்களில் இது பொருளாதாரப் பண்டமாற்றேடு தொடர்பில்லாமலிருக்கும். இவைகளுக்கு அடிப்படையான மனப்பாங்கை நாம் புரிந்துகொள்ளாதவரையில் க்வாக்யூட்ல் மக்களின் திருமணம், சாவு, விபத்து இவைபோன்றவைகளில் அவர்களுடைய நட்த்தை நமக்கு விளங்காது. சொத்துகளைப் பகிர்ந்தளித்தோ அல்லது அழித்தோ தங்களுடைய பெருமையைக் காட்டிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதைப் பொறுத்துத்தான் அவர்களிடையே ஆண் பெண் உறவு, மதம், துரதிருஷ்டம் முதலியவைகள் ஏற்பட்டன. முக்கியமான சந்தர்ப்பங்கள், வாரிசு ஏற்படுத்துவது, திருமணம், மதசம்பந்தமான சக்திகளைப் பெறுவது, அவைகளை வெளிக்காட்டிக்கொள்வது, துக்கம் கொண்டாடுவது, போர், விபத்து முதலியனவே ஆகும்.

வாரிசு ஏற்படுத்துவது, பெருமைகளைத் தெரிவிக்கத் தணிக்கை செய்யப்பெருத உரிமைகள் கொண்டாடும் ஒரு விழாவாகும். ஒருவனது வாரிசுக்கு அவனுடைய ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு உரிமைகளும் கொடுக்கப்பெறவேண்டும். அப்படிக் கொடுத்தலை, சொத்துகளை வழங்குதல் மூலமோ, அழித்தலின் மூலமோ உறுதிசெய்துகொள்ளல் வேண்டும். புதியவனுக்கு 'ஒரு செல்வத்தின் போரணி' (armour) போடவேண்டும். இம்மாதிரிப் பாட்லேட்ச் விழாக்கள் முக்கியமானவையாயும் பல சிக்கல்கள் கொண்டனவாயும் இருக்கும். ஆனால், செய்முறைகளின் விவரங்கள் சாதாரணமானவைதாம். 'ட்லாஸோடிவாலிஸ் (Tlasotiwalis) என்ற அரசகுமாரனுடைய பெயரின் பெருமைக்காக' அளிக்கப்பட்ட பாட்லேட்ச் குறிப்பிடத்தக்கதாகும். அது ஒருவழிவந்த எல்லாக் குடிகளுக்கும் ஏற்பட்ட விருந்து. அவர்கள் கூடியவுடன் ட்லாஸோடிவாலிஸின் தகப்பஞன தலைவன், குடும்பப் புராணப்படி தனக்கு உரிய பெருமைகளை விவரித்துச் சொல்லிவிட்டுத் தன் மகனுடையபெயர்மாற்றத்தை அறிவித்தான். வாரிசு, இப்பொழுது மரபுவழி வந்த அரசகுமாரனின் பெயர்களில் ஒன்றை எடுத்துக் கொள்வான். அவனுக்காகப் பகிர்ந்தளிக்கச் சொத்துகள் தயாராக இருந்தன. நடனத்தின் உச்சநிலையிலே, மகன் தகப்பன் பெயரால் ஆக்கிய பாட்டுப் பாடப்பெற்றது.

'வழிவிடுங்கள் ! என் எதிராளிகளை நான் எதைக்கொண்டு
அடிக்க எப்பொழுதும் முயன்று கொண்டிருக்கிறேனே
அதை (செப்பு) அவன் வைத்துக்கொள்ளட்டும்.
குடிகளே ! நாக்குகளை நீட்டிக்கொண்டு, கைகளைப்பின்னுல்
இழுத்துக்கொண்டு இரக்கம் வேண்டாதீர்கள்.'

'தண்ட லாயு' என்ற செப்பை எடுத்துக்கொண்டு அரசகுமாரன் உள்ளறையிலிருந்து வெளிவருவான். அவன் தகப்பன் அவனை நோக்கி 'ஆ! ட்லாஸோடிவாலிஸ் தலைவா! நீ பெரியவன். உண்மையாக நீ அதை விரும்புகிருயா? இந்தத் தண்டலாயு, தனக்கென்று ஒரு பெயர் கொண்ட இந்தச் செப்பு நெருப்பின் பக்கத்திலே இறந்து கிடக்கவேண்டும் என்பதுதான் உன் உண்மையான பெரிய விருப்பமா? உன் உரிமைகளுக்குத் தக்கவாறு நீ வாழ்க! பெயருள்ள செப்புகளை இப்படிச் செய்த (அதாவது அவைகளை உடைத்த) ஊதாரியான தலைவர்கள் வழியிலே நீ வந்தவன்' என்று மொழிவான். அவன் மகன் அந்தச் செப்பை உடைத்து எதிராளிகளிடையே பகிர்ந்தளித்தான். அவன் விருந்தினரை நோக்கி 'என் தந்தை காட்டிய பாதையிலே நான் செல்லுகிறேன். என் தந்தை, என் தலைவன், எதைக்கண்டும் அஞ்சாத தலைவன். இரக்கமற்ற ஊதாரி என் தந்தை. குடிகளே, தலைவர்களே, உங்களுக்காக இந்தத் தண்டலாயுவைத் துண்டு துண்டாகும்வரை நடனமிட்டேன்!' என்று உரைப்பான். மீதியிருந்த சொத்துகளை எல்லாம் பகிர்ந்தளித்துவிட்டுத் தன் தந்தையின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டான்.

இதைவிடச் சிறிது மாறுபட்ட பாட்லேட்ச், ஒரு தலைவனது குடும்பத்திலே, அவன் தங்கையோ அல்லது மகளோ, உயர்நிலையிலுள்ள ஒரு பெண் பருவமடையும்போது கொடுக்கப்பட்டது. வாரிசை எடுத்துக்கொள்ளும்போது எப்படிப் பெயர்களின் பெருமை உறுதிசெய்யப்பட்டதோ அதைவிடச் சிறிதளவு குறைந்த பகட்டோடு இது நடந்தது. செப்புகளும், கம்பளங்களும் அல்லாத வேறு சொத்துகள் பகிர்ந்தளிப்பதற்காக ஏராளமாகச் சேர்க்கப்பெற்றன. இவைகள் பெரும்பாலும், பெண்களின் துணிகள், பெண்கள் கிளிஞ்சல் தோண்டப் பயன்படுத்தும் படகுகள், தங்கம் வெள்ளி இவைகளாலான வளையல்கள், காதணிகள், கூடைத் தொப்பிகள் முதலியனவாகும். இவைகளைக் கொடுப்பது தலைவனுக்கு, முழுத்தன்மை பெற்ற தலைவனுக்கான ஏணியில் மற்ருெருபடி ஏறிவிட்ட பெருமையையும் உரிமையையும் அளிக்கின்றன.

வடமேற்குக் கடற்கரையிலே நடக்கும் வாரிசுக்கான பாட்லேட்ச், தற்புகழ்ச்சிக்கும் பகட்டுக்கும் சந்தர்ப்பங்களை அளித்தால்கூட அது எதிரியோடு நேர்முகமாக நடத்தும் போட்டியாகாது. திருமணத்தையொட்டி நடக்கும் பாட்லேட்ச்கள்தாம் அவர்களுடைய பண்பாட்டை முழுதும் வெளிக்காட்ட வல்லன. செப்பை வாங்குவதுபோல, திருமணமும் ஒரு போர்முறை

யாகவே நடத்தப்பெற்றது. திருமணம் ஏற்பாடுசெய்ய விரும்பு கிற ஒரு முக்கியமான மனிதன் போருக்காக அழைப்பதுபோல், தன்னுடைய உறவினர், நண்பர் முதலியவர்களை ஒன்றுகூட்டி 'குடிகளின்மீது இப்பொழுது நாம் போர் துவங்குவோம். என் மனைவியை வீட்டிற்குள் கொண்டுவர எனக்கு உதவி செய்யுங் கள்' என்று மொழிவான். உடனே அதற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகும். ஆனால், அவர்களிடம் இருக்கும் கம்பளங்களும் செப்புகளும்தாம் அவர்களுடைய போர்க்கருவிகள். பொருள் களை மாற்றிக்கொள்வதுதான் போர்.

செப்பு வாங்கும்போது ஏற்படுகின்றதைப் போலவே, மண மகன் மணமகளுக்குத் தரவேண்டிய தொகையும் மேன்மேலும் ஏற்றப்படுகிறது. மணமகளின் தந்தை வீட்டிற்கு மணமகனும் அவன் கூட்டாளிகளும் சென்றனர். ஒவ்வொரு உயர்குடி மகனும் 'தரையிலிருந்து மணமகளை உயர்த்த', 'மணமகளுக்கு ஓர் இடம் கொடுக்க'த் தங்களிடமிருந்த சொத்துக்களில் ஒரு பகுதியைக் கொணர்ந்தனர். மணமகனின் பெருமையை எடுத் துக்காட்டி, மாமனாரின் குடும்பத்தைவிட உயர்ந்தநிலையைக் காட்ட மேன்மேலும் கம்பளங்கள் எண்ணிக்கொடுக்கப்பட்டன. இரண்டு கூட்டத்தாரிடையே போட்டி வேறுவிதமாகவும் நடந் தது. மணமகளின் கிராமத்தின்மேல் மணமகனைச் சார்ந்தோர் போர் தொடுக்கலாம். இதற்குப் பதிலாக மணமகளின் கிராமத் தார் படையெடுப்பவரை எதிர்க்கலாம். சண்டை கட்டுமீறி பல மக்கள் கொல்லவும்படலாம். மாமனார் தன்னுடைய மனிதர் களை எரிநெருப்புகளைக்கொண்ட இரு அணிகளாக நிறுத்திவைக்க லாம். அப்பொழுது, மணமகனது கூட்டம் தண்டனைக் குள்ளாவார்கள். சில குடும்பங்கள் விருந்து வீட்டிலே ஒரு பெரு நெருப்பு மூட்டும் உரிமையைப் பெற்றிருந்தனர். அதன் பக்கத் திலே அவர்கள் எரிக்கப்படும்வரை மணமகனது கூட்டம் அசை யாமல் அமர்ந்திருக்கவேண்டும். மணமகளது குடும்பத்தின் உரிமைச் சின்னமாகக் கொள்ளப்பட்ட, ஒரு செதுக்கப்பட்ட கடல் இராட்சதப் பதுமையின் வாயிலிருந்து ஏழு மண்டையோடுகள் வெளியே தள்ளப்படும். மணமகளின் தகப்பன் மணமகனது கூட் டத்தைப் பார்த்து 'க்வாட்ஸெனுக்ஸ் (Gwatsenox) ஜாக்கிரதை! இவை என் பெண்களை மணம் செய்துகொள்ளவந்து என் நெருப் பின் அருகிலிருந்து ஓட்டம் பிடித்தவர்களுடைய எலும்புகள்' என்று கேலி செய்வான்.

நாம் முன்னரே கவனித்தபடி, இம்மாதிரி விழாக்களில் மண மகளைமட்டும் வாங்கப்படுவதில்லை. அவள் தன் குழந்தை

களுக்கு அளிக்கக்கூடிய உரிமைகளும் வாங்கப்படுகின்றன. வட மேற்குக் கடற்கரையில் நடக்கின்ற வேறு விவகாரங்கள் போலவே மாமனுர், மணமகளுக்காக வாங்கும் தொகை, அவன் பிறகு பலமடங்காகத் திருப்பித்தரவேண்டிய ஒன்றுதான். குழந்தைகள் பிறக்கும் சமயமும், குழந்தைகள் வயதடையும் போதும் இவைகளைத் திருப்பித்தரவேண்டும். அந்தச் சந்தர்ப்பங் களில் மனைவியின் தகப்பன், தான் முன்பு பெற்றுக்கொண்டதைப் போல பலமடங்கு அதிகமான பொருள்களையும் மற்றும் முக்ய மாகத் தன் பெண்ணின் குழந்தைகளுக்கு மருமகன் தரவேண்டிய பெயர்களையும் உரிமைகளையும் கொடுக்கிறான். இந்த உரிமை களை மருமகன், தான் தேர்ந்தெடுக்கிற வாரிசுகளுக்கு வழங்க வேண்டுமாதலால், அவைகள் அவனுடைய சொந்த உரிமைக ளாகமாட்டா. அப்படி அவன் தேர்ந்தெடுக்கிற வாரிசுகள் யாரால் இந்த உரிமைகள் அவனுக்குக் கிடைத்தனவோ, அவளு டைய குழந்தைகளாக இல்லாமலிருக்கலாம். அவன் தன்னு டைய பாட்லேட்ச் காரியங்களுக்கு இவைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால், இவை அவனுடைய சொத்தல்ல. சில பெரிய குடும்பங்களில் மணமகளுக்கான தொகை திருப்பித் தரப் படுவதற்குப் பல ஆண்டுகள் தாமதமாகலாம். திருமணத்தினுல் உண்டான மூத்தமகனே அல்லது மகளோ தகுந்த வயதடைந்து சிறந்த தன்னின உண்ணிக் கூட்டத்திலே சேருகின்றவரைகூட இது தாமதமாகலாம். இந்தச் சந்தர்ப்பங்களிலே, மாமனுரிட மிருந்து பெருஞ் செல்வத்தைத் திருப்பிப் பெறப்போகும் மருமகன், தானே பெரிய பனிக்கால விழாவை நடத்த ஒப்புக்கொண்டான். மாமனுர் திருப்பித்தரும் செல்வமானது அவனது செலவுகளுக்கு உபயோகமாக இருந்தது. மருமகனுடைய குழந்தை தன்னின உண்ணிக் கூட்டத்தில் சேருவதையொட்டி விழா நடைபெற்றது. இந்த நேரத்திலே அந்த யுவனே, யுவதியோ அடைந்த பெயர் களும் உரிமைகளும் திருமணத்தின்போது மிகவும் மதிக்கப்படுகிற தங்கள் பெற்றோரின் திருமணத் தொகையைத் திருப்பித் தருவ தாகும்.

திருமணத்தின்போது அந்தக் குடும்பத்தின் மதிப்பையும், குழந்தைகளின் எண்ணிக்கையையும், வேறு பல குறிப்பிட்ட மதிப்பீடுகளையும் கொண்டே திருப்பித்தரவேண்டிய தொகையும் காலங்களும் நிர்ணயிக்கப்பெற்றன. ஆனால், விழா என்றும் ஒரே நிலையில் நாடகபாணியில் அமைந்திருந்தது. மாமனுர் பல ஆண்டு களாக இதற்காகத் தயார்செய்கிறான். திருப்பித் தருவதற்குரிய காலம் வந்தவுடன், அவன் தான் கொடுத்திருந்த கடனையெல் லாம் வசூலிக்கிறான். உணவு, கம்பளங்கள்,பெட்டிகள், தட்டுகள்,

கரண்டிகள், தண்ணீர் காய்ச்சுகிற பாத்திரங்கள், வளையல்கள், செப்புகள் ஆகியவற்றை ஏராளமாகச் சேர்க்கிருன். ஒவ்வொரு கம்புக்கும் பத்து விகிதம் வளையல்கள் கம்புகளில் கட்டப்படுகின்றன. தட்டுகளும் கரண்டிகளும் நீண்ட கயிறுகளில் படகுகளின் நங்கூரக் கயிருகக் கட்டப்படுகின்றன. மாமனுரின் உறவினர் அவனை ஆதரித்து அவன் பகட்டாகச் செய்வதற்கும் உதவுகிருர்கள். மருமகனின் உறவினர், பகட்டான விழாவிற்கேற்ற ஆடைகளை அணிந்து கடற்கரையிலே உள்ள மருமகனின் வீட்டு மேடைமீது கூடுகிருர்கள். கடற்கரையிலே மாமனுரின் கூட்டத்தார் ஒரு 'படகு' செய்கின்றனர். மணலிலே ஒவ்வொரு திசையிலும் சுமார் நூறு அடி அளவுகொண்ட சதுரம்போட்டு, அதில் வமிசபரம்பரைப் பொருள்கள் வைக்கின்ற பெட்டிகளின் மூடிகளை அடுக்குகின்றனர். அவைகளின் உட்புறம் விலங்கு முகங்கள் வரையப்பட்டு நீர்நாய்ப் பற்களால் அழகு செய்யப்பட்டிருக்கின்றன. மாமனுர் சேர்த்துவைத்திருந்த எல்லாப் பொருள்களையும் இந்தப் படகுக்குள்ளே கொண்டுவந்து வைக்கின்றனர். மலை ஆடுகளின் கொம்புகளால் தயார்செய்யப்பட்ட மதிப்புள்ள கரண்டிகளையும் தட்டுகளையும் தொங்கவிடப்பெற்ற நங்கூரக் கயிறுகளால், இந்தப் 'படகை'யும் மருமகன் வீட்டு மேடையையும் இணைக்கின்றனர். மாமனுரின் உறவினர்கள் எல்லாரும் 'படகு'க்குள்ளே வருகின்றனர். அவர்களும் மருமகன் கூட்டத்தாரும் மாறி மாறித் தங்களுடைய மதிப்புயர்ந்த பாடல்களைப் பாடுகிருர்கள். மருமகனின் மனைவி, அதாவது எவளுடைய திருமணத் தொகை அன்று திருப்பித் தரப்படுகிறதோ அவள், தன்னுடைய கணவன் வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்காக உள்ள தன் ஆபரணங்களையெல்லாம் அணிந்துகொண்டு, தன் பெற்ருேருடைய படகிலே இருக்கிருள். தன்னுடைய ஆபரணங்களைப் பகட்டாகக் காட்டிக் கொண்டு அவள் நடனமாடும் சந்தர்ப்பம் இதுதான். ஆதரவுக்காகக் காதுகளிலே இழுத்துக்கட்டவேண்டிய அவ்வளவு பெரிய சங்காலான மூக்கு வளையம், அவளுடைய தலைமயிரிலே கட்டப்பெற்ற கனமான காது வளையங்கள் ஆகியவைகளை அவன் போட்டிருக்கிருன். அவள் நடனமாடி முடிந்தவுடன் மாமனுர் 'படகில்' உள்ள எல்லாப் பொருள்களின் உடைமையையும் மருமகனுக்கு அளிக்கிருன். அவனுடைய குழந்தைகளின் உபயோகத்திற்காக மருமகனுக்குக் கொடுக்கப்படும் பெயர்களும் மதசம்பந்தமான கூட்டங்களில் சேர்வதற்கான உரிமைகளும் கொண்ட முக்கியமான சொத்து ஒரு சிறு பெட்டியிலே இருக்கின்றது.

சொத்துக்களின் உரிமை மருமகனுக்குக் கொடுக்கப்பட்ட உடனே அவனுடைய நண்பர்கள் படகுக்கு ஓடிச்சென்று பெட்டி

மூடி ஒன்றைத் தங்கள் கோடரிகளால் பிளக்கின்றனர். அப்பொழுது 'நம்முடைய சரக்கேற்றிய படகு உடைந்தது' என்று கூறுகிறார்கள். மருமகனும் 'நாம் மகிழ்ச்சியோடிருக்கலாம்' என்று உரைக்கின்றான். அது படகை மூழ்கடித்தல் என்ற பெயர்பெற்று, மருமகன் உடனே சொத்துகளைக் குடிமக்களிடையே பகிர்ந்தளிக்கப் போகிறான் என்பதைக் குறிக்கிறது. அதாவது தன் சொத்துகளை இன்னும் அதிகப்படுத்துவதற்காக அவன் அவைகளை வட்டிக்கு விட்டுவைக்கிறான். ஒரு மனிதனின் வாழ்க்கையிலே அதுதான் உச்சநிலை. இச் சந்தர்ப்பத்தில் மருமகன் பாடும் பாட்டு, ஒரு தலைவன் தன் அதிகாரத்தில் உச்சநிலையை அடைந்து பெருமையை வெளிக்காட்டும் தன்மையது.

'நான் போய் ஸ்டீவன்ஸ் (Stevens) மலையைத் துண்டு
துண்டாகக் கிழித்துவிடுகிறேன்
என்னுடைய நெருப்பின் கற்களுக்காக அதை நான் பயன்
படுத்துவேன்.'
'நான் போய் கட்ஸ்டய்ஸ் (Katstais) மலையை உடைக்
கிறேன்
என்னுடைய நெருப்பின் கற்களுக்காக அதை நான் பயன்
படுத்துவேன்.'

மணமகளுக்காகத் தரப்படும் தொகையைத் திருப்பிப் பெறுவதற்காகவும் மதிப்புயர்ந்த உரிமைகளை மேன்மேலும் அடைவதற்காகவும், பேராசை பிடித்த ஒருவன் நான்கு திருமணங்கள் செய்துகொண்டான். இம்மாதிரி உறவு விரும்பப்பட்டு, ஆனால் திருமணத்துக்குரிய பெண்கள் இல்லாவிட்டாலும்கூட பண்டமாற்றுகள் நடைபெற்றன. அப்பொழுது மருமகன், மாமனாருடைய 'இடது காலை'யோ 'வலது கையை'யோ அல்லது அவனது உடலின் எந்தப் பாகத்தையோ திருமணம் செய்துகொண்டான் என்று சொல்லுகிறார்கள். அதாவது உண்மையான திருமணத்தைப்போன்றே சடங்குகள்மூலம் ஒரு போலித் திருமணம் நடைபெற்றது. அதன்மூலமாக உரிமைகளும் வழங்கப்பெற்றன. வடமேற்குக் கடற்கரையிலே, உரிமைகளைப் பரிமாறிக்கொள்வதற்காகத் திருமணம் ஒரு முறையாயிற்று. வேறுபட்ட இரு குடிகளிடையே பொறாமையால் ஏற்பட்ட சண்டைகளிலே போய் முடிந்த சில திருமணங்கள் இன்றும் குறிப்பிடத்தக்கவை. தங்களை விட்டுப் பிரியக்கூடாது என்று சில குடிகள் நினைக்கிற நடனங்களும் உரிமைகளும், அக் குடியினரின் உயர்குடிப் பெண்கள் வேறு குடிமக்களிடை மணம் செய்துகொண்டுவிட்டால் போய் விடுகின்றன. ஒருசமயம் மாமனார் எந்தக் குடிகளிடமிருந்து

அந்த நடனத்தைப் பெற்ருனே, அது திருமணத்தின்மூலம் அக் குடிகளுடைய எதிரிக்குச் சென்றுவிட்டதைக் கண்டு அந்தக் குடிகள் கோபமடைந்தார்கள். அவர்கள் விருந்து கொடுப்பது போல் பாவனை செய்து, அதற்கு மாமனுரையும் அவன் குடிகளை யும் அழைத்தனர். எல்லோரும் ஒன்று கூடியவுடன் அவர்கள் மாமனுரையும் அவனது நண்பர்களில் பலரையும் கொன்றுவிட் டனர். இம்முறையில் அவர்கள் திருமண ஏற்பாடு செய்திருந்த எதிரித் தலைவனுக்கு அந்த நடனத்தின் உரிமை கிடைக்காதபடி செய்துவிட்டனர். இல்லாவிட்டால் மணமகளுக்கான தொகை திருப்பித்தரப்படும்பொழுது அவன் அதை அடைந்திருப்பான். மாமனுர் இறந்துவிட்டதால் நடனத்தின் உரிமையை இழந்த தலைவன் அவ்வளவு எளிதில் ஏமாறக்கூடியவனன்று. அவன் தன் மாமனுரைக் கொன்றவனுடைய பெண்ணேடுத் திருமண ஏற்பாடு செய்து அதன்மூலம் அந்த நடனத்திற்கான உரிமை யைக் கோரினுன். இவ்வாறு தன் முதல் திருமணத்தின்மூல மாகப் பெற நினைத்த நடனத்தைப் பெற்ருன்.

எப்படி நோக்கினுலும், வடமேற்குக் கடற்கரையிலே திரு மணம் ஒரு வியாபார விவகாரமாகத்தான் இருந்தது. அதற் கேற்ற விதிகளையும் அது பின்பற்றியது. குழந்தை பெற்ற பெண் அவளுக்காக, மணமகளுக்குத் தரப்படும் தொகை போதுமான பொருள்களால் திருப்பித் தரப்பட்டுவிட்டதால், அவளுடைய சுற்றத்தாரால் திரும்பிஅடையப்பெற்ருள் என்று கருதப்படுகிருள். கணவன் 'அவளைத் தன் வீட்டில் இனுமாகத் தங்கியிருத்தலை'த் தன் கௌரவத்திற்குக் குறைவாக எண்ணுகிருன். ஆகவே, அவன் தன் மாமனுருக்கு மறுபடியும் அவளுக்கான தொகையைக் கொடுக்கிருன். ஈடு செய்யப்பெருத ஒரு பயனை அவன் பெற விரும்புவதில்லை.

திருமணத்திலே இருதரத்தாரிடையே பண்டமாற்றுகளில் திருப்தி ஏற்படாவிட்டால், வெளிப்படையான சண்டை மாம னுருக்கும் மருமகனுக்குமிடையே ஏற்படுவதுண்டு. ஒருசமயம், தன் மருமகனின் கடைசிக் குழந்தையின் துவக்கச் சடங்கின் போது மாமனுர் ஒரு பெயரையும் கம்பளங்களையும் மருமகனுக் கீந்தான். அக் கம்பளங்களை மருமகன், எதிரிக்கூட்டங்களுக்குப் பகிர்ந்து அளிக்காமல் தன் உறவினர்களிடையே கொடுத்துவிட் டான். இது ஒரு மாபெரும் குற்றம். ஏனென்ருல் பரிசுகள், தன் பெயரின் பெருமைக்குத் தக்கனவாக இல்லாமல் மிகவும் குறைவு என்று எண்ணப்பட்டது. மாமனுர், அவமானத்தால் கோபப் பட்டுத் தன் மகளையும் அவளுடைய இரு குழந்தைகளையும் தன்

கிராமத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டான். மாமனூர், இச் செய்கையை மருமகனுக்குத் தான் கொடுத்த ஒரு அடியாக நினைத்தான். ஆனால், மருமகனே தன் மனைவியையும் மக்களையும் வெறுத்து ஒன்றுமே நடவாததுபோல் இருந்துவிட்டான். இது நிலைமையைத் தலைகீழாக்கியது. 'பிறகு, தன் குழந்தைகளைப் பார்க்க மருமகன் தொகை கொடுக்கமாட்டான் என்றதனால் மாமனூர் அவமானப்பட்டான்'. மருமகன் வேறொரு மனைவியை மணந்துகொண்டு வாழ்ந்திருந்தான்.

மற்றொரு சமயம் ஒரு தலைவன், தன் மாமனூர் திருப்பித்தர வேண்டிய பரிசைக் காலங்கடத்திவிட்டார் என்று பொறுமை யிழந்தான். தன் மனைவியைப்போல் ஒரு பதுமை செதுக்கி, குடிகளையெல்லாம் ஒரு விருந்துக்கு அழைத்தான். மக்களின் எதிரில் அந்தப் பதுமையின் கழுத்தில் ஒரு கல்லைக்கட்டி, அதைக் கடலில் எறிந்துவிட்டான். இந்த அவமானத்தைத் துடைத் தெறிய வேண்டுமென்றால், மாமன் தன் வசமுள்ள சொத்தைவிட மிக அதிகமான அளவு பகிர்ந்து கொடுக்கவோ அழிக்கவோ வேண்டும். இப்படிச் செய்ததன்மூலம் மருமகன் தன் மனைவி யினுடையவும், அவள் மூலமாக மாமனுடையவுமான ஓர் உயர்ந்த நிலையை அழித்துவிட்டான். திருமணமும் ரத்து செய்யப்பட்டது.

உயர்குடிப் பட்டங்களைப் பரம்பரை வாயிலாகப் பெறமுடி யாத ஒருவன், உயர்நிலையிலுள்ள ஒரு பெண்ணை மணந்துகொள் வதன்மூலம் தன் நிலைமையை உயர்த்திக்கொள்ளலாம். இப்படிப் பட்டவன் அநேகமாக இளையவனாகத்தான் இருப்பான். ஏனென் றால், மூத்தவனுக்கு உரிமைகள் வழங்குகிற பழக்கத்தினால் இவனுக்கு உயர்நிலைகள் கிடைப்பதில்லை. அவன் நல்ல இடத் திலே திருமணம் செய்துகொண்டு, தன்னுடைய கடன்களை சாமர்த்தியமாகக் கையாண்டால், சிலசமயம், குடிமக்களிடையே உயர்ந்தவர்களோடுத் தன்னிலையை உயர்த்திக் கொள்ளமுடியும். ஆனாலும், இது கடுமையான ஒரு வழி. ஒரு பெண்ணைச் சாதாரண மனிதனோடு இணைத்தால் அது அப் பெண்ணின் குடும்பத்திற்கே அகௌரவம். மணமகன் தேவையான பொருள்களைச் சேர்க்க முடியவில்லையாதலால், திருமணத்தின்போது நடக்கும் பண்ட மாற்றுகள் நடைபெறுவதில்லை. பாட்லேட்ச்மூலம் உறுதி செய் யப்படாத திருமணம் 'நாய்கள்போல ஒன்றுசேர்ந்திருத்தல்' என்று சொல்லப்படுகிறது. அத் திருமணத்தின்மூலம் பிறக்கும் குழந்தைகள் சட்டத்திற்குப் புறம்பானவை. மனைவி தன்னிட முள்ள உயர்குடிப் பட்டங்களைக் கணவனுக்குக் கொடுத்தால் அவைகளை அவன் இனாமாகப் பெற்றதாகக் கருதப்பட்டு, அவள்

குடும்பத்திற்கே அவமானம் உண்டானதாக எண்ணப்படுகிறது. 'அவள் ஒரு சாதாரணமானவனைக் கணவனாகப் பெற்றிருந்தால் அவர்களது பெயர்கள் கெட்டபெயர்களாகவும் மிகத் தாழ்ந்தவையாகவும் ஆயின.' அவன் சொத்துகள் சேர்த்துத் தன் பெயர்களுக்கான உரிமைகளை உறுதிசெய்துகொண்டபோதிலும் அந்த அவமானம் குடிகளால் மறக்கமுடிவதில்லை. அதன் தலைவர்கள் அவனுக்கெதிராக ஒன்றுசேர்ந்து ஒரு பாட்லேட்ச் விழாவில் அவனது பெருமைகளைக் குலைத்துவிடுவார்கள். ஒருசமயம், ஓர் உயர்குடிப்பெண்ணின் சாதாரணக் கணவன், வெள்ளையரிடமிருந்து சம்பாதித்த பணத்தைக்கொண்டு உயர்நிலையை அடைந்தபொழுது தலைவர்கள் அவனை மிஞ்ச தங்களுடைய செப்புகளை ஒன்று சேர்த்தனர். அவனுடைய அவமானத்தை நிலைநிறுத்தவேண்டி அவர்கள், பன்னிரண்டாயிரம் கம்பளங்களுக்கீடான செப்பையும், ஒன்பதாயிரம் கம்பளங்களுக்கீடான செப்பையும், பதினெட்டாயிரம் கம்பளங்களுக்கீடான செப்பையும் உடைத்தார்கள் என்று கதை சொல்லப்படுகிறது. உடைக்கப்பட்ட செப்புகளுக்கு ஈடாக செப்புகளை வாங்க அவன் முப்பத்தொன்பதாயிரம் கம்பளங்களைச் சேகரிக்க முடியவில்லை. அவன் தோல்வியடைந்தான். அவனுடைய குழந்தைகள் பாதி உயர்குடியைச் சேர்ந்தவையாதலால், அவைகள் அவனுடைய அவமானத்தில் பங்கு கொள்ளவேண்டாம் என மற்றக் குடும்பங்களுக்கு அளிக்கப்பெற்றன.

உரிமைகளைப் பெறுவதற்குத் திருமணம் மாத்திரம் வழியாக அமையவில்லை. அவைகளின் சொந்தக்காரனைக் கொலைசெய்வது மிகவும் மதிக்கப்பட்ட ஒரு வழியாகும். கொன்றவன், கொல்லப்பட்டவனின் பெயர், நடனங்கள், சின்னங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டான். விரும்புகின்ற நடனங்களையும் முகமூடிகளையும் அவைகளின் சொந்தக்காரர்களின் பகையால் பெறமுடியாத குடிகள், அச் சடங்குகளைப்பெற்ற ஒருவன் செல்லும் படகை வழிப்பறி செய்யலாம். கொன்றவன் அந்த நடனத்திற்கான உரிமையை அடைகிறான். அவன் அதைத் தன் தலைவனுக்கோ மூத்த சகோதரனுக்கோ அளிக்கிறான். அவனும் அதைத் தன் சகோதரியின் மகனுக்கோ தன் மகனுக்கோ துவக்கிவைத்து, இறந்தவன் பெயரையும் அவனது நடனத்தையும் கொடுக்கிறான். பாட்டிற்கான வார்த்தைகள், நடனத்திற்கான அடிகள், தெய்வீகப் பொருள்களின் உபயோகங்கள் ஆகிய மொத்தச் சடங்குகளும், அவைகளைச் சொந்தமாகக்கொண்டிருந்தவன் கொலை செய்யப்படுமுன்பே கொலை செய்தவனுக்குத் தெரிந்திருந்தது. சடங்குகளின் விபரத்தைக் கொலை செய்தவன் அடையவில்லை. ஆனால், சடங்குகளுக்கான உரிமையை அடைந்

தான். கொன்றவன், கொல்லப்பட்டவனின் உரிமைகளைக் கொண்டாடினான் என்பது சந்தேகத்திற்கிடமின்றி முன்காலத்தில் வடமேற்குக் கடற்கரையினர் உரிமைப் போட்டிகளைப் போர் முறையிலே நடத்திவந்தார்கள் என்றும், சொத்துக்களைக் கொண்டு நடத்தும் போட்டி அதிக முக்யத்துவம் வாய்ந்திருக்க வில்லை என்றும் காட்டுகிறது.

வடமேற்குக் கடற்கரையிலே, உரிமைகளை அவைகளின் சொந்தக்காரர்களைக் கொல்வதால் அடைதல் என்பது மனிதர்களிடையேமட்டும் நடைபெறவில்லை. தெய்வங்களிடமிருந்து சக்திகளைப் பெறவும் இது ஒரு முறையாகும். இயற்கைக்கப்பாற்பட்ட ஒன்றை ஒருவன் சந்தித்துக் கொன்றுவிட்டால், அதனுடைய முகமூடியையும் சடங்குகளையும் அவன் பெற்றுவிடுகிறான். எல்லா மக்களும் அநேகமாக மனிதர்களிடையே இருக்கின்ற நடத்தையில் வைத்திருக்கும் நம்பிக்கையைத்தான் இயற்கைக் கப்பாற்பட்டவைகளின் மேலும் வைத்திருக்கின்றனர். ஆனால், சாதாரணமாக இயற்கைக்கப்பாற்பட்டவைகளிடத்தில் காட்ட வேண்டிய மரியாதையும் அச்சமும் காட்டப்படாமல், அவைகளை அவமானப்படுத்துவதும் கொல்வதும் பலனளிக்கக்கூடிய நடத்தைகளாகக் கொண்டுள்ளனர். வடமேற்குக் கடற்கரையிலே இது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு பழக்கம்.

சில உரிமைகளைப் பரம்பரை வழியாகப் பெருமலும் விலை கொடுத்து வாங்காமலும் ஒருவன் பெற வழியும் இருந்தது. இவை மதசம்பந்தமான முறைகளைப் பயன்படுத்துகின்ற ஒரு பூசாரியாக மாறுவதன்மூலம் கிடைத்தன. இப்படித் தெய்வத்தன்மையுடையவனாக மாறுவதற்கு, தகப்பனாலோ மாமனாலோ துவக்கிவைக்கப் படாமல், இயற்கைக்கப்பாற்பட்டவைகளின்மூலம் துவக்கிவைக் கப்பெறவேண்டும். ஆவியின் வருகையால் ஒருவன் பெயர்களையும் உரிமைகளையும் அடைகிறான். தெய்வத்தன்மை அடைந்தவர்கள் ‘ஆவிகளின் வரிசைக்குத்தக்கவாறு’ உரிமைகளைப் பெற்றுப் பயன்படுத்திவந்தனர். அவர்கள் பெற்ற உரிமைகள் பரம்பரை வழி வந்த உரிமைகள் போலவே மதிக்கப்பட்டு அதன்படியே பயன்படுத்தப்பெற்றும் வந்தன.

மரபு முறைப்படி, ஒரு தீராத நோயிலிருந்து குணமடைந்தவன் தெய்வத்தன்மை அடைந்தவனாகக் கருதப்பட்டான். நோயிலிருந்து குணமடைந்தவர் எல்லோரும் இப்படிக் கருதப்படவில்லை. ஆவிகளால் குணமடையவேண்டிச் சிலர் காடுகளில் உள்ள சிறு வீட்டில் தனித்துவைக்கப்பட்டுக் குணமடைந்தால், அவர்கள்மட்டுமே தெய்வத்தன்மை பெற்றவராகக் கொள்ளப்படு

கின்றனர். அங்கே ஆவிகள்வந்து அவனுக்குப் பெயரையும் உரிமைகளையும் வழங்கினுல், அவன், சாதாரணமாகப் பரம்பரை வழிவந்த உரிமைகளை முதலில் கொள்பவன் எந்த முறைகளைக் கையாளுகிருனே அதே முறைகளைக் கையாளுகிருன். அதாவது, அவன் ஆவிகளின் சக்திகளோடு திரும்பிவந்து தான் புதிதாக அடைந்த உரிமைகளை வெளிப்படுத்திஞன். அவன் தன் பெயரை அறிவித்து நோயால் வாடும் ஒருவனைக் குணப்படுத்தித் தன் திறமையைக் காட்டிஞன். பிறகு தன் புதுப்பெயரை உறுதி செய்துகொள்ள சொத்துக்களை வழங்கி, தெய்வத்தன்மை பெற்றவஞக வாழ்க்கை நடத்திஞன்.

கௌரவத்திற்கான போட்டிகளில் எப்படித் தலைவர்களும் உயர் மக்களும் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தினரோ அவ்வாறே தெய்வத்தன்மை பெற்றவரும் அவர்களது உரிமைகளை உபயோகப்படுத்தினர். தெய்வத்தன்மை பெற்றவர்கள், அவர்களுடைய எதிரிகளின் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைக் கேலி செய்து, அவர்களுடைய மேலான சக்தியைக் காட்டச் சொல்லிப் போட்டிக்கழைத்தனர். ஒவ்வொரு தெய்வத்தன்மை பெற்றவனும் தன் எதிராளியிடமிருந்து சிறிதுமட்டும் மாறுபட்ட தந்திரங்களைக் கையாண்டான். அவனுடைய ஆதரவாளர்கள் அவனுடைய செய்கைகளை, எதிராளிகளின் செய்கைகளைக் காட்டிலும் மேம்பட்டதாகப் பெருமைப்படுத்தினர். சில தெய்வத் தன்மை பெற்றவர்கள் நோய்களை உறிஞ்சி எடுத்தார்கள். சிலர் தேய்த்துவிட்டார்கள், மற்றும் சிலர் இழந்த ஆத்மாவை மறுபடி உண்டாக்கிஞர்கள். நோய்வாய்ப்பட்டவன் உடலிலிருந்து நோயை ஒரு சிறு 'புழுவாக' வெளியே எடுப்பது ஒரு விரும்பப் பட்டமுறை. இப்படிச் செய்துகாட்ட, தெய்வத்தன்மை பெற்றவன் தன் மேலுதடுக்கும் பற்களுக்கும் இடையே பறவைகளின் மென் தூவிகளால் (Down feathers) ஆன ஒரு சுருளை வைத்திருப்பான். நோயைக் குணப்படுத்த அவன் அழைக்கப்பட்டபோது முதலில் அவன் தன் வாயைத் தண்ணீர்கொண்டு அலம்புவான். இப்படித் தன் வாயில் ஒன்றுமில்லை என்று நிரூபித்த பிறகு, ஆட்டம் ஆடி, தன் வாய் இரத்தம் கலந்த உமிழ்நீரால் நிறைந்திருக்கும்வண்ணம் தன் தாடைகளையே கடித்து உறிஞ்சுவான். பிறகு அவன் ஒரு பாத்திரத்தில் நோய்ப்பட்ட இடத்திலிருந்து உறிஞ்சினதாகச் சொல்லி இரத்தத்தையும் மென்தூவிகளாலான சுருளையும் உமிழ்வான். 'புழுவை' அலம்பி எடுத்து, நோய்க்கும் வலிக்கும் காரணமாக இருந்ததைத் தான் எடுத்துவிட்டதாகக் காட்டுவான். ஒரு நோயைக் குணப்படுத்தப் பல தெய்வத் தன்மை பெற்றவர்கள் முயற்சி செய்யலாம். முயற்சிகளிலே தோல்வி

யடையும் சிலர், 'செப்பு'ப் போட்டியிலே தோல்வியடைந்த தலைவர்களைப்போலவே வெட்கமடைந்தனர். அவர்கள் அவமானத்தால் உயிர் துறந்தனர். இல்லாவிட்டால் அவர்கள் ஒன்று சேர்ந்து வெற்றிபெற்றவனைக் கொன்றுவிடவும்கூடும். தெய்வத்தன்மை பெற்றவன் வெற்றி அடைந்தால் அநேகமாகத் தோற்றவர்களால் கொல்லப்படுவது சாதாரணமாக நடக்கக் கூடியது. தெய்வத்தன்மை பெற்றவனின் சாவு பழிவாங்கப்படுவதில்லை. ஏனென்றால், அவனுடைய சக்தி குணப்படுத்துவது போலவே துன்பம் விளைவிக்கவும் வல்லது. சூன்யக்காரனைப் போல அவன் காப்பாற்றப்பட உரிமை பெற்றிலன்.

பட்டப் பெயர்களை உறுதி செய்துகொள்வதையும் சின்னங்களையும்பற்றி அமைந்த மதசம்பந்தமற்ற போட்டிகளுக்கு, க்வாக்யூட்ல் மக்களிடையே தெய்வத்தன்மை பெறுதலும் வேறொரு துறையிலே இணையாக அமைந்திருந்தது. உதாரணமாகத் தன்னின உண்ணிக் கூட்டத்திலே சேர்வது, அச்சமயத்திலே நடக்கின்ற நாடகபாணியிலே அமைந்த ஒரு செய்கையாகும். வேறு இடங்களில் ஆவிகளைச் சந்திப்பது என்பது ஒரு சாதாரணக் கொள்கையோடு நின்றுவிடுகிறது. அதேபோல மருத்துவனின் உரிமைகளை நாடகபாணியிலே உறுதிசெய்து கொள்ளக் கூட்டாளிகளைத் தயார் செய்துகொள்வதிலும், தந்திரங்களைத் தெரிந்துகொள்வதிலும், ஆவிகளைப் பூசைசெய்தல் என்பது கைவிடப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத்தன்மை பெற்றவனும் தனக்கு ஓர் உதவியாளனைப் பெற்றிருந்தான். அவனை ஓர் ஒற்றன் என்றுகூடச் சொல்லலாம். மக்களோடு கலந்து, நோயாளி எங்கே வலிக்கிறது என்று சொல்கிறான் என்று கவனித்து அதைத் தன் எஜமானனுக்கு அறிவிப்பது அவன் கடமையாகும். பிறகு நோயைக் குணப்படுத்த தெய்வத்தன்மை பெற்றவன் அழைக்கப்பட்டால் அவன் வலியிருக்கும் உறுப்பின் மீது முழுக் கவனத்தைச் செலுத்தித் தன்னுடைய இயற்கைக் கப்பாற்பட்ட சக்திகளை வெளிக்காட்டுவான். இம்மாதிரியே யாராவது சோம்பலாக இருந்தாலும் ஒற்றன் உடனே அறிவித்து விடுவான். ஆகையால் குணப்படுத்தும்போது, தெய்வத்தன்மை பெற்றவர்கள் நோயாளிகளின் (சோம்பேறிகளின்) ஆத்மாக்களைத் திருப்பி அடையவேண்டும் என்று காரணம் கண்டுபிடித்துத் தங்களுடைய சக்தியைக் காட்டிக்கொள்வார்கள். ஆவிகளின் உணர்ச்சி என்று சொல்லப்பட்ட செய்திகளைக்கொண்டு ஒற்றர்கள் படகுகளில் வெகுதூரம் சென்றார்கள்.

தெய்வத்தன்மை பெற்றவர்களும் அவர்களுடைய ஒற்றர்களும் கையாளும் தந்திரங்களை, அவர்களோ மக்களோ குறை

வாக மதிப்பிடுவதில்லை. அநேக மக்கள் இயற்கைக்கப்பாற் பட்ட சக்திகள் மனிதனுல் செய்யப்படும் தந்திரங்கள்மூலமாக வெளிப்படுகின்றன என எண்ணுகின்றனர். ஆனுல், க்வாட் யூட்ல் மக்கள் அப்படி நினைப்பதில்லை. நம்பிக்கையிழந்த 'குட்-ஓவர்-ஆல்-தி எர்த்' (Good-over-all-the-Earth) என்ற தெய்வத் தன்மை பெற்றவன் தன்னுடைய கண்கட்டு வித்தையினுல், தன் கையைப் பாம்பு கடிக்கச் செய்ததாக ஒப்புக்கொண்டான். உடனே மக்கள் 'அவன் தெய்வத்தன்மை செயல்களில் எல்லாம் போலி என்றும் அவன் சாதாரணமானவன் என்றும்' தெரிந்து கொண்டனர். அவன் அவமானத்தால் பின்னடைந்து ஓராண்டுக் குள்ளே பைத்தியம் பிடித்தலைந்தான். எந்தத் தெய்வத்தன்மை பெற்றவனது தந்திரம் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவன் தோல்வி யுற்றவனே. ஒரு மருத்துவன் தன் கழுத்துப்பட்டையிலிருந்து பஞ்சு திணிக்கப்பட்ட ஓர் இறந்த அணிலை எடுத்து தன் கைகளின்மீது ஓடச்செய்வதை வழக்கமாகக்கொண்டிருந்தான். அவன் அதோடு நடனமாடி, அதைத் திரும்பவும் உயிருள்ள தாகச் செய்யமுடியும் என்று காட்டிக்கொண்டான். கூரை மீதிருந்த அவனுடைய இரகசியக் கூட்டாளி ஒரு பலகையை அகற்றி அதன்வழியே ஒரு மெல்லிய நூலைக் கீழே தொங்கவிட் டான். தெய்வத்தன்மை பெற்றவன் அதைத் தன் அணிலின்மீது மாட்டி அதைக் கூரைக்குப் பறக்கச் செய்தான். பிறகு அதைக் கீழே வரும்படி அழைத்தான். பார்த்துக்கொண்டிருந்தவர் அவன் எப்பொழுதும் ஒரே இடத்தில் நின்று அணிலைக் கூப்பிடுவதைக் கவனித்தனர். ஒருவன் கூரைமீது ஏறி உண்மையைக் கண்டு பிடித்துவிட்டான். அத் தெய்வத்தன்மை பெற்றவன், தன் தொழிலைவிட்டுவிட்டு, வீட்டைவிட்டு வெளியே வராமல், 'குட்-ஓவர்-ஆல்-தி-எர்த்'தைப் போலவே அவமானத்தால் உயிர் நீத் தான். க்வாக்யூட்ல் மக்களிடையே தெய்வத்தன்மை பெற்றவர் கள், தங்களுடைய தொழில்களுக்கு இவ்விதம் தந்திரங்களைக் கையாண்டுவந்தனர். இது கண்டுபிடிக்கப்படுவது, பாட்லேட்ச் போட்டிகளிலே தோல்வியடைவதுபோலவே கருதப்பெற்றது.

மதசம்பந்தமற்ற தலைவர்கள்போலவே தெய்வத்தன்மை பெற்றவனும் தனது உரிமைகளை உறுதிசெய்துகொள்ள சொத்து களைப் பகிர்ந்தளிக்கவேண்டும். சொத்துகளைப் பகிர்ந்தளிக்கின்ற முறை போலவே ஒரு தெய்வத்தன்மை பெற்றவன் நோயைக் குணப்படுத்திஞல், நோயாளியின் செல்வத்திற்கும் குடும்ப அந்தஸ்திற்கும் தக்கவாறு வெகுமதி அளிக்கப்பெற்ருன். க்வாக் யூட்ல் மக்கள் தெய்வத்தன்மையைப் பெற்றிருத்தல் 'சொத்து களைச் சுலபமாகப் பெறும்வழி' என்று சொல்கிருர்கள். அது தன்

நிலையை உயர்த்திக்கொள்ள உரிமைகளை விலைக்கு வாங்காமலும் பரம்பரையாகப் பெருமலும் அடைய வழிசெய்கிறது.

க்வாக்யூட்ல் மக்கள் வழக்கப்படி, தெய்வத்தன்மையின் உரிமைகளையும் மற்ற உரிமைகளைப்போலவே விலைக்கு அல்லது பரம்பரை வழியாகப் பெறலாம். தெய்வத்தன்மைக்கான தந்திரங்கள் புதிதாக வருபவர்களுக்குக் கற்றுத்தரப்படவேண்டியவை. ஆகவே, கற்றுத்தரும் ஆசிரியனுக்குக் காணிக்கை செலுத்த வேண்டும். சாதாரணமாக, இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகள் எப்படிப் பரம்பரையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன என்று சொல்ல இயலாது. தன்னின உண்ணி நடனக்காரர்களைப்போன்று காட்டில் சிலகாலம் தனித்திருந்து வந்த மகன்களுக்குச் சிலர் தெய்வத்தன்மையைத் துவக்கி வைத்தார்கள். ஃபூல் (Fool) என்ற பெரிய தெய்வத்தன்மை பெற்றவன் தன்னுடைய உடம்பிலிருந்து க்வார்ட்ஸ் (quartz) என்ற பளிங்குக் கல்லை வாந்தியெடுத்து அதைத் தன் மகன்மீது விட்டெறிந்தான். உடனே மகன் மிகவும் உயர்ந்த ஒரு தெய்வத்தன்மை பெற்றவனுக ஆகிவிட்டான். இதனுல் அவனுடைய தகப்பன் தெய்வத்தன்மை பெற்றவன் தொழில்செய்யும் உரிமைகளை இழந்தான்.

வடமேற்குக் கடற்கரையிலே, தன்னுடைய பெருமைகளை உயர்த்திக் காட்டிக்கொள்ளவும் எதிரிகளின் தாழ்ந்த நிலையை உணர்த்தவும் வேண்டிய அவசியங்களைக்கொண்டு அவர்கள் நடத்தை ஏற்பட்டது. தணிக்கை செய்யப்படாமல் தற்புகழ்ச்சி செய்துகொள்ளுதலையும், எதிரிகளின்மீது அவதூறுகளையும் இழிசொற்களையும் சுமத்துதலையும்கொண்டு அது நடைபெற்றது. க்வாக்யூட்ல் மக்களுக்கிடையே இழிசொற்களால் ஏற்பட்ட அனுபவத்தையும் தூற்றல்களால் ஏற்படுகின்ற அச்சத்தையும் குறிப்பாகச் சொல்லலாம். வெற்றிக்கும் அவமானத்திற்கும் இடையே உள்ள உணர்ச்சி நிலைகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். பொருளாதாரப் பண்டமாற்று, திருமணம், அரசியல் வாழ்க்கை, மதசம்பந்தமான பழக்கங்கள் எல்லாமே அவர்கள் ஒருவர்க்கொருவர் சவால்விடுவதை ஆதாரமாகக்கொண்டு நடைபெற்றன. இதுகூட, அவமானத்தால் அவர்கள் நடத்தை பாதிக்கப்படுதலை ஓரளவுதான் குறிக்கிறது. வடமேற்குக் கடற்கரையினர் இயற்கையின் சக்திகள், வெளியுலகம் ஆகியவற்றேடு கொண்ட தொடர்புகளுக்கும் இதேமாதிரி நடத்தையைக் கையாண்டனர். எல்லா விபத்துகளும் ஒருவன் அவமானப்பட வேண்டிய சந்தர்ப்பங்களாகும். ஒருவனது கோடரி கைதவறிக் காலில்பட்டுப் புண்ணுக்கிவிட்டால் அவன் உடனே தனக்கேற்

பட்ட அவமானத்தைத் துடைத்தெறியவேண்டும். தனது படகு கவிழ்ந்துவிட்டால் உடனே அவன் பழியை 'உடலிலிருந்து துடைத்துவிட'வேண்டும். அந்த விபத்தைக்கண்டு மக்கள் சிரிக்காவண்ணம் அவர்கள் தடைசெய்யப்படவேண்டும். இதற்காக அவர்கள் கையாண்டமுறை சொத்துகளைப் பகிர்ந்தளிப்பதுதான். அது அவமானத்தை அகற்றியது. பாட்லேட்ச்முறை சம்பந்தப்பட்ட அவர்கள் பண்பாட்டின்படி அச் செய்கை அவர்களது உயர்ந்த நிலையை மறுபடியும் நிலைநாட்டியது. இம்முறையில் சிறிய விபத்துகள் எல்லாம் ஈடுசெய்யப்பட்டன. பெரிய விபத்துகளானால் அதற்காகப் பனிக்கால விழா நடத்தவோ அல்லது தலைவேட்டையாடவோ அல்லது தற்கொலையோ செய்யும்படி ஆகலாம். தன்னின் உண்ணிக் கூட்டத்தின் ஒரு முகமூடி உடைந்துவிட்டால், அந்த அவமானத்தைத் துடைக்க ஒருவன் பனிக்கால விழா நடத்தித் தன் மகனைத் தன்னின உண்ணியாகச் சேர்க்கவேண்டும். ஒருவன் தன் நண்பனோடு சூதாடித் தோற்று, சொத்துகளை இழந்துவிட்டால் அவனுக்குத் தற்கொலை ஒன்றுதான் வழி.

இம்முறையிலே, சாவு ஒரு பெரிய விபத்தாகக் கொள்ளப்பட்டது. வடமேற்குக் கடற்கரையிலே அவர்களுடைய பண்பாட்டு நிறுவனங்களின்படி அவர்களுடைய தனிப்பட்ட வட்டமாயமைந்த நடத்தையைப் புரிந்துகொள்ளாமல், நாம் அவர்களுடைய துக்கம் கொண்டாடுதலைப் புரிந்துகொள்ள முடியாது. அவர்களுக்குத் தெரிந்த ஒரு பெரிய சவால் சாவாகும். ஒரு பெரிய விபத்தை அவர்கள் ஈடுசெய்வதுபோல் சாவையும் சொத்துகளைப் பகிர்ந்தளிப்பதன் மூலமும், தலைவேட்டை அல்லது தற்கொலை மூலமும் ஈடுசெய்கிறார்கள். அவமானத்தைத் துடைப்பதற்காக அவர்களுக்குத் தெரிந்த வழியைக் கைப்பற்றினார்கள். ஒரு தலைவனுடைய நெருங்கிய உறவினன் இறந்துவிட்டால் அவன் தனது வீட்டைக் கொடுத்துவிடுகிறான். அதாவது அவனது வீட்டின் கூரை, சுவர் இவைகளுக்கான பலகைகளைப் பிய்த்து எடுத்துத் தகுதியுள்ளவர்கள் கொண்டுசெல்கின்றனர். சாதாரணமுறையிலே இதுவும் ஒரு பாட்லேட்ச் ஆகும். இப்படி எடுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு பலகையும் வட்டியுடன் திருப்பித்தரப்படவேண்டும். அது 'விருப்பமான ஒருவனது சாவினால் பைத்தியம் பிடிக்கிறது' என்று சொல்லப்பெற்றது. திருமணம், இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப் பெறுதல், சண்டை ஆகியவற்றின்போது பயன்படுகிற முறைகளைக்கொண்டே க்வாட்யூட்ல் மக்கள் துக்கத்தையும் கொண்டாடினர்.

இதைவிட இன்னும் தீவிரமுறையிலே சாவின் சவாலை ஏற்ப துண்டு. தலைவேட்டையின்மூலம் இது ஏற்கப்படுகிறது. இறந்த வனைக் கொன்ற கூட்டத்தார்மேல் பழிவாங்குதல் இதனால் குறிப் பிடப்படவில்லை. இறந்த உறவினன், நோயினாலோ அல்லது விரோதியினாலோ இறந்திருக்கலாம். தலைவேட்டையை 'ஒருவ னுடைய கண்களைத் துடைப்பதற்காகக் கொல்லுதல்' என்று கூறினர். தங்களுக்குப் பதிலாக வேறொரு குடும்பத்தைத் துக்கப் படச் செய்தலின்மூலம் இது சரிசெய்யப்பெறுகிறது. ஒரு தலை வனது மகன் இறந்தவுடன் அவன் ஒரு படகில் ஏறிச்சென்றான். அண்டையிலுள்ள மற்றொரு தலைவன் வீட்டில் அவன் வரவேற்கப் பட்டான். அவன் தனக்கு விருந்தளிப்பவனை நோக்கி 'என் மகன் இன்று இறந்துவிட்டான். நீயும் அவனுடன் போ' என்று சொல்லி அவனைக் கொன்றுவிட்டான். அவன் மிகக் கண்ணியமாக நடந்துகொண்டான் என்று சொல்லப்பெறுகிறது. ஏனென்றால், அவன் தாழ்த்தப்படாமல் பதிலுக்குச் சாவை ஏற்படுத்திவிட் டான். சாவினால் ஏற்படும் பிரிவை நன்கு புரிந்துகொள்ளாவிட் டால் இந்தச் செய்கை அர்த்தமற்றதாகத் தெரிகிறது. சாவானது எதிர்பாராத விபத்துகளைப்போல ஒருவனது கர்வத்தைக் குலைத்து விடுகிறது. ஆகவே, அவமான உணர்ச்சியாகக் கொள்ளப்பெற்று ஈடுசெய்யப்பெறுகிறது.

சாவினால் ஏற்படுகிற அவர்களது நடத்தையைப்பற்றிப் பல கதைகள் உள்ளன. ஒரு தலைவனது சகோதரியும் அவன் பெண் ணும் விக்டோரியாவுக்குச் சென்றிருந்தனர். அவர்கள் மோசமான விஸ்கி குடித்ததாலோ அல்லது அவர்கள் சென்ற படகு கவிழ்ந்து போனதாலோ அவர்கள் திரும்பி வரவில்லை. தலைவன் தனது போர்வீரர்களை ஒன்று கூட்டினான். 'குடிகளே! நான் உங்களைக் கேட்கிறேன். யார் அழுவது? நான் செய்யட்டுமா அல்லது வேறொருவன் செய்யட்டுமா?' என்று கேட்டான். உடனே அவர் களிலொருவன் 'தலைவா! நீ செய்யவேண்டாம். குடிகளிலே வேறு ஒருவன் செய்யட்டும்' என்று பதிலுரைத்தான். உடனே அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட புண்ணைத் துடைப்பதற்காக அவர்கள் கொண்டுள்ள எண்ணத்தை அறிவிக்கும் ஒரு போர்க்கால் நாட் டினர். ஒரு போருக்கானக் கூட்டத்தையும் சேர்ந்தனர். அவர்கள் கிளம்பிச்சென்று தூங்கிக்கொண்டிருந்த ஏழு மனிதர்களையும் இரண்டு குழந்தைகளையும் கொன்றுவிட்டனர். 'பிறகு, மாலையில் அவர்கள் ஸீபா (Sebaa) வந்தடைந்தபோது மகிழ்ந்திருந்தனர்.'

டென்டாலியா (dentalia) என்ற ஒருவகைக் கிளிஞ்சல் சேக ரிக்கச் சென்றபோது, தன்னுடைய எழுபது வயதளவில் தான்

பெற்ற அனுபவத்தை, இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிற ஒருவன் வர்ணித்தான். அன்றிரவு கடற்கரையில் ஒரு மறைவான இடத்தில் அவன் உறங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது இருவர் அவனை எழுப்பி 'எங்கள் தலைவன் சுகாஹிமியின் மகள் இறந்துவிட்டாள். அதற்காகத் தலைவன் ட்ளாபிட்டைக் கொல்ல நாங்கள் வந்திருக்கிறோம். நாங்கள் அறுபது பேர். நாங்கள் மூன்று பெரிய படகுகளில் வந்திருக்கிறோம். ட்ளாபிட்டின் தலையின்றி நாங்கள் எங்கள் வீட்டிற்குச் செல்லமுடியாது' என்று தெரிவித்தனர். காலை உணவருந்தும்போது ட்ளாபிட்டிடம் இது தெரிவிக்கப்பட்டது. அதற்கு ட்ளாபிட் 'ஏன்! சுகாஹிமி என் சொந்த மாமன். அவனுடைய தகப்பனுடைய தாயும் என் தாயின் தாயும் ஒருவளே. ஆகையால், அவன் எனக்கு ஒரு தீங்கும் செய்யமுடியாது' என்று பதில் சொன்னான். சாப்பிட்டவுடன் கிராமத்திற்கு வெளியே உள்ள ஒரு சிறு தீவில் சென்று கிளிஞ்சல்கள் சேகரித்து வருகிறேன் என்று சொல்லி ட்ளாபிட் புறப்பட்டான். எல்லாக் குடியினரும் கிளிஞ்சல் சேகரிக்க அவன் செல்லவேண்டாமென்று தடுத்தனர். ஆனால், அவன் அக் குடிகளைக் கண்டு சிரித்தான். அவன் குல்லாவையும் துடுப்பையும் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே சென்றான். அவன் கோபமாக இருந்ததால் அக் குடிமக்களில் யாரும் அவனுடன் பேசவில்லை. அவன் படகைத் தண்ணீரில் இறக்கியதும், அவனது சிறிய மகன் ஓடிச் சென்று தகப்பனுடன் படகிலே அமர்ந்தான். ட்ளாபிட் கிளிஞ்சல்கள் நிறைய இருந்த ஒரு சிறு தீவை நோக்கிப் படகைச் செலுத்தினான். அவன் பாதி வழி சென்றதும் ஆட்கள் நிறைந்த மூன்று படகுகள் எதிரில் வந்தன. அவைகளைக் கண்டதும் ட்ளாபிட் தன் படகை அவர்களை நோக்கிச் செலுத்தினான். இப்பொழுது அவன் துடுப்பு போடவில்லை. படகுகளில் இரண்டு நிலப்புறமாகவும் ஒன்று நீர்ப்புறமாகவும் இவனது படகோடு ஒரே நேராக வந்தன. படகுகள் நிற்கவில்லை. அவைகள் கடந்து சென்றதும் ட்ளாபிட்டின் உடல் தலையின்றி காணப்பட்டது. போர் வீரர்கள் கண்களுக்கப்பால் சென்றவுடன், குடிகள் ஒரு சிறிய படகில் சென்று ட்ளாபிட் இறந்து கிடந்த படகைக் கரைசேர்த்தனர். 'அவன் தகப்பனுக்கிழைக்கப்பட்டதைக்கண்டு இருதயமே நின்றுவிட்டதால்' குழந்தை அழவேயில்லை. கரைக்கு வந்ததும் தலைவனைப் புதைத்துவிட்டனர்.

ஒருவனுடைய மரணத்தினால் ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க யாரைக் கொல்வது என்று தீர்மானிக்கிறார்களோ அவனைத் தேர்ந்தெடுப்பது ஒரு காரணத்திற்காகத்தான். அதாவது அவனது தகுதி இறந்தவனின் தகுதிக்குச் சமமாக இருத்தல்

வேண்டும். சாதாரண மனிதனின் சாவு மற்றொரு சாதாரண மனிதனுடையவும், ஓர் உயர்குடி மகனின் சாவு மற்றொரு உயர் குடி மகனுடையவும் சாவுகளை ஈடுசெய்தன. ஆகையால், சாவினால் பிரிவு ஏற்படுத்தப்பட்ட ஒருவன் தகுந்த தகுதியுடைய மற்றொருவனைக் கொன்றுவிட்டால் தன் நிலையை நிலைநிறுத்திக் கொண்டவனாவான்.

க்வாக்யூட்ல் மக்களிடையே வாழ்க்கையில் ஏமாந்தவர்கள் தனித்திருந்து தீவிர தன்னிச்சையில்லாத செயல்களில் ஈடுபடுகின்றனர். பையன் தகப்பனால் அடிக்கப்பட்டால் அல்லது ஒருவனது குழந்தை இறந்துவிட்டால் அவன் சாப்பிடுவதுமில்லை, பேசுவதுமில்லை. தன்னுடைய கண்ணியம் காப்பாற்றப்பட ஒரு செய்கையைத் தீர்மானித்த பின் அவன் எழுந்திருந்து சொத்துகளைப் பகிர்ந்தளித்தலையோ தலைவேட்டையையோ செய்கிறான் அல்லது தற்கொலை செய்துகொள்கிறான். க்வாக்யூட்ல் மக்களிடையே சாதாரணமாகச் சொல்லப்படுகிற ஒரு கதையிலே ஒரு யுவன் தன் தகப்பனாலோ அல்லது தாயாலோ ஏசப்பட்டவுடன் நான்கு நாட்களுக்கு அசையாமல் படுக்கையில் கிடந்து பிறகு காட்டிற்குத் தற்கொலை செய்துகொள்ளச் சென்றுவிட்டான். அவன் மலையுச்சிகளிலிருந்தும் நீர் அருவிகளிலும் குதித்து, ஏரிகளிலே தன்னை மூழ்கடித்துக் கொள்ள முயன்றான். ஆனால், அவன் ஒரு ஆவியைச் சந்தித்து அதனால் சாவினின்றும் காப்பாற்றப்பட்டான். அது அவனுக்கு ஒரு சக்தியைக் கொடுத்தது. அவன் திரும்பிவந்து தன்னுடைய பெருமையினால் பெற்றோரை அவமானப்படுத்தினான்.

பழக்கத்திலே தற்கொலை சர்வசாதாரணமாக இருந்தது. ஒழுங்கு தவறியதற்காகக் கணவனால் வீட்டிற்கு அனுப்பப்பட்ட ஒரு பெண்ணின் தாய் அவமானத்தினால் சுருக்கிட்டுக்கொண்டாள். ஒருவன், தன்மகன் துவக்க நடனத்திலே தவறிவிட்டதாலும், தன்னால் இரண்டாம்முறை பனிக்கால விழாவுக்கான செலவு செய்ய இயலாமையாலும் தோற்றுப்போய் தன்னையே சுட்டுக்கொண்டான். அவமானப்பட்டவன் தன் கைகளாலேயே தற்கொலையில் இறக்காவிட்டால்கூட எல்லாச்சாவுகளுமே அவமானத்தால் ஏற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. நோயைக் குணப்படுத்தும் நடனத்தில் தோற்ற தெய்வத்தன்மை பெற்றவனும், செப்புகளை உடைப்பதிலே சிறுமைப்படுத்தப் பெற்ற தலைவனும், விளையாட்டிலே தோற்ற சிறுவனும் அவமானத்தாலேயே இறந்ததாகச் சொல்லப்பெறுகிறது. இப்படிப்பட்ட சாவுகளிலே ஒழுங்கற்ற திருமணங்கள்தாம் அதிக இடம்பெறுகின்றன.

ஒழுங்கற்ற திருமணங்களில் அதிகமாக நஷ்டப்படுவது மண மகனின் தந்தைதான். ஏனென்ருல், மணமகனது கௌரவம் அதிகப் பொருள்களையும் உரிமைகளையும் கொடுப்பதால் உயர்த் தப்பெற்றது. ஆகையால், இதில் அதிகமாக அவனது தந்தை தான் பாதிக்கப்படுகிருன்.

அவர்களின் கிராமங்கள் ஒன்றில் ஒரு வயதான தலைவன் அவமானத்தால் இறந்த கதையைக் க்வாக்யூட்ல் மக்கள் சொல் கிருர்கள். பல வருஷங்களுக்கு முன்ருல் அவனது இளைய மகன், அடிமைகளில் ஒருவன் மகளோடு வெகு தொலைவிலுள்ள ஓர் இடத்திற்குச் சென்றுவிட்டான். இளைய பிள்ளைகளைத் தாழ்ந்த சாதி என்று நினைப்பதாலும், வெறுத்துவிடுவதாலும் இதைப் பற்றி அதிகம் பேசப்படவில்லை. அவர்களுக்கு ஓர் அழகான மகள் பிறந்தாள். அவளுக்குத் திருமணமாகும் வயது வந்தவுடன் அவளை அவளது பெரியப்பா (தகப்பனின் அண்ணன்) பார்த் தான். அவளது குலம், கோத்ரம் அறியாது அவளை மணஞ்செய்து கொண்டான். அவர்களுக்கும் ஒரு மகன் பிறந்தான். மூத்தவன் தன் மகனுக்குத் தனக்கு உரிய உயர்குடிப் பெயரை இட்டான். பிறகு அவன் தன் குடும்பத்தையும், தன் மனைவியின் பெற்ருேரை யும் (தன் தம்பி குடும்பம்) தன்னுடைய தகப்பன் வீட்டிற்கு (தலைவன்) அழைத்துச் சென்ருன். தனது இளைய மகனைப் பார்த் ததும், வயதான தலைவன் அவமானத்தால் உடனே இறந்து வீழ்ந்தான். ஏனென்ருல், அவனது மூத்த மகன் தன் உயர் குடிப் பட்டத்தை 'இளைய மகனுடைய—சாதாரணப் (தாழ்ந்த) பெண்ணுடைய' குழந்தைக்குக் கொடுத்துவிட்டதுதான் கார ணம். தன் மகளை மணம் செய்துகொள்ளும்படி தன் அண்ணனை ஏமாற்றித் தன் பேரப்பிள்ளைக்கு உயர்குடிப் பட்டத்தைப் பெற்று விட்ட பெருமையில் இளையவன் மிக்க மகிழ்ச்சிகொண்டான்.

இந்தத் திருமணத்தில், நெருங்கிய உறவினரிடையே ஏற் பட்ட திருமணத்தைக் கண்டிப்பதற்காக வயதடைந்த தலைவன் அவமானப்படவில்லை. சில குடும்பங்களில் உயர் மக்கள் பிரிவைத் தாண்டியிராத தம்பியின் மகளை மணம் செய்துகொள் வது மரபுவழியே அனுமதிக்கப்பட்டது. வடமேற்குக் கடற் கரையிலே உயர்குடி என்பது மூத்தவனுக்கு மட்டும் அளிக்கும் உரிமைகளைச் சார்ந்திருந்ததனுல், நாம் உயர்குடி மக்களிடம் காண்கிற 'இரத்தத்தினுல் கௌரவம்' என்பது அங்குக் காணப்பட வில்லை.

வடமேற்குக் கடற்கரையில் தலைமறைவாக இருத்தலும், தற்கொலையும் அவர்களுடைய முக்கிய ஈடுபாடுகளின்

தொடர்ச்சிதான். வெற்றிப் பெருமிதத்திற்கும் அவமானத்திற்கும் இடையே உள்ள உணர்ச்சி நிலைகளை அவர்கள் மிகவும் பெரிது படுத்தினார்கள். வெற்றி என்பது மிகப் பகட்டான செயல்களில் ஈடுபடுதலுக்கும், தோல்வி என்பது மரணத்திற்குக் காரண மாகவும் இருந்தது. இந்த ஓர் உணர்ச்சிநிலை வரையறை மட்டுமே அறிந்திருந்த அவர்கள் அதையே எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் பயன்படுத்தினர்.

இந்த முறைகளிலே வாழ்க்கையை நடாத்துகின்ற ஒருவனுக்குச் சமூகத்தின் பரிசுகள் எல்லாம் வழங்கப்பட்டன. தன் சகாக்களின் செய்கைகளும், பொருளாதாரச் சூழ்நிலைகளால் ஏற்படுகிற விபத்துகளும் முதலில் ஒருவனது தன்மான உணர்ச்சியைத்தான் அச்சுறுத்தின. இப்படித் தன்மான உணர்ச்சி பாதிக்கப்பட்ட ஒருவனை மறுபடி பழைய நிலையில் இருத்தக் குறிப்பிட்ட சில செய்முறைகள் வகுத்து வைக்கப்பட்டிருந்தன. இச் செய்முறைகளை ஒருவன் பயன்படுத்திக்கொள்ள இயலாவிட்டால் அவன் சாவதைத் தவிர வேறு வழியில்லை. அவன் கண்ட வாழ்க்கையில், தன்னுடைய பெருவாழ்வுக்காக அனைத்தையும் பணயம் வைக்கிறான். அவனது மிகைப்படுத்தப்பெற்ற தன்மான உணர்ச்சி சிறிது பாதிக்கப்பட்டாலும் ஆதரவு இழந்து, அவமானப்பட்டு நலிந்துவிடுகிறான்.

இதே மனப்பாங்கோடுதான் அவன் சகாக்களோடும் பழகி வந்தான். தன்னுடைய நிலையைக் காத்துக்கொள்ள அண்டை அயலார்மீது பழிச்சொல்லையும் இழிசொல்லையும் சுமத்துகிறான். அவனுடைய செயல்களின் குறிக்கோள் மற்றையவருடைய பெருமைகளைத் தன்னுடையவைகளால் 'குறைத்து' அவர்களுடைய பெயர்களை 'உடைக்க'வேண்டும் என்பதுதான். கடவுள்களிடம்கூட இதேமாதிரி நடத்தையைத்தான் க்வாக்யூட்ல் மக்கள் கொண்டிருந்தனர். ஒரு மனிதனை மிகவும் இழிவுபடுத்த அவர்கள் பயன்படுத்தும் சொல் 'அடிமை' என்பதாகும். அவர்கள் ஒரு நல்ல பருவ நிலைக்காகத் தொழுது அதன்படிக் காற்று மாறு விட்டால், தெய்வங்கள்மீதும் அதே முறையில் சவால் விடுகிறார்கள். த்ஸிம்ஷியான் (Tsimshian) என்பதைப்பற்றி ஒரு வயதான யாத்ரீகர், "இடையூறுகள் தொடர்ந்திருந்தாலும், அதிகமானாலும், அவர்கள் கடவுள்மீது கோபங்கொண்டு அவன்மேல் கோபத்தைக் காட்டுகிறார்கள். அவர்கள் கைகளையும் விழிகளையும் காட்டுமிராண்டித்தனமான கோபத்தோடு விண்ணை நோக்கி உயர்த்திக் கால்களால் பூமியில் இடித்துக்கொண்டு 'நீ ஒரு பெரிய அடிமை' என்று திரும்பத் திரும்பக் கூவுகிறார்கள்" என எழுதியிருக்கிறார்.

இயற்கைக்கப்பாற்பட்டவைகள் நலம் கொடுப்பவைகளாக அவர்களால் எண்ணப்பெறவில்லை. புயற்காற்றும் மலைச்சரிவுகளும் நலம் தருபவைகளாக இல்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இயற்கையின் குணாதிசயங்களை அவர்கள் கடவுள்களுக்கும் அமைத்தனர். கடவுள்களிலே ஒன்றான ஆற்றின் வடகோடியிலுள்ள தன்னின் உண்ணி, தனக்குப் பிணங்கள் கிடைப்பதற்காக ஒரு பெண்ணடிமையை அமர்த்தியிருந்தான். அவனது காப்பாளனான ரேவன் (Raven) பிணங்களின் கண்களைத் தின்றது. அவனது அடிமையான மற்றொரு பெயர்போன பறவை பிணங்களின் மண்டையைக் கொத்திப் பிளந்து மனித மூளைகளை உறிஞ்சியது. இயற்கைக்கப்பாற்பட்டவைகள் நல்லெண்ணமுடையவைகளாக எண்ணப்பெறுவதில்லை. தன் படகைச் செதுக்கியவுடன் முதன்முதலாகப் படகு கட்டுபவன் செய்யும் காரியம் அப்படகின் இருபுறமும் ஒரு மனித முகத்தை வரைவது தான். இப்படிச் செய்வது இறந்துபோன படகு கட்டுபவரை பயமுறுத்துவதற்காகும். இப்படிச் செய்து தடைசெய்யாவிட்டால் அவர்கள் படகை உடைத்துவிடக்கூடும் என எண்ணப்படுகிறது. ஸுனி (zuni) மக்களிடையே பூசாரிகள், முன்னால் அதே தொழில் செய்துகொண்டிருந்தவரின்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் போலன்றி, இது முற்றிலும் மாறுபட்டுள்ளது. வடமேற்குக் கடற்கரையில் வாழ்ந்துகொண்டிருக்கும் தன்னுடைய தொழிலைச் செய்பவர்கள்மீது எதிர்ப்புக்கொண்டிருக்கும் கூட்டமாக இது எண்ணப்பெறுகிறது. கடவுள்களைக் கொல்வதன் மூலம் அவர்களது ஆசியைப் பெறுவது ஒரு பழக்கமாக இருந்தது. அப்பொழுதுதான் வெற்றிபெற்றவன் பாராட்டப்பட்டு வெகுமதி அளிக்கப்படுகிறான்.

வடமேற்குக் கடற்கரை மக்களின் பண்பாட்டில் உள்ள, அவர்களின் நடத்தை நம்முடைய நாகரிகத்திற்கு ஒவ்வாததாகவும் விபரீதமாகவும் தோன்றினாலும், நம்முடைய பண்பாட்டின் ஈடுபாடுகளுக்கு அதிக விரோதமில்லாமலும், நாம் அவைகளை ஆராய்ந்து புரிந்துகொள்ளக் கூடியதாகவும் உள்ளது. நம்முடைய சமூகத்தில் இப்படிப்பட்ட ஒரு வழி மிகவும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இரண்டுவிதமான வாழ்க்கை ஈடுபாட்டை அது நமக்கு அளிக்கிறது. ஒன்று நாம் நம்முடைய நாகரிகத்தில் எடுத்துக்கொண்டபடி அதை ஒரு வெறுக்கத்தக்க அசாதாரணமான நடத்தையாகக் கொள்வது. மற்றொன்று, ஒரு சிறந்த மனிதனின் அவசியமான ஈடுபாடாக அதை எடுத்துக்கொள்வது. வடமேற்குக் கடற்கரையிலே இரண்டாவதாகச் சொல்லப்பட்ட முறை தான் நடைமுறையிலே உள்ளது.

7. சமூகங்களின் இயல்பு

ஸுனி (Zuni), தோபு (Dobu), க்வாக்யூட்ல் (Kwakiutl) ஆகிய மூன்று பண்பாடுகளும் ஒன்ருய் இணைந்து அமையாத பல செயல்களும் நம்பிக்கைகளும்கொண்ட கூட்டங்களல்ல. அவை ஒவ்வொன்றுக்கும் சில குறிப்பிட்ட குறிக்கோள்கள் உள. அவைகளை நோக்கியே அவர்களது நடத்தையும் அமைக்கப் பெற்றுள்ளது. அவர்களது நிறுவனங்களும் அவைகளையே சார்ந்திருக்கின்றன. ஓர் இடத்திலே உள்ள குணப்பாங்கு மற்ருேர் இடத்தில் இல்லை என்பதாலோ அல்லது ஒரே குணப்பாங்கு இரண்டு இடங்களில் இரண்டு விதமாக அமைந்திருக்கிறது என்பதாலோ அந்தப் பண்பாடுகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்கவில்லை. அவைகள் வெவ்வேறு திசைகளை நோக்கி அமைந்த முழுமையைப் பெற்றிருப்பதால் அதிகமாக வேறுபட்டிருக்கின்றன. அவைகள் வெவ்வேறு முடிவுகளை நோக்கி வெவ்வேறு பாதைகளில் சென்றுகொண்டிருக்கின்றன. ஒரு சமூகத்திலுள்ள வழிகளையும், முடிவுகளையும் பற்றி நாம் கொண்ட அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு மற்ருேர் பண்பாட்டினுடைய வழிகளையும், முடிவுகளையும் சீர்தூக்கிப் பார்க்கமுடியாது. ஏனென்ருல், அவைகள் மதிப்பிடமுடியாதவை.

எல்லாப் பண்பாடுகளும், தங்களுடைய நடத்தையின் ஆயிரக்கணக்கான விவரங்களை ஒரே சமமாகச் சீர்செய்யப்பட்ட வகையில் அமைத்துக் கொள்ளவில்லை. சில தனி மனிதர்களைப் போலவே சில சமூக அமைப்புக்களும் தங்கள் நடவடிக்கைகளை ஓர் ஆட்சி செய்கின்ற நோக்கக் குறியீட்டுக்கு உட்படுத்திக்கொள்வதில்லை. அவைகள் பரந்து கிடக்கின்றன. ஒரு சமயத்தில் அவை ஒரு முடிவை நோக்கிச் செல்வதாகத் தோன்றினும், மற்றச் சமயத்தில் அதற்குமுன் நடவாத ஒரு வழியிலே பிரிந்து தனித்துச் செல்வதாக அமைந்துள்ளன. இனி வரப்போகும் நடவடிக்கைகளுக்கும் ஒரு துப்பு கொடுப்பதில்லை.

சில பண்பாடுகளுக்கு நன்றாய் இணைந்த நடவடிக்கைகள் குறிப்பாக இருப்பதுபோல், மற்றும் சில பண்பாடுகளுக்கு இப்படி ஒருங்கே இணையாத நடவடிக்கைகளே குறிப்பாகும். எங்கும் ஒரேமாதிரியான சூழ்நிலைகளால் இவ்விதம் ஏற்படுவதில்லை. பிரிட்டிஷ் கொலம்பியாவின் (British Columbia) உள்ளே இருக்கிற சில பழங்குடிகள், தங்களைச் சுற்றியுள்ள நாகரிகங்களிலிருந்து பல குணப்பாங்குகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். செல்வத்தைக் கையாளுவதற்குச் சில முறைகளை ஒரு பண்பாட்டுப் பகுதியினின்றும், வேறொரு பண்பாட்டுப் பகுதியினின்று மதசம்பந்தமான சில பழக்கங்களையும், இவைகளுக்கு மாறுபட்ட சில விவரங்களை மற்றுமொரு பண்பாட்டுப் பகுதியினின்றும் இவர்கள் பெற்றிருக்கின்றனர். அவர்களது புராணமானது பண்பாட்டு வீரர்களின் முரண்பட்ட செயல்களின் ஒரு சேர்க்கையாக இருக்கிறது. அது அவர்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பிடப்படுகிற மூன்று வெவ்வேறு புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களாகவே உள்ளது. மற்றையோரின் நிறுவனங்களை வரவேற்பதாக இருந்தும் கூட இவர்களது பண்பாடு அதிக விவரங்கள் இல்லாமல் ஏழ்மைத் தோற்றத்தை அளிக்கிறது. அவர்களுடைய பண்பாட்டுக்கு ஓர் உருவம் ஏற்படும் அளவுக்கு எதுவும் தீவிரமாக செய்யப்படுவதில்லை. அவர்களது சமூக அமைப்பு மிகவும் விரிவாக இருந்தபோதிலும் அவர்களது சடங்குகள் உலகத்தின் எந்தப் பாகத்திலும் இருப்பதைக்காட்டிலும் குறைவாகவே இருந்தன. அவர்களுடைய கலை ஈடுபாடு, கூடைமுடைதல், மணிவேலை செய்தல் ஆகியவைபோன்ற மிகவும் எளிமையான கைத்திறன்களால் விளங்கியது. சில தனி மனிதர்களைப்போன்று பல்வேறு திசைகளில் கவனம் இழுக்கப்பட்டு அவர்களின் நடத்தை முறைகள் இணைபெறாதவைகளாக இருக்கின்றன.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் இக் குடிகளிடையே இணைந்திராத பண்பாடு, சுற்றிலுமுள்ள பல்வேறு மக்களிடமிருந்து சேகரித்த குணப்பாங்குகள் ஒருங்கே சேர்ந்திருப்பது போலன்று. அது இதற்கும் மேலாக, வாழ்வின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தனித்தனி அமைப்புபெற்று ஒன்றோடொன்று தொடர்பில்லாமலே விளங்குகிற ஒன்றாகும். பருவமடையும்போது குழந்தைகளுக்கு, அவர்களுடைய பல்வேறு தொழில்களுக்காகவும், காப்புத் தெய்வங்களைத் தெரிந்துகொள்வதற்காகவும் மாயாஜாலப் பாடங்கள் கற்றுத் தருவதிலே விசேஷ அக்கறை காட்டப்பெறுகிறது. மேற்கத்திய சமவெளிகளிலே இந்தத் தோற்றங்களை அடையும் பழக்கம் வயதுவந்த ஒவ்வொருவன் வாழ்க்கையையும் நிரப்புகிறது. இதைப்போன்ற நம்பிக்கைகளாலே வேட்டை, போர் ஆகிய

தொழில்களும் நிரம்பியிருந்தன. ஆனால், பிரிட்டிஷ் கொலம்பியா விலே தோற்றங்களை நாடுவது ஒரு சீரான அமைப்புக்கொண்ட செயலாகவும் உள்ளது. அதுபோன்றே பிரிட்டிஷ் கொலம்பியா வில் விருந்துகளும் நடனங்களும் முற்றிலும் சமூக நடவடிக்கை களாகவே இருந்தன. வேடிக்கை பார்ப்பவர்கள் மகிழ்ச்சியுறுவ தற்காக, ஆடுபவர்கள் விலங்குகள்போல் நடித்துக் காட்டும் விழா வாகவே அவைகள் நடத்தப்பெற்றன. ஆனால், காப்புத் தேவதை களாக இருக்கக்கூடிய விலங்குகள்போல நடித்துக்காட்டுவது விலக்கப்படவேண்டியதாகும். இந்த விருந்துகள் மதசம்பந்தமான வைகளல்ல. பொருளாதாரப் பண்டமாற்றுக்கும் இச் சந்தர்ப் பங்கள் பயன்படுத்தப்பெறுவதில்லை. ஒவ்வொரு நடவடிக்கையும் தனித்தனியே இருந்தது. ஒவ்வொரு நடவடிக்கையின் நோக் கமும் குறிக்கோளும் அவைகளுக்காகவே ஏற்பட்டு அவைகளு டைய சிறிய எல்லைகளைவிட்டு வெளியே பரவுவதில்லை. மக்க ளுடைய முழு வாழ்வையும் அவைகள் பாதிப்பதில்லை. எந்த ஒரு குறிப்பிட்ட மன எழுச்சியும் அவர்களது பண்பாட்டைப் பாதிக்கு மளவுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

பலவேறுபட்ட முரண்பாடான பண்பாடுகளோடு தொடர்பு ஏற்பட்டுப் பாதிக்கப்படுவதற்கும், உள்ளே பண்பாடு இணையாம லிருப்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. சில குறிப்பிட்ட பண் பாட்டுப் பகுதிகளின் சுற்றுப்புறங்களில் இம்மாதிரியான நிலை காணப்பெறுகிறது. ஒரு பண்பாட்டின் குணாதிசயங்களைப்பெற்ற குடிகளினின்றும் பிரிந்து, பிற பண்பாடுகளோடு இணைந்து வாழ வேண்டிய அவசியம் இந்தச் சுற்றுப்புறத்திலுள்ள பகுதிகளில் இருக்கிறது. இதனால் தங்களது சமூக அமைப்பிலும், கலைமுறை களிலும் முற்றிலும் மாறுபட்ட செய்முறைகளை அவர்கள் கொள்ள வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் இப்படி ஒன்றாத சில விவரங்களைக்கொண்டு ஒரு புதிய இணைந்த அமைப்பை அவர்கள் ஏற்படுத்திவிடுகின்றனர். பிறரது நடத்தைகளின் விவரங்களைப் பகிர்ந்துகொள்ளும் இவர்கள், அவர்களது பண்பாட்டினின்று முற்றிலும் வேறுபட்ட ஓர் அமைப்பை உருவகப்படுத்திவிடுகின் றனர். இந்தப் பண்பாடுகளின் சரித்திரத்தை நோக்குங்கால், எப்படி ஒன்றாத ஒரு பண்பாட்டினின்று கொண்ட சில விவரங்களை இணைந்த ஒரு பண்பாடாக மாற்றிவிடுகின்றனர் என்பது விளங் கும். பல இடங்களில் இம்மாதிரி ஏற்படுகிறது. நாம் நன்றாகப் புரிந்துகொள்ளக்கூடிய, தற்காலத்திய பழங்குடிகளில் பல சுற்றுப் புற வட்டாரங்கள், நடுவில் இருப்பவர்களைவிட மாறுபட்டு இருப்ப தாகத் தோன்றுகின்றன.

வேறுசில இடங்களில் காணப்படும் ஒருமைப்பாடற்ற பண் பாடுகள் சரித்திரச் சூழ்நிலைகளால் ஏற்பட்டவை. சில சுற்றுப் புறங்கள்மட்டும் இவ்விதம் இணையாத பண்பாட்டைக் கொண் டிருக்கவில்லை. தங்களுடைய சகாக்களைவிட்டுப் பிரிந்து வேருெரு நாகரிகத்தின் மத்தியிலே சேர்கின்ற ஒரு குடியும் இப்படிப்பட்ட இணையாத ஒரு பண்பாட்டைப் பெற்றிருந்தது. அப்படிப்பட்ட ஒரு குடியில் தங்களுடைய இயற்கையான நடத்தைக்கும், புதிய ஈடு பாடுகளால் புகுத்தப்படுகிற நடத்தைக்கும் உள்ள முரண்பாடு தெளிவாகத் தெரிகிறது. அதிகமான எண்ணிக்கையுடனே அல்லது பெருமைகளுடனே ஓர் இடத்திற்குப் புதிதாக வந்தி ருக்கும் மக்கள், அந்த இடத்திலேயே தங்கியிருக்கும் மக்களின் பண்பாட்டில் புதுமைகளைப் புகுத்துவதன்மூலமும் இந்த முரண் பாடு ஏற்படுகிறது.

இப்படி உள்ள ஓர் இணையாத பண்பாட்டைப்பற்றி நன்ருக அறிந்துகொள்வது மிகவும் அவசியம். இவைகளிலுள்ள சில குறிப்பிட்ட முரண்பாடுகளின் இயல்போ, அல்லது புதிய முறை களுக்கான வரவேற்போ முக்கியமாக இருக்கலாம். இவைகளைச் சுலபமாக 'இணைந்த பண்பாடு இல்லை' என்று குறிப்பிட்டுவிட முடியாது. அவைகளின் தன்மையை நாம் ஊகித்தறிய முடியாது. அதிக இணைப்பு ஏற்படாத சில பண்பாடுகளில் புதிய இணைப்பு ஏற்பட முடியாத விவரங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, சில தேர்ந் தெடுத்த விவரங்களை நிலையாக இருத்திக்கொள்ளும் இயல்பைக் கவனிக்கவேண்டியது அவசியம். பல்வேறுபட்ட விவரங்களைக் கொண்டு உருவாகும் இந்தச் செயல் வெளித்தோற்றமாகவும் இருக்கலாம்,

ஒருமைப்பாடுள்ள ஒரு மக்கள் கூட்டத்தின் பழைய சரித் திரம் இணைப்பு ஏற்படாத விவரங்களின் முரண்பாடுகளை நன்ருக விளக்கிக் காட்டுகிறது. நாம் விவரித்துள்ளபடி ஒரு முரணற்ற பண்பாட்டை க்வாக்யூட்ல் மக்கள் எப்பொழுதும் பெற்றிருந்த தாகச் சொல்லிக்கொள்ளவில்லை. அவர்கள் வான்கூவர் தீவையும், கடற்கரையையும் வந்தடைவதற்கு முன்ருல் தெற்கிலுள்ள ஸாலிஷ் (Salish) மக்களின் பண்பாட்டைத்தான் கொண்டிருந் தனர். இன்றும் அவர்களது புராணங்கள், கிராம அமைப்பு, உறவு முறைகள் யாவும் ஸாலிஷ் மக்களோடு இணைக்கப்பெற்ற தாகவே உள்ளன. ஆனால், ஸாலிஷ் மக்கள் தனித் தன்மை வாய்ந்தவர்கள். வமிச பரம்பரையாகவரும் உரிமைகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஒவ்வொருவனும் அவனவன் சக்திக்கேற்றவாறு மற்றவனைப் போன்ற வாய்ப்புகளையே

பெற்றிருந்தான். அவனது வேட்டைத்திறன், சூதாடுவதில் உள்ள அதிர்ஷ்டம், ஒரு மருத்துவனாகவோ, காரணம் கண்டுபிடிப்பவனாகவோ, தன் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைப் பயன்படுத்துவதில் அடையும் வெற்றி ஆகியவை அவனது முக்கியத்துவத்தைக் காட்டின. வடமேற்குக் கடற்கரையிலுள்ள சமூக அமைப்பினின்றும் இம்மாதிரி மாறுபட்ட ஒன்று வேறு எதுவுமில்லை.

க்வாக்யூட்ல் மக்கள் மாறுபட்ட ஓர் அமைப்பை எடுத்துக் கொள்வதற்கு இப்படி முழுவதும் வேறுபட்டிருப்பது தடையாக இருக்கவில்லை. பெயர்களையும், புராணங்களையும், வீட்டுத் தூண்களையும், காப்புத் தேவதைகளையும், சில கூட்டங்களில் சேருவதற்கான உரிமைகளையுங்கூட அவர்கள் தனிப்பட்டவரின் உடைமை என எண்ணவாரம்பித்தனர். இப்படிச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டிய நிலை அவர்களது நிறுவனங்களிலே நன்ருகத் தெரிகிறது. இரண்டு சமூக அமைப்புகளும் முரண்பட்டுள்ள சில விவரங்களில் இது மிகவும் தெளிவாகக் காணப்படுகிறது. வடமேற்குக் கடற்கரையின் உரிமைகளையும், பாட்லேட்ச் விழாக்களையும் எடுத்துக்கொண்ட க்வாக்யூட்ல் மக்கள், ஒரு குறிப்பிட்ட வரையறையில், உரிமைகள் தாய்வழிப் பிரிவிலே பரம்பரையாக வருவதை ஒப்புக்கொள்ளவில்லை. வடக்கே உள்ள குடிமக்களில் தனியொருவன் தன் பிறப்பின் உரிமையாலே உயர்குடிப் பட்டங்களை அடைந்தான். க்வாக்யூட்ல் மக்களில் ஒரு தனி மனிதன் இப்படிப்பட்ட பட்டங்களுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் செலவழித்தான். அவன் குடும்பத்தில் எந்தக் கிளை வழியே உரிமைகள் இருந்தாலும் அவைகளுக்குச் சொந்தம் கொண்டாடினுன். உரிமைகளுக்கான முறையை அப்படியே எடுத்துக்கொண்ட க்வாக்யூட்ல் மக்கள் கௌரவத்திற்கான ஈடுபாடுகளில் தனி மனிதனுக்கு உரிமைகளை விட்டுவிட்டார்கள். இது வடக்கிலுள்ள மக்களின் சாதிமுறைகளுக்குப் புறம்பானது. தெற்கிலிருந்து க்வாக்யூட்ல் மக்கள் கொண்டுவந்த சில பழைய வழக்கங்களை அப்படியே வைத்துக்கொண்டனர்.

க்வாக்யூட்ல் மக்களின் சில குறிப்பிட்ட பண்பாட்டுக் குணப்பாங்குகள், பழைய உருவகங்களுக்கும் புதியனவற்றிற்கும் உள்ள முரண்பாடுகளின் பிரதிபிம்பங்களாகவே இருந்தன. உடைமைகளின்மேல் ஏற்பட்ட புதிய வலியுறுத்தல், பரம்பரை வாரிசு சட்டங்களுக்குப் புதியதோர் முக்கியத்துவத்தை அளித்தன. ஸாலிஷ் மக்கள் குடும்பங்களாகவும், சிறிய கிராமங்களாகவும் வகுக்கப்பெற்றிருந்தனர். சாவின்பொழுது எல்லா உடைமைகளும் அழிக்கப்பெற்றன. நாம் பார்த்தபடி வடக்கேயுள்ள மக்களின்

கண்டிப்பான தாய்வழிப் பிரிவு முறைகளைக் க்வாக்யூட்ல் மக்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும், தன் குழந்தைகளுக்காகப் பாதுகாக்கப்படவேண்டிய சில உரிமைகளை மருமகன் தன் மனைவியின் தகப்பனிடமிருந்து பெற்றான். ஆகையினால், தாய் வழிப் பிரிவிலே உரிமைகள் பரம்பரையாக வந்தாலும் ஒரு தலை முறையைத்தாண்டி அவ்வாறு ஏற்படுகிறது. தலைமுறைகளில் மாறிமாறி உரிமைகள் அனுபவிக்கப்பெறாமல் பாதுகாப்புச் சொத்தாகக் கண்காணிக்கப்பெற்றன. இம்மாதிரியான உரிமைகள் யாவும் நாமறிந்த பாட்லேட்ச் முறையிலேயே கையாளப்பட்டன. இரண்டு இணைக்க முடியாத சமூக முறைகளை ஒன்றாகச் சேர்க்க ஏற்பட்ட ஓர் உடன்பாடாக இது விளங்குகிறது. எப்படி அவர்கள் முரண்பாடான சமூக அமைப்புகளை இணைத்தார்கள் என்பதை முன்பே சொல்லியிருக்கிறோம்.

அடிப்படை வேறுபாடுகள் இருந்தாலும் இணைப்பு ஏற் படலாம். தற்காலத்தில் தோன்றுகிறதைவிட இணையாத பண்பாடுகள் குறைவாகவே இருக்கலாம். அந்தப் பண்பாடுகளை விட அப் பண்பாடுகளின் வர்ணனைகள் இணையாதவைகளாக இருக்கலாம். மேலும் நாம் கண்டறிய முடியாத, நம் அனுபவங் களுக்கு அப்பாற்பட்டதாக இணைப்புகளின் இயல்பு இருக்கலாம். அந்த இடங்களுக்கே சென்று அறிவதன் மூலம் முன்னால் சொல் லப்பட்ட குறையையும், நல்ல பாகுபாடு செய்து ஆராய்வதால் பின்னால் சொல்லப்பட்ட குறையையும் நீக்கிக் கவனித்தால் பண்பாடுகள் இணையவேண்டிய அவசியம் இன்றிருப்பதைவிடத் தெளிவாகப் புரியும். ஸூனி மக்கள், க்வாக்யூட்ல் மக்கள் ஆகிய வர்களின் பண்பாடுகள் நாம் விவரித்தபடி ஒன்றாக இணைந் திருப்பது போன்று எல்லாப் பண்பாடுகளும் இருக்கும் என்று நம்பு வது தவறாகும். எந்த ஒரு பண்பாட்டையும் சில குறிப்பிட்ட சொற் களின் குணாதிசயங்களைக்கொண்டு நிர்ணயிப்பதும் தவறாகும். சில முக்கியமான விவரங்களை வெட்டிவிடுவதும் பெரிய தவறாகும், நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சிதைக்கும் எந்த ஒரு விவரமும் இறுதியில் நாம் அறிந்துகொள்ள வேண்டியதற்கு ஏற்படும் தடையாகும்.

அங்கேயே சென்று அறியும்பொழுது, பண்பாடு இணைப்பு களைப்பற்றிப் பொதுப்படையாகச் சொல்வது அபாயகரமானது. ஒரு பண்பாட்டின் குண இயல்புகளையும், அதன் மொழியையும் ஒருவன் கற்றுக்கொண்டிருக்கும்போதே அப் பண்பாட்டின் உருவ கத்தைப்பற்றி எண்ணுவது அதைச் சரியாகப் புரிந்துகொள்வ தற்குத் தடையாக அமையும். அந்த இடங்களுக்கே சென்று

அறிபவன் மிகவும் ஒழுங்காகத் தான் கண்டவைகளையே குறித்துக் கொள்ளவேண்டும். ஒருசில கோட்பாடுகளுக்கு அனுசரணையாக உள்ள சில நடத்தைகளை மட்டும் பொறுக்காமல், எல்லாவிதமான நடத்தைகளையும் குறிப்பிடவேண்டும். இந்தப் புத்தகத்தில் வர்ணிக்கப்பட்ட குடிகளின் பண்பாடுகள், முன்பே அறிந்த சில குணாதிசயங்களை மனத்தில்கொண்டு கவனிக்கப்படவில்லை. எந்த ஒரு நியமனமும் இன்றி அறியப்படுகிற விவரங்கள் அப்படி அப்படியே குறிக்கப்பெற்றன. அதனால் மாணவனுக்கு முழு நிலவரமும் நம்பத்தக்கதாக அமைகின்றது. பண்பாடுகளைப்பற்றிப் பேசும் பொழுது பண்பாட்டு இணைப்புகளைப்பற்றிப் பொதுப்படையாகச் சொல்வது சரியாகாது. நடத்தைகளின் மாறுபட்ட எல்லைகளும், ஒரு சமூகத்திலுள்ள வலிமையான நோக்கங்களும், மற்றைய சமூகத்திலே அவ்வாறு இல்லாதிருப்பதுமான முழு விவரங்களும் நமக்குத் தேவை. ஒரு மானிடவியல் குழுவில் நம்பப்படுகிற பண்பாட்டு உருவகம் நமக்குத் தேவையில்லை. வெவ்வேறு பண்பாடுகள் தேடுகின்ற மாறுபட்ட உடைமைகளும், அவர்களது நிறுவனங்களின் நோக்கமும் இரண்டுவிதமான சமூக முறைகளையும், தனி மனிதனின் உளவியலையும் அறிந்துகொள்ளத் தேவைப்படுகின்றன.

மேற்கத்திய நாகரிகத்தைப்பற்றி அறிவுக்கும், அதன்மூலம் சமூகவியல் சித்தாந்தங்களுக்கும், பண்பாடு இணைப்புக்கும் உள்ள தொடர்பு எளிதில் தவறாகக் கொள்ளப்படுகிறது. நமது சமூகப் பண்பாடுகள் இணையாதவையாகவே அடிக்கடி உருவகப்படுத்தப் பெறுகின்றன. அதன் பரந்த தன்மையும், தலைமுறைக்குத் தலைமுறை ஏற்படும் துரிதமான மாறுபாடுகளும் அதன் விவரங்களிடையே இணைப்பை ஏற்படுத்தத் தடையாக இருக்கின்றன. பழங்குடி மக்களிடையே இதுபோன்று இல்லை. ஒரு சிறு தவறு செய்தால் பல சந்தர்ப்பங்களில் இந்த இணைப்பில்லாத் தன்மையை மிகைப்படுத்தவும் தவறாகப் புரிந்துகொள்ளும்படிச் செய்யவும் முடியும். பழங்குடிகளின் சமூகம் புவியியல் முறையிலே இணைந்த ஒன்று. மேற்கத்திய நாகரிகம் பல படிகளாக அமைந்துள்ளது. ஒரே இடத்திலுள்ள பல சமூகக் கூட்டங்கள் ஒரே காலத்தில் பல வேறுபட்ட தகுதி நிலைகளையும் நோக்கங்களையும் கொண்டு வாழ்கின்றனர்.

நவீன சமூகவியல், மானிடவியல் முறையிலே பண்பாட்டுப் பரப்பு (culture area) என்று வரும் எண்ணத்தை ஈடுபடுத்துவது மிகச் சிறிய அளவிலேயே பயன்தரும். ஏனென்றால், பல இடங்களில் வசிப்பதால் பல்வேறு முறை வாழ்க்கைகள் இன்று அமைந்

திருக்கவில்லை. சமூகவியலார் (sociologists) இந்தப் 'பண்பாட்டுப் பரப்பு எண்ணங்கள்'மீது அதிக நேரத்தை வீணுக்குகின்றனர். அந்த மாதிரி 'எண்ணமே' கிடையாது. புவியியல் பிரிவுகளின்படி குணப்பாங்குகள் சேர்ந்திருந்தால், அந்த முறையிலே அவை களைக் கவனிக்கலாம். அவைகள் அப்படி அமையாதிருக்கும் போது, அவைகளைப்பற்றிக் கொள்கைகள் ஏற்படுத்திக்கொள்வது தவருகும். நமது நாகரிகத்தில் மானிடவியல் முறைப்படி நோக்குங்கால், ஒரேமாதிரியான பண்பாடே உலகத்தின் எந்தப் பகுதியிலும் இருக்கிறது. ஆனாலும், உழைப்பாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே பெரும் பிளவு இருக்கிறது. அதுபோன்று குதிரைப்பந்தய மைதானத்தையொட்டியே வாழ்க்கை நடத்துபவர்களும், மாதாகோவிலையொட்டியே வாழ்க்கை நடத்துபவர்களும் (சூதாட்டக்காரர்களும் மதசம்பந்தமான வாழ்க்கை நடத்துபவர்களும்) வெவ்வேறு வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கின்றனர். தற்கால சமூகத்திலே ரோட்டரி கிளப் (Rotary Club), க்ரீன்விச் வில்லேஜ் (Greenwhich Village) என்ற வெவ்வேறு கொள்கைகளையுடைய தனிக் கூட்டங்கள் ஏற்படுவதற்குரிய சுதந்திரங்களை அடையமுடிகிறது. தற்கால நிலையில்கூட பண்பாட்டுமுறை இயல்பு மாறவில்லை. ஆனால், அவைகளைப்பற்றி அறியக்கூடிய தொகுதிகள் முன்போல் அந்தந்த இடங்களிலே இல்லை.

பண்பாட்டு இணைப்பானது முக்கிய சமூக விளைவுகளைக் கொண்டதாகும். இது சமூகவியல், சமூக உளவியல் ஆகியவற்றின் சில பிரச்சினைகளைப் பற்றியுள்ளது. சமூகம் உயிருள்ள ஒன்ரு என்பதே முதல் பிரச்சினையாகும். பல தற்கால சமூகவியலாரும், சமூக உளவியலாரும் சமூகம் உயிருள்ளதல்ல என்று விரிவாக விவாதித்திருக்கிருர்கள். அந்தச் சமூகத்தை உருவாக்கும் தனி மனிதர்களின் உள்ளங்களைவிடப் பெரிதான ஒன்ருக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் கூறுகின்றனர். இதை எடுத்துக் காட்டுவதற்காக அவர்கள் 'கூட்டத்தின்' இயல்பை வன்மையாகக் கண்டித்தனர். கூட்ட இயல்பின்படி செய்கைகளும் எண்ணங்களும் இல்லாத ஒரு பொய்யான கூட்டத்தின் செய்கைகளாகும். இதற்கு எதிராக வேறு சிலர் பல்வேறு பண்பாடுகளில், தனி மனிதர்களின் உளவியல் சட்டங்கள், அங்கே நடக்கும் பல விவரங்களை விளக்க முடியாதிருப்பதை அறிந்து, புரியாத சொற்ருெடர்களால் வர்ணிக்கிருர்கள். டர்க்ஹிம் (Durkheim) போன்று 'தனிப்பட்டவர்கள் வாழ்வே இல்லை' என்றும், க்ரோபர் (Kroeber) போன்று பண்பாட்டுமுறைகளை விளக்க இயற்கைக்கப்பாற்பட்ட ஒன்றைக் குறிப்பிட்டும் வர்ணிக்கிருர்கள்.

இது வெறும் வாய்ச்சண்டையே ஆகும். சமூகத்திற்கு உயிர் உண்டெனச் செப்பும் யாரும், ஒரு பண்பாட்டையுடைய தனி மனிதர்களின் உள்ளங்களைத் தவிர வேறொரு உள்ளத்தை சமூகம் கொண்டிருப்பதாக நம்பவில்லை. ஆல்போர்ட் (Allport) போன்ற 'கூட்ட இயல்பை' எதிர்ப்பவர்கூட 'சமூகவியலின் ஆட்சிக்குட்பட்ட கூட்டங்களை முறையே அறிவது' என்பது மிக அவசியமென ஒப்புக்கொண்டுள்ளார். ஒரு கூட்டத்திலுள்ள தனிநபர்களின் கூட்டுத்தன்மையைவிடச் சமூகம் அதிக சக்திவாய்ந்தது என்று கூறுபவர்களும், அதை மறுப்பவர்களும் கொண்ட அபிப்பிராயபேதம் முக்கியமாக வெவ்வேறு விதமான குறிப்புகளைச் சேர்த்துள்ள மாணவர்களிடையேதான் இருக்கிறது. டர்க்ஹீம் பல பண்பாடுகளை, முக்கியமாக ஆஸ்ட்ரேலியாவிலுள்ள பண்பாடுகளை நன்ருக அறிந்து, பண்பாடுகளைப்பற்றி அறியவேண்டியது அவசியம் என அடிக்கடி வற்புறுத்தினர். ஆனுல், சமூகவியலார், நமது நிலையிலே இருக்கிற ஒரு பண்பாட்டைமட்டும் கவனிப்பவர்களாகி, அவர்களுடைய வேலைக்குத் தேவைப்படாத முறைகளை அழிக்க முற்பட்டனர்.

ஸூனி மக்களில் உள்ள தனிநபர்கள் விரும்பி ஏற்படுத்துவதற்கும் மேலான ஒரு பண்பாட்டை அவர்களுடைய தனிநபர்கள் சேர்ந்த கூட்டம் உருவாக்கிவிட்டது. மரபு என்பது அக் கூட்டத்திற்கே உருவகம் அமைத்தது. அது 'காலத்தினுல் கட்டுப்பட்ட' ஒன்ருகும். உயிருள்ள ஒரு முழுமைபெற்றதாக அதைக் கூறுவது முற்றிலும் நியாயமே ஆகும். அதற்குச் சில குறிக்கோள்கள் இருப்பதாகவும், அதற்குச் சில காரியங்கள் இருப்பதாகவும் நாம் கூறுவது நமது மொழியிலே உயிருள்ளனவாகக்கொள்ளும் இயல்பு இருப்பதாலே ஆகும். பொய்யான ஒரு தத்துவத்தை உடையவன் என்று மாணவனைக் குறைகூறலாகாது. மனித நடத்தையின் சரித்திரத்தைப் புரிந்துகொள்வதற்கு இக் கூட்ட இயல்புகளை நாம் அறியவேண்டும். நாம் காண்கிற சில விவரங்களைத் தனி மனிதனின் உளவியல் விளக்காது.

சமூகப் பழக்கங்களை நாம் படிக்கும்போது ஒரு நடத்தையானது சமூகத்தினுல் அனுமதிக்கப்பட்டதாக இருக்கவேண்டிய நிலையைப் பார்க்கிருேம். சமூகம் எதை அனுமதிக்கிறது எதை நிராகரிக்கிறது என்பதைச் சரித்திர வாயிலாகவே நாம் அறிய முடிகிறது. உளவியல் மட்டுமன்றிச் சரித்திரமும் இதிலே பங்குகொள்கிறது. தற்சோதனையின்மூலம் அறியப்படுகிற சில விவரங்களைக் கொண்டு சரித்திரம் அமையவில்லை. மனிதனின் போட்டியிடும் தன்மையிலிருந்து உண்டான பொருளாதாரத் திட்டங்களையும்,

மனிதனின் போரிடுகின்ற தன்மையிலிருந்து ஏற்பட்ட தற்காலப் போர்முறைகளையும் பற்றிய விளக்கங்களும், மற்றும் தற்காலப் புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவை தருகின்ற விளக்கங்களும், மானிடவியலாருக்குப் புரிவதில்லை. ரிவர்ஸ் (Rivers) என்பவர்தாம் முதலில் கடுமையான முறையிலே தெரிவித்தார். அவர், இரத்த சம்பந்தமான சண்டைக்கும், பழிவாங்குதலுக்கும் உள்ள வேறுபாட்டை அறிய முற்படுவதற்கு முன்னால் பழிவாங்குதல் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டு, இரத்த சம்பந்தமான சண்டை (blood-feud) என்ற நிறுவனத்திற்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தை அறிவது அவசியம் என்றார். அதுபோன்றே பொறாமையையும், அதைக் கட்டுப்படுத்துகிற அந்த இடத்திலுள்ள ஆண் பெண் உறவு விதிகளையும், உடமை நிறுவனங்களையும் கொண்டே அறியவேண்டும்.

ஒரு பண்பாட்டினை அதன் தனி மனிதர்களின் நடத்தையின் மூலம் அறிவதற்குச் சில இடையூறுகள் உள்ளன. தனி மனிதர்களின் உளவியலைக்கொண்டு பண்பாட்டைத் தெரிந்துகொள்வது ஒருவிதமான கஷ்டத்தைக் கொடுத்தாலும், சரித்திரத்தையும், சரித்திரத்திலே குணப்பாங்குகள் ஒப்புக்கொள்ளப்படுதல், அல்லது வெறுக்கப்படுதல் ஆகியவைகளை ஒதுக்கிவிடுவதால் மிகவும் கடினமாக ஆகிறது. தனி மனிதர்களின் உளவியலைக் கொண்டுதான் பண்பாடுகளின் உருவகங்கள் ஏற்பட்டபோதிலும் அது உளவியலையும் சரித்திரத்தையும் முக்கியமாகக் கொண்டுள்ளது. டையோனீஷியன் முறையான நடத்தை சில பண்பாடுகளின் நிறுவனங்களில் வலியுறுத்தப்பெறுகிறது. ஏனென்றால், தனி மனிதனின் உளவியலில் அது நிரந்தரமாக ஏற்படக்கூடும். ஆனால், சில சரித்திர நிகழ்ச்சிகளால் அந்த முறை சில பண்பாடுகளில் வளர்ச்சியுற்றும், மற்றைய சில பண்பாடுகளில் அது நிராகரிக்கப்பட்டும் உள்ளது. பண்பாட்டு உருவகங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது சிற்சில இடங்களில் சரித்திரமும் உளவியலும் தேவைப்படுகின்றன. ஒன்று செய்யக்கூடிய வேலையை மற்றொன்று செய்ய இயலாது.

உருவக மானிடவியல் (configurational anthropology) சம்பந்தமாக மிகவும் விவாதிக்கப்படுகிற முரண்பாடு ஒன்றும் உள்ளது. சமூக இயல்புக்கு உயிரியல் அடிப்படை உண்டா என்ற முரண்பாட்டைத்தான் இங்குக் குறிப்பிடுகிறோம். உலக முழுவதும் மனிதர்களின் மனப்பாங்கு ஏறத்தாழ ஒரே மாதிரியானது என்றே நாம் இதுவரை கொண்டிருந்தோம். அதேமாதிரி ஒவ்வொரு சமூகத்திலும் மனிதர்களின் பரவல் ஒரே விகிதாசாரத்தைக்கொண்டது

என்றும், இவர்களினின்றும் பண்பாடு தன் மரபு முறைக்கேற்பச் (traditional pattern) சிலரைத் தேர்ந்தெடுத்து பெரும்பாலான தனி மனிதர்களை ஒருமிக்க இணைத்தது என்றும் கொண்டோம். எந்த ஒரு மக்கள் தொகுதியிலேயும், சிலர் சமாதிநிலை (trance) அடையக்கூடும். அது மதிக்கப்பட்டு வெகுமதியளிக்கப்பட்டால் பெரும்பாலோர் அதை அடையவோ, அன்றி, அதை அடைந்துவிட்டதைப்போல் நடிக்கவோ முற்படுகின்றனர். ஆனால், நமது சமுதாயத்திலே அது குடும்பத்திற்கே இழிவாகக் கருதப்படுவதால் இந்த நபர்கள் மிகவும் குறைந்தே இருக்கின்றனர். இவர்கள் இயற்கையைக் கடந்தவர்களாகக் கருதப்பெறுகின்றனர்.

ஆனால், வேறுவிதமான விளக்கமும் கூறலாம். குணப்பாங்குகள் பண்பாட்டினால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. உயிரியல் முறையிலே ஒருவரிடமிருந்து ஒருவருக்குச் செல்லுகின்றன என்பது மிகவும் தீவிரமாகச் சிலரால் எண்ணப்பெறுகிறது. இதன்படி மக்களின் இனத்தைப் (race) பொறுத்தே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சமவெளி இந்தியர்கள், அவர்களது இனத்தின் க்ரோமோசோம் (chromosome—நிறத்திரி) வழியே வந்த ஒரு அவசியத்தினாலேயே தோற்றங்களை நாடிச் செல்லுகின்றனர் என்று கொள்ளவேண்டும். அதுபோல் ப்யூப்லோ பண்பாட்டில் மக்கள் ஒரு நிதானத்தையும் அமைதியையும் நாடுகின்றனர் என்றால், அது அவர்களின் இனவழியே வந்த பரம்பரை நடத்தையாகும். இது உண்மையானால் சரித்திரத்தை நாம் கவனிக்கவேண்டுவதில்லை. மக்களின் நடத்தைகளைப் புரிந்துகொள்வதற்கு உடற்செயலியலை (physiology) நாடவேண்டும்.

உயிரியல்மூலம் சொல்லுகின்ற விளக்கம், விஞ்ஞான முறையிலே தீர்மானமாகச் சொல்லப்படவில்லை. ஒரு சிறிய சமூக இயல்பையாவது காட்டக்கூடிய உடற்செயலியல் விவரத்தை அவர்கள் நிரூபிக்கவேண்டும். அடிப்படை இரசாயன மாறுபாடுகளாலும், நாளமில்லா சுரப்பிகளின் வேலையாலும் சில மனிதர்கள் மாறுபட்டு, அவர்களின் பண்பாட்டையும் பாதிக்கலாம். அது மானிடவியல் பிரச்சினையன்று. ஆனால், உடற்செயலியல் வல்லுநர்களும் பரம்பரை ஆராய்ச்சியாளர்களும் வேண்டிய ஆதாரங்களைக் கொடுக்கும்போது பண்பாட்டுச் சரித்திரம் படிக்கும் மாணவர்களுக்கு அது தேவைப்படலாம்.

பிற்காலத்தில் உயிரியல் வல்லுநர்கள், குணப்பாங்குகள் பரம்பரையாக வருவதற்கான உடற்செயலியல் விவரங்களைக் கொடுத்தால்கூட, நாம் அறிந்த பண்பாட்டு விவரங்களனைத்

தையும் அவை பாதிக்கமாட்டா. வட அமெரிக்க இந்தியர்கள் எல்லோரும் உயிரியல் முறையில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம். ஆயினும், பண்பாட்டு நடத்தையிலே எல்லோரும் டையோனீஷியன் முறையைப் பின்பற்றவில்லை. ஸுனி மக்கள் இதற்கு நேர் எதிரிடையான நோக்கங்களை உடையவர்கள். இவர் களுடைய அப்போலோனியன் முறையை மற்ற ப்யூப்லோ மக் களும் கொண்டுள்ளனர். டையோனீஷியன் முறையை நன்கு பிரதிபலிக்கிற மக்களில் ஷோஷோனியன் பிரிவைச் சேர்ந்த ஹோபி மக்களும் இவர்களைச் சார்ந்தவர்களே. மொழிவழியிலே இவர்களுடன் அஸ்டெக் மக்கள் உறவுபூண்டிருக்கின்றனர். டேவா (Tewa) என்ற மற்றொரு ப்யூப்லோ மக்கள் தெற்குச் சமவெளிகளிலுள்ள கியோவா (Kiowa) என்ற ப்யூப்லோ அல்லாத ஒரு குடியினரோடு மொழிவழியாகவும் உயிரியல் வழியாகவும் தொடர்புகொண்டவர்களாக இருக்கின்றனர். பண்பாட்டு உருவ கங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றி இருக்கிறதேயன்றி, மற்றக் குடிமக்களிடையே இருக்கும் உறவுகளையும் தொடர்புகளை யும் பற்றியதன்று. அதுபோன்றே மேற்கத்திய சமவெளிகளில் உயிரியல்மூலம் ஒன்றிய மக்கள் இல்லை. இந்த இடத்தில் வசிக் கின்ற குடிகள் மிகவும் விரிந்துகிடக்கின்ற அல்கான்கியன் (Algon-kian), அத்தபாஸ்கன் (Athabascan), ஸையோவுவன் (Siouan) குடும் பங்களினின்றும் வந்தவர்களாவார்கள். அவர்கள் தத்தம் பரம் பரையைச் சேர்ந்த மொழியையே இன்றும் உபயோகிக்கின்றனர்.[1] இந்தக் குடும்பங்களில், சமவெளி இந்தியரைப்போன்று தோற்றங் களை நாடிச் செல்லும் குடிகளும், அப்படி இல்லாதவர்களும் இருக் கிறார்கள். சமவெளிகளில் புவியியல் முறையில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள்ளே வசிப்பவர்கள் மட்டுமே, ஒவ்வொரு திடகாத்திர மனிதனும் அவசியம் பெற்றிருக்கவேண்டிய தோற் றங்களை நாடுகின்றனர்.

சூழ்நிலைகளின்மூலம் விளக்கம் தருவது இன்னும் வலிமையுள் ளதாக இருக்கிறது. பல இடங்களில் பரவியிருத்தலை நாம் காணுமல் பல காலங்களிலே பரவியிருக்கும் பண்பாடுகளைக் கவ னிக்கிறோம். உயிரியல் அமைப்பு மாறுமல் உள்ள பல மக்களி டையே உளவியல் பாங்கானது தீவிரமாக மாறியிருப்பதை நாம் காண்கிறோம். நமது பண்பாட்டிலேயே இதற்கு உதாரணங்கள் கிடைக்கும். ஐரோப்பிய நாகரிகம், இடைக்காலத்திலே மாயச் செயல்களையும் (mystic behaviour), உளவியல் தோற்றங்களையும் பற்றியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் அது தீவிரமாக

[1] இந்த மொழிவழிக் கூட்டங்கள் உயிரியல் உறவுகளைப்பற்றியதாகவே இருக்கின்றன.

உடைமைகள் பெற்றிருத்தலைச் சிறந்ததாகக் கொண்டது. அந்த மக்களின் இன அமைப்பில் வேறுபாடு எதுவும் இல்லாமல் அவர்களது பண்பாடுதன் போக்கை மாற்றிக்கொண்டது.

பண்பாட்டின்மூலம் நடத்தைகளுக்கு விளக்கம் தருவது உடற்செயலியலின் ஈடுபாட்டை மறுப்பதாகக் கொள்ளக்கூடாது. அப்படி மறுப்பது விஞ்ஞான முறையான விளக்கங்களைத் தவருகப் புரிந்துகொள்வதாகும். உயிரியல் செயல்களை இரசாயனம் முழுதும் விளக்கமுடியாதாயினும், இரசாயனத்தை உயிரியல் மறுக்கவில்லை. தான் ஆய்கின்ற விவரங்களுக்கு இரசாயனமே அடிப்படையாக இருந்தாலும் உயிரியல் இரசாயனசூத்திரங்களைக் கொண்டுதான் இயங்கவேண்டும் என்பதில்லை. விஞ்ஞானத்தின் எத் துறையிலேயும் கவனிக்கப்படுகிற செயல்களுக்கு சரியான விளக்கம் தரக்கூடிய விதிகளையும் வினவுகளையும் வலியுறுத்த வேண்டியது அவசியமே. மேலும், இறுதிப் பயனடைய மற்றைய விவரங்கள் உதவவில்லை எனினும், அவைகளும் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டவே வேண்டும். மனிதனின் பண்பாட்டு நடத்தையை உயிரியல் விவரங்கள் பாதிக்கவில்லை எனினும், அவை இல்லையென்று மறுக்கவில்லை. சரித்திர வரலாறு மிகவும் முக்கியமானது என்பதை வலியுறுத்தவே இப்படிச் செய்யப் படுகிறது.

நமது பண்பாட்டைப்பற்றிய அறிவில்கூட ஆய்வுமுறை உளவியல் (experimental psychology) இதே முடிவைத்தான் அடைந்துள்ளது. நேர்மை, தலைமைத்தகுதி ஆகியவை போன்ற மனிதனின் குணப்பாங்குகளை ஆய்ந்த சமீபகாலச் சோதனைகள்மூலம் சமூகத்தின் ஈடுபாடு நன்ருகத் தெரிகிறது. சோதனையின் ஒரு நிலையிலே குழந்தை நேர்மையாக நடந்துகொள்வது மற்ருெரு நிலையில் குழந்தை அப்படி நடந்துகொள்ளுமா என்று தெளிவு படுத்துவதில்லை. நேர்மையுள்ளவன், நேர்மையற்றவன் என்பதை விட நேர்மைக்கான சூழ்நிலைகள், நேர்மையற்றுவிடக்கூடிய சூழ்நிலைகள் எனவே இருக்கக் காண்கிருேம். அதுபோன்றே தலைவர்களைப்பற்றிப் பார்க்கும்போது தலைமைக்கான குணப்பாங்குகள் ஒரேமாதிரியாக இருந்ததாகத் தெரியவில்லை. ஒருவன் செய்கின்ற வேலையிலே தலைமை ஏற்படுகிறது. அந்தச் சூழ்நிலைக்குச் சாதகமான குணப்பாங்குகள் அவனிடத்தே இருந்தன. இப்படிப்பட்ட 'சூழ்நிலையினுல் ஏற்படுகிற முடிவுகள் ஒன்றைத் தெளிவுறுத்துகின்றன. அதாவது, குறிப்பிட்ட ஒரு சமூகத்திலே ஒருவனது சமூக நடத்தையானது 'நடத்தைகளை முன்பே தீர்மானிக்கிற ஒரு நிலையான இயல்பினுல் ஏற்படுவதல்ல என்பதும், சந்தர்ப்பங்

களினால் எழுச்சியுறுகிற குணப்பாங்குகளின் தன்மையால்’ என்பதும் தெளிவாகிறது.

ஒரு சமூகத்திற்குள்ளேயே மனிதர்களின் நடத்தையை இவ்வளவு பாதிக்கக்கூடிய சக்திவாய்ந்த சூழ்நிலைகள் இரு வெவ்வேறான, ஒன்றுக்கொன்று எதிரிடையான குறிக்கோள்களையும் நோக்கங்களையும் கொண்ட ஸுனி, க்வாக்யூட்ல் ஆகிய பண்பாடுகளில் விரிவடையும்பொழுது ஒரே முடிவைத்தான் ஏற்படுத்துகின்றன. மனிதர்களின் நடத்தையை நாம் கவனிக்கவேண்டுமானால் அவர்களது சமூகத்திலே உள்ள நிறுவனங்களைப்பற்றி முதலில் அறிந்துகொள்ளவேண்டும். மனிதர்களின் நடத்தை அவர்களது நிறுவனங்கள் காட்டிய வழியில்தான் அமையும். தம்முடைய பண்பாட்டிலே ஊறியிருக்கும் வெளியார் எண்ணப் பெறாத அத்துணைத் தீவிரமான நிலைகளைக்கூட அது காட்டும்.

இப்படி வெளியிலிருந்து காண்பவன் பிறருடைய பண்பாடுகளில்தான் விசித்திரமான நடத்தைகளைக் காண்பான்; தன்னுடைய பண்பாட்டிலே காணுவதில்லை. ஆனாலும், இது சிறிது காலமே இருக்கக்கூடிய ஒருதலைப்பட்சமான அபிப்பிராயமாகும். எந்த ஒரு பண்பாடும் நிரந்தரமான ஒரு நல்லறிவு நிலையை எடுத்துக்கொண்டு மனிதனின் பிரச்சினைகளுக்கெல்லாம் வழிவகுக்கும் தனித்தன்மை பெற்றதாகச் சரித்திரத்தில் இடம்பெறவில்லை. அடுத்த தலைமுறையே இதைவிட அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கும். விஞ்ஞான முறையில் நமக்குக் கிடைக்கும் ஒரு வழி, நமது பண்பாட்டை நம்மாலியன்றவரை எண்ணிலடங்கா மனிதனின் பண்பாட்டு உருவகங்களில் ஒன்றாக நினைத்து, அதைப் பற்றி அறிந்துகொள்வதேயாகும்.

இயன்ற அளவு மனித நோக்கங்களையும் காரியங்களையுங் கொண்ட ஒரு பெரிய வட்டத்தின் சிறு பகுதியைமட்டுமே ஒரு நாகரிகத்தின் பண்பாட்டுமுறை எடுத்துக்கொள்கிறது. நாம் முன்னர் ஒரு அதிகாரத்தில் கண்டபடி, ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட சில செய்முறைகளையும் குணப்பாங்குகளையுமே பயன்படுத்துகிறது. சாத்தியமான மனித நடத்தைகள் மிகப்பெரிதாகவும் முரண்பாடுகள் உள்ளதாகவும் அமைந்திருப்பதாலே எந்தப் பண்பாடும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அதனின்று எடுத்துக் கொள்ளமுடியாது. தேர்ந்தெடுப்பதுதான் முதல் தேவையாகும். எந்தப் பண்பாடும் தேர்ந்தெடுக்காதிருந்தால் புரிந்துகொள்ளும்படி இருக்காது. அது தேர்ந்தெடுக்கிற திருமண ஏற்பாடு, செய்முறைகள், நுணுக்கங்கள் ஆகியவை போன்றே நோக்கங்களையும் தேர்ந்தெடுக்கிறது.

நாம் விவரித்துள்ள மூன்று பண்பாடுகளிலும், மனிதர்களின் நடத்தைகளை மூன்றுவிதமாக அவர்களின் பண்பாடுகள் தேர்ந்தெடுத்து, அவர்களின் நிறுவனங்களிலே கொண்டுள்ளதைக் கண்டோம். உலகத்தில் பொதுவாக உள்ள நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள் எனக் கொள்ளலாகாது. வாழ்கின்ற பண்பாடுகள் என்ற முறையிலே நாம் அவைகளைப்பற்றி அறிந்திருப்பதால் அவைகளை உதாரணமாக எடுத்துக்கொண்டோம். நேரில் சரிபார்த்து அறியக்கூடாத பண்பாடுகளைப்பற்றிப் பேசும்போது சந்தேகங்கள் எழக்கூடும். அப்படி ஏற்படக்கூடாது என்றுதான் நாம் இவைகளைத் தேர்ந்தெடுத்தோம். உதாரணமாக, சமவெளி இந்தியரின் பண்பாட்டைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியும்; அதுவும் அதிகம் மாருமல் அப்படியே இருக்கிறது. அதனுடைய உளவியல் போக்குகள் அந் நாட்டுப் புத்தகங்களிலிருந்தும், பிரயாணிகளின் வரலாற்றிலிருந்தும், மனித இனத்தைப் படிப்பவர் தொகுத்துக்கொடுத்த வழக்கங்கள், நினைவுகள் இவைகளிலிருந்தும் தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியவையாகும். ஆனல், சில காலமாக அந்தப் பண்பாடு இயங்காமலிருப்பதால் ஓரளவு சந்தேகமும் எழுகிறது. எப்படிப் பழக்கமானது கொள்கையாக மாறிற்று என்றும், எந்தச் சூழ்நிலைகளால் ஒன்று மற்ருென்ருக மாறிற்று என்றும் சுலபமாகச் சொல்லிவிட முடியாது.

நாம் விவரித்த பண்பாட்டு உருவகங்களை ஒரு குறிப்பிட்ட மனப்பாங்குகளை ஒன்றுசேர்த்து அமைத்த 'மாதிரி'ப் பண்பாடுகள் எனக் கருதக்கூடாது. ஒவ்வொன்றும் அப்படி அப்படியே வர்ணிக்கப்பெற்றவை. உலகத்தின் எந்தப் பகுதியிலேயும் அவைகளை முழுமையும் ஒத்திருக்கிற பண்பாடுகள் கிடையா. எல்லாப் பண்பாடுகளையும் சில குறிப்பிட்ட மாதிரிகளை வெளிக்காட்டுகிறவைகளாகக் கொள்வது துரதிருஷ்டவசமே. எல்லா நாகரிகங்களுக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும் தவிர்க்கமுடியாததாயும், சொல்லக்கூடியதாயும் நாம் சில தொகுதிகளைக் கொண்டுவிட்டால் அது ஒரு பெருநஷ்டமாகும். தோபு, வடமேற்குக் கடற்கரை ஆகிய இடங்களில் காணப்படுகிற பலாத்கார ஈடுபாடுகள் அவ்விரு பண்பாடுகளில் வெவ்வேறு குணப்பாங்குகளோடு இணைந்திருக்கின்றன. அவைகள் குறிப்பிட்ட முறையிலேயே இணைந்து சேர்ந்திருக்கவேண்டிய அவசியமில்லை. க்ரீஸ் (Greece), ஸுனி ஆகிய இரு நாடுகளில் உள்ள அப்போலோனியன் முறைகள் அடிப்படையில் வெவ்வேறு வளர்ச்சியைப் பெற்றன. ஸுனி மக்களின் மிதமான, கட்டுப்பாடான பண்பாடு அவர்களுடைய பண்பாட்டினின்றும் வேறுபட்ட எதையும் நிராகரித்தது. கிரேக்க

நாகரிகத்தை அதனுடைய நிறுவனமான டையோனீஷியன் சரியீடுகள் இல்லாமல் புரிந்துகொள்ளமுடியாது. இப்படி ஏற்பட வேண்டும் என்று 'சட்டம்' இல்லாமற்போனாலும், இது குணப் பாங்குகள் வெவ்வேறு கோணங்களை எடுத்துக்கொள்வதைக் காட்டுகிறது.

ஒன்றையொன்று ஒத்திருக்கிற பண்பாட்டு வகைகளின் நோக் கங்களை வெளிப்படுத்த ஒரேமாதிரியான சந்தர்ப்பங்களைப் பயன் படுத்துவதில்லை. நவீன நாகரிகத்திலே ஈவிரக்கமின்றி வியாபாரத் திலே போட்டியிடும் ஒருவன் கனிவுள்ள கணவனாகவும், பொறு மையான தந்தையாகவும் இருக்கிறான். மேற்கத்திய நாகரிகத்தில், வியாபாரத்துறையில் வெற்றி காணவேண்டும் என்று காட்டப் படும் தீவிரம் அதே அளவுக்குக் குடும்ப வாழ்க்கையில் காட்டப் படுவதில்லை. இந்த இரண்டு செயல்களுக்கான நிறுவனங்கள் தோபு மக்களிடையே காணப்பெறாத ஓரளவு முரண்பாட்டை யுடையன. குடும்ப வாழ்க்கையும், குலா வியாபாரமும் ஒரே மாதிரியான நோக்கங்களுடனேயே தோபுவில் நடைபெறுகின்றன. தோபுவில் தோட்டவேலையில்கூட பிறருடைய தோட்டங்களி னின்று கிழங்குகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத் துடனேயே நடைபெறுகிறது. ஆனாலும், தோட்ட வேலையானது எந்தவிதமான பண்பாட்டு வகையாலும் பாதிக்கப்படாத ஒரு செய்கையாகும். அது முனைப்பான நோக்கங்களற்ற ஒரு செய்கை யாகும்.

பண்பாட்டுவகையால் பாதிக்கப்பட்ட, சமமாக இல்லாத நடத்தையானது க்வாக்யூட்ல் மக்களின் வாழ்க்கையில் நன்கு புலனாகிறது. க்வாக்யூட்ல் மக்களில் ஒரு உயர்குடிமகன் இறந்து விட்டால், அச் சாவை ஈடுகட்ட எப்படி ஒரு திட்டத்தை நடத்து கிறார்கள் என்பதைப் பார்த்தோம். அதாவது தங்களை அவமானப் படுத்திய விதியை எப்படித் திருப்பிவிடுகிறார்கள் என்று கவனித் தோம். தங்கள் குழந்தை இறந்துவிட்டால் அதற்காக அந்த இனத் தந்தையும் தாயும் இவ்வாறு செய்யவேண்டியதில்லை. தாய் மிகுந்த துக்கத்தால் புலம்புகிறாள். இறந்த குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தாய் அழும் சமயம் எல்லாப் பெண்களும் அழுவதற்காக வருகின்றனர். அவள் பொம்மை செய்பவர் களையும், மரம் செதுக்குபவர்களையுங்கொண்டு பல விளையாட்டுச் சாமான்களைச் செய்வித்து அவற்றைப் பரப்புகிறாள். பெண்கள் அழுகிறார்கள். தாய் குழந்தையை நோக்கி :

'ஆ, ஆ, ஆ, குழந்தாய்! எனக்கு நீ என்ன செய்துவிட் டாய்? நீ என்னைத் தாயாகக் கொண்டாய். நான் உனக்கு

எல்லாம் செய்ய முனைந்தேன். நான் உனக்காகச் செய் திருக்கும் பொம்மைகளையும் மற்ற எல்லாவற்றையும் பார். குழந்தாய்! என்னை ஏன் தனியே விட்டுச் செல்கிறாய்? நான் உனக்கு ஏதாவது (தவறு) செய்துவிட்டதால் இப்படிச் செய் கிறாயா? குழந்தாய்! நீ திரும்பி என்னிடம் வரும்போது நான் நன்றாகச் செய்கிறேன். நீ எனக்கு ஒன்றுமட்டும் செய். நீ போகின்ற இடத்தில் நலம் பெற்று, வலிமை பெற்றவுடன் என்னிடம் திரும்பி வந்துவிடு. தயவுசெய்து தங்கிவிடாதே. குழந்தாய்! உன் தாயான என்மீது இரக்கங்கொள்!' என்று கூறுகிறாள்.

அவள் தன் குழந்தை தன்னிடமே பிறக்கவேண்டுமென்று அதை வேண்டிக்கொள்கிறாள்.

விரும்பியவர் பிரிந்துவிடும்பொழுது க்வாக்யூட்ல் மக்கள் பாடும் பாட்டுகளில் துக்கம் ததும்பியுள்ளது.

'ஓ, அவன் வெகுதூரம் போகிறான். என் அன்பே
அவன் நியூயார்க் என்னும் அழகிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவான்.
என் அன்பே, நான் அவனுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய
பறவைபோல் பறந்துசெல்ல இயலுமா?
என் அன்பே, நான் அவன் பக்கலில் பறந்துசெல்ல முடியுமா?
'ஓ, நான் அவன் பக்கத்தில் படுத்துக்கொள்ள முடியுமா?
என் ஐய! எனதன்பன்மேல் உள்ள காதல் என்னுடலைக் கொல்லுகிறது.
என் அன்பே, என்னை வாழவைக்கும்.
அவன் சொற்கள் என்னுடலைக் கொன்றுவிடுகின்றன.
அன்பே, ஏனென்றால், இரண்டாண்டுகளுக்கு இந்தப் பக்கம்
அவன் முகத்தைத் திருப்பமாட்டேன் என்றுரைத்தான்.
ஓ, அன்பே, நீ தலைவைத்துப் படுக்க நான் தலையணையாக இருக்கட்டுமா.
போய்வா! எனக்குத் துக்கம் தாங்கவில்லை. என் காதலுக் காக நான் அழுகிறேன்.'

இருந்தாலும் க்வாக்யூட்ல் மக்களின் பண்பாடுகளிலே துக்கத் தோடு துன்பப்படுபவனின் அவமான உணர்ச்சியும் கலந்தே இருக்கிறது. உணர்ச்சியானது கேலிக் கூத்தாக மாறி நிலைமை யைச் சமமாக்க ஓர் எண்ணத்தையும் காட்டுகிறது. நமது பண் பாட்டில் காணப்படுகிற சில குறிப்புகளைப்போலவே அவர்களிலும் கைவிடப்பெற்ற யுவதிகளும் யுவர்களும் பாடுகின்ற பாக்களில் காணப்பெறுகின்றன.

'ஓ, என் காதலியே, எப்படி என் எண்ணங்கள் உனக்குச் சொல்லப்பெறும்.
உன் செய்கையைப் பற்றிய என் எண்ணங்கள் - என் காதலியே,
அது நகைப்புக்கிடமாக உள்ளது - என் காதலியே உன் செய்கை
நகைப்புக்கிடமாக உள்ளது - என் காதலியே,
அது வெறுப்புக்காளாக்குகிறது - என் காதலியே, உன் செய்கை
வெறுப்புக்காளாக்குகிறது - என் காதலியே,
போய்வா ! என் காதலியே, உன் செய்கையினுல் போய்வா;
விடைதருகின்றேன். என் காதலியே.'

இல்லாவிட்டால்,

'அவள் என்னைக் காதலிக்காததுபோன்று நடிக்கிருள், என் அன்பே !
என் உண்மைக் காதலியே !
என் அன்பே, நீ வெகுதூரம் செல்கிருய், உன் நல்ல பெயர்
கெட்டுவிடுகிறது, என் அன்பே
நண்பர்களே, இனிக், கண்களுக்கெட்டாத வெகு தொலைவி லிருப்பவர்கள்
பாடும் காதற் பாட்டுகளைக் கேட்காதீர்.
நண்பர்களே, நான் புதிய காதலியைத் தேர்ந்தெடுப்பதும் நல்லதே
நான் என் புதிய காதலிக்காகப் பாடும் காதற் பாட்டை
அவள் கேட்பாள் என நம்புகிறேன், என் அன்பே !'

துக்க உணர்ச்சி அவமான உணர்ச்சியாக மாறுவது நன்ருகத் தெரிகிறது. சில சந்தர்ப்பங்களில்மட்டும் துக்கம் வெளிப்படுகிறது. க்வாக்யூட்ல் மக்களின் குடும்ப வாழ்க்கையிலேகூட அன்பைக் காட்டுகிற சொற்ருெடர்களுக்கும், மகிழ்ச்சிதரும் மனித உறவுகளுக்கான பதங்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது. க்வாக்யூட்ல் மக்களின் வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களுமே அவர்களின் பொதுவாழ்க்கையின் நோக்கங்களைக் கொண்டிருக்கவில்லை.

க்வாக்யூட்ல் மக்களின் வாழ்க்கையைப் போலவே, மேற்கத்திய நாகரிகத்திலும், தற்கால வாழ்க்கையில் நன்கு வெளிப்படுகிற அதிகாரத்தின் ஆசை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தோன்றவில்லை. தோபு, ஸுனி ஆகிய மக்களின் பண்பாடு அவர்களது வாழ்க்யையின் அமிசங்களை எவ்வாறு பாதிக்கிறது என்று எளிதில்

சொல்லிவிடமுடியாது. இது அவர்களுடைய பண்பாட்டு முறையின் சிறப்பாகவும் இருக்கலாம். அல்லது ஒன்ருக இணைந் திருக்கும் ஒரு சிறப்பியல்பாகவும் இருக்கலாம். தற்சமயம் அது பற்றி நாம் தீர்மானிக்கமுடியாது.

பண்பாட்டு இணைப்பைப்பற்றி அறிந்துகொள்ள ஒரு சமூக வியல் விவரமும் தெரிந்துகொள்ளவேண்டும். அது கலந்தூடு பரவுதலின் முக்கியத்துவம் ஆகும். மனிதன் பிறரைப்போன்று நடிக்க முற்படும் விவரங்களை அறிவதற்கு மானிடவியல் அதிக மாக உதவுகிறது. குணப்பாங்குகள் பரவியுள்ள பழங்குடி மக்கள் வாழும் இடங்கள் மிக அதிகமாகவே உள்ளன என்று மானிடவியல் அறிவிக்கிறது. உடைகள், செய்முறைகள், சடங்குகள், புராணங்கள், திருமணத்தின்போது ஏற்படுகிற பொருளாதாரப் பண்டமாற்றுகள் ஆகியவை பெரும் கண்டங் களின் எல்லாப்பகுதிகளிலும் பரவியிருக்கின்றன. அந்தக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு குடியும் அக் குணப்பாங்கை ஏதா வதொருவகையில் கொண்டிருந்தது. இந்த மூலப்பொருள்களைக் கொண்டு சில குறிப்பிட்ட பகுதிகள் தங்கள் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் உருவாக்கிக்கொண்டன. வட அமெரிக்கா வின் பெரும்பகுதிகளிலுள்ள விவசாய முறைகள், மாயாஜால முறைகள் .ஆகியவைகளை ப்யூப்லோ மக்கள் எடுத்துக் கொண்டிருந்தனர். வேறு ஒரு கண்டத்திலுள்ள அப்போலோனி யன் பண்பாடானது வேறுபல மூலப்பொருள்களைக்கொண்டே இயங்கவேண்டும். இந்த இரண்டு கண்டங்களிலும், கிடைக்கக் கூடிய மூலப்பொருள்களைக்கொண்டு உருவாக்கப்படும் பண்பாடு கள் ஒரே நோக்கைக் கொண்டிருப்பினும் அவைகள் எடுத்துக் கொண்ட மூலப்பொருள்களான குணப்பாங்குகள் வேறுபட்டிருக் கலாம். உலகத்தின் பல பகுதிகளில் இணையாகக்கூடிய உருவங் கள் இருப்பினும் அவைகள் வெவ்வேறு விவரங்களைக் கொண்டி ருக்கும். மற்றைய வடஅமெரிக்கப் பண்பாடுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் ப்யூப்லோப் பண்பாடு எத்திசையில் இயங்கி யிருக்கிறது என நாம் காணலாம். அதேமாதிரி விவரங்களைக் கொண்டிருந்தாலும் எப்படி அவைகளை வேறுவிதமாகப் பயன் படுத்துகின்றனர் எனக் காணலாம். இதேபோல் கிழக்கு மெடிட் டரேனியன் பண்பாடுகளின் மத்தியிலே இருக்கிற கிரேக்க நாகரி கத்தில் அப்போலோனியன்முறையானது எவ்வாறு வலியுறுத்தப் பெறுகிறது என அறியலாம். பண்பாட்டு இணைப்பைப்பற்றிப் புரிந்துகொள்ள, கலந்தூடு பரவுதல் (diffusion) விவரங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இணைப்பு முறைகளைப்பற்றிய அறிவானது குணப்பாங்குகள் விரிந்து பரவியிருக்கும் இயல்பைப்பற்றி முற்றிலும் வேறுவிதமான ஒரு நிலையைத் தெளிவாக்குகிறது. வழக்கமாக நாம் அறிந்து கொள்ளும் திருமணம், துவக்கச் சடங்குகள், மதம் ஆகியவை ஒவ்வொரு குணப்பாங்கும் ஒரு குறிப்பிட்ட நடத்தையைக் கொண்டது என்பதைக் காட்டுகின்றன. ஆணையோ பெண்ணையோ தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பமாகத் திருமணத்தை வெஸ்ட்டர்மார்க் (Westermarck) என்பவர் குறிப்பிடுகிருர். பருவமடையும்போது ஏற்படுகிற மனவெழுச்சிகளின் விளைவாகவே துவக்கச் சடங்குகளின் முறைகள் அமைந்திருக்கின்றன என்று வழக்கமாக விளக்கப்படுகிறது. ஆகையால், அவர்களுடைய ஆயிரக்கணக்கான மாறுபாடுகள் ஒரே வரிசையிலேயே உள்ளன. பொதுவான நிலையிலே ஏற்படுகிற ஒரு தூண்டுதலையோ அவசியத்தையோபற்றி எழுகின்ற மாறுதல்களை மட்டுமே குறிக்கின்றன.

ஒருசில பண்பாடுகள்மட்டுமே பெரிய சந்தர்ப்பங்களை மிக எளிய முறையில் கையாளுகின்றன. திருமணமோ, சாவோ, இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைத் தொழுவதோ எதுவாயிருப்பினும் இச்சந்தர்ப்பங்களைத் தன் குறிக்கோளை வெளியிடுவதற்குச் சமூகம் பயன்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே இக் குறிக்கோள் ஓங்கியில்லாவிட்டாலும், அப்பண்பாட்டின் பொதுக் குணங்களாலே வலியுறுத்தப்பெறுகிறது. புணர்ச்சிக்கான விருப்பு வெறுப்புகளைத் திருமணம் பொருட்படுத்தாததாக இருக்கலாம். செல்வம் சேர்த்து வைத்துக்கொள்வது போல மனைவிகளை அதிகமாகச் சேர்த்து வைத்துக்கொள்வது எனக் கொள்ளப்படலாம். பொருளாதாரப் பழக்கங்களும் உணவு, உடைபோன்ற அவசியத் தேவைகளுக்காகமட்டும் ஏற்படாமல் இருக்கலாம். விவாசாய முறைகள் அனைத்துமே கௌரவத்திற்காகவும், கண்காட்சியாக வைப்பதற்காகவும், தேவைக்கு அதிகமான ஏராளமான அளவில் உணவுப்பண்டங்களைத் தயார் செய்து தருவதற்காகவும் ஊக்கப்படலாம்.

மிகவும் சிறிய பண்பாட்டுத் துலங்கல்களின் (responses) இயல்பை அச் சந்தர்ப்பங்களினின்றும் அறிவது மிகக் கடினம். நாம் தேர்ந்தெடுத்த மூன்று பண்பாடுகளிலும் இது தெரிகிறது. சந்தர்ப்பங்களைப்பொறுத்துத் துக்கங்கொண்டாடுதல் ஒரு இழப்பு நிலையைக் குறித்து வருத்தப்படுவது அல்லது அதனின்றும் விடுபடும் ஒரு உணர்ச்சியாக இருக்கிறது. இந்த மூன்று பண்பாடுகளில் ஒன்றுகூட அவைகளின் துக்கங்கொண்டாடும் நிறு

வனங்களில் இதுபோன்ற துலங்கலை ஏற்படுத்திக்கொள்ள வில்லை. ஒரு உறவினனுடைய சாவினுல் ஏற்படுகிற துன்பத்தை அகற்றச் சமூகம் தன் சக்திகளை ஒன்றுசேர்த்து இயங்குவதை, நாம் முன்னே சொன்ன நிலைக்கு மிக அண்மையில் இருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுடைய நிறுவனங்களிலே வருந்துவது என்ற முறையில்லாவிட்டாலும், இழப்பு நிலையை அவசர நிலைமை யாகக்கொண்டு வருந்துவதைக் குறைத்துக்கொள்ள எண்ணு கின்றனர். உண்மையான வருத்தம் இருக்கிறதோ இல்லையோ, க்வாக்யூட்ல் மக்களின் துக்கங்கொண்டாடும் நிறுவனங்கள் பண் பாட்டில் ஒரு குறிப்பிட்ட நிலைபெற்ற கற்பனைகளைக் கொண்ட தாக இருக்கின்றன. உறவினர்கள் இறந்துவிட்டால், அவ மானப்படுத்தப் பெற்றதாகக்கொண்டு அதற்குச் சரிசெய்ய எழுச்சி பெறுகின்றனர். தோபுமக்களிடையே துக்கங்கொண்டா டும் நிறுவனங்கள் பொதுவாகக் கொள்ளப்பட்டாலும் உறவினர் களால் அவர்களில் ஒருவரது மரணத்திற்குக் காரணமான கணவனுக்கோ மனைவிக்கோ அளிக்கப்படும் தண்டனையாக உள்ளன. தோபு மக்கள் நம்பிக்கைத் துரோகம் என்று கருது கிற எண்ணிலடங்காச் சந்தர்ப்பங்களில் ஒன்ருக இந்தத் துக்கங் கொண்டாடும் நிறுவனங்கள் இருக்கின்றன. அது தண்டிக்கக் கூடிய ஒரு அப்பாவியைத் தேர்ந்தெடுத்து அந்தச் சூழ்நிலையைக் கையாளுகிறது.

இன வழியே தொடர்பில்லாத பல காரியங்களை ஒருவழிப் படுத்தச் சூழ்நிலையோ, வாழ்க்கை அனுபவங்களோ அளிக்கும் எச்சந்தர்ப்பத்தையும் மரபு பயன்படுத்திக்கொள்வது மிக எளிது. ஒரு குழந்தை தாளம்மை (mumps) யினுல் இறந்துவிட்டால், அச் சாவிற்கு எந்த விதத்திலும் சம்பந்தப்படாத ஒருவனைப் பழிக்குப் பழியாகக் கொல்லுதல் என்பது போன்ற சிறு நிகழ்ச்சிகளின் குணுதிசயங்கள் மிக முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம். இதுபோன்று ஒரு சிறுமியின் முதல் மாதவிடாய் சமயத்தில் அக் குடிமக்களின் சொத்து முழுவதும் திரும்பிப் பகிர்ந்தளிக்கப் படலாம். துக்கங்கொண்டாடுதல், திருமணம், பருவ மடையும் போது உள்ள சடங்குகள், பொருளாதாரம் ஆகியவை மனிதர் களுடைய முற்கால சரித்திரத்தை ஏற்படுத்திய அல்லது வருங் கால சரித்திரத்தைத் தீர்மானிக்கிற இனவழி நோக்கங்களா கவோ, ஈடுபாடுகளாகவோ இல்லை. இச் சந்தர்ப்பங்களை எச் சமூகமும் தனது முக்கியப் பண்பாட்டு எண்ணங்களை, வெளிப் படுத்தப் பயன்படுத்துகிறது.

இப்படிப் பார்க்கும்பொழுது பண்பாட்டு உருவகம்தான் ஒரு குறிப்பிடத்தக்க சமூகத் தொகுதியாக உளதேயன்றி

நிறுவனங்களல்ல. குணப்பாங்குகள்மீது ஆதிக்கம் செலுத்துகிற பண்பாட்டு உருவகங்களை வலியுறுத்தும் குடும்பம் பொருளாதாரம், நன்னெறி எண்ணங்கள் ஆகியவற்றைத் தனித் தனியே பிரித்து அவைகளை அறிந்துகொள்ளவேண்டும். க்வாக்யூட்ல் மக்களின் வாழ்க்கையை அவர்களது திருமணத்தின் போது உள்ள நடத்தையிலிருந்தோ அல்லது அவர்களின் குடும்பத்தைத் தனியாக அறிவதன்மூலமோ தெரிந்துகொள்ளமுடியாது. அது போன்றே, நமது நாகரிகத்தில் வெறுப் புணர்ச்சியும் குடும்பப் பண்பும் சிறிது மாறுபட்ட ஒரு சந்தர்ப்பமாகத் திருமணத்தை விளக்கிச் சொல்லமுடியாது. நமது நாகரிகத்திலே மனிதனின் முக்கிய நோக்கம் தனக்காக மேன்மேலும் அதிக உடைமைகள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதும், பிறர் புகழும் காட்சிப் பொருள்களாக அவைகளை அமைக்கப் பல சந்தர்ப்பங்களைக் கொள்ளவேண்டும் என்பதும் ஆகும். இவைகளைப் புரிந்து கொள்ளாமல் மனைவியின் நிலையையும் தற்காலப் பொருமையுணர்ச்சிகளையும் புரியும்படியாக விளக்கமுடியாது. இதே பண்பாட்டுக் குறிக்கோளின் சான்றாகவே நாம் குழந்தைகளிடம் கொண்ட ஈடுபாடும் அமைகிறது. நமது குழந்தைகள், சில பழங்குடிகளில் அவர்களின் விருப்பு வெறுப்புகளைக் கவனியாது வளர்க்கப்படுவதுபோன்று வளர்க்கப்படுவதில்லை. நமது உடைமைகளுக்கு நாம் அடிமையாவதோ அல்லது அவைகளால் நாம் பெருமைகொள்வதுபோன்றே குழந்தைகளின்மீது நமக்குத் தனிப் பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. அப்பொறுப்புகள், தான் என்ற எண்ணத்தின் இயல்பாகவும், அதிகாரத்தைக் காட்டக் கூடிய வாய்ப்புகளாகவுமே இருக்கின்றன. நாம் எளிதாக எண்ணுகிற பெற்றோர் - குழந்தை முறையிலே ஒரு முறை இல்லை. பண்பாட்டின் முக்கிய நோக்கங்களால் அச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்பெறுகிறது. நமது மரபின் மாறுத எண்ணங்களை நாம் கடைப்பிடிக்கும் பல சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

நாம் பண்பாட்டுணர்வு அதிகமாகப் பெறும்பொழுது ஒரு சந்தர்ப்பத்தில் இனவழியில் உள்ள உட்கூறும், அதைச் சுற்றியுள்ள புறச்சேர்க்கைகளும் தெளிவாகத் தெரிகின்றன. புறச்சேர்க்கைகள் அந்த இடத்திலேயே உள்ளனவாக இருக்கலாம்; மற்றும் பண்பாடுகள் மனிதன் தானே கற்பித்துக்கொண்டவை ஆகியனவாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட புறச்சேர்க்கைகள் தவிர்க்கமுடியாத விளைவுகள் அல்ல என்பது உண்மையேயானாலும், நமது நடத்தையில் அவை மாறுவது அல்லது முக்கியத்துவம் பெருமலிருப்பது எளிதாக இல்லை. உண்மையில் அவைகளை மாற்றுவது நாம் எண்ணுவதைவிட மிகக் கடினமாக

உள்ளது. ஒரு நரம்புத்தளர்ச்சியுள்ள குழந்தையை வளர்ப்பதற்கு அதன் தாய் தன் நடத்தையில் பல மாறுதல்களைச் செய்து கொள்கிறாள் என வைத்துக்கொள்வோம். அக்குழந்தையின் வளர்ச்சி பள்ளிக்கூடம், வியாபாரம், மனைவி, ஆகியவைகளைத் தாண்டிவிட்டபோதிலும், அவன் கொள்கிற ஒவ்வொரு தொடர்பும் அவனை ஒரு வெறுக்கத் தகுந்த சிக்கலான நிலையில் கொண்டு விடுகிறபொழுது, குழந்தைப் பருவத்தில் அவன் தாயார் மாற்றிக்கொண்ட நடத்தை அவனைக் காப்பாற்றமுடிவதில்லை. அவன் தன் ஆயுள் முழுதும் வாழ்க்கையில் போட்டி உடைமை கொள்ளுதல் ஆகியவைகளையே பார்க்கிறான். ஒரு அதிர்ஷ்டத்தின்மூலம் அல்லது பற்றில்லா நிலையின்மூலம் அவன் விடுதலைபெறக்கூடும். எப்படியிருப்பினும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெற்றோர் - குழந்தைத் தொடர்பிலிருக்கும் கஷ்டங்களைக்காட்டிலும், மேற்கத்திய நாகரிகத்தில் ‘தான்’ என்ற உணர்ச்சி ஈடுபடுத்தப்பட்டிருப்பதும், சொந்த உறவு முறைகளைக் கையாளுவதும் வலியுறுத்தப் பெற்றுள்ளன.

பண்பாடுகளின் வெவ்வேறு வகை அமைப்புகளுக்குச் சமூக மதிப்புகளின் பிரச்சினை உட்பட்டிருக்கிறது. சமூக மதிப்புகளைப் பற்றிப் பேசுபவர்கள் மனிதனின் சில குணப்பாங்குகளை விரும்பத் தக்கன என்றும், சிறப்பியல்புகளையுடைய குறிக்கோள்களைச் சுட்டிக் காட்டுபவை என்றும் பாகுபடுத்திச் சொல்கின்றனர். நிச்சயமாகப் பிறரைச் சுரண்டுவதும், ‘தான்’ என்ற உணர்ச்சி அதிகமாகக் கொண்டிருத்தலும் கெட்டவை என்றும், பொதுக் குழுவிலே ஈடுபட்டு இயங்குவது நல்ல பண்பு என்றும் சொல்லப் படுகிறது. கொடுமை அவாவும் சிற்றின்ப உணர்ச்சி (masochism), விலங்குக்காமம் அல்லது அவலச் சின்றின்ப உணர்ச்சி (sadism) ஆகியவைகளில் திருப்தி அடையக்கூடிய மனோநிலை நல்ல ஒரு பண்பாக சொல்லப் பெறவில்லை. எனினும், ஸூனி மக்களைப்போல் இந்த ‘நல்லதை’ நிலைப்படுத்தும் ஒரு சமூகமுறை கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல. அதன் குணங்களின் குறைகளையும் அது வெளிப்படுத்துகிறது. நாம் மதிப்புக்கொடுக்கிற மனவுறுதி, கஷ்டங்களை எதிர்த்துப் போர்க்கோலம் கொள்ளல், தன்பால் இயங்குதல் ஆகியவைகளுக்கு அதிக இடமேயில்லை. அதன் நிதானத்தை யாரும் மாற்றமுடியாது. மனித வாழ்க்கையில் பிறப்பு, காதல், சாவு, வெற்றி, தோல்வி, கௌரவம் ஆகியவைகளைப் பொருட்படுத்தாத வகையில் ஸூனி மக்களின் கூட்டுச் செய்கைகள் இருக்கின்றன. தனி மனிதன் அக்கறைகாட்ட வேண்டியவைகளைக் குறைத்து, அவர்கள் ஒரு சடங்கு முறை விழா மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்கின்றனர்.

பிறரைத் துன்புறுத்தாமலிருப்பதும் சமூகத்திலே சுரண்டல்கள் இல்லாமலிருப்பதும் ஒரு புறமிருக்க, மனித வாழ்க்கையின் இலட்சியங்களுக்கொவ்வாத சடங்குமுறைகள் மற்ருெருபுறமிருக்கின்றன. ஒவ்வொரு மேல்புறத்திற்கும் ஒரு கீழ்ப்புறமும், வலப் பக்கத்திற்கு ஒரு இடப்பக்கமும் உள்ளதுபோல் இது தவிர்க்க முடியாத ஒரு விவரமாகும்.

க்வாக்யூட்ஸ் மக்களின் பண்பாட்டில் சமூக மதிப்பிற்கான பிரச்சினையின் சிக்கல் நன்ருகத் தெரிகிறது. க்வாக்யூட்ல் மக்கள் நிறுவனங்களில் ஒரு முக்கிய நோக்கம் தற்கால சமூகத்தில் இருப்பதுபோன்ற ஒரு போட்டிமனப்பான்மையாகும். விஞ்சுகின்ற மனப்பாங்கானது ஆக்கவேலைகளில் அதிகக் கவனம் செலுத்தாது தன்னுடன் போட்டியிடுபவரை மிஞ்சவேண்டும் என்று விழைகிறது. குடும்பத்திற்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பதற்கோ அல்லது பயன்பெற்று அனுபவிக்கக்கூடிய பொருள்களை உடைமைகொள்ளவோ ஊக்கம் கொள்ளாமல், தன்னுடைய அண்டை அயலாரைவிட அதிகமாக உடைமைகள் பெற்றிருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அது இயங்குகிறது. வெற்றி கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மற்ற எதையும் அது மறந்துவிடுகிறது. கூடை முடைதல், காலணிகள் விற்றல் போன்ற செயல்களில் சாதாரணப் போட்டிகளில் கவனம் வைக்கப்படுவதுபோலன்றி, மற்றவரைக் காட்டிலும் அதிகமாக வெற்றிகொண்டு வெளிக்காட்டிக்கொள்வது என்று ஒரு சாதாரணமான நிலையை ஏற்படுத்துகிறது.

விஞ்சுகின்ற இந்த மனப்பாங்கு அதிக விரயத்தையே விளைவிக்கிறது. மனித சமூக மதிப்புகளில் அது தாழ்ந்தே காண்கிறது. எந்தப் பண்பாட்டிலாவது அதற்கு ஊக்கமளிக்கப்பட்டால், பிறகு அது கொடுமையான ஒன்ருகி அதனின்று மனிதன் விடுபட முடியாமல்போய்விடுகிறது. மேம்பட்டிருக்கவேண்டும் என்ற ஆசை மிகப் பெரிது. அதை எப்பொழுதும் திருப்திப்படுத்த முடியாது. இந்தப் போட்டி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. ஒரு சமுதாயம் உடைமைகளைச் சேர்க்கச் சேர்க்க மனிதர்கள் விளையாடும் எண்ணிக்கை அடையாளங்களும் வளர்ந்துகொண்டேபோகின்றன. பந்தயப் பொருள்கள் சிறியனவாக இருந்தபொழுது அவ்விளையாட்டு எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறது. க்வாக்யூட்ல் மக்களில் இந்த விஞ்சுகின்ற மனப்பான்மை உடைமைகளை ஒருமிக்க அழித்துவிடுகிற அளவுக்கு வளர்ந்து நகைப்புக்கிடமான ஒன்ருக ஆகிவிட்டது. உடைமைகளை அதிகமாகப் பெற

விரும்புகிறவர்கள், அவர்களறியாமலே இதற்கு நேர் எதிரிடையாக, அவர்களுடைய மதிப்புயர்ந்த செப்புகளை வெட்டுவதையும் வீட்டுப் பலகைகள், கம்பளங்கள், படகுகள் இவைகளை நெருப்பிவிடுவதையும் காண்கிறோம். இப்படி விரயம் செய்யப்படுவது நன்ருகத் தெரிகிறது. மிடில் டௌன் (Middletown) நகரில் வீடுகள் கட்டித் துணிமணிகள் வாங்கிக் கேளிக்கைகளுக்குச் செல்வதும், ஒவ்வொரு குடும்பமும் தாங்கள் இந்த மாதிரியான விளையாட்டில் இடம் பெற்றுள்ளோம் என்பதைக் காண்பிக்கவே ஆகும். க்வாக்யூட்ல் மக்களின் பாட்லேட்ச் போன்று இதுவும் ஒரு விஞ்சுகிற போட்டியேயாகும்.

இது மிகவும் விரும்பத்தகாத ஒரு நிலை. க்வாக்யூட்ல் மக்களில் இதுபோன்று போட்டிகள் தனி மனிதனின் விருப்புகளையும் மன நிறைவுகளையும் மிகவும் குறைத்துக்கொண்டு, மனித சமுதாயத்தின் மனமகிழ்வுக்கப்பாற்பட்ட ஒரு நிலையிலே இருத்தலை நாடுகின்றன. இரண்டு இடங்களிலும் மனிதனின் தேவைகளைப் பூர்த்திசெய்யச் செல்வம் தேடப்பெறவில்லை. ஒருவரையொருவர் விஞ்சுவதற்கு உபயோகப்படும் எண்ணிக்கைப் பொருள் ஆகவே செல்வம் விளங்குகிறது. ஸூனி மக்களைப்போன்று பொருளாதார வாழ்க்கையிலே வெற்றிபெறும் எண்ணம் இல்லாவிட்டால் செல்வமானது முற்றிலும் வேருன முறைகளிலே பகிர்ந்துகொள்ளப்பட்டு பயன்பெறும்.

எனினும், நாம் க்வாக்யூட்ல் சமூகத்திலும், அமெரிக்காவில் முதலில் குடியேறியவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் காண்கின்ற இவ் வெற்றியை நாடும் மனப்பாங்கு மனித வாழ்வுக்கு ஓர் ஊக்கத்தையும் வளத்தையும் அளிக்கிறது. அது தேர்ந்தெடுத்திருக்கிற குறிக்கோள் அதற்கான சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கிறது. க்வாக்யூட்ல் நாகரிகத்தில் சமூக மதிப்புகள் ஸூனி மக்களிடையே இருப்பதைவிட அதிகமாகக் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு சமூகமும் தேர்ந்தெடுத்திருக்கிற குறிக்கோள்களில் அவற்றின் இயற்கையான சிறப்பியல்புகள் தோன்றும். நாம் மனித வாழ்க்கையில் மதிக்கிற எல்லாச் சிறப்பியல்புகளையும் ஒரே சமூக அமைப்பில் வலியுறுத்த எந்தச் சமுதாயத்தாலும் முடியாது. மனித வாழ்வு குறைவற்று மலர்ச்சியுறும் விதமாக ஒரு கற்பனை உலகத்தை இறுதியாகவும், மாசற்ற தன்மையுடையதாகவும் அடைய முடியாது. இப்படிப்பட்ட கற்பனை உலகங்கள் வெறும் பகற்கனவின் விளைவாகத்தான் இருக்கமுடியும். சமூக அமைப்பிலே உண்மையான சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டுமானுல் மிகவும் கடினமான பாகுபாடுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். பல்வேறு நிறுவனங்களை ஆராய்ந்து அவை

களைச் சமூகத்தின் முதல் (capital) என்பதைக் கொண்டு மதிப்பிட முடியும். ஒத்திருக்கிற, விரும்பத்தகாத நடத்தைப் பாங்குகள், மனித சமுதாயத்தின் துன்பங்கள், மனமுடைந்து போதல் ஆகியவற்றைச் சமூகத்தின் முதல் எனலாம். எந்தச் சமூகமும் தான் தேர்ந்தெடுத்திருக்கிற தனக்கேற்ற குணப்பாங்குகளுக்கான அந்த விலையைக்கொடுக்க முன்வந்தால் சில சிறப்பியல்புகள் பண்பாட்டுவகையில் தோன்றும். அவை 'கெட்டதாகவும்' இருக்கலாம். ஆனால், அதில் உள்ள இன்னல்கள் மிக அதிகம். அச் சமூகமுறை அந்த விலையைக் கொடுக்க இயலாமற் போய்விடலாம். அதன் சுமை தாங்காது சமூகம் புரட்சியாலும் பொருளாதார உணர்ச்சிவசமான பெருங் கேடுகளாலும், அவற்றைச் சார்ந்து வருகிற விஷயங்களாலும் முறிந்தே போகலாம். தற்கால சமுதாயத்திலே இந்தத் தலைமுறை எதிர்பார்க்கவேண்டிய ஒரு பெரும் பிரச்சினை இதுவேயாகும். இதைப் பற்றியே எண்ணுகிறவர்கள் பொருளாதார முறைகளை மாற்றியமைத்தால் இந்த உலகம் அவர்களுடைய பகற்கனவான கற்பனை உலகமாக மாறிவிடும் என எண்ணுகின்றனர். எந்தச் சமூக அமைப்பும் அவற்றின் சிறப்பியல்புகளிலிருந்து அவற்றின் குறைகளைப் பிரிக்க முடியாது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். உண்மையான கற்பனையுலகத்திற்குச் செல்ல எந்த நேர்வழியும் கிடையாது.

பண்பாட்டுணர்வை அதிகமாகப் பெறும்போது ஒரு கடினமான பயிற்சிக்கு நாம் தயாராக இருக்கவேண்டும். நமது நாகரிகத்திலே ஆதிக்கம்பெற்றிருக்கும் சில குணப்பாங்குகள்மீது நாம் தீர்ப்புக்கூறப் பழகிக்கொள்ளவேண்டும். அவைகளின் ஆதிக்கத்திலே வளர்ந்த எவருக்கும் அவைகளை அறிந்துகொள்வது கடினமாய் இருக்கும். அவைகளின்மேல் நமக்கு ஏற்பட்டிருக்கும் ஒருதலைப்பட்ட எண்ணங்களைக் குறைத்துக்கொள்வது இன்னும் மிகக் கடினம். அவை, மிகவும் விரும்பப்பட்ட பழைய வீடுபோன்று நமக்கு மிகவும் விருப்பமானவை. அவைகள் இல்லாத எந்த உலகமும் நமக்கு வாழத்தகாததாகவும், உற்சாகமில்லாததாகவும் காணப்பெறுகிறது. ஆனாலும், இதே குணப்பாங்குகள்தாம் ஒரு அடிப்படைப் பண்பாட்டுமுறையில் மிகவும் அதீத நிலைகளுக்கு எடுத்துச்செல்லப்பெறுகின்றன. அவைகள் 'மற்றக் குணப்பாங்குகளைக் காட்டிலும் மிதமிஞ்சிக் கட்டுமீறிவிடுகின்றன. எங்கு மிகவும் கண்டனம் தேவையோ அங்கு நாம் கண்டிப்பதில்லை. இதற்கு ஒரு திருப்பம் ஏற்படலாம். அதாவது, சமூகம் முறிந்துபோவதால் அல்லது புரட்சியின் மூலம் ஏற்படலாம். ஒரு முறையான முன்னேற்றத்திற்கான வழி அடைபட்டுப்

போகிறது. ஏனென்ருல், அந்தத் தலைமுறையானது தன்னுடைய மிதமிஞ்சிய நிறுவனங்களைச் சரியாக அறிந்துகொள்ளமுடிய வில்லை. தனித்து நின்று நோக்கும் திறனை அது இழந்து, அவை களை நஷ்டம் அல்லது இலாபம் என்ற முறையிலே மதிப்பிடமுடி யாமல் அவதியுறுகிறது. இந்த நிலை ஒரு வழி ஏற்படுத்துவதற்கு முன்னமே முறிந்துவிடும் கட்டத்தை எட்டிவிடுகிறது.

நம்மிடையே ஆதிக்கம்பெற்ற குணப்பாங்குகளை அவைகள் மறையும் வரையில் சரியாக மதிப்பிடப்பெறுவதில்லை. மதமானது நமது நாகரிகத்திலே பண்பாட்டுக் குணப்பாங்காக அமைந்திருந்த வரையில் அதைத் தனித்திருந்து ஆராய எவரும் முற்படவில்லை. இப்பொழுது பல மதங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து எந்த விவரத்தை யும்பற்றி விவாதிக்கலாம். இதேபோன்று இதுவரை முதலாளித் துவத்தைப்பற்றி ஆராய முடியவில்லை. போர்க்காலத்தில் போர் முறைகளும் பிறநாட்டுத் தொடர்புகளும் விலக்கப்படவேண் டியவை ஆகின்றன. ஆனுலும், நமது நாகரிகத்தில் உள்ள ஆதிக் கம்பெற்ற குணப்பாங்குகள் மிகவும் முக்கியமாக ஆராயப்பட வேண்டியவை. அவை மிகவும் வலியுறுத்தக்கூடியன என்பதை நாம் அறியவேண்டும். அவைகள் மனிதனின் நடத்தைக்கு அவசியமாகவும் அடிப்படையானதாகவும் இருப்பதால் மட்டு மன்றி, அவைகள் அங்கங்கே எவ்வளவு மிதமிஞ்சி வளர்ந்திருக் கின்றன என்பதையொட்டியும் அவைகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டும். மனித இயல்பின் அடிப்படையாகத் தோபுக் குடிமகன் கருதுகிற வாழ்க்கையின் ஒரு வழி நம்பிக்கைத் துரோக மும், கலக்கமான அச்சமும், அதற்கான காப்புகளும் கொண்ட ஒரு வழியாகும். க்வாக்யூட்ல் குடிமகனும் அதுபோன்றே வாழ்க் கையை, ஒருவரையொருவர் தோற்கடித்து அவமானப்படுத்தி வெற்றி காண்கிற போட்டிகளுக்கான சந்தர்ப்பங்களின் வரிசை யாகக் காண்கிருன். அவர்களது நாகரிகங்களில் உள்ள இம் மாதிரி வாழ்க்கை முறைகளின் முக்கியத்துவத்தின்மீது அவர்கள் நம்பிக்கை வைக்கிருர்கள். ஆனுல், ஒரு பண்பாட்டில் உள்ள ஒரு நிறுவனத்தின் முக்கியத்துவம் அது பயனுள்ளதா அல்லது தவிர்க்க முடியாத ஒன்ரு என்பதை நேராகச் சுட்டிக்காட்ட வில்லை. இந்த விவாதமானது சந்தேகத்திற்கிடமானது. நமது மேற்கத்திய நாகரிகத்தில் ஆதரவு காட்டப்பெற்று ஆசையோடு வளர்க்கப்பெற்ற குணப் பாங்குகளை நாம் எவ்வளவு தூரம் தனித் திருந்து மதிப்பிடமுடியும் என்பதைப் பொறுத்தே நாம் நமது பண்பாட்டைக் கட்டுப்படுத்தலாம்.

8. தனி மனிதனும் பண்பாட்டுக் கோலமும்

நாம் விவாதித்துள்ள கூட்டு நடத்தை என்ன இருந்தாலும் தனி மனிதர்களின் நடத்தையாகவேதான் இருக்கிறது. தனியொருவன் தன் வாழ்க்கையை அதனின்று மேற்கொள்ளுகிருன். ஒவ்வொருவனையும் தனித்தனியே அது நமக்குக் காட்டுகிறது. ஒருசில பக்கங்களிலே சுருக்கித்தரப்பட்டிருக்கும் எந்த நாகரிகத்தைப்பற்றிய விவரங்களும் அவர்களுடைய கூட்டங்களின் நிலைகளைத்தாம் தெளிவுறுத்துகின்றன. அந்தப் பண்பாட்டின் நோக்கங்களை எடுத்துக்காட்டுகிற தனி மனிதர்களின் நடத்தைகளைத்தாம் விவரிக்கின்றன. ஒரு தனி மனிதன் அதிக சக்தி வாய்ந்த ஒரு கடலில் அழுந்திவிட்டமாதிரி தோன்றுகிற இந்நிலை தவருன முடிவுகளைக் காண்பிக்கக் கூடியதாகும்.

ஒரு சமூகத்தின் நடத்தைக்கும், தனியொருவன் நடத்தைக்கும் முரண்பாடு கிடையாது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே ஏற்பட்ட இருவிதமாக எண்ணும் (dualism) மனப்பாங்கினுலே சில தவருன எண்ணங்கள் ஏற்பட்டன. அதாவது சமூகத்தினின்று கழிக்கப்பட்டவை தனி மனிதனுக்கும், தனி மனிதனின்று கழிக்கப்பட்டவை சமூகத்திற்கும் சேர்க்கப்பட்டன. சுதந்திரத்திற்கான சித்தாந்தங்கள், தலையிடாமையின் (laissez - faire) அரசியல் தத்துவங்கள். பலஅரசவமிசங்களைப் பதவியைவிட்டு அகற்றிய புரட்சிகள் ஆகியவை இந்த இருவிதமனப்பாங்கினுல் ஏற்பட்டவையே. மானிடவியல் சித்தாந்தங்களில் தனி மனிதனுக்கும் பண்பாட்டு - வகைக்குமுள்ள முக்கியத்துவத்தைப் பற்றிய சண்டைகள் சமூகத்தின் இயல்பைப் பற்றி இந்த அடிப்படை அறிவிலே ஏற்படும் சிறிய அலைபோன்றதாகும்.

உண்மைச் சமூகமும் தனி மனிதனும் எதிரிடையானவர்களல்ல. ஒருவனுடைய பண்பாடு அளிக்கின்ற மூலப்பொருள்களைக்

கொண்டே அவன் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள் கிறான். அவைகள் போதுமான அளவுக்கு இல்லையென்றால் தனிமனிதன் துன்புறுகிறான். அவை வளமாக இருந்துவிட்டால், அவனுடைய சந்தர்ப்பங்களுக்கேற்ப அவன் உயர்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. நாகரிகத்திலே உள்ள மரபுக் கோள்கள் வளமாக அமைந்திருப்பதால் ஆண், பெண் இரு பாலாருக்கும் அவரவர்களுடைய தேவைகள் கவனிக்கப்படு கின்றன. ஒரு வளமான சங்கீதஞானம் மரபு நிலைகளையும் சாதனங்களையும் பொறுத்தே இயங்கமுடியும். மரபையே அது இன்னும் அதிகச் செறிவுள்ளதாகச் செய்யுமாயினும், அந்தப் பண்பாடு அளிக்கிற சாதனங்களையும் சங்கீத முறையையும் ஒட்டியே அது இயங்கமுடியும். இதேபோன்று சில மெலனீஷி யன் குடிமக்களில், நன்கு கவனிக்கும் பாங்கானது மதசம்பந்த மான மாயாஜாலத்துறையிலும் வளம்பெற்று விளங்குகிறது. விஞ்ஞான ரீதியில் உள்ள செய்முறைகளின் வளர்ச்சியைப் பொறுத்தே அது இருக்கிறது. ஒரு பண்பாடு அதற்கேற்ற கருவி களையும் எண்ணங்களையும் உருவாக்கி அளிக்காதிருந்தால், அது பயனற்றுப்போய்விடுகிறது.

ஒரு தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் எதிர்ப்பு அவசியம் என்றே சாதாரண மனிதன் நினைக்கிறான். ஏனென்றால், பெரும் பாலும் நமது நாரிகத்தில் சமூகத்தின் கட்டுப்படுத்தும் செயல்கள் நன்றாகத் தெரிகின்றன. நாம் சமூகத்தைச் சட்டங்கள் வகுக்கும் கட்டுப்பாடுகளாகவே நினைக்கிறோம். ஒரு மணிக்கு இவ்வளவு மைல்தான் நான் என் காரை ஓட்டிச்செல்லவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. இந்தக் கட்டுப்பாடு எடுபட்டுவிட்டால், அந்த அளவுக்கு நான் சுதந்திரம் அடைகிறேன். அரசியல் கொள்கை களுக்கும் தத்துவ ஞானத்திற்கும் அடிப்படையாக, இந்தச் சமூ கத்திற்கும் தனி மனிதனுக்கும் உள்ள முரண்பாடு ஈடுபடுத்தப்பட் டால் அது விநோதமாக அமைகிறது. சமூகம் சில சந்தர்ப்பங் களில்தான் கட்டுப்படுத்தும் ஒன்றாக இருக்கிறது, சமூக அமைப்பே சட்டமல்ல. சில எளிய இணைந்த பண்பாடுகளில் மக்களின் கூட்டுப் பழக்க வழக்கங்கள் ஒரு சட்ட பூர்வமான அதிகாரம் ஏற்படத் தேவையே இல்லாமற் செய்துவிடுகின்றன. அமெரிக்க இந்தியர்கள் 'அந்தப் பழைய காலத்தில் வேட்டை யாடும் இடங்களைப்பற்றியோ, மீன்பிடிக்கும் இடங்களைப்பற்றியோ சண்டைபோடவில்லை. அப்பொழுது சட்டமும் இல்லை. ஆதலால், ஒவ்வொருவரும் எது சரியோ அதையே செய்தனர்' என்று சில சமயம் சொல்கின்றனர். இந்தச் சொற்றொடரிலிருந்து பழைய காலத்தில் வெளியிலிருந்து திணிக்கப்படுகிற எந்த ஒரு சமூகக்

கட்டுப்பாடுகளுக்கும் தங்களை அவர்கள் உட்படுத்திக்கொள்ள வில்லையெனத் தெரிகிறது. நமது நாகரிகத்திலேகூட சமூகத்தின் ஒரு ஆயுதமாகவே சட்டம் இருக்கிறது. தன் போக்கில் மிதமிஞ்சி விடாமல் காக்க அடிக்கடி அதைக் கட்டுப்படுத்த வேண்டியும் உள்ளது. அது எப்பொழுதும் சமூக அமைப்புக்குப் பதிலாக இயங்க முடியாது.

சமூகத்தை, அதனை உண்டாக்குகிற தனிமனிதர்களுக்கு அப்பாற்பட்டதாக நாம் காணவில்லை. தான் பங்குகொள்கிற பண்பாட்டின் உதவியில்லாமல் எந்தத் தனிமனிதனும் அவனது முழுத் திறனையும் வெளிக்கொணரமுடிவதில்லை. அதேபோல் எந்த ஒரு நாகரிகமும் அதனுடைய தனிமனிதர்களின் நடத்தைகளால் ஏற்பட்ட விவரங்களைக்கொண்டே இயங்குகிறது. ஒரு ஆணோ பெண்ணோ அல்லது குழந்தையோ கொள்ளாத நடத்தையினின்று குணப்பாங்குகள் எப்படி உருவாகமுடியும்?

சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் உள்ள முரண்பாட்டைப் பெரும்பாலும் மரபுவழியே ஒப்புக்கொள்வதால்தான், ஒரு பண்பாட்டின் நடத்தையைப்பற்றிப் பேசும்பொழுது தனிமனிதனின் தனித்தியங்கும் இயல்பு மறுக்கப்பட்டதாகச் சொல்லப்பெறுகிறது. ஸம்னர் (Sumner) எழுதிய ஃபோக்வேஸ் (Folkways) என்ற நூலில் ஒரு தனிமனிதனின் ஊக்கத்திற்கும் வாய்ப்புகளுக்கும் ஏற்படுகிற கட்டுப்பாடுகளைப்பற்றிப் படிக்கும்பொழுது ஒரு மறுப்பு தானே எழுகிறது. மானிடவியல் மனிதனின் நன்மைபயக்கும் தோற்றங்களை நம்பாத ஒன்றென்று எண்ணப்பெறுகிறது. ஆனால், மற்றப் பல பண்பாடுகளோடு இணைந்து அநுபவம் பெற்றுள்ள எந்த மானிட வியலாரும், தத்தம் நாகரிகத்தின் கோட்பாடுகளை நடத்திக்கொண்டிருக்கும் இயந்திரங்களாகத் தனிமனிதர்களை எண்ணுவதில்லை. எந்தப் பண்பாட்டிலும், அதனை ஏற்படுத்தும் மனிதர்களிடையே உள்ள குணவேறுபாடுகளை அறவே ஒழித்ததாக நாம் காணவில்லை. விட்டுக்கொடுக்கும் தன்மையிலேயே அதை நாம் காண்கிறோம். தனிமனிதன் ஒருவனுடைய பிரச்சினை அவனுக்கும் அவனது பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை வலியுறுத்துவதன்மூலம் அறியப்படுவதில்லை. அதற்கு மாறாக அவனுக்கும் அவனது பண்பாட்டிற்கும் உள்ள பல ஆதரவுகளையும் ஒன்றுக்கொன்று பலப்படுத்திக்கொள்ள ஏற்பட்ட விவரங்களையும் மட்டுமே கொண்டு அறியப்படுகிறது. ஒரு தனிமனிதனின் உளவியலுக்கும் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளாமல், பண்பாட்டுக்கோலத்தைப்பற்றி நாம் கவனிக்க முடியாது. அந்த அளவுக்கு அவை இணைந்திருக்கின்றன.

எந்த ஒரு சமூகமும் சாதாரணமான மனிதர்களின் நடத்தையில் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவை வளர்ச்சியுறப் பல நிறுவனங்களை ஏற்படுத்துகிறது. அந்த நிறுவனங்கள் இதற்கு எதிரிடையான நடத்தைகளைக் கண்டிக்கின்றன. ஆனாலும், அந்தப் பண்பாட்டில் உள்ள சிலருக்கு இந்த எதிரிடையான நடத்தைகளே அனுசரணையாக இருக்கலாம். இப்படித் தேர்ந்தெடுப்பது பண்பாட்டைப் பொறுத்ததேயாகும்; உயிரியல் (Biology) இயல்பால் ஏற்பட்டதல்ல. ஒரு பண்பாட்டின் நிறுவனங்கள் அந்தப் பண்பாட்டில் உள்ள எல்லா தனிமனிதர்களுக்கும் சாதகமானதாக இருக்கும் என்று நாம் கொள்ளக்கூடாது. ஒரு தனிமனிதனின் நடத்தையைப் புரிந்துகொள்ள, அவனுடைய பூர்வோத்திரங்களை அறிவது மட்டுமன்றி அவனுடைய சமூகத்திலே ஒரு மனிதனுடைய நடத்தை சாதாரணமாக எப்படி இருக்கவேண்டும் என்றும், அவன் எப்படி அங்கே நடக்கிறான் என்றும் தெரிந்துகொள்ளவேண்டும். அவனது பண்பாட்டு நிறுவனங்கள் விதிக்கின்ற நடத்தைக்கு அவன் எப்படி ஈடு கொடுக்கிறான் என்றும் கவனிக்கவேண்டும்.

ஒரு சமூகத்திலே பிறந்துவிட்ட பெரும்பான்மையினர், அவர்களது நிறுவனங்கள் எப்படியிருந்தபோதிலும், அவர்களுடைய சமூகம் விதிக்கின்ற நடத்தையையே மேற்கொள்ளுகின்றனர். இப்படி இருப்பது, அவரவர்களின் நிறுவனங்களே முடிவுபெற்ற நன்னிலைகளையுடையனவாயிருப்பதாக எண்ணப்பெறுவதால் ஏற்படுகின்றது என்பது அந்தப் பண்பாட்டை எடுத்துச்செல்கின்ற மக்களால் தெளிவுபடுத்தப்பெறுகிறது. உண்மையான காரணம் வேறு. பெரும்பான்மையோர் அவர்களுடைய இயற்கைத் தகுதிகள் வளைந்துகொடுக்கத் தக்கனவாய்ப் பெற்றிருப்பதால், அந்தப் பண்பாடு அமைக்கின்ற உருவகத்தையேஅடைகின்றனர். அவர்கள் பிறந்துவிட்ட சமூகத்தின் உருவாக்கும் சக்திக்கு உட்படுகின்றனர். வடமேற்குக் கடற்கரையிலே, தற்பெருமைகளைப் பற்றி ஏற்பட்டிருக்கும் எண்ணங்களாயினும் சரி, அல்லது நமது நாகரிகத்திலே உடைமைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணங்களாயினும் சரி, பண்பாடு அமைக்கின்ற முறையில் தனிமனிதர்களின் வாழ்க்கை உருவாக்கப்பெறுகிறது. எப்படியிருந்தாலும் பெரும்பான்மையான தனிமனிதர்கள் அவர்களுக்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் வழியையே எடுத்துக்கொள்கின்றனர்.

அவர்கள் எல்லோருமே இந்நிலையை விரும்பியவர்களல்ல. சமூகம் தேர்ந்தெடுத்துள்ள நடத்தைகளைச் சிலரது இயற்கைத் தகுதிகள் ஒத்திருந்துவிட்டால் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.

நம்பிக்கையிழந்த ஒரு நிலையில் அச் சந்தர்ப்பத்தை எவ்வளவு சீக்கிரம் அகற்றமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அகற்றவேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டவர்களுக்கு ப்யூப்லோப் பண்பாடு மிகவும் இசைந்திருக்கிறது. நாம் முன்னே கண்டபடி, தென் மேற்குப் பகுதியின் நிறுவனங்கள் மனமுடைந்துபோகும் சந்தர்ப் பங்களையே மிகவும் குறைத்துக்கொண்டுவிட்டன. சாவைப் போன்ற தவிர்க்கமுடியாத சில நிலைகள் ஏற்படும்பொழுது அதை வெகுவேகமாகக் கடந்துசெல்வதற்கான வழிகளை வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கு எதிரிடையாக, மனமுடைந்துபோகும் ஒரு நிலையை, இழிவாகக் கொண்டு, அதற்கு உடனே ஈடுசெய்யவேண்டும் என்ற எண்ணமுடையோர்க்கு, வடமேற்குக் கடற்கரையிலே அதற்கான நிறுவனங்கள் உள்ளன. தங்கள் படகோட்டும் துடுப் புகள் உடைந்துபோதல், படகுகள் கவிழ்ந்துபோதல் அல்லது சாவினால் உறவினர்களை இழந்துவிடுதல்போன்ற சந்தர்ப்பங்களைக் கூட அப்படியே தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியெனக் கருது கின்றனர். அவர்கள் பதுங்கியிருக்கவேண்டும் என்ற முதல் எண் ணத்திலிருந்து எழுந்து திருப்பி அடிக்கவேண்டும் என்ற முறை யில் உடைமைகளைக்கொண்டும் போர்க்கருவிகளைக் கொண்டும் 'சண்டையிட' முந்துகிறார்கள். பிறரை அவமானப்படுத்தி அதன் மூலம் தங்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையற்ற நிலையைச் சரிசெய்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிற அவர்களுக்கு அச் சமூகத் திலே முரண்பாடின்றி வசிக்கமுடியும். ஏனென்றால், அவர்க ளுடைய இயற்கைத் தகுதிகளுக்கு அவர்களுடைய பண்பாட் டிலே வழிகோலப்பட்டிருக்கின்றன. ஒரு அப்பாவியைத் தேர்ந் தெடுத்துத் தண்டனைமுறைகள்மூலம், தங்களுக்கு ஏற்பட்ட துக்கத்தை அவன்மீது மாற்றவேண்டும் என்று விரும்புகிறவர் களுக்குத் தோபு சமுதாயம் இடமளிக்கிறது.

முதலிலிருந்து, பிறகு தடைபட்டுப்போன ஒரு அனுபவத் தைத் திருப்பி அடைய, உண்மையான அல்லது நேரான முறை யில் நாம் விவரித்த மூன்று பண்பாடுகளில் ஒன்றுகூட முயற்சி செய்யவில்லை. சாவின்பொழுது ஏற்படுகிற நஷ்டத்தை ஈடு செய்வது என்பது இயலாததாகக்கூடத் தோன்றலாம். ஆனால், பல பண்பாடுகளின் நிறுவனங்கள் இதற்கான வழிகளைக் கொண் டிருக்கின்றன. இப்படி ஒரு நிலையைத் திருப்பி ஈடுசெய்வது நமக்கு வெறுப்பை அளிக்கலாம். பல பண்பாடுகளில் ஒரு நம் பிக்கை இழந்த நிலையை இப்படிக் கையாள்வது, அச் சமூகங் களின் நிறுவனங்கள் ஒரு நடத்தையை எவ்வளவுதூரம் மிகை

யாகக் கொண்டுவிட்டன என்பதையே காட்டுகிறது. எஸ்கிமோ (Eskimo) மக்களில் ஒருவன் மற்றொருவனைக் கொன்றுவிட்டால், கொல்லப்பட்டவனது குடும்பம் தங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெய்யக் கொன்றவனையே அழைத்துக் கொள் கின்றனர். பிறகு கொன்றவன் தனது செய்கையால் விதவை யாக்கப்பட்ட கொல்லப்பட்டவனின் மனைவிக்குக் கணவனாகி ஆகிறான். நமக்கு முக்கியமாகத் தோன்றுகிற பல அமிசங்களை விட்டுவிட்டு, திருப்தி அடைதல் என்பதையே இங்கு முக்கிய மாகக்கொள்ளப்படுகிறது. மரபு ஒரு குறிக்கோளைத் தேர்ந் தெடுக்கும் பொழுது மற்றப் பல அமிசங்களை ஒதுக்கிவிடுவது இயற்கையே.

மேற்கத்திய நாகரிகத்தின் தகுதி நிலைகளுக்கு ஒவ்வாத பல வழிகளில், துக்கம் ஏற்படும்போது திருப்தி அடைதல் என்ற பழக்கம் ஏற்படலாம். க்ரேட் லேக்ஸ் (Great Lakes)க்குத் தெற்கே உள்ள சில குறிப்பிட்ட மத்திய அல்கான்கியன் இந்தியர்கள் (Central Algonkian Indians) தத்து எடுத்துக்கொள்ளும் முறையைக் கையாண்டனர். ஒரு குழந்தை இறந்துவிட்டால் வேறொரு குழந்தை அந்த இடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம். இரண் டுக்கும் உள்ள ஒற்றுமை பலவழிகளிலே உறுதி செய்யப்பெற்றுள் ளது. படையெடுப்பின்போது பிடிபட்ட ஒரு அடிமையைக் குடும் பத்தில் சேர்த்துக்கொண்டு, இறந்துவிட்ட குழந்தைக்குக் காட்டிய அன்பையும், உரிமைகளையும் அவனுக்குக் கொடுக்கலாம். இல்லா விட்டால் இறந்துவிட்ட குழந்தையின் நெருங்கிய விளையாட்டுத் தோழனும் அவனைப்போலவே உயரம் முதலிய உடற்கூறுகளையும் பெற்ற குழந்தையையோ அல்லது தொடர்புள்ள வேறொரு குடியி லுள்ள குழந்தையையோ எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரி வேறு குழந்தையைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அக் குழந்தை யின் குடும்பமும் மகிழ்ச்சியுறுகிறது, நமது நிறுவனங்களிலே இக் காரியம் பெறுகிற முக்கியத்துவத்தை அது பெறவில்லை. அக் குழந்தை தனக்குப் பழக்கமான பல வீடுகளையும், பல 'தாய்'களை யும் அறிந்திருக்கிறான். வேறொரு வீட்டில் ஏற்படும் இப்புதிய உறவு அவனுக்கு சகஜமாகவே இருக்கிறது. குழந்தையை இழந்த பெற்றோருக்கு, குழந்தை இருந்தபொழுது இருந்த பழைய நிலை அடைந்துவிட்டோம் என்ற மனநிறைவும் ஏற்படுகிறது.

நமது நிறுவனங்களிலே கற்பனை செய்யமுடியாத அளவுக்கு இந்தப் பண்பாடுகளில், மனிதர்கள் இழந்த ஒருவரைவிட இழப்பு நிலையை நினைத்தே துக்கப்படுகின்றனர். இப்படி மனத்தேர்வு பெறுவதை நாம் அறிந்தும்கூட, இழந்ததற்கும் இதற்கும் உள்ள

தொடர்பை மிகவும் குறைத்துக்கொண்டுள்ளோம். துக்கங் கொண்டாடும் முறையாக அதை நாம் கொள்ளவில்லை. இப்படி ஈடுசெய்வதால் மனத்தேர்வுபெறும் மனிதர்கள் நம்மிடையே இருந்தாலும் அவர்களுக்கு இழப்பு நிலையைத் தாண்டிச்செல்கிற வரையில் வேறு வழி கிடையாது.

நம்பிக்கையிழந்த நிலையில் வேறொருவிதமான ஈடுபாடும் சாத்தியமாக இருக்கிறது. இது ப்யூப்லோ மக்களின் ஈடுபாட்டிற்கு நேர் எதிரானதாகும். சமவெளி இந்தியரின் டையோனீஷியன் முறையில் இதை நாம் கவனித்தோம். அவர்கள் மிகவும் குறைந்த அளவு கஷ்டத்தோடு அந்த நிலையைக் கடந்து செல்லாமல் துக்கத்தை மிகையான அளவு வெளிப்படுத்துவதன் மூலம் ஒரு நிம்மதியைக் கண்டனர். சமவெளி இந்தியர்கள் உணர்ச்சிகளை மிகவும் பலாத்காரமுறையில் வெளியிடுவதை முக்கியமாகக் கொண்டனர்.

எந்த ஒரு மனிதர்கள் கூட்டத்திலும், துக்கத்தையும் நம்பிக்கை இழந்த நிலையையும்பற்றி மூன்றுவிதமான ஈடுபாடுகளையுடையவர்களைக் காணலாம். சிலர் அதைக் கவனிப்பதில்லை. சிலர் மிகையான உணர்ச்சி வெளிப்பாட்டினால் சரிசெய்துகொள்கின்றனர். வேறு சிலரோ ஒரு அப்பாவியைத் தண்டித்துப் பழைய நிலையைத் திருப்பியடைய முயல்கின்றனர். நமது சமூகத்தில் உளமருத்துவப் பதிவுகளிலே, இப்படிப்பட்ட சில உணர்ச்சிகள் நிலைமையைச் சமாளிக்கக் கெட்டவழிகளாகவும் வேறுசில நல்லவையாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றன. கெடுதலானவை, தவறான அமைப்புக்கொண்டு மனநிலை தடுமாறுவதற்கும், நல்லவை சமூகத்திலே நன்றாக இயங்குவதற்கும் வழி செய்கின்றன. இப்படிச் சொல்வது எந்த ஒரு 'கெட்ட' ஈடுபாட்டையும் குறிப்பாகச் சொல்வதாகாது. ப்யூப்லோ மக்களிடையே உள்ளதுபோல் நிறுவனங்களாலும் மக்களின் ஈடுபாட்டாலும் அதற்கு ஒரு வழி இருந்துவிட்டால், துக்கத்தினின்று ஓடிவிட வேண்டும் என்ற விருப்பமும், எந்தவிதத்திலும் அதைக் கடந்து செல்லவேண்டும் என்பதும் உளநோயில் கொண்டுபோய் விடுவதில்லை. ப்யூப்லோ மக்கள் நரம்பு நோயால் பீடிக்கப்பட்டவர்களன்று; உள்ளத்தை நன்றாக வைத்துக் கொள்வதாகவே அவர்களது பண்பாடு கூறுகிறது. அதுபோலவே க்வாக்யூட்ல் மக்களின் பலாத்காரமுறையில் வெளிப்படும் ஈடுபாடுகள் நமது நாகரீகத்தின் உளவியல் முறையிலே மிகவும் 'கெட்டவை'யாகக் காணப்படுகின்றன. அதாவது பல வழிகளிலும் ஆளுமையை உடைத்தெறிபவைபோன்று காணப்படுகின்றன. ஆனால், இதே

க்வாக்யூட்ல் மக்களின் தனிமனிதர்கள் இதுபோன்ற ஈடுபாடு களைத் தாராளமாக வெளிக்காட்டி, க்வாக்யூட்ல் சமூகத்திலே பெரும் தலைவர்களாகவும் இருந்து, தங்கள் பண்பாட்டில் ஒரு மன நிறைவையும் கண்டனர்.

ஆகையால், தனி ஒருவன் என்ற முறையில் தகுதிபெற்றிருப் பது சில நோக்கங்களை ஒட்டி நடந்து மற்றவைகளை வெறுத்து ஒதுக்குவதில் இல்லை. இப்படி வேறுபாடுகளைக்கொண்டு ஒன்றி வாழ்வது வேறுதிசையில் திரும்பியிருந்தது. ஒரு சமூகம் ஏற்றுக் கொண்ட நடத்தையை ஒட்டிய ஈடுபாடுகள் கொண்டவர்கள் சமூகத்தில் சாதகமான சூழ்நிலையைக் கண்டனர். சமூகத்தில் சிறந்ததாகக் கருதப்பெறும் நடத்தையினின்றும் வேறுபட்ட ஈடு பாடுகளைக் கொண்டவர்கள் அச்சமூகத்திலே இணைந்திராமல் தனித்தியங்கினர். அவர்களுடைய நாகரிகங்களின் நிறுவனங் களால் ஆதரவுதரப்படாத இவர்கள் இயற்கையின் வரம்புக்குப் புறம்பானவர்களாக (abnormal) இருந்தனர். அவர்களது பண் பாட்டின் மரபுவழிகளை எளிதில் எடுத்துக்கொள்ளாத விதிவிலக் காக அவர்கள் இருந்தனர்.

ஒப்பிட்டுபார்க்கும் உளமருத்துவ இயலுக்கு, இப்படித் தனித் தியங்கும் அவர்களது பண்பாட்டில் சரியாக ஒன்றத்தவறிய இவர் கள் மிக முக்கியமானவர்களாகும். சிலருடைய ஈடுபாடுகள் அவர்களது சமூகங்களால் மதிப்புத்தரப்படாமல் மறுக்கப்படு வதை அடிப்படையாகக்கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட அடை யாளங்களின் பட்டியலிலிருந்து ஆரம்பிக்கப்படுவதால் உளமருத் துவப் பிரச்சினையானது குழப்பமடைகிறது.

நாம் விவரித்த பழங்குடிகள் எல்லாவற்றிலும் பண்பாட்டில் பங்குகொள்ளாத 'அசாதாரண'த் தனிமனிதர்கள் இருக்கிறார்கள். மிகவும் நட்பு மனப்பான்மையைக்கொண்டு ஒவ்வொரு செய்கை யிலும் அதன் முடிவைக் காண்கிற தனிமனிதன் தோபு சமுதாயத் திலே ஒன்றுதவனாகிவிடுகிறான். தன் தோழர்களைக் கவிழ்க் கவோ அல்லது தண்டிக்கவோ விரும்பாத அவன் மிகவும் மகிழ் வோடு இருந்தான். யார் இட்டாலும் அந்த வேலையைச் செய் வான். அவர்களுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதில் சோர்வை அறியாதவன். தன் தோழர்களைப்போன்று இருட்டைக் கண்டு அவன் அஞ்சவில்லை. அவன் மற்றவர்களைப்போன்று மனைவி அல்லது சகோதரி ஆகிய பெண்களிடம் பொதுப்படை யான அன்பைக் காட்ட மறுத்ததில்லை. பொது இடங்களில் அவன் அவர்களை விளையாட்டாகத் தட்டிக்கொடுப்பான். மற்றத் தோபு மக்களுக்கு இது ஒரு இழிவான செயலாகும். ஆனால், இவன்

இப்படிச் செய்வது சிறுபிள்ளைத்தனமாக எடுத்துக்கொள்ளப் பட்டது. அக் கிராமம் அவனைக் கருணையுடனேதான் நடத்தியது. அவனைக் கேலிசெய்யவில்லை. ஆனால், அவன் அவர்களுடைய கூட்டத்திற்கு அப்பாற்பட்டவனேயாவான்.

தோபு மக்களிடையே, குழந்தைத்தனமாக நடப்பவனின் நடத்தை, நமது நாகரிகத்திலே பல காலங்களில் சிறந்ததெனக் கொள்ளப்பட்டிருந்தது. பல மேற்கத்திய சமுதாயங்களில் இன்றும் பல சந்தர்ப்பங்களில் இம்மாதிரி நடத்தை வரவேற்கப்படுகிறது. குறிப்பாக ஒரு பெண் இம்மாதிரி நடத்தையைக் கொண்டிருந்தால், அவளது குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவள் கௌரவமுடையவளாகவே இயங்குகிறாள். தோபுக் குடிமகன் அவனது பண்பாட்டில் இயங்கமுடியாமலிருப்பது அவனது சாதகமான இயல்புகளின் விளைவுகளால் அல்ல. அவனது இயல்புகளுக்கும் பண்பாட்டுத் தோறணிக்கும் இடையே உள்ள இடைவெளியே காரணமாகும்.

ஒரு சமூகத்தில் ஒதுக்கிவிடப்படுகிற மனிதர்கள் வேறொரு பண்பாட்டிலும் அப்படி வெறுப்புடன் ஒதுக்கப்படுவதில்லை என்பதைப் பல இன ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கின்றனர். சமவெளிக் காக்கை இந்தியரிடையே (Crow Indians) தன் பண்பாட்டைப்பற்றி அதிக அறிவுகொண்டிருந்த ஒருவனை லோவி (Lowie) கண்டார். அவன் தனித்திருந்து பண்பாட்டை நோக்கவும் அதன் பல திருப்பங்களை இணைத்துப்பார்க்கவும் அக்கறை கொண்டிருந்தான். அவன் வமிசாவளிகளிலே அக்கறையுடையவனாக இருந்தான். சரித்திர சம்பந்தமான விவரங்களை அறிய மிகவும் பயன்பட்டான். காக்கை மக்களின் வாழ்வை விளக்கிச் சொல்லத் தகுந்தவனாக இருந்தான். காக்கை மக்களிடையே இந்தவிதமான குணப்பாங்குகள் கௌரவமானதாகக் கருதப்பெறவில்லை. அவனது மரபில் துணிந்து செயலாற்றுவது ஒரு நற்குணப்பாங்காக இருந்தும் இவன் உடல் அபாயத்தைக் கண்டு நடுங்கினான். பொய்யான ஒரு போர்முறைக் கௌரவத்தை இவன் உரிமைகொண்டாட முயன்றது நிலைமையை இன்னும் மோசமாக்கியது. ஒரு எதிரியின் பாசறையில் கட்டப்பெற்றிருந்த குதிரையைக் கொண்டுவந்துவிட்டதாக அவன் சொல்லிக்கொண்டது பொய்யென நிரூபிக்கப்பட்டுவிட்டது. காக்கை மக்களிடையே ஒரு போர்முறைக் கௌரவத்தைப் பொய்யாக உரிமைகொண்டாடுவது ஒரு பெருங் குற்றமாகும். அடிக்கடி வலியுறுத்தப்பெற்ற பொதுமக்கள் கருத்திலே அவன் ஒரு பொறுப்பற்றவனாகவும், தகுதியற்றவனாகவும் கருதப்பெற்றான்.

நமது நாகரிகம், பொருள் உடைமைகளைப் பெற்றிருத்தல் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ளாத ஒருவனை நடத்துகின்ற விதமும் இதற்கு இணையானதுதான். நமது மக்கள் தொகையில் கூட உடைமைகளைச் சேர்ப்பது என்பதே குறிக்கோளாக இல்லாத மனிதர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் உடைமைகளைப் பெரிதாக மதிக்கும் மக்களோடு இணையும்பொழுது, கெட்ட எண்ணமுடையவர்களாக மதிக்கப்பெறுகின்றனர். அவர்களுக்குச் சாதகமாக இல்லாத சூழ்நிலையில் தள்ளப்படும்பொழுது அவர்களும் அவ்வாறே மாறிவிடுகின்றனர். ஒருகால் இப்படித் தள்ளப்பட்ட அவர்கள் தங்கள் கலையுணர்வை வலியுறுத்திச் சிறு கலைஞர்களின் கூட்டத்திலே உறுப்பினர்களாக மாறிவிட்டால், அவர்கள் கெட்ட எண்ணமுள்ளவர்களாக மதிக்கப்பெறாமல் குழந்தைத் தனமானவர்கள் என்று கருதப்பெறுகின்றனர். எப்படியிருந்தாலும் தங்களது சமூகத்தால் ஆதரவு தரப்படாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் திறனைத் திருப்திகரமாக வெளிப்படுத்துவது மிகவும் கடினமானது.

இப்படி நெருக்கடியான நிலையிலுள்ள தனிமனிதன் தன்னுடைய இயற்கையான உணர்ச்சிகளுக்கு ஒரு பலாத்கார ஈடுபாட்டை ஏற்படுத்திக்கொண்டு, அப்பண்பாடு மதிக்கின்ற ஒரு வேலையை எடுத்துக்கொள்கிறான். சமூகத்தால் தான் மதிக்கப்பட வேண்டும் என்று அவன் நினைத்தால் இது ஒன்றுதான் வழி. இப்படிப்பட்ட ஒரு அவசியத்தை ஸுனி மக்களில் ஒருவன் ஒப்புக்கொண்டான். எந்தவித அதிகாரத்தையும் நம்பாத சமுதாயத்தில் அவனுக்கென்று ஒரு தனி காந்த சக்தி இருந்தது. எந்தக் கூட்டத்திலும் அது அவனைத் தனித்துக் காட்டியது. மிதமான நடத்தையையும், எளிதான வழியையும் கொண்ட ஒரு சமூகத்தில் அவன் அமைதியற்றுச் சில சமயங்களில் பலாத்காரச் செயல்களிலும் ஈடுபடுவான். அன்புவழியில் 'அதிகமாகப் பேசி' வரும் அமைதியான ஒருவனைப் புகழ்கிற ஒரு சமூகத்தில் அவன் வெறுக்கப்பட்டுத் தனித்திருந்தான். அப்படிப்பட்ட ஒருவனை ஸுனி மக்கள் சூன்யக்காரனாக மதித்தனர். வெளியிலிருந்து ஒரு ஜன்னல் மூலமாக அவன் ஒருசமயம் எட்டிப்பார்த்ததாகச் சொல்லப்பட்டது. இப்படிச் செய்வது சூனியக்காரனுக்குரிய குணமாகும். ஒருநாள் குடித்துவிட்டு யாரும் தன்னைக் கொல்லமுடியாது என்று பெருமையடித்துக்கொண்டான். அவனைப் போர்முறைப் பூசாரிகள் முன்னே கொண்டுபோய் நிறுத்தினர். அவன் தான் சூனியக்காரன் என்று ஒப்புக்கொள்ளும்வரை அவனைக் கட்டைவிரலில் கட்டித் தொங்கவிட்டனர். சூன்யக்காரனை இப்படித் தண்டிப்பது தான் சாதாரணப் பழக்கம். ஆயினும், அவன் அரசாங்கத் துருப்பு

களுக்கு ஒரு தூதுவனை அனுப்பினான். அவர்கள் வருவதற்கு முன்னமே இவனது தோள்கள் ஆயுள் முழுவதும் பயனற்றவை களாய் ஆகிவிட்டன. ஆகையால் துருப்புகள்போர் முறைப் பூசாரி களைச் சிறையிலிடுவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயல வில்லை. இப்போர்முறைப் பூசாரிகளில் ஒருவன் சமீபகால ஸூனி சரித்திரத்தில் மிகவும் முக்கியமானவனாகவும் மதிக்கத் தக்கவனாக வும் இருந்தான். சிறையிலிருந்து வெளிவந்ததும் அவன் மறுபடியும் பூசாரித் தொழிலை ஏற்றுக்கொள்ளவில்லை. தன்னுடைய சக்தி உடைபட்டுப்போனதாக அவன் கருதினான். ஸூனி மக்கள் சரித் திரத்திலேயே இது ஒரு அலாதியான பழிவாங்கும் செயலாகும். அது சூன்யக்காரன் தன் செய்கையால் பூசாரித் தொழிலுக்கே சவால் விட்டதுபோல் ஆகிவிட்டது.

இப்படி அவன் நடத்திய மறுப்புக்குப் பிறகு நாற்பது ஆண்டு களில் அவன் வாழ்வு நாம் எண்ணமுடியாத வகையில் திரும் பியது. பிரிவுக் கூட்டங்களிலே சேர்வது சூன்யக்காரனுக்குத் தடைசெய்யப் பெறுவதில்லை. அவனுக்கு இனிமையாகப் பாடும் குரலும் அபாரமான ஞாபகசக்தியும் இருந்தன. நம்பமுடியாத பல புராணக் கதைகள், சிலருக்கு மட்டுமே சொல்லித்தரப்படும் சடங்குகள், பிரிவுமுறைப் பாட்டுகள் ஆகியவற்றை, அவன் இறப்பதற்குமுன்னே, பலநூறு பக்கங்களுக்கு அவனுடைய சடங்கு முறைப் பாட்டுகளும் கதைகளும் அவன் சொல்ல எழுதிக் கொள்ளப்பெற்றன. இதற்கதிகமாகவே அவன் பாடல்களையும் தெரிந்து வைத்திருந்தான். சடங்குமுறை வாழ்க்கையில் அவன் தவிர்க்கமுடியாத ஒருவனாகிவிட்டான். மேலும் அவன் இறப்ப தற்கு முன்னே ஸூனி மக்களின் கவர்னராகவும் (Governor) இருந் தான். அவன் போக்கு அவனுடைய சமூகத்தில் பல முரண்பாடு களை உண்டாக்கியது. அவன் தன் திறனைக்கொண்டு இந்த நிலை மையைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டான். நாம் எதிர் பார்க்கின்றபடி அவன் மகிழ்ச்சியுற்று இருக்கவில்லை. ஸூனி மக் களின் கவர்னராக இருந்தும், பிரிவுக் கூட்டங்களிலே உயர்பதவி கொண்டும், தனது சமுதாயத்திலே முக்கியமான மனிதனாக இருந்தும்கூட அவன் எப்பொழுதும் சாவைப்பற்றியே எண்ணி யிருந்தான். மிதமான மகிழ்ச்சிகொண்ட மக்களிடையே அவன் ஏமாற்றப்பட்ட ஒருவனாகவே இருந்தான்.

அவனது குணப்பாங்குகளுக்குச் சாதகமான நிறுவனங்களை யுடைய சமவெளி இந்தியர்களின் மத்தியில் அவன் எப்படி வாழ்ந் திருப்பான் என்று எளிதாக எண்ணிப்பார்க்கமுடியும். அவனு டைய அதிகாரம், கொந்தளிப்பு, வெறுப்பு ஆகியவை போற்றப்

பட்டிருக்கும். ஸுனி மக்களின் கவர்னராக இருந்ததாலோ அல்லது வெற்றியுள்ள பூசாரியாக இருந்ததாலோ அவனுக்கு ஏற்பட்ட மனக்கசப்பு, செய்யின் (Cheyenne) மக்களுடைய போர்த் தலைவனாக இருந்திருந்தால் ஏற்பட்டிருக்காது. தன்னுடைய இயல்பான குணப்பாங்குகளின் செய்கைகள் அவனுக்கு மனக்கசப்பைத் தரவில்லை. தன் இயல்புக் குணங்கள் வெளிப்பட வாய்ப்பளிக்காது நின்ற பண்பாட்டின் தகுதிநிலைகளே அதற்குக் காரணமாயிருந்தன.

நாம் இதுவரைக் கவனித்த தனிமனிதர்கள் எந்தவிதத்திலும் உளநோயாளிகளல்லர். தங்களுடைய பண்பாட்டு நிறுவனங்களில் தங்களது இயல்பான குணப்பாங்குகளை வெளியிட வகையில்லாது தவிக்கும் தனிமனிதர்களின் நெருக்கடியான நிலையை உடையவர்களே. அவனது நடத்தையானது சமூகத்தால் அசாதாரணமானது என்று கருதப்பெறும்போது அந்த நிலை உளமருத்துவத்திற்கான நிலையாகிவிடுகிறது. மேற்கத்திய நாகரிகம் மிகவும் குறைந்த தற்பாலுணர்ச்சி கொண்டவனையே அசாதாரணமானவன் எனக்கொள்கிறது. தற்பாலுணர்ச்சியின் மருத்துவ அமைப்பு அது ஏற்படுத்துகிற நரம்பு நோய், உளநோய் ஆகியவற்றை வலியுறுத்தி, அவ்வுணர்ச்சி பெற்றவனது நடத்தையைத் தாழ்த்திக் காட்டுகிறது. வேறு பண்பாடுகளில் பார்த்தால் இப்படித் தற்பாலுணர்ச்சி கொண்டவர்கள் தங்கள் சமூகங்களால் கீழ்ப்பட்டவர்கள் என மதிக்கப்பெறவில்லை என்று தெரியும். அவர்கள் செயல்படத் தவறியவர்கள் என்று கொள்ளப்படவில்லை. சில சமூகங்கள் இப்படிப்பட்டவர்களை உயர்த்தியேகூடச் சொல்லுகின்றன. ப்ளேட்டோவின் (Plato) 'குடியரசு' தற்பாலுணர்ச்சிகொண்ட நிலையைக் கௌரவமாகவே கொண்டுள்ளது. ஒரு நல்வாழ்வுக்கு ஏற்பட்ட வழியாகவே அது சொல்லப்பெறுகிறது. அக் காலத்திய கிரேக்க மக்களின் நடத்தையில், ப்ளேட்டோவால் உயர்த்திச் சொல்லப்பட்ட இத் தற்பாலுணர்ச்சி போற்றப்பட்டது.

அமெரிக்க இந்தியர்கள், தற்பாலுணர்ச்சி கொண்டவர்களை ப்ளேட்டோ உயர்த்திச்சொல்லிய அளவுக்குப் பெருமைப்படுத்தாவிட்டாலும், அவர்களைத் திறமைவாய்ந்தவர்களெனவே மதித்தனர். வட அமெரிக்காவின் பல இடங்களில், பிரெஞ்சு மக்கள் பெயரிட்டு அழைக்கிற பர்டாஷ் (Berdache) என்ற நிறுவனம் இருக்கிறது. இந்த ஆண்-பெண்கள் ஆண்களாக இருந்து பூப்பின் போதோ அதற்குப்பிறகோ பெண்களுக்கான தொழிலையும் உடையையும் எடுத்துக்கொண்டனர். சில சமயங்களில் அவர்கள் வேறு ஆண்களைத் திருமணம் செய்துகொண்டு அவர்களுடன்

கூடிவாழ்ந்தனர். சில சமயங்களில் அவர்கள் தற்பாலுணர்ச்சி கொள்ளாதவராய், ஆண்மை குறைந்திருப்பதால் பெண்களால் கேலிசெய்யப்படுவதினின்றும் தப்ப இதுபோன்று செய்தனர். இந்த 'பர்டாஷ்' என்பவர்கள் ஸைபீரியாவில் உள்ள ஆண்-பெண்களைப்போல் முதல்தரமான இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளைக் கொண்டவர்கள் எனக் கருதப்பெறவில்லை. ஆனால், பெண்களுக்கான தொழில்களில் தலைவர்களாகவும், சில நோய்களை நன்கு குணப்படுத்துபவர்களாகவும், வேறு சில மக்களிடையே சமூக ஈடுபாடுகளைச் சுமுகமாக அமைப்பவர்களாகவும் கருதப் பெற்றனர். சமூகத்திலே அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் முழுமனத்தோடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆணாக இருக்கும் ஒருவனை 'அவள்' என அழைப்பது கேலிசெய்வதுபோன்று இருப்பதாக எண்ணப்பெற்றது. அவனை ஸுனி மக்களிடையே ஆண்களுக்கான இடுகாட்டிலேயே புதைத்தனர். ஆனாலும் அவர்கள் சமூகத்திலே இடம்பெற்றனர். பெண்களுக்கான தொழில்களை எடுத்துக்கொண்ட ஆண்கள் தங்கள் வலிமையாலும் ஊக்கத்தாலும் அவைகளில் மேம்பட்டிருந்தனர்; ஆதலால் பெண்களின் செய்முறைகளிலும் பெண்கள் செய்யக்கூடிய உடைமைகளின் சேர்க்கையிலும் அவர்கள் தலைவர்களாக இருந்தனர். ஒரு தலைமுறைக்கு முன்னால் ஸுனி மக்களிடையே வே-வா (We-Wha) என்ற ஒரு ஆண்-பெண் இருந்தான், திருமதி ஸ்டீவன்சன் (Mrs. Stevenson) என்ற, வே-வாவின் நட்பினை உடையவள் அவனைப்பற்றிக் கூறும்போது அவனை 'மனத்திலும் உடலிலும் ஸுனி மக்களிடையே மிகவும் வலுவுள்ளவன்' என்று குறிப்பிட்டிருக்கிறாள். அவனுடைய அதிகமான ஞாபகசக்தி அவனைச் சடங்குகளின்போது முக்கியமான ஒருவனாகவும் அவனது வலிவும், அறிவும் எல்லாத்தொழில்களிலும் அவனைத் தலைவனாகவும் ஆக்கியது.

ஸுனி மக்களின் எல்லா ஆண்-பெண்களும் வலிமைபெற்றுத் தன்னம்பிக்கைபெற்று இருக்கவில்லை. சிலர் ஆண்களுக்கான செயல்களில் பங்குகொள்ளமுடியாமல் தங்களது குறைபாடுகளினின்றும் காத்துக்கொள்ள இதைச் சரணடைந்தனர். அவன் அநேகமாகஒரு அறிவீனனாகவோ ஒரு பெண்ணைப்போன்று நளினமான உடலமைப்பையோ பெற்றிருந்தான். ஸுனி மக்களிடையே 'பர்டாஷ்' ஆக ஒருவன் மாறுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. காரணம் எதுவாயினும், பெண்களின் ஆடைகளை அணிந்திருக்கும் ஒவ்வொருவனுக்கும் மற்றவரைப்போன்றே சமூகத்தில் செயல்படும் உறுப்பினராக இருப்பதற்கு வாய்ப்புகள் இருந்தன. சமூகத்திலே அவர்களுடைய ஈடுபாடுகள் நன்றாகத் தெரிந்தே இருந்தன. அவர்களுக்குத் திறன் இருந்தால் அதை வெளிக்

காட்டுவதற்கு ஏற்ற வாய்ப்புகள் இருந்தன. அவர்கள் வலிமை யற்றவர்களாக இருந்தால், குணங்கள் பலவீனமாக இருப்பதால் அவர்கள் தகுதிபெறத் தவறிவிடுகின்றனர்; அது தற்பாலுணர்ச்சி யால் அன்று.

சமவெளி இந்தியருடைய இந்த 'பர்டாஷ்' என்ற நிறு வனம் நன்குவளர்ந்திருந்தது. டகோடா (Dakota) மக்கள் 'பர் டாஷின் உடைமைகளைப்போன்று மிகச்சிறந்தவை' என்ற சொற் றொடரைப் பயன்படுத்தினர். அதாவது பெண்களுக்கான வீட்டு உடைமைகளைப் புகழ்ந்துபேச இச் சொற்றொடரை உபயோகித் தனர். 'பர்டாஷு'க்கு இரண்டு அனுகூலங்கள் இருந்தன. பெண் களுக்கான செய்முறைகளில் அவன் சிறந்துவிளங்கினான். மேலும், ஆண்களின் செயலான வேட்டையின்மூலம் தன் குடும்பத்தை யும் காப்பாற்றிக்கொள்ளலாம், ஆகையால் அவனைவிட வேறு யாரும் மிகுந்த செல்வத்தைப் பெற்றிருக்கவில்லை. சடங்குகளுக் காகச் சிறந்த மணிவேலைகளையும், பதனிடப்பட்ட தோல் களையும் செய்வதற்கு மற்றவரைவிட இந்த 'பர்டாஷு'களையே தேர்ந்தெடுத்தனர். அவன் சமூகத்தில் தகுதிபெற்றிருப்பதையே மற்றெல்லாவற்றையும்விட முக்கியமாகக் கொண்டனர். ஸுனி மக்கள் ஒரு பொருத்தமற்ற தன்மையை உணர்ந்துங்கூட அவன் பால் இருதரப்பட்ட ஈடுபாட்டைக் கொண்டிருந்தனர். 'பர்டாஷ்' ஆக இருந்தவன்மேல் சமூகம் வெறுப்புக்கொள்ளவில்லை. ஆனால், அவனுடன் வசிப்பவனை வெறுப்புடன் கண்டனர். அவனைத் தங்கள் பண்பாட்டின் குறிக்கோள்களை நாடாது ஒரு எளிதான வழியைத் தேர்ந்தெடுத்த பலவீனன் என்று கருதினர். 'பர்டாஷி'ன் முயற்சியாலேயே நன்கமைக்கப்பட்ட வீட்டுக்கு இவன் ஒன்றுமே செய்வதில்லை. இப்படி அவன்மீது கொள்ளும் எண்ணத்திற்கு அவனுடைய காமஉணர்ச்சி காரணமன்று. பொருளாதாரத்துறை யிலே அவன் எளிதான வழியைக் கடைப்பிடிப்பதால் அவனை ஒரு தீண்டாதவனாக மதித்தனர்.

தற்பாலுணர்ச்சி தலைகீழானதாகக் கருதப்பெறும்போது, அந்த உணர்ச்சியுள்ளவர்கள் திரிபுபெற்றவர்களுக்கு ஏற்படும் முரண்பாடுகளை அடைகின்றனர். சமூகத்தின் மரபானது இவர் களைத் தாழ்த்திக் கூறுவதனாலேயே அவனது குற்றங்கள், தகுதி யற்ற மனப்பான்மை, தவறுகள் ஆகியவை ஏற்படுகின்றன. தங்கள் சமூகத்தின் தகுதிநிலைகளால் ஆதரவு தரப்படாத ஓர் சிலரே திருப்திகரமான வாழ்க்கையை அடையமுடியும். சமூகம் அவனிடம் எதிர்பார்க்கின்ற ஈடுபாடுகள் எந்த ஒருமனிதனின் வலுவையும் சோதித்துவிடும். இந்த முரண்பாட்டின் விளைவைத் தான் தற்பாலுணர்ச்சி என நாம் குறிக்கின்றோம்.

நமது சமூகத்திலே சமாதிநிலை அடைதல் என்பது இதே போன்ற ஒரு அசாதாரண நிலையாகும். மேற்கத்திய நாகரிகத்திலே ஒரு தீவிரமற்ற யோகி (Mystic) கூட திரிபு பெற்றவனாகவே கருதப்படுகிறான். நமது சமூகக் கூட்டங்களிலே வலிப்புகளைப் பற்றியோ சமாதிநிலையைப் பற்றியோ அறிந்துகொள்ள, அசாதாரணமானவர்களின் மருத்துவ சரித்திரத்தைப் பார்க்க வேண்டும். ஆகையால், சமாதிநிலை அனுபவமும் நரம்பு நோய் அல்லது உளநோயும் கொண்டுள்ள தொடர்பு தெளிவாகத் தெரிகிறது. தற்பாலுணர்ச்சி பெற்றவர்களுடையதைப்போன்றே இது நமது நூற்றாண்டிலே ஆங்காங்கு உள்ள குணுதிசயத் தொடர்பாக இருக்கிறது. நமது பண்பாட்டுப் பின்னணியிலே கூடப் பல்வேறு காலங்களில் பலவிதமான முடிவுகள் ஏற்பட்டுள்ளன. இடைக்காலத்தில் இப்படி ஒரு உணர்ச்சிவசமான நிலையைத் தூய்மைத் தன்மைக்கு அறிகுறியாகக் கத்தோலிக்க மதம் கருதியபொழுது இந்தச் சமாதிநிலை மிகவும் மதிக்கப் பெற்றது. இதுபோன்று உணர்ச்சிகளைத் தன்னியல்பாகப் பெற்றவருக்கு, நமது நூற்றாண்டிலே பெருங்கேடாகக் கருதப்படுவது போல் இல்லாமல் சமாதிநிலை அனுகூலமாகவே இருந்தது. அவர்கள் தங்கள் தொழில்களைப் பின்பற்றத் தன்னம்பிக்கையையும் அது அளித்தது. பேராசைகளை உறுதிசெய்வதாகவே அது கருதப்பெற்றது. பைத்தியம்பிடித்த நிலையை அது குறிப்பதாக இல்லை. இப்படிச் சமாதி நிலையை அடையக்கூடிய தனிமனிதர்கள் தங்கள் நாட்டின் தகுதிகளைப் பொறுத்து வெற்றியோ அல்லது தோல்வியோ கண்டனர். ஆனால் சமாதி அனுபவம் மிகவும் மதிக்கப்பெற்றதால், பெருந் தலைவன் ஒருவன் அதை அடையக்கூடியதாக எண்ணப்பெற்றது.

பழங்குடி மக்களிடையே, சமாதிநிலை அடைவதும் வலிப்புகள் பெறுவதும் மிகவும் கௌரவிக்கப்பெற்றன. கலிஃபோர்னியாவிலுள்ள சில இந்தியக் குடிகள் குறிப்பிட்ட சில சமாதி அனுபவங்களைப் பெற்றவர்களுக்கு ஒரு தனிக் கௌரவத்தை அளித்தனர். எல்லாக்குடிகளும், பெண்கள் மட்டுமே இப்படிப்பட்ட கௌரவத்தை அடைந்ததாகக் கருதவில்லை. ஆகுல் ஷாஸ்தா (Shasta) மக்களிடையே இதுவே வழக்கமாக இருந்தது. அவர்களிடையே பெண்கள்தாம் தெய்வத்தன்மை பெற்றவராக இருந்தனர். சமுதாயத்தில் அவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. அவர்களுடைய இயற்கை இயல்புகளால் சமாதிநிலை போன்ற அனுபவங்களுக்கு ஏற்றவர்களாக இருந்தமையினால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். ஒருநாள், இப்படி ஆகவேண்டும் என்ற விதியுள்ள ஒரு பெண் தன் வேலைகளைச் செய்துகொண்

டிருக்கும்போது திடீரென்று தரையில் விழுந்து விட்டாள். தன்னுடன் உரத்த குரலில் பேசும் ஒரு குரலை அவள் கேட்டாள். திரும்பி, வளைக்கப்பட்ட வில்லுடன் ஒரு அம்பையும் கொண் டிருந்த மனிதனை அவள் கண்டாள். அவளை அவன் பாடும்படிக் கட்டளையிட்டான். மறுத்தால், தன் அம்பால் அவளது இதயத் தைப் பிளந்துவிடுவதாக அச்சுறுத்தினான். ஆனால், அவள் அந்த அனுபவத்தின் வேகத்தால் உணர்ச்சியற்று வீழ்ந்தாள். அவ ளுடைய குடும்பத்தார் வந்து சேர்ந்தனர். அவள் மூச்சுவிட முடியாமல் விறைத்து வீழ்ந்து கிடந்தாள்; சிறிது காலமாகத் தெய்வத்தன்மைக்கு அழைக்கப்பட்டவள்போன்று, அவள் கரடிகளிடமிருந்து தப்புவதுபோலவோ, மரங்களிலிருந்தோ மலையுச்சியிலிருந்தோ வீழ்வதுபோலவோ, கொட்டுகின்ற பூச்சி களால் சூழ்ந்திருப்பது போலவோ கனவுகள் கண்டாள் என்று அவர்களுக்குத் தெரியும். என்ன நேரும் என்று அந்தச் சமூகம் அறிந்திருந்தது. அப்பெண் சில மணிநேரம் சென்று முனகிக் கொண்டே, தரையில் புரண்டு நடுங்கினாள். சமாதி நிலையின் போது ஆவியினால் கற்றுத்தரப்பட்ட பாட்டைப் பாடச்சொல்லிக் கட்டாயப்படுத்தப்பட்டு அவள் பாடுகிறாள் என்று எண்ணப் பெற்றது. அவள் திரும்பி தன் சுயநினைவுக்கு வரும்போது அவள் முனகல் சத்தம் சிறிது சிறிதாக ஆவியின் பாட்டாகத் தெளிந்தது. இறுதியில் அவள் அந்த ஆவியின் பெயரை அழைத்தாள். உடனே அவள் வாயிலிருந்து இரத்தம் கசிந்தது.

ஆவியுடன் முதலில்கொண்ட தொடர்புக்குப்பின் சுயநினைவு அடைந்தவுடன், அன்றிரவு தெய்வத்தன்மை பெற்றிருப்பதற் கான துவக்க நடனத்தை ஆடினாள். கூரையிலிருந்து தொங்க விடப்பட்டிருக்கும் ஒரு கயிற்றைப் பற்றிக்கொண்டு மூன்று இரவு களுக்கு அவள் ஆடினாள். மூன்றாவது இரவில் தன் ஆவியினால் அளிக்கப்படும் சக்தியை அவள் பெறவேண்டும். ஆடிக்கொண் டிருக்கும்போதே சரியான நேரம் வந்துவிட்டதை அறிந்த அவள் 'அவன் என்னை அம்பால் அடித்துவிடுவான், அவன் என்னை அம்பால் அடித்துவிடுவான்' எனக் கூவினாள். அவளது நண்பர் கள் நெருங்கி நின்றுகொண்டனர். ஏனென்றால், வலிப்பின் பிடி யிலே அவள் சுழலும்போது அவள் கீழேவிழுவதற்குமுன் அவளைப் பிடித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவள் இறந்துவிடுவாள். இதுமுதற்கொண்டு தன் ஆவியின் சக்தியைக் காணக்கூடிய ஓர் உருவகமாக அவள் உடம்பிலே பெற்றிருந் தாள். அது ஒரு பனிக்கட்டி போன்றது. அதைத் தன் நடனங் களின்போது உடம்பின் ஒரு பாகத்தினின்றும் எடுத்து மற்றொரு பாகத்தில் வைத்துக்கொள்வாள். பிறகு அடிக்கடி வலிப்புகள்

மூலம் தன்னுடைய இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியை உறுதிப் படுத்திக்கொள்வாள். சாவின்போதும், மற்ற வாழ்க்கையின் முக்கியமான சந்தர்ப்பங்களிலும் அவள் அழைக்கப்படுவாள். நோயைக் குணப்படுத்தவோ, காரணம் கண்டுபிடிக்கவோ, அல்லது புத்திமதிகளுக்காகவோ அவள் அழைக்கப்பெற்ருள். இம்முறையினுல் அவள் சக்திவாய்ந்த மிக முக்கியமானவளாகக் கருதப்பெற்ருள்.

இதிலிருந்து ஒரு அம்சம் தெளிவாகிறது. இப்படிப்பட்ட வலிப்புகளைக் குடும்பத்தின் கௌரவத்தைக் குலைப்பவையாகவோ அல்லது பயங்கர நோயின் அடையாளங்களாகவோ கொள் ளாமல், பண்பாடானது தன்னைச்சார்ந்தவர்களின்மேல் அதிகாரம் பெறும் ஒரு வழியாக அமைத்துக் கொடுத்துவிட்டது. அவர்கள் தங்கள் சமூகத்தில் மிகவும் மரியாதைக்குரியவர்களாக இருந்தனர். சமுதாயத்தில் கௌரவத்துடனும் பயனடையும் தன்மைபெற்றும் செயலாற்றினர். இந்தப் பண்பாட்டிலே வலிப்புகள்கொண்ட தனிமனிதர்கள்தாம் அதிகாரத்திற்கும் தலைமைப் பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும், சமூகமுறையில் இப்படிப் பட்ட 'அசாதாரண'மான தன்மையானது, அம் மக்களின் பண் பாட்டு வழியிலே தேர்ந்தெடுக்கப்படுமாளுல் அவை பயன்தரத் தக்கவையென நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சைபீரியாவிலுள்ள தெய்வத்தன்மை பெற்றவர்கள் அவர்கள் சமுதாயங்களில் ஆதிக் கம் பெற்றிருக்கின்றனர். இம் மக்களின் எண்ணங்களிலே, இப்படிப் பட்ட தனிமனிதர்கள் ஆவிகளுக்கு அடங்கி நடப்பதன்மூலம் ஒரு தீராத நோயினின்றும் வலிப்பு வருதல்மூலமாகக் குணப்படுத் தப்பெறுகின்றனர். இம்முறையிலே இயற்கைக்கப்பாற்பட்ட பெரும் சக்தியையும், இணையில்லா வீர்யத்தையும், உடல் நலனை யும் பெறுகின்றனர். சிலர் இப்படி நேரும் காலத்தில் பல ஆண்டு களுக்குக் கடுமையான பித்துப் பிடித்து இருக்கின்றனர். சிலர் பொறுப்பற்ற முறையில் பனிக்கட்டுகளின்மீது சென்று உறைந்து விடாவண்ணம், எப்பொழுதும் கண்காணிக்கவேண்டிய அளவு தன்வசமிழந்துவிடுகின்றனர். சிலர் நோயுற்று இளைத்து, உடல் முழுவதும் இரத்தவேர்வை வழிய சாவின் எல்லைவரை சென்று விடுகின்றனர். தெய்வத்தன்மை பெற்றவனின் தொழில்தான் இவர்களைக் குணப்படுத்தமுடியும். சைபீரியாவின் ஆவியுலக சம்பந்தமான இந்த அனுபவம் அவர்களை நிம்மதியடையச்செய்து மறுபடியும் இப்படி ஒரு ஆட்டத்திற்குத் தயாராக ஆக்குகிறது என்று அவர்கள் சொல்லுகின்றனர். வலிப்புகள் வருவது தெய்வத்

தன்மை பெற்றவனது ஆட்டத்தின் முக்கியமான பகுதியாகக் கருதப்பெற்றது.

கானன் காலவே (Canon Callaway) என்பவர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு வயதான ஸுலு (Zulu) மனிதனின் வார்த்தைகளில், தெய்வத்தன்மை பெற்றவனின் நரம்புக் கோளாறையும், அவனது சமூகம் அவனைக் கவனிப்பதையும் வர்ணித்திருக்கிறார். காரணம் கண்டு பிடிப்பவனாக மாறுவதற்கு ஒரு மனிதனுக்குத் தேவையான நிலைகள் இதுதான். முதலிலே அவன் உடல்நலம் மிக்கவனாகவே இருக்கிறான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மெலிய ஆரம்பிக்கிறான். சில குறிப்பிட்ட உணவுகளை விலக்குவதால் மெலிகிறான், நோயினாலன்று. அவன் தேர்ந்தெடுக்கின்றவைகளில்கூட அதிகம் உண்ணுவதில்லை. அவன் உடலில் பல பாகங்களில் வலியென்று சொல்லுகிறான். ஆற்றில் அடித்துக்கொண்டு போகப் பட்டதாகத் தான் கண்ட கனவை அவர்களுக்குச் சொல்கிறான். அவன் பல விஷயங்களைப்பற்றிக் கனவு காண்கிறான். அவனது உடல் (ஒரு ஆற்றைப்போல்) சேருகிவிடுகிறது. அவன் கனவுகளின் இருப்பிடமாக இருக்கிறான். அவன் பல விஷயங்களைப் பற்றி அடிக்கடிக் கனவுகண்டு விழித்தவுடன் தன் நண்பர்களிடம் 'இன்று என்னுடம்பு சேருகிவிட்டது. பலர் என்னைக் கொன்று கொண்டிருப்பதாகக் கனவு கண்டேன். எப்படித் தப்பினேன் என்று எனக்குத் தெரியவில்லை. விழித்தவுடன் என்னுடலின் ஒரு பகுதி மற்றப் பகுதிகளைவிட்டு வேறுபட்டிருந்தது. அது முழுவதும் முன்போல் இல்லை' என்று கூறுவான். கடைசியில் அவன் மிகவும் நோயால் வருந்தும்போது காரணம் கண்டுபிடிப்பவனிடம் சென்று விசாரிக்கின்றனர்.

காரணம் கண்டுபிடிப்பவர்கள் உடனேயே அவனுக்கு மிருதுவான தலை ஏற்படப்போவதைக் (அதாவது தெய்வத்தன்மையோடு இணைந்த உணர்ச்சியுறும் தன்மை) காணமுடிவதில்லை. உண்மையைக் காண்பது அவர்களுக்குக் கடினமே. அவர்கள் முட்டாள்தனமாகப் பேசித் தவறான கருத்துகளை வெளியிடுகின்றனர். அவனது மக்களின் ஆவி ஆடுமாடுகளைக் கேட்பதாகவும், ஆவி உணவு உட்கொள்ளவேண்டும் என்றும், அவனுடைய ஆடுமாடுகளைக் கொன்று தின்றுவிடுகின்றனர். கடைசியில் அவனது சொத்துகள் எல்லாம் அழிந்துவிடுகின்றன. ஆனால், அவன் நோய் குணமாவதில்லை. அவனுக்கு இன்னும் ஆடுமாடுகள் இல்லாமற்போகவே என்ன செய்வதென்று அறியாமல் நிற்கின்றனர். அவனுக்குத் தேவையானவற்றை அவனது நண்பர்கள் கொடுத்து உதவுகின்றனர்.

இறுதியில் வேறொரு காரணங்கண்டுபிடிப்பவன் வந்து மற்றவர்கள் சொல்வதெல்லாம் தவறு என்று சொல்கிறான். அவன், “அவன் ஆவிகளால் பீடிக்கப்பட்டிருக்கிறான். வேறொன்றுமில்லை. அவனுடலுக்குள்ளேயே அவைகள் இருகூறாகப் பிரிந்து நடனமாடுகின்றன. சில ‘நம் குழந்தை காயமடைவதை நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு அது விருப்பமில்லை’ எனக் கூறுகின்றன. அதனால்தான் அவன் குணமடையவில்லை. ஆவிகளின் வழியைத் தடுத்தால் நீங்கள் அவனைக்கொன்றுவிடுவீர்கள். ஏனென்றால், அவன் காரணங்கண்டுபிடிப்பவனாக ஆகமாட்டான். அவன் மறுபடியும் மனிதனாகவே ஆகமாட்டான்” என்று கூறுவான்.

ஆகவே, அவன் இரண்டு ஆண்டுகளுக்குக் குணமடையாமலே நோயுடனிருப்பான். அதற்கு மேலும் அப்படியிருக்கலாம். அவன் வீட்டுக்குள்ளேயே அடங்கியிருக்கிறான். அவன் தலைமயிர் உதிர்ந்துபோகும்வரை இது நீடிக்கிறது. அவனது உடல் காய்ந்துவிடுகிறது. அவன் தன்மேல் எண்ணெய் பூசிக்கொள்ள விரும்புவதில்லை. அடிக்கடி தும்முவதாலும் கொட்டாவிவிடுவதன் மூலமும், தான் ஒரு காரணங்கண்டுபிடிப்பவனாக ஆகப்போகிறான் என்பதைக் காட்டிக்கொள்கிறான். அவன் சிறிதுநேரங்கூடப் பொடி போடாமல் இருக்கமாட்டான். அவன் பொடியின்மேல் மிக விருப்பமாயுள்ளான் என்பதும் இதையே காட்டுகிறது. அவனுக்குத் தேவையானவற்றை மக்கள் அவனுக்குக் கொடுக்க ஆரம்பிக்கின்றனர்.

அதற்குப்பிறகு அவன் நோயுற்றிருக்கிறான். அடிக்கடி அவனுக்கு வலிப்புகள் வருகின்றன. அவன்மேல் தண்ணீர் கொட்டினால் வலிப்புகள் நின்றுவிடுகின்றன. அவன் கண்ணீர் சிந்துகிறான். கடைசியில் அவன் வாய்விட்டு உரக்க அழுகிறான். மக்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவன் சத்தமிடுகிறான். தன் பாட்டின்மூலம் அவர்களை எழுப்பிவிடுகிறான். அவன் ஒரு பாட்டை இயற்றிவிட்டான். மக்கள் அவனுடன் சேர்ந்து பாடச் செல்கின்றனர். கிராமத்தார் எல்லாரும் தூக்கமின்றி வருந்துகின்றனர். ஏனென்றால், காரணங்கண்டுபிடிப்பவனாக மாறுபவன் தூங்காமல், மூளையினால் அதிகவேலை செய்துகொண்டு மற்றவர்களை மிகவும் துன்புறுத்துகிறான். சிறிதுசிறிது தூங்கி, பல பாட்டுக்களைப் பாடிக்கொண்டே எழுந்துவிடுகிறான். அருகில் உள்ள மக்கள் தங்கள் கிராமங்களைவிட்டு இவன் உரக்கப் பாடுவதைக் கேட்டு அவனுடன் சேர்ந்துபாட விரைகின்றனர். சிலசமயம் அவன் யாரும் தூங்கமுடியாமல் காலைவரை பாடிக்கொண்டே

யிருக்கிறான். பிறகு தவளையைப்போல் வீட்டிலே தத்தித்தத்திக் குதிக்கிறான். அவனுக்கு வீடு சிறியதாக இருப்பதால் வெளியே தத்திக்கொண்டும் பாடிக்கொண்டும் வருகிறான். வியர்வை சொட்டச் சொட்ட நீரிலாடும் நாணல்போல் நடுங்குகிறான்.

இந்த நிலையில் அவனது சாவு தினமும் எதிர்பார்க்கப்படு கிறது. அவன் எலும்பும் தோலுமாகக் காட்சிதருவதால் மறுநாள் ஞாயிறு உதிக்கும்போது அவனைக் காணமுடியாது என நினைக் கின்றனர். இச்சமயம் அநேக கால்நடைகள் உண்ணப்பெறு கின்றன. ஏனென்றால், அவன் காரணங்கண்டுபிடிப்பவனாக மாறு வதை மக்கள் உற்சாகப்படுத்துகின்றனர். கடைசியில் (கனவில்) ஒரு மூதாதையான ஆவி அவனுக்குக் காட்டப்பெறுகிறது. அந்த ஆவி அவனிடம், 'அவனிடம் போ. அவன் உனக்காக ஒரு வாந்திமருந்தைக் கடைந்து (தெய்வத்தன்மையுறும் துவக்கச் சடங்கின் ஓர் அமிசமாகக் குடிக்கும் மருந்து) நீ முழுமையான காரணங்கண்டுபிடிப்பவனாக மாறும்பொருட்டு உனக்களிப்பான்' என்று சொல்லும். பிறகு, தனக்காக மருந்து கடைந்துகொடுக்கும் காரணங்கண்டுபிடிப்பவனிடம் சென்று சிலநாள் அமைதியாக இருக்கிறான். அவன் வேறு மனிதனாக மாறி, தூய்மைப்படுத்தப் பட்டு, காரணங்கண்டுபிடிப்பவனாகத் திரும்பிவருகிறான்.

பிறகு, அவன் ஆயுள்முழுவதும் ஆவிகளால் பீடிக்கப்பட் டிருக்கும்பொழுதெல்லாம், வருவனவற்றை முன்கூட்டி உரைத் தும் இழந்த பொருள்களைக் கண்டுபிடித்தும் தொழில் புரி கிறான்.

பண்பாடு, நிலைபெறாத மனிதத்தன்மையுடையவரைக்கூட சமூகத்தில் ஏற்றுக்கொண்டு மதிப்புத் தரலாம் என்று தெரிகிறது. அவர்களுடைய தனித்தன்மைகளை மனித நடத்தைகளில் மதிப் புப் பெற்றதாக பண்பாடு ஏற்றுக்கொள்ளும்போது அவர்களும் சமயத்துக்கேற்றவாறு உயர்ந்து சமூக வேலைகளைச் செவ்வனே செய்கின்றனர். சமூகத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதிநிலை களை நாம் எண்ணியவாறு அடையாமல் அவர்கள் இயற்கையாக ஒன்றிவிடுகின்றனர். சில குறிப்பிட்ட அசாதாரண குணப்பாங்கு களைக் கொண்டவர்கள் சமூகத்திலே செயலற்றிருக்கவில்லை. பண்பாட்டு நிறுவனங்களாலே ஆதரவு தரப்பெறாத துலங்கல்களை உடையவர்களாகவும் இருக்கலாம். இப்படித் திரிபுபெற்றவர் களின் குறைபாடு வெறும் தோற்றமேயாகும். அவர்கள் இயற்கை யான வலிமை பெற்றிருக்கவில்லை என்பதை அது எடுத்துக்காட்ட வில்லை. ஆனால், அவர்கள் சமூகத்தால் உறுதிசெய்யப்படாத துலங்கல்களை உடையவர்களாவர். ஸபீர் கூறுவதுபோல்

அவர்கள் 'ஒரு வசிக்கமுடியாத உலகத்தினின்று வேறுபட்டவர்களாக' இருக்கின்றனர்.

ஐரோப்பிய இலக்கியத்திலே, டான் க்விக்ஸாட் (Don Quixote) என்னும் நபர் தன்னுடைய காலம், இடம் இவைகளின் தகுதிநிலைகளால் ஆதரவு தரப்பெருமல் கேலிக்கிடமான ஒரு பாத்திரமாக மறக்கமுடியாவண்ணம் தீட்டப்பெற்றிருக்கிருர். ஸெர்வான்டெஸ் (Cervantas) இன்னும் மதிப்புத் தரப்பெறுகிற மரபின்மீதே மாறுபட்டுப்போன தகுதிநிலைகளையுடைய ஒரு வெளிச்சத்தைத் திருப்பினுர். அப்போது வேறு தலைமுறையைச் சார்ந்த, அவரது ஆசாரசீலமுள்ள கதாநாயகன் முட்டாளாகத் தோற்றமளித்தான். மறைந்துபோன உலகத்தின் எதிரியான காற்று இயந்திரத்தை அவர் எதிர்த்தது பித்துப்பிடித்தவன் செயல்போன்று இருந்தது. மரபுவழியே வந்த கண்ணியத்தோடு அவன் தன் காதலியான டல்ஸினியாவைக் (Dulcinea) காதலித்தான். ஆனுல், அச் சமயம் வேறுவிதமான காதல் வழக்கமாக இருக்கவே, அவரது ஆசை பித்துப்பிடித்தவன் தன்மையதாக இருந்தது.

பழங்குடி மக்களில் நாம் பார்த்த வேறுபட்ட உலகங்கள் பல இடங்களில் பிரிந்து தனித்திருந்தன. மேற்கத்திய சரித்திரத்திலே இவை பல காலங்களில் ஒன்றையொன்று தொடர்ந்துவந்தன. இரண்டு இடங்களிலும் பிரச்சினை ஒன்றுதான். ஆனுல், தற்கால உலகத்திலே இதைப் புரிந்துகொள்ளவேண்டிய அவசியம் முக்கியமானது. ஏனென்ருல், நாம் விரும்பினுல்கூடப் பல பண்பாட்டு உருவகங்கள் காலங்களில் ஒன்றன்பின் ஒன்ருக வருவதை நாம் கவனிக்காமல் இருக்கமுடியாது.

உதாரணமாக, எஸ்கிமோ (Eskimo) மக்கள் பண்பாட்டைப் போன்று, ஒவ்வொரு பண்பாடும் தனிப்பட்ட ஓர் உலகமாக நிலைபெற்று, புவியியல் முறையில் மற்ற எல்லாப்பண்பாடுகளையும் விட்டுப் பிரிந்து இருக்குமானுல், பிரச்சினை சாதாரணமானதேயாகும். ஆனுல், நமது நாகரிகம் கண்ணெதிரிலேயே மறைகின்ற பண்பாட்டுத் தகுதிநிலைகளையும், புதிய தகுதிநிலைகள் தோன்றுவதையும் கவனிக்கவேண்டும். நாம் வளர்க்கின்ற நன்னெறிமுறையில்கூட மாறிவருகின்ற நிலைகளை நாம் கவனிக்கவேண்டும். எப்படி நெறிமுறைப் பிரச்சினைகளைத் தீர்க்கும்பொழுது நாம் நமது நன்னெறிகளைப்பற்றிய எண்ணத்தினுல் அவதியுறுகிருேமோ அவ்வாறே மனித சமூகத்தைப்பற்றிக் கவனிக்கும்போது, ஆங்காங்கே உள்ள நமது தகுதிநிலைகளை வாழ்வுக்குத் தவிர்க்கமுடியாத தேவைகள் என்று பாவித்துவிடுகிருேம்.

அடுத்த தலைமுறையில் உண்டாகக்கூடிய தகுதிநிலைகளை வேண்டுமென்று முனைப்படுத்துவதற்கான செய்கைகளை எந்தச் சமூகமும் செய்ததில்லை.

இப்படிச் சமூகமுறையில் திட்டமிட்டுச் செயலாற்றுவது எவ்வளவுதூரம் சாத்தியமானது என்பதும் ட்யூவி (Dewey) அவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில மரபுவழி ஏற்பாடுகளில் மனிதனின் துன்பமும் நம்பிக்கையிழந்த நிலையுங்கொண்டு இதற்காக எவ்வளவு உயர்ந்த தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது. இந்த ஏற்பாடுகள், கட்டாயத்தன்மையின்றி சாதாரண ஏற்பாடுகளாகவே தோன்றினால், நாம் பகுத்தறிவால் தேர்ந்தெடுத்த குறிக்கோள்களுக்காக அவைகளை மாற்றியமைத்துவிடலாம். ஆனால், நாம் செய்வது என்ன? வழக்கம் விட்டொழிந்த மரபின் பிரதிநிதியான டான் க்விக்ஸாட்டைக் கேலிசெய்கிறோம். நமது தகுதிநிலைகளையே முடிவுள்ளதாகவும் இயற்கையால் குறிக்கப்பட்டதாகவும் கொள்கிறோம்.

இதற்கிடையில், இதைப்போன்ற நம்மிடையேயுள்ள உள நோயாளிகளைக் கையாளும் உளமருத்துவப்பிரச்சினைகள் தவருகப் புரிந்துகொள்ளப்படுகின்றன. உலகத்தின் வழியினின்றும் அவர்கள் மாறுபட்டிருப்பதைப் புத்திசாலித்தனமாகக் கையாளலாம். அவர்களுக்கு ஒவ்வாத நடத்தைகளை அவர்கள் கைக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துவதால் இது நடைபெறுது. வேறு இரண்டுவழிகளும் சாத்தியப்படலாம். முதலாவதாகப் பண்பாட்டில் ஒன்ருத மனிதன், தான் தேர்ந்தெடுத்துள்ள குணப்பாங்குகளின்மீது அதிக அக்கறை செலுத்தி, சாதாரணத்தன்மையிலிருந்து தான் வேறுபட்டிருப்பதை, உள்ளச் சமநிலையோடு கையாளப் பழகிக்கொள்ளலாம். தான் படுந்துன்பம் எவ்வளவு தூரம் தன் மரபின் பண்புகளால் ஆதரிக்கப்பெருமையால் ஏற்படுகிறதென்று அவன் தெரிந்துகொண்டால், தான் வேறுபட்டிருக்கும் அளவை அதிகத்துன்பமில்லாமல் ஏற்றுக்கொள்ளச் சிறிதுசிறிதாக அறிந்துகொள்ளலாம். சோர்வுநிலை, உணர்ச்சிநிலை மாறிமாறித் தோன்றும் நோயுடையவரின் மிகைப்பட்ட உணர்ச்சிக்கொந்தளிப்பும் பிளவுபட்ட மனப்பான்மை உடையவரின் தனித்திருக்கும் தன்மையும் வாழ்க்கையில் சில தனிமதிப்புகளை ஏற்படுத்துகின்றன; இவை சாதாரணமானவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆதரவு தரப்படாத தனிமனிதன் துணிந்து தன் குணப்பாங்குகளை ஏற்றுக்கொண்டால், பொருந்தக்கூடிய ஒரு நடத்தையை அடையலாம். தானுக ஏற்படுத்திக்கொண்ட ஒரு தனிஉலகத்தில் அடைக்கலம் புகத் தேவையில்லை. தன்னுடைய மாறுபட்ட இயல்புகளின்மேல்

ஒரு தனிப்பட்ட துன்பங்குறைந்த ஈடுபாட்டை அடைந்து அதன் வழியே செயலாற்றும் வாழ்வை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டாவதாக, நோயாளி தன்னைத்தான் சரிப்படுத்திக் கொள்வதுபோலவே சமூகமும் அவனைச் சகிப்புத்தன்மையோடு காணவேண்டும். இதற்கான வழிகள் ஏராளமாக உள்ளன. நோயாளியைப்போலவே மரபும் நரம்புநோய் வசமானதுபோல் உள்ளது. உளநோயைப் போலவே, தான் சிறப்பாகக் கருதுகிற தகுதிநிலைகளினின்றும் மாறுபட்டிருப்பதைக் கண்டு அஞ்சுகிறது. சமூக நலனுக்காகப் பொருத்தமுற்றிருப்பது எந்த நிலைகளுக்குள் அவசியம் என்பதை இது பொறுத்ததில்லை. மற்றப் பண்பாடுகளை விடச் சில பண்பாடுகளில் தனிமனிதர்களுக்கு மாறுபட்டிருக்கும் உரிமை அதிகமாக வழங்கப்படுகிறது. இப்படி அதிக உரிமை ஏற்பட்டிருக்கும் தனி மனிதர்கள் தங்கள் குறையினால் துன்பப் படுவதாகத் தெரியவில்லை. நாம் இதுவரை பல பண்பாடுகளில் கண்டு அனுபவப்படாத அளவுக்கு வருங்கால சமூக அமைப்புகள் சகிப்புத்தன்மையையும், தனி மனிதர்கள் வேறுபட்டிருப்பதை ஆதரிப்பதையும் வளர்க்கலாம்.

தற்காலத்தில் அமெரிக்காவின் ஈடுபாடுகள் இதற்கு நேர்எதிர் கோணத்தில் சாய்ந்திருப்பதைக்கொண்டு, வரப்போகின்ற மாற்றங்களை நாம் சரியாக அறியமுடியவில்லை. மிடில்ட்டௌன் நகரில் நமது அண்டைவீட்டுக்காரர்களைக் காட்டிலும் சிறிதளவுகூட வேறுபட்டிருக்கக்கூடாது என்னும் மனப்பாங்கு இதற்கு ஓர் உதாரணமாகும். பிறரைச் சுரண்டி வாழ்வதைவிட விசித்திர மனப்போக்கு மிகவும் பயங்கரமாகக் கருதப்பெறுகிறது. குடும்பத்தில் யாரும் பொருந்தாத பண்புடையவராகக் கருதப்பெறக் கூடாது என்பதற்காக, நோக்கத்தையும் அமைதியையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளனர். ஒரேமாதிரியான காலுறை அணியாததாலும், ஒரு குறிப்பிட்ட காரை ஓட்டாததாலும் பள்ளிக்குழந்தைகள் துக்ககரமான நிலையை ஏற்படுத்துகிறார்கள். வேறுபட்டிருக்கும் நிலையைக்கண்டு ஏற்படுகிற அச்சம், மிடில்டௌனில், ஓர் ஆதிக்கம்பெற்ற நோக்கமாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட நோக்கங்களால் ஏற்படுகிற உளநோய்களின் தொகை நமது நாட்டில் இருக்கிற ஒவ்வோர் உளநோய்க்கான நிறுவனங்களாலும் தெரிகிறது. இந்த நோக்கம் முக்கியமானதாக இல்லாத ஒரு சமூகத்தில் நிலைமை வேறுமாதிரியாக இருக்கும். எது எப்படியிருந்தாலும் இன்றைய அமெரிக்காவில், துக்ககரமான உளநோய்கள் அதிகமாவதைத் தடுக்க, சமூகத்திலே சகிப்புத் தன்மையை வளர்க்கும் சுயமரியாதை, பிறரை நம்பாது

தன்னையே நம்பிவாழ்தல்போன்ற தன்மைகளைக் கற்றுக்கொடுக்கும் முறையை அனுசரிக்கவேண்டும். நமது நகரங்களின் மரபுக்கும் மிடில்டௌனுக்கும் இது புறம்பானதாக இருக்கும்.

எல்லா உளநோய்களிலும், தங்கள் நாகரிகத்திற்கு ஒவ்வாத துலங்கல்களை உடையவரல்லர். வேருெரு பெரிய கூட்டம், தங்களால் தாங்கமுடியாத அளவுக்குத் தோல்வியைப் பெற்று, தகுதியடையா நிலையிலுள்ளவர்களால் ஆனது. மனஉறுதி கௌரவிக்கப்படுகிற சமூகத்தில் வேறுவிதமான நடத்தையுள்ளவர்கள் தோல்வியுறவில்லை. எவருக்குப் போதுமான அளவுக்கு அந்தச் சக்தி இல்லையோ அவர் தோல்வியுறுகின்றனர். நமது சமூகத்தில் தாழ்வு மனப்பான்மையினுல் அதிகத் துன்பங்கள் விளைகின்றன. இப்படித் துன்புறுபவர்கள் நம்பிக்கையிழந்த நிலையான ஒரு சரித்திரத்தைப்பின்னணியாகக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு குறிப்பிட்ட குறிக்கோள் அடையத் தகுதிபெருமல் இருப்பதால் ஏற்படுவதுதான் அவர்களுடைய நம்பிக்கையிழந்த நிலைக்குக் காரணமாகும். மரபுவழியான குறிக்கோள் பெரும்பான்மையோர் அடையக்கூடியதாகவும் சிறுபான்மையோர்க்கு அடையக்கூடாததாகவும், அதுபோன்றே வெற்றியென்பது சிலருக்குமட்டுமே கிட்டுவதாகவும் உள்ளமையால், பெருவாரியான மக்கள் தகுதிபெருத, பொருந்தாத நிலையில் இருப்பதற்கு வாய்ப்பளிக்கிறது.

ஆகையால், ஓரளவுக்கு உயர்ந்த பயனுள்ள குறிக்கோள்களை நாகரிகம் அமைப்பதால், அசாதாரணத் தன்மைபெற்ருேர் எண்ணிக்கையும் அதிகமாகலாம். ஆனுல், மிக எளிதாக இதை மிகைபடுத்திச் சொல்லிவிடலாம். ஏனென்ருல், சமூக ஈடுபாடுகளில் சிறு மாற்றங்கள்கூட இந்தத் தொடர்பைவிட அதிகமாக இருக்கலாம். ஆகவே, சகிப்புத்தன்மை தனி மனிதர்களின் மாறுபாடுகளைப்பற்றிப் புரிந்துகொள்வது என்ற சாத்தியமான முறைகள் செயல்முறையிலே ஆய்வு செய்யப்பெறவில்லை என்பதால், எதிலும் கெடுதலைக்காணும் மனப்பாங்கு ஏற்படவேண்டியதில்லை. நாம் கவனித்த மற்ற சமூகக் காரணிகளாலும் நம்மிடையேயுள்ள நரம்புநோய், உளநோய்கள் ஏற்பட்டிருக்கலாம். இந்த மற்றக் காரணிகளை நாகரிகங்கள் வேண்டுமென்ருல் அதிக அவசியமற்ற இழப்புகள் ஏற்படாமலேயே கையாளலாம்.

தங்கள் சமூகங்களிலே, செயலாற்றும் தகுதியைக்கொண்டே தனிமனிதர்களை நாம் இதுவரைக் கவனித்தோம். இப்படிச் செயலாற்றும் தகுதிபெற்றிருத்தலை மருத்துவமுறையிலே சாதாரணத்

தன்மை எனக் குறிப்பிடுகின்றனர். சில குறிப்பிட்ட அடையாளங் களைக் கொண்டும் அதைக் குறிக்கின்றனர். புள்ளியியல்முறை சராசரியைக்கொண்டு சாதாரணத்தன்மையைக் குறிப்பிடுவதும் வழக்கமாகிவிட்டது. செயல்முறையில் இந்தச் சராசரி ஆய்வுக் கூடத்திலே கண்டுபிடிக்கப்படுகிறது. இதனின்றும் வேறுபட்டு இருப்பதை அசாதாரணமான தன்மையுடையது என்று கொள் ளப்படுகிறது.

ஒரேயொரு பண்பாட்டைக் கவனிக்கும்போது இந்தமுறை பயனுள்ளதுதான். ஒரு நாகரிகத்தின் மருத்துவநிலையை அது எடுத்துக்காட்டி சமூகத்தில் ஒப்புக்கொள்ளக்கூடிய நடத்தை யின் விவரங்களை அளிக்கிறது, இதையே பொதுப்படையாகச் சிறப்புப்பெற்ற சாதாரணத்தன்மை எனக் குறிப்பிடுவது வேறு விஷயம், நாம் கண்டபடி வெவ்வேறு பண்பாடுகளில் உள்ள சாதாரணத்தன்மைகள் ஒன்றுக இல்லை. ஸுனி, க்வாக்யூட்ல் மக்களைப்போன்ற சிலரில் இத் தன்மை ஒன்றையொன்று தழு வாது வேறுபட்டிருக்கின்றன. வடமேற்குக் கரையில் புள்ளி யியல் வழியாகக் காணும் சாதாரணத்தன்மை ப்யூப்லோ மக்க ளின் அசாதாரணத் தன்மையைக்காட்டிலும் தனித்து நிற்கிறது. க்வாக்யூட்ல் மக்களின் விரோதப் போட்டிகள் ஸுனி மக்களால் பைத்தியக்காரத்தனமாக எண்ணப்பெறும். அதுபோன்றே ஸுனி மனிதர் பிறரை அவமானப்படுத்தவும் ஆதிக்கம் பெறவும் கவலையற்றிருப்பது வடமேற்குக் கடற்கரை உயர்குடிப்பிறந் தோனிடம் முட்டாள்தனமான நடத்தையாகக் கருதப்பெறும். நடத்தைகளின் பொது அமிசங்களைக்கொண்டு இரு நடத்தைகளி லும் திரிபுபெற்ற நடத்தையைத் தீர்மானிக்கமுடியாது. ஒவ் வொரு சமூகமும் அதனதன் முழுக்கவனத்தையும் ஈர்க்கின்ற நோக்கங்களையொட்டி, நரம்புத்தளர்ச்சி, வலிப்பு, பலாத்கார முறை ஆகிய குறிகளை அதிகப்படுத்தி வலியுறுத்தலாம். அதே சமயத்தில் இந்தக் குறிகளையுடைய தனிமனிதர்களின்மேல் சமூகம் அதிகமாக நம்பிக்கையும் வைக்கலாம்.

இந்த விவரம் உளமருத்துவத்திலே மிக முக்கியமானது. ஏனென்றுல், ஒவ்வொரு பண்பாட்டிலும் இருக்கக்கூடிய வேருெரு வகை அசாதாரணத் தன்மைபெற்றவரைத் தெளிவாக்குகிறது. இந்தக் கூட்டம், தங்கள் பண்பாட்டுத் தகுதிநிலைகளுக்கு மாறு பட்ட துலங்கல்களையுடைய, நாம் விவரித்த கூட்டத்திற்கு எதி ரிடையானது. சமூகம், முன்சொன்ன கூட்டத்தை ஒவ்வொரு கட்டத்திலும் காட்டிக்கொடுத்துவிடாமல் அவர்களுடைய தீவிரத் திரிபுகளையும் ஆதரிக்கலாம். அவர்கள் பயன்படுத்தக்கூடிய ஓர்

அனுமதியைப் பெற்றிருக்கின்றனர். அதனாலேயே உளமருத்துவத்தில் இவர்கள் இடம் பெறுவதில்லை. அவர்கள் ஆதரிக்கப்படுகிற தலைமுறையின், மிகக் கவனத்துடன் ஏற்பட்ட குறிப்புகளில் கூட அவர்கள் வர்ணிக்கப்பெற்றிருக்கமாட்டார்கள். வேறு தலைமுறையின் கண்ணோட்டத்தில் அவர்கள் அந்தத் தலைமுறையிலே மிகவும் இயல்புக்கு மாறான உளநோயாளிகளாகவே தென்படுகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் நியூ இங்கிலாந்திலுள்ள நெறிமுறை யுடையோரைக் (ஆசாரமுடைய தன்மை) காலனிகளிலேயுள்ள மக்கள் உளநோயாளிகளாகக் கருதவில்லை. ஒருசில மக்களில்மட்டுமே இவ்வளவு அறிவுச் சுதந்திரம், உணர்ச்சியை ஆக்குவிக்கும் சுதந்திரம் முதலியவை இவர்களைப்போன்று அளிக்கப்பெற்றிருந்தன. கடவுளின் குரலாகவே அவர்களுடைய சொற்களை ஏற்றனர். ஆயினும், இன்று பார்ப்பவனுக்கு அவர்களே நியூ இங்கிலாந்தின் உளநோயமைந்த நெறிமுறையாளராகத் தென்பட்டனர். அவர்கள் துன்புறுத்திக் கொன்ற சூன்யக்காரிகள் அப்படிக் காணப்படவில்லை. தங்கள் மதமாற்ற அனுபவங்களிலும் அவர்கள் மாற்றியவர்களுடைய அனுபவங்களிலும் உள்ள குற்ற மனப்பான்மையை, சிறிதளவு பகுத்தறிவுள்ள நாகரிகத்தில் உளநோயாளிகளுக்கான நிறுவனங்களிலேதான் காணமுடியும். பாவத்தை ஒப்புக்கொண்டு பல ஆண்டுகளுக்குத் துன்பமும் வெட்கமுங்கொண்டு வருந்துகிற ஓர் உணர்ச்சியையன்றி வேறு வழியிலே பேரின்பத்தை அடையமுடியாது என்று அவர்கள் கருதினர். ஒவ்வொரு பூசாரியும் சிறு குழந்தையின் உள்ளத்திலேகூட நரகத்தின் பயத்தை ஏற்படுத்துவது கடமையெனக் கொள்ளப்பட்டது. கடவுள், ஒருவனைச் சாபமிட நினைத்தால் அவன் அதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என்று வற்புறுத்தப்பெற்றது. அந்தக் காலத்து நியூ இங்கிலாந்தின் மதக்கோயில்களைப்பற்றிய வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால், அதில் தீவிரமாகச் செயலாற்றியவர்கள் நமது தகுதிநிலைகளின் தராதரத்தில் மிகவும் திரிபுபெற்றவர்களாகவே இருந்திருக்கின்றனர் என்பது புலப்படும். சூன்யக்காரிகளைக் கையாளுவது, பத்துவயதுகூட நிரம்பாத குழந்தைகள் காப்பாற்றப்படமுடியாமல்போவது, சாபம், ஊழ்வினை ஆகிய எந்த அமிசத்தை எடுத்துக்கொண்டாலும்சரி நாம் இதையே காண்கிறோம். உளமருத்துவத்தில் ஒப்பிட்டுப் பார்க்கும் முறையில் இவர்கள் அசாதாரணத் தன்மையுள்ளவர்களாகவே இருந்தனர்.

நமது தலைமுறையில்கூடத் தன் முனைப்பைத் திருப்திசெய்துகொள்வது பண்பாட்டினால் ஆதரவு தரப்பெறுகிறது. திமிர்

பிடித்த, கட்டுக்கடங்காத குடும்ப மனிதர்கள், சட்ட அதிகாரிகள், தொழிலதிபர்கள் ஆகிய பாத்திரங்களை நாவலாசிரியர்களும் நாடகாசிரியர்களும் அடிக்கடி உருவகப்படுத்திக் காட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு சமுதாயத்திலும் இவர்களைக் காணலாம். நெறிமுறையாளர்களின் நடத்தையைப்போன்று இவர்களது செயலும் சிறைவாசிகளின் நடத்தையைவிட அதிகமாகச் சமூகத்தில் ஒவ்வாத நடத்தைகளாக இருக்கின்றன. அவர்களைச்சுற்றி அவர்கள் உண்டாக்கும் துன்பத்திற்கும் நம்பிக்கையிழந்த நிலைகளுக்கும் ஈடுஇணையே கிடையாது. குறைந்தபட்சம் உளநிலைகளாவது திருப்பெற்றுவிடுகின்றன. ஆயினும் அவர்களுக்கு மிகவும் பொறுப்பும் அதிகாரமும் நிறைந்த நிலைகள் அளிக்கப்பட்டுக் குடும்பங்களின் தலைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கள் குழந்தைகள்மீதும் நமது சமூகத்தின்மீதும் ஏற்படுத்துகிற முத்திரை அழிக்கமுடியாததாக இருக்கின்றது. உளமருத்துவ நூல்களில் அவர்கள் வர்ணிக்கப்பெறுவதில்லை. ஏனென்றால், நமது நாகரிகம் அவர்களை எல்லா அமிசத்திலும் ஆதரிக்கின்றது. உண்மை வாழ்க்கையிலே அவர்கள் தன்னம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இது தங்கள் பண்பாட்டு முனைப்புகளுக்கு அனுகூலமான ஈடுபாடு உள்ளவர்களால்தான் முடியும். எப்படியும் வருங்கால உளமருத்துவத்தில் நமது நாவல்கள், கடிதங்கள், பொதுப் பதிவேடுகள் ஆகியவற்றை ஆய்ந்து ஓர் அசாதாரணத்தன்மையை நிரூபிக்க எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு சமூகத்திலும் பண்பாட்டினால் ஊக்குவிக்கப்பட்டுப் பலப்படுத்தப்படுகிற இந்த கூட்டத்தினுள்தான் மனித நடத்தையின் சில தீவிர வகைகள் வளர்க்கப் பெறுகின்றன.

பண்பாட்டு ஒப்புமையைப்பற்றிச் சரியாகக் கவனிக்கவேண்டியது தற்காலச் சமூகவியலுக்கு மிகவும் அவசியமானதாகும். சமூகவியல், உளவியல் ஆகிய இரு துறைகளிலும் இந்த உட்கிடை அடிப்படையானது, மக்களின் தொடர்புகள், நமது மாறுபட்டுக்கொண்டிருக்கிற தகுதிநிலைகள் ஆகியவைபற்றியுள்ள தற்கால எண்ணம் விஞ்ஞான ரீதியிலே ஈடுபடுத்தப்பெறவேண்டும். வளர்ந்து திரிபடைந்த தற்கால மனப்பான்மை, அஃது அறிந்த சிறிய இடத்திலேகூட சமூக ஒப்புமைகளை நம்பிக்கையிழந்த கொள்கையாக ஆக்கிவிட்டிருக்கிறது. அது நெறியுடையோரின் நிரந்தரத்தன்மை, சிறப்புத்தன்மை ஆகிய கனவுகளுக்கும் ஒரு தனிமனிதனின் தன்னிச்சைச் செயலுக்கான புறத்தோற்றத்திற்கும் அதனுடைய பொருத்தமற்ற தன்மையை எடுத்துக் காட்டியது. மனித அனுபவம் இவைகளை விட்டுவிடவேண்டுமெனில் வாழ்வே சூன்யமாக இருக்கும் என்று விவாதித்தது.

நமது இக்கட்டான நிலையை இந்த முறையில் விளக்கவேண்டு மென்ருல், காலத்திற்கொவ்வாத ஒரு தவற்றைச்செய்தவராவோம். பண்பாட்டில் தவிர்க்கமுடியாத பின்தங்கியிருக்கும் தன்மை புதியனவற்றில் பழமையைக் காணவேண்டும் என வற்புறுத்துகிறது. புதிய, வளைந்துகொடுக்கும் தன்மையில் பழைய நிச்சயத் தன்மையையும் நிலையற்ற தன்மையையும் காணுவதைத்தவிர வேறு வழியில்லை. பண்பாட்டு ஒப்புமைகளைப்பற்றி அறிவது அதற்கான மதிப்புகளையும் பெற்றிருக்கிறது. இவை நிரந்தரத் தத்துவங்களின்றி இருக்கலாம். அது வழக்கமான கருத்துக்களுக்குச் சவால்விடுகிறது. அதிலேயே வளர்ந்தவர்களுக்கு மிகுந்த துன்பத்தையும் ஏற்படுத்துகிறது. பழைய சூத்திரங்களைக் குழப்பத்திற்குள்ளாக்குவதால் அது கெடுதலையே காணும் மனப்பான்மையை உண்டாக்குகிறது. அது கடினமான எதையும் உட்கொண்டிருப்பதாலன்று; ஒரு புதிய கருத்து வழக்கமான நம்பிக்கை என ஏற்றுக்கொள்ளப்பட்டவுடனே அது நல்வாழ்வின் நம்பத்தகுந்த பாதுகாப்பாக அமைந்துவிடுகிறது. மனிதஇனம் வாழ்வின் அடிப்படை அமிசங்களிலிருந்து தனக்காக ஏற்படுத்திக் கொண்ட வாழ்க்கை வகைகள், சேர்ந்து வாழுதல் ஆகியவற்றைச் சகிப்புத்தன்மைக்கான புதிய அடிப்படைகளாகவும் எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கைகளுக்கு ஆதாரமாகவும் கொண்டு, ஒரு புதிய உண்மையான சமூகக் கோட்பாட்டை நாம் அடைவோம்.

கலைச் சொற்கள்

ஆங்கிலம்—தமிழ்

A

Aberrant ... திரிபுபெற்ற (பிறழ்ச்சியான)
Abnormal ... அசாதாரணமான
Achievement ... சாதனை
Adolescence ... குமரப்பருவம்
Adult ... முதிர்ந்தோர்
Adulthood ... முதிர்ந்தோர் நிலை
Altar ... தொழுகை பீடம்
Attitude ... ஈடுபாடு
Animism ... 'அனிமிஸம்' (ஆவியுலகக் கோட்பாடு)
Anthropology ... மானிடவியல்
'Apollonian' ... வாழ்வில் சாத்வீகமும் அமைதியும் கொண்ட

B

Barbarism ... காட்டுமிராண்டித்தனம்
Behaviour ... நடத்தை
Biology ... உயிரியல்
Bride price ... மணமக்களுக்கான பரிசம்

C

Cannibal ... தன்னின உண்ணி
Canoe ... படகு
Ceremony ... சடங்கு
Civilization ... நாகரிகம்
Collateral kin ... இடையுறவு (ஒன்றுவிட்ட)
Conditioned response ... ஆக்கத் துலங்கல்
Critic ... நுண்ணாய்வாளர்
Criticism ... கருத்துரை
Cult ... பிரிவு; (முறை)

Culture ... பண்பாடு
Cultural pattern ... பண்பாட்டுக் கோலம்

D

Deities ... தேவதைகள்
Demon ... பேய்
'Dionysian' ... வாழ்வில் முரட்டுத்தனமும் பலாத்காரமும் கொண்ட
Diviner ... காரணங் கண்டுபிடிப்பவன்

E

Economic ... பொருளாதார
Elopement ... உடன்போக்கு
Endogamy ... உட்குழு மணமுறை
Esoteric ... சிலருக்குமட்டுமே கற்றுத் தரப்படுபவை
Ethics ... நீதிநூல்கள்
Ethnology ... மனித இன நூல்
Evolution ... பரிணாமம்
Exogamy ... பிற இனத்தில் மணம் புரிதல்

F

Factor ... காரணி
Fasting ... பட்டினிகிடத்தல்
Fertility ... செழுமை
Festival ... விழா

H

Head dress ... தலையணி
Head hunting ... தலைவேட்டை
Heritage ... மரபுரிமை
Homosexuality ... தற்பாலுணர்ச்சி

I

Inbreeding ... உட்குழு மணமுறை
Incest ... தகாப்புணர்ச்சி
Inferiority complex ... தாழ்வு மனப்பான்மை
Initiation ... துவக்கச் சடங்கு
Institution ... நிறுவனம்

K

'Kiva' ... சடங்கு அறை (ப்யூப்லோ)
'Kula' ... தோபு மக்களின் வியாபார முறை

L

Laboratory ... ஆய்வுக்கூடம்
Lineage ... பரம்பரை
Lineal kin ... வழியுறவு

M

Magic ... மாயாஜாலம்
Mammoth ... 'மாமதம்' என்னும் யானைவகை
Manner ... நடத்தை
Mask ... முகமூடி
Masked gods ... முகமூடிக் கடவுள்கள்
Matrilineal ... தாய்வழி
Matrilocal ... தாயிடந்தங்கல்
Matrimony ... திருமணம்
Monogamy ... ஒருதார மணம், ஒரு சமயம் ஒருவரையே மணந்திருத்தல்
Morals ... நெறிமுறைகள்
Mystic ... யோகி
Mythology ... புராணம்
Mussel ... மட்டி (கிளிஞ்சல்)

N

Neurotic ... நரம்புநோய் உள்ளவன்
Normality ... சாதாரணத் தன்மை

O

Origin ... மூலம்

P

Pagan ... புறமதத்தினன்
Parasite ... ஒட்டுண்ணி, (சுரண்டி வாழ்பவன்)
Patron ... ஆதரவாளர்
Pattern ... கோலம், வகை.
Personaliy ... ஆளுமை
Philosophy ... தத்துவநூல்
Physiology ... உடற்செயலியல்
Plastic art ... உருவாக்கத்தக்க நளினக்கலை
Possibilities ... நிகழ்வாய்ப்புகள்
Possible ... சாத்தியமான
'Potlatch' ... விரயம் செய்யும் சடங்கு
Pottery ... குயத்தொழில்
Prejudice ... தப்பெண்ணம்
Protege ... பாதுகாப்பிலிருப்பவன்
Psychology ... உளவியல்
Psychopathist ... உள மருத்துவர்
Psychotic ... உள நோயாளி
Puberty ... பூப்பு
Pure Race ... கலப்பில்லாத இனம்

R

Race ... இனம்
Racial heredity ... இனப் பரம்பரை

Race prejudice ... இன வெறுப்பு
Response ... துலங்கல்
Ritual ... சடங்கு

S

Sacred ... தூய்மையான
Scalp ... தலைத்தோல்
Scalp dance ... தலைத்தோல் நடனம்
Sex symbol ... இனக் குறியீடு
Shaman ... தெய்வத்தன்மையுற்றவன்
Shamanistic practice ... தெய்வத்தன்மையுற்றவனாக தொழில் நடத்தல்
Sorcery ... சூன்யம்
Soul ... ஆன்மா
Spirit ... ஆவி (பேய்)
Standards ... தகுதி நிலைகள்
Supernaturals ... இயற்கைக்கப்பாற்பட்டவை
Survey ... அளவை

T

Technology ... செய்முறை
Textiles ... நெசவுத்தொழில்
Totem ... குலக்குறி
Totemism ... குலக்குறி வழக்கம்
Tradition ... மரபு
Traditional Institutions ... மரபுவழி நிறுவனங்கள்
Trait ... குணப்பாங்கு
Trance ... சமாதிநிலை.
Tribes ... பழங்குடிகள்

U

Utopia ... கற்பனை உலகம்.

V

Vengence ... பழிக்குப்பழி (வஞ்சம்)
Vision ... தோற்றம்
Vision quest ... தோற்றங்களை நாடுவது

W

Witch ... சூன்யக்காரி
Witch craft ... சூன்யம் வைத்தல்

கலைச் சொற்கள்

தமிழ்—ஆங்கிலம்

அ

அசாதாரணமான	...	Abnormal
அளவை	...	Survey
'அனிமிஸம்'	...	Animism

ஆ

ஆக்கத் துலங்கல்	...	Conditioned response
ஆசி (வாழ்த்து)	...	Blessing
ஆதரவாளர்	...	Patron
ஆய்வுக்கூடம்	...	Laboratory
ஆவி	...	Spirit
ஆளுமை	...	Personality
ஆன்மா	...	Soul

இ

இடையுறவு (ஒன்றுவிட்ட)	...	Colleteral kin
இயற்கைக்கப்பாற்பட்டவை	...	Supernatural
இனக் குறியீடு	...	Sex symbol
இனபரம்பரை	...	Racial heredity
இனம்	...	Race
இனவெறுப்பு	...	Race prejudice

ஈ

ஈடுபாடு	...	Attitude

உ

உட்குழு மணமுறை	...	Endogamy, Inbreeding
உடன்போக்கு	...	Elopement
உடற்செயலியல்	...	Physiology
உயிரியல்	...	Biology
உருவாக்கத்தக்க நளினக்கலை		Plastic art
உளநோயாளி	...	Psychotic
உள மருத்துவர்	...	Psychopathist
உளவியல்	...	Psychology

ஒட்டுண்ணி ... Parasite
ஒருதார மணம் ... Monogamy (ஒருசமயம் ஒருவரையே மணந்திருத்தல்)

க

கருத்துரை ... Criticism
கலப்பில்லாத இனம் ... Pure Race
கற்பனை உலகம் ... Utopia

கா

காட்டுமிராண்டித்தனம் ... Barbarism
காரணங் கண்டுபிடிப்பவன் ... Diviner
காரணி ... Factor

கி

கிழங்கு ... Yam

கு

குணப்பாங்கு ... Trait
குமரப்பருவம் ... Adolescence
குலக்குறி ... Totem
குலக்குறி வழக்கம் ... Totemism

ச

சடங்கு ... Ritual, Ceremony
சடங்கு அறை ... 'Kiva'
சமாதி நிலை ... Trance

சா

சாத்தியமான ... Possible
சாதனை ... Achievement
சாதாரணத்தன்மை ... Normality

சி

சிலருக்குமட்டுமே கற்றுத் தரப்படுபவை ... Esoteric

சூ

சூன்யக்காரி ... Witch
சூன்யம் ... Sorcery
சூன்யம் வைத்தல் ... Witch craft

செ

செய்முறை ... Technology
செழுமை ... Fertility

த

தகாப்புணர்ச்சி ... Incest
தகுதிநிலைகள் ... Standards
தத்துவ நூல் ... Philosophy
தப்பெண்ணம் ... Prejudice
தலைத்தோல் ... Scalp
தலைத்தோல் நடனம் ... Scalp dance

தலையணி	...	Head-dress
தலைவேட்டை	...	Head hunting
தற்பாலுணர்ச்சி	...	Homosexuality
தன்னின உண்ணி	...	Cannibal
	தா	
தாய்	...	Mother
தாய்வழி	...	Matrilineal
தாயிடந்தங்கல்	...	Matrilocal
தாழ்வு மனப்பான்மை	...	Inferiority Complex
	தி	
திரிபுபெற்ற (பிறழ்ச்சியான)	...	Aberrant
திருமணம்	...	Marriage, Matrimony
	து	
துலங்கல்	...	Response
துவக்கச் சடங்கு	...	Initiation
	தூ	
தூய்மையான	...	Sacred
	தெ	
தெய்வத்தன்மையுற்றவன்	...	Shaman
தெய்வத்தன்மையுற்றவனுகத் தொழில் நடத்தல்	...	Shamanistic Practice
	தே	
தேவதைகள்	...	Deities
	தொ	
தொழுகைப் பீடம்	...	Altar
	தோ	
தோபு மக்களின் வியாபார முறை	...	'Kula'
தோற்றங்களை நாடுவது	...	Vision quest
தோற்றம்	...	Vision
தோறணி	...	Pattern
	ந	
நடத்தை	...	Behaviour, Manner
நரம்புநோய் உள்ளவன்	...	Neurotic
	நா	
நாகரிகம்	...	Civilization
	நி	
நிகழ்வாய்ப்புகள்	...	Possibilities
நிறுவனம்	...	Institution
	நீ	
நீதிநூல்கள்	...	Ethics
	நு	
நுண்ணுய்வாளர்	...	Critic

நெ

நெசவுத் தொழில்	...	Textiles
நெறிமுறைகள்	...	Morals

ப

பட்டினி கிடத்தல்	...	Fasting
படகு	...	Canoe
பண்பாடு	...	Culture
பண்பாட்டுத் தோரணி	...	Cultural pattern
பரம்பரை	...	Lineage
பரிணமம்	...	Evolution
பழங்குடிகள்	...	Tribes
பழிக்குப் பழி (வஞ்சம்)	...	Vengence

பா

பாதுகாப்பிலிருப்பவன்	...	Protege

பி

பிரிவு (முறை)	...	Cult
பிற இனத்தில் மணம் புரிதல்	...	Exogamy

பு

புராணம்	...	Mythology
புறமதத்தினன்	...	Pagan

பூ

பூப்பு	...	Puberty

பே

பேய்	...	Demon

பொ

பொருளாதார	...	Economic

ம

மட்டி (கிளிஞ்சில்)	...	Mussels
மணமகள்	...	Bride
மணமகளுக்கான பரிசம்	...	Bride price
மணமகன்	...	Bridegroom
மரபு	...	Tradition
மரபுரிமை	...	Heritage
மரபுவழி நிறுவனங்கள்	...	Traditional Institutions
மரபு இன நூல்	...	Ethnology
மனைவி	...	Wife

மா

மாமதம் என்னும் யானை வகை		Mammoth
மாமனார்	...	Father-in-law
மானிடவியல்	...	Anthropology
மாயாஜாலம்	...	Magic

மு

முகமூடி	...	Mask
முகமூடிக் கடவுள்கள்	...	Masked Gods
முதிர்ந்தோர்	...	Adult
முதிர்ந்தோர் நிலை	...	Adult-hood

மூ

மூலம்	...	Origin

யோ

யோகி	...	Mystic

வ

வழியுறவு	...	Lineal Kin

வா

வாழ்வில் முரட்டுத்தனமும் பலாத்காரமும் கொண்ட	...	'Dionysian'
வாழ்வில் சாத்விகமும் அமைதியும் கொண்ட	...	'Apollonian'

வி

விரயம் செய்யும் சடங்கு	...	'Potlatch'
விருந்து	...	Feast
விழா	...	Festival

முதற் குறிப்பு

அகரவரிசை

அசாதாரணத் தன்மை:
குறிப்பிட்ட அடையாளங்களைக்கொண்டு குணச் சித்திரம் வரையறுக்க முடியாது 262, 282; செயல்படும் முறை சரியில்லாததால் 279
அசாதாரணமான வகைகள்:
தங்கள் பண்பாடுகளால் ஆதரவு தரப்படாதவர்கள் 262; தீவிரமாக வளர்ந்த பண்பாட்டுத் தன்மை 279-281; மட்டமானவர்கள் 278
அதிகாரம்:
ஸுனி மக்களில் அமுல் நடத்த உரிமை 99-104
அப்பாச்சி:
குமரப் பருவம் 28,102; சாராயம் 89; மனைவியின் நெறி தவறுதலுக்குத் தண்டனை 107;
அப்போலோனியன் முறை 78
அரசாங்கம்:
க்வாக்யூட்ல் 188, 190; தோபு 132, 174; ஸுனி 100
அஸ்டெக்ஸ் 84
ஊமத்தையின் உபயோகம் 86; தன்னைத் தானே துன்புறுத்திக்கொள்ளுதல் 90; போர் 30;
ஆசாரமுடைய தன்மை:
தோபு 171; மேற்கத்திய நாகரிகம் 126; ஸுனி 126
ஆஃப்ரிக்கா:
தென் ஆஃப்ரிக்கா, குமரப் பருவம் 102; தென் ஆஃப்ரிக்கா, தெய்வத்தன்மையுறல் 272-274; நந்தி, குமரப் பருவம் 26, 27; மத்திய ஆஃப்ரிக்கா, குமரப் பருவம் 27
ஆல்போர்ட், F. H. 236
ஆஸ்ட்ரேலியா:
குமரப்பருவம் 25, 102; சாவின் போது நடத்தை 119; திருமணம் 33; இடைக்காலக்காட்டுமிராண்டிக் குழந்தைகள் 11
இணைதல்:
உயிரியலில் வலியுறுத்தப் பெறல் 50; சமூக நூல்களில் 52
இயற்கைக்கப்பாற்பட்டவை:
க்வாக்யூட்ல் 227; தோபு 144; ஸுனி 67, 69, 127, 128
இனக்குறி அடையாளங்கள் 124
இனப்பரம்பரை 14
இனமும் பண்பாடும் 238-241
இனவெறுப்பு 8,10,13-14,43-44
உட்பட்ட குழுவும் வேற்றுரும் 6
உயிரியல் முறையில் நடத்தையின் பரம்பரை 238-241; எறும்புகள் 11; மனிதர்கள் 11-15
உள்ள நலம்:
மேற்கத்திய நாகரிகம் 249-50, 275-277
உளமருத்துவம் 251
உள நோயாளிகளின் பல விதங்கள் 49
உளவியல் ஆய்வு முறை 240
இணைப்புகளைப்பற்றிய அறிவு 50; பண்பாடு 35
உளவியல் முறையில் பண்பாட்டின் மூலங்கள் 237
உளவியலில் கெஸ்டால்ட் முறை 51
உளவியலில் ஸ்ட்ருக்துர் முறை 50
ஊமத்தை 85
ஐலெட்டா 109, 120
ஒரு பண்பாட்டுக்குள்ளேயே ஆளுமை வேறுபாடுகள் 257
ஓஸேஜ் மக்களிடம் குலக்குறி வழக்கம் 41
ஃப்ரேஸர் 'The golden Bough' 48;
ஃபார்ச்சூன் R. F. 141, 146, 154, 163,169,172
க்ரோபர் A. L. 235
க்வாக்யூட்ல் மக்கள் 177-227
அவமானம் 220, 221, 223; இயற்கைக் கப்பாற்பட்டவை 227; உளமருத்துவ நோக்கு 262; கரடி ஆட்டம் 180-181; கொலை 213, 216; சமூக அமைப்பு 186-192; சரித்திர வாயிலாகப் பண்பாட்டு இணைப்பு 231-233; சாவின் போது நடத்தை 221-224,243,

248; சிறந்த நற்பண்பு 206,220, 226; தன்னின உண்ணி நடனம் 182-185; தன்னினம் உண்ணுதல் 182; தலை வேட்டை 221-223; தற்கொலை 221, 224-226; திருமணம் 178, 190, 209-215, 225; தெய்வத்தன்மையுறல் 216-220,224; நடனங்கள் 179-185; நம்பிக்கையிழந்த நிலையில் நடத்தை 219; பட்டப் பெயர்கள் 187-192,193; பண்பாட்டு நடத்தையில் பொருத்தமற்றவை 241-243; பண்பாட்டை மதிப்பெடுப்பது 250; பாட்லேட்ச் 178, 191, 194-215; பெண்களின் குமரப் பருவம் 208; பொருளாதார வாழ்க்கை 177-179, 186-190, 193,198-214; போட்டி 193-207, 218-220; மதம் 180-185, 215-220, 227
கலிஃபோர்னியா:
தெய்வத்தன்மையுறல் 42,92, 269-270; மிஷன் இந்தியர்கள் பார்க்க
கலையும் மதமும் 38
கற்பனை உலகங்கள் 252
காக்கை இந்தியர்கள் 263
காரணங் கண்டுபிடிப்பது:
தோபு 173,174; ஸூனி 86
காரியர் இந்தியர்கள் குமரப் பருவம் 27
கிரீஸ் 78,242,266
குமரப் பருவம் 24,30
அப்பாச்சி 28,102; ஆஸ்ட்ரேலியா 25,102; க்வாக்யூட்ல் 207; காரியர் 27; நந்தி (கிழக்கு ஆஃப்ரிக்கா) 26; பிரிட்டிஷ் கொலம்பியா பீடபூமி 26; மத்திய ஆஃப்ரிக்கா 27; மேற்கத்திய நாகரிகம் 24; ஸமோவா 29; ஸூனி 68, 91, 102
குலக்குறி வழக்கம் :
ஒஜேஸ் 41; தோபு 138
குலாவட்டம் (தோபு) 156, 159
கூட்டத்திற்கான தப்பெண்ணம் 235
கொலை 45; எஸ்கிமோ 260; க்வாக்யூட்ல் 213, 216; தோபு 155, 169; ஸூனி 117
கொன்றவனைத் தூய்மையாக்கல் :
சமவெளி இந்தியர்கள் 116; பிமா 115; ஸூனி 113
சமவெளி இந்தியர்கள் :
ஓஸேஜ் மக்களிடம் குலக்குறி வழக்கம் 41; ஓமாஹா 84; குமரப் பருவம் 25; கொன்றவனைத் தூய்மையாக்கல் 116; சாவின்போது நடத்தை 111-113, 260; சிறந்த நற்பண்பு 98; தற்கொலை 117, 118; தற்பாலுணர்ச்சி 267; தன்னையே தான் துன்புறுத்திக்கொள்ளல் 89; திரிபுபெற்ற தனிமனிதன் 262; தெய்வத்தன்மையுறல் 97; தோற்றம் 81
சமாதிநிலை 269-274; ஷாஸ்தா இந்தியர்கள் 42.
சமூக அமைப்பு 31-35; ஆஸ்ட்ரேலிய குருநாய் 34; ஓஸேஜ் 40; க்வாக்யூட்ல் 186-192; தோபு 132-134; ஸூனி 72, 75, 76, 78, 100-106
சமூக விதிகளில் இரட்டைத் தத்துவம் 255
சாவின்போது நடத்தை 247-248; ஆஸ்ட்ரேலியா 119; க்வாக்யூட்ல் 221-224, 243, 248; சமவெளி இந்தியர்கள் 111-113, 260; நவாஜோ 120; ப்யூப்லோ 110-120; மத்திய அல்கான்கியன் 260; தோபு 165-169; ஸூனி 109, 119-120, 247
சிறந்த குணப்பண்பு படைத்தவன் :
க்வாக்யூட்ல் 206, 220, 226; சமவெளிகள் 98; தோபு 143, 172, 176, 254; ஸூனி 98
சூன்யம் :
தோபு 132-133, 154; வட அமெரிக்கா 120
சூன்யம் வைத்தல் :
ப்யூப்லோ 122, 127

செழுமை முறை :
பெரு 124; ஸுனி 123-125; ஹோபி 123
ட்யூவி, ஜான் 276
ட்ரோபிரியாண்ட் தீவுகள் 131, 156, 162
டகோடா :
தற்பாலுணர்ச்சி 268; துக்கங் கொண்டாடுதல் 112
டர்க்ஹீம் 235
டார்வின் 3, 55
டாவோஸ், பீயோட் 89
டில்தே, வில்ஹெல்ம் 51
டையோனீஷியன் 78, 180, 183
தகப்பன்மீது வெறுப்பு 101
தகாப்புணர்ச்சிக் குழு 32
தலைவேட்டை :
க்வாக்யூட்ல் 221-223
தற்கொலை 46
க்வாக்யூட்ல் 221, 224-226; சமவெளி இந்தியர்கள் 117, 118; தோபு 140,175; ஸுனி 117
தற்பாலுணர்ச்சி :
அமெரிக்க இந்தியர் 226; கிரீஸ் 266; டகோடா 268; மேற்கத்திய நாகரிகம் 266, 268; ஸுனி 266-268
தன்னினம் உண்ணுதல் 132, 163, 182
தன்னையே தான் துன்புறுத்திக் கொள்ளல் 89,
அஸ்டெக்ஸ் 90; சமவெளி இந்தியர்கள் 89, 90; பெனிடென்ட்ஸ் 89; ஸுனி 91
தனி மனிதர்கள் :
தனி மனிதர்களும் சமூகமும் 255-282; வளையுந்தன்மை 113
திரிபுபெற்ற 262-278
சமவெளி இந்தியர் 262; தோபு 262; ஸுனி 264-266
திருமணம் 246
ஆஸ்ட்ரேலியாவில் சமூகத்திற்கு ஒவ்வாத வளர்ச்சிகள் 33; க்வாக்யூட்ல் 178, 190, 209-215, 225; டச்சு நியூகினியா 137; திருமணமும் பொருளாதார மாற்றுகளும் 43; தோபு 135-139, 163, 171; மதமும் மேற்கத்திய நாகரிகத்தில் மணமும் 43; ஸுனி 72, 101, 105, 107, 110
தெய்வத்தன்மையுறல் 95-98;
க்வாக்யூட்ல் 216-220, 224; கலிஃபோர்னியா 42, 92, 269-270; சூன்யம் : மொஜாவே மக்கள், ஷாஸ்தா இந்தியர்கள் 42, 269: சைபீரியா 271; ஸுலு 272
தென் அமெரிக்கா :
குமரப் பருவம் 102; மதசம்பந்தமான கலை 37
தேர்ந்தெடுப்பு :
கலையில் 47; பண்பாட்டு உருவகங்களில் 246, 256; பண்பாட்டு வகைகளில் 24, 47; மொழி வகைகளில் 22
தோபு மக்கள் 131-176.
அரசாங்கம் 132, 174; இயற்கைக்கப்பாற்பட்டவைகள் 144; காரணங்கண்டுபிடிப்பது 133, 174; கிராமங்கள் 134-137; குலக்குறிகள் 138; குலாவட்டம் 156-159; கொலை 155, 169; சட்ட ரீதி 172-174; சாவின் போது நடத்தை 165-169; சிறப்பு வாய்ந்த நற்பண்பு 143, 174, 176, 254; சூன்யம் 132-133, 154; தற்கொலை 140, 175; தன்னினம் உண்ணுதல் 132; தனிப் பெயர்களின் உபயோகம் 139; தாயின் உடன்பிறந்தான் 139, 145; திரிபுபெற்ற தனி மனிதன் 262; திருமணம் 135-139, 163, 171; துக்கமாயிருத்தல் 169; நம்பிக்கையிழந்த நிலையில் நடத்தை 259; பண்பாட்டு நடத்தைகள் பொருத்தமுற்றுள்ள தன்மை 243; பால் 132-1 9, 171-173; பிரிவு 132-1 5; பொருளாதார வாழ்க்கை 131, 140-143, 153-155, போர் 1 3; மதம் 144-155, 159-161; மருத்துவ வசியங்கள் 151-155, 163-1 4; மாயாஜாலம் 133, 144-149; 'வாபு வாபு' 173

தோற்றம் :
க்வாக்யூட்ல் 181, 216; வட அமெரிக்காவில் 38-42, 80-85, 97
நடனம் :
அமெரிக்க இந்தியர்களின் பேய் நடனங்கள் 91; க்வாக்யூட்ல் 179-185; தோபு மக்களிடை இல்லாமை 134; மாய்டு, கலிஃபோர்னியா 92; வடக்கு மெக்ஸிகோ 92, 93; வட மேற்குக் கடற்கரை 92; ஸுனி 91-92; ஹோபி 94.
நம்பிக்கையிழந்த நிலையில் நடத்தை 259-261
நவாஜோ, துக்கங் கொண்டாடுதல் 120
நியட்ஷி 73
ப்யூப்லோ மக்கள் :
சாவின்போது நடத்தை 109-120; முன் சரித்திரம் 56-57; (ஸுனி-பார்க்க)
ப்ளேக், வில்லியம் 78; ப்ளேடோ 226
பட்டினி கிடத்தலும் மதமும் 86-88
பண்பாட்டு அறிவில் குறித்தசில மாதிரிகளைக் கொள்வது 242;
பண்பாட்டு இணைப்பு :
இல்லாமை 223-231; மேற்கத்திய நாகரிகம் 234
பண்பாட்டு நடத்தையில் பொருத்தமற்றவை :
க்வாக்யூட்ல் 241-243; தோபு 243; மேற்கத்திய நாகரிகம் 241-243; ஸுனி 243
பண்பாட்டு மாற்றத்தை :
அச்சம் 36; கட்டுப்படுத்துதல் 276; கட்டுப்படுத்தும் முறை 252-254; தவிர்க்க முடியாதது 9,36
பண்பாடு ஓர் உயிரி என 234-236;
இணைப்புகள் 23, 46, 47, 228; உயிரியல்முறையில் விளக்கம் 237-238; உளவியல் முறையில் விளக்கம் 35, 236; சரித்திர விவரங்கள் 236-237, 239-40; தனி மனிதர்கள் 255-282; தேர்ந்தெடுப்பு 23, 46-47; பல்வகை 2; முக்கியத்துவம் 1-2
பரவல் 246
பரிணமம் 4;
மானிடவியல் தத்துவத்தில் 17
பழங்குடிகளின் சமூகங்கள் :
சமூக இயலின் ஆய்வுக்கூடமாக அமைகின்ற மதிப்பு 16-19
பாட்லேட்ச் :
க்வாக்யூட்ல் மக்களிடையே 178, 189-191, 194-215
பாம்பு நடனம் :
ஹோபி 94
பால் :
க்வாக்யூட்ல் 244-245; தோபு 135-139, 171-173; ஸுனி 72-74, 101, 107, 108, 124-125
பாவ உணர்ச்சி :
மேற்கத்திய நாகரிகம் 126; ஸுனி 126
பிமா :
கொன்றவனைத் தூய்மையாக்கல் 115; மதபோதை 84
பிரிட்டிஷ் கொலம்பியா, பீடபூமி;
குமரப் பருவம் 26; பண்பாடு இணைப்புப்பெருமல் இருப்பது 229; மதம் 39
பிரிவு :
தோபு 132-135; வடமேற்குக் கடற்கரை 189-190; ஸுனி 75-78,104-105
பீயோட் 85, 89
புன்ஸெல், ரூத் 65,68,99,107,127
பெண்களின் நிலையும் கிறிஸ்தவ மதமும் 43
பெல்லா கூலா 193
பெனிடென்ட்ஸ் 90
பொருளாதாரச் சட்டங்கள் 252-2 3
பொருளாதார வாழ்க்கை 247;
க்வாக்யூட்ல் 177-179, 185-190, 193, 198-214; தோபு 131, 140-143, 153-155; ஸுனி 74-77, 105

பொருமை, திருமணத்தால் :
தோபு 140; ஸுனி 107
போர் :
அஸ்டெக்ஸ் 30; எஸ்கிமோ 31; கலிஃபோர்னியா, மிஷன் இந்தியர்கள் 31; சமவெளி இந்தியர்கள் 98; தோபு 133; மேற்கத்திய நாகரிகம் 31, 32, 45, 254
மதத்தினால் போதை 85
மதம் : உட்பட்ட குழுவும் வேற்றுரும் 6; க்வாக்யூட்ல் 180-185, 215-220, 227; கலை 38; குமரப் பருவம் 39; சமவெளி இந்தியர்கள் 81; சமாதிநிலை 42; சமூக அமைப்பு 39; தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளல் 89-90; திருமணம் 43; தெய்வத்தன்மையுறல் 95-96; தெய்வத்தன்மையுறலும் சூனியமும் 121; தோபு 144-155, 159-161; நடனம் 92-95; பட்டினி கிடத்தல் 88, 91; பிமா 84; பொருளாதார மாற்றுகள் 43; போதை 85; மருந்துகள் 85; ஸுனி 58-72
மதிப்புப் பிரச்சினை 250
மருத்துவ வசியங்கள் :
தோபு 151-155, 163-164; ஸுனி 70-72
மருந்துகளும் மதமும் 84-89
மலினேவ்ஸ்கி B. 49,101,131,156
மன எழுச்சிபெறப் பழங்குடிகள் நிலையை நாடுதல் 18
மனுஸ் 141
மாதவிடாய், ஸுனி 120
மாய்டு, கலிஃபோர்னியா 92
மாயாஜாலம் :
தோபு 133, 144-149; ஸுனி 60
மானிடவியல், ஆய்வு முறைப் படிப்பு 43
உருவகத்தைப்பற்றிப் படிப்பது 234; ஒப்பிட்டுப் படிப்பது 246; கருத்து 1; சமூக இயல்களில் மதிப்பு 15-17; செயல்படும் முறைகள் 50; தனி மனிதனும் பண்பாடும் எதிர்ப்பட்டிருத்தல் 255-258; மாதிரிகளைப்பற்றிப் படித்தல் 242; முன்னேடியான தத்துவங்கள் 3-9
மானிடவியல், ஒப்பிட்டுப் பார்க்கும் முறை 246-248
மிடில்டௌன் 252, 277
மிஷன் இந்தியர்கள் (கலிஃபோர்னியா)
ஊமத்தையின் உபயோகம் 86; குமரப் பருவம் 102; பழமொழி 20-21; போர் 31
மீட், மார்கரட் 29
முதலாளித்துவம், மேற்கத்திய நாகரிகத்தில் 254
மேற்கத்திய நாகரிகம் :
இணைப்பு 233; இனமும் வெறுப்பும் 43; உயிரியல் முறையில் கட்டுப்படுத்தப் பெருத வகைகள் 35; உலக முழுதும் பரவல் 4; உள்ள நலம் 249, 276-278; கலைஞர்கள் 264; கலையும் மதமும் 38; குமரப் பருவம் 23; குழந்தைகளின்மேல் உள்ள ஈடுபாடு 249; சகித்துக் கொள்ளாமை 277; சமாதிநிலை 260; சாவின் போது நடத்தை 261; சுயநினைவுடனிருத்தல் (நல்ல அறிவு நிலை) 241; தற்பாலுணர்ச்சி 266-268; தன்முனைப்புத் தீவிரம் 249; தன்முனைப்புத் திருப்தி பெறல் 280; தாழ்வு மனப்பான்மை 277-278; திரிபு பெற்ற தனி மனிதர்கள் 264, 274; திருமணமும் மதமும் 43; நடத்தையில் பொருத்தமற்றிருப்பது 243; நெறி தவறு, காரணங்கண்டுபிடிப்பவர்கள் 280; நெறி தவறுமை 126; பலாத்கார ஈடுபாடு 247; பண்பாட்டு இணைப்பு 234; பண்பாட்டுக் கட்டுப்பாடு சாத்தியமானதா 252-254; பெண்களின் நிலையும் கிறிஸ்துவமதமும் 43; பொருளாதாரம் 36; போர் 31, 32, 45, 254; மதம் 252; முதலாளித்துவம் 254; விரோதம் 251

மொஜாவே மக்கள் :
ஊமத்தையின் உபயோகம் 86; தெய்வத்தன்மையுறல், சூன்யம் 121
ராஸ்ஸென், K. 31
ரிவர்ஸ், W. H. R. 237
லாரென்ஸ், D H. 92
லௌவீ, R. H. 263
வடக்கு மெக்ஸிகோ :
சாராயத்தின் மதச்சார்பான உபயோகம் 84, 85; சுழன்று வரும் நடனம் (அஸ்டெக்ஸ் பார்க்க) 93
வடமேற்குக் கடற்கரை:
நடனம் 92
உரிமைகள் 232 (க்வாக்யூட்ல் பார்க்க)
வழக்கங்கள் (பண்பாடு பார்க்க)
விரோதம் 251
க்வாக்யூட்ல் 193-207, 218-221
விவாகரத்து :
க்வாக்யூட்ல் 213, 214, 215; தோபு 139, 140; ஸூனி 73, 74, 105
வெஸ்டர் மார்க் 247
வொர்ரிங்கர், W. 50
ஷாஸ்தா 42, 269
ஸ்டெர்ன், வில்ஹெல்ம் 50
ஸ்பெங்ளர், ஆஸ்வால்ட் 52
ஸபீர், E. 274.
ஸமோவா, குமரப் பருவம் 29
ஸாலிஷ் மக்கள் 231
ஸூனி மக்கள் 56-130
அதிகாரம் 99-104; அப்போலோனியன் மனிதன் 78; அரசாங்கம் 99-100; இயற்கைக் கப்பாற்பட்டவை 67, 70-71, 127; இனக்குறி அடையாளங்கள் 125; உணர்ச்சிவசப்பட்ட வாழ்க்கையில் மிதமான நிலை 118-120; உள மருத்துவ நோக்கு 261, 262; ஊமத்தை 83; கச்சினு முறை 66-70; காரணங் கண்டு பிடித்தல் 86; குடும்பத்தில் அதிகாரம் 100; குமரப் பருவம் 63, 91, 102; குற்றம் 100; கூட்டத்தின் அனுமதி 103; கொலை 117; கொன்றவனைத் தூய்மையாக்கல் 113; சடங்குகளின் முக்கியத்துவம் 59; சமூக அமைப்பு 72,75,76, 78, 100-106; சாவின் போது நடத்தை 10?, 119-120, 247; சிறந்த நற்பண்பு 93; செல்வம் 76; செழுமைமுறை 123-125; சூன்ய வேலை 122, 127; தகப்பன்மீது வெறுப்பு 101; தற்கொலை 117; தற்பாலுணர்ச்சி 266-268; தன்னைத் தானே துன்புறுத்திக்கொள்ளல் 91; தாரம் இறத்தல் 110; திரிபுபெற்ற மனிதன் 264-266; திருமணம் 72, 101, 105, 107, 110; துவக்கச் சடங்கு 68, 90, 102; தெய்வத்தன்மையுறல் இல்லாமை 95; தொழுகை 61-62; நடனம் 91-92; நம்பிக்கையற்ற நிலையில் நடத்தை 259; நல்லதும் கெட்டதும் 127-128; நெறிதவரு முறை 126; பட்டினி கிடத்தல் 88, 91; பண்பாட்டின் மதிப்பீடு 247-249; பால் 72-74, 101, 107, 108, 124-125; பாவ உணர்ச்சி 125; பிரிவு 75-78, 104-105; பூசாரிகள் 64, 65, 122; பூசாரியின் இயல்பு 96-97; பொருளாதார வாழ்க்கை 74-77, 105; போதை 89; மதசம்பந்தமான கலை 38; மதத்தின் பொருளான 62-63; மதம் 58-72; மருத்துவக் கூட்டங்கள் 70-72; மாதவிடாய் 120; மாயாஜால செய்முறை 60; விவாகரத்து 73, 74, 105
ஸெர்வான்டெஸ் 275
ஸைபீரியா :
தெய்வத்தன்மையுறல் 271; மதசம்பந்தமான கலை 38
ஹோபி :
செழுமைக்கான மாயாஜாலம் 123; பாம்பு நடனம் 94

REFERENCES

CHAPTER I — Pages 1—19

Itard, Jean-Marc-Gaspard. The Wild Boy of Averyon, translated by George and Muriel Humphery. New York, 1932.

It is probable that some of these children were subnormal and abandoned because of that fact. But it is hardly possible that all of them were, yet they all impressed observers as half-witted.

See Boas, Franz. Anthropology and Modern Life, 18-100. New York, 1932.

CHAPTER II — Pages 20—44

For an analysis of puberty rites as crisis ceremonialism, Van Gennep, Arnold. Les Rites de Passage. Paris, 1909.

Mead, Margaret. Coming of Age in Samoa. New York, 1928.

Howitt, A. W. The Native Tribes of South-East Australia. New York, 1904.

Benedict, Ruth. The Concept of the Guardian Spirit in North America. Memoirs of the American Anthropological Association, no. 29, 1923.

CHAPTER III — Pages 45—55

Malinowski, Bronisław. The Sexual Life of Savages, London, 1929; Argonauts of the Western Pacific, London, 1922; Crime and Custom in Savage Society, London, 1926; Sex and Repression in Savage Society, London, 1927; Myth in Primitive Psychology, New York, 1926.

Stern, Wilhelm. Die differentielle Psychologie in ihern Grundlagen, Leipzig, 1921.

Worringer, Whilhelm. Form in Gothic, London, 1927.

Koffka, Kurt. The Growth of the Mind. New York, 1927.

Kohler, Wilhelm. Gestalt Psychology. New York, 1929.

For a summary of the work of the Gestalt school see Murphy, Gardner. Approaches to Personality, 3-36. New York, 1932.

Dilthey, Wilhelm. Gesammelte Schriften, Band 2; 8. Leipzig, 1914-31.

Spengler, Oswald. The Decline of the West. New York, 1927-28.

CHAPTER IV Pages 56—130

The traditional spelling, Zuni, is misleading. The n is pronounced as in any English word.

The following is a selected bibliography on Zuni. The references in this chapter are numbered as in this list.

Benedict, Ruth.

1. Zuni Mythology. Columbia University Contributions to Anthropology, 2 vol., XXI. New York, 1934.
2. Psychological Types in the Cultures of the Southwest. Proceedings of the Twenty-Third International Congress of Americanists, 572-81. New York, 1928.

Bunzel, Ruth L.

1. Introduction to Zuni Ceremonialism. Forty-Seventh Annual Report of the Bureau of American Ethnology, 467-544. Washington, 1932.
2. Zuni Ritual Poetry. Ibid.611-835.
3. Zuni Katchinas. Ibid. 837-1086.
4. Zuni Texts. Publications of the American Ethnological Society, XV. New York, 1933.

Cushing, Frank Hamilton.

1. Outlines of Zuni Creation Myths. Thirteenth Annual Report of the Bureau of American Ethnology. Washington, 1926.
2. Zuni Flok Tales. New York, 1901.
3. My Experiences in Zuni. The Century Magazine, n.s. 3, 4, 1888.
4. Zuni Breadstuffs. Publications of the Museum of the American Indian, Heye Foundation, VIII. New York, 1920.
5. Zuni Fetishes. Second Annual Report of the Bureau of American Ethnology. Washington, 1883.

Kroeber, A. L. Zuni Kin and Clan. Anthropological Papers of the American Museum of Natural History, vol. XVIII, part 2. New York, 1917.

Parsons, Elsie Clews. Notes on Zuni, I and II. Memoirs of the American Anthropological Association, vol. 4, no. 3, 1927.

Stevenson, Matilda Cox.

1. The Zuni Indians. Twenty-Third Annual Report of the Bureau of American Ethnology. Washington. 1904.
2. The Religious Life of the Zuni Child. Ibid., V. Washington, 1887.

Kidder, A. V. Southwest Archæology. Yale University Press. New Haven, 1934.

Zuni ritual prayers are recorded in Bunzel 2.

Bunzel 2:626.

Bunzel 2:689.

Bunzel 2:645; 2:716.

Bunzel 2:666-67.

See Bunzel, 1 and 3.

Stevenson 1:94-107.

Ibid. 407-576.

For the mildness of Zuni behavior upon separation of spouses see, however, below, p. 108, for the first fight in which two women may engage.

Nietzshe, Friedrich. The Birth of Tragedy. New York, 1924.

'Measure in the Hellenic sense', ibid. 4o.

'And retains his civic name,' ibid.68.

Benedict, Ruth. The Vision in Plains Culture. American Anthropologist, n.s. 24:1-23. 1922.

Reo F. Fortune. Secret Societies of the Omaha. Columbia University Contributions to Anthropology, XII. New York, 1932.

Benedict 1.

Lewin, Louis. Weber Anhalonium Lewinii und andere Cacteen. Zweite Mitteilung. Sparatdruck aus dem Archiv fur experimentelle Pathologie und Pharmakologie, Bd. XXXIV. Leipzig, 1894.

Wagner, Gunther, Entwicklung und Verbreitung des Peyote-Kultes. Baessler Archiv, 15:59-144. Hamburg, 1931.

Benedict 2.

Quotation, Bunzel 1:482.

Stevenson, Thirtieth Report of the Bureau of American Ethnology, 89.

For the Cactus initiation, Cushing 3 (vol. 4): 31–32.

For the Fire initiation, ibid. 30-31; Stevenson 1:526.

D. H. Lawrence. Mornings in Mexico, 109-10. New York, 1928.

For the Cora dance upon the altar, Preuss, K. T. Die Nayarit Expedition, 55. Leipzig, 1912.

For the Hopi dance, Voth, H. R. Oraibi Summer Snake Ceremony. Field Columbian Museum Publication, no. 83, 299. Chicago, 1903.

Quotations, Bunzel 1:480.

Malinowski, B., Sex and Repression in Primitive Society, 74-82. New York, 1927.

Junod, Henri A. Story of a South African Tribe, I:73-92. Neuchatel, 1912. The description is of the Bathonga.

This folk tale, Benedict 1, vol. II (in press), is based on an event that happened about 1850, and is described by the daughter of the household, Bunzel 4:35-38.

For a cultural discussion of jealousy, see Mead, Margaret, Jealousy, Primitive and Modern. In Woman's Coming of Age, edited by S. D. Schmalhausen and V. F. Calverton. New York, 1931.

Parsons, Elsie Clews. Isleta, New Mexico. Forty-Seventh Annual Report of the Bureau of American Ethnology, 248-50; and Goldfrank, Esther Schiff, MS.

Prayer to dead wife, Bunzel 2;632.

For mourning on the Plains, see Grinnell, George Bird. The Cheyenne Indians, II:162. Yale University Press, 1923.

For the mourner's reluctance to leave the grave, ibid. II:162.

For continued visiting of the grave, Donaldson, Thomas. The George Catlin Indian Gallery in the U. S. National Museum, 277. (Smithsonian Institution), Report of the Board of Regents of the Smithsonian Institution to July, 1885, Part V. Washington, 1886. For Dakota mourning, Deloria, Ella, MS.

The quotation is from Denig, Edwin T. The Assiniboine, 573. Forty-Sixth Annual Report of the Bureau of American Ethnology. Washington, 1930.

For discussion of the aberrant, see below, Chapter VII.

Bunzel 2:679-83.

Grinnell, George Bird. The Cheyenne Indians, II:8-22. New Haven, 1923.

For clowning at the scalp dance, ibid. 39-44.

Benedict 1.

Bourke, John J. Notes on the Cosmology and Theogony of the Mojave Indians of the Rio Gronde, Arizona, 175. Journal of American Folklore, II (1889), 169-89.

For instances of Hopi fecundity symbolism, see Haeberlin, H. K., The Idea of Fertilization in the Culture of the Pueblo Indians, 37-46. Memoirs of the American Anthropological Association, III, no. 1, 1916.

For the race between men and women in Peru, Arriaga, P. J., Extirpacion de la Idolatria del Peru, 36, Lima, 1621.

For an extreme instance of Zuni misinterpretation see Parsons, Elsie Clews, Winter and Summer Dance Series in Zuni in 1918, 199. University of California Publications in American Archæology and Ethnology, 17, no. 3, 1922.

Cushing, 1:379-81.

'Amiable disciplinary means,' is Dr. Bunzel's phrase, Bunzel 3:846.

The quotations are from Bunzel 1:486; 497.

The quotation concerning Zuni lack of resignation is from Bunzel 1:486.

The extracts from the ritual are found in Bunzel 2:784;646;307-08.

CHAPTER V Pages 131—160

This chapter is based on the field study, The Sorcerers of Dobu, by Reo F. Fortune, New York, 1932. The present chapter can be only an abridgment of Dr. Fortune's full account and to facilitate consultation page references are given on special points.

For Dobuan totems, Fortune 30-36.

For the Manus marriage, see Mead, Margret. Growing up in New Guinea. New York, 1930.

The quotation is from Fortune 16.

For the ritual of the garden, Fortune 105-31.

The version given here is condensed. See Fortune 139-40.

For accounts of vada, see Fortune 158-64, and for comparative data, 284-87.

Malinowski, Bronislaw. Argonauts of the Western Pacific. London, 1922.

For the economic background of the Kula, Fortune 200–10.

Fortune 216-17.

For mourning observances at the death of a spouse, Fortune 11; 57; 194.

Fortune 11, for quotation.

Fortune 197–200.

Fortune 23, for statement of sullen suspicion in mourning exchange. Fortune 170.

For this behavior toward yams, Fortune 222.

Fortune 78.

Fortune 85.

Fortune 109.

CHAPTER VI Pages 161—227

The following is a selected bibliography on the Kwakiutl by Franz Boas:

1. The Social Organization and Secret Societies of the Kwakiutl Indian, Report of the U. S. National Museum for 1895, 311-738. Washington, 1897.

2. Kwakiutl Texts, by Franz Boas and George Hunt. The Jesup North Pacific Expedition, III, Memoir of the American Museum of Natural History. New York, 1905.

3. Ethnology of the Kwakiutl, 2 vols. Thirty-Fifth Annual Report of the Bureau of American Ethnology. Washington, 1921.

4. Contributions to the Ethnology of the Kwakiutl. Columbia University Contributions to Anthropology, III. New York, 1925.

5. The Religion of the Kwakiutl Indians, vol. II. Columbia University Contributions to Anthropology, X. New York, 1930.

The performances of the secret societies are described in Boas 1.

Quotation, Boas 1:466.

Ibid. 513; 467.

Ibid. 459.

For the cannibal dance, ibid. 437-62; 500–44.
Exorcism, Boas 3: 1173.
For the endogamy of the Bella Coola, Boas, Franz. The Mythology of the Bella Coola Indians, 125. Publications of the Jesup North Pacific Expedition I, 25-127, Memoirs of the American Museum of Natural History. New York, 1898.
'We fight with property.' Boas 1:571.
Boas 3:1291; 1290; 848; 857; 1281.
Ibid. 1288; 1290; 1283; 1291.
Boas 1:622.
Ibid. 346–53.
Hunt, George, The Rival Chiefs. Boas Anniversary Volume, 108–36. New York, 1906.
Boas 3:744.
Boas 1:581.
Boas 4:165-229.
Boas 1:359 ff.; 421 ff.
Ibid. 422.
Quotation, ibid. 424. For the marriage contest, ibid. 473.
Boas 3:1030.
Boas 1:366.
Boas 3:1075.
Boas 3:1110–17.
Boas 2:441 etc.
'Of the order of spirits,' Boas 3:740.
Demonstrating the privileges of a shaman, Boas 5:18, 30.
Killing a shamanistic competitor, Boas 5:31-33.
Shamanistic spies, Boas 5:15; 270.
Ibid. 277-288.
Ibid. 271.
The capsized canoe, Boas 4:133.
The broken cannibal mask, Boas 1:600.
The bankrupt gambler, Boas 2:104.
'Craziness strikes,' Boas 3:709.
For this head-hunting, Boas 3:1385.
Ibid. 1363.
Boas MS.
Boas 3:1093-1104.
Quoted from Mayne. Boas, F., Tsimshian Mythology, 545 Thirty-Fifth Annual Report of the Bureau of American Ethnology, Washington, 1916.
Boas 1:394.

CHAPTER VII Pages 228—254

Durkheim. Emile. Les Regles de la methode sociologique. 6-th edition. Paris, 1912.

Kroeber, A. L. The Superorganic. American Anthropologist, n.s., XIX (1917), 163-213.
For discussion, see Folsom, J. R. Social Psychology, 296 ff. New York, 1931.
For condemnation of the group fallacy. Allport, F. H. Social Psychology. Boston, 1924.
Rivers, W. H. R. Sociology and Psychology, in Psychology and Ethnology. London, 1926.
Murphy, Gardner. Experimental Psychology, 375.
Boas 5:202; Boas 3:1309. See complete titles under preceding chapter.
Westermarck, E. A. History of Human Marriage. 3 vols. 5-th edition. London, 1921.

CHAPTER VIII Pages 255—282

Sumner, William Graham. Folkways. Boston, 1907.
Jones, William. Mortuary Observances and the Adoption Rites of the Algonkin Foxes of Iowa, 271-77. Quinzieme Congres International des Americanistes, 273-77. Quebec, 1907.
For mourning practices of the Plains, see above, p. 282.
Fortune, R. F. Sorcerers of Dobu, 54. New York, 1932.
For a native account of this witchcraft incident in Zuni, see Bunzel, Ruth L. Publications of the American Ethnological Society, XV: 44-52. New York, 1933.
For description of various Zuni men-women, see Parsons, Elsie Clews. The Zuni Lamana. American Anthropologist, n.s. 18 (1916), 521-23.
For Mrs. Stevenson's description of We-wha, Stevenson, Mathilda C. The Zuni Indians. Twenty-Third Annual Report of the Bureau of American Ethnology, 37; 310-331, 374.
Deloria, Ella, MS.
From Bendict, Ruth. Culture and the Abnormal; Journal of General Psychology, 1934, I, 60-64.
Dixon, Roland B. The Shasta. Bulletin of the American Museum of Natural History, XVII:381-498, New York, 1907.
For a convenient summary, Czaplicka, M. A. Aboriginal Siberia. Oxford, 1914.
Callaway, Canon H. Religious System of the Amazulu. Publications of the Folklore Society, XV:259 ff London, 1884.
Sapir, E., in Journal of Abnormal and Social Psychology, XXVII (1932), 241.
Dewey, John. Human Nature and Conduct. New York, 1922.
Lynd, Robert and Helen. Middletown. New York, 1929.
Such individuals are favourite subjects in the novels and short stories of May Sinclair and Tchekhov.